
# எழுநா

இதழ் 21



The plantation Tamils of Ceylon 1880-1890

ஏப்ரல்
2024

# எழுநா

## இதழ் 21

**பதிப்பாசிரியர்**
கணேசானந்தன் சசீவன்

**பொறுப்பாசிரியர்கள்**
ஸ்ரனிஸ்லஸ் கபில்தேவ்
கஜலக்சி உதயபவன்
அச்சுதநாயர் இசைப்பிரியன்
நிவேதிகா இராசன்

**குரல் வடிவம்**
பாலரூபன் கிருஷிகா
பவித்ரா இரமணீகரசர்மா

**வளவாளர்கள்**

| | |
|---|---|
| இ. பத்மநாப ஐயர் | – உசாத்துணை சேவை |
| கனகலிங்கம் சுகுமார் | – உசாத்துணை சேவை |
| தில்லைநாதன் கோபிநாத் | – நூல் வரிசை |
| கதிர் சயந்தன் | – நூல் தயாரிப்பு |
| சுவர்ணலதா செந்தில்குமார் | – மெய்ப்புத் திருத்தம் |
| தங்கராஜா பிரபாகரன் | – மெய்ப்புத் திருத்தம் |
| நடராஜா முரளிதரன் | – அச்சுப்பதிப்பு – விநியோகம் (கனடா) |
| பாலசுப்ரமணியம் சிவகுமார் | – காணொலி/ விவரணப்படம் |
| சிறிதரன் சோமிதரன் | – காணொலி / விவரணப்படம் |
| மகேந்திரன் திருவரங்கன் | – மொழிபெயர்ப்பு |
| பரமசிவம் பவதாரணி | – செயல்பாட்டு மேலாண்மை |

**துறை சார் ஆலோசகர் குழு**

| | |
|---|---|
| ஶ்ரீவரதராஜன் பிரசாந்தன் | – மொழியும் இலக்கியமும் |
| கந்தையா ரமணிதரன் | – நீரியலும் நீர்ப்பாசனமும் |
| குமாரவடிவேல் குருபரன் | – சட்டமும் சட்ட முறைமையும் |
| நடராஜா சிறீஸ்கந்தராஜா | – சூழலும் உயிர்ப் பல்வகைமையும் |
| தர்சன் அம்பலவாணர் | – சமயமும் இறையியலும் |
| பால சிவகடாட்சம் | – சுதேசியமும் பாரம்பரிய மருத்துவமும் |
| நாகமுத்து பிரதீபராஜா | – புவியியலும் திட்டமிடலும் |
| பரமு புஸ்பரட்ணம் | – வரலாறும் தொல்லியலும் |
| சனாதனன் தமோதரம்பிள்ளை | – கட்புல அரங்கேற்ற கலைகள் |
| சேரன் உருத்திரமூர்த்தி | – சமூகவியலும் மானிடவியலும் |
| முத்துக்கிருஸ்ணன் சர்வானந்தன் | – பொருளியலும் நிதியியலும் |
| சபா ஜெயராசா | – கல்வியியலும் கற்றலும் |
| மரியோ அருள்தாஸ் | – அரசியலும் மெய்யியலும் |
| இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் | – கட்டடக்கலையும் வடிவமைப்பும் |
| கந்தையா பகீரதன் | – விவசாயமும் மீன்பிடியும் |

**பங்களிப்பாளர்கள்**
கணேசலிங்கம் குகரூபன்
கருணானந்தன் சஞ்யே


**அட்டைப்படம்**
*மூலம் : lankapura.com*

*1880 – 1890 காலப் பகுதிக்கிடையில் இலங்கையின் பெருந்தோட்டமொன்றில் எடுக்கப்பட்ட புகைப்படம்.*

**FOLLOW**
எழுநா

- https://ezhunaonline.com/
- https://youtube.com/user/Ezhuna
- https://www.facebook.com/Ezhunax/
- https://twitter.com/Ezhuna
- https://www.instagram.com/ezhunaa/
- https://www.tiktok.com/@ezhuna
- https://open.spotify.com/show/4Xn
- https://tinyurl.com/ykj8ru3f
- https://tinyurl.com/3zfkzxme
- https://tinyurl.com/2p83m8zj
- https://pca.st/swr6zomk
- https://radiopublic.com/6rX3L4
- https://tinyurl.com/bdeky92h
- https://anchor.fm/ezhuna
- https://www.clubhouse.com/club/ezhuna
- https://www.magzter.com/publishers/


தொடர்பு முகவரி :
எழுநா
63, சேர். பொன். இராமநாதன் வீதி
கலட்டி சந்தி, திருநெல்வேலி.

மின்னஞ்சல்:
contact@ezhunaonline.com
ezhunamedia@gmail.com

# உள்ளே...


இலங்கையின் சிங்களச் சமூகத்தில் சாதியின் வகிபாகம் : ஜனநாயகமும் சாதியும் அரசியலும் — பகுதி 1,2,3,4
– ஆங்கில மூலம் : பிரசன்ன டி சொய்சா
தமிழில் : கந்தையா சண்முகலிங்கம் — 04

பறையிசைக்கும் மக்களின் குலதெய்வம் வல்லியக்கன்
– தி. செல்வமனோகரன் — 36

சுதந்திர இலங்கையின் குடியேற்றத் திட்டங்கள்
– மீநிலங்கோ தெய்வேந்திரன் — 41

அரபுக்கள், சோனகர், முஸ்லிம்கள் : இலங்கை முஸ்லிம் இனத்துவ அடையாளத்தின் பரிணாமம் — பகுதி 05
– ஜிஃப்ரி ஹாசன் — 52

பொன்னம்பலம் குமாரசாமி குடும்பம்
– ஆங்கிலம் மூலம் : குமாரி ஜெயவர்த்தன
தமிழில் : கந்தையா சண்முகலிங்கம் — 56

'இலங்கையின் போரும் சமாதானமும்' : நோர்வேயின் சமாதானத் தோல்வியின் விளைவுகள் நோர்வேஜியப் பேராசிரியர் ஒய்வின்ட் புக்லறூட் எழுதிய நூல் — பகுதி 1
– சிவராஜா ரூபன் — 68

கீழைக்கரை : துட்டகாமணி முதல் வட்டகாமணி வரை
– விவேகானந்தராஜா துலாஞ்சனன் — 81

யாழ்ப்பாணத்தில் உருவான சில ஆரம்பகால நூலகங்கள் — 10
– நடராஜா செல்வராஜா — 88

லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் யாழ்ப்பாணக் கட்டளையகம் 2
– இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் — 95

சமனற்ற நீதி : என் இளமைக்காலம்
– ஆங்கில மூலம் : ராஜ் ராஜரட்ணம்
தமிழில் : ஓய்வுநிலைப் பேராயர் பேரருட்கலாநிதி எஸ். ஜெபநேசன், முனைவர் சோ. பத்மநாதன் (சோ.ப) — 102

தமிழ் பண்பாட்டில் சமரச சன்மார்க்கம்
– நடேசன் இரவீந்திரன் — 115

இலங்கையில் பௌத்த சமய மறுமலர்ச்சியும் மாற்றமும் 1750—1900 : கித்சிறி மலல்கொடவின் நூல் பற்றிய அறிமுகம்
– கந்தையா சண்முகலிங்கம் — 124

3AxisLabs : யாழ். தகவல் தொழில்நுட்பச் சமூகத்திற்கு மேலுமொரு வருகை
– ஆங்கில மூலம் : ஜெகன் அருளையா
தமிழில் : த. சிவதாசன் — 131

நான்காம் வருடத்தைப் பூர்த்திசெய்யும் வட தொழில்நுட்ப நிறுவனம் (Northern Technical Institute)
– ஆங்கில மூலம் : ஜெகன் அருளையா
தமிழில் : த. சிவதாசன் — 136

கனடாவின் பாரளுமன்ற சமஷ்டி முறைமை
– ஆங்கில மூலம் : டேவிட்.ஆர். கமரன்
தமிழில் : கந்தையா சண்முகலிங்கம் — 140

மலையக மக்களின் போராட்ட வரலாறு — பகுதி 1,2
– எஸ். ராஜேந்திரன் — 149

நாகசேனன் பற்றிக் குறிப்பிடும் சித்துள்பவ்வ கல்வெட்டுகள்
– என்.கே.எஸ். திருச்செல்வம் — 169

ஆசீவகமும் திருக்குறளும்
– ஜெகநாதன் அரங்கராஜ் — 172

விபுலானந்தர் ஆய்வுத்தடத்தில் தமிழிசையின் மீட்டுருவாக்கம்
– நாகலிங்கம் சண்முகலிங்கன் — 176

வாசுகி கணேசானந்தனின் 'சகோதரனற்ற இரவு'
– இளங்கோ — 180

யாழ்ப்பாண இராசதானிக் காலத்திற்குப் புதிய அடையாளம் : அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட அரிய பொன், வெள்ளி நாணயங்கள்
– பரமு புஷ்பரட்ணம் — 186

போரின் பின்னரான மீள்கட்டுமானத் திட்டங்களுக்கும் நிலையான அபிவிருத்திக்குமான கூட்டுறவு இயக்கத்தின் வகிபாகம் : எங்கிருந்து தொடங்குவது?
– வை. ஜெயமுருகன் — 189

வடக்கு கிழக்கு மாகாணத்தின் நன்னீர் மீன்பிடி அபிவிருத்தி : வளங்களும் வாய்ப்புகளும்
– அமரசிங்கம் கேதீஸ்வரன் — 183

கறவை மாடுகளின் இனப்பெருக்கச் சிக்கல்களும் பொருளாதாரத் தாக்கமும்
– சிவபாத சுந்தரலிங்கம் கிருபானந்தகுமரன் — 201

தொடக்க நிறுவனங்களை உருவாக்குதல் : நிதி சேர்க்கும் உத்திகளும் அதன் இலக்குகளும்
– கணபதிப்பிள்ளை ரூபன் — 205

வடக்குப் பிராந்தியத்தின் மழை வீழ்ச்சி அளவீட்டு முறைகளும் வானிலை அவதான நிலையங்களும்
– நாகமுத்து பிரதீபராஜா — 209

‘இலங்கையின் அரசியல் 1900 – 1981 : பன்முகநோக்கு’ என்னும் இத்தொடர் 1900 முதல் 1981 வரையான காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் பற்றிய பன்முக நோக்கிலான கோட்பாட்டு ஆய்வுகளை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் ஆய்வுக் கட்டுரைகளை கொண்டதாக அமையும். ஆங்கிலத்தில் பருவ இதழ்களிலும் (Journals) அச்சு ஊடகங்களிலும் வெளியான ஆய்வுக் கட்டுரைகளை தழுவியும் சுருக்கியும் தமிழில் எழுதப்பட்டவையாக இக் கட்டுரைகள் அமையவுள்ளன. இலங்கையின் அரசியல் குறித்த பன்முக நோக்கில் (Multi Disciplinary Approach) அமையும் அரசியல் விமர்சனமும் ஆய்வும் என்ற வகையில் அரசியல் கோட்பாடு, சட்டக் கோட்பாடு என்னும் இரண்டையும் இணைப்பனவான உயராய்வுகள் பல ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. மானிடவியல், சமூகவியல், சமூக உளவியல், வரலாறு, அரசியல் ஆளுமைகளின் வாழ்க்கை வரலாறு (Biography of Political personalities) என்னும் துறைகள் சார்ந்த உயராய்வுகளும் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. இவ் ஆய்வுகளை தமிழுக்கு இரவல் பெற்று கொண்டு வருதலும் உள்ளீர்த்து தன்வயமாக்கிக் கொள்ளுதலும் இன்றைய அவசியத் தேவையாகும். சி. அரசரத்தினம், ஏ.ஜே. வில்சன், குமாரி ஜெயவர்த்தன, ஜயதேவ உயன்கொட, றெஜி சிறீவர்த்தன, நிறா விக்கிரமசிங்க, ஜயம்பதி விக்கிரமரட்ண, லக்ஷ்மன் மாரசிங்க, சுமணசிறி லியனகே ஆகிய புலமையாளர்களின் கட்டுரைகள் இத்தொடரில் அறிமுகம் செய்யப்படவுள்ளன. இப் பட்டியல் பூரணமானதன்று. இன்னும் பலரைச் சேர்க்க வேண்டியுள்ளது. அவ்வப்போது வேறு பலரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். 30 மாதங்கள் வரை நீட்சி பெறவுள்ள இத் தொடரில் 30 கட்டுரைகள் வரை இடம்பெறும் என எதிர்பார்க்கின்றோம்.



**கந்தையா சண்முகலிங்கம்**

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த ‘இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்’ என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

‘நவீன அரசியல் சிந்தனை’, ‘கருத்தியல் எனும் பனிமூட்டம்’, ‘இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்’ ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

ஆங்கில மூலம் : பிரசன்ன டி சொய்சா

# இலங்கையின் சிங்களச் சமூகத்தில் சாதியின் வகிபாகம் :
# ஜனநாயகமும் சாதியும் அரசியலும்

பகுதி 1

*பிரசன்ன டி சொய்சா சட்டத்தரணியாகத் தொழில் புரிபவர். B.A, L.L.B, M.A (அரசியல் விஞ்ஞானம்) ஆகிய பட்டங்களைப் பெற்றவர். கொழும்பு பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத் துறையில் கலாநிதிப் பட்ட ஆய்வை தற்போது மேற்கொண்டு வருகிறார். இலங்கையில் சாதி உறவுகளும் ஜனநாயக அரசியலும் என்னும் விடயம் பற்றி சிறந்த ஆய்வுகளை எழுதி வருகிறார். அவரின் ஆய்வுக் கட்டுரையொன்றின் தழுவலாக்கத்தை இங்கு தந்துள்ளோம். பல கருத்தாக்கங்களை (CONCEPTS) உள்ளடக்கிய இக் கட்டுரையின் ஆங்கிலத் தலைப்பு “DEMOCRACY IN THE SOCIAL MARGINS : CASTE, SOCIAL EXCLUSION AND THE LIMITS OF DEMOCRATIC CITIZENSHIP IN SRI LANKA” ஆகும். இக் கட்டுரைத் தலைப்பை எளிமைப்படுத்தி “இலங்கையின் சிங்கள சமூகத்தில் சாதியின் வகிபாகம்: ஜனநாயகமும் சாதியும் அரசியலும்” என்று தமிழில் தலைப்பிட்டுள்ளோம்.*

*‘இலங்கையின் அரசியல் 1900- 1981 : பன்முக நோக்கு’ கட்டுரைத் தொடரில் மூன்றாவதாக அமையும் இக்கட்டுரை சமகால இலங்கை அரசியல் வரலாற்றைப் புரிந்து கொள்வதற்கான உள்ளொளி பாய்ச்சும் கருத்துக்களை முன் வைக்கிறது.*



பிரசன்ன டி சொய்சா

Image Source - facebook.com/Prasanna-de-Zoysa

## அறிமுகம்

இலங்கையின் பிரித்தானிய ஆட்சியின் பிற்பகுதியில் ஜனநாயகம் அறிமுகமாயிற்று. இவ்வாறு அறிமுகமான ஜனநாயகம் காலனிய நவீனத்துவத்தின் (COLONIAL MODERNITY) ஒரு முக்கிய கூறாகும். 1920 களிலும் 1930 களிலும் ஐரோப்பிய ஜனநாயகம் நிறுவன வடிவிலும், நடைமுறையிலும் புகுந்த போது, இலங்கைச் சமூகம் வர்க்கம், சாதி, இனக்குழுமம் என்ற மூன்று அடிப்படைகளில் அடுக்கமைவுடையதாக உருவாக்கம் பெற்றுக் கொண்டிருந்தது. 1830 களில் தோட்டப் பொருளாதார உற்பத்தி முதலாளித்துவ முறையாக அமைந்தது. காலனியப் பின்னணியில் உருவான வர்க்க அடுக்கமைவு (CLASS STRATIFICATION) மேற்படி தோட்டப் பொருளாதாரத்தின் அடிப்படையில் உருவானது. இனக்குழும அடுக்கமைவும் (ETHNIC STRATIFICATION) இம் முதலாளித்துவ வர்க்க உருவாக்கத்தின் ஒரு விளைவேயாகும். சாதி அடுக்கமைவு காலனியத்தின் வரவுக்கு முன்பிருந்தே இருந்து வந்த ஒன்றாகும். அது காலனித்துவத்துக்கு முந்திய சமூக, பொருளாதார அரசியல் கட்டமைப்புக்களோடு வரலாற்றுத் தொடர்புகளைக் கொண்டது. ஆகையால் காலனியத்துக்கு முந்திய காலம், காலனிய காலம், பின் காலனிய காலம் என்ற மூன்று கட்டங்களிலும் தொடரும் சமூகக் கட்டமைப்புக் கூறாக சாதி விளங்குகிறது. இது தனியாக ஆராயப்பட வேண்டியது.

இக் கட்டுரையின் நோக்கம் ஒரு குறிப்பிட்ட விடயம் சார்ந்தது. சிங்கள சமூகத்தின் சாதியின் அடிப்படையிலான சமத்துவமின்மையில் அரசியல் ஜனநாயகத்தின் பாதிப்பு சமனற்றதாக இருத்தல் பற்றி நாம் இக் கட்டுரையில் ஆராய உள்ளோம். அரசியல் ஜனநாயகத்தின் சமனற்ற பாதிப்பு (THE UNEVEN IMPACT OF POLITICAL DEMOCRACY) என்னும் விடயம் பல ஆய்வாளர்களால் சுட்டிக் காட்டப்பட்டது. ஆயினும் வெளிப்படையாக அவதானிக்க முடியாத இந்த விடயம் ஆழமான ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. வேறு வகையில் கூறுவதாயின் இலங்கையில் சிங்கள சமூகத்தில் பல்வேறு சாதிக் குழுமங்கள் இருந்து வந்தன. இவற்றுள் சில சாதிகள் அரசியல் ஜனநாயகத்தின் நன்மைகளைப் பெற்று சமூக நிலையில் உயர்ச்சி பெற்றன. வேறு சில சாதிகளால் அவ்விதம் அரசியல் ஜனநாயகத்தின் நன்மைகளைப் பெற முடியவில்லை. இதனையே சமனற்ற பாதிப்பு (UNEVEN IMPACT) என்கிறோம். இச் சமனற்ற பாதிப்புக்கான காரணங்கள் எவை என்பதே ஆராய்விற்குரிய பிரச்சினை. சில சாதிகள் தொடர்ச்சியாக ஜனநாயகத்தின் நன்மைகளைப் பெற முடியாமல் விலக்கப்படுவது ஏன் என்பதே விடை காண வேண்டிய வினாவாகும்.

இலங்கைச் சமூகம் பல்வேறு அடிப்படைகளில் பிளவுபட்டு, அடுக்கமைவு பெற்றுள்ளது. வர்க்கம், சமயம், இனத்துவம் (ETHNICITY), பால்நிலை (GENDER), சாதி, பண்பாட்டு அடையாளங்கள் என்பன இப் பிளவுகளுக்கும் அடுக்கமைவுக்கும் அடிப்படையாக அமைகின்றன. அடுக்கமைவுடைய ஒரு சமூகத்தில் சமத்துவமின்மைகள் (INEQUALITIES) ஆழமாக வேரூன்றியிருக்கும். சமூக சமத்துவமின்மைகளை கட்டமைப்பனவாக சமூகக் கட்டமைப்புகளே விளங்குவதையும் காணலாம் (SHARMA 2006: *vii*). ஆகையால் சாதியின் அடிப்படையிலான அடுக்கமைவு எவ்வாறு பல்வேறு வகையான சமத்துவமின்மைகளை உருவாக்குகின்றது என்பதை ஆராய்வதற்கு எமக்கு 'கருத்தாக்க வரை சட்டம்' (CONCEPTUAL FRAMEWORK) தேவை. அத்தகைய வரைசட்டம் ஒன்றுதான்



சமத்துவமின்மைகளின் அரசியல் விளைவுகளை கண்டுணர உதவ முடியும். இக்கட்டுரையில் நாம் சமூக விலக்குதல் (SOCIAL EXCLUSION) என்ற எண்ணக்கருவைப் பிரயோகித்து விளிம்பு நிலையில் உள்ள மக்கள் மீது அரசியல் ஜனநாயகம் எவ்வாறு இடைவினை செய்கிறது, எவ்வாறு ஜனநாயகக் குடிமையின் (DEMOCRATIC CITIZENSHIP) நன்மைகளைப் பெற முடியாத வகையில் மட்டுப்பாடுகளை விதிக்கிறது என்பதை ஆராய உள்ளோம்.

'சமூக விலக்குதல்' என்பதன் பொருள் ஜனநாயக உரிமைகளையும் சமூக உரிமைகளையும் (SOCIAL RIGHTS) சில சமூகக் குழுவினருக்கு கிடைக்காதவாறு தடுத்தல் அல்லது விலக்குதல் ஆகும். சமூக விலக்கல் என்ற செயல்முறை, விலக்கல் (EXCLUSION) என்ற நிலையை உருவாக்குகிறது. 'THORAT' சமூக விலக்கல் என்பதை பின்வருமாறு வரைவிலக்கணம் செய்கிறார். "SOCIAL EXCLUSION IS THE DENIAL OF OPPORTUNITIES IMPOSED BY CERTAIN GROUPS OF SOCIETY UPON OTHERS WHICH LEADS TO INABILITY OF AN INDIVIDUAL TO PARTICIPATE IN THE BASIC POLITICAL, ECONOMIC AND SOCIAL FUNCTIONING OF THE SOCIETY (THORAT, **2007:1**)" இக் கூற்றைப் பின்வருமாறு மொழி பெயர்த்துக் கொள்ளலாம். "சமத்துவமான வாய்ப்புகளை சமூகத்தின் ஒரு பிரிவினர் சமூகத்தின் இன்னொரு பிரிவினருக்கு மறுப்பதையே சமூக விலக்கல் (SOCIAL EXCLUSION) என்று குறிப்பிடுவர். இச் சமூக விலக்கலின் விளைவால் தனிநபர்கள் அடிப்படையான அரசியல், பொருளாதார, சமூக செயற்பாடுகளில் பங்கேற்க முடியாத நிலைக்கு உள்ளாகின்றனர்."

சாதி அடுக்கமைவுடைய சமூகமொன்றில் மேற்குறிப்பிட்ட சமூக விலக்கல் அரசியல் மட்டத்தில் சமத்துவமின்மையை உருவாக்குகிறது. இச் சமத்துவமின்மையை 'அரசியல் விலக்கல்' (POLITICAL EXCLUSION) என உயன் கொட குறிப்பிடுகின்றார். (UYANGODA **2012:36, 824**) அரசியல் விலக்கலின் பிரதான விளைவு குடியுரிமைகளை மறுத்தல் (DENIAL OF CITIZENSHIP RIGHTS) ஆகும். இலங்கையின் அரசியல் யாப்பின் உறுப்புரை **12**, யாவருக்கும் சட்டத்தின் கீழ் சமமான பாதுகாப்பையும், பாரபட்சமின்றி நடத்தப்படுவதையும் (EQUAL PROTECTION AND NON DISCRIMINATION) உறுதி செய்கிறது. உறுப்புரை **17,126** என்பன அரச முகவரால் (STATE AGENCY) இவ்வுரிமை மீறப்படும் போது நிவாரணம் பெறுவதற்கான வழிமுறையை வகுத்துள்ளன. அத்துடன் இலங்கை அரசியல் யாப்பின் முகப்பு வாசகம் சமத்துவம் ஒரு அடிப்படைத் தத்துவம் (BASIC PRINCIPLE) எனக் கூறுகிறது. இவ்வாறான அரசியல் யாப்பு உத்தரவாதங்கள் இருந்த போதும், உண்மையான சமூக நடைமுறை வேறு விதமாக இருக்கிறது. சமூக இடையுறவுகளில் தனிநபர்களும், சமூகக் குழுக்களும் சமத்துவமாக நடத்தப்படுவதில்லை. சில நபர்களுக்கும், சில குழுக்களுக்கும் பிரஜைகளில் உரிமைகளில் சமத்துவம் மறுக்கப்படுகிறது. பெண்கள், வறியோர் ஆகியோரும், இனக்குழுமம், பண்பாடு, பால்நிலை, சமூகம் ஆகிய நிலைகளில் சிறுபான்மையினராக உள்ளோரும் சமத்துவம் மறுக்கப்படும் சமூகக் குழுக்களாகும். இக் குழுக்கள் சமூக விலக்கல், அரசியல் விலக்கல் ஆகிய விலக்கல்களின் பிரத்தியே வடிவங்களின் பாதிப்புக்கும் உள்ளாகின்றன.

### விளிம்பு நிலையாதல் வரைவிலக்கணம்

> உயர் சாதிக் குழுக்கள் விளிம்பு நிலைச் சாதிகளை சமூகத்தின் பொது வாழ்க்கையில் பங்கேற்க அனுமதிப்பதில்லை. அச் சாதிகளை உயர் சாதியினர், தாழ்ந்தோர் என விலக்கி வைப்பதோடு, சமூகப் படி நிலையில் தாழ்ந்த இடத்தை அவர்களுக்கு வழங்கி உள்ளனர்.

இக்கட்டுரை விளிம்பு நிலையாதல் (MARGINALISATION) என்பதை சமூக விலக்கல் (SOCIAL EXCLUSION), அரசியல் விலக்கல் (POLITICAL EXCLUSION) என்னும் செயல் முறைகளின் விளைவு என வரைவிலக்கணம் செய்கிறது. விளிம்பு நிலைச் சாதிச் சமூகங்கள் சமூகத்தில் எல்லைப் பகுதிகளில் கட்டாயப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன. உயர் சாதிக் குழுக்கள் விளிம்பு நிலைச் சாதிகளை சமூகத்தின் பொது வாழ்க்கையில் பங்கேற்க அனுமதிப்பதில்லை. அச் சாதிகளை உயர் சாதியினர், தாழ்ந்தோர் என விலக்கி வைப்பதோடு, சமூகப் படி நிலையில் தாழ்ந்த இடத்தை அவர்களுக்கு வழங்கி உள்ளனர். இவ்வாறு தாழ்ந்தோர் என விலக்கி வைக்கப்பட்ட சாதிக்குழுக்கள் பெரும்பாலும் சேவைச் சாதிகளாக (SERVICE CASTES) இருப்பதைக் காணலாம். சேவைச் சாதிகள் சமூகப் படிநிலையில் தாழ்ந்தபடியில் இருப்பவர்களாகவும், 'உயர்' சாதியினருக்கு சேவைக் கடமைகளை ஒரு கடப்பாடாக செய்பவர்களாகவும் இருக்கின்றனர். சேவைச் சாதிகள் காணிகளை உடைமையாகக் கொண்டவர்களல்ல. உயர் சாதியினரின் காணிகளில் குத்தகைக்குப் பயிர் செய்பவர்கள் பலர் காணியற்றவர்களாய் கூலித் தொழில் செய்வதோடு மரபு வழிச் சேவைக் கடமைகளை பணக்கூலி பெற்றுச் செய்து வந்தனர். காலனிய ஆட்சிக் காலத்திலும், பின் காலனிய கட்டத்திலும் இவர்கள் காணியற்றவர்களாகவும் வறியவர்களாகவும் உயர் சாதிகளிலிருந்து சமூக நிலையில் தனிமைப்படுத்தப்பட்டவர்களாகவும் இருந்துள்ளனர். பெரும்பாலும் சேவைச் சாதிகள் ஒரு சாதிக் கிராமங்கள் என்ற வகை கிராமங்களில் வாழ்ந்தனர். குறிப்பிட்ட ஒரு சாதிக்குரிய இக் கிராமங்கள் உயர் சாதிக் கிராமங்களின் விளிம்பில் அல்லது எல்லையில் அமைந்திருக்கும். 'தீண்டாமை' என்னும் சமூக ஒழுக்க விதி இச் சமூகங்களை உயர்சாதிக் கிராமங்களில் இருந்து தனிமைப்படுத்தி வைத்தன. இச் சாதிகளின் சமூக விலக்கல் அவர்களின் விளிம்புநிலை இருப்பை உறுதி செய்கின்றது. சமூகக் கட்டமைப்பு, பொருளாதார உறவுகள், மேலாண்மையுடைய சமயம், மேலாண்மையுடைய பண்பாடு ஜனநாய அரசியல் என்பன ஒன்றிணைந்து இச் சமூகங்களின் விளிம்பு நிலையை மீள் உற்பத்தி (REPRODUCE THEIR MARGINALITY) செய்கின்றன. விளிம்பு நிலைச் சாதியினர் சிங்களத்தில் தம் நிலையை 'அபிவ கொன் கறலா' என்று கூறுவர். இதன் பொருள் 'நாம் எல்லைப் புறத்திற்கு தள்ளப்பட்டுள்ளோம்' என்பதாகும். இலங்கையின் சமூக நல அரசும் (WELFARE STATE) பொருளாதாரம், கல்வி, பண்பாடு ஆகிய விடயங்களில் இப் பிரிவினர்களுக்கு முழுமையாக நன்மைகளை கிடைக்கச் செய்யவில்லை. விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட இம் மக்களுக்கு விளிம்பு நிலைக்குத் தள்ளப்படாமல் இருப்பதற்கான பாதுகாப்பு அரசிடமிருந்து கிடைக்கவில்லை. ஆகையால் எல்லாம் தழுவியதான கட்டமைப்பு ஒன்றுக்குள், விளிம்பு நிலைக்குள் சிக்குண்டிருக்கும் இம் மக்களின் சமத்துவ உரிமைகள் (RIGHT TO EQUALITY), ஜனநாயக அரசின் பிரஜைகள் என்ற முறையிலான உரிமைகள் ஆகியன மறுக்கப்படுகின்றன. ஆகையால் சமூக விளிம்பு நிலை, சமூக விலக்கல் என்ற இரண்டும் பரஸ்பரம் இடைவினை செய்வதால் இம் மக்கள் சமூக அரசியல் வாழ் நிலையில் பாதிப்புகளுக்கு ஆளாகின்றனர். இக் கட்டுரை இலங்கையில் சாதியும் ஜனநாயகமும் என்பதன் பரிமாணங்களை ஆராய்கிறது. சில சாதிக் குழுமங்கள் எவ்வாறு தமது விளிம்பு நிலையில் இருந்து தம்மை விடுவித்துக் கொண்டு காலனிய முதலாளித்துவம், காலனிய ஜனநாயகம், பின் காலனிய ஜனநாயகம் ஆகிய பின்புலங்களில், சமூக ஏணிப் படியில் முன்னேறின என்பதையும், ஏனைய சில சமூகங்கள் தொடர்ந்து ஜனநாயக சமூகத்தில் விளிம்பு நிலை இருப்பில் நிலை

கொண்டுள்ளன என்பதையும் இக் கட்டுரையில் ஆராய உள்ளோம்.

இக் கட்டுரையின் அடிக்கருத்தை ஒரு ஆய்வு வினா வடிவில் கூறலாம். இலங்கையின் சிங்களச் சமூகத்தில் சாதி அடிப்படையிலான சமூக விலக்கலும் அரசியல் விலக்கலும் இன்று வரை எப்படி இருந்து வந்துள்ளது, அது எவ்வாறு செயற்படுகிறது? இப் பிரதான வினாவிற்கு துணையான பின்வரும் வினாக்களும் இக் கட்டுரையில் ஆராயப்படும்.

ஜனநாயகப்படுத்தல் செயல்முறையும், சாதியும் ஒன்றோடொன்று எவ்வாறு இடைவினை புரிகின்றன, ஜனநாயக சமூகத்தில் சமூக விலக்கல் எவ்வாறு அரசியல் விலக்கலுக்கு காரணமாகிறது, விகிதாசார விலக்கு முறை (PROPORTIONAL REPRESENTATION) அறிமுகம் செய்யப்பட்டதனால் தேர்தல் முறையில் ஏற்பட்ட தாக்கங்கள் எவை, விகிதாசார முறைக்கும் - சமூக விலக்கல் - அரசியல் விலக்கல் என்பனவற்றுக்கும் இடையிலான தொடர்புகள் யாவை, இலங்கையில் ஜனநாயகத்துடன் ஒருங்கே இருப்புக் கொண்டுள்ள சமூக விலக்கலின் பரிமாணங்கள் யாவை? போன்ற மேற்படி வினாக்களின் துணையுடன் சம காலத்தில் இலங்கையில் சமூக விலக்கலும், அரசியல் விலக்கலும் செயற்படும் பின்னணியை இக்கட்டுரை ஆராயவுள்ளது. அத்தோடு பிரதான அடிக்கருத்துடன் தொடர்புடைய பின்வரும் விடயங்களும் இக் கட்டுரையில் ஆராயப்படவுள்ளன.

1. சாதியப் பிரிவினைகளின் அடிப்படையில் ஆழமாகப் பிளவுபட்டிருந்த சிங்கள உயர்குழாம் (SINHALA ELITES) 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பத்தாண்டுகளில் நவீன பிரதிநிதித்துவ ஜனநாயகம் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட போது, எவ்வாறு அதனை எதிர்கொண்டு செயற்பட்டது?

2. சுதந்திரத்திற்குப் பிந்திய இலங்கையில் சாதி அரசியலும், ஜனநாயக அரசியலும் எவ்விதச் செயல் முறையில் உருவாக்கம் பெற்றன?

3. சமூக விலக்கலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள விளிம்பு நிலைச் சாதிக் குழுமங்கள் ஜனநாயக அரசியல் களத்தில் விலக்கலை எவ்வாறு எதிர் கொண்டன?

4. இலங்கையின் நவீனத்துவத்தின் வழியுரிமையாக நீடித்து வரும் சாதி அடிப்படையிலான சமத்துவமின்மைகளும், சமூக விலக்கல், அரசியல் விலக்கல் என்பனவும் அரசியல் ஜனநாயகத்துடன் ஒருங்கே தொடருதலை எவ்வாறு புரிந்து கொள்வது?

இந்த ஆய்வுக்கான தரவுகளை நாம் இரு மூலங்களில் இருந்து பெற்றுக் கொண்டோம். முதலாவதாக ஜனநாயகமும் ஆளுகையும் (DEMOCRACY AND GOVERNANCE) என்னும் ஆய்வுத்திட்டம் சமூக விஞ்ஞானிகள் சங்கத்தால் (SSA) 2013 இல் செயல்படுத்தப்பட்ட போது, அத்திட்டத்தின் கீழ் கள ஆய்வில் (DE SOYSA 2014) இருந்து தகவல்கள் பெறப்பட்டன. இரண்டாவதாக 'சாதியின் முக்கியத்துவம் : ஜனநாயகமும் சாதியும் அரசியலும் - 1978 அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்ததற்குப் பிந்திய காலத்து சிங்கள அரசியல் குறித்த விடய ஆய்வு (CASE STUDY)' என்னும் தலைப்பில் இக் கட்டுரையாசிரியர் முதுகலைமாணிப் பட்டத்திற்காக சமர்ப்பித்த ஆய்வேட்டில் இருந்தும் தகவல்களைப் பெற்றுக் கொண்டோம். இந்த இரு ஆய்வுகளின் போதும் நேர்காணல்கள், களத்திற்கு அடிக்கடி சென்று அவதானித்தல், உரையாடல்கள் (தனிநபர்களும் குழுக்களும்) போன்ற பண்புத் தரவுகளைப் பெறும் உத்திகள் மூலம் தரவுகள் திரட்டப்பட்டன.

கள ஆய்வின் போது கிராமத்து மக்கள், அரச உத்தியோகத்தர்கள், மதகுருமார்கள் ஆகியவர்வளிடமிருந்து தகவல்கள் பெறப்பட்டன. இக் கள ஆய்வு பகுதியளவு இன வரைவியல் பண்பு ஆய்வு முறைகளின் படி (SEMI - ETHNOGRAPHIC QUALITATIVE METHODS OF FIELD RESEARCH) நடத்தப்பட்டது.

முதலாவது கள ஆய்வு களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவின் பல்பிட்டி கொட, குரான தெற்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் நடத்தப்பட்டது. முதலாவது, இரண்டாவது ஆய்வுகளின் களங்கள் பொதுத்தன்மை உடையவை. இரு ஆய்வுப் பகுதிகளிலும் விளிம்பு நிலை சாதியாக 'பத்கம' சமூகப் பிரிவினரும், மேலாதிக்கச் சாதியான 'கொவிகம' சமூகப் பிரிவினரும் மக்கள் தொகையின் கணிசமான வீதாசாரத்தினராக இருந்தனர். முதலாவது கள ஆய்வுப் பகுதியில் மிகச்

சிறு தொகையினரான தமிழர்கள் வாழ்ந்தனர். சிங்கள 'நவண்டன' (பஞ்ச கர்ம) சாதிக் குடும்பங்கள் சிலவும் இங்கு வாழ்ந்தன. இக் கிராமங்களின் பத்கம சாதியினர் 28% வீதத்தினராகவும் (பல்பிட்டி கொட) 38% வீதத்தினராகவும் (குரான தெற்கு) இருந்தனர்.

இரண்டாவது கள ஆய்வுக்காக அ) தெவிநுவர தேர்தல் தொகுதி, ஆ) அவிசாவலை தேர்தல் தொகுதி, இ) தலாவ பிரதேச சபைப் பகுதி (அனுராதபுர மாவட்டம்) என மூன்று வெவ்வேறு இடங்கள் தேர்வு செய்யப்பட்டன.

தெவிநுவர தேர்தல் தொகுதி பல சாதிகள் ஒருங்கே வாழும் கிராமங்களைக் கொண்ட பகுதி. இக் காரணத்தினாலேயே இத் தேர்தல் தொகுதி கள ஆய்வுக்குத் தேர்வு செய்யப்பட்டது. பெரவ, துராவ, கொவிகம, கராவ, கும்பல், நவண்டன, ரஜக்க, சலாகம, வகும்புர ஆகிய பல சாதிகள் தெவிநுவரவில் பரவிக் காணப்படுகின்றன. இவற்றுள் துராவ, கொவிகம, கராவ, சலாகம சாதிகள் சனத்தொகை எண்ணிக்கையில் பெரியன. ஆயினும் இந்த நான்கு சாதிகளில் எச்சாதியும் 'பெரும்பான்மை' என்று கூறத்தக்க அளவு எண்ணிக்கை உடையனவாக இல்லை. அவிசாவல தொகுதி வித்தியாசமான இயல்புகளை உடையது. இங்கே 'கொவிகம' பெரும்பான்மை 43% வீதமாக இருந்த போதும், பத்கம சனத்தொகையில் 30% ஆகவும் வகும்புர 18% ஆகவும் உள்ளன. இவ்விரு சாதிகளும் செறிவாக குடியிருக்கும் பல நிலப்பகுதிகள் அவிசாவலையில் உள்ளன. தலாவ பிரதேச சபைப் பகுதி 'கொவிகம' பெரும்பான்மையாக வாழும் பகுதியாக விளங்குகிறது. ஆயினும் இங்கு பத்கம, பெரவ, ரஜக்க சமூகப் பிரிவினர்கள் செறிவாக குடியிருக்கும் பகுதிகளும் உள்ளன. யூலை 2009 முதல் மார்ச் 2010 வரையான காலப் பகுதியில் தரவுகள் தொகுக்கப்பட்டன. சில இடங்களில் மார்ச் 2010 இற்கு பின்பும் தரவுகள் பெறும் வேலை நீடித்தது.

இக் கட்டுரையின் இனிவரும் பகுதியில் இலங்கையின் சாதி உறவுகளிற்கும் ஜனநாயகத்திற்கும் இடையிலான தொடர்பு விளக்கங்கள் ஆராயப்படும். இது வரையான விளக்கங்கள் இவ்வாய்வுக்குத் தொடக்கமான அறிமுகமாக அமைந்தன. 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் காலனிய அரசாங்கம் மட்டுப்படுத்திய வாக்குரிமை அடிப்படையில் (ஆங்கிலம் படித்த இலங்கையர், சொத்துடையவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை) சட்ட சபைக்கு பிரதிநிதிகளை அனுப்பும் முறையை அறிமுகம் செய்தது. அப்போது அம் மாற்றத்தின் தாக்கத்தால் சாதி உறவுகள் புதிய திருப்பத்தைப் பெற்றன. 19 ஆம் 20 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையின் கரையோர மாகாணங்களில் கராவ, சலாகம, துராவ என்னும் மூன்று சாதிகள் சமூக பொருளாதார மேல் நிலையைப் பெற்றன. இவற்றை நாம் விபரித்துக் கூறவுள்ளோம். இறுதிப் பகுதியில் சாதிக்கும் ஜனநாயகத்திற்கும் இடையிலான முரண்பட்ட உறவு விளக்கப்படும். விகிதாசாரமுறைத் தேர்தல் (P.R) அறிமுகப்படுத்தப்பட்ட பின் சாதி உணர்வும், சாதி விசுவாசமும் வாக்களிப்பின் போது தூண்டப்படுவதையும் விளக்கிக் கூறவுள்ளோம். அதன் பின்னர் சாதி அடிப்படையிலான சமூக விலக்கல், விளிம்பு நிலைச் சாதிகளின் ஜனநாயக உரிமைகளை மறுப்பதற்குக் காரணமாக அமைவது விளக்கப்படும்.

ஜனநாயக அரசியல் உருவான தொடக்க காலத்தில் இருந்தே இலங்கையில் சாதிக்கும் அரசியலுக்கும் இடையே நெருங்கிய பிணைப்பு இருந்து வந்தது. 1920 களில் தேர்தல்கள் மூலம் சட்ட சபைக்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் தேர்தல் ஜனநாயகம் (ELECTORAL DEMOCRACY) அறிமுகமான போது தேர்தல் போட்டி சாதி, இனக் குழுமங்கள் என்ற பிரிவினைகளின் அடிப்படையிலான போட்டியாக அமைந்து விட்டது.

ஜனநாயக அரசியல் உருவான தொடக்க காலத்தில் இருந்தே இலங்கையில் சாதிக்கும் அரசியலுக்கும் இடையே நெருங்கிய பிணைப்பு இருந்து வந்தது

கட்டுரையின் இறுதியில் சமூக விலக்கல் செயல்முறை எவ்வாறு அடிநிலைச் சாதிகளின் தாழ்நிலைக்குக் காரணமாக அமைகிறது என்பது விளக்கப்படுவதோடு ஜனநாயகத்தின் சமூகக் கூறுகள் விளக்கியுரைக்கப்படும். இவ் இறுதிப் பகுதியில் அடிநிலைச் சாதிகளின் சமூக விலக்கல் காரணமாக மனித உரிமைகளின் முக்கிய பாகமாக அமையும் பண்பாட்டு உரிமைகள் (CULTURAL RIGHTS) அவற்றிற்கு மறுக்கப்படுகின்றன என்பதும் விளக்கப்படும்.

## இலங்கையில் ஜனநாயகமும் சாதியும்

இலங்கையில் ஜனநாயக அரசியல், பிரித்தானிய காலனி ஆட்சியின் பிற்பகுதியில் 1920 களிலும், 1930 களிலும் அறிமுகமானது.

ஜனநாயக அரசியல் உருவான தொடக்க காலத்தில் இருந்தே இலங்கையில் சாதிக்கும் அரசியலுக்கும் இடையே நெருங்கிய பிணைப்பு இருந்து வந்தது. 1920 களில் தேர்தல்கள் மூலம் சட்ட சபைக்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் தேர்தல் ஜனநாயகம் (ELECTORAL DEMOCRACY) அறிமுகமான போது தேர்தல் போட்டி சாதி, இனக் குழுமங்கள் என்ற பிரிவினைகளின் அடிப்படையிலான போட்டியாக அமைந்து விட்டது. இவ் விதமாக சாதியை அடிப்படையாகக் கொண்ட அடையாள அரசியல் (IDENTITY POLITICS) இலங்கையின் பிரதிநிதித்துவ ஜனநாயக முறையின் பிரிக்க முடியாத ஓர் அம்சமாக நிலை பெற்றது. இலங்கையின் பிரதிநிதித்துவ ஜனநாயக முறை சாதியும், இனத்துவமும் (CASTE AND ETHNICITY) என்ற இரண்டு சமூகப் பிரிவினைகளோடு நெருங்கிய உறவுடையதாக இருந்து வருகிறது என்று கூறினால் அது மிகைக் கூற்றன்று.

பிரதிநிதித்துவ ஜனநாயக முறை அறிமுகம் செய்யப்பட்ட போது இலங்கையில் கட்சிமுறை வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. கட்சிமுறை வளர்ச்சி பெற்றிருக்காத சூழ்நிலையில் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் அரசியலில் தனிநபர்களாகவே வாக்காளர்களிடம் வாக்குக் கேட்டனர். ஆகையால் தேர்தல் அணி திரளல்(ELECTORAL MOBILISATION) சாதி அடையாளம், இனக்குழும அடையாளம் என்ற இரு அடிப்படைகளில் நடைபெற்றது.

பிரதிநிதித்துவ ஜனநாயக முறை அறிமுகம் செய்யப்பட்ட போது இலங்கையில் கட்சிமுறை வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. கட்சிமுறை வளர்ச்சி பெற்றிருக்காத சூழ்நிலையில் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் அரசியலில் தனிநபர்களாகவே வாக்காளர்களிடம் வாக்குக் கேட்டனர். ஆகையால் தேர்தல் அணி திரளல் (ELECTORAL MOBILISATION) சாதி அடையாளம், இனக்குழும அடையாளம் என்ற இரு அடிப்படைகளில் நடைபெற்றது. வேட்பாளர்கள் தமது சாதியாட்களிடம் வாக்கைத் திரட்டுதல், இனக்குழும அடையாள அடிப்படையில் வாக்கைத் திரட்டுதல் என்பது வழமையாயிற்று. சிங்களச் சமூகத்தில் கொவிகம, கராவ, சலாகம, துராவ என்னும் நான்கு பெரும் சாதிக் குழுக்கள் பிரதிநிதித்துவ ஜனநாயக அரசியலின் நன்மைகளைத் தமதாக்கிக் கொண்டன. காலனிய ஆட்சிக் காலத்தில் மேற் குறித்த நான்கு சாதிக் குழுமங்களின், சட்டசபை ஆசனங்களைப் பிடிப்பதற்குப் போட்டியிடும் அரசியல் ஆரம்பமாயிற்று. இப் போட்டி அரசியல், இலங்கையில் சுதந்திரத்திற்குப் பின்னரும் தொடர்ந்தது. சுதந்திரத்திற்குப் பிந்திய காலத்தில் பாராளுமன்றத்திலும், அமைச்சரவைகளிலும் பிரதான சாதிகளின் ஆட்களின் பிரதிநிதித்துவம் பற்றிய போட்டி வெளிப்பட்டது. ஆயினும் இப் போட்டி உயர் குழாம் மட்டத்திலும் (ELITES), இடைத்தரச் சாதிகள் நிலையிலும் இருந்து வந்ததும் கவனத்தில் கொள்ளத்தக்கது. இதனால், உயர் இடைத்தரச் சாதிக் குழுக்களின் உயர் குழாங்களின் உறுப்பினர்கள் அரசியலை ஒரு தொழிலாகக் கொண்ட அரசியல்வாதிகளாக (PROFESSIONAL POLITICIANS) இலங்கையின் ஜனநாயக முறையில் செயற்படலாயினர்.

## சாதி பற்றிய ஆய்வுகள்

இலங்கையில் அரசியலுக்கும் சாதிக்கும் உள்ள தொடர்பு பற்றிப் பல புலமையாளர்கள் ஆய்வு நூல்களையும், ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்கள். இவர்களுள் ஜிஜின்ஸ் (1974 மற்றும் 1979) ஜயந்த (1992) றொபர்ட்ஸ் (1995) குமாரசுவாமி (1988) டி சொய்சா (2012) ஆகியவை குறிப்பிடத்தக்கவை. ஜிஜின்ஸ் ஆய்வு இலங்கையின் சமூகக் கட்டமைப்பிற்கும், அரசியல் கட்சிகளுக்கும் இடையிலான உறவை

**நவீன காலத்தில் இலங்கையில் நவீன ஜனநாயகத்தின் சமூகத் தாக்கம் ஒரு முரண் நிலையைக் கொண்டுள்ளது. காலனிய முதலாளித்துவத்தின் கீழும், காலனிய ஆட்சியின் கீழும் சில சாதிகள் பல நன்மைகைளைப் பெற்று மேலுயர்ச்சி பெற்றன. இச் சாதிகள் ஜனநாயகத்தின் நன்மைகளையும் பெற்றுக் கொண்டன. ஆயின் விளம்பு நிலைச் சாதிகள் காலனிய முதலாளித்துவம், காலனிய ஆட்சி, ஜனநாயகம் என்பனவற்றால் உயர்வு பெறவில்லை.**

---

ஆராய்கிறது. அவர் சிங்கள சமூகத்தில் சாதி அடையாளமும், குடும்ப உறவுகளும் எவ்வாறு தேர்தல் அரசியலில் வெளிப்பட்டன என்பதை ஆராய்கிறார் (ஜிஜின்ஸ் 1979:150). ஜயந்த கரை நாட்டு சிங்கள சமூகத்தில் அரசியல் சார்பும் விசுவாசமும் எவ்விதம் பொருளாதார, சமூக நிலை சார்ந்து ஏற்படுகிறது என்பதை ஆராய்கிறார். அவர் தமது ஆய்வில் ஜிஜின்ஸ் கருத்துக்களை கேள்விக்கு உட்படுத்துகிறார் (ஜயந்த 1992 :5, 199). றொபர்ட்ஸ் ஆய்வின் பிரதான அடிக் கரு (THEME) சாதி இடையூட்டாட்டத்தின் அமைப்பு (STRUCTURE OF CASTE INTERACTION) ஆகும். அவர் குறிப்பாக கராவ சாதியில் இருந்து 19 ஆம் 20 ஆம் நூற்றாண்டுகளில் விகிதாசார அடிப்படையில் பெரும் பங்கினரான சிங்கள உயர் குழுக்களும், முதலாளி வகுப்பினரும் தோன்றினர் என்பதை ஆராய்கிறார் (றொபர்ட்ஸ் 1995 :1,4). அவரது ஆய்வு சாதியும் அரசியலும் பற்றி, குறிப்பாக கொவிகம சாதிக்கும் கரையோரப் பகுதிகளின் சாதிகளுக்கும் இடையிலான அரசியல் போட்டி பற்றி ஆராய்கிறது. தரா குமாரசுவாமி (TARA COOMARASWAMY) சட்ட சபைப் பிரதிநிதித்துவத்தின் மாறுதல்களின் தன்மை, போக்கு என்பனவற்றை ஆராய்கிறார் (1988:10). தமது ஆய்வில் பிரதிநிதித்துவத்தின் தன்மையையும் கீழ்ப்பட்ட நிலையில் இருந்த சாதிகளின் பங்கேற்பு பற்றியும் கவனம் செலுத்தியுள்ளார். ஆனால் அவர் தனது ஆய்வின் நோக்கு எல்லையை சுருக்கிக் கொண்டதால் கீழ்நிலையில் இருந்த சாதிகளின் ஜனநாயக அரசியல் உரிமைகள் பற்றிய விரிவான விளக்கம் சாத்தியமற்றதாகி விட்டது. டி சொய்சா இலங்கையின் நீண்டகால ஜனநாயக அரசியல் செயல்முறையில் சாதி ஏன் இன்னும் தொடர்ந்து நிலைத்துள்ளது என்பதை ஆராய்கிறார். டி சொய்சா குறிப்பிடும் இந்த விடயம் அண்மைக் காலத்தில் தான் சில ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது என்று கூறுகிறார் உயன் கொட (2012,2013,2015). சில்வாவும் பிறரும் (2009a, 2010b), டி சொய்சா (2014) ஆகிய ஆய்வுகளை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இவ்விடயம் பற்றிய பல்வேறு கூறுகள் இனிமேல் ஆராயப்பட வேண்டியனவாய் உள்ளன.

குறிப்பாக

அ) சில சாதிகள் அரசியலில் உள்ளீர்க்கப்பட்டிருப்பதும், சில சாதிகள் அரசியலில் விலக்கப்பட்டிருப்பதும் (POLITICAL EXCLUSION) எவ்வாறு நிகழ்ந்தது என்பதும்
ஆ) ஜனநாயக முறையில் விலக்குதலின் (EXCLUSION) விளைவு என்ன, அதன் அர்த்தம் யாது என்பனவும் ஆராய்விற்குரியன.

நவீன காலத்தில் இலங்கையில் நவீன ஜனநாயகத்தின் சமூகத் தாக்கம் ஒரு முரண் நிலையைக் கொண்டுள்ளது. காலனிய முதலாளித்துவத்தின் கீழும், காலனிய ஆட்சியின் கீழும் சில சாதிகள் பல நன்மைகைளைப் பெற்று மேலுயர்ச்சி பெற்றன. இச் சாதிகள் ஜனநாயகத்தின் நன்மைகளையும் பெற்றுக் கொண்டன. ஆயின் விளம்பு நிலைச் சாதிகள் காலனிய முதலாளித்துவம், காலனிய ஆட்சி, ஜனநாயகம் என்பனவற்றால் உயர்வு பெறவில்லை. பிரதிநிதித்துவ ஜனநாயகம் அறிமுகம் செய்யப்பட்டு 100 ஆண்டுகள் கடந்து விட்டன. வயது வந்தவர் யாவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டு 90 ஆண்டுகள்

கடந்து விட்டன. ஆயினும் விளிம்பு நிலைச் சாதிகள் 'சமூக அரசியல் விலக்கி வைத்தல்' (SOCIAL AND POLITICAL EXCLUSION) காரணமாக இன்றும் போராடிக் கொண்டிருக்கும் நிலை காணப்படுகிறது. இவ் விளிம்பு நிலைச் சாதிகளுக்குப் பொதுவான இயல்புகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

அ) இச்சாதிகள் முதலாளித்துவத்தால் பெரு நன்மைகள் எதனையும் பெறவோ, மேல் நோக்கிய நகர்வைப் (UPWARD SOCIAL MOBILITY) பெறவோ முடியவில்லை.

ஆ) இச்சாதிகள் முதலாளித்துவப் பொருளாதாரத்திலும் (AGRARIAN ECONOMY) மிகவும் தீவிரமான பின்னடைவிலும் விளிம்பு நிலையிலும் உள்ளன.

இ) சமூக நல அரசு (WELFARE STATE) இம்மக்களுக்கு பிற சாதிகளுக்கு வழங்கிய நன்மைகள் போன்று நன்மைகளை வழங்கவில்லை. இம் மக்களால் நன்மைகளைப் பெற முடியவில்லை.

ஈ) மைய நீரோட்ட அரசியல் கட்சி அணி திரட்டலுக்கும் (PARTY MOBILISATION) தேர்தல் அணி திரட்டலுக்கும் அப்பால் இச் சாதிகள் வெளியே இருந்து வந்துள்ளன.

உ) இம் மக்கள் ஜனநாயகத்தின் நன்மைகளை முழுமையாகப் பெறவில்லை. மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பெற்றுள்ளனர்.

ஊ) பிரஜைகள் என்ற வகையிலும், சமத்துவமற்ற பிரஜைகளாகவும் பிரஜா உரிமைகளை முழுமையாக அனுபவிக்காதவர்களாகவும் இம்மக்கள் உள்ளனர்.

### காலனிய கால மாற்றங்களும் சாதிகளின் நவீனத்துவமும்

இலங்கையின் நவீனமயமாதல் (MODERNISATION) செயல் முறையில் சாதியும் ஜனநாயகமும் ஒருங்கே இயங்கின. இது ஒரு முரண்பாடு ஆகும். ஏனெனில் சாதியும் ஜனநாயகமும் ஒன்றிற்கொன்று முரணானவை. சாதி பிறப்பால் அமையும் சமத்துவமின்மையாகும். அப் பிறப்பிலேயே குறித்த சாதியைச் சேர்ந்த நபரின் அந்தஸ்தும், தகுதியும் நிர்ணயிக்கப்பட்டு விடுகின்றன. அந் நபர் சமூக அடுக்கமைவின் படி கீழ்ப்படியிலே வைக்கப்படுகின்றார். ஜனநாயகம் இதற்கு நேர் மாறானது. ஒரு நபர் பிறப்பில் இருந்தே பிற மனிதரோடு சமத்துவமானவராகவே உள்ளார் என்ற சமத்துவக் கருத்தை அடிப்படையாகக் கொண்டது ஜனநாயகம். இக் காரணத்தினாலேயே இலங்கையில் சாதியும் ஜனநாயகமும் ஒருங்கே இருப்புக் கொண்டன (COEXISTED) என்பது ஒரு முரண்பாடு எனக் குறிப்பிட்டோம். காலனிய இலங்கையில் சாதி முறைக்கும் தொழிலுக்கும் இடையிலான தொடர்பு மறைந்து வந்தது. இது சாதியின் பொருண்மியக்கூறு (MATERIAL ELEMENT) மாற்றம் அடைந்தமையைக் காட்டுகிறது. ஆயினும் கருத்தியல் நிலையில் சமத்துவமின்மை மறையவில்லை (DE SOYSA **2012:967**). இதனால் தான் தென்னாசியாவின் சாதி பற்றி கடந்த காலத்திலும், அண்மையிலும் ஆய்வுகளை மேற்கொண்ட புலமையாளர்கள் சாதிகளிடையே சமத்துவமின்மை தொடருவதை எடுத்துக் காட்டியுள்ளனர். சாதி பற்றிய சமூகவியல் வரைவிலக்கணங்கள் சாதியின் சமத்துவமின்மை என்னும் இயல்பைச் சுட்டிக் காட்டுகின்றன. இந்தியச் சமூகம் பற்றி ஆராய்ந்த BOUGLE **(1971:89)** அ) செய்யும் தொழில், ஆ) அடுக்கமைவுப் படிநிலை (HIERARCHY), இ) உணவு உண்ணுதலிலும் சமூக இடையுறவுகளிலும் ஒதுக்கி வைத்தல் என்னும் மூன்று விடயங்கள் சாதியின் அடிப்படையாக இருப்பதை எடுத்தக் காட்டினார். குர்யே (GHURYE) சாதி முறையின் ஆறு இயல்புகளைக் குறிப்பிடுகிறார்.

1. சமூகம் கூறாக்கப்பட்டு பிரிபட்டிருத்தல்
2. அடுக்கமைவுப் படிநிலை
3. உணவு உண்ணுதலிலும், சமூக இடையுறவுகளிலும் கட்டுப்பாடுகள்
4. குடியியல், சமயம் என்ற இரண்டு நிலையிலும் பாரபட்சமும் சில பிரிவினருக்கு சலுகைகளை கொடுத்தலும்
5. தாம் விரும்பிய தொழிலை ஒருவர் தேடிக் கொள்ளவும், செய்வதற்கும் இயலாத நிலை
6. திருமண உறவுகளில் கட்டுப்பாடுகள் (GHURYE **1932:220**)

*சிறினிவாஸ் பின்வரும் இயல்புகளின் படி சாதியை வரையறை செய்கிறார்.*

1. *அகமணம்*
2. *ஒருங்கேயிருந்து உணவு உண்பதற்குத் தடை*
3. *தொழில்களில் சிறப்புத் தேர்ச்சி*
4. *வெவ்வேறு பண்பாட்டு மரபுகள்*
5. *தனியான சாதி நீதிமன்றுகள்*
6. *துடக்கு என்னும் கருத்து - கர்மாவும் தர்மமும் (SRINIVAS 2010:73)*

*மேற்குறித்த மூன்று வரைவிலக்கணங்களிலும் காணப்படும் பொதுமையான கூறு சமத்துவமின்மை (INEQUALITY) ஆகும்.*

*சாதி பற்றிய அண்மைக்கால வரைவிலக்கணங்களைப் பார்ப்போம்.*

*தமரா குணசேகர சாதிகளை 'GROUPS POSSESSING DIFFERENTIAL DEGREES OF SOCIAL HONOUR AND PRESTIGE' என்று வரைவிலக்கணப்படுத்துகிறார். அவரது வரைவிலக்கணத்தில் குறிப்பிடப்படும் 'HONOUR' என்ற சொல் நற்பெயர், நன்மதிப்பு, தகுதி என்பனவாகப் பொருள் தரும் சொல்.*

*இதனோடு ஒத்த கருத்துள்ள சொல்லான 'PRESTIGE' என்பதும் செல்வாக்கு, நன்மதிப்பு என்ற பொருளுடையது. சாதிகள் நற்பெயர், செல்வாக்கு என்பனவற்றில் வெவ்வேறு அளவுகளில் வேறுபாடுடைய சமூகக் குழுக்கள் என அவர் வரைவிலக்கணம் அமைகிறது. பிரசன்ன டி சொய்சாவின் (கட்டுரையாசிரியர்) வரைவிலக்கணம் ஆங்கிலத்தில் பின்வருமாறு உள்ளது : 'A SOCIALLY IMAGINED COMMUNITY, THAT IS, A SOCIAL CATEGORY WHICH IS DECIDED BY THE DEGREE OF SOCIAL HONOUR AND PRESTIGE'*

*பிரசன்ன டி சொய்சாவின் வரைவிலக்கணம் ஏறக்குறைய முன்னைய வரைவிலக்கணம் போல் இருப்பினும் 'A SOCIALLY IMAGINED COMMUNITY' என்ற மேலதிக கூற்றையும் உள்ளடக்கியதாக உள்ளது. இவ் வரைவிலக்கணத்தை "சாதிகள் நற்பெயர், செல்வாக்கு என்பனவற்றில் வெவ்வேறு அளவுகளில் வேறுபாடுகள் உடைய கற்பனை செய்யப்பட்ட சமுதாயக் குழுக்கள்" என்று மொழிபெயர்த்துக் கொள்ளலாம்.*



"விளிம்பு நிலைச் சாதியினர் சிங்களத்தில் தம் நிலையை 'அபிவ கொன் கறலா' என்று கூறுவர். இதன் பொருள் 'நாம் எல்லைப் புறத்திற்கு தள்ளப்பட்டுள்ளோம்' என்பதாகும். இலங்கையின் சமூக நல அரசும் (WELFARE STATE) பொருளாதாரம், கல்வி, பண்பாடு ஆகிய விடயங்களில் இப் பிரிவினர்களுக்கு முழுமையாக நன்மைகளை கிடைக்கச் செய்யவில்லை.

*மேற்குறித்த இரு வரைவிலக்கணங்களும் நற்பெயர், செல்வாக்கு என்பவற்றிற்கு அழுத்தம் கொடுப்பதால் முற்கூறிய வரைவிலக்கணங்களில் இருந்து வேறுபடுகின்றன. இந்த வேறுபாட்டிற்குரிய காரணம் யாதெனில் குணசேகரவும், டி சொய்சாவும் காலனிய ஆட்சிக் காலத்தில் முதலாளித்துவ வளர்ச்சியின் பயனால் ஏற்பட்ட வர்க்க உருவாக்கம் (CLASS FORMATION) காரணமாக சாதிகள் அடைந்த மாற்றங்களால் நற்பெயர், செல்வாக்கு என்பனவற்றை தேடிக் கொண்டமையால் எழும் வித்தியாசத்தைக் கருத்திற் கொண்டு வரைவிலைக்கணம் வகுப்பது ஆகும். இவ்விரு வரைவிலக்கணங்களிலும் காணப்படும் பொதுத்தன்மையும் கவனிப்புக்குரியது. இரண்டு வரைவிலக்கணங்களிலும் சமத்துவமின்மை (INEQUALITY) தீர்மான காரணியாக உள்ளதைக் காணலாம். ஆகையால் சூழ்நிலை, காலம் என்பன மாறினாலும் சாதியின் அடிப்படையாகச் சமத்துவமின்மை (INEQUALITY) விளங்குகிறது. சமத்துவமின்மை மாறாத காரணியாக விளங்குவதைக் காணலாம்.*

## பகுதி 2

இலங்கையில் காலனிய காலத்தில் முதலாளித்துவம் மேலாண்மையுடைய முறையாக வளர்ச்சியுற்ற போதும் நிலமானிய உறவுகளை அது முற்றாக அழிக்கவில்லை. முதலாளித்துவத்திற்கு முந்திய நிலமானிய சமூக உறவுகளின் இயல்புகள் (PRECAPITALIST CHARACTERISTICS) தொடர்ந்து நீடித்தன. நிலமானிய சமூகம் சாதியை அடிப்படையாகக் கொண்டது. முதலாளித்துவ வளர்ச்சியுடன் வர்க்கங்கள் தோற்றம் பெற்றன. இலங்கையில் சிங்கள சமூகத்தில் சாதியும் வர்க்கமும் ஒரு சேரக் கலப்புற்று இருப்பதைக் காண முடிகிறது.

"குறித்த ஒரு சமூகத்தில் சாதியடிப்படையிலான பாரபட்சம் குறைந்துள்ளது. சாதி முறை வலுக் குன்றுகின்றது, வர்க்க முரண்பாடுகள் அதிகரிக்கின்றன என்பனவற்றைக் கொண்டு சாதிமுறை அழிந்து விட்டது என அனுமானிக்க முடியாது. சாதி அடுக்கமைவு நிராகரிக்கப்பட்டு விட்டது. அதனிடத்தில் வர்க்க உணர்வு வளர்ச்சியடைந்துள்ளது என்று முடிவு செய்தல் இயலாது (GUNASEKARA;**1994:2**)." மேற்குறித்தவாறு கூறும் தமரா குணசேகர "சாதி இந் நாட்டில் இந் நூற்றாண்டின் தொடக்கத்தில் எவ்வாறு இருந்ததோ அவ்வாறுதான் இன்றும் உள்ளது" என்றும் குறிப்பிட்டார் (GUNASEKARA **1994:99**).

நிமால் ரஞ்சித் தேவசிறி, காலனித்துவத் தலையீடு மரபு வழிச் சாதிக் கட்டமைப்பைத் தகர்க்கவில்லை; சாதி செயற்படும் முறைகளை மாற்றியமைத்துக் கொண்டது (DEWASIRI,**2008:219**) என்று கூறுகிறார். இந்தியாவின் நிலமைகளை ஆராய்ந்த சர்மா, சாதியின் இடத்தை வர்க்கம் பிடித்துள்ளது என்று கூறுவது தவறு என்றார் (SHARMA,**2006:50**).

ஆகையால் தென்னாசிய சமூகங்களில் முதலாளித்துவ நவீனத்துவம் (COLONIAL MODERNITY) சாதியை முற்றாக அழிக்கவில்லை என்பதும், சாதிவர்க்கம் என்ற இரண்டினதும் அடிப்படையிலான சமூகக் கட்டமைப்பு உருவாகியுள்ளதென்பதும் ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்தாகும்.

காலனித்துவ காலத்தின் நவீனத்துவம் ஏற்படுத்திய மாற்றங்கள் முக்கியமானவை. ஆயினும் காலனித்துவத்திற்கு முந்தியதான சாதி முறை காலனிய காலத்தில் முக்கிய பங்கை வகித்ததை கவனிக்கத் தவறக்கூடாது. சாதி அடிப்படையிலான வேலைப்பிரிப்பு, சாதி அடிப்படையிலான சேவைகளிற்கு பணமாகவோ பொருளாகவோ கொடுப்பனவு செய்தல், என்பன பொருண்மிய நிலையில் தொடர்ந்தன. சாதி அடுக்கமைவு, சாதி அடையாளமும் அடையாள உணர்வும் சாதியின் கருத்தியல்களாக நிலைத்திருந்தன. ஆயினும் சில மாற்றங்களும் ஏற்பட்டன. காலனித்துவ முதலாளித்துவம் விரைவாக வளர்ச்சியுற்ற போது தொழில்களிலும் பொருளாதாரத்திலும் பன்முகமாக்கல் (DIVERSIFICATION) இடம்பெற்றது. நில உரிமை முறையில் மாற்றம் ஏற்பட்டது. அடிமைமுறை ஒழிக்கப்பட்டது. நிலமானியச் சமூகப் பொருளாதார உறவுகளில் முக்கிய இடம்பெற்ற சாதி வலுவிழந்தது. ஆயினும் சாதியின் கருத்தியல் கூறுகள் (IDEOLOGICAL ASPECTS) நீடித்திருந்தன. இக் காரணத்தால் பின்காலனிய கட்டத்தில் சாதியின் கருத்தியல் வகிபாகம் தொடர்ந்து வருகின்றது.

சாதியென்னும் வகைமை நற்பெயர் (HONOUR), நன்மதிப்பு (PRESTIGE) என்னும் கருத்தியல் கூறுகளை முதன்மைப்படுத்தும் வகைமையாக உள்ளது. ஆயினும் அக் கருத்தியல் கூறுகள் குறித்த சாதியினரைச் சேர்ந்தவர்களை ஒரு சமுதாயமாக (COMMUNITY) உணர்வு நிலையில் ஒன்றுபடுத்துகிறது.

சாதியென்னும் வகைமை நற்பெயர் (HONOUR), நன்மதிப்பு (PRESTIGE) என்னும் கருத்தியல் கூறுகளை முதன்மைப்படுத்தும் வகைமையாக உள்ளது. ஆயினும் அக் கருத்தியல் கூறுகள் குறித்த சாதியினரைச் சேர்ந்தவர்களை ஒரு சமுதாயமாக (COMMUNITY) உணர்வு

நிலையில் ஒன்றுபடுத்துகிறது. சமுதாய உணர்வு (COMMUNITY FEELING) என்பது நேருக்கு நேரான முன்பே தெரிந்தவர்களிடை உண்டாகும் 'நம்மவர்' என்ற உணர்வு. ஆனால் இன்றைய சூழலில் தூர இடங்களில் வாழும் முகம் தெரியாத, பெயர் தெரியாத, பழக்கம் இல்லாத தமது சாதியைச் சார்ந்த மனிதர்களையும் 'நம்மவர்' என்று உணரும் அடையாள உணர்வு 'கற்பனை' அல்லது 'கற்பிதம்' செய்யப்பட்ட தன்மை உடையதாய் இருப்பதைக் காணலாம். இக் காரணத்தால் இலங்கையில் இன்று சிங்களவர்களிடையே காணப்படும் சாதி அடையாள உணர்வை பெனடிக்ற் அன்டர்சன் உபயோகித்த 'கற்பனை செய்யப்பட்ட (IMAGINED)' என்ற சொல்லைப் பயன்படுத்தி சாதி 'கற்பனை செய்யப்பட்ட சமுதாயம்' என்று கூறுதல் பொருத்தமுடையது. கற்பனை செய்யப்பட்டது என்பதனால் பொய்யானது, நிஜ உலகில் யதார்த்தத்தில் இல்லாதது என்பது பொருளன்று. சாதி யதார்த்தத்தில் உள்ளது. அது பொய்மை அன்று. பெனடிக்ற் அன்டர்சன் 'தேசிய இனம்' (NATION) என்பதைக் கூறிய போது அதனை கற்பிதம் செய்யப்பட்ட அரசியல் சமுதாயம் (POLITICAL COMMUNITY) என்றார். மிகச் சிறிய ஒரு தேசிய இனத்தில் கூட, அதன் உறுப்பினர்கள் ஒருவருக்கு ஒருவர் அறியாதவர்களாக இருப்பர் என்பதை அவர் சுட்டிக் காட்டினர். சமுதாயம் (COMMUNITY) என்பது முகத்துக்கு முகம் நேரில் அறிந்தவர்களிடையிலான 'நம்மவர்' என்ற அடையாள உணர்வு ஆகும். 'தேசிய இனம்' என்பது நேருக்கு நேர் (FACE TO FACE) உறவு இல்லாதவர்களையும், 'நம்மவர்' என்று உணரும் சமுதாய உணர்வு ஆகும். இதனாலேயே அன்டர்சன் தேசிய இனம் என்பதை 'கற்பனை செய்யப்பட்ட சமுதாயம்' என்றார். இவ்வாறே சாதியும் ஓர் கற்பனை செய்யப்பட்ட சமுதாயம் ஆகும். அச் சமுதாய உணர்வு அதன் உறுப்பினர்களுக்கு ஒரு அடையாள உணர்வையும், பரந்து வாழும் அதன் உறுப்பினர்களுக்கு 'எமது ஆட்கள்' என்ற உணர்வையும் வழங்குகிறது. இவ்வுணர்வு அவ்வுறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் அறியாத போதும் அகநிலையிலும் பண்பாட்டு நிலையிலும் (SUBJECTIVE AND CULTURAL LEVEL) ஒருமித்த உணர்வை வழங்குகிறது. அன்டர்சன் உபயோகிக்கும் 'தேசிய இனம்', 'அரசியல்' (POLITICAL) என்ற இரண்டிற்கும் பதிலீடுகளாக முறையே 'சாதி', 'சமூகம்' (SOCIAL) என்னும் சொற்களை இக் கட்டுரையில் உபயோகிக்கின்றோம்.

இந்தியப் பின்புலத்தில் சாதியின் சமத்துவமின்மை சமயக் கருத்துக்களால் நியாயப்படுத்தப்பட்டது. இலங்கையில் சாதி, சமயச் சார்பற்றதாக அமைந்துள்ளது. இந்தியாவைப் போல் அல்லாமல் இலங்கையில் சாதி, சமயம் சாராத சமூக அடிப்படையைக் கொண்டது. மடாலயங்களின் ஒழுங்கமைப்பும் நடைமுறைகளும் இலங்கையில் சாதியை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. ஆயினும் பௌத்த சமயம் சாதியை நியாயப்படுத்தும் தத்துவத்தைக் கொண்டதல்ல. நம் முன்னர் குறிப்பிட்டது போல் இலங்கையில் ஜனநாயகச் செயல்முறை சாதியை ஒழிக்கவில்லை. சாதி இன்னமும் நீடித்துள்ளது. அது நவீன வடிவத்தைப் பெற்றுள்ளது. சாதியும், ஜனநாயகமும் ஒருங்கே இருப்புக் கொண்டுள்ளமை முரண்பாடான நிலையைத் தோற்றுவித்துள்ளது. சாதி சமத்துவமின்மையையும், ஜனநாயகம் சமத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டிருப்பதே இம் முரண்பாட்டிற்கான காரணமாகும். சாதி சிங்கள சமூகத்தின் அன்றாட வாழ்வில் கண்ணுக்குப் புலப்படாத வகையில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. அது எந்த வேளையிலும் வெளிப்பட்டு மேல் நிலைகளுக்கு ஊடுருவிக் குழப்பத்தை ஏற்படுத்தும் ஆபத்தைக் கொண்டது. (SPENCER 1990:7)

### கராவ, சலாகம துராவ சாதிகளின் மேல் நோக்கிய உயர்ச்சி

தென்னிலங்கையின் கராவ, சலாகம, துராவ என்னும் மூன்று சாதிகள் காலனிய ஆட்சிக் காலத்தில் மேல் நோக்கி உயர்ச்சி பெற்றன. இவற்றுள் கராவ சமூகத்தின் எழுச்சி சாதிக்கும் அரசியலுக்கும் இடையிலான தொடர்பை எடுத்துக் காட்டுவது. இலங்கையில் ஜனநாயகச் செயல்முறையின் ஊடாக இச் சாதிகள் எவ்விதம் அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பெற்றன, அவ் அரசியல் பிரதிநிதித்துவம் எத்தகைய நிலைகளின் கீழ் உருவானது என்பதை ஆராய்தல் அவசியம். காலனிய காலத்தில் சாதி முறையில் அமைப்பியல் மாற்றங்கள் (STRUCTURAL CHANGES) ஏற்படவில்லை. அக்காலத்தில் சாதிகளின் படிநிலை ஒழுங்கில் மாற்றம் ஏற்பட்டது. 'சாதிகள் செய்யும் தொழில்களின்

தன்மையில் மாற்றம் ஏற்பட்டது. இதனால் சாதிகள், காலனிய ஆட்சிக்காலத்தில் சாதி அடுக்கமைவில் பெற்றிருந்த இடம் மாறத் தொடங்கியது' (ஜயவர்த்தன 2007:164) கராவ, சலாகம, துராவ ஆகிய சாதிகள் தமக்கு மேல் நிலையில் இருந்த சாதிகளுக்கு சேவைக் கடமைகளைச் செய்யும் கடப்பாடு உடையனவாய் இருக்கவில்லை. இது சாதிப் படிநிலையில் இச்சாதிகள் உயர்வதற்குத் துணை செய்தது.

கராவ, சலாகம, துராவ ஆகிய சாதிகள் போத்துக்கேயர் இலங்கையில் காலனிய ஆட்சியை ஆரம்பிப்பதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பே தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்கு இடம்பெயர்ந்து வந்தன. அவற்றின் வரலாறு ஒப்பீட்டளவில் குறுகிய காலத்தை உடையது. இதனால் இச் சாதிகள் முழுமையாக மரபுவழிச் சாதி முறைமையில் உள்ளீர்க்கப்படாமல் விலகி நிற்கின்றன (றொபர்ட்ஸ், 1973:280). சிங்களச் சாதியமைப்பின் பகுதியாக இம் மூன்று சாதிகளும் உள்ளீர்க்கப்பட்ட போதும் இச் சாதிகளுக்கு சேவைகளை செய்யும் கடப்பாடு இருக்கவில்லை. இச் சாதிகளுக்கு சமூக அசைவியக்கத்தில் பிற சாதிகளை விடக் கூடிய சுதந்திரமும் தெரிவும் இருந்தது (MORE MOBILITY AND FREEDOM OF CHOICE) என ஜயவர்த்தன கூறுகிறார் (ஜயவர்த்தன 2007:168). சலாகம சாதியினருக்கு தென்னிலங்கையின் சாதி முறையில் சேவைக் கடமைகள் என எவையும் இருக்கவில்லை (கொத்தலாவல, 1988:75). கறுவா உற்பத்தியிலும், வர்த்தகத்திலும் சலாகமவிற்கு முக்கிய பங்கு இருந்தபடியால் பொருளாதாரத்திலும் சமூகத்திலும் சலாகம சாதியினர் முன்னேறக்கூடிய வாய்ப்புக்களைப் பெற்றனர். சலாகம சாதியினருக்கு கிராமத் தலைமைக்காரர் பதவிகள் வழங்கப்பட்டன. கொவிகம சாதியினருக்கு மட்டுமே உரியதாக இருந்த இம் மதிப்புமிக்க பதவிகளில் சலாகம சாதியினர் அமர்த்தப்பட்டனர். 1708 ஆம் ஆண்டில் முதன் முதலாக சலாகம சாதி நபர் ஒருவருக்கு முதலியார் பதவி வழங்கப்பட்டது. இதன் விளைவாக சலாகம உயர் குழாம் உருவானது. இச் சலாகம உயர் குழாம் 19 ஆம் நூற்றாண்டின் தொடக்க காலம் முதல் தென் மேற்கு இலங்கையில் சாதிப் படிநிலையில் உயர் நிலையைப் பெற்றது. சலாகம சாதியினர் அந்நியர் ஆட்சியில் இரு வகையில் நன்மை பெற்றனர். காலனிய அரசாங்கம் அச் சாதியினருக்கு காலனிகளை வழங்கியது. அவர்களுக்குப் பதவிகளும் வழங்கப்பட்டன. இதனால் சாதிப்படி நிலையில் சலாகமவால் உயர முடிந்தது.

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கராவ சாதி, பொருளாதாரத் துறையில் ஈட்டிய முன்னேற்றம் காரணமாக பணம் படைத்தவர்களைக் கொண்ட சமூகமாக மாறிச் சமூக அந்தஸ்திலும் உயர்ந்தது (றொபர்ட்ஸ் 1995:10). 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் சலாகம சாதி சாதித்தவற்றை கராவ சாதி சாதிக்கத் தொடங்கியது (டி சில்வா 2005:424). கராவ சாதியினர் மாட்டு வண்டிகளில் கோப்பி, தேயிலை போன்ற உற்பத்திப் பண்டங்களை ஏற்றியிறக்கும் போக்குவரத்துச் சேவையில் பெரும் தொகையினர் ஈடுபட்டனர். அவர்கள் தச்சுத் தொழிலில் ஈடுபட்டு தொழில் துறை முயற்சியாளர்களாயினர். அவர்களின் கைவினைத் திறன்கள் டச்சுக்காரர்களால் கூட பயன்படுத்தப்பட்டன. ஆகையால் பிரித்தானியர் ஆட்சியின் தொடக்கத்தில்



டட்லி சேனநாயக்க
Image Source - www.senanayakefamily.org

அவர்களிடம் குறிப்பிடத்தக்க அளவில் மூலதனத் திரட்சி (ACCUMULATION OF CAPITAL) காணப்பட்டது. அவர்கள் கரை நாட்டுப் பகுதிகளில் இருந்து கண்டியை நோக்கித் தமது பொருளாதார நடவடிக்கைகளை விஸ்தரித்தனர். சாராய உற்பத்தியும் விற்பனையும், தோட்டப் பொருளாதாரம் என்னும் இரண்டு துறைகளின் வளர்ச்சி, கராவ சமூகத்தின் உயர்ச்சிக்கும் வெற்றிக்கும் காரணமாயிற்று.

காலனிய ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட பொருளாதாரப் பன்முகப்படுத்தல் (ECONOMIC DIVERSIFICATION) பல வாய்ப்புக்களை வழங்கியது. இவ்வாய்ப்புக்களை நன்கு பயன்படுத்திக் கொண்ட தென்மேற்கு, தெற்குக் கரையோரப் பகுதிகளின் கராவ, சலாகம, துராவ ஆகிய சாதிச் சமூகப் பிரிவினர் பொளாதார மூலதனத்தைத் திரட்டிக் கொண்டனர். அவர்கள் கையில் திரண்ட பொருளாதார மூலதனம், தமது இளம் தலைமுறையினருக்கு உயர்தரமான கல்வியைப் பெற்றுக் கொடுக்க உதவியது. இதன் பயனாக இச் சாதிப் பிரிவினர் மத்தியில் இருந்து மருத்துவம், சட்டம் ஆகிய உயர் தொழில்களைச் செய்வோரான உயர் தொழிலர் வகுப்பு (PROFESSIONAL CLASSES) உருவானது. இவ்வாறு உயர் கல்வி கற்ற உயர் தொழிலர் பலர் இச்சாதியினர் மத்தியில் உருவான காரணத்தால் இச் சமூகப் பிரிவினரிற்கு நற்பெயரும், கீர்த்தியும் கிடைத்தன. இவை சமூக அந்தஸ்தையும் தேடிக் கொடுத்தன. இக் காரணத்தால் காலனித்துவத்திற்கு முந்திய காலத்தில் இல்லாத சமூக அந்தஸ்து காலனிய காலத்தில் கராவ, சலாகம, துராவ சாதியினருக்குக் கிடைத்தது. இம் மாற்றங்களின் விளைவுகளை மைக்கல் றொபர்ட்ஸ் பின்வருமாறு விபரித்துக் கூறியுள்ளார்.

"கோப்பி, தென்னை ஆகிய இரு தோட்டத் துறைகளும் வேகமாக வளர்ச்சியுற்றன. இதனால் அடுத்தடுத்த பத்தாண்டுகளில் இவற்றால் புரட்சிகர மாற்றங்கள் நிகழ்ந்தன. கராவ, சலாகம, துராவ சாதி உயர் குழுக்கள் பழைய சமூகத் தடைகளை உடைத்தெறிந்தனர். புதிய எல்லைகளைக் கடந்து முன் சென்றனர் (றொபர்ட்ஸ் 1995:97)."

## சாதியும் தேர்தல் அரசியலும்

1830 தொடக்கம் சட்டசபைப் பிரதிநிதித்துவம் கொவிகம சாதியனரின் ஏகபோக உரிமை ஆயிற்று. அதுவும் அவ்வுரிமை முதற் தர கொவிகமவின் (FIRST CLASS GOVIGAMA) உரிமையாக இருந்தது என்பது கவனிக்கத்தக்கது. இம் முதற் தர கொவிகம ஆங்கில மயப்பட்டதாகவும் இருந்தது. இந்த ஏகபோக உரிமையை 1870 களின் பின்னர் கராவ, சலாகம, துராவ சமூகப் பிரிவினர் முறியடிக்க முயற்சி செய்தனர். 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இச் சாதிப் பிரிவினர்களின் முயற்சிக்கு கை மேல் பலன் கிடைத்தது. அவர்களின் பிரதிநிதி ஒருவருக்குச் சட்ட சபைப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது.



எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்க
Image Source - www.swrdbandaranaike.lk

பிரதிநிதிகளை நியமனம் செய்வதோடு, தேர்தல் மூலம் தெரிவு செய்யும் முறை இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட காலம் முதல் தேர்தலில் சாதிகளின் போட்டி மிகவும் வெளிப்படையான விடயமாக அமைந்தது. உதாரணமாக 1900 ஆம் ஆண்டில் கொழும்பு மாநகர சபைத் தேர்தலுக்காக 'கொட்டஹேன' வட்டாரத்தில் சப்மன் டயஸ் என்பவரும் சொலமன் பெர்ணாண்டோ என்பவரும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர். சப்மன் டயஸ் 'முதற் தர கொவிகம' குடும்பத்தில் தோன்றியவர். சொலமன்

பெர்ணாண்டோ கராவ சமூகத்தவர். வேட்புமனுத் தாக்கல் செய்த சப்மன் டயஸ் பின்னர் அதனை மீளப் பெற்று போட்டியில் இருந்து விலகிக் கொண்டார். அக் காலத்தில் கல்வித் தகைமைகள் உடையவர்களுக்கே வாக்குரிமை இருந்தது. கொட்டஹேன வட்டாரத்தில் படித்தவர்களான கராவ சாதியினர் கொவிகம சாதியின் படித்தவர்களை விட அதிகமானவர்களாக இருந்தபடியால் தாம் தோல்வி அடைவது நிச்சயம் என உணர்ந்த சப்மன் டயஸ் போட்டியில் இருந்து விலகிக் கொண்டார். தேர்தல் முறையோடு சாதியடிப்படையிலான போட்டி தோன்றி விட்டது என்பதற்கு இது சிறந்த எடுத்துக் காட்டாகும்.

சாதிக்கும் அரசியலுக்கும் இடையிலான தொடர்பை எடுத்துக் காட்டும் முக்கியமான நிகழ்வு அடுத்து இடம்பெற்றது. முதன் முதலாக தேர்தல் மூலம் சட்ட சபைக்கு ஒருவரை தெரிவு செய்வதற்கான தேர்தல் 1911 இல் இடம்பெற்ற போது டாக்டர். மார்க்கஸ் பெர்ணாண்டோ என்னும் கராவ சமூகத்தவர் தேர்தலில் போட்டியிட்டார். அக்காலத்தில் ஆங்கிலம் கற்றவர்களுக்கே வாக்குரிமை மட்டுப்படுத்தப்பட்டிருந்தபடியால் கொவிகம சாதியினரை விட கராவ சமூகத்தவர்களில் வாக்குரிமை பெற்றோர் அதிக அளவினராக இருந்தனர். இதனை நன்குணர்ந்த கொவிகம சாதி அரசியல்வாதிகள் போட்டியிடுவதை தவிர்த்துக் கொண்டு தமிழரான பொன்னம்பலம் இராமநாதனை தேர்தலில் வெற்றி பெற வைத்தனர்.

கொவிகம வாக்காளர்கள், தமிழ் வாக்காளர்கள் என்ற இரு பிரிவு வாக்காளர்களின் ஒன்று சேர்ந்த பலத்தால் டாக்டர். மார்க்கஸ் பெர்ணாண்டோ தோல்வியுற்றார். கொவிகம சாதியினர் இச் சந்தர்ப்பத்தில் தமிழரான பொன்னம்பலம் இராமநாதனைத் தெரிந்து அவரைத் தூண்டி தேர்தலில் போட்டியிட வைத்து வெற்றி பெற வைத்தனர். சிங்களவர் வாழும் பகுதிகளில் இந்தப் போட்டி 'கராகொவி' (கராவ சாதி எதிர் கொவிகம சாதி) போட்டியாகவே அமைந்தது என றொபர்ட்ஸ் குறிப்பிடுகிறார். கொவிகம சாதிக்கும், கராவ சாதிக்கும் இடையிலான போட்டி தேர்தலில் மிக வெளிப்படையாகவே வெளிப்பட்டது என ஆர்.ஏ. ஆரியரட்ண குறிப்பிட்டுள்ளார்


சி.பி.டி சில்வா
Image Source - www.ft.lk

(ஆரியரட்ண, 1981:27).

டொனமூர் ஆணைக்குழுவிற்கும், பின்னர் சோல்பரி ஆணைக்குழுவிற்கும், காலனிய அரசாங்கத்திற்கும் தேர்தல் அரசியலில் சாதியென்னும் காரணியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. 1920 ஆம் ஆண்டிற்குப் பின்னர் சாதி அடிப்படையிலான குழு அடையாளம் தேர்தல் அரசியலில் முக்கிய வகிபாகத்தைப் பெற்றது.

சனத்தொகையில் பெரும்பான்மையினரான கொவிகம சாதியினரின் ஆதிக்கத்தை எதிர்கொள்ள முடியாத நிலையில் பிற சாதியினர் தமக்கு விசேட பிரதிநிதித்துவம் வழங்க வேண்டுமென கோரிக்கை விடுத்தனர். கராவ சாதியினரான முக்கிய தலைவர் ஒருவர் விகிதாசார முறையைக் கூட அவ் வேளை சிபார்சு செய்தார். அவர் வாக்குரிமையைப் பரவலாக்கி வாக்காளர் எண்ணிக்கையை அதிகரிப்பதையும் காலனித்துவ கால சட்ட சபையில் கொவிகம அல்லாத சாதிகளுக்கு நியாயமான பிரதிநிதித்துவத்தை வழங்குவதையும் சிபார்சு செய்தார் (உயன் கொட 2000:15).

அரசாங்கம் தேர்தல் தொகுதி நிர்ணயம் செய்வதற்கான ஆணைக்குழுக்களை நியமித்த பொழுது, தொகுதிகளின் எல்லைகளை வரையறை செய்வதில் சாதி முக்கியமான ஒரு விடயமாகக் கவனம் பெற்றது. 1945 இல் முதலாவது தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழு (THE DELIMITATION COMMISSION) நியமிக்கப்பட்டது. அப்போது நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலும் இருந்து சிறுபான்மை சாதிகள் கோரிக்கைகள் பலவற்றை முன்வைத்தனர். தாம் செறிவாக வாழும் புவியியற் பகுதிகளை தனித் தொகுதிகளாக எல்லை வகுத்துக் கொடுப்பதன் மூலம் தமக்கு பாதுகாப்பு தரும்படி இச் சாதிகள் கோரிக்கை விடுத்தன. 1945 இல் நியமிக்கப்பட்ட தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழு 'அரசியல் பிளவு சாதியின் அடிப்படையில் அமையப் போகிறது என்னும் தவிர்க்க முடியாத உண்மையை தயக்கத்தோடு ஏற்றுக் கொண்டது' (றையன் 2004:279). அக் காலம் முதல் தேர்தல் நிர்ணய ஆணைக்குழுக்களுக்கு சாதியடிப்படையில் தொகுதிகளை எல்லையிட்டு சிறுபான்மைச் சாதிகளின் வேட்பாளர்களுக்கு வெற்றி வாய்ப்பை வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகள் தொடர்ந்து முன்வைக்கப்பட்டன. தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழுக்களும் இக் கோரிக்கைகளைக் கவனத்தில் கொண்டு சிறுபான்மை சாதிகள் சிலவற்றிற்குப் பிரதிநிதித்துவ வாய்ப்புக்களை வழங்கின. (ஜிஜின்ஸ் 1979:40)

இலங்கையின் தேர்தல் அரசியல் வரலாற்றின் தொடக்க காலத்தில் நடைபெற்ற டெடிகமத் தொகுதித் தேர்தல், சாதி என்ற காரணியின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டும் சிறந்த உதாரணமாகும்.

டெடிகம கேகாலை மாவட்டத்தில் அமைந்துள்ள ஓர் இடம். 1936 இல் நடைபெற்ற சட்ட சபைத் தேர்தலில் டெடிகம தொகுதியில் டட்லி சேனநாயக்கவும் (கொவிகம) என். எச். கீர்த்தி ரட்ணவும் (பத்கம) போட்டியிட்டனர். தேர்தல் தினத்தன்று டட்லி சேனநாயக்கவின் ஆதரவாளரும் உயர்நிலை அரசியல்வாதியுமான யோன் கொத்தலாவல தனது ஆதரவாளர்களைக் கொண்டு பத்கம சாதி வாக்காளர்களை வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்ல விடமால் தடுத்தார். அவ்வாறு அவர்களைத் தடுத்திராவிட்டால் என்.எச். கீர்த்தி ரட்ணவிற்கு அவர்களது வாக்குகள் கிடைத்திருக்கும். கொத்தலாவலவின் செயலின் பாதக விளைவுகளை டட்லி சேனநாயக்க பின்னர் அனுபவிக்க வேண்டி ஏற்பட்டது. இத் தொகுதியில் 1936 இன் பின்னர் இடம்பெற்ற தேர்தல்களில் பத்கம வாக்காளர்கள் டட்லி சேனநாயக்கவிற்கு எதிராக வாக்களித்தனர்.

1950 களில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, தேர்தல்களின் போது கீழ்நிலை/அடிநிலை சாதிகளின் வேட்பாளர்களுக்கு ஓரளவு இடம் கொடுத்தது. ஆனால் 1967 களிலும், 1970 களிலும் நிலைமை மாறியது. ஐக்கிய தேசியக் கட்சியும் தனது அரசியல் செயல் திட்டத்தில் கீழ்நிலைச் சாதிகளுக்கும் இடம் கொடுத்து அவர்களின் வாக்குகளைக் கவர்ந்தது. எஸ். டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் அரசியல் திட்டத்தில் கீழ்நிலைச் சாதிகள் பற்றிய ஓரளவு கவலையும் அனுதாபமும் வெளிப்பட்டது. அவரது 1956 தேர்தல் வெற்றிக்கு இதுவும் ஒரு காரணமாகும். 'பண்டாரநாயக்க மரபுவழி அடையாளங்களையும், உறவுகளையும் சமகால அரசியல் சட்டகத்திற்குள் தந்திரமாகப் பயன்படுத்தி அதிகாரத்தை பெற முயன்றார்' (ஜிஜின்ஸ்:1979:14).

பண்டாரநாயக்க மட்டுமல்லாமல் பிறரும் இத் தந்திரத்தைக் கையாண்டனர். மார்க்சிஸ்டுகளும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தேர்தல்களின் போது இத் தந்திரத்தை கையாண்ட போதும் இரு தரப்பாருக்கும் இடையிலான அணுகுமுறையில் ஒரு வேறுபாடு இருந்தது. தாழ் நிலையில் இருந்த குழுமங்களின் நபர்களிற்கு சமூக அசைவியக்கம் (SOCIAL MOBILITY) மூலம் உயர்ச்சியடைய விரும்பியவர்களிற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சிக்குப் போகத் தேவையில்லை தம் கட்சியில் சேரலாம் என ஒரு மாற்று வழியைக் காட்டியது. மார்க்சிஸ்டுகள்,

**சனத்தொகையில் பெரும்பான்மையினரான கொவிகம சாதியினரின் ஆதிக்கத்தை எதிர்கொள்ள முடியாத நிலையில் பிற சாதியினர் தமக்கு விசேட பிரதிநிதித்துவம் வழங்க வேண்டுமென கோரிக்கை விடுத்தனர். கராவ சாதியினரான முக்கிய தலைவர் ஒருவர் விகிதாசார முறையைக் கூட அவ் வேளை சிபார்சு செய்தார்.**

இருந்து வரும் சமூக முறைமையை அடியோடு மாற்றியமைப்போம் என்ற உறுதி மொழியை வழங்கினர் (தாரா குமாரசுவாமி 1988;224:245).

1959 இல் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க இறந்த பின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கொவிகம மேலாதிக்கத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியுற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 1964 டிசம்பர் கொள்கை விளக்கம் கொவிகம மேலாதிக்கத்தின் விளைவாகும். சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருந்த ஒரு குழு அக் கட்சிக்கு எதிராக வாக்களித்து அரசாங்கத்தை பதவியழக்கச் செய்தது. அக் குழுவினர் கொவிகம அல்லாத சாதியினராக இருந்தனர். சி.பி. டி சில்வா (சலாகம) இக் குழுவுக்கு தலைமை தாங்கி கட்சியில் இருந்து வெளியேறி ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தார். சி.பி. டி சில்வாவுடன் வெளியேறிய மகாநாம சமரவீர (துராவ), அசோக கருணாரத்தின (பத்கம) என்போர் அக்குழுவின் முக்கிய ஆளுமைகளாவார். 1970 களில் ஐக்கிய தேசியக் கட்சி கொவிகம அல்லாத சாதிகளுக்கு ஓரளவு இடம் கொடுத்தது. இவ்வாறான உள்ளீர்க்கும் கொள்கை (INCLUSIVE POLICY) கொவிகமவிற்குள் கீழ் நிலையில் இருந்த சாதிகளின் வாக்குகளையும் ஆதரவையும் அணி திரட்ட அக் கட்சிக்கு உதவியது. மரபு வழியாக உயர்சாதி கொவிகமவினதும், அச் சாதியின் உயர் குழுவினதும் மேலாதிக்கத்திற்கு உட்பட்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி தனது ஆதரவுச் சமூகத் தளத்தை விரிவாக்கிக் கொண்டது. இதனால் 1977 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி முன்னர் எப்போதும் இல்லாத அளவு பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றது.

விகிதாசார முறைப் பிரதிநிதித்துவம் அறிமுகம் செய்யப்பட்டதற்கு முன்பிருந்த தேர்தல் முறையையும், அதற்குப் பிந்திய காலத்தின் இன்றைய விகிதாசாரத் தேர்தல் முறையையும் ஒப்பிட்டு இரண்டிலும் சாதியும் ஜனநாயக அரசியலும் எவ்வாறு இடைவினை புரிந்தன என்பதை ஆராய்ந்து பார்த்தல் அவசியமானது. சில சாதிச் சமூகங்கள் பிரதிநிதித்துவத்தை பெற முடியாமல் உள்ள போதிலும் வேறு சில சாதிச் சமூகங்கள் குறிப்பிட்ட பிரதேசங்களில் செறிந்து வாழ்வதால் பிரதிநிதித்துவத்தைப் பெற முடிந்துள்ளது. உதாரணமாக அம்பலாங்கொட கராவ சாதிக்கும், பலப்பிட்டிய சலாகம சாதிக்கும், மாத்தறை துராவ சாதிக்கும் உரிய தேர்தல் தொகுதிகள் என்ற கருத்து பரவலாக அறியப்பட்ட விடயமாகும். ஆனால் இவ்விதமாக ஒரு சாதித் தொகுதி என உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையை விகிதாசார பிரிதிநிதித்துவமுறை குழப்பிவிட்டது. இதனால் விகிதாசாரமுறை சாதி உணர்வை அதிகரித்துள்ளது.

விருப்பத் தெரிவு வாக்களிப்பு முறை, வாக்காளருக்கு தான் விரும்பும் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் இருந்து வேட்பாளர்களைத் தெரிவு செய்து மூன்று வாக்குகளை வழங்கும் சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது. மாவட்டம் முழுமையையும் ஒரு தேர்தல் தொகுதியாகக் கொள்ளப்படுவதால், பல்வேறு பகுதிகளிலும் சிதறிக் கிடக்கும் வாக்குகளை ஒன்று சேர்த்து தமது வாக்காளரை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்ற முனைப்பு வாக்காளர்களிடம் காணப்படுகிறது. இதனால் சாதி என்னும் காரணி விகிதாசார முறையில் முக்கியம் பெற்றுள்ளது. இதனால் சாதி உணர்வு மீண்டும் கிளறப்பட்டு சாதி அடையாளங்களும், சாதி விசுவாசமும் மேற்கொள்ளப்படுவதைக் காணமுடிகிறது (டி சொய்சா 2012:156157). இவ்விடயம் அடுத்து வரும் பகுதியில் விரிவாக ஆராயப்படும்.

## விகிதாசாரத் தேர்தல் முறையும் சாதி வாக்குகளும்

1978 ஆம் ஆண்டின் அரசியல் திட்டம் முன்பிருந்த தேர்தல் முறையை மாற்றி விகிதாசார முறையைப் புகுத்தியது. முந்திய முறையில் பல வேட்பாளர்கள் ஒரு தொகுதியில் போட்டியிடுவர். அவ் வேட்பாளர்களுள் ஆகக் கூடிய வாக்குகளைப் பெறுபவர் வெற்றி பெற்றவராகத் தெரிவு செய்யப்படுவார். இதனை 'FIRSTPAST-THEPOST' தேர்தல் முறைமை என அழைப்பர்.

முன்னைய முறையில் தேர்தல் தொகுதி சிறியதாக இருக்கும். விகிதாசார முறையில் முழு மாவட்டமும் ஒரு தொகுதியாக அமையும். உள்ளூராட்சி மன்றங்களில் வட்டாரத்திற்குப் பதில் முழுப் பகுதியும் தேர்தல் தொகுதியாகக் கொள்ளப்பட்டது. பின்னர் வட்டாரம், விகிதாசார முறை என்ற இரண்டினதும் கலப்பான முறை கொண்டுவரப்பட்டது. விகிதாசார முறையுடன் விருப்பு வாக்கும் சேர்க்கப்பட்ட போது வேட்பாளர்கள் எதிர்க்கட்சி வேட்பாளர்களுடனும் தனி அங்கத்தவர்களுடனும் அல்லாமல் தமது கட்சியின் வேட்பாளர்களுடனும் போட்டியிட்டு தேர்தலில் வெல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

விகிதாசார தேர்தல் முறை தேர்தல் அரசியலில் முன்னில்லாத அளவு பெருமாற்றங்களைப் புகுத்தியுள்ளது. முன்னைய தேர்தல் முறையில் ஒரு வேட்பாளர் தான் போட்டியிடும் தொகுதிக்குள் வாக்காளரின் வாக்குகளைத் தனக்குப் போடும்படி பிரச்சாரம் செய்யலாம். விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை மாவட்டம் முழுவதற்கும், தனது தொகுதிக்கு அப்பாலும் சென்று வாக்குகளைக் கேட்கலாம். இதனால் தேர்தல் பிரச்சாரம் மிகுந்த செலவை ஏற்படுத்தும் விடயமாகிவிட்டது. பணக்காரர்களான வேட்பாளர்களே புதிய முறையின் கீழ் மாவட்டம் முழுவதும் சென்று பிரச்சாரம் செய்யலாம். இக் காரணத்தால் வேட்பாளர்கள் மாவட்டத்தின் சில பகுதிகளை மட்டும் தேர்ந்தெடுத்து அவ்வப்பகுதிகளில் மட்டும் தமது முழுக் கவனத்தையும் செலுத்திப் பிரச்சாரத்தில் ஈடுபடுகின்றனர். அவர்கள் தெரிந்தெடுக்கும் பகுதிகள் ஒரு குறிப்பிட்ட சாதி (வேட்பாளரின் சாதி) செறிவாக வாழும் பகுதிகளாக இருக்கும். 2009 இல் மாகாண சபைத் தேர்தலில் துராவ சாதி வேட்பாளர் ஒருவர் தமது தேர்தல் பிரச்சாரத்தை எவ்வாறு நடத்தினார் என்பதை உதாரணமாகக் குறிப்பிடலாம். துராவ சாதியினை சேர்ந்த அவ் வேட்பாளர் தென் மாகாணத்தில் துராவ சாதியினர் செறிந்து வாழும் தெவிநுவர, மாத்தறை, வெலிகம தொகுதிகளிலும், கம்புறுப்பிட்டியவின் திஹாகொட பகுதியிலும் தனது பிரச்சார வேலைகளைத் தொடர்ந்தார். கொவிகம சாதியினர் பெரும்பான்மையினராக வாழும் தெனியாயத் தொகுதிக்கு குறித்த வாக்காளர் தேர்தல் பிரச்சாரத்திற்கு ஒரு தடவை கூடச் செல்லவில்லை (டி சொய்சா 2012:91-92).

**பகுதி 3**

**இலங்கையின் அரசியல் கட்சிகள் எவையும் சாதி அடையாளத்தை முதன்மைப்படுத்துவனவாக இருந்ததில்லை. ஆனால் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டும் கொவிகம சாதியினர் மேலாதிக்கம் செலுத்தும் கட்சிகள் ஆகும். 1978 களிற்கு முன்பும், விகிதாசார முறை நடைமுறைக்கு வந்த பின்பும் இதே நிலையே நீடித்தது.**

மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்ட கராவ சாதியினரான வேட்பாளர் தமக்கு வெலிகம, மாத்தறை, தெவிநுவர தொகுதிகளிலிருந்து பெரும்பகுதி வாக்குகள் கிடைத்ததாக கூறினார். அவர் குறிப்பிட்ட இப்பகுதிகள் கராவ சாதியினர் பெருந்தொகையினராகச் செறிந்து வாழும் இடங்களாகும்.

விருப்பு வாக்குகளிற்கான போட்டி காரணமாக வேட்பாளர்கள் தாம் எதிராளிகளை விடக்கூடிய வாக்குகளைப் பெற வேண்டும் என்பதற்காக, என்னென்ன செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் செய்வதற்குத் தயாராக உள்ளனர். 'உங்கள் ஆளுக்கு வாக்களியுங்கள்' என்பது தேர்தலின் போது உபயோகிக்கப்படும் பிரபலமான வசனங்களில் ஒன்று. 1980 களின் பிற்பகுதியில் அனுராதபுர மாவட்டத்தில் ராமண்ய நிகாயவின் அனுநாயக்க தேரர் (அனுநாயக்க - பிரதிச் சமயகுரு) அம்மாவட்டத்தில் பத்கம சாதி வேட்பாளருக்கு ஆதரவாகச் செயற்பட்டார். அத்தேரருக்கு, ராமண்ய நிகாயவின் கோவில்கள்

அனுராதபுர மாவட்டத்தில் எங்கெங்கு உள்ளனவோ அவ்விடங்களில் நெருக்கமான தொடர்புகள் இருந்தன. குறிப்பாக பத்கம சாதியினர் செறிந்து வாழும் பகுதிகளின் கோவில்களில் வழிபடுவோர் மத்தியில் அவருக்கு செல்வாக்கிருந்தது. அவர் பத்கம சாதிக் கோவில்களின் வலையமைப்பை ஒழுங்கமைத்திருந்தார். பத்கம சாதி வேட்பாளரை இவ்வலையமைப்பின் மூலம் அத்தேரர் அறிமுகப்படுத்தி அவருக்கு ஆதரவு தரும்படி பிரச்சாரம் செய்தார். 'தாயக்க சபா' (பக்தர்கள் சபை) என்னும் சமய பக்தர்களின் சபைகள் ஒவ்வொரு கோவிலுக்கும் இருக்கும். இத் தேரர் தாயக்க சபாக்களின் முன் பிரசார உரையாற்றும் போது பத்கம சாதியைச் சேர்ந்த ஆளுமை என்ற வகையிலேயே பேசுவார். கோவில்களின் பத்கம சாதிப் பக்தர்கள் முன்பாக நின்று அவர் 'அப்பே மினிஹாட்ட சந்த தென்ன' (எமது ஆளுக்கு உங்கள் வாக்கைக் கொடுங்கள்) என்று அவர் கேட்பார் ( டி சொய்சா 2012:93).

1996 செப்டெம்பர் 28 ஆம் திகதி நாரம்மல சீலாவதி பிரிவேனவில் ஒரு முக்கியமான கூட்டம் நடைபெற்றது. அரசியல் கட்சிகள் என்ற எல்லைக் கோடுகளையும் கட்சி விசுவாசத்தையும் கடந்து ஒரு குறிப்பிட்ட சாதியினரை ஒன்றிணைக்கும் நோக்கத்தோடு அக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இக்கூட்டம் ராமண்ய நிகாயவின் அனுநாயக்க தேரர் தலைமையில் நடைபெற்றது. பிரதான இரண்டு அரசியல் கட்சிகளின் பத்கம சாதி அரசியல்வாதிகளும் இக்கூட்டத்தில் பங்குபற்றினர். பத்கம சாதியினரின் உரிமைகளுக்காகப் போராடுவதற்காக ஒரு அமைப்பை உருவாக்குவதே இந்தக் கூட்டத்தின் நோக்கமாகும். பத்கம சாதியினரில் இரண்டு மில்லியன் வாக்காளர்கள் இருப்பதாகவும் இவ்வாக்குகள் யாவற்றையும் சரியான முறையில் ஒன்று திரட்டினால் பத்கம சாதிச் சமூகம் இலங்கையின் மூன்றாவது பெரிய அரசியல் சக்தியாக விளங்க முடியும் எனவும் இக்கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது ( விஜேதுங்க, 1996:7).

தேர்தல் பிரச்சாரத்தின் போது ஒரு கட்சி குறிப்பிட்டதொரு சாதி வாக்குகளைத் திரட்டுவதற்கான பிரச்சாரத்தை மேற்கொண்டால் அவர்களிற்கு எதிரான கட்சி இன்னொரு சாதிக்குழுவின் அடையாளத்தையும் நலன்களையும் முன்னிறுத்திப் பிரச்சாரத்தை செய்வது இயல்பாகிவிடும். தாழ் நிலையில் உள்ள சாதியொன்று 'எங்கள் சாதி ஆளுக்கு வாக்குப் போடுங்கள்' என்று பிரச்சாரம் செய்யும் போது அதற்கு மேல்நிலையில் உள்ள சாதி கொவிகம வேட்பாளரை உயர்த்தியும் தாழ்நிலை சாதி வேட்பாளரை இழிவுபடுத்தியும் பிரச்சாரம் செய்வதைக் காணலாம்.

வேட்பாளர் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஒருவராயினும் அவர் பத்கம சாதியினராயின் அக்கட்சியைச் சேர்ந்தவர்களே அவரை இழிவுபடுத்திப் பேசுவதற்கு தயங்குவதில்லை. அனுராதபுரம் கிழக்குத் தொகுதியில் இந் நிலை காணப்பட்டது. இதே போன்றதொரு நிலை மாகாணசபைத் தேர்தலின் போது அனுராதபுரவின் தலாவ பகுதியில் நிகழ்ந்தது. ரஜக்க சாதியைச் சேர்ந்த ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளரும், அதே சாதியைச் சேர்ந்த (ரஜக்க சாதி) ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (UPFA) வேட்பாளரும் இவ்வாறான பிரச்சாரத்தை எதிர்கொண்டனர் (டி சொய்சா 2012:93).

இலங்கையின் அரசியல் கட்சிகள் எவையும் சாதி அடையாளத்தை முதன்மைப்படுத்துவனவாக இருந்ததில்லை. ஆனால் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டும் கொவிகம சாதியினர் மேலாதிக்கம் செலுத்தும் கட்சிகள் ஆகும். 1978 களிற்கு முன்பும், விகிதாசார முறை நடைமுறைக்கு வந்த பின்பும் இதே நிலையே நீடித்தது. இதன் விளைவாக தாழ்நிலைச் சாதிகள் எந்தெந்தப் பகுதியில் சனத்தொகையில் கூடிய எண்ணிக்கையினராக உள்ளனவோ அப்பகுதிகளில் குறித்த சாதிகளுக்கு தேர்தலில் பிரதிநிதித்துவம் வழங்கும் முறை இருந்தது. ஒரு குறிப்பிட்ட சாதி ஒரு கிராமத்தில் பெரும்பான்மையாக இருக்கும் போது, அச்சாதியைச் சார்ந்தவர்களை பிறசாதிகளைச் சேர்ந்தவர்கள் இழிவுபடுத்துவதோ, சுரண்டுவதோ நிகழ்வதில்லை என எம். என். சிறினிவாஸ் குறிப்பிட்டார் (சிறிநிவாஸ் 2010:79).

இலங்கையில் தாழ்நிலை சாதிகளின் சனத்தொகை எண்ணிக்கை குறைவாக உள்ள இடங்களில், அச் சாதிகளுக்கு தேர்தலில் பிரதிநிதித்துவம் வழங்கும் வாய்ப்புகள் குறைவு. ஒருவர் கட்சியின் முதுநிலை உறுப்பினராகவும், தகுதிகள் உடையவராகவும்



இருந்த போதும் அவரது தாழ்நிலை சாதி சனத்தொகையில் சிறுபான்மையாக இருப்பின் அந்நபருக்கு தேர்தலில் வேட்பாளராக நியமிக்கப்படும் வாய்ப்பு கிடைப்பதில்லை. இது கொவிகம சாதியினால் பின்பற்றப்படும் சமூகப் பெரும்பான்மை வாதம் (SOCIAL MAJORITARIANISM) என்பதற்கு உதாரணமாகும்.

இலங்கையின் பிரதான கட்சிகள் யாவற்றினதும் கொள்கை வகுக்கும் அதிகாரமுடைய அமைப்புக்களில், கொவிகம சாதியின் சமூகப் பெரும்பான்மைவாதம் கோலோச்சுவதைக் காணலாம்.

இதுவரை கூறியவற்றில் இருந்து சாதி அடையாளத்தை முதன்மைப்படுத்தும் அரசியல் கட்சிகள் இலங்கையில் கிடையாது என்பதைக் கொண்டு, இலங்கையின் அரசியல் ஜனநாயக முறையில் சாதி அடையாள அரசியல் இல்லை என்ற முடிவுக்கு வர முடியாது என்பது தெளிவு. விகிதாசார தேர்தல் முறை சாதி அடையாள அரசியலுக்கான வெளியை அகலப்படுத்தியுள்ளது. அத்தோடு மேலாதிக்கமுடைய சாதிகளால் கடைப்பிடிக்கப்பட்டு வரும் சமூகப் பெரும்பான்மை வாதத்திற்கு எதிராக அணி திரள்வதற்கான வாய்ப்புக்களையும் அதிகரித்துள்ளது. விகிதாசார முறையின் விருப்பு வாக்குமுறை வாக்காளர்களின் தெரிவுக்கு இடமளிப்பதாகவும் உள்ளது. இதனால் ஒரு வாக்காளர் தன் வாக்கைப் பிரயோகித்து தமது சாதி வேட்பாளரை தேர்தலில் வெற்றி பெற வைக்கவும், தான் விரும்பும் கட்சியின் வேட்பாளர்களுள், முழு மாவட்டத்திற்குள்ளும் தன் சாதியைச் சேர்ந்த வேட்பாளர் ஒருவரை வெற்றி பெற வைப்பதற்கும் வாய்ப்பைப் பெறுகிறார். விகிதாசார தேர்தல் முறை வழங்கும் இவ்வாய்ப்பு ஒரு குறிப்பிட்ட சாதியினரை தமது சாதி வேட்பாளருக்கு ஆதரவாக ஒன்று திரளும் சாத்தியப்பாட்டை உருவாக்குகிறது.

விகிதாசார தேர்தல் முறை அறிமுகம் செய்யப்பட்டதன் காரணமாக சாதி அடையாளம் அரசியலில் குறிப்பிட்டதொரு விசேட இயல்புடன் வெளிப்படுவதை மேலே குறிப்பிட்டோம். இவ்வாறு தேர்தல் அரசியலில் சாதி அடையாளம் மேற்கிளர்ந்த போது, சாதி அடையாளத்தை வலியுறுத்தும் சமூக நடவடிக்கைகளும், முன்பிருந்த சாதி அமைப்புக்களுக்குப் புத்துயிர் அளிப்பதுமான நிகழ்வுகளும் இடம்பெறலாயின. இந்நடவடிக்கைகளின் போது பலர் நூல்களையும் இலக்கிய படைப்புக்களையும் வெளியிட்டு அடையாள வலியுறுத்தலுக்கு உரமூட்டினர். சாதிகளின் நலன்களுக்கு ஆதரவான நூல்களை எழுதி வெளியிடுதல் இலங்கைக்குப் புதியதோர் விடயமன்று. 1890 ஆம் ஆண்டில் G.A தர்மரட்ண என்பவர்

கராவ - கொவிகம சாதி முரண்பாடுகள் குறித்து நூல் ஒன்றை எழுதினார். இந்நூலின் தலைப்பு "THE KARA - GOI CONTEST WITH AN APPEAL TO THE HOUSE OF COMMONS" என்பதாகும். 1912 இல் சாம்சன் ராஜபக்ச என்பவர் சிங்கள சலாகம சாதியினரின் தலைவர்களையும், குடும்பங்களையும் பற்றிய விபரங்கள் கொண்ட நூல் ஒன்றை "A MEMOIR, WITH A SKETCH OF THE SALAGAMA SINHALESE, THEIR CHIEFS AND CLANS" என்ற தலைப்பிட்டு வெளியிட்டார். ஆயினும் 1978 இல் விகிதாசார தேர்தல் முறை அறிமுகமாக முன் உள்ள காலத்தில் இவை போன்ற சாதி அபிமானத்தை வெளியிடும் நூல்கள் மிக அரிதாகவே தோன்றின. T.S. தர்மபந்து என்பவர் 'கவுரவ வம்ச கதாவ' (KAURAVA WAMSA KATHAWA) என்னும் நூலை 1962 இல் எழுதினார். இந்நூலின் தலைப்பு 'கராவ சாதியின் வரலாறு' என்ற பொருள் உடையது.

C.De.Z. குணரத்தின என்பவர் சலாகம சாதியின் வரலாற்றைக் கூறும் 'VISH VAYAHI OBATH MAMATH' என்ற நூலை வெளியிட்டார். இவையிரண்டும் விகிதாசார முறை அறிமுகமானதற்கு முன்பு எழுதப்பட்ட நூல்களுக்கு உதாரணங்களாகும்.

விகிதாசார முறை அறிமுகமாகிய பின்னர் எழுதப்பட்ட நூல்கள் நான்கை குறிப்பிடலாம்.

1. கருணாமுனி என்ற எழுத்தாளர் 'அமுனு தொலக' என்ற நாவலை 1991 ஆம் ஆண்டு வெளியிட்டார்.

2. றிச்சார்ட் D.V.de. சில்வா 'லமனி ரஜகுலய (லமனி ரஜ குலம்) என்ற நூலை 1995 இல் வெளியிட்டார்.

3. குமாரணதுங்க 'லங்காவே சைத்திரயோ பிரமாணயோ' (இலங்கையின் சத்திரியர்களும் பிராமணர்களும்) என்ற நூலை 2017 இல் வெளியிட்டார்.

4. 'கும்பல் சமுதாயமும் மட்பாண்ட உற்பத்தித் தொழிலும்' என்னும் நூலை 2010 இல் பெர்னாண்டோ எழுதி வெளியிட்டார்.

இந்நூல்களுள் சவ்லியாஸ் கருணாமுனி (SAWLIYAS KARUNAMUNI) எழுதிய 'அமுனு தொலக' சலாகம சாதியைச் சேர்ந்த ஒருவரால் எழுதப்பட்ட நாவல் ஆகும். இந்நாவலின் கதாநாயகன் பிரிவுக்காரியாதிகாரி என்னும் பதவியை (D.R.O) வகிக்கும் நிர்வாக சேவை அதிகாரியாக சித்தரிக்கப்படுகிறார். இக்கதை சலாகம சாதியின் மூதாதையர் பிராமணர்களென்றும், அச்சாதி உயர்ந்த குலம் என்றும் கூறுகிறது (கருணாமுனி,1991:121).

D.V. றிச்சார்ட் டி சில்வா எழுதிய 'லமனி றஜ குலய' துராவ சாதிச் சமூகத்தின் வரலாற்றைக் கூறுகிறது. இதன் ஆங்கில மொழிபெயர்ப்பான 'LAMANI ROYAL CLAN' என்னும் நூல் 1998 இல் பிரசுரிக்கப்பட்டது. இந்நூல் பல வரலாற்று ஆதாரங்களைக் காட்டி துராவ சாதியினர் சத்திரியர்கள் எனக் கூறுகிறது (டி சில்வா 1995:30:32). குமாரணதுங்க எழுதிய 'லங்காவே சைத்திரயோ பிரமாணயோ' நூல் கராவ, துராவ, சலாகம, வகும்புர ஆகிய சாதிகள் சத்திரிய குலத்தில் இருந்து தோன்றியவை எனக் கூறுகிறது. இந்நூல் நவண்டன, சலாகம ஆகிய இரு சாதிகளும் பிராமணர் குல மூலத்தைக் கொண்டவை எனக் கூறுகிறது. 'கும்பல் பிரஜாவ சக மட்டி கர்மாந்தய' நூல் 'கும்பல்' (குயவர்) சாதி அந்தஸ்தில் உயர்ந்தது எனக் கூறவில்லை. 'கும்பல்' சாதிக்கு வரலாற்று ரீதியாக இழைக்கப்பட்ட அநீதிகளை இந்நூல் எடுத்துக் கூறுகிறது. இந்நூலை எழுதிய ரோஹண பி. பெர்ணாண்டோ இச்சாதியைச் சேர்ந்தவரல்ல. கும்பல் சாதியைச் சேர்ந்த இன்னொருவர் இவருக்கு வேண்டிய தகவல்களை வழங்கி இந்நூலை எழுதும்படி தூண்டுதலை வழங்கினார். கும்பல் சாதி கலைத்திறன் மிக்கவர்களைக் கொண்டதும் இயலுமைகள் உடையதுமான சமூகக் குழு என இந்நூல் குறிப்பிடுகிறது.

கும்பல் சாதி ஆக்கத்திறன் மிக்கதாக இருந்தது எனவும் இந்நூல் குறிப்பிடுகிறது. அச்சாதியின் ஆக்கத்திறன் சிறப்பை சோஷலிசம், ஜனநாயகம் ஆகிய எண்ணக்கருக்களுடன் தொடர்புபடுத்தி இந்நூல் விளக்குகிறது.

'ஜய ஹண்ட' என்னும் நூல் திலகவர்த்தன என்பவரால் 1992 இல் எழுதப்பட்டது. இந்நூலை துராவ சாதிச் சங்கமான 'சுப சாதக பதனம' (சமூகநல நிறுவனம்) வெளியிட்டது. இந்நூல் அடிப்படை உரிமைகள் வழக்கு (S.C.APPLICATION NO 98/82) ஒன்றை

ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டது. நீதிமன்றத்தின் முன் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட ஒரே ஒரு வழக்காக அமையும். இவ்வழக்கு ஹேவவலாகே ஜில்பேர்ட் டி சில்வா என்பவரால் தொடரப்பட்டது. தனது விண்ணப்பத்தில் மனுதாரர் தாம் துராவ சாதியைச் சேர்ந்தவர் என வெளிப்படையாகவே குறிப்பிடுகிறார் (திலகவர்த்தன 1992:20). அவருடைய முறைப்பாடு, ஹரிஸ் சந்திர விஜயதுங்க என்பவரால் பதிப்பிக்கப்பட்ட பண்பாட்டு அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 'சிங்கள அகராதி' (THE PRACTICAL SINHALA DICTIONARY) என்னும் அகராதியில் துராவ சாதி பற்றி இழிவுபடுத்தும் முறையில் இரு சொற்களுக்கு வரைவிலக்கணம் தரப்பட்டுள்ளது என்பதாகும். 'தகதுற' (DAHA DURA), துராவ (DURAWA) என்ற இரு சொற்களுக்கும் தவறானதும், அவதூறானதுமான வரைவிலக்கணம் தரப்பட்டுள்ளதாகவும் அச்சொற்களை நீக்கும்படி உத்தரவிடும்படியும் மனுதாரர் தனது விண்ணப்பத்தில் கோரியிருந்தார். பதிப்பாசியரியர் விஜயதுங்கவும், பண்பாட்டு அலுவல்கள் அமைச்சும் அவ்விரு சொற்களையும் நீக்குவதற்கு சம்மதம் தெரிவித்தன. நீதிமன்று இவ்வழக்கை இணக்கமாக முடிவுக்குக் கொண்டு வந்தது. இச்சம்பவம் 1982 இல் நிகழ்ந்தது. ஆனால் திலகவர்த்தனவின் நூல் 1992 இல் வெளியிடப்பட்டது.

இலங்கையில் விகிதாசார முறை அறிமுகம் செய்யப்பட்டதும் சாதியடிப்படையில் வாக்கு வேட்டை நடத்தப்படுவது இடம்பெறுகிறது. புவியியல் ரீதியாக சிதறிக் கிடக்கும் சமூகக் குழுக்களை சாதி விசுவாசத்தின் அடிப்படையில் அணி திரட்டும் போக்கு, முன்னர் இல்லாத வகையில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. விகிதாசார முறையின் கீழ் பரந்த புவியியல் பிரதேசமான மாவட்டம் ஒரு தொகுதியாகக் கருதப்படுவதால், சாதியடிப்படையிலான வாக்குகள் முக்கியம் பெறுகின்றன. எமது சாதியினர் வாக்குகள் எவ்வளவு உள்ளன? என்னும் 'எண்கள்' சார்ந்த வினா முக்கியத்துவம் பெறுகிறது. சுடிதிப்கவிராஜ் என்பவர் இந்தியாவில் சாதியடிப்படையில் வாக்குகளை அணி திரட்டல் பற்றிக் கூறும் போது "ELECTORAL POLITICS TURNS BASICALLY ON NUMBERS" என்று குறிப்பிட்டார். இலங்கையிலும் அவ்வாறான நிலையே ஏற்பட்டுள்ளது.

அக்குரஸ தேர்தல் தொகுதியில் பிரபலமான ஒரு அரசியல் தலைவருக்கும் கும்பல் சாதியினருக்கும் இடையே பிணக்கு ஒன்று தோன்றியது. கும்பல் சாதியினருக்கு மட்பாண்டம் செய்வதற்கான களி மண்ணை அகழ்ந்து எடுப்பது சம்மந்தமானதாக இப் பிணக்கு இருந்தது. இப்பிரச்சினை பின்னர் ஒரு அரசியல் பிரச்சினையாகியது. கும்பல் சாதியினர் அக்குரஸவில் மட்டுமல்லாது அருகே உள்ள தெவி நுவர தேர்தல் தொகுதியிலும் வாழும் கும்பல் சாதி மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி குறித்த அரசியல்வாதிக்கு தமது சாதியினர் மத்தியில் இருந்த ஆதரவை விலக்கிக் கொள்ளச் செய்தனர். இந்தச் சம்பவம் எவ்வாறு புவியியல் ரீதியாகச் சிதறிக் கிடக்கும் குறிப்பிட்டதொரு சாதி ஒன்றுபட்டு கூட்டாக அரசியல் முடிவை எடுக்க முனைகிறது என்பதற்கு உதாரணமாகும். தமது குழுவின் பொதுவான குறைகளுக்கு ஐக்கியப்பட்டு நிவாரணம் தேட விகிதாசார தேர்தல் முறை வாய்ப்பளித்துள்ளதெனலாம். பஹல கொஸ்கம என்ற பகுதியைச் சேர்ந்தவர்கள் தென்னைத் தோட்டங்களில்



இருந்து பெறப்படும் சிரட்டைகளை உபயோகித்து பல்வேறு கலைப்பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபடுகின்றனர். இத்தொழிலைச் செய்வோர் அனைவரும் பத்கம சாதியினராகவும் உள்ளனர். இத்தொழிலைச் செய்யும் இம்மக்கள் தமக்கென ஒரு சங்கம் ஒன்றை உருவாக்கினர்.

ஐக்கியப்பட்ட ஒரு அரசியல் குழுவாக இச்சமூகம் அரசியல் செயல் முறையில் இணைந்து கொள்வதைக் காண முடிகிறது.

அரசியல் அரங்கில், சாதி பேரம் பேசலுக்கான சாதனமாக ஓரளவிற்குப் பயன்படுகிறது. ஆயினும் சாதி சமூக அரங்கில் பேரம் பேசும் சாதனமாக இயங்கும் வலுவற்றதாக உள்ளது. இதன் பொருள் யாதெனில் அரசியல் ஜனநாயகத்திற்கும் சமூக நிலைப்பட்ட ஜனநாயகத்திற்கும் நேரடித் தொடர்பு கிடையாது. ஜனநாயகத்தின் இவ்விரு பரிமாணங்களின் உள்ளக இயங்கியல் வெவ்வேறானவை.

### சாதி, சமூக விலக்கல், ஜனநாயகப்படுத்தல்

"தாழ்த்தப்பட்ட நிலையில் சமூகப் பிரிவுகள் சில தொடர்ந்து இருந்து வருகின்றன; அவை சாதியின் அடிப்படையிலான பாரபட்சம் காட்டுதலுக்கு ஆளாகி வருகின்றன. அச்சமூகப் பிரிவினர் கல்வி வாய்ப்புக்களைப் பெறுதல், காணிகளை விலைக்குப் பெற்றுக் கொண்டு காணிகளின் உடைமையாளர்களாதல், பொருளாதார வளங்களைப் பெறுதல், சமூகப் படிநிலையில் மேல்நோக்கி உயருவதற்கான வழிகளைப் பெறுதல் என்பனவற்றில் தடைகளை எதிர்நோக்கி வருகின்றனர்" (சில்வாவும் பிறரும் 2009b:14).

சில்வாவும் பிறரும் இணைந்து எழுதிய ஆய்வில் இருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ள மேற்குறித்த கூற்று 'சமூக விலக்கல்' (SOCIAL EXCLUSION) என்னும் எண்ணக் கருவை மிகத் தெளிவாக விளக்கி நிற்கும் கூற்றாகும். 'சமூக விலக்கல்' என்ற சொல்லை வெளிப்படையாக அக்கூற்று உள்ளடக்கவில்லை எனினும் அவ் எண்ணக்கருவையே அது குறிப்பிடுகிறது. ஜயதேவ உயன் கொட இலங்கையில் ஜனநாயகச் செயன்முறையின் பிரத்தியேக இயல்புகளின் வெளிப்பாடாகவே தாழ்த்தப்பட்ட நிலையில் உள்ளோரது சமூக விலக்கல் அமைகிறது என்று கூறுகிறார். விளிம்பு நிலைச் சமூகங்களினால் அரசியல் உரிமைகளையும், சமூக ஜனநாயகத்தையும் அனுபவிக்க முடியவில்லை. சமூக வாழ்வில் உள்ள இந்த இடைவெளியை அரசு, ஜனநாயக நிறுவனங்கள், சிவில் சமூகம் என்பன நீக்குவதற்குத் தவறி விட்டன (உயன் கொட 2012:31) என்று அவர் குறிப்பிட்டுள்ளார். உயன் கொட அவர்கள் "சமூக விலக்கலையும் பிரஜா அந்தஸ்தையும் ஒன்றிணைத்துப் பார்ப்பதோடு சமூக விலக்கலுக்கு உள்ளாகும் சமூகப் பிரிவினர் பிரஜா அந்தஸ்தை முழுமையாக அனுபவிப்பதில்லை" என்றும் கூறுகிறார் (உயன்கொட 2012:79-80).

"சமூக விலக்கல் சக்தி வாய்ந்த பாரபட்ச நடவடிக்கையாகும். மனிதவள அபிவிருத்திப் பாதையில் சமூகம் பயணிக்கும் போது, சில சமூகப் பிரிவினரை, ஒரு குழுவாகப் பிரித்து அப்பாதையில் செல்ல விடாமல் ஒதுக்கி விடும் வேலையைச் சமூக விலக்கல் செய்கிறது. சில சமூகங்கள் சமூக, அரசியல், பொருளாதாரம், பண்பாடு, கல்வி, சமயம் ஆகிய சமூக வாழ்வின் பல விடயங்களில் இருந்து விலக்கி வைக்கப்படுகின்றன. ஒரே சமூகத்தில் வாழும் சில பிரிவினர் உயர்ந்தோராகவும், இன்னொரு பிரிவினர் தாழ்ந்தோராகவும் நடத்தப்படுவதற்கு சமூக விலக்கல் உதவுகிறது. அது சமூக வாழ்விலும், பண்பாட்டு வாழ்விலும் மேலாதிக்கம் (DOMINATION), கீழ்ப்பணிந்து போதல் (SUBJUGATION) ஆகிய அமைப்பு முறையை உருவாக்கி விடுகிறது" (லூயிஸ் 2007:3). பிரகாஷ் லூயிஸ் (PRAKASH LOUIS) அவர்களின் மேற்கூறிய கூற்று சமூக விலக்கலின் விளைவுகளை மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. புறந்தள்ளி ஒதுக்கி வைத்தல், தனிமைப்படுத்துதல், கீழ்ப்பணிந்து போகச் செய்தல் என்பன பாரபட்ச நடவடிக்கைகளின் விளைவாகும். இவை சமூகக் கட்டமைப்புக்களின் ஊடாக நிகழ்த்தப்படும் அரசியலின் விளைவுகளாகும். இதனால் ஜனநாயகத்தின் பயனான விடுதலை சில சமூகப் பிரிவினருக்குக் கிடைப்பதில்லை. சமூக விலக்கல் ஒரு கருத்தியல் மட்டுமல்ல. அது சமூகக் கட்டமைப்புக்களுடன் இணைந்து செயற்படும் கருத்தியல் ஆகும். சமூக விலக்கல் மனப்பாங்குகள் சமூகக் கட்டமைப்புக்களில் இணைக்கப்படுகின்ற போது கருத்தியலும், கட்டமைப்புகளும் ஒன்று சேர்வதைக் காணலாம். சமூக விலக்கி வைத்தல் கருத்தியலும், விலக்கி வைக்கும்

சமூகக் கட்டமைப்புகளும் ஒன்றிணைந்து செயற்படுகின்றன.

சாதி முறையின் முக்கிய இயல்புகளில் ஒன்று அதிகார வரன்முறை (HIERARCHY) ஆகும். அதிகார வரன்முறை சாதியடிப்படையிலான சமத்துவமின்மையை நியாயப்படுத்தும் கருத்தியலை உருவாக்குகிறது. சமூகத்தால் விளிம்பு நிலையில் விலக்கி வைக்கப்பட்டோரும் இக் கருத்தியலை உள்வாங்கிக் கொண்டு செயற்படுகின்றனர். இவ்வாறான கருத்தியலின் உள்வாங்கல் (INTERNALISATION) சாதி முறையை ஒழிப்பதற்குத் தடையாக அமைகிறது (லூயிஸ் **2007:10**). சாதியின் அதிகார வன்முறைக்கு பின்னால் சமூக உயர்வு, தாழ்வு பற்றிய கருத்தியல் மறைந்துள்ளது. இந்த மறைந்திருக்கும் கருத்தியல் சாதி அடிப்படையிலான சமூக விலக்கலுக்கு உதவும் நிலையை இலங்கையில் காணலாம். இலங்கையில் சமூகத்தின் அடி நிலையில் உள்ளவர்களுக்கு அதிகாரத்தில் பங்கு கிடைப்பதில்லை. அவர்களால் காணிகளை உடமை கொள்ள முடிவதில்லை. அவர்களுக்குக் கௌரவமும் மதிப்பும் வழங்கப்படுவதில்லை. சமூக நல அரசு (WELFARE STATE) வசதி குறைந்த பல சமூகப் பிரிவினர்களுக்கு நன்மைகளைப் பகிர்ந்தளித்துள்ளது உண்மையே. ஆயினும் அடி நிலைச் சாதிகளுக்கு சமூக நல அரசின் நன்மைகள் சமத்துவமான முறையில் பங்கிடப்பட்டன என்று கூற முடியாது (சில்வாவும் பிறரும் **2009** b **: 45,14**).

அரசியல் யாப்பு வழங்கியுள்ள மனித உரிமைகளைக் கிடைக்கச் செய்யாது தடுத்தல், பொருளாதார வளங்களைப் பெற்று அனுபவிக்க முடியாத நிலை என்பன சமூக விலக்கலை உருவாக்குகின்றன. இதனை விட சமூக இடையுறவுகளில் இருந்து விலக்கி வைத்தல் மனிதரின் கௌரவத்தைப் பாதிப்பதாக அமைகிறது. சமூகத்தில் உள்ள அனைத்துச் சமூகப் பிரிவினரும் அரசியல் பங்கேற்பில் (POLITICAL PARTICIPATION) பங்கு கொள்வதன் மூலம் ஜனநாயகம் மேலோங்கும். ஆகையால் சில சமூகக் குழுக்கள் தொடர்ச்சியாக அரசியல் பங்கேற்பு இல்லாது ஒதுங்கி இருந்தால் ஜனநாயகத்தை அது வளர விடாது தடுக்கும். அரசியல் பங்கேற்பு மூலம் மக்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்தலாம், குறைகளை எடுத்துச் சொல்லி நிவாரணம் கேட்கலாம், தமது பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கலாம். இவை மட்டும் தான் அரசியல் பங்கேற்பின் நன்மைகள் அல்ல. இவற்றைவிட இன்னொரு முக்கியமான நன்மை பொருளாதார நன்மைகளும், பொருளாதார நன்மைகள் மூலம் சமூக அந்தஸ்தைப் பெற்றுக் கொள்வதுமாகும்.

“தேர்தல் என்பது வெறுமனே ஒரு பிரதிநிதியை தெரிவு செய்வது மட்டுமன்று; அது ஒரு அரசாங்கத்தை தெரிவு செய்வதும் அன்று; அது ஒரு சூதாட்டம் ஆகும். இச் சூதாட்டத்தில் ஒருவரின் புரவலர் (PATRON) வெற்றி பெறலாம். அப் புரவலரின் கட்சி ஆட்சியைக் கைப்பற்றலாம். அப்போது அப் புரவலரை ஆதரித்து வாக்களித்தவருக்குப் பொருளாதார நன்மைகள் கிடைக்கின்றன. இங்கே அரசியல், பகுதியளவில் பொருளாதாரம் என்ற பரிமாணத்தை பெறுவதைக் காண்கிறோம்” (குணசிங்க **2007:145**). நியூட்டன் குணசிங்க அவர்களின் மேற்காட்டிய கூற்று அரசியல் பங்கேற்பின் பொருளாதாரப் பரிமாணத்தை எடுத்துக் கூறுகிறது.

அரசியல் பங்கேற்பு (POLITICAL PARTICIPATION) மற்றும் பிரதிநிதித்துவம் (REPRESENTATION) என்ற இரண்டு விடயங்களும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவை. இவற்றின் மூலம் கீழ் நிலையில் உள்ள சாதிக் குழுக்கள் சமூக அசைவியக்கம் (SOCIAL MOBILITY) மூலம் மேல் நிலைக்கு உயரலாம். இலங்கையில் ஜனநாயகம் புகுத்தப்பட்ட தொடக்க காலத்தில் அரசியல் பங்கேற்பும், பிரதிநிதித்துவமும் உயர் சாதியினருக்கே கிடைத்தன. காரணம் சொத்துடமையும், ஆங்கிலக் கல்வியும் வாக்குரிமைக்கான முன் நிபந்தனையாக அமைந்தமையாகும். இதனால் சொத்துக்களும் ஆங்கிலக் கல்வியும் இல்லாத தாழ்நிலைச் சாதிகளால் அரசியலில் பங்கேற்க முடியவில்லை. தரா குமாரசுவாமி (TARA COOMARASWAMY) குறிப்பிட்டுள்ளது போன்று, முதலாவது சட்ட சபையில் கொவிகம சாதி மேலாதிக்கம் பெற்றிருந்தது. அச் சட்ட சபையில் கராவ, சலாகம என்ற இரு சாதிகளை தவிர்ந்த ஏனைய சாதிகளின் பிரதிநிதிகளுக்கு இடம் கிடைக்கவில்லை.

தாழ்நிலைச் சாதிகளின் வாக்குகளை அரசியல்வாதிகள் அணி திரட்டினர். தாழ்நிலைச் சாதிகளில் இருந்து கட்சிக்கு உறுப்பினர்களையும் சேர்த்தனர். ஆயினும் எந்த அரசியல் கட்சியினதும் அரசியல்வாதிகளும் தாழ்நிலைச் சாதிகளின் பொதுவான குறைகளின் அடிப்படையிலான வெகுஜன இயக்கத்தை (MASS MOVEMENT) கட்டமைப்பதற்கு முன் வரவில்லை.

கண்டிப் பிரதேசத்தில் பத்கம, வகும்புர என்னும் இரு சாதிகளின் எண்ணிக்கையில் பெரும் தொகையினராக இருந்த போதும், தொடக்க கால சட்டசபைகளில் அச்சாதிகளுக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை (குமாரசுவாமி 1988:98). 1947 தேர்தலில் இவ்விரு சாதிகளுக்கும் பிரதிநிதித்துவம் கிடைத்த போதும், சனத்தொகை விகிதாசாரப்படி நோக்கினால் அப்பிரதிநிதித்துவத்தின் போதாமை வெளிப்படும். பத்கம, வகும்புர இரண்டும் சேர்த்து கண்டிப் பிராந்தியத்தின் சனத்தொகையில் 33% வீதமாக இருந்தன. ஆயின் 1947 இல் அச்சாதிகளுக்கு கிடைத்த பிரதிநிதித்துவம் 4% வீதம் ஆகும் என தரா குமாரசுவாமி குறிப்பிடுகிறார். வாக்குரிமை விஸ்தரிக்கப்பட்ட பின்னர் ‘சிங்கள பௌத்த கொவிகம சாதியின் ஆதிக்கம் நிறுவன மயப்படுத்தப்பட்டது‘ என்று சிறுபான்மைச் சாதியினர் பலர் கருத்துத் தெரிவித்தனர் (குமாரசுவாமி 1988:243).

தாழ்நிலைச் சாதிகளின் வாக்குகளை அரசியல் வாதிகள் அணி திரட்டினர். தாழ்நிலைச் சாதிகளில் இருந்து கட்சிக்கு உறுப்பினர்களையும் சேர்த்தனர். ஆயினும் எந்த அரசியல் கட்சியினதும் அரசியல்வாதிகளும் தாழ் நிலைச் சாதிகளின் பொதுவான குறைகளின் அடிப்படையிலான வெகுஜன இயக்கத்தை (MASS MOVEMENT) கட்டமைப்பதற்கு முன் வரவில்லை. இந்தியாவில் சாதி அடிப்படையிலான அரசியல் கட்சிகள் உள்ளன. இலங்கையில் சாதி அடிப்படையிலான அரசியல் கட்சிகள் இல்லை என்பது இலங்கை அரசியலில் முக்கியமான இயல்புகளில் ஒன்று.

இந்தியாவின் சாதி அடிப்படையிலான அரசியல் கட்சிகள் சாதிகளின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கான திட்டங்களை முன் வைத்து, அதன்படியான சுலோகங்களையும் முன்வைத்து சாதி வாக்குகளை அணி திரட்டுகின்றன. இந்தியாவின் பகுஜன் சமாஜ் கட்சி (BSP) இதற்கு நல்லதொரு எடுத்துக் காட்டாகும். இக் கட்சியின் தலைவர் கான்சிராம் (KHANSIRAM) பகுஜன் சமாஜ் கட்சியின் நிறுவனர் ஆவர். அத்தோடு அவர் ’பிற்பட்ட சிறுபான்மைச் சமூகத் தொழிலாளர் சமாஜம்‘ (BACKWARD AND MINORITY COMMUNITY EMPLOYEES FEDERATION) என்ற தொழிற்சங்க அமைப்பினை 1973 இல் நிறுவியவர். அவரது பகுஜன சமாஜ் கட்சி அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக 1984 இல் தொடங்கப்பட்டது என்பது கவனத்திற்குரியது (சந்திரா, 2004:144-145).

இலங்கையில் தாழ்நிலையில் உள்ள சமூகக் குழுக்கள் அரசியல் அணிசேர்ப்பின் மூலம் அரசியலில் இணைக்கப்படுவதில்லை. இது அவர்கள் விளிம்பு நிலையில் இருப்பதற்குப் பிரதான காரணம் ஆகும் என ஜயதேவ உயன்கொட (2012:30) குறிப்பிடுகின்றார். கண்டிப் பிரதேசத்தின் தாழ்நிலைச் சாதியாகிய கின்னர சமூகக் குழுவின் நிலை பற்றி உயன்கொட கூறியிருப்பது வருமாறு.

“கின்னர சமூகத்தை சேர்ந்த எந்தப் பிரஜையும் இதுவரை, இலங்கையின் எந்த அரசியல் கட்சிகளாலும் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளராக தெரிவு செய்யப்படவில்லை. ஊரக மட்டத்தில் கின்னர சமூக நபர் கட்சி உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. அவர்களுள் எவராவது இதுவரை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களாக சேர்த்துக் கொள்ளப்படவில்லை. எந்தவொரு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரைக் கொண்ட சபைகளிலும் அவர்களுக்கு இதுவரை பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை (உயன்கொட 2012:80).

அடிநிலைச் சாதிகளுக்கு இலங்கையில் போதிய சட்டப் பாதுகாப்பு இல்லை என்பதை அடுத்த பகுதியில் விளக்கிக் கூறவுள்ளோம்.

பகுதி 4

## சாதி ஒதுக்குதலுக்கும் பாரபட்சம் காட்டுதலுக்கும் எதிரான சட்டப் பாதுகாப்பின்மை

இலங்கையில் சாதி பாரபட்சம் காட்டுதலைத் தடுக்கக் கூடியதான அரசியல் யாப்புச் சட்டப் பாதுகாப்பின் போதாமை சுட்டிக் காட்டப்பட வேண்டியது. சட்டப் பாதுகாப்பைப் பெறுவதற்கான நிறுவன ரீதியான தடைகளும் உள்ளன. இக் காரணங்களால் பொது வெளியில் கேள்விக்கு உட்படுத்தப்படாதனவான மறைமுகமான வெளித் தெரியாத காரணிகள் ஜனநாயக விலக்கலுக்குத் துணை புரிகின்றன. இலங்கையில் விளிம்பு நிலையினருக்கு பாதுகாப்பு வழங்கும், சமவாய்ப்புச் சட்டங்கள் (EQUAL OPPORTUNITY LEGISLATION) இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. சமவாய்ப்புச் சட்டங்கள் 'POSITIVE DISCRIMINATION LEGISLATION' எனவும் அழைக்கப்படுகின்றன.

இலங்கையின் அரசியல் யாப்பின் உறுப்புரை 12 அடிப்படை உரிமைகள் பற்றிக் குறிப்பிடுகிறது.

'இனம், சமயம், மொழி, சாதி, பாலினம், அரசியல் அபிப்பிராயம், பிறந்த இடம் அல்லது இவை போன்ற ஏதேனும் அடிப்படைகளில் நபர் ஒருவருக்கு சட்டத்தின் முன் பாரபட்சம் காட்டுதல் ஆகாது' என இவ் உறுப்புரை கூறுகிறது. உறுப்புரை 12 (3) மேற்சொன்ன காரணங்களின் அடிப்படைகளில் நபர் ஒருவருக்கு பொது இடங்கள், பொதுப் பாவனைக்குரிய வசதிகள் என்பனவற்றில் பாரபட்சம் காட்டலாகாது எனக் கூறுகின்றது. கடைகள், பொது உணவகங்கள், ஹோட்டல்கள், பொழுது போக்கு மகிழ்வு இடங்கள், குறித்த நபர் ஒருவரின் சமயத்தின் பொது வழிபாட்டிடம் என்பன இவ்வுறுப்புரையின் கீழ் பொது இடங்களாகப் பட்டியலிடப்பட்டுள்ளன. உறுப்புரை 12 (2), 12 (3) என்பனவற்றின்படி பாதிக்கப்பட்ட ஒருவர் உச்ச நீதிமன்றத்திற்கு மனுச் செய்து சட்ட நிவாரணம் கோரலாம்.

ஹேவவெல்லகே ஜில்பேர்ட் சில்வா எதிர் கௌரவ சட்டமா அதிபர் நாயகம் வழக்கு சாதியடிப்படையிலான பாரபட்சம் தொடர்பான நிவாரணம் கோருதலுக்குச் சிறந்த உதாரணமாகும்.

அரசியல் யாப்பின் உறுப்புரை 12 (4) பெண்கள், சிறுவர்கள், இயலாமையுடையோர் (DISABLED PERSONS) என்போரின் முன்னேற்றத்திற்காக அரசாங்கம் சட்டங்களை இயற்றலாம் எனக் கூறுகிறது. இப்பிரிவு சாதியடிப்படையிலான சமூக விலக்கல், பாரபட்சம் என்பன பற்றிய சட்டங்களை இயற்றுதலை உள்ளடக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1957 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டம் சாதியடிப்படையிலான பாரபட்சம் காட்டுதலைத் தடுப்பதற்கான சட்டமாகும். இது PREVENTION OF SOCIAL DISABILITIES ACT NO 21 OF 1957 எனப் பெயரிடப்பட்டது. இச்சட்டம் பின்னர் 1971 இன் 18 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டது. இச்சட்டம் தாழ்நிலைச் சமூகங்களுக்கு இழைக்கப்பட்ட பாரபட்சமான நடவடிக்கைகளுக்கு போதிய பாதுகாப்பை வழங்கவில்லை என ரியுடர் சில்வாவும் பிறரும் எழுதிய ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது (சில்வாவும் பிறரும் 2009 b : 15).

## அரசின் பொறுப்பு

ஜயதேவ உயன்கொட 2015 இல் எழுதிய ஆய்வு ஒன்றில் சமூக விலக்கல் (SOCIAL EXCLUSION) நிகழ்வதற்கு அரச உத்தியோகத்தர்கள் பங்களிப்பு வழங்கிய சில சந்தர்ப்பங்களை எடுத்துக் காட்டியுள்ளார். அம்பஹேன என்னும் இடம் குருணாகல மாவட்டத்தில் அமைந்துள்ளது. இப் பகுதியின் கிராம சேவகர் அப்பகுதியின் வெவ்வேறு சாதியினரிடையே சமூக விலக்கல் இருப்பதை நீடிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டார். காணியற்றவர்களான கொவிகம சாதியினருக்கு காணிகளை வழங்கிய போது கொவிகம சாதிக் குடியிருப்புகள் அமைக்கப்பட்ட இடத்தில் அக்கிராமத்தின் கின்னர சாதியினருக்குக் காணி வழங்க மறுத்து விட்டார். கிராம சேவகர் அம்பஹேனவின் கின்னர மக்களுக்கு காணி வழங்கும் சிபாரிசுக் கடிதங்களைக் கொடுப்பதற்கு மறுத்தார். கின்னர மக்களுக்கு வேறாக ஒரு கிராமம் உருவாக்கப்பட வேண்டும் (வெனம கமக் கதன்ன) என்ற கருத்தின் அடிப்படையிலேயே தாம் கடிதம் வழங்க மறுத்ததாக அவர் குறிப்பிட்டார் (உயன் கொட 2015:222). இக்

கிராமத்தின் தபாற்காரர் கின்னர மக்களுக்கான கடிதங்களை அவரவர் வீட்டிற்கு கொண்டு சென்று கொடுப்பதைத் தவிர்த்து வழியில் உள்ள கடையொன்றில் ஒன்றாகச் சேர்த்துக் கொடுத்து விட்டுச் செல்கிறார் (உயன் கொட 2015 : 223). குடும்ப மருத்துவ உத்தியோகத்தரும் இவ்விதமே பாகுபாடு காட்டும் முறையில் பணியாற்றுகிறார். ஒரு பெண் நேர்காணலின் போது கூறியதாவது "மருத்துவத் தாதி இக்கிராமத்துக்கு வருவதே கிடையாது. பல தடவை சொல்லியனுப்பியும், தொலைபேசி அழைப்புக்கள் கொடுத்தும் அழைத்த பின்னர் தான், கர்ப்பிணித் தாய்மாருக்கு உதவி செய்ய இம் மருத்துவத் தாதி வருவார்" (உயன்கொட 2015:222). இவ்வாறாக முறைசாராப் பண்பாடாக 'தீண்டாமை' உத்தியோகத்தர்களால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இவ்வுத்தியோகத்தர்கள் அரசியல் யாப்புச் சட்டப்படி இக்கிராமத்தவர்களுக்கு பாரபட்சமற்ற சேவையை வழங்கும் கடப்பாடு உடையவர்களாய் இருந்த போதும் அதனை மீறி நடந்து கொள்கின்றனர். அம்பஹேன கிராமத்திற்குச் செல்வதற்கான பாதை திருத்தப்படாமல் உள்ளது. கிராமவாசிகள் பல தடவை முறைப்பாடுகளை அனுப்பிய போதும் பிரதேச சபை அலுவலகமும், பிரதேச செயலாளர் அலுவலகமும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இக் கிராமத்துக்கு மின்சாரமும், குடிநீரும் வழங்குவதற்கு இந்த நிறுவனங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இவ்வாறாக அரச நிறுவனங்களாலும், அவற்றில் பணிபுரியும் உத்தியோகத்தர்களாலும் சமத்துவமான பிரஜாவுரிமை (EQUAL CITIZENSHIP) இம் மக்களுக்கு மறுக்கப்படுகிறது. சமத்துவமற்ற பிரஜாவுரிமை என்ற கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகிறது.

நாம் முன்னர் குறிப்பிட்டது போன்று, இலங்கையில் சாதி பொதுவிடத்தில் பேசக்கூடாத விடயமாகக் கருதப்படுகிறது. இக் காரணத்தால் சமூக முரண்பாடுகள் பற்றிய விவாதம்/உரையாடல் என்பனவற்றிலும் 'சாதி' என்னும் விடயம் பேசுபொருளாக எடுக்கப்படுவதில்லை. தீர்வுத் திட்டங்களில் மூல காரணம் எது என்பதைக் கவனத்தில் கொண்டு தீர்வு செய்யப்படுவதில்லை. இங்கிரிய பகுதியின் பிரதேச செயலாளர் இது பற்றிக் கருத்துரைக்கும் போது பின்வருமாறு கூறினார். "எமக்கு முறைப்பாடுகள் செய்யப்படும் போது சாதிப் பிரச்சினையின் வடிவில் உரிய சொற்களை உபயோகித்து பிரச்சனையின் தன்மை எடுத்துரைக்கப்படுவதில்லை. கையாளப்படும் மொழி பிரச்சினையை சாதி சாராத பிரச்சினையாகவே முன் வைக்கிறது. பாதிக்கப்பட்டவர்களே சாதி அடிப்படையிலான பாரபட்சம் காட்டுதலை, தமது உண்மையான பிரச்சினையை மறைத்து விடும் வார்த்தைகளால் முன் வைக்கின்றனர். உத்தியோகம் என்ற எல்லைக்குள் சாதி விலகி நிற்கிறது. (டி சொய்சா 2014 :12)"

**இலங்கையில் ஜனநாயகமாக்கல் செயல்முறை ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் தேர்தல் அரசியலில் அடிநிலைச் சாதியினர் ஜனநாயகத்தின் நன்மைகளைப் பெறவில்லை. சமூகநல அரசும் (WELFARE STATE) சமூக நல வசதிகளை இச்சமூகங்களிற்கு முழுமையாக வழங்கவில்லை.**

இங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள எல்லா குடிமைச் சங்கங்கள், கழகங்கள் என்பன கொவிகம, பத்கம என்பனவற்றிற்கு தனித் தனியானவையாக இயங்குகின்றன. கொவிகமவிற்கு தனியான விளையாட்டுக்கழகங்கள் உள்ளன. இதே போல் பத்கம சாதியினரின் விளையாட்டுக் கழகங்கள் தனியாக இயங்குகின்றன. சமுர்த்தி சங்கமும் இரு வேறு கூட்டங்களை தனித்தனியாக நடத்துகின்றது. கொவிகம சமுர்த்தி உறுப்பினர்களின் கூட்டம் தனியாகவும், பத்கம சமுர்த்தி உறுப்பினர்களின் கூட்டம் தனியாகவும் நடைபெறும். ஆனால் கூட்டம் நடைபெறும் நேரம் மட்டும் வேறுபடும். நிர்வாக உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யும் ஆண்டுப் பொதுக்கூட்டம் மட்டுமே

விதிவிலக்கான கூட்டம் ஆகும் (டி சொய்சா 2014:12). இங்கிரியாவின் கிராமங்களில் ஒன்றில் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் (WDO) எல்லோருக்கும் பொதுவான கூட்டம் ஒன்றை நடத்தினார். அக்கூட்டத்திற்கு பத்கம சாதிப் பெண்கள் ஒரு சிலரே வந்திருந்தனர். அவர்கள் கூட அப்பெண் உத்தியோகத்தரின் வற்புறுத்தலின் காரணமாகவே பங்கேற்றனர். கொவிகம சாதிப் பெண்கள் பத்கம சாதிப் பெண்களைக் கூட்டத்திற்கு அழைத்ததை விரும்பவில்லை. அவர்கள் அப்பெண் உத்தியோகத்தரின் செய்கையையிட்டு அதிருப்தி தெரிவித்தனர் (டி சொய்சா 2014:12-13).

மேலே குறிப்பிட்டபடி பிரஜைகளிற்கான சமூகநலன் விருத்திச் சங்கங்களில் சாதியடிப்படையில் இரு வேறு கூட்டங்கள் நடத்தப்பட்டமை, சாதிப் பாரபட்சத்திற்கான அரச அங்கீகாரத்திற்கான வெளிப்படையான உதாரணமாகும். ‘சமூகவிலக்கல் பண்பாட்டை’ (CULTURE OF SOCIAL EXCLUSION) அரசு ஏற்றுக் கொள்கிறது என்பதற்கும் மேலாக ஆதரவளிக்கின்றது என்பதற்கு இது சிறந்த உதாரணமாகும்.

இவ்வாறாக சாதிகளைப் பிரித்துத் தனிமைப்படுத்தும் நடைமுறைகளுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரம் வழங்கப்படுகிறது. இது பொது இடங்களில் பிரஜைகளுக்கு சமத்துவ உரிமையையும் (RIGHT TO EQUALITY) கௌரவத்தையும் மறுக்கும் செயலாகும். இது நடைமுறை விதியாக மாற்றப்படும் போது இதன் தீங்கான பின் விளைவுகள் வெளிப்பட்டுத் தெரிகின்றன. நடைமுறை விதியாகிப் போகும் போது ஆதிக்கச் சாதியும், ஒடுக்குதலுக்கு உள்ளாகும் சாதியும், அரச உத்தியோகத்தர்களும் அதனை இயல்பான ஒன்றாகவே கருதிவிடும் நிலை தோன்றுகிறது. பொது வெளியில் சமூக விலக்கல் என்பது, இயல்பானது; இயற்கையானது என்பது உறுதியாகின்றது.

சாதியடிப்படையிலான பாரபட்சம் காட்டுதலும், விளிம்பு நிலையாக்கலும் வறுமையோடு நெருங்கிய தொடர்புடையது. அரச உத்தியோகத்தர்கள் வறுமைத் தணிப்புத் திட்டங்களைத் தயாரிக்கும் போது பொருளாதாரப் பிரச்சனைகளை மையப்படுத்தி அவற்றைத் தயாரிக்கின்றனர். ஆனால் பொருளாதாரப் பிரச்சினைகளில் சாதி அடிப்படையிலான பாரபட்சம் உள்ளார்ந்து இருப்பதை அரச உத்தியோகத்தர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை (டி சொய்சா 2014:17). இங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இரு பிரிவுகளில் அரச உத்தியோகத்தர்கள் வேண்டுமென்றே விளிம்பு நிலைச் சாதியினருக்கு பாரபட்சம் காட்டுகின்றனர் எனக் கூற முடியாது. அவர்கள் சாதியடிப்படையிலான பாரபட்சம் காட்டுதல் நடைமுறையில் உள்ளதைக் ‘கண்டும் காணதவர்களாக‘ நடந்து கொள்கின்றனர். இது இருந்து வரும் நிலையைத் தொடர்ந்தும் பேணுவதை (MAINTAIN STATUS QUO), அதாவது சாதியடிப்படையிலான பாரபட்சம் காட்டுதல் தொடர்வதை, ஏற்றுக் கொள்வதற்கு சிறந்த உதாரணமாகும்.

### அரசியல் உள்ளீர்த்தலும் விலக்கலும் ஜனநாயகத்தை மட்டுப்படுத்தலும்

இப்பகுதியில் அரசியல் உள்ளீர்த்தல் (POLITICAL INCLUSION) அரசியல் விலக்கல் (POLITICAL EXCLUSION) என்பனவற்றிற்கும் ஜனநாயகத்தை மட்டுப்படுத்துவதற்கும் உள்ள தொடர்பு ஆராயப்படவுள்ளது.

இங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவின் பல்பிட்டிகொட, குரான தெற்கு ஆகிய இரு கிராமங்களிலும் மைய நீரோட்ட அரசியல் கட்சிகள் யாவும் தமது கிளைகளை கொண்டிருக்கின்றன. இக் கிராமங்களில் இடது சாரிக் கட்சிகளின் கிளைகள் செயற்பாட்டில் இல்லை என்பது கவனத்திற்குரியது. இக்கிராமங்களின் கொவிகம, பத்கம ஆகிய இரு சாதியினருக்கும் வாக்குரிமை உள்ளது. தேர்தல்களில் வேட்பாளர்களாகப் போட்டியிடுவதற்கும் இரு சாதியாட்களுக்கும் உரிமை உள்ளது. அதற்குச் சட்ட ரீதியான தடைகள் இல்லை. முதல் தோற்றத்தில் அரசியல் களத்தில் ஜனநாயகத்தின் இருப்பு உறுதியாகிறது. ஆனால் நுண்நிலையில் ஆராய்ந்து பார்க்கும் போது, இக்கிராமங்களில் மட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயகம் நடைமுறையில் இருப்பதைக் காணலாம்.

மைய நீரோட்ட அரசியல் கட்சிகளின் அரசியல் அமைப்புகள் இக்கிராமங்களில் உள்ளன. இவ்வமைப்புகள் அ) பத்கம சாதிக்கான அமைப்புகள் ஆ) கொவிகம சாதிக்கும் ஏனைய இடைத்தரச் சாதிகளுக்குமான அமைப்புகள் என தனித் தனியாகச் செயற்படுகின்றன. ஒரு கட்சி பத்கம சாதியினருக்குப் பங்கேற்புச் செய்வதை அனுமதிக்கும் போது அது ஒரு ஜனநாயக நடவடிக்கையாக அமைகிறது. அத்தோடு அவ்வாறு அனுமதித்தல் அரசியல் உள்ளீர்த்தல் (POLITICAL INCLUSION) ஆகவும் அமைகிறது. ஆயினும் பிரச்சினைக்குரிய விடயம் யாதெனில் அக்கட்சி கொவிகம சாதியினருக்கு மட்டுமே பங்கேற்பை வழங்கும் இன்னொரு அமைப்பை அதே கிராமத்தில் அமைப்பதாகும். இவ்வாறு செய்வதன் மூலம் உள்ளீர்த்தல், விலக்கல் என்ற இரண்டையும் குறித்த கட்சி நடைமுறைப்படுத்துகிறது. கொவிகம சாதி அமைப்பில் பத்கம சாதி நபர் ஒருவர் பங்கேற்க முடியாது. ஆகையால் உள்ளீர்த்தல் தத்துவத்தை விட விலக்குதல் தத்துவம் மேலாதிக்கமுடையதாக அமைந்து விடுகிறது.

பல்பிட்டிகொட, குரான தெற்கு ஆகிய இரு கிராமங்களிலும் இன்று வரை பிரதேச சபை உறுப்பினராக பத்கம சாதி நபர்கள் எவரும் தெரிவு செய்யப்படவில்லை. பத்கம சாதி நபர்களுக்கு தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை மட்டும் உள்ளது. ஆனால் அவர்கள் எவருக்கும் தேர்தலில் வேட்பாளராக நின்று பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்படும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. ஆகையால் இக்கிராமங்களில் ஜனநாயகம் ஒரு விசேட வடிவத்தில் செயற்படுவதைக் காணலாம். ஒரே சமயத்தில் உள்ளீர்த்தல், விலக்குதல் என்ற இரண்டையும் செயற்படுத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயகம் என இதனை வரையறை செய்யலாம். அரசியல் களத்தில் மறைமுகமான விலக்கல் (INDIRECT EXCLUSION) இக் கிராமங்களில் நடைபெறுவதைக் காணலாம்.

### ஜனநாயகமும் சமூகவிலக்கலும்

பல்பிட்டிகொட, குரான தெற்கு ஆகிய இரு கிராமங்களிலும் சமூக விலக்கல் இரு வகைகளில் இடம் பெறுவதைக் காணலாம்.

இக்கிராமங்களின் தாழ்நிலைச் சாதிகள் தாமாகவே சமூக விலக்கலை செய்து கொள்ளுதல் ஒரு வகையாகும். விளையாட்டுப் போட்டிகள், சமய நிகழ்ச்சிகள், போன்ற சமூக நிகழ்வுகளை உயர் சாதியினர் ஒழுங்கு செய்யும் போது, தாழ் நிலையில் உள்ளவர்களான சாதியினர் அந்நிகழ்வுகளில் பங்கு கொள்ளாமல் தாமாகவே விலகிக் கொள்கின்றனர். இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் போது ஏற்படக்கூடிய அவமானம், அசௌகரியம் என்பனவற்றைத் தவிர்ப்பதற்காக அவர்கள் இவ்வாறு ஒதுங்கி விலகிக் கொள்கின்றனர். இதனைச் சுய விலக்கல் (SELF EXCLUSION) எனலாம். ஆயினும் இச்சுய விலக்கலுக்குப் பின்னால் சமூக அதிகாரமும், வன்முறையும் மறைமுகமாக நின்று செயற்படுகிறது. சமூகக் கட்டமைப்புக்களிலும் நடைமுறைகளிலும் இவ் வன்முறை மறைந்துள்ளது.

> அரசியல் அரங்கில், சாதி பேரம் பேசலுக்கான சாதனமாக ஓரளவிற்குப் பயன்படுகிறது. ஆயினும் சாதி சமூக அரங்கில் பேரம் பேசும் சாதனமாக இயங்கும் வலுவற்றதாக உள்ளது. இதன் பொருள் யாதெனில் அரசியல் ஜனநாயகத்திற்கும் சமூக நிலைப்பட்ட ஜனநாயகத்திற்கும் நேரடித் தொடர்பு கிடையாது. ஜனநாயகத்தின் இவ்விரு பரிமாணங்களின் உள்ளக இயங்கியல் வெவ்வேறானவை.

இக்கிராமங்களின் பாடசாலைகளில் ஒரே சாதியைச் சேர்ந்த மாணவர்களே கல்வி கற்பதைக் காணலாம். உதாரணமாக ஒரு பாடசாலை பத்கம சாதியினரின் பாடசாலையாக இருக்கும். இன்னொரு பாடசாலை கொவிகம உயர் சாதியினரின் பாடசாலையாக இருக்கும். பத்கம சாதியினர் பாடசாலையில் கொவிகம சாதிப் பிள்ளைகள் சேர்ந்து கொள்ள மாட்டார்கள். தமது வாழ்விடத்துக்கு அருகில் உள்ள பத்கம பாடசாலையில் சேர்ந்து படிப்பதைத் தவிர்த்து தூரத்தே உள்ள கொவிகம பாடசாலைக்குச் சென்று படிப்பார்கள். பிரயாணச் செலவு, சிரமம், நேர விரயம் ஆகியனவற்றைப் பொருட்படுத்தாது தூர இடங்களுக்கு கல்விக்காகச் செல்வார்கள். மிகவும்

வறியவர்களான கொவிகம சாதியினரின் பிள்ளைகள் சிலர் மட்டும், வேறு மாற்று வழி இல்லாமையால் பத்கம பாடசாலைக்கே சென்று கல்வி கற்பதுண்டு. உயர் சாதியினர் தமது பிள்ளைகளை பத்கம சாதிப் பாடசாலையில் சேர்ப்பதைத் தவிர்ப்பதன் காரணம் தெளிவானது. தாழ் நிலையில் உள்ள சாதியொன்றின் பிள்ளைகளுடன் தமது பிள்ளைகள் பழகுவது, சமூக ரீதியிலும் பண்பாட்டு ரீதியிலும் தாழ்வானது என கொவிகம சாதியினர் கருதுகின்றனர். இந்நடத்தை மறைமுகமான சமூக விலக்கலுக்கு (HIDDEN EXCLUSION) காரணமாகிறது.

## மனித கௌரவமும் பண்பாட்டு உரிமைகளும், பண்பாட்டு விலக்கலும்

இலங்கையில் பண்பாட்டு விலக்கல் (CULTURAL EXCLUSION) என்னும் பொருள் குறித்து சமூக மானிடவியலாளர்களும், சமூகவியலாளர்களும் போதிய கவனம் செலுத்தவில்லை. குருணாகல மாவட்டத்தின் 'கொகம்பகண்ட' கிராமத்தில் கள ஆய்வு செய்த ஜயதேவ உயன்கொட அக்கிராமத்தின் கின்னர சாதியினர் பண்பாட்டு விலக்கலுக்கு உள்ளாவதைப் பற்றிய சில விபரங்களைத் தந்துள்ளார். இக்கிராமத்தின் கின்னர மக்கள் சமயத் தேவைகளை பெற முடியாது விலக்கலுக்கு உள்ளாகின்றனர். இவர்களின் சமயம் பௌத்தம் ஆகும். பௌத்தம் சமத்துவத்தைப் போதிக்கும் சமயம், கின்னரர்களின் வீடுகளில் மரணம் நிகழும் போது, பௌத்த சமயச் சடங்குகளைச் செய்வதற்கு புத்த குருமார் முன் வருவதில்லை. இதனால் இவர்கள் தூர இடங்களில் உள்ள குருமாரையோ அல்லது புத்த துறவிகள் அல்லாத சாதாரண மக்களையோ சடங்குகளை நடத்தி வைப்பதற்காக அழைத்து வர வேண்டியுள்ளது. கிராமத்தில் உள்ள புத்த கோவிலில் உள்ள புத்த குருவின் சேவையை கின்னர மக்களால் பெற முடியவில்லை. கொகம்பகண்ட கிராமத்தின் கின்னர சாதியினர் சமைத்த உணவைத் தானமாகக் கொடுத்தால் அதை புத்த குருமார்கள் ஏற்பதில்லை (உயன் கொட 2013:286-287).

உடுநுவர பிரதேச செயலாளர் பிரிவின் குரகல என்னும் கிராமம் 'றொடியா' சாதியினர் வாழும் கிராமமாகும். இக் கிராமம் பற்றி ஆராய்ந்த ரியுடர் சில்வாவும் பிறரும் குரகல கிராமத்தவர்களின் மரணச் சடங்குகளில் அயலில் உள்ள புத்த கோவில்களின் குருமார் பங்குபற்றி சடங்குகளைச் செய்வதற்கு முன் வருவதில்லை; அம்மக்கள் தூர இடங்களில் இருந்து குருமாரை அழைத்து வருவதுண்டு என்று குறிப்பிட்டுள்ளனர் (சில்வாவும் பிறரும் 2009a:47). றொடியா சமூகத்தினரின் பிள்ளைகளை சமய வகுப்புக்களில் சேர்த்துக் கொள்வதில்லை. இப்பகுதியின் 'தகம்பாசல்கள்' (சமயப் பாடசாலைகள்) றொடியா சமூகப் பிள்ளைகளை சேர்க்காமல் விடுவதற்குப் பல சாக்குப் போக்குகளைச் சொல்லி மறுத்து வருகின்றன.

கொகம்ப கண்ட கிராமத்தின் இளைஞர்கள் சிலர் ஒரு தடவை கிராமத்தின் தலைமைப் பிக்குவை அணுகி ஒரு வேண்டுகோளை முன் வைத்தனர். "கின்னர சாதியினராகிய நாம் தானம் கொடுக்க முன் வரும் போது அதனை ஏற்க வேண்டும்; எமது சாதியினரின் சமைத்த உணவை நீங்கள் தானமாக ஏற்க வேண்டும்" என்பதே அவர்கள் முன் வைத்த கோரிக்கை. 'தாயக்க சபை' (வழிபாட்டாளர்களின் சபை) என்னும் குழுவினர் சம்மதம் தெரிவித்தால் தாம் தானத்தை ஏற்பதற்குக் தயார் எனப் பிரதமகுரு கூறினார்.

பின்னர் தாயக்க சபையின் உயர்சாதி உறுப்பினர்கள் இதற்குச் சம்மதம் தெரிவிக்கவில்லை. வழமையான நடைமுறையின்படி தாழ் நிலையினரான கின்னரர்களிடமிருந்து சமைத்த உணவைத் தானமாகப் பெற முடியாது. அது விலக்கப்பட வேண்டியது எனத் தாயக்க சபை முடிவு செய்தது. குடிமக்களின் ஒரு பகுதியினரின் பண்பாட்டு உரிமைகள் மறுக்கப்படுவதற்கு இது உதாரணமாகும் என உயன் கொட குறிப்பிடுகிறார். சமய நிகழ்வுகளில் பண்பாட்டு நடவடிக்கைகளில் சம உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன.

## முடிவுரை

இலங்கையில் ஜனநாயகமாக்கல் செயல்முறை ஆரம்பிக்கப்பட் காலம் தொடக்கம் தேர்தல் அரசியலில் அடிநிலைச் சாதியினர் ஜனநாயகத்தின் நன்மைகளைப் பெறவில்லை. சமூகநல அரசும் (WELFARE STATE) சமூக நல வசதிகளை இச்சமூகங்களிற்கு முழுமையாக வழங்கவில்லை. இதன் விளைவாக சமமாக நடத்தப்படுவதற்கான உரிமை

**கருத்தியல் மட்டத்தில் சமூக விலக்கல் நடைமுறையில் உள்ளது. சமூகக் கட்டமைப்புகளில் கருத்தியல் ஊடுருவியிருப்பதால் சமூக விலக்கல் அக் கட்டமைப்புகள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. சமூக விலக்கல் காரணமாக சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ளவர்களுக்கு ஜனநாயக உரிமைகள் முழுமையாகக் கிடைப்பதில்லை.**

(RIGHT TO EQUALITY) இம் மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. முதலாளித்துவ நவீனத்துவம் சாதியை ஒழித்து அதனிடத்தில் வர்க்க உறவுகளை உருவாக்கவில்லை. இலங்கையின் சமூக அடுக்கமைவில் (SOCIAL STRATIFICATION) சாதி, வர்க்கம் என்ற இரண்டும் பிணைப்புற்றதாக அமைந்துள்ளன. நவீனமயமாதல் செயல்முறையின் பயனாக சாதி முறையின் சில கூறுகள் மாறியுள்ளன. இம்மாற்றங்கள் பொருண்மிய நிலையில் ஏற்பட்ட மாறுதல்கள் மட்டுமேயாகும். சாதியின் கருத்தியல் கூறுகள் மாறாது நிலை பெற்றுள்ளன.

ஆரம்ப காலம் முதலே சமூகஅரசியல் வாழ்முறையிலும் நடைமுறையிலும் முரண்பாடுகள் நிறைந்துள்ள நிலை காணப்பட்டது. பொது வெளியில் சாதியின் சமத்துவமின்மை தொடருகிறது. அதே சமயம் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட ஜனநாயகமும் செயற்படலாயிற்று. காலனிய கால கட்டத்தில் கராவ, சலாகம, துராவ என்னும் மூன்று சாதிகள் பொருளாதார வாய்ப்புக்களைப் பயன்படுத்தி சொத்துக்களையும் செல்வத்தையும் தேடிக் கொண்டன. இதனால் இச்சாதியினரின் பெற்றோர் தம் பிள்ளைகளுக்குத் தரமான கல்வியை வழங்கினர். தரமான கல்வி மூலம் மருத்துவம், சட்டம் போன்ற உயர் தொழில் துறைகளில் உயர் பதவிகளைப் பெற்று கராவ, சலாகம, துராவ சாதிகள் சமூகப் படிநிலையில் தம்மை உயர்த்திக் கொண்டன. காலப் போக்கில் தேர்தல் முறை அறிமுகம் செய்யப்பட்ட போது இச்சாதிகள் தமக்குப் பிரதிநிதித்துவம் வழங்கக் கூடிய முறையில் தேர்தல் தொகுதிகளை எல்லை வகுக்குமாறு கோரிக்கைகளை முன் வைத்தனர். இக்கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன. இச்சாதியினருக்கு சட்ட மன்றங்களில் பிரதிநிதித்துவம் கிடைத்தது. தேர்தல் அரசியல் சாதி அடையாளம், சாதி அடிப்படையிலான அணி திரட்டல் என்பனவற்றை தூண்டி வளர்த்தது. விகிதாசார முறைத் தேர்தல் அறிமுகம் செய்யப்பட்ட பின், சிறுபான்மைச் சாதிகளும் அரசியல் பிரதிநிதித்துவத்தை பெறும் வாய்ப்பு கிடைத்தது. சிறுபான்மைச் சாதிகளின் பேரம் பேசும் பலம் (BARGAINING POWER) அதிகரித்தது. அரசியல் களத்தில் பேரம் பேசும் பலம் அதிகரித்த போதும் சமூக அரங்கில் (SOCIAL ARENA) பேரம் பேசும் பலம் அதிகரிக்கவில்லை.

கருத்தியல் மட்டத்தில் சமூக விலக்கல் நடைமுறையில் உள்ளது. சமூகக் கட்டமைப்புகளில் கருத்தியல் ஊடுருவியிருப்பதால் சமூக விலக்கல் அக் கட்டமைப்புகள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. சமூக விலக்கல் காரணமாக சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ளவர்களுக்கு ஜனநாயக உரிமைகள் முழுமையாகக் கிடைப்பதில்லை. விளிம்பு நிலையில் உள்ளோர் உயர் சாதியினர் அனுபவிக்கும் உரிமைகளை அனுபவிப்பதில்லை. உயர் சாதியினர் பெறும் சலுகைகளைப் பெறுவதில்லை. இக்காரணத்தால் இலங்கையில் நடைமுறையில் உள்ள ஜனநாயகத்தை, சமூக நிலையில் மட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயகம் (SOCIALLY RESTRICTED DEMOCRACY) என்றே கருதலாம்.

சமூக நிலையில் ஜனநாயகம் (SOCIAL DEMOCRACY) இல்லாத காரணத்தால் சிறுபான்மைச் சாதியினர் மனித கௌரவத்தைப் பெறமுடியாதவர்களாய் உள்ளனர். இதனால் பாதிக்கப்படும் குடி மக்கள் விடுதலையைப் பெறுவதற்குப் பல தடைகள் உள்ளன. சில சந்தர்ப்பங்களில் அரச உத்தியோகத்தர்கள் சமூக விலக்கலுக்கு நேரடியான காரணமாக செயற்படுகின்றனர். வேறு சில சந்தர்ப்பங்களில் அரச உத்தியோகத்தர்கள் சமூக விலக்கலுக்கு மறைமுகமாகப் பங்களிப்பு செய்கின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவ்வுத்தியோகத்தர்கள் வேண்டுமென்றே பாரபட்சமான செயல்களைச் செய்வதில்லை. அவர்களுடைய செயல்கள் இருந்து வரும் நடைமுறைகளையும், நியமங்களையும் மீள் உருவாக்கம் செய்வதற்கு உதவுகின்றன. சாதி உறவுகளில் பாதிப்புக்கு உள்ளாதல் பின்வரும் வழிகளில் நடைபெறுகின்றது.

- **பாரபட்சம் காட்டப்படுதல் (DISCRIMINATION)**
- **விளிம்பு நிலைக்குத் தள்ளுதல் (MARGINALISATION)**
- **தனிமைப்படுத்தி பிரித்து வைத்தல் (SEGREGATION)**
- **மூலதன வளங்களை மறுத்தல் (DEPRIVATION OF CAPITAL)**

மேற்கூறியவை சமூக விலக்கலின் கருவிகளாக செயற்படுவதையும் காணலாம்.

சாதிப் படிநிலை அமைப்பு இருக்கும் போது சமூக விலக்கல் தவிர்க்க முடியாதது. மறைமுகமான சமூக விலக்கல்கள் சமூக சமத்துவமின்மையைக் கட்டமைக்கின்றன. சுய விலக்கல் (SELF EXCLUSION) சிறுபான்மைச் சாதியினரால் சுயமாகவே செய்து கொள்ளப்படுவது; அவமதிப்பு, அசௌகரியம் என்பனவற்றையும் தவிர்ப்பதற்காக அவர்கள் சுய விலக்கலில் ஈடுபடுகின்றனர்.

மறைமுகமான சமூக விலக்கல் (HIDDEN SOCIAL EXCLUSION) உயர்சாதியினரால், அடிநிலைச் சாதிகளோடு தொடர்புகளை விலக்குவதற்கு கையாளும் நடைமுறையாகும். சாதியடிப்படையிலான பாரபட்சம் காட்டுதலுக்கு சட்டப் பாதுகாப்பைப் பெறுவதும், சட்ட நிவாரணத்தைப் பெறுவதும் சாத்தியமானதாக இல்லை. சட்டமுறைமை, சட்ட அமுலாக்கம் என்பன பலவீனமானவை. சட்டத்திற்கும், யதார்த்தத்தில் அதனை செயற்படுத்துவதற்கும் இடையே இடைவெளி உள்ளது. பண்பாட்டுத் தளத்தில் இடம்பெறும் பண்பாட்டு விலக்கல் சமூக விலக்கல் ஆகும். இது மனித கௌரவத்தைப் பாதிக்கின்றது.

இக்கட்டுரையில் இடம்பெறும் முக்கிய கலைச் சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- CULTURAL EXCLUSION - பண்பாட்டு விலக்கல்
- DISCRIMINATION - பாரபட்சம் காட்டுதல்
- EQUAL OPPORTUNITY LAWS - சமவாய்ப்புச் சட்டங்கள்
- HIDDEN EXCLUSION - மறைமுக விலக்கல்
- INDIRECT EXCLUSION - மறைமுக விலக்கல்
- MARGINALISATION - விளிம்பு நிலையாக்கல்
- MARGINS - விளிம்பு நிலை, எல்லை நிலை
- POLITICAL EXCLUSION - அரசியல் விலக்கல்
- POLITICAL INCLUSION - அரசியல் உள்ளீர்த்தல்
- REPRESENTATION - பிரதிநிதித்துவம்
- RESTRICTED DEMOCRACY - மட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயகம்
- SELF EXCLUSION - சுய விலக்கல்
- SOCIAL EXCLUSION - சமூக விலக்கல்

பிரசன்ன டி சொய்சா எழுதிய 'DEMOCRACY IN THE SOCIAL MARGINS; CASTE, SOCIAL EXCLUSION AND THE LIMITS OF DEMOCRATIC CITIZENSHIP IN SRI LANKA' என்னும் ஆய்வு கட்டுரையைத் தழுவியும், சுருக்கியும் இத் தமிழ் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் 'JAYADEVA UYANGODA' அவர்களால் பதிப்பிக்கப்பட்ட 'DEMOCRACY AND DEMOCRATISATION IN SRI LANKA : PATHS, TRENDS AND IMAGINATIONS (VOL I ,CHAPTER 12, PAGES 487-523)' என்ற நூலில் இருந்து பெறப்பட்டது.

(தொடரும்)

பின்காலனியச் சூழலில் ஈழத்துப்புலம் தனக்கான தனித்த அடையாளங்களை, அவற்றைப் பேணுதலுக்கான அக்கறையை கொண்டமைந்ததாக இல்லை. பொருளாதாரம், சமயம், பண்பாடு என எல்லாத் தளங்களிலும் 'மேனிலையாக்கம்' எனும் கருத்தாக்கத்தை நோக்கிய பயணத்தையே மேற்கொண்டு வருகின்றது. இத்தகைய பின்னணியில் தன்னடையாளப் பேணுகை குறித்த பிரக்ஞையை ஏற்படுத்துதலின் ஒரு பகுதியாகவே 'ஈழத்து நாட்டார் தெய்வங்கள்' எனும் இக்கட்டுரைத் தொடர் அமையப்பெறுகிறது. இதில் ஈழத்தில் மட்டும் சிறப்புற்றிருக்கும் தெய்வங்கள், ஈழத்தில் தனக்கான தனித்துவத்தைப் பெற்றிருக்கும் தெய்வங்கள் என்பன கவனத்தில் கொள்ளப்படுகின்றன. இத்தொடரானது தெய்வங்களை அடையாளப்படுத்துவதோடு அவற்றின் வரலாறு, சமூகப் பெறுமானம், சடங்கு, சம்பிரதாயங்கள், தனித்துவம், இன்றைய நிலை, சமூகத்துக்கும் அதற்குமான இடைவினைகள் முதலான பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக அமைகிறது. கள ஆய்வின் வழி நிகழ்த்தப்படும் இவ்வாய்வு விவரணம், வரலாறு எனும் ஆய்வு முறைகளின்படி எழுதப்படுகிறது. இவ்வாய்வுக்கான தரவுகள் நூல்களின் வழியும் நேர்காணல், உரையாடல், செய்திகள் என்பவற்றின் வழியும் பெறப்பட்டு சமூக விஞ்ஞானப் பார்வையினூடாக ஆக்கப்படுகின்றது.




தி. செல்வமனோகரன்

யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தின் சைவசித்தாந்த துறையின் முதுநிலை விரிவுரையாளராக தி. செல்வமனோகரன் திகழ்கிறார் . இந்திய மெய்யியல் கற்கை புலத்தில் கலாநிதிப் பட்டத்தை பெற்றுள்ளார். இந்துக்கற்கை புலம் சார்ந்து காஷ்மீர சைவமும் சைவ சித்தாந்தமும், இலங்கையில் சைவத்தமிழ் பண்பாட்டு வளர்ச்சியில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நாயன்மார் பாடல்கள், தமிழில் மெய்யியல் எனும் நூல்களை எழுதியுள்ளார். பெறுதற்கரிதான இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை மீள்பதிப்புச் செய்துள்ளார். 'சொற்களால் அமையுலகு' என்னும் இவரது நூல் கலை, இலக்கியம் சார்ந்த விமர்சன நூலாகும்.


# பறையிசைக்கும் மக்களின் குலதெய்வம் வல்லியக்கன்

கருவிக்கையாட்சி, மொழிப்பயன்பாடு என்பவற்றின் வழி மனிதனின் பகுத்தறிவுச் சிந்தனை தொழிற்படத் தொடங்கியது. அப்போதே இயற்கையின் அதீத ஆற்றல் மனிதனுக்கு அதன் மீது பயத்தையும், பக்தியையும் உருவாக்கியது. தன்னை மீறிய மேம்பட்ட சக்தி உண்டு என்ற பிரக்ஞையும் நம்பிக்கையும் மேலோங்கத் தொடங்கின. இயற்கை மீதான பயபக்தி இயற்கை வழிபாடாகவும் பின் இயற்கைத் தெய்வ வழிபாடாகவும் பரிணாமமுற்றது. நிலத்தெய்வங்கள், குலதெய்வங்கள், அச்சத்தால் உருவாக்கப்பட்ட பல தெய்வங்கள் எனப் பல்வகைத் தெய்வங்கள் உருவாக்கம் பெற்றன. காலதேச வர்த்தமானத்திற்கேற்ப தெய்வங்களின் முதன்மையும் மாறத்தொடங்கியது.

அவ்வாறு மாறாத, மக்களின் அன்றாட வாழ்வோடு பின்னிப்பிணைந்த மரபார்ந்த தெய்வங்கள், நாட்டார்தெய்வங்கள், கிராமியத் தெய்வங்கள் எனப்பட்டன.

காலனித்துவத்தின் வழி ஈழத்துப்புலத்தில் உருவான நவீனத்துவம், ஆங்கிலமயப்பட்ட, மேலைத்தேய கருத்தாக்கங்களையும், வாழ்வியலையும், கலாசார பண்பாடுகளையும் வியப்புடன் நோக்கி அவையே மேலானவை எனும் மனப்பதிவைத் தந்தன. அரச உத்தியோகம், மத்தியதர வர்க்கத்தைப் பெருகச் செய்தது. சுதேச கலை, கலாசாரம்,



பண்பாடு, பொருளாதாரம், தத்துவம், சமய மரபுகள் போன்றவற்றை கீழ்மையானவையாக எண்ணவும் புறமொதுக்கவும் செய்தன. பின்காலனிய உலகமயமாதல் சூழல், ஒற்றைப் பண்பாட்டை அவாவி நிற்கிறது. இது சிறுசிறு இனக்குழுக்களினது தனித்த அடையாளங்கள் சிதைவதற்கும், வரலாற்றுப் போதலுக்கும் இருப்புச் சார்ந்த கேள்விகளுக்கும் உட்படுத்தலை அவதானிக்கச் செய்தன. இதன் வழி 'மாற்றுச்சிந்தனை' முதன்மையுறத் தொடங்கியது. பண்பாட்டுப் பன்மைத்துவத்தின் முக்கியத்துவம், சுதேச அறிவியல், சமயம், தத்துவம், கலாசார மரபுகளின் வழி வரலாறு பற்றிய பிரக்ஞை என்பன மீளக் கட்டமைக்கப்படத் தொடங்கின.

மனிதனுக்கு உள்ளார்ந்த சிந்தனை (abstract thinking) தோன்றிய காலத்திலிருந்து இயற்கை சார் உணர்வு ஏற்பட்டது. அதன்வழி இயற்கை, வழிபாட்டுப் பொருளானது. இயற்கைப் பொருட்கள் அனைத்தும் கடவுளர் ஆயின. இவ்வியற்கையின் சக்தியே இயக்கன்; இதனை சமூக மானிடவியலாளர்கள் 'அனிமிசன்' என்கின்றார்கள். இயற்கையின் கடவுளர் தன்மை இயக்கன் - இயக்கியாயின், இயக்கனும் இயக்கியும் கொடூரமும், அழகும், அன்பும் நிறைந்தவையாக எடுத்தாளப்படுகின்றன. இந்தியாவின் பிரதான சமயங்களான இந்து சமயம், பௌத்தம், சமணம் போன்றன இயக்கன் - இயக்கியை உள்வாங்கின. குறிப்பாக ஒரு கடவுளை முதன்மைப்படுத்தும் போது அது இயக்கர்களின் தலைவனாக - இயக்கிகளின் தலைவியாகக் காட்டப்பட்டது. சிவன் பூதநாதரானார். இலங்கையின் வரலாற்று நூல்களில் சிங்கதேசக் குடிமகனான விஜயன் இயக்கியாகிய குவேனியைத் திருமணம் செய்தமையும் தலைவனானமையும் இவ்வாறாகவே இருக்கலாம்.

தமிழர் மரபிலும் ஏனையோர் மரபிலும் இயக்கி பெற்ற இடத்தை இயக்கன் பெறவில்லை. அதேபோல இலங்கை வரலாற்றில் நாகர்கள் பெற்ற வரலாற்றுத்தடத்தை இயக்கர்கள் பெறவில்லை. விஜயனால் குவேனி கைவிடப்பட்ட பின் அவர்களின் குழந்தைகள் வளர்ந்து தகாப்புணர்ச்சி வழி குடும்பங்கள் உருவானதாகவும் அவர்களே வேடுவர்கள் எனப்படுவதாகவும் கூறப்படுகின்றது. இலங்கையின் ஆதிவேடர்களின் தெய்வம் 'யக்கு' என்பது குறிப்பிடத்தக்கது. ஈழத்தமிழர் வாழ்வில் நிலமானியமுறையும் அதன்வழி கெடித்திருந்த சாதியமும் சமூகவியல் தளத்தில் முக்கியமானவை. தொழில்ரீதியான அடுக்குமுறை பேதத்தைத் இது தந்தது; கலை, பண்பாடு, பொருளாதாரம், சமயம் என எல்லாத் தளங்களிலும் செல்வாக்குச் செலுத்தியது. இதன் வழி சாதியத் தெய்வங்களும், சாதியக் கோயில்களும் உருவாகின. பறையிசைக்கும் குடிகளின் தெய்வமே வல்லியக்கன்.

## வல்லியக்கன்

இயற்கை - இயக்க - இயக்கன் - இயக்கி வழிபாட்டின் வழி உருவான வழிபாடாக இதனை இனங்காண்பதோடு 'யக்' வழிபாட்டோடும் இணைத்து இத்தெய்வம் பற்றிய முதன்மை ஆய்வினைச் செய்த பேராசிரியர் இரகுபதி கருத்துரைக்கின்றார். இயற்கை வழிபாடு உலகப் பொதுமைக்குமானது. இயற்கை எனும் தமிழ்ச் சொல் இயற்கை வழிபாட்டைக் குறித்து, அது பின் இயக்க வழிபாடாக இயக்கன் - இயக்கி எனும் ஆண், பெண் வழிபாடாக வளர்நிலை பெற்றிருக்க வேண்டும். அதனை 'யக்' வழிபாட்டோடு இணைத்தல் அவசியமற்றது. 'வல்லியக்கன்' எனும் பெயர் பற்றி பல்வகை அனுமானங்கள் உண்டு.

1. வல்லி - இயக்கன் - வல்லி எனும் பறையிசைக்கும் மக்களின் மூதாதையால் வழிபடப்பட்ட தெய்வம், வல்லியக்கன் எனக் கூறப்பெற்றிருக்கலாம். ஏனெனில் வல்லி, வல்லியப்பன் எனும் பெயர்கள் இன்றும் பறையிசைக்கும் மக்களிடம் செல்வாக்குடன் காணப்படுகிறது. வல்லியின் வழித்தோன்றல்கள் வல்லியக்கனை வழிபடுகின்றனர்.

2. வலிமை பொருந்திய இயக்கன் என்ற நம்பிக்கையின் வழி உருவான பெயராக இருக்கலாம்.

3. வள்ளிபுனம் - வள்ளி புலம் - வல்லி புரம் வள்ளி - வல்லி எனும் அடிப்படையில் வல்லியின் தலைவன் முருகனைக் குறிப்பதாக எழுந்து பின்பு அது தனித்தெய்வமாக உருப்பெற்றிருக்கலாம். வள்ளி வேடுவர் பெண் என்பதும் இலங்கை வரலாற்றில் இயக்கர் வேடுவர்களாக சித்தரிக்கப்படுவதும் கவனிக்கத்தக்கது.

## ஈழத்தின் வல்லியக்கன் வழிபாட்டிடங்கள்

ஈழத்தில் பறையிசைக்கும் மக்கள் வாழுமிடங்கள் எங்கும் வல்லியக்கன் வழிபாடு இருந்திருக்க வேண்டும் எனக் கூறப்பட்டாலும் அதற்குப் போதிய சான்றுகள் இல்லை.

"கன்னாபுரம் நின்று அந்நாள் நடந்து
அறிதரிய ஏழாலை அதில் மீதுறைந்து
புன்னாலைக்கட்டுவன் அச்செழுகோப்பாய் புத்தூர்
நீர்வேலி வறுத்தலைவிளான் பளையிரண்டு
மன்னார் சுழிபுரம் சங்கானை தோலவரம்
மற்றுமுள்ள தேசமெல்லாங் கடந்து
சுன்னாகம் வாழவரு வல்லியக்கராசனை தொழுவார்க்கு
வல்வினைநோய் தொலைந்து போகும்"

இப்பாடலை கிறிஸ்தவப் பாதிரியார் சுவாமி ஞானப்பிரகாசர் தன் கட்டுரையில் எடுத்தாண்டுள்ளார். ஏழாலை வல்லியக்கன் கோயில் பூசாரி வல்லியக்கன் 'பத்தாசியாக' கோயில் நிகழ்வுத் துண்டுப் பிரசுரத்தில் அச்சடித்து வெளியிட்டுள்ளார். இது வாய்மொழிப் பாடலாக இருந்திருக்க வேண்டும்.

இப்பாடல் ஈழநிலத்தின் வடபுலத்தில் வல்லியக்கன் கோயில் இருந்த இடங்களைப் பட்டியற்படுத்துகின்றது. கன்னாபுரம், ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, கோப்பாய், புத்தூர், வறுத்தலைவிளான், பளை இரண்டும், மன்னார், சுழிபுரம், சங்கானை, தொல்புரம், சுன்னாகம் என்பன அவையாகும். இவற்றுள் தெல்லிப்பழையில் ஆலயமுண்டு. கிளிநொச்சி மாவட்ட பளை, விடத்தற்பளை மற்றும் இயக்கச்சி பிரதேசங்களில் வல்லியக்கனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. சங்கானை கோயில் அழிக்கப்பட்டுவிட்டது. அது போலவே தொல்புரம், சுழிபுரம், சுன்னாகம், மன்னார் கோயில்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. குடிசனப் பரவலாக்கத்தின் வழி உருவான வேலணை சின்னமடு, நவாலி, சண்டிலிப்பாய், இருபாலை, அச்செழுவின் புதியகோயில் போன்றன கள ஆய்வினூடாகப் புதிதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

வல்லியக்கன் கோயில்கள் தனிக்காணிகளிலும் வீட்டு வளவுகளினுள்ளும் அமைந்துள்ளமை இது ஒரு குலதெய்வ வழிபாடு என்பதை உறுதிப்படுத்துகின்றது. கோயிலாக இல்லாமல் ஆலமரம், நாவல்மரம், மஞ்சவுண்ணா, பூவரசு போன்ற மரங்களின் கீழ் வல்லியக்கன் அமர்ந்திருந்தார். கல் - மயோசியன் கல் (வெள்ளைக்கல்) சூலம் போன்ற பருப்பொருட்களின் ரூபத்தில் அவர் வழிபடப்பட்டார். மரங்களின் கீழ் திறந்த வெளியிலும் சீமெந்துக் கட்டடங்களிலும் இக்கோயில்கள் அமைந்துள்ளன. இத்தெய்வத்தின் இணைத்தெய்வமாக முடி மன்னர் (கோண்டாவில், அச்செழு, ஏழாலை) காணப்படுகிறார். இதனை விட தற்காலத்தில் இணைத்தெய்வங்களாக காளி (நவாலி), விறுமர், ஐயனார் (கரவெட்டி) என்பன காணப்படுகின்றன.

## வழிபாட்டு முறைகள்

வல்லியக்கனை வழிபடும் முறைகள் பிரதேச வழக்காறுகளுக்கேற்ப சிற்சில மாறுபாடுகளுடன் காணப்படுகின்றன. சில இடங்களில் நித்தம் 'விளக்கு வைக்கும்' வழக்கம் உண்டு. ஆனால் பல ஆலயங்களில் வெள்ளிக்கிழமை, விஷேட நாட்கள் போன்ற குறித்த நாட்களில் மட்டும் இவ்வழக்கம் காணப்படுகின்றது. எல்லாக் கோயில்களிலும் 'வைகாசி விசாகம்'



வாய்கட்டிப் பூசை செய்யும் முறை - கதிர்காமம்

Image Source - roar.media



வல்லிபுரத்தாழ்வார் கோவில்

Image Source - silverwingslanka.wordpress.com

மிகச்சிறப்பாகப் பொங்கல் வைத்துப் பூசித்து வழிபடப்படும் நாளாகக் காணப்படுகிறது. நாட்டார் தெய்வங்களுக்குப் பொதுவில் வைகாசி விசாகதினம் குளித்தியாக, பொங்கல் நாளாக, மடை நாளாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதன்னின்றும் மாறுபட்டு ஏழாலை வல்லியக்கனுக்கு சித்திரை மாத நான்காவது புதன்கிழமை விஷேடநாளாகக் கருதப்பட்டு மடைப்பண்டம் எடுக்கப்பட்டு பொங்கி வழிபடப்படுகின்றது. கரவெட்டி கோயிலில் பங்குனி கடைசிப்புதன் விஷேடநாளாகும். மடைப்பண்டம் எடுக்கும் மரபு எல்லா இடங்களிலும் காணப்படுகிறது. மடைப்பண்டம் எடுக்கும் முதல்நாள் ஆலயச்சூழல் தூய்மைப்படுத்தப்படும். 'விளக்கு வைத்தல்' நிகழும். விளக்கு வைப்பவர், பூசை செய்பவர் பறையிசைக்கும் மக்களில் ஒருவராக இருப்பார். இந்நிகழ்வின் பூசாரியாக அவர் திகழ்வார். ஆனைக்கோட்டை போன்ற சில கோயில்களில் வாய்கட்டிப் பூசை செய்யும் முறைமையும் உண்டு. இது கப்புறாளை (கதிர்காமம்), கப்பூகர் (மண்டூர்க்திர்காமம், செல்வச்சந்நிதி) எனும் வாய்கட்டி பூசை செய்யும் முறையின் செல்வாக்கால் வந்திருக்கக் கூடும்.

பொங்கலுக்கு உரிய பண்டங்கள், பாத்திரங்கள் இணைத் தெய்வங்களின் ஆலயங்களில் வைத்துப் பூசை செய்யப்பட்டு புனிதப்படுத்தப்பட்டு வல்லியக்கன் கோயிலுக்கு எடுத்துச் செல்லப்படும். மடைப்பண்டம் கொண்டுசெல்லப்படும் போது மடைப்பறை இசைக்கப்படும். ஆலயங்களின் நிகழ்வுகளுக்கு இசைக்கவெனத் தனிப்பறையும் தனியான 'இசைப்பு' முறையும் கலைஞர்களும் இருந்ததாக அறியமுடிகிறது. இது மங்கல இசையாக, பறை சாற்றுதலாகக் கூறப்படுகிறது. பலியிடும் வழக்கம் இருக்கவில்லை என எல்லா ஆலயக்காரர்களும் உறுதிபட உரைக்கின்றனர். கரவெட்டி கோயிலில் மட்டும் ஆலயத்துக்கு அப்பால் உள்ள சந்தியில் வைத்து மடைப்பண்டம் எடுப்பதாகவும் மடைப்பண்டம் எடுக்கும் போது 'கோழியறுத்தல்' எனும் பலி நிகழ்த்தப்படுவதாகவும் நேர்காணல் (சி. அருணகிரிநாதன், வயது 61) மூலம் அறிய முடிந்தது. வல்லியக்கனை வழிபடுதலினூடாக சந்ததி பெருக்கம், நோய் நொடியில் இருந்து விடுபடுதல் போன்ற நம்பிக்கைகள் காணப்படுகின்றன. தமது நேர்த்தி நிறைவுறும் போது நேர்த்திக்கடன் செலுத்தும் முறை காணப்படுகிறது. இது 'தெய்வக்கடன்' என்றே கூறப்படுகிறது. பொங்குதல், மடைபரவுதல் போன்றன அவற்றுட்சில. மட்சம், மாமிசம் படைப்பதில்லை. தற்போது காவடியெடுத்தல் போன்றனவும் நிகழ்த்தப்படுகின்றன. இவ்வாலய விஷேடதினங்களில் கலையாடி, குறிசொல்லல், திருநீறு போடுதல் போன்றனவும் நிகழ்த்தப்படுகின்றன.

## சமகாலப் பயில்வுகள்

சாதிய ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகி மிகவும் நசுக்கப்பட்ட நிலையில் தமது பொருளாதாரத்துக்கு மூலமாக இருந்த பறையை 1950 - 1970 இடையில் நடைபெற்ற முக்கிய நிகழ்வின் வழி உடைத்தும் எரித்தும் 'இனி பறை இசைப்பதில்லை' எனச் சபதம் செய்து ஈழத்தின் வடக்குப் பிரதேசத்தில் பல பிராந்தியங்களில் பறையிசைக்கும் தொழில் கைவிடப்பட்டது. பெருந்தெய்வவுருவாக்கம் - பெருங்கோயிற் பண்பாடு, சமஸ்கிருதமயமாக்கம் எனும் பிராமணர்க்குக் தம் கோயிலைக் கையளிக்கும் செயற்பாட்டின் வழி ஆலயங்களில் பறை வாத்தியம் வெளியேற்றப்பட்டு தவில் மங்கல வாத்தியமாக்கப்பட்டது. கிழக்கிலும் மலையகத்திலும் இன்றும் ஆலயங்களில் பறை ஓரளவேனும் இசைக்கப்படுகிறது. வடக்கில் செல்வச்சந்நிதி போன்ற ஒருசில ஆலயங்களில் பறையிசைக்கும் மக்களின் குலமல்லாத இறையடியவர் பறை 'அறை'கிறார்.

இவ்வாறான செயற்பாடுகளும் இலங்கையின் யாவருக்குமான இலவசக்கல்வி, இலவச உணவு, இலவச உடை, இலவச வைத்தியசாலை போன்ற செயற்றிட்டங்களும் எல்லாச்

சமூகங்களையும் வலுப்படுத்தியது. அரசாங்க உத்தியோகத்தர்களை, நிலையான மாதச்சம்பளம், ஓய்வூதியம் பெறுகின்றவர்களை உருவாக்கியது. இவ்வாறு உருவான புதிய வர்க்கம் , உயர்சாதியல்லாத மக்களிடம் 'சாதிய நீக்கம்' - உறவு நீக்கம், அடையாள நீக்கம் எனும் உணர்வுகளை செயல்நிலைப்படுத்தத் தூண்டியது. இதற்கு பறையிசைக்கும் மக்களின் படித்தவர்க்கமும் தப்பவில்லை. தம் குலமக்கள் இருந்த இடங்களை விட்டு நகரங்களையும் வேறு நிலங்களையும் நோக்கிப் பெயர்ந்தனர். குல தெய்வங்களைக் கைவிட்டனர்.

இதன்வழி வல்லியக்கன், 'சைவம் அகலக்காலூன்றி நின்ற நிலத்தில்' வல்லிபுரத்தாழ்வார் ஆயினார். தாமே பூசைசெய்து வழிபட்ட வல்லியக்கனை பெருங்கோயில் வழி கட்டமைக்க முற்பட்டு சீதாராமசாஸ்திரிகளை நாடிய போது 'வல்லி' எனும் சொல்லை அடிப்படையாகக் கொண்டு கோண்டாவில் வல்லியக்கனை வல்லிபுர ஆழ்வாராக மாற்றினார். அக்கோயில் கும்பாபிஷேகம் நிகழ்ந்து பிராமணர் கோயிலாக்கப்பட்டது (பறையிசைக்கும் மக்கள் கருவறைக்குள் செல்லுதல் தடைப்பட்டது). இதன் வழி, தாம் மேற்சாதியானதாக அம்மக்கள் நம்புகின்றனர். இவ்வழி, வேலணை சின்னமடு வல்லியக்கன், நாராயணர் - கிருஷ்ணனாக மாற்றப்பட்டுள்ளார். இதனை அடிப்படையாகக் கொண்டு இரகுபதி, யாழ்ப்பாண சைவ உயர் சாதியினருக்கு எதிரான வைணவராக வல்லியக்கன் வழி பறையிசைமக்கள் மாறுவதாகவும், இதில் அம்பேத்கார் சிந்தனையின் சாயல் இருக்கக்கூடும் என்றும் கூறுகிறார் (இரகுபதி, பொ., 2006, பக்22 - 23). ஆனால் அச்செழுவிலுள்ள வல்லியக்கன் கடந்த 2021 ஆம் ஆண்டில் சிவபெருமானாக மாற்றப்பட்டுள்ளமை இக்கருத்துக்கு மாறானதாக, அம்பேத்கார் வழி சிந்திக்காது 'மேனிலையாக்கம்' எனும் கருத்தாக்க வழி நின்றதையே காட்டுகின்றது. இவ்வாறான மேனிலையாக்கங்கள் பிராமணரை முதன்மைப்படுத்துகிறது. மக்களை வெளித்தள்ளுகிறது. மடைப்பண்டம் எடுத்தல், மடைப் பறையிசைத்தல் முதலான பாரம்பரிய முறைகள், கலைகள், நம்பிக்கைகள் புறந்தள்ளப்பட்டு இல்லாதொழிக்கப்படுகிறது.

சீமெந்துக் கற்களால் கட்டப்படட் வல்லியக்கன் கோயில்களில் விஷ்ணுவின் சங்குசக்கரம் (ஆனைக்கோட்டை) பிள்ளையார், முருகன் (சண்டிலிப்பாய்), விறுமர், ஐயனார் (கரவெட்டி) போன்ற சின்னங்கள், தெய்வங்கள் இடம்பிடித்து வருதலையும் சமஸ்கிருதமயமாதலுக்கான வெளி அண்மிப்பதையும் அவதானிக்க முடிகிறது. பறையிசை என்பது இருமரபுக் கோயில்களிலும் இல்லை என்பதும் கோயிற்பறை இல்லாது ஒழிந்து போனதையும் சாவுப்பறை வாசிப்பவர் மட்டுமே அங்கொன்றும் இங்கொன்றுமாக இருத்தலையும் அதுவும் தன் கலைப்பெறுமானத்தை இழந்து வருதலையும் சாவுப்பறையின் இடத்தை 'பாண்ட்' (Band) வாத்தியம் ஆக்கிரமித்து வருதலையும் அவதானிக்க முடிகிறது. பெரும்பாலான பறையிசைக்கும் மக்கள் சாதிய - தன்னடையாள நீக்கத்திற்காகவும் வேறுசில நம்பிக்கைகள், தேவைகள் என்பனவற்றுக்காகவும் கிறிஸ்தவத்திற்கு (குறிப்பாக புரட்டஸத்தாந்தம்) மாறிவருகின்றனர். ஆதிதிராவிடர்களுக்கான அடையாளங்கள், தெய்வங்கள், வழிபாட்டுமுறைகள், கலைகள் கைவிடப்படுகின்றன. சமாந்தரமாக, தமிழர் வரலாறு சிதைவுறுதலும் நிகழ்கிறது.

## நிறைவுரை

பறையிசை இசைக்கும் கலைஞர்கள் சாதிய ஒடுக்குமுறையினின்றும் தாழ்வு மனப்பாங்கில் இருந்தும் விடுதலை பெற அவாவிநிற்றலின் வழி தன்னடையாளத்தைத் துறத்தல் நிகழ்கிறது. அதன் ஒரு அங்கமாக, ஈழத்தமிழர்களில் ஒரு பிரிவினரான ஆதித் தமிழர்களாக அடையாளப்படுத்தப்படும் பறையிசைக்கும் மக்கள், தம் குலதெய்வமான வல்லியக்கனை நாராயணனாகவும் சிவனாகவும் மாற்றி பெருந்தெய்வவழிபாட்டினுள்ளும் சமஸ்கிருதமயமாதலினுள்ளும் கலக்கச்செய்து மேனிலையாக்கம் பெற முயற்சிக்கின்றனர். வல்லியக்கனைக் கைவிடுகின்றனர். தம் சமயம் துறந்து கிறிஸ்தவத்திற்கு மாறி புது அடையாளத்தை உருவாக்குகின்றனர். உலகமயமாதலுள் ஒன்ற முற்படுகின்றனர். வரலாற்றாசிரியர்கள் ஈழத்தில் தமிழர், நாகர் வழி வந்தவர்கள் எனக் கூறுகின்றனர். இயக்கர் வரலாறு குவேனி வழி வேடுவருள் தொலைக்கப்பட்டது. இயக்கரை - வல்லியக்கரை வழிபடும் வழிபாட்டின் வழி தமிழர் வரலாற்றைச் சீரமைக்க வாய்ப்புள்ளது. அத்தோடு ஈழத்தில் மட்டுமே வல்லியக்கன் வழிபாடு நிலவி வருதலும் கவனத்திற்குரியதாகும்.

(தொடரும்.)

காலநிலை மாற்றத்தின் விளைவுகளை இன்று அனைவருமே அனுபவிக்கின்ற நிலையில் பசுமை நோக்கிய நகர்வு குறித்த விழிப்புணர்வும் அக்கறையும் பரந்துபட்டளவில் மக்களைச் சென்றடைந்துள்ளது. பசுமையின் பெயரால் வளச்சுரண்டல்கள், உரிமை மறுப்புகள், மோசடியான வர்த்தகம், போலியான திட்டங்கள் என அனைத்தும் அரங்கேறுகின்றன. குறிப்பாக மூன்றாமுலக நாடுகள் இதற்குப் பலியாகின்றன. இலங்கையும் இதற்கு விலக்கல்ல. இலங்கை உயிரினங்களின் செறிவு அடிப்படையில் ஆசியப் பிராந்தியத்தில் முக்கியமான நாடாக கருதப்படுகிறது. ஆனால் இலங்கையின் உயிர்ப்பல்வகைமை மிகப்பாரிய சவாலை எதிர்கொண்டுள்ளது. கடந்த இரண்டு தசாப்த காலத்தில் காலநிலை மாற்றத்தின் கொடும் விளைவுகளையும் இலங்கை சந்தித்துள்ளது. இவை குறிப்பாக விவசாயத் துறையை சீரழித்துள்ளது. உயரும் கடல்மட்டம் இலங்கைக்கு ஒரு மிகப்பெரிய சவாலாக உருவெடுக்கும் வாய்ப்புகளும் உண்டு. இத்தகைய பின்புலத்தில் இலங்கைச் சூழலில் பசுமை எனும் பெயரால் நடைபெறுகின்ற விடயங்களைத் தத்துவார்த்த ரீதியிலும் வரலாற்று நோக்கிலும் சமகால நிகழ்வுகளுடனும் நோக்க இத்தொடர் விழைகிறது. பசுமையின் பெயரால் நடந்தேறுபவை ஏற்படுத்தும் சமூகப் பொருளாதார மாற்றங்களையும் அதன் அரசியல் சிக்கல்களையும் சேர்த்தே 'பசுமை எனும் பேரபாயம்' எனும் இத்தொடர் கவனம் செலுத்துகிறது.




**மீநிலங்கோ தெய்வேந்திரன்**

ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக உள்ள ஞாலசீர்த்தி மீநிலங்கோ தெய்வேந்திரன் அங்கு சர்வதேச அபிவிருத்தி ஆய்வுகள் முதுகலைத் திட்டத்தை வழிநடத்துகிறார். பூகோளத் தெற்கில் புதுப்பிக்கத்தகு சக்தி மாற்றங்களின் சமத்துவமும் நீதியும் சார் அம்சங்கள் பற்றிய அவரது ஆய்வு, புவிசார் அரசியலின் இயக்கவியல் மீதும்; துப்புரவான சக்தி மாற்றங்களை எய்தலில் வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் கொள்கைச் சவால்கள் மீதும்; குறிப்பான கவனஞ் செலுத்துகிறது. இவர் கற்பித்தல், திட்ட முகாமை, பொதுக் கொள்கை, சர்வதேச அபிவிருத்தி ஆகியவற்றில் இருபது வருடப் பணி அனுபவம் உடையவர். ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் மானுடப் புவியியலில் முனைவர் பட்டம் பெற்றவராவார்.


# சுதந்திர இலங்கையின் குடியேற்றத் திட்டங்கள்

## தொடக்கக் குறிப்புகள்

சுதந்திரத்துக்குப் பிந்தைய இலங்கையின் இன முரண்பாட்டின் கதையாடலில் சில முக்கியமான வரலாற்றுப் புள்ளிகள் உண்டு. அவை ஒவ்வொன்றும் தனித்தனியே வெவ்வேறுபட்ட விளைவுகளையும் உரையாடல்களையும் ஏற்படுத்தின. அவ்வாறான ஒரு வரலாற்றுப் புள்ளியே சுதந்திரத்துக்கு பிந்தைய இலங்கையில் தேசத்தின் பிதா என்று அழைக்கப்படும் டி.எஸ். சேனநாயக்கவினால் முன்மொழியப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட குடியேற்றத் திட்டங்கள். இவை அபிவிருத்தியின் பெயரால் முன்னெடுக்கப்பட்டன. நெற்பயிர்ச் செய்கையை அதிகரிப்பது, நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்துவது, நிலமற்ற மக்களுக்கு நிலத்தை வழங்குவது, உலர் வலயத்தை விவசாயத்துக்குரியதாக மாற்றுவது போன்ற நோக்கங்களை முன்னிறுத்தியே இந்த குடியேற்றத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதில் முதன்மையானது, கல்ஓயா திட்டமாகும்.

இந்தத் திட்டத்தின் நோக்கங்கள் விவசாயம் சார்ந்தவை எனக் கூறப்பட்ட போதும் இத்




கல் ஓயா திட்டப் பிரதேசத்தில் டி.எஸ். சேனநாயக்க

Image Source - thuppahis.com

திட்டத்தின் கீழ் காடுகள் அழிக்கப்பட்டு வனவிலங்குகள் வேட்டையாடப்பட்டு உருவான பகுதிகளில் சிங்களவர்களே பெரும்பாலும் குடியமர்த்தப்பட்டார்கள். இது இந்தக் குடியேற்றத் திட்டத்தின் நோக்கங்களைக் கேள்விக்குள்ளாக்கியது. இன்று வரை கல்லோயா திட்டம் உட்பட்ட குடியேற்றத் திட்டங்கள் நாட்டின் வடக்குக் கிழக்கில் தமிழரின் குடிப்பரம்பல் செறிவை மாற்றியமைக்கும் நோக்குடையவை என்ற கருத்து முன்வைக்கப்பட்டு வருகிறது. அதற்கு வலுச்சேர்க்கும் விதமாக அரசாங்கங்களின் தொடர்ச்சியான நடத்தை இருந்து வந்திருப்பதையும் மறுப்பதற்கில்லை. இந்தப் பின்புலத்தில் மூன்று கேள்விகளை இக்கட்டுரை ஆராய விழைகிறது. (1) இந்தத் திட்டங்களினூடு நடந்த பௌதீகவியல் மாற்றங்கள் என்ன? (2) இவற்றின் சூழலியல் பாதிப்புகள் என்ன? (3) இத் திட்டங்கள் எதிர்பார்த்த பொருளாதார, சமூகப் பலனைக் கொடுத்தா? இம் மூன்றையும் ஆராய்வதன் ஊடு இத்திட்டங்களின் உண்மையான நோக்கம் என்ன? என்ற வினாவை மீண்டும் எழுப்ப முனைகிறது. அரசாங்கங்கள் உண்மையிலேயே அபிவிருத்தி நோக்கங்களுக்காக இக் குடியேற்றங்களை உருவாக்கியதா அல்லது இனப்பரம்பலை மாற்றியமைக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட இத்திட்டம் அபிவிருத்தி என்ற போர்வையில் முன்னெடுக்கப்பட்டதா? என்ற கேள்வியை இன்னொரு பரிமாணத்தில் ஆராய இக்கட்டுரை முயல்கிறது.

## வரலாற்று வழி நின்று உலர் வலயத்தை மீளாய்தல்

குறித்த குடியேற்றத் திட்டங்கள் நாட்டின் உலர் வலயத்தையே மையப்படுத்தின. உலர் வலயத்தின் வரலாறு இரண்டு விடயங்களுக்கு முக்கியமானது. முதலாவது, அங்கு வாழ்ந்த சனத்தொகை தொடர்பான விடயங்களை தெரிந்து கொள்ளல். இரண்டாவது அப்பகுதியில் எவ்வகையான வாழ்வாதார முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை அறிதல். இலங்கை குறித்த பல வரலாற்று ஆய்வுகளை மேற்கொண்ட வரலாற்று ஆய்வாளரான பட்ரிக் பீப்பிள்ஸ் "உலர் வலயத்தின் எழுச்சி, வீழ்ச்சி மற்றும் நவீன மாற்றம் ஒரு கண்கவர் வரலாற்று நாடகமாகும். சிங்களவர்களும் தமிழ் உயரடுக்கினரும் பயன்படுத்தும் தொன்ம மயமாக்கப்பட்ட வரலாற்று வாதங்கள் அண்மைக்கால



1833இல் இலங்கையின் நிர்வாக அலகுகள். புள்ளிகளால் அமைந்த கோடுகள் கண்டி இராச்சியத்தின் எல்லைகளைக் குறிக்கின்றன.
மூலம்: Peebles 1990

அரசியலின் விஷயமாகும். ஆனால் அவை வரலாற்றுடன் சிறிதும் சம்பந்தப்படவில்லை" என்று உலர் வலயத்தின் அரசியல் முக்கியத்துவத்தை குறிப்பிடுகிறார்.


பருவமழைகள் போதுமான மழைவீழ்ச்சியைத் தருவதோடு 83 சிறிய ஆறுகளையும் உயிர்ப்போடு வைத்திருக்கின்றன. பழங்கால இலங்கையர்கள் இந்த நீரோட்டத்தை புத்திசாலித்தனமாக நீர்த்தேக்கங்கள் மற்றும் கால்வாய்களில் சேமித்தனர். அதேவேளை கிமு மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்பு தொடங்கி நெல்லைப் பரவலாக பயிரிட்டனர். மலைகள் மற்றும் தென்மேற்குப் பகுதிகளை நோக்கிய மக்களின் இடம்பெயர்வு மிகவும் மெதுவாக நடந்தது. அந்தப் பகுதிகளை நோக்கிய நகர்வு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகே நிகழ்ந்தது. அவ்வாறு அப்பகுதிகளில் குடியேறியோர், தாம் வாழ்ந்த மேட்டுப் பகுதிகளிலோ அல்லது அதிக மழை பெய்யும் அடர்ந்த காடுகள் நிறைந்த பகுதிகளிலோ நிலத்தைப் பயன்படுத்தும்

நுட்பத்தை உருவாக்கவில்லை. உலர் வலயத்திலேயே விவசாயம் செழிப்புற்று இருந்தது.

அனுராதபுரத்தை தலைநகராகக் கொண்ட ஒரு அரசு பல நூற்றாண்டுகளாக இந்த நீர்ப்பாசன முறையைப் பராமரித்து வந்தது. பத்தாம் நூற்றாண்டில் சோழர்களின் படையெடுப்பு தலைநகரை பொலனறுவைக்கு மாற்றும் வரை உலர் வலயப் பிரதேசமான அனுராதபுரமே தலைநகராக இருந்தது. பொலனறுவையும் உலர்வலயப் பிரதேசமே என்பதும் கவனிப்புக்குரியது. பதின்மூன்றாம் நூற்றாண்டிலேயே தலைநகர் உலர்வலயத்தை விட்டு இடம்பெயர்ந்தது. நிர்வாகச் சீர்கேடுகள், புதிய படையெடுப்புகள், மலேரியா என்பன இதற்கான காரணங்களாகச் சொல்லப்படுகின்றன. இங்கு கவனிக்கப்படாத அம்சம் யாதெனில் உலர்வலயத்தில் இருந்து நகர்வதற்கு காலநிலை மாற்றமும் ஒரு முக்கியமான காரணியாக இருந்திருக்க முடியும். ஆனால் அது தொடர்பான குறிப்புகளோ ஆய்வுகளோ மிகக்குறைவு.

அனுராதபுரத்தை தலைநகராகக் கொண்ட பிரதேசமானது அடர்த்தியாக சனத்தொகை கொண்ட பிரதேசமாக இருந்திருக்க வேண்டும். அப்பகுதியின் பாரிய நீர்ப்பாசன கட்டுமானங்களும் வரன்முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட நீர்ப்பாசன ஒழுங்கமைப்புகளும் இதை உறுதி செய்கின்றன. பொலனறுவை இராசதானி அனுராதபுரம் போல் பெரிய சனத் தொகை கொண்டதாக இருந்திருக்க வாய்ப்புக்கள் குறைவு. அனுராதபுரம் போல பொலனறுவையிலும் நீர்ப்பாசனக் கட்டுமானங்கள் உருவாக்கப்பட்டிருந்தாலும் அவற்றின் அளவும் ஒழுங்கமைப்பும் இயங்கியலும் அனுராதபுரத்தை விட சனத்தொகை குறைந்த பகுதியாகவே பொலனறுவையைச் சுட்டுகிறது.

பத்தாம் நூற்றாண்டில் 4 ஆவது கஸ்ஸப்ப மன்னன் நோய்களிலிருந்து காப்பாற்ற மருத்துவமனையைக் கட்டினான் என்ற குறிப்பும் 5 ஆவது கஸ்ஸப்ப மன்னன் மதுரை நோக்கிப் படையெடுத்த தனது படைகளை நோய்த்தொற்றின் காரணமாக திருப்பி அழைத்ததான குறிப்பும் கிடைக்கின்றன.




கல்லோயா குடியேற்றத் திட்டத்தின் வரைபடம்
மூலம்: Uphoff 1996

இந்நோய் பற்றிய குறிப்புகள் இல்லை. ஒருவேளை இது மலேரியாவாக இருந்திருக்கக் கூடும். அதன் காரணமாகவே தலைநகரைக் கைவிட நேர்ந்திருக்கலாம். இங்கு கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில் விரிவான நீரேந்து பகுதிகள் மலேரியா நோய் தொற்று பரவுவதற்கு வாய்ப்பானவை. நிர்வாகச் சீரழிவு காரணமாகப் பேணப்படாத நீர்நிலைகள் மலேரியா நுளம்புகளின் நிரந்தர வாழ்விடமாகி மிகப்பெரிய நெருக்கடியை உருவாக்கியிருக்கக் கூடும்.

இவ்வாறு தொடங்கிய மலேரியா நோய்த் தொற்று சில நூற்றாண்டுகள் தொடர்ந்து உலர்வலயத்தின் சனத்தொகை படிப்படியாகக் குறைவதற்கு வழிவகுத்தது. இதே காலப்பகுதியில் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குக் கரைகளிலும் ஈரவலயத்திலும் சனத்தொகை மெதுமெதுவாக அதிகரிக்கத் தொடங்கியது. பருவமழையின் விளைவால் ஈரவலயத்தில் மலேரியா நுளம்புகளுக்குத் தேவையான அசுத்தமான நீர் தேங்குமிடங்கள் மிகக்குறைவாக இருந்தன. யாழ்ப்பாணக்

குடாநாட்டின் நுண்துளை சுண்ணாம்புக் கற்கள் தேங்கி நிற்கும் குளங்களை உருவாக்க அனுமதிக்காது. இதனால், குறைந்த அளவில் மலேரியா பரவும் இடங்களில் மக்கள்தொகை மையங்கள் எழுந்தன. குறிப்பாக யாழ்ப்பாணத்தின் தரைத்தோற்ற இயல்பினடிப்படையிலான நிலத்தடி நீரின் காரணமாக வரம்பற்ற நீர் வழங்கல், கிணற்றுப் பாசனம் மற்றும் சுழற்சிப் பயிர்ச்செய்கை முறையின் வளர்ச்சி ஆகியன தீவிர விவசாயத்தை சாத்தியமாக்கியது.

இதைத் தொடர்ந்த காலப்பகுதியில் கொலனியாதிக்கங்களின் வருகை உலர்வலயத்தை மக்கள் முழுமையாகக் கைவிட்டு ஈரவலயத்திற்கும் கரையோரங்களுக்கும் செல்வதற்கு வழிவகுத்தது. 1818 ஆம் ஆண்டுக் கிளர்ச்சி அடக்கப்பட்ட பின்னர் மக்கள் சிறிது சிறிதாக உலர் வலயங்களுக்கு நகரத் தொடங்கினர். 1815 இல் முழு இலங்கையும் பிரித்தானியர் வசமானதன் பின்னர் இலங்கையின் நிர்வாக அலகுகளை மீள வரையறுத்து நிர்வாக மாற்றங்களை கொலனிய நிர்வாகம் மேற்கொண்டது (படம்:1). குறிப்பாக கண்டிய இராச்சியத்தின் எல்லைகளை மீள ஒழுங்கமைத்து சிறிய மத்திய மாகாணத்தையும் நான்கு கரையோர மாகாணங்களையும் உருவாக்கினர். தமன்கடுவ பலாடாவின் கண்டிப் பகுதி (இப்போது பொலன்னறுவை மாவட்டம்) கிழக்கு மாகாணத்துடன் இணைக்கப்பட்டது. மேலும் நுவர கலவிய (இப்போது அனுராதபுரம் மாவட்டம்) வடக்கு மாகாணத்தின் ஒரு பகுதியாக மாறியது. கண்டியின் உயரடுக்கினரை வலுவிழக்கச் செய்து அனைத்தையும் நேரடியாக மத்திய நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதன் மூலம் உள்நாட்டின் வளர்ச்சியை ஊக்குவிக்க கொலனிய நிர்வாகம் விரும்பியது.

நுவர கலவிய மற்றும் தமங்கடுவ ஆகிய பகுதிகளிலிருந்து 1873 இல் வட மத்திய மாகாணத்தை உருவாக்குவதன் மூலம் பிரித்தானிய கொலனியவாதிகள் உலர் வலயத்தை அபிவிருத்திக்கு திறந்தனர். பண்டைய தலைநகரங்களுக்கு அருகாமையில் நீர்ப்பாசனம் மற்றும் குடியேற்ற வசதிக்காக 1878 ஆம் ஆண்டு வட மாகாணத்தில் உள்ள வவுனியாவை தனி மாவட்டமாக்கினர். நீர்ப்பாசன மேம்பாட்டில் அவர்களின் முயற்சிகள் ஒழுங்கற்றவையாக இருந்தன. இதனால் உலர்வலயத்தில் ஏற்பட்ட குடியேற்றங்கள் சிறியவையாகவும் தொடர்ச்சியாக மாறும் தன்மையுடவையாகவும் இருந்தன. நுவர கலவிய மற்றும் தமங்கடுவ பகுதிகளில் சிங்களவர்களே பெரும்பாலும் குடியேறினாலும் அது நிரந்தரமான குடியேற்றங்களாக இருக்கவில்லை. அவை பயிர்ச்செய்கைக்கான குடில்களாகவே இருந்தன. ஒவ்வொரு மக்கள் தொகை கணக்கெடுப்பிலும் பல கிராமங்கள் மறைந்து மற்றவை தோன்றின. இந்த மக்கள் தொகையானது ஒவ்வொரு கணக்கெடுப்பின் போது தொடர்ச்சியாக மாறிக்கொண்டிருந்தது. இப்பகுதியின் சூழலியல் தன்மைகளே இதற்குக் காரணமாகின. இங்கு குடியேறியோரின் பயிர்ச்செய்கை முறைகள் கரையோரத்திலோ, ஈரவலயத்திலோ பயிர்ச்செய்கையில் ஈடுபடுவோரை விட வேறானதாக இருந்தது. ஆனால் இது ஒழுங்குபடுத்தப்பட்ட ஒன்றாக இருக்கவில்லை. இந்த மக்கள் பெரும்பாலும் இயற்கையோடு இயைந்த பயிர்ச்செய்கையில் ஈடுபட்டனர்.

> டி.எஸ். சேனநாயக்காவின் உலர் வலயத்தின் குடியேற்றத் திட்டமானது, சிங்களவர்களின் பண்டைய நீர்ப்பாசன நாகரிகத்தின் மையப் பகுதிக்கு திரும்புவது என்ற தொலைநோக்குடன் சிங்கள தேசியவாதத்தை புகுத்துவதை நோக்காகக் கொண்டது

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கொலனிய நிர்வாகம் நீர்ப்பாசனத்தின் மீதான கவனத்தைக் குறைக்கத் தொடங்கியது. 1905 ஆம் ஆண்டளவில் நீர்ப்பாசனத்திற்கான அரசாங்கச் செலவுகள் கணிசமாகக் குறைந்தன. உலர் வலயத்தின் மீள்குடியேற்றம் இருபதாம் நூற்றாண்டில்

தீவிரமாகத் தொடங்கியது. ஏனெனில் உலர் வலயத்தை புத்துயிர் பெற வைப்பது சிங்கள தேசியவாத அரசியல்வாதிகளுக்கு ஒரு குறிப்பிட்ட அவசரமான விஷயமாக மாறியது. இது குறிப்பாக கீழ்நாட்டு சிங்கள உயரடுக்கிற்கு முக்கியமானதாக இருந்தது. குறிப்பாக நிலமற்றவர்களாக அடையாளம் காணப்பட்ட கண்டிய சிங்கள மக்களைக் கவரும் ஒரு வழிமுறையாக இது இருந்தது.

1927 இல் காணி ஆணைக்குழு அனைத்து அரச காணிகளும் மக்களுக்கு பயன் தரக்கூடிய வகையில் ஒதுக்கப்பட வேண்டும் என்று அறிவித்தது. இந்த அறிவுப்புடன் விவசாயம் மற்றும் காணி அமைச்சராக இருந்த டி.எஸ். சேனநாயக்க உலர் வலயத்தில் காலனித்துவக் குடியேற்றங்களைத் திட்டமிட்டார். அதன்படி நிலமற்ற சிங்கள விவசாயிகள் சுதந்திரமான விவசாய உரிமையாளர்களாக மாறுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. 1935 ஆம் ஆண்டின் காணி அபிவிருத்திச் சட்டம் இக் குடியேற்றத்துக்கான வழிமுறைகளை உருவாக்கியது. மேலும் 1939 ஆம் ஆண்டு இச் சட்டத்தின் கீழ் முதலாவது மக்கள் தொகைக் குடியேற்றம் நிகழ்ந்தது. இக் குடியேற்றத்துக்கு மூன்று காரணங்கள் கூறப்பட்டன; ஈர மண்டலத்தின் வேலையின்மையை நீக்குவது, உணவு உற்பத்தியை அதிகரிப்பது மற்றும் உலர் மண்டலத்தில் வளமான குடியேற்றங்களை நிறுவுவது.

டி.எஸ். சேனநாயக்க உட்பட்ட சிங்களத் தலைவர்கள் கொலனித்துவம் இலங்கையின் விவசாய சமூகத்தையும் அதன் வாழ்வியலையும் சிதைத்துவிட்டது என்று கருதினர். தங்கள் பழைய பெருமையை மீட்டெடுக்க உலர்வலயத்தில் மக்களைக் குடியேற்றக்கூடிய ஒரு “பொற்காலத்தைக்” கனவுகண்டனர். இதை மிகவும் விரிவாக ஆராய்ந்த மூர் பின்வருமாறு சொல்கிறார்: “டி.எஸ். சேனநாயக்காவின் உலர் வலயத்தின் குடியேற்றத் திட்டமானது, சிங்களவர்களின் பண்டைய நீர்ப்பாசன நாகரிகத்தின் மையப் பகுதிக்கு திரும்புவது என்ற தொலைநோக்குடன் சிங்கள தேசியவாதத்தை புகுத்துவதை நோக்காகக் கொண்டது.”

இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்களில் மிகப்பெரியது கல்லோயாத் திட்டமாகும். இது 1948 இற்கும் 1952 இற்கும் இடையில் 120,000 ஏக்கருக்கும் அதிகமான நீர்ப்பாசனப் பரப்பை உருவாக்கியது (படம்:2). சுதந்திர இலங்கையின் மிகப்பெரிய கொலனித்துவக் குடியேற்றங்களில் கல்ஓயா திட்டம் முதன்மையானது.

### கல்லோயா திட்டம் : கேள்விக்குறியாகும் நோக்கங்கள்

அபிவிருத்தியை நோக்காகக் கொண்டதாக அறிவிக்கப்பட்டாலும் கல்லோயாத் திட்டத்தின் நோக்கங்கள் குறித்து பல கேள்விகள் தொடக்கம் முதலே எழுந்தன. குறிப்பாக மூன்று கேள்விகள் எழுந்தன.

1. இத்திட்டம் முழுமையான திட்டமிடலும் நடைபெறுகின்றதா? அல்லது குறுகிய சில நோக்கங்களை மட்டும் கொண்டுள்ளதா?
2. இத்திட்டத்தின் பொருளாதாரக் காரணிகள் (செலவினமும் வருவாயும்) ஆழமாக ஆராயப்பட்டுள்ளனவா?
3. இத்திட்டத்தினால் ஏற்படப்போகும் சமூகப் பண்பாட்டுத் தாங்கங்களின் நீண்டகால விளைவுகள் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளனவா?

இரண்டாவது வினாவை முதலில் நோக்குவோம். இதன் பொருளாதாரக் காரணிகளைப் பொறுத்தவரையில் இத் திட்டத்திற்கு அரசாங்கம் மிக அதிகளவில் நிதியைச் செலவழித்தது. உலர்வலயத்தில் விவசாய முயற்சிகளை ஊக்குவித்தல் என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களுக்கான செலவினம் நாட்டின் வருடாந்திர விவசாய பட்ஜெட்டில் 87 சதவீதமாகும். இது இந்த குடியேற்றத் திட்டங்களுக்கு அரசாங்கம் கொடுத்த முக்கியத்துவத்தைக் காட்டுகிறது. ஆனால் பொருளாதார ரீதியில் இத் திட்டம் ஒரு தோல்வியடைந்த திட்டமாகும்.

1966 ஆம் ஆண்டு கல்லோயாத் திட்டத்தை பற்றி ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட குழு இரண்டு முக்கியமான முடிவுகளுக்கு வந்தது. முதலாவது, பொருளாதார ரீதியிலும் அரிசி உற்பத்தியின் அளவின் அடிப்படையிலும் இத் திட்டமானது தோல்வியடைந்த திட்டமாகும். இந்தத் திட்டத்தின் பிற நடவடிக்கைகளான, தொழிற்சாலைகளை அமைத்தல், அரிசியாலைகளை உருவாக்குதல், கரும்புற்பத்தி என்பன தோல்வியடைந்த பொருளாதார நட்டத்தை விளைவிக்கும் செயற்பாடுகளாகும். இரண்டாவது, இந்தத் திட்டத்தில் பணியாற்றுபவர்களின் வசதிகளை மேம்படுத்துவதற்காக (தங்குமிடங்கள், பாதைகள் உள்ளிட்டவை) மிகவும் அளவுக்கதிகமான பணம் செலவிடப்பட்டுள்ளது.

பொருளாதாரக் காரணிகள் என்ற விடயத்தில் அரசாங்கம் கவனம் கொள்ளவில்லை. மாறாக அந்தக் குடியேற்றத் திட்டத்தை எப்படியாவது செய்துவிட வேண்டும் என்று யோசித்தது. அதற்காகவே பல்வேறு துணைத் திட்டங்களும் அங்கு அறிமுகப்படுத்தப்பட்டன. இது அரசாங்கத்தின் திட்டமிடலின் குறைபாடுகளா அல்லது மறைமுகமாக வேறொரு நிகழ்ச்சி நிரலை வைத்துக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட திட்டமா என்பது விவாதத்திற்குரியது. இதற்கான பதிலைத் தெரிந்துகொள்ள சில வரலாற்று நிகழ்வுகளை இங்கு நினைவூட்டல் தகும்.

உலர்வலயத்தில் நீர்ப்பாசனத்திற்கான வழியை ஏற்படுத்துவதும் மக்களை குடியமர்த்துவதுமே டி.எஸ். சேனநாயக்கவின் நோக்கமாக இருந்தது. அவரது ஆலோசகர்கள் இது குறித்து இரண்டு முக்கியமான விடயங்களைச் சொன்னார்கள். முதலாவது, ஒரு நீர்த்தேக்கத்தையும் நீர்ப்பாசனத்தையும் சாத்தியமாக்கலாம். ஆனால் அதற்கான வசதிகள் எம்மிடம் இல்லை. இரண்டாவது, இத்திட்டத்தின் வழியாக 50,000 பேரைக் குடியமர்த்தலாம். இவை இரண்டும் டி.எஸ் இற்கு கவர்ச்சிகரமாக இருந்தது. இதை நடைமுறைப்படுத்த மூன்று முக்கிய விடயங்களை அவர் செய்தார்.

1. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சர்வதேச ரீதியில் விலைமனுக் கோரப்பட்டு இரண்டாம் உலகப் போரில் யப்பானியத் தாக்குதலில் இருந்து பாதுகாக்கக் கூடிய விமான ஓடுதளங்களை அமைத்த அமெரிக்க இராணுவ நிறுவனமான மொரிசன் குணுட்சனுக்கு கட்டுமானப் பணிகளுக்கான அனுமதி வழங்கப்பட்டது.
2. இந்திட்டத்தை நிர்வகிக்க அவுஸ்ரேலியத் திறைசேரியில் தலைவராக இருந்த ஹக்ஸ்ஹாம் என்பவரை வரவழைத்து நிர்வாகப் பொறுப்பு அளிக்கப்பட்டது. அவரது மாதச் சம்பளம் 3,000 இலங்கை ரூபாய்கள். (1940 களில் 3,000 ரூபாய்கள் மிகப்பெரிய தொகை)
3. சகல அதிகாரங்களையும் கொண்ட கல்ஓயா அபிவிருத்திச் சபைக்கான சட்டமூலம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது. இச் சட்டமூலம் பல சிறப்பு அதிகாரங்களைக் கொண்டதாக இருந்தது.

இங்கு செலவழிக்கப்பட்டுள்ள பணமும் சட்டரீதியான செயற்பாடுகளும் அரசாங்கம் இத்திட்டத்திற்கு கொடுத்த முக்கியத்துவத்தைக் காட்டுகின்றன. ஆனால் நடைமுறையில் எதுவும் சரியானதாக இருக்கவில்லை. திட்டத்திற்குரிய உபகரணங்கள் துறைமுகத்தில் வந்திறங்கிய போது அவை சரியான முறையில் கணக்கெடுக்கப்படவோ, பாராமரிக்கப்படவோ இல்லை. இத்திட்டத்தை செயற்படுத்துவதில் அரசாங்கம் காட்டிய அவசரத்தை திட்டமிடலில் அரசாங்கம் காட்டவில்லை.

இனி மூன்றாவது வினாவுக்கு வருவோம். மக்களை இப்பகுதிகளில் குடியேற்றுவதன் சமூகப் பரிமாணம் கணிப்பிலெடுக்கப்படவில்லை. மக்களை இந்தப் பகுதிகளில் குடியேற்ற வேண்டும் என்பதே பிரதான நோக்காகவிருந்தது. ஆனால் இம் மக்களின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட ஏனைய அடிப்படை வசதிகள் பற்றி அதிகம் அக்கறை கொள்ளப்படவில்லை. அவர்களுக்கு வழங்கப்பட்ட நிலத்தில் விவசாயம் செய்வது பற்றியே அக்கறை செலுத்தப்பட்டது. இம் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சனைகள் பல வகைப்பட்டன. இதில் முதலில் குடியேறிய மக்களைப் பற்றிய ஆய்வை மேற்கொண்ட வில்பிரட் ஜெயசூரிய பின்வருமாறு எழுதுகிறார்:

“கல் ஓயா அபிவிருத்திச் சபையின் குடியேற்றத் திட்டம் 1951 இல் ஆரம்பிக்கப்பட்டது. இயந்திரங்கள் மூலம் காடு அழிக்கப்பட்ட

**முல்லோயாத் திட்டத்தின் கீழ் குடியேற்றப்பட்டவர்கள் பல்வகைப்பட்ட பொருளாதார நிலைகளை உடையோராக இருந்தனர். ஒரு சில குடியேற்றவாசிகள் அதிக வருமானம் மற்றும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அடைந்தனர். சேமிப்புப் பழக்கமின்மை மற்றும் வாழ்வாதார நோக்குநிலை ஆகியவை ஏழைக் குடும்பங்களின் வறுமையை அதிகப்படுத்தின. மேலதிகமாக வறட்சியும் நெல்விலை வீழ்ச்சியும் அவர்களை மிகவும் மோசமாகப் பாதித்தது.**

*பின்னர், முதல் இரண்டு கிராமங்கள் வாவின்ன மற்றும் பரகஹகெல்லவில் நிறுவப்பட்டன. சேனநாயக்க சமுத்திர புதிய நீர்த்தேக்கத்தினால் நீரில் மூழ்கிய பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களும் தற்போதுள்ள காட்டுப் பகுதிகளை நம்பி வாழ்ந்த கிராம மக்களும் குடியேற்றப்பட்டனர். இவர்கள் முதலில் குடியமர்த்தப்பட்டாலும், இந்த இரண்டு கிராம அலகுகளும் மிகவும் குறைவாகவே வளர்ச்சியடைந்துள்ளன. அவர்கள் விவசாய முறைகளை மாற்றுவதில் தாமதம் காட்டினர். காடுகளால் சூழப்பட்ட கிராமங்களில் வாழ்ந்த அவர்கள் பாரம்பரியமான சேனைப் பயிர்ச்செய்கையையே நம்பியிருந்தனர். மேலும் வாழ்வாதாரத்திற்காக அல்லாமல், முக்கியமாக சந்தைக்காக முறையான நீர்ப்பாசன நெற்பயிர்ச் செய்கைக்கு பழகுவதற்கு அவர்களுக்கு நீண்டகாலம் பிடித்தது. இவ்விரண்டு கிராமங்களிலும் குடியேறியோரில் ஏறக்குறைய 75 சதவீதம் பேரிடம் மாடுகள் இருக்கவில்லை. அதேவேளை அவர்களுக்கு சொந்தமான துப்பாக்கிகளின் எண்ணிக்கை வழக்கத்திற்கு மாறாக அதிகமாக இருந்தன. இது இங்கு குடியேறியோர் பாசன நெல் வயல்களை முறையாக பயிரிடுவதை விட, வேட்டையாடுதல் மற்றும் சேனை விவசாயத்தில் கவனம் செலுத்தினர் என்பதைக் காட்டுகிறது. ஆனால் தங்கள் வாழ்விடத்தில் இருந்து பெயர்க்கப்பட்ட இச் சமூகங்கள் இப்புதிய சூழலில் வாழ்வதற்கு மிகவும் சிரமப்பட்டன. பொருளாதார நெருக்கடியின் விளைவால் பலர் விபச்சாரத்தில் ஈடுபட்டனர். இந்த முதல் இரண்டு கிராமங்களில் பாலியல் நோய்களின் பாதிப்பு அதிகமாக இருந்தது."*

கல்லோயாத் திட்டத்தின் கீழ் குடியேற்றப்பட்டவர்கள் பல்வகைப்பட்ட பொருளாதார நிலைகளை உடையோராக இருந்தனர். ஒரு சில குடியேற்றவாசிகள் அதிக வருமானம் மற்றும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அடைந்தனர். சேமிப்புப் பழக்கமின்மை மற்றும் வாழ்வாதார நோக்குநிலை ஆகியவை ஏழைக் குடும்பங்களின் வறுமையை அதிகப்படுத்தின. மேலதிகமாக வறட்சியும் நெல்விலை வீழ்ச்சியும் அவர்களை மிகவும் மோசமாகப் பாதித்தது. இத்தகைய பேரழிவுகள் ஏழைகள் தங்கள் நிலங்களை குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடுவதற்கு வழிவகுத்தது. இது சொல்கிற எளிய செய்தி, அரசாங்கம் இவ்வாறு குடியேறுவதனால் ஏற்படும் சமூகப் பாதிப்புகள் குறித்து கிஞ்சித்தும் அக்கறை கொள்ளவில்லை என்பதே.

இனி முதலாவது வினாவுக்கு வருவோம். கல்லோயாத் திட்டம் இலங்கையின் முக்கியமான அபிவிருத்தித் திட்டமாக இன்றும் கருதப்படுகிறது. குறிப்பாக சுதந்திர இலங்கையின் முதலாவது அபிவிருத்தித் திட்டம் என்ற வகையில் அதன் முக்கியத்துவம் புரிந்துகொள்ளக் கூடியதே. ஆனால் அது 'பயன்கருதித்' திட்டமிடப்பட்ட ஒன்றா என்ற வினா முக்கியமானது. இன்றளவும் சிங்களத் தேசியவாதத்துடன் மிகவும் பின்னிப்பிணைந்த ஒன்றாக கல்லோயாத் திட்டம் இருக்கிறது. இதனால் இதனை விமர்சிப்பவர்கள் இரண்டு வகையில் அழைக்கப்பட்டார்கள். ஒன்றில் 'தேசத்தின் எதிரிகள்' அல்லது 'அந்நியக் கைக்கூலிகள்'. இந்தத் திட்டமானது சுதந்திர இலங்கையில் இலங்கையர்களால் வெற்றிகரமாக அமைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டம் என்ற கதையாடல் மெதுமெதுவாகப் பொதுப்புத்தியில் ஏற்றப்பட்டுள்ளது. ஆனால் மேற்சொன்னது போல இந்தத் திட்டத்தில் அந்நியரின் பங்களிப்பு மிக அதிகம். ஆனால் அது வசதியாக மறைக்கப்படுகிறது.

கல்லோயாத் திட்டத்தின் கோளாறுகளை பற்றித் தொடர்ச்சியாகவே பல அறிக்கைகளும்

எழுத்துக்களும் வந்துள்ளன. ஆனால் அவை கவனம் பெறவில்லை. இன்னும் சரியாகச் சொல்வதனால் அவை சிங்களத் தேசியவாத மனோநிலைக்கு விரோதமானவை எனக் கருதப்பட்டமையால் இருட்டடிப்புக்கு உள்ளாகின. 1979 இல் முழுமையாகச் சீரழிந்த கல்லோயாத் திட்டத்தை புனரமைக்க அமெரிக்காவின் உதவி நாடப்பட்டது. அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் (USAID) அதிகாரிகள் இலங்கை வந்தனர். அதில் ஒருவரான நோமன் உப்கோவ் தனது இலங்கை அனுவங்களை ஒரு நூலாக எழுதியுள்ளார். *'Learning from Gal Oya: Possibilities for Participatory Development and PostNewtonian Social Science'* என்ற தலைப்பில் அமைந்த இந்நூல் 1992 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதில் கல்லோயாத் திட்டத்தின் பிரதான பிரச்சனைகள் சிலவற்றை அவர் பட்டியலிடுகிறார்:



கல்லோயா 125,000 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட நாட்டின் மிகப்பெரிய மற்றும் மிகவும் சிக்கலான திட்டமாகும். USAID உதவியுடன் புனரமைக்கப்படவிருந்த அதன் இடது கரை துணை அமைப்பும் கூட இலங்கையில் உள்ள மற்ற நீர்ப்பாசன முறையை விட பெரியதாக இருந்தது. சமச்சீரற்ற நிலப்பரப்பு காரணமாக, நீர்க்கால்வாய் வலையமைப்பு நீண்டதாகவும், அடர்த்தியாகவும் இருந்தது. அதன் அளவு காரணமாக, இது இரண்டு நிர்வாக மாவட்டங்களின் எல்லைகளை இடைவெட்டியது. இது மேலும் சிக்கல்களை ஏற்படுத்தியது.

கல்லோயா 125,000 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட நாட்டின் மிகப்பெரிய மற்றும் மிகவும் சிக்கலான திட்டமாகும். USAID உதவியுடன் புனரமைக்கப்படவிருந்த அதன் இடது கரை துணை அமைப்பும் கூட இலங்கையில் உள்ள மற்ற நீர்ப்பாசன முறையை விட பெரியதாக இருந்தது.

கட்டமைப்பு ரீதியாக இது மிகவும் மோசமடைந்தது. கால்வாய்கள் மண்ணாகி, அவற்றின் கரைகள் அரிக்கப்பட்டன. சுமார் 80 சதவீத நீர் வாயில்கள் மற்றும் பிற கட்டமைப்புகள் உடைந்தன அல்லது செயல்பட முடியாதவையாக இருக்கின்றன (1975 ஆம் ஆண்டு உலக உணவு

ஸ்தாபனத்தின் அறிக்கை இக்குறைபாடுகளை விரிவாகப் பேசுகிறது). முழு இடது கரையிலும் ஏழு இடங்களில் மட்டுமே நீர் ஓட்டம் கட்டுப்படுத்தப்பட்டு அளவிடப்பட்டது. மேலும், அதன் பெரும்பாலான மண் குறிப்பாக நீர்ப்பாசன நெற்பயிர்ச் செய்கைக்கு ஏற்றதாக இல்லை. இது குறைந்த விளைச்சலுக்கும் விவசாயிகளின் குறைந்த வருமானத்திற்கு பங்களிக்கிறது.

கல் ஓயாவில் பெருகிவரும் சனத்தொகைக்கு இடமளிக்கும் வகையில், பயிரிடப்பட்ட பகுதி 30 முதல் 50 சதவீதம் வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இது முதலில் திட்டமிடப்பட்ட வடிவமைப்பு விபரக் குறிப்புகளுக்கு அப்பாற்பட்டது. 1950 களில் பெரிய குடும்பங்களை கல்லோயாவிற்கு குடியேற்றம் செய்வதே அரசாங்கக் கொள்கையாக இருந்தது. இக் கொள்கை நிலப்பற்றாக்குறை பகுதிகளைச் சேர்ந்த அதிகமான மக்களுக்கு உடனடிப் பலன்களை அளித்தது மற்றும் அரிசியை உற்பத்தி செய்வதற்கு ஒரு பெரிய தொழிலாளர் படையை அளித்தது. ஆனால் இது மக்கள் தொகை அழுத்தங்களை உருவாக்கியது. இது தண்ணீருக்கான தேவையை அதிகரித்தது. தண்ணீர் இருப்புக்கு மேலதிகமான மக்கள் தொகையால் இந்த அமைப்பை நிர்வகிப்பதும் பராமரிப்பதும் மிகவும் கடினமாகிவிட்டது.

நீரேந்து பகுதியில் எதிர்பார்த்ததை விட தண்ணீர் சேகரிப்பு குறைவாக இருந்ததால் நீர் விநியோகத்தில் சிக்கல் ஏற்பட்டது. முந்தைய இருபத்தைந்து ஆண்டுகளில் 770,000 ஏக்கர் அடி கொள்ளளவு கொண்ட பிரதான நீர்த்தேக்கம் இரண்டு முறை மட்டுமே நிரம்பியுள்ளது. வறண்ட பருவத்தின் தொடக்கத்தில் அரிதாகவே பாதிக்கு மேல் நிரம்பியது. எனவே பொதுவாக வறண்ட காலங்களில் விவசாயிகள் தங்கள் குடும்பங்களை பார்த்துக் கொள்வதற்கான விவசாயத்தைச் செய்ய வேண்டிய முழுப் பகுதிக்கும் நீர்ப்பாசனம் செய்ய போதுமான தண்ணீர் இல்லை. அமைப்பின் கீழ் மூன்றில் ஒரு பகுதி பாசன நீரை அரிதாகவே பெற்றது. நீர்த்தேக்கம் இருந்தாலும் இது மழையை முழுவதுமாக நம்பியிருந்தது.

போதிய விளைச்சலின்மை மற்றும் சீரழிந்த இயற்பியல் அமைப்பு ஆகியவற்றால் முன்வைக்கப்பட்ட சிரமங்கள், நீர்ப்பாசனத் துறை பணியாளர்களின் நம்பகத்தன்மையற்ற நிர்வாகத்தால் அதிகரித்தது. போதுமான தண்ணீர் அல்லது அதை விநியோகிக்க போதுமான பணியாளர்கள் மற்றும் கட்டமைப்புகள் இல்லாத நிலையே நிலவியது. ஆனால் அவர்களின் ஒழுங்கற்ற கடமைகளின் செயல்திறன் மற்றும் அவர்களின் ஒதுங்கிய, பெரும்பாலும் விவசாயிகளுக்கு விரோதமான மனப்பான்மை ஆகியவை இந்தத் திட்டத்தின் எதிர்காலத்தை முழுவதுமாகச் சரித்தன.

தண்ணீர் பற்றாக்குறையால் விவசாயிகளிடையே ஏற்பட்ட மோதல்கள் கட்டமைப்புகள் உடைப்பு, கால்வாய் பராமரிப்பு இல்லாமை மற்றும் ஒழுங்கற்ற விநியோகம் ஆகியவற்றிற்கு பங்களித்தன. இது விவசாயிகளிடையே மேலும் மோதலை ஏற்படுத்தியது. இங்கு குடியேறியவர்கள் குறிப்பாக கட்டுக்கடங்காதவர்களாகவும் ஒத்துழைக்காதவர்களாகவும் கருதப்பட்டனர். சிலர் இந்த தொலைதூர மற்றும் அழகற்ற பகுதிக்கு மாற்றுவதற்காக கிராமத் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இது ஒரு முரண்பாட்டு வலயமாக இப் பகுதிகளை மாற்றியது.

அம்பாறை மாவட்டம் அரசாங்க ஊழியர்களால் பணியமர்த்தப்படுவதற்கு விரும்பத்தகாத இடமாக கருதப்பட்டது. சில சமயங்களில் தண்டனையாக ஒதுக்கப்பட்டது. ஒரு எல்லைப் பிரதேசமாக, இலங்கையின் பிற இடங்களில் காணப்படும் பெரும்பாலான வசதிகளை இது கொண்டிருக்கவில்லை. தலைநகர் கொழும்பில் இருந்து வெகு தொலைவில் உள்ள மாவட்டத் தலைமையகமாக அம்பாறை இருந்தது. அதனால் கல்லோயாவுக்கு வந்து தங்குவதற்கு நல்ல பணியாளர்கள் கிடைப்பது கடினமாக இருந்தது.

இவை அனைத்திற்கும் மேலாக, நீர் விநியோகம் ஒரு இனத்துவப் பரிமாணத்தைக் கொண்டிருந்தது. காட்டில் இருந்து மீட்கப்பட்ட மேல் நீரோடை (தலை முனை) பகுதிகளில் மத்திய மலைநாட்டில் உள்ள கிராமங்களிலிருந்தும் மேற்கு மற்றும் தெற்கு

கடற்கரையிலிருந்தும் சிங்கள மொழி பேசும் குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. கிழக்குக் கடற்கரையை ஒட்டிய கிராமங்களைச் சேர்ந்த தமிழ் பேசும் விவசாயிகளுக்கு கீழ்நிலை (வால் முனை) ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன. தண்ணீர் வால்வரை எட்டாதபோது, புவியியல் காரணிகள் மட்டுமல்லாமல், மேல்நிலையில் சிங்களக் குடியேற்றக்காரர்களின் தீங்கிழைக்கும் தன்மையே இதற்குக் காரணம் என்று தமிழர்கள் சொன்னார்கள். பெரும்பான்மையான நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர்கள் தமிழர்களாக இருந்தபோதும் சிறுபான்மையினரின் மனக்குறை நீங்கவில்லை என்பது இங்கு கவனிப்புக்குரியது.

உப்கோவ்வின் குறிப்புகள் மட்டுமன்றி பிற அறிக்கைகளும் இந்தத் திட்டமானது, எவ்வாறு திட்டமிடப்படாத ஒன்றாக இருந்தது என்பதைக் காட்டுகிறது. கல்லோயாத் திட்டமானது நீண்டகால பேண்தகமையை நோக்காகக் கொண்டதல்ல. இரண்டாம் உலகப் போர் காலப்பகுதியில் இப் பகுதியை அளவிடச் சென்ற அளவையியல் திணைக்களத்தினர் கல்லோயா திட்டத்திற்காக அழிக்கப்பட்ட பகுதியானது அடர்த்தியான இயற்கைக் காடாக இருந்ததையும் அங்கு ஏராளமான காட்டுயிர்கள் வாழ்ந்ததையும் ஆவணப்படுத்தியுள்ளனர். இத்திட்டத்தின் தொடக்கத்தில் அழிக்கப்பட்ட காடுகள் திட்டமிடப்படாத வகையில் அழிக்கப்பட்டன. இப்பகுதிகளில் இருந்து பல உயிரினங்கள் மறைந்தன. இன்னும் பல இடம்பெயர்ந்தன. இது உயிர்ப் பல்வகைமையில் மிகப் பாரிய தாக்கத்தை உண்டு பண்ணியது. ஆனால் இவ் விடயங்கள் திட்டமிடலின் போது கணிப்பில் கொள்ளப்படவில்லை. இது குறித்த தரவுகள் எதுவும் இல்லை. இலங்கையின் காடழிப்பு குறித்த அறிக்கைகள் கூட விவசாயத்திற்கு நிலம் தேவைப்பட்டதன் விளைவால் உலர்வலயத்தில் காடுகள் அழிக்கப்பட்டன என்ற குறிப்புடன் நிறுத்திக் கொள்கின்றன. ஆனால் அதன் சூழலியல் பரிமாணம் குறித்த அக்கறை குறைவு. குறிப்பாக இந்த அபிவிருத்தித் திட்டத்திற்கு தொடர்ச்சியான சர்வதேச அபிவிருத்தித் திட்டங்களின் உதவிகள் கிடைத்தன. அதைப் பெறுவதற்கும் தக்கவைப்பதற்கும் இப் பிரதேசத்தின் சூழலியல் மற்றும் உயிர்ப் பல்வகைமை ஆகியன குறைமதிப்பீட்டுக்கு உள்ளாகின.

## நிறைவுக் குறிப்புகள்

சுதந்திர இலங்கையின் குடியேற்றத் திட்டங்கள் குறித்து நாம் ஆழமாக நோக்குகிற போது சில முக்கியமான முடிவுகளுக்கு வரமுடியும். அம் முடிவுகள் இன்றும் எம் சமூகத்தில் நிலவுகின்ற முக்கியமான சில தவறான முன்முடிவுகளை எடுத்துக் காட்டவல்லன. இத் திட்டங்கள் அனைத்தும் இன்றும் 'இலங்கையரின் நலனுக்கு இலங்கையரால்' மேற்கொள்ளப்பட்டவை என்ற தேசியவாதக் கதையாடலைக் கொண்டுள்ளன. ஆனால் இவை இலங்கையரால் மட்டும் மேற்கொள்ளப்படவில்லை. அதே வேளை இலங்கையின் பாரம்பரிய நீர்ப்பாசன முறைகளன்றி மேற்கத்தேய முறைகளே இங்கு பின்பற்றப்பட்டன. இது இந்தத் திட்டத்தின் தோல்விக்கு முக்கியமான காரணம் என பிரையன் பவ்வன் பேர்கர் '*The Harsh Facts of Hydraulics: Technology and Society in Sri Lanka's Colonization Schemes*' என்ற தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார். இலங்கையின் குடியேற்றத் திட்டங்கள் பற்றிய தனது நீண்ட கட்டுரையை பின்வருமாறு நிறைவு செய்கிறார்:

"புவியீர்ப்புபாய்ச்சல் நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் தொடர்பான இலங்கையின் அனுபவம், மேற்கத்திய தொழில்நுட்பத்தை மூன்றாம் உலக நாடுகளில் பிரதி செய்வதால் ஏற்படும் ஆபத்துகளுக்கு இன்னுமொரு உதாரணத்தை வழங்குவதாகத் தெரிகிறது. குறிப்பாக அவை ஏற்படுத்தும் சமூக அசமத்துவம் முக்கியமானது. தொழில்நுட்பம் நடைமுறைக்கு வந்தவுடன், அதனுடைய உள்ளார்ந்த தர்க்கமானது, மேற்கத்தேய பயிற்சி பெற்ற பொறியாளர்களின் சமூக மற்றும் கலாசார பரிமாணங்களின் மீதான ஆர்வமின்மையுடன் இணைந்து கொள்கிறதா? இது தொழில்நுட்ப அமைப்பின் பயன்பாடு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றில் முதலாளித்துவ வர்க்க உறவுகளின் கட்டமைப்பை மீண்டும் உருவாக்கி நயவஞ்சகமாக செயல்படுகிறது.

பாரம்பரிய நீர்ப்பாசன முறைகள் தொடர்பான இலங்கையின் சொந்த அனுபவம், நிலத்திற்குப் பதிலாக தண்ணீருக்கு உரிமைகள் ஒதுக்கப்பட்டால், ஈர்ப்புஓட்ட அமைப்புகளில் சமத்துவம் சாத்தியமாகும் என்பதைக் காட்டுகிறது. ஆனால் காலனித்துவ

திட்ட நீர்ப்பாசன தொழில்நுட்பத்தின் சமூக வடிவமைப்பு ஒரு வரலாற்று சூழலில் எழுந்தது. இது பாரம்பரிய அமைப்பின் முக்கிய அம்சமாக இருந்த மிகவும் விவேகமான மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாக தகவமைக்கப்பட்ட நீர்ப் பங்கீட்டு முறைகளைத் தவிர்க்கும் நவீன முறைக்கு மாறியது. பல்வேறு காரணங்களுக்காக, இலங்கையின் தேசியவாத உயரடுக்கு, இந்த புதிய வடிவமைப்பு (கொலனித்துவக் குடியேற்றத் திட்டங்கள்) குறைபாடுடையதாக இருந்தாலும், அது மகத்தான அரசியல் மதிப்புடையதாக இருப்பதைக் கண்டறிந்தது. எனவே அவர்கள் அதன் குறைபாடுகள் வெளிப்படையாகத் தெரிந்த பின்னரும் அதை ஏற்றுக்கொண்டு பராமரிக்கின்றனர்." பவ்வன் பேர்கர் இதன் மூலம் சொல்கின்ற செய்தி தெளிவானது. ஒருபுறம் தேசியவாதப் போதையின் வழி குடியேற்றத் திட்டங்களை அணுகுகின்ற அரசியல் அடுக்கினர் மறுபுறம் அதற்கு நேரெதிராக அந்நியச் செயன்முறைகளை நடைமுறைப்படுத்தி சுதேசிய வழிமுறைகளை மறுதலிக்கின்றனர். இதன்மூலம் அவர்களது வர்க்க நிலைப்பாடுகள் தெளிவாகின்றன.

இக் குடியேற்றத் திட்டங்களின் நோக்கங்களில் ஒன்றான விவசாயம் எதிர்பார்த்த பலனைத் தராத போது விவசாயத்தை மேம்படுத்த பூச்சிக்கொல்லிகள், புதியவகை மகசூல்கள், இரசாயன உரங்கள் என்பன அறிமுகப்படுத்தப்பட்டன. இவை ஒருபுறம் பயிரிடும் நிலத்தையும், சூழலையும், உயிர்ப் பல்வகைமையையும் பாதித்தன. மறுபுறம், இவற்றின் பயன்பாட்டால் நல்ல விளைச்சலை உறுதிசெய்ய முடியவில்லை. இவற்றின் பாவனை உடல் நலன்சார் பிரச்சனைகளை அப் பகுதி மக்களுக்குக் கொண்டு வந்து சேர்த்தது.

சுதந்திரத்துக்குப் பிந்தைய குடியேற்றத் திட்டங்களின் அனுபவமானது, அபிவிருத்தி என்பது அரசியல் நோக்கங்களுக்காக செயற்படுத்தப்படும் போது அது ஏற்படுத்தும் நீண்டகால சமூகப் பொருளாதார அரசியல் சிக்கல்களிற்கு நல்லதொரு எடுத்துக்காட்டு. இக்குடியேற்றத் திட்டங்களை செயற்படுத்துவதில் இனத்துவ ரீதியில் தமிழராக இருந்த பலர் முக்கிய பங்காற்றியிருக்கிறார்கள். அதில் சிலர் இத் திட்டங்கள் எவ்வாறு இலங்கையின் அபிவிருத்திக்கு பங்களித்தது என்றும் எழுதியிருக்கிறார்கள். இவை இன்னொரு கோணத்தில் வர்க்க நலன்கள் எவ்வாறு இனத்துவ முரண்பாடுகளுக்கு வழியமைத்தன என்பதைக் காட்டுகிறது. தேசியவாத புகை மூட்டத்துக்குள் இருந்து வெளியேறாமல் அறிவுப்புல ரீதியில் அரசியலையும் அபிவிருத்தியையும் நோக்க முடியாது.


1. Peebles, P. 1990. Colonization and Ethnic Conflict in the Dry Zone of Sri Lanka. The Journal of Asian Studies, 41(1): 3055.

2. Arumugam, S. 1969. Water Resources of Ceylon: Its Utilisation and Development. Colombo: Water Resources Board.

3. de Silva, I. M. 1958. The Gal Oya scheme. Paper for Center on Principles and Policies of Land Settlement for Asia and the Far East, November 21, 1958. Colombo: Gal Oya Development Board.

4. மேலதிக தகவல்களுக்கு பார்க்க: Denham, E. B. 1912. Ceylon at the Census of 1911. Being the Review of the Results of the Census of 1911. Colombo: Government Printer.

5. Moore, M. 1985. The State and Peasant Politics in Sri Lanka. Cambridge: Cambridge University Press.

6. Report of the Gal Oya Project Evaluation Committee. Sessional Paper No. I – 1970. Ceylon: Department of Government Printing.

7. Jayasuriya, W. 1963. Some Aspects of Colonization in Gal Oya Valley. The Ceylon Journal of Historical and Social Studies, 6(2): 181 186.

8. Uphoff, N. 1996. Learning from Gal Oya: Possibilities for participatory development and postNewtonian social science. New York: Cornell University Press.

9. FAO, 1975. Water management for irrigated agriculture (Gal Oya irrigation scheme), Sri Lanka: Project findings and recommendations. Rome: Food and Agriculture Organization of the United Nations.

10. Chanmugam, J. C. 1976. Gal Oya odyssey. Journal of the Ceylon Survey, 34 (2):4854.

11. Pfaffenberger, B. 1990. The Harsh Facts of Hydraulics: Technology and Society in Sri Lanka's Colonization Schemes. Technology and Culture, 31(3):361397.


(தொடரும்)

இலங்கை முஸ்லிம்கள் குறித்து பண்பாட்டு மானிடவியல் ரீதியான ஆய்வுகளை மானிடவியல் ஆய்வு மரபுகளைப் பின்பற்றி முறையான பரந்துபட்ட வகையில் மேற்கொண்டவர் பேராசிரியர் டெனிஸ் மெக்கில்ரே. அமெரிக்கரான டெனிஸ் மெக்கில்ரே கொலராடோ பல்கலைக்கழகத்தின் மானுடவியல் துறைப் பேராசிரியர். இலங்கைத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் குறித்த பரந்துபட்ட மானிடவியல் ஆய்வுகளை மேற்கொண்ட மேற்கத்தேயப் பேராசிரியர்களுள் மிக முக்கியமானவர் மெக்கில்ரே. குறிப்பாக கிழக்கிலங்கைத் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் பண்பாட்டு மானிடவியல் மரபுகள், தொன்மங்கள், பண்பாட்டுக் கூறுகள் குறித்த விரிந்த ஆய்வுகளை மேற்கொண்டு அதனை உலகப் பரப்புக்குக் கொண்டு சென்றவர் என்ற வகையில் இலங்கைத் தமிழர்களும், முஸ்லிம்களும் அவருக்குக் கடமைப்பட்டுள்ளனர். இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, மானிடவியல் மரபுகள், தொன்மங்கள் பற்றிய அவரது சமூகவியல் நோக்கிலான ஆய்வுகள் மற்றும் கள ஆய்வுகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் ‘டெனிஸ் மெக்கில்ரே ஆய்வுகளில் தமிழரும் முஸ்லிம்களும் : பண்பாட்டு மானிடவியல் நோக்கு‘ எனும் தலைப்பில் வெவ்வேறு உப தலைப்புகளுடன் வெளிவரும்.




**ஜிஃப்ரி ஹாசன்**

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனையைச் சேர்ந்த ஜிஃப்ரி ஹாசன் அவர்கள் சப்ரகமுவப் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையில் பட்டம் பெற்றவர். மேலும் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வியியலிலும் பட்டப்பின் டிப்ளோமா பட்டம் பெற்ற இவர், தற்போது ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிகிறார்.
சிறுகதை, கவிதை, இலக்கிய விமர்சனம், பண்பாட்டு ஆய்வு, மொழிபெயர்ப்பு என விரிந்த தளத்தில் தீவிரமாக இயங்கி வருபவர். இவரது ‘போர்க்குணம் கொண்ட ஆடுகள்’, ‘அகாலத்தில் கரைந்த நிழல்’ ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. கட்டுரை, கவிதை, மொழிபெயர்ப்பு சார்ந்து இவரது நூல்கள் பல வெளிவந்துள்ளன.
இலங்கை முஸ்லிம் பண்பாடு, சமூகவியல், ஈழ இலக்கியம், சிங்கள இலக்கியம் முதலான கருபொருள்களில் ஆழமான கட்டுரைகளை எழுதியுள்ளார்.


## அரபுக்கள், சோனகர், முஸ்லிம்கள்:

# இலங்கை முஸ்லிம் இனத்துவ அடையாளத்தின் பரிணாமம்

இலங்கைச் சோனகத் தலைமையானது, ஒரு தனித்துவமான இலங்கைஅரபு அடையாளத்தை (Ceylonese - Arab identity) வளர்ப்பதற்கான நோக்கில், இலங்கைச் சோனகர் மத்தியில் வளர்ந்துவந்த பொது விசுவாசத்தை புறக்கணித்தது. அமீர் அலி குறிப்பிட்டுள்ளபடி, இந்த நூற்றாண்டின் (இருபதாம்) தொடக்கப் பகுதியில், இலங்கைச் சோனக உயர் குழாத்தினர், எகிப்துக்குத் திரும்புவதற்கு ஏங்கிக் கொண்டிருந்த, நாடுகடத்தப்பட்ட அதிருப்தியாளரான அரபி பாஷாவின் மீது ஒருவித நாடக விசுவாசத்தைப் பிரதிபலிக்கும் வகையில் இருந்தனர் (அசாத் 1993: 42-43). அத்துடன் உஸ்மானிய கிலாபத்தின் (துருக்கிய/ ஒட்டோமன் அரசு) மீதான பெருமிதத்திலும் இருந்தனர். டமஸ்கஸ்ஸிலிருந்து மதீனா வரையிலான ஹெஜாஸ் ரயில் பாதையை கட்டுவதற்கு அவர்கள் நிதி நன்கொடை அளித்ததை தங்களுக்கும் பெருமிதமாகக் கருதிக் கொண்டனர். பிரித்தானிய அரசுக்கும் அர்ப்பணிப்புடன் இருந்தனர். அதேநேரம், இலங்கை தேசியவாதத் தலைவர்களிடம் தங்களின் நம்பகத்தன்மையை ஆழமாக சமரசமும் செய்தனர்.

இலங்கைச் சோனகரைப் போலவே, தமிழ்நாட்டின் மரக்காயர் முஸ்லிம்களும், கேரளாவின் உயர் குழாத்தினரான மாப்பிளாக்களும் தங்கள் ஆதிகால இந்தோஅரபு வம்சாவளியைப் பற்றி பெருமை பேசினர். ஆனால் இலங்கைச் சோனகர்கள், இலங்கையின் முழு உரிமை பெற்ற பூர்வ குடிமக்கள் என்ற அவர்களது உரிமைகளை குறைமதிப்புக்கு உட்படுத்தும் என்ற காரணத்தினால் அத்தகைய தென்னிந்திய ‘இனத்துடன்’ இணைவதற்கு தயங்கினார்கள். 19 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் பெருந்தோட்டப்



ஐ.எல்.எம். அஸீஸ்
Image Source - chakkaram.com

பொருளாதார விரிவாக்கத்தின் போது, ஏற்றுமதி/இறக்குமதித் துறைகளில் இருந்தும், பிற உள்ளூர் சந்தைகளிலிருந்தும் குடியேறிய தென்னிந்திய முஸ்லிம்கள் (கரையோரச் சோனகர்கள் என்று அழைக்கப்படுபவர்கள்) இலங்கை முஸ்லிம் வர்த்தகர்களை திறம்பட வெளியேற்றினர். இது அவர்கள் மீது இலங்கை முஸ்லிம்களுக்கிருந்த வெறுப்பை மேலும் வலுப்படுத்தியது. ஆனாலும் இறைபக்தி மற்றும் வெற்றிகரமான பொருளாதார நடவடிக்கைக்கு முன்மாதிரியாக விளங்கிய இந்த வெற்றிகரமான இந்திய முஸ்லிம் சகோதரர்கள் குறித்து இலங்கைச் சோனகர் ஒருவித இரட்டை நிலைப்பாட்டையே வெளிப்படுத்தினர். சில சமயங்களில் கொழும்பு பத்திரிகைகளில் கூட அவர்களைப் பாதுகாத்தனர். ஆனால் அதே நேரத்தில் அவர்களின் புறமொதுக்கும் வர்த்தக நடைமுறைகள், அவர்களின் கூர்மையான வர்த்தகப் பரிவர்த்தனைகள், மத விசயங்களுக்கான அவர்களின் அதிகரித்த செலவுகள் குறித்து வெறுப்பும் இருந்தது (அலி 1980: அத் 67,1981 b: 14). இந்தப் போட்டியின் எதிரொலிகளை 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கொழும்பில் உள்ள பள்ளிவாசல்களில் மலாயர்களுக்கும், கரையோரச் சோனகர்களுக்கும் இடையில் நடந்த தங்களது உரிமைகள் குறித்த பொறாமைச் சச்சரவுகள் பற்றிய பதிவுகளில் காணலாம். அவ்வாறே 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏனைய இலங்கை இனக்குழுக்களும் அப்போது மேற்கிளம்பி இருந்த இரு முக்கிய ஐரோப்பிய கருத்தியல்களான 'மரபினம்' (*race*) மற்றும் தந்தை வழி 'இரத்த உறவு' ஆகியவற்றின் அடிப்படையில் தங்களது அடையாளங்களை வடிவமைத்துக் கொண்டிருந்தனர். ஐ.எல்.எம். அஸீஸ் பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் வெற்றிகரமான இனச் சிறுபான்மையினராக மேம்பட்ட பம்பாயின் பார்சிகளை உதாரணமாகச் சுட்டிக்காட்டினார் (அஜீஸ் 1907: 15).

இறுதிப் பகுப்பாய்வில், இலங்கைச் சோனகர்கள் இலங்கை பேர்கர்களின்/ பறங்கியர்களின் (*Burghers*) உத்தியைப் பின்பற்றினர். அவர்கள் தங்களின் இன அடையாளமாக தாய்வழி லூசோ சிலோனிஸ் வம்சாவளி மரபைத் துறந்து தூரத்து தந்தைவழி டச்சு 'இன' வம்சாவளியை வலியுறுத்தினர்.

வீட்டில் பேசும் போதும் மற்றும் பாடும்போதும் மிகவும் உயிரோட்டமான வடமொழியை (போர்த்துகீசிய கலப்பு மொழி) பயன்படுத்திய அவர்கள் சாகும் தறுவாயிலிருந்த டச்சு மொழியை தங்களின் பூர்வீகப் பெருமிதமாக புகழ்ந்துரைத்தனர். வடக்கு ஐரோப்பிய குடும்ப மூலத்தை தமது வரலாறாக முன்வைத்த ஓர் இனத்துவ அமைப்பின் மூலம் தங்களுக்கு நன்மை பயக்கும் வகையிலான அரசியல் சூழலையும் வலியுறுத்தினர். பின்னர், 1944 இல் செனட்டர் ஏ.ஆர்.ஏ. ராசிக் (பின்னர் சேர் ராசிக் ஃபரீத்) அவர்களினால் உருவாக்கப்பட்ட சோனக இஸ்லாமிய கலாசார இல்லமானது, டச்சு பேர்கர் யூனியன் பேர்கர்களுக்காக 1908 ஆம் ஆண்டு முதல் வெளியிட்டு வந்த வரலாற்று கட்டுரைகள் போன்று, சோனக சமூகத்தின் இனத்துவ மூலம் குறித்த வரலாற்றுக் கட்டுரைகளை வெளியிடத் தொடங்கியது (ஜாக்சன் 1990; மரிக்கார் மற்றும் பலர்., *eds*. 1976; *McGilvray* 1982*a*; *Moors's Islamic Cultural Home* 1965, 1970, 1978, 1983, 1994; *Roberts et al*. 1989).

எவ்வாறாயினும், 20 ஆம் நூற்றாண்டில், 'இலங்கைச் சோனகர்' அடையாளத்தின் சமூகக் கட்டுமானம் சவாலுக்குட்படுத்தப்படவில்லை அல்லது சவால் நிலையானதாக இருக்கவில்லை (இஸ்மாயில் 1995). சோனகர்களின் தோற்றம் கலவையானதும், பன்மையானதுமாக இருந்தபோதிலும், அவர்களின் மரபினம்

இலங்கைச் சோனகரைப் போலவே, தமிழ்நாட்டின் மரக்காயர் முஸ்லிம்களும், கேரளாவின் உயர் குழாத்தினரான மாப்பிளாக்களும் தங்கள் ஆதிகால இந்தோஅரபு வம்சாவளியைப் பற்றி பெருமை பேசினர். ஆனால் இலங்கைச் சோனகர்கள், இலங்கையின் முழு உரிமை பெற்ற பூர்வ குடிமக்கள் என்ற அவர்களது உரிமைகளை குறைமதிப்புக்கு உட்படுத்தும் என்ற காரணத்தினால் அத்தகைய தென்னிந்திய 'இனத்துடன்' இணைவதற்கு தயங்கினார்கள்.




மாக்கன் மாக்கர்

Image Source - touchstamps.com

குறித்து 'அரபு எதிர் தமிழ்' எனும் இருவகை இன மூலங்களை முன்வைத்துக் கிளம்பிய விவாதம், அரசியல் போட்டித்தன்மையுடன் பல ஆண்டுகளாக நீடித்தது.

இருப்பினும், நூற்றாண்டின் நடுப்பகுதியில், முஸ்லிம் சமூகத்துக்குள்ளேயே ஒரு குழு தமது இனப்பெயராக 'மூர்' என்ற அடையாளத்தையா அல்லது 'முஸ்லிம்' என்கிற அடையாளத்தையா, முதன்மைப்படுத்துவது என்ற நெடிய சர்ச்சை ஒன்றை தீவிரமாக முன்னெடுத்தது. தூய தனி அரேபியர்களை மட்டும் குறிக்கவே போர்த்துக்கேயர் மூர் எனும் பதத்தைப் பயன்படுத்தினர். இலங்கையின் சுதேச முஸ்லிம்களுக்கு இந்தப் பதத்தைப் பயன்படுத்த முடியுமா என்ற கேள்விகளும் எழுந்தன (அஸீஸ் **1907: 4;** மோகன் **1987: 2731, 117;** யூல் மற்றும் பர்னெல் **1903: 502).** அதேநேரம், 'முஸ்லிம்' என்ற அடையாளமிடலுக்கு ஆதரவானவர்கள் மொழி, இனம் போன்றவற்றைப் புறக்கணிக்கிற ஒரு பரந்த இஸ்லாமிய மத அடையாளத்தை வலியுறுத்துகின்றனர். மலாயர்கள், கரையோர சோனகர்கள் போன்றோருக்கும் இது தற்செயலாக இடமளிக்கிறது.

'சோனகர் எதிர் முஸ்லிம்' என்கிற இந்த பரபரப்பான விவாதம் இந்த இரு சாரராலும் நடத்தப்பட்ட அரசியல் மற்றும் கலாச்சார நிறுவனங்களின் பெயர்களில் பிரதிபலித்தது. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து இரண்டு போட்டியாளர்களாக செயற்பட்ட மேற்குக் கரையோர இரத்தினக்கல் வர்த்தக வம்சங்களின் அரசியல் முன்னணியாக செயல்பட்ட மாக்கான் மார்க்காரின் '*Ceylon Moor's Association*'ஐயும், அப்துல் கபூரின் '*Ceylon Muslim League*'ஐயும் இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். இந்த இரண்டு செல்வந்த வம்சங்களின் தலைவர்களும் பொறாமையுடன் பிரித்தானிய அரசு வழங்கும் பெருந்தகைப் பட்டங்களுக்கும், 'சேர்' பட்டத்துக்கும் போட்டியிட்டனர். கொழும்பு மருதானைப் பள்ளியின் நிர்வாகத்துக்கும் மற்றும் சூஃபி சகோதரத்துவத்தைக் கடைப்பிடிக்கும் இலங்கை ஷாதுலிய்யா ஒழுங்கிற்கு மாக்கான் மார்க்கார் தலைமை தாங்கினார். அப்துல் கஃபூர் காதிரிய்யா ஒழுங்கை வழிநடத்தினார் (டி ஜோங் **1986;** மரூஃப்: சமரவீர **1979: 252;** வாக்னர் **1990: 84-117). 1945** இல் ஒரு கட்டத்தில் முஸ்லிம் லீக் தலைவர்கள் முஸ்லிம் நம்பிக்கையில் இருந்து விலகி தன்னை 'மூர்' என்று சொல்லிக் கொள்ளும் எவரையும் வெளியேற்றும் ஃபத்வாவை அறிவிக்கப் போவதாக அச்சுறுத்தினர். இது போட்டியாளரான ராசிக் ஃபரீத் தலைமையிலான '*Moor's Association*'ஐ இழிவுபடுத்தும் அரசியல் தந்திரம் என்பது தெளிவாகத் தெரிந்தது (வாக்னர் **1990: 143).** *Moor's Islamic Cultural Home* இற்கு ராசிக் ஃபரீத் தேர்ந்தெடுத்த திறமையான பெயர் இலங்கை சோனகரின் மரபின, மத மற்றும் இன அடையாளத்தை ஒரே

நேரத்தில் வெளிப்படுத்தும் வகையில் இருக்கிறது. முதலாம் உலகப் போருக்கும் 1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்ததிற்கும் இடைப்பட்ட காலத்தில் சோனகரின் அரசியல் நிலவரத்தில் ஏற்ற இறக்கம் ஏற்பட்டது. அவர்களின் சுதந்திரத்திற்கு முந்தைய வரலாற்றின் மிகவும் பயங்கரமான அத்தியாயமான 1915 சிங்களமுஸ்லிம் கலவரத்தின் விளைவினாலேயே இந்நிலை ஏற்பட்டது. முஸ்லிம் கடைக்காரர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் எதிராக சிங்கள வன்முறைகள் நாடளாவிய ரீதியில் வெடித்ததற்கு பின்னணியாக அமைந்த பல காரணங்கள் குறித்து இன்னும் பரபரப்பாக விவாதிக்கப்படுகின்றன.



ராசிக் ஃபரீத்

Image Source - archives.dailynews.lk

சிங்கள பௌத்த மறுமலர்ச்சி மற்றும் பிரித்தானிய எதிர்ப்பு உணர்வு (Roberts 1994a), அல்லது முஸ்லிம் வர்த்தக நடைமுறைகளுக்கு எதிரான வெறுப்பு மற்றும் காயல்பட்டினத்தைச் சேர்ந்த கரையோர சோனகரில் ஒரு சாராரின் தீவிரமான இஸ்லாமியப் பித்துப்பிடித்த செயற்பாடுகள் (அலி 1980, 1981 பி) போன்ற மாதிரியான காரணங்களால் தூண்டப்பட்ட முஸ்லிம் எதிர்ப்புக் கலவரங்கள் ஆங்கிலேயர்களால் கடுமையாக ஒடுக்கப்பட்டது. துருக்கிய கிலாஃபத்தின் சுல்தானை உலக முஸ்லிம்கள் அனைவருக்குமான தலைவராக முன்வைக்கும் பிரித்தானிய அரசுக்கு எதிரான அரசின் தோற்றப்பாடாக மேற்கிளம்பிய இந்த நிலைப்பாட்டுக்கான ஆதரவை இலங்கை முஸ்லிம்கள் அடக்கி வாசிக்கவும், பிரித்தானிய அரசின் பாதுகாப்புக்கு முஸ்லிம்களிடம் இருந்து நன்றி விசுவாசத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடனும், பிரித்தானியா முஸ்லிம்களுக்கு ஆதரவாக அந்தச் சந்தர்ப்பத்தில் செயற்பட்டது.

உண்மையில், இங்கிருந்து சுமார் 400 மைல் தொலைவிலுள்ள கேரளாவில், கிட்டத்தட்ட இதே காலப்பகுதியில் (1992) பாரிய வன்முறைகளுடனும், இரத்தக்களரியுடனும் இடம்பெற்ற பிரிட்டிஷ் எதிர்ப்பு, இந்து விரோத 'மாப்பிளாக் கிளர்ச்சிகள்' போன்ற நடவடிக்கைகளை இங்குள்ள சோனகரிடம் கற்பனை செய்து பார்க்கவும் முடியாதளவிற்கு பிரித்தானிய இராஜ்ஜியத்தின் மீதான சோனகத் தலைமைகளின் விசுவாசம் காணப்பட்டது (இந்த விசுவாசம் மற்றைய இலங்கைச் சமூகங்களிலும் காணப்பட்டது). 1915 ஆம் ஆண்டு சிங்கள வன்முறையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட முஸ்லிம் எதிர்ப்பு வன்முறை, பொன்னம்பலம் இராமநாதன் தலைமையிலான தமிழ் உயர் குழாத்தினர் மீதான சோனகரின் மனக்கசப்புக்கும் காரணமாகியது. பிரித்தானிய நீதித்துறைக்கு எதிராக சிங்கள வன்முறையாளர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இலங்கை தேசியவாத இயக்கத்தில் தனது முக்கியத்துவத்தைத் தக்கவைத்துக் கொள்ள பொன்னம்பலம் இராமநாதன் முயன்றார். இராமநாதனின் இச்செயற்பாடு சோனகருக்கு ஆழமான மனக்காயத்தை உண்டு பண்ணியது. முஸ்லிம்களின் பார்வையில், இராமநாதனின் நிலைப்பாடு 'தமிழ் பேசும்' சமூக ஒற்றுமையின் பாசாங்குத்தனத்தை வெளிப்படுத்தியது. பின்னர் 1950, 60 களில் முக்கியமான சந்தர்ப்பங்களில் இந்நிகழ்வு சோனக அரசியல்வாதிகளால் கசப்பாக நினைவுகூரப்பட்டது (ஹசன் 1968: 101; சிவத்தம்பி 1987: 204).

(தொடரும்)

சேர்.பொன். அருணாசலம் (1853–1924) தமிழர்களின் அரசியலில் முக்கியமான வகிபாகத்தைப் பெற்றிருந்த ஒருவராவார். இவரைப் பற்றி ஆங்கிலத்திலும் தமிழிலும் வாழ்க்கை வரலாறு, அரசியல் விமர்சனம் என்ற வகையிலான நூல்களும் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. குறித்த நூல்களையும் கட்டுரைகளையும் ஒருசேரத் தொகுத்து நோக்குவதும் விமர்சன முறையிலான மதிப்பீட்டையும் புரிதலையும் தமிழ் வாசகர்கள் மனதில் உருவாக்குவதும் இத் தொடரின் நோக்கமாகும். ஆய்விற்குரிய ஒரு விடயப்பொருள் குறித்த பன்முகப் பார்வையினை வழங்கும் 'A Reader' என்ற வகை நூல்கள் இன்றைய காலத்தின் தேவையாகும். சேர்.பொன். அருணாசலம் அவர்களின் நூற்றாண்டை நினைவுகூர்தலின் பொருட்டும், நூல் ஒன்றை வெளியிடும் 'எழுநா'வின் திட்டத்தின் ஆரம்பப் பணியாகவும் இக் கட்டுரைத் தொடர் 'சேர்.பொன். அருணாசலம் : வாழ்வும் பணிகளும் ஒரு பன்முகப் பார்வை' என்ற தலைப்பில் அமைகிறது.

ஆங்கிலம் மூலம் : குமாரி ஜெயவர்த்தன

# பொன்னம்பலம் குமாரசாமி குடும்பம்



கந்தையா சண்முகலிங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது. 'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.



அருணாசலம் பொன்னம்பலம்

Image Source - en.wikipedia.org

*(சேர்.பொன். அருணாசலத்தின் குடும்பப் பின்னணியையும், அவரது மாமன் சேர். முத்துக்குமார சுவாமி, அவரது தமையன் சேர்.பொன். இராமநாதன் என்போர் பற்றியும், இலங்கையின் சிவில் சேவை உத்தியோகத்தராகவும் பின்னர் தமிழர்களின் அரசியல் தலைவர்களில் ஒருவராகவும் விளங்கிய சேர்.பொன் அருணாசலம் பற்றியும் விமர்சன நோக்கில் எழுதப்பட்ட இக்கட்டுரையை இத்தொடரின் முதலாவது கட்டுரையாக தருகின்றோம். குமாரி ஜெயவர்த்தன அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய நூல் 'அநாமதேயங்களாக இருந்தோர் அறியப்பட்டவர்களானமை – இலங்கையின் காலனித்துவ முதலாளித்துவ வகுப்பின் தோற்றம்' என்ற தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளது. இந் நூலின் பதினோராவது அத்தியாயத்தில் பக்கம் 190 – 206 வரையான பக்கங்களில் 'பொன்னம்பலம் குமாரசாமி குடும்பம்' என்ற தலைப்பின் கீழ் அமைந்த பகுதி இங்கே தரப்பட்டுள்ளது. சேர்.பொன். அருணாசலம் அவர்களின் வாழ்க்கையும் பணிகளும் பற்றிய புரிதலின் தொடக்கப் புள்ளியாக பொன்னம்பலம் குமாரசுவாமி குடும்பம் கட்டுரை அமைகின்றது.)*

19 ஆம் நூற்றாண்டிலும் 20 ஆம் நூற்றாண்டிலும் அரச உத்தியோகங்களாலும் வர்த்தகம், தனியார் துறை முயற்சிகள் ஆகியவற்றாலும் செல்வாக்குடையவனவாய் விளங்கிய தமிழ் குடும்பங்களில் பொன்னம்பலம் குமாரசாமி குடும்பம் ஒன்றாகும். இக்குடும்பம் பெரும் செல்வம் படைத்த வர்த்தகருடைய குடும்பங்களுடன் உறவுமுறை பிணைப்பு உடையதாக விளங்கியதோடு அரசியல் அதிகாரத்தை உடையதாகவும் விளங்கியது. தேசிய மட்டத்திலும் சர்வதேச நிலையிலும் சிறந்தோங்கிய முத்துக்குமாரசுவாமி, அவரது மகன் ஆனந்த குமாரசுவாமி, பொன்னம்பலம் இராமநாதன், பொன்னம்பலம் அருணாசலம் ஆகிய புகழ்மிக்க தனிநபர்கள் இக்குடும்பத்தில் தோன்றினர். தமிழர்களுக்குச் சட்ட சபையில் ஒதுக்கப்பட்ட இடத்தின் ஏகபோக உரிமையை இக்குடும்பத்தின் உறுப்பினர்கள் அனுபவித்தார்கள். இவர்களுக்கு பல பட்டங்களும் வழங்கப்பட்டன. இவ்வாறு சில குடும்பங்கள் ஏன் உயர்ச்சி பெற்றன, வெற்றிப் பாதையில் சென்றன என்பதைப் புரிந்து கொள்வதற்கு அவற்றின் அரசியல் சமூக முன்னேற்றத்தின் மூலத்தை அறிதல் வேண்டும். இரண்டு, மூன்று தலைமுறையினரின் வரலாற்றுக்கு அப்பால் புனைவுகளும், மிகைப்படுத்தல்களும் நிறைந்த தெளிவற்ற வரலாறாக இக்குடும்பத்தின் பூர்வீகம் அமைகின்றது. முக்கியமான நபர்களின் பெற்றோர், பாட்டன் ஆகியவர்களின் சரிதங்களில் இருந்து இக்குடும்பத்தின் வரலாறு பற்றிய சில தடயங்களைக் கண்டு கொள்ள முடியும்.

பருத்தித்துறையைச் சேர்ந்த ஆறுமுகம்பிள்ளையின் மகன் வாரித்தம்பி டச்சு ஆட்சியின் பிற்பகுதியில் கொழும்புக்கு வந்து குடியேறினார். இது அவரின் புத்திசாலித்தனமான முடிவு. கொழும்பு செட்டித் தெருவில் தங்கியிருந்து வர்த்தகத்தில் ஈடுபட்ட வாரித்தம்பி தனது இளைய சகோதரர் குமாரசுவாமியை (1783 - 1836) கொழும்புக்கு வரும்படி சொல்லியனுப்பினார். கொழும்பு வந்த குமாரசுவாமிக்கு கவர்னர் நோர்த் 1799 இல் தொடக்கி வைத்த கொழும்பு அக்கடமியில் ஆங்கிலக் கல்வி போதிக்கப்பட்டது. இங்கு படித்தவர்கள் அரசாங்கத்தில் மொழிபெயர்ப்பாளர்களாக வேலை செய்தனர். 1805-1808 காலத்தில்





Image Source - venpaa.lk

கொழும்புத் துறைமுக நீதவான் மன்றின் மொழிபெயர்ப்பாளராகக் குமாரசுவாமி கடமையாற்றினார். 1810 இல் அவர் ஆளுநரின் பிரதம மொழிபெயர்ப்பாளரானார். அவருக்கு முதலியார் பட்டத்தை வழங்கி அரசாங்கம் கௌரவித்தது. 26 வயதுடைய இந்த யாழ்ப்பாணத்துத் தமிழர் அரசின் மிக உயர்ந்த பதவியொன்றைப் பெற்றார். 1815 இல் பிரித்தானியர் கண்டியைக் கைப்பற்றியபோது, பிரிட்டிஷ் படைகளுடன் சென்ற குமாரசுவாமி கண்டியின் அரசன் அரச பதவியில் இருந்து நீக்கப்பட்டு புகலிடம் பெறுதல் வரையான மாறுதல் காலத்தில் இடை நின்று உதவினார். கண்டி அரசனின் பூர்வீகம் தென்னிந்தியா ஆதலால், குமாரசுவாமியின் தமிழ் - ஆங்கில மொழிபெயர்ப்புச் சேவை மிகவும் அவசியமானதாக இருந்தது. குமாரசுவாமி பிரித்தானிய அரசருக்கு செய்த சேவைக்காக 1819 இல் ஆளுநர் பிரவுண்றிக்கினால் தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார் (வைத்திலிங்கம் 1971: 36-43). குமாரசாமி குடும்பத்தின் உயர்ச்சி அவர்கள் எடுத்த இரு முடிவுகளினால் சாத்தியமாயிற்று. முதலாவது காலனித்துவ இலங்கையில் மையமான

1816 ஆம் ஆண்டில் ஆங்கில இளவரசருக்கு செய்த மனுவில் குமாரசுவாமி இலங்கையில் அடிமைமுறை ஒழிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். இலங்கை முழுவதிலுமாக அக்காலத்தில் 28,000 அடிமைகள் இருந்தனர். இவர்களுள் யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களில் இருந்தோர் 22,000 ஆகும். குமாரசுவாமி அக்காலத்தில் பிரதம நீதியரசராக இருந்த அலெக்சாண்டர் யோன்ஸ்ரனின் செல்வாக்குக்கு உட்பட்டவராய் இருந்தார்.



பொன்னம்பலம் குமாரசுவாமி

Image Source - ta.wikipedia.org

கொழும்பிற்கு இடம்பெயர்வது என்ற முடிவு. இரண்டாவது ஆங்கிலத்தில் அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற முடிவு. இவற்றின் பயனாய் குமாரசுவாமி குடும்பம் சமூக ஏணிப்படியில் உயரவும், பொருளாதார முன்னேற்றம் அடையவும் முடிந்தது. அரசியல் நன்மைகளையும் இக்குடும்பம் பெற்றுக்கொண்டது.

கொழும்புக்கு வந்து சேர்ந்த குமாரசுவாமியும், பிற யாழ்ப்பாணத்துத் தமிழர்களும் செட்டித் தெருவுக்கு அண்மையில் செட்டிகள் குடியிருப்பில் தங்கினர். தென்னிந்தியாவின் திருநெல்வேலியைச் சேர்ந்த செட்டிகள், தனவைசியர் சாதியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் போர்த்துக்கேயர் ஆட்சியின் போது இலங்கைக்குக் குடிபெயர்ந்தனர். உள்ளூரில் விவாகம் செய்து கொண்ட செட்டிகள் சிலர் கிறிஸ்தவர்களாயினர். டச்சு ஆட்சியின் போது செட்டிகளில் இரு பிரிவினர் இருந்தனர். கிறிஸ்தவர் ஒரு பிரிவினர். இன்னொரு பிரிவினர் இந்துக்கள். செட்டிகளிற்கு குழுத்தலைவர்கள் இருந்தனர். 1833 அளவில் கூட கொழும்புத் தமிழர்களில் செட்டிகளே அநேகராயிருந்தனர் (அசரப்பா 1933). பலர் இந்தியா சென்று உயர்கல்வி கற்றனர். 19 ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியில் உயர்தொழில்களில் சிறந்து விளங்கிய செட்டிகள் பலர் கொழும்பில் இருந்தனர்.

கொழும்புக்குப் புதிதாக வந்து சேர்ந்த யாழ்ப்பாணத் தமிழர்கள் செட்டிகளோடு கொண்ட தொடர்பால் நன்மை பெற்றனர். செட்டிகள் வியாபாரத்தில் அறிவும், மதிநுட்பமும் மிக்கவர்கள். அவர்கள் கல்வியில் முன்னேறியவர்களாயும் நாகரிக மேம்பாடுடைய வாழ்க்கை முறைகளைக் கொண்டவர்களாயும் இருந்தனர். செட்டிகளிற்கும் கொழும்புக்கு வந்து சேர்ந்த யாழ்ப்பாணத்தவர்களுக்கும் நெருங்கிய தொடர்புகள் ஏற்பட்டன. கலப்புத் திருமணங்களும் இடம்பெற்றன. அத்தோடு போட்டியும், பூசலும் கூட வளரலாயிற்று. யாழ்ப்பாணத் தமிழர் கொழும்பில் தம் நிலையைப் பலப்படுத்திக் கொண்ட பின்னர் 1830 இல் முதன் முதலாக ஒரு போட்டி ஏற்பட்டது. கொழும்புச் செட்டிகளின் தலைவர் ஒருவரைத் தேர்ந்து கொள்ள வேண்டும். இதற்கான போட்டியில் கொழும்பு நகரின் செல்வந்தரான சாராயக் குத்தகைக்காரர் தியாகப்பா என்ற செட்டியை எதிர்த்து குமாரசுவாமி போட்டியிட்டார். அப்போட்டியில் குமாரசுவாமி வெற்றி பெற்றார். ஆளுநர், வெற்றிபெற்ற

குமாரசுவாமியை தலைமைப் பதவியில் அமர்த்தியதோடு 'தங்கத்தால் செய்யப்பட்ட பூண் போட்ட மலாக்கா பிரம்புக் கைத்தடியை அப்பதவியின் அடையாளச் சின்னமாக' பரிசளித்துக் கௌரவித்தார். கைத்தடியின் பூணில் ஆங்கில நாட்டு ஆயுதங்கள் சித்திர வேலைப்பாடாக பதிக்கப்பட்டிருந்தன (வைத்திலிங்கம் 1971: 45). கௌரவம் மிக்க பதவிகளுக்கு ஆட்களை நியமிக்கு முன்னர் நியமனம் பெறுவோரின் சமூகப் பின்னணியை - வேர்களைக் கண்டறியும் தேவையும் இருந்தது. கொழும்புச் செட்டிகள் குமாரசுவாமியின் நியமனத்தை எதிர்த்தனர். அவர் வேளாளர் சாதியைச் சேர்ந்தவர் அல்லவென்றும், அநாமதேயமான ஒருவர் தம்மை ஒரு முக்கியஸ்தராக காட்டிக்கொள்ள முயற்சிக்கிறார் என்றும் குற்றம் சாட்டினார். குமாரசுவாமி வேளாளரே என்பது நிரூபிக்கப்பட்டு அவருடைய நியமனம் உறுதிப்படுத்தப்பட்டது. குமாரசுவாமி 1835 ஆம் ஆண்டில் சட்டசபையின் முதலாவது உத்தியோகப் பற்றற்ற தமிழ் உறுப்பினராக நியமனம் பெற்றார். அவர் சிறிது காலத்தின் பின் மரணம் எய்தினார். குமாரசுவாமி குடும்பத்தின் முற்போக்கு மனப்பாங்கு, ஆரம்பம் முதலே வெளிப்படலாயிற்று. 1816 ஆம் ஆண்டில் ஆங்கில இளவரசருக்கு செய்த மனுவில் குமாரசுவாமி இலங்கையில் அடிமைமுறை ஒழிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். இலங்கை முழுவதிலுமாக அக்காலத்தில் 28,000 அடிமைகள் இருந்தனர். இவர்களுள் யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களில் இருந்தோர் 22,000 ஆகும். குமாரசுவாமி அக்காலத்தில் பிரதம நீதியரசராகவிருந்த அலெக்சாண்டர் யோன்ஸ்ரனின் செல்வாக்குக்கு உட்பட்டவராய் இருந்தார். அலெக்சான்டர் யோன்ஸ்ரன் சுதந்திரம், சமத்துவம் என்பவற்றைப் போற்றிய ஒருவராக இருந்தார். குமாரசுவாமி மிக விரைவிலேயே கொழும்புச் சமூகத்தில் மதிப்புக்குரிய தமிழர் என்ற அந்தஸ்தைப் பெற்றார். பொது வைபவங்களிலும், திருமணங்களிலும் அவர் பங்கு பற்றிச் சிறப்புச் செய்வார். 'குமாரசுவாமி முதலியார் அலங்காரமாக உடையணிந்து வருவார். அவரை நிலபாவாடை விரித்து, குடை பிடித்து வரவேற்பர். அவரை இரட்டைக் கம்பளம் விரித்த இருக்கையில் உட்கார வைப்பர்' என்று திருமண வைபவங்களில் அவருக்கு நிகழும் வரவேற்பு உபசாரம் பற்றிக் கூறப்படுகிறது (மேலது: 46). பிரபல வர்த்தகராக இருந்த இ. நன்னித்தம்பியின் சகோதரியும், வைரவநாத முதலியாரின் புத்திரியுமான விசாலாட்சி என்பவரை குமாரசுவாமி விவாகம் செய்தார். இவ்விவாக பந்தம் அவரது அந்தஸ்தைப் பலப்படுத்த உதவியது.

அருணாசலம் பொன்னம்பலம் (1814 -87) அடுத்த நிலையில் முக்கியம் பெற்ற ஒருவராவர். பொன்னம்பலம் சிறுவனாக இருந்த போது தந்தையை இழந்தார். அவரது தாயார் அரிய புத்திரன் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். மானிப்பாயில் இருந்து கொழும்பு வந்த பொன்னம்பலம், குமாரசுவாமியின் கொழும்பு வீட்டில் தங்கிப் படித்தார். 1844 ஆம் ஆண்டு பொன்னம்பலம், குமாரசுவாமியின் மகள் செல்லாச்சியைத் திருமணம் செய்தார். பொன்னம்பலம் முதலில் வியாபாரத்தில் ஈடுபட்டார். அது வெற்றியளிக்காமல் போகவே, வியாபாரத்தைக் கைவிட்டு விட்டுச் சுங்கப் பகுதியில் ஆண்டுக்கு 45 பவுண் சம்பளத்தில் வேலை பெற்றார். அரச சேவையில் அவர் முன்னேற்றம் பெற முடிந்தது. 1845 இல் கொழும்புக் கச்சேரியில் எழுதுவினைஞராகப் பணியேற்றார். பின்னர் 1847 இல் கொழும்பின் பிரதி மரண விசாரணையாளர் பதவியில் நியமிக்கப்பட்டார். பிரித்தானிய உத்தியோகத்தர்களுக்குத் தனிப்பட்ட முறையில் கடன் கொடுக்கும் வங்கியாளராகவும் பொன்னம்பலம் செயற்பட்டார். மேற்கு மாகாணத்தின் அரசாங்க அதிபராக இருந்த பிலிப்வூட்கவுஸ் போன்ற அக்காலத்தின் முக்கியமான ஆங்கிலேயர்களின் நண்பராக இருந்தார் (மேலது 512). பொன்னம்பலத்தின் பிரித்தானிய உயரதிகாரிகளில் சிலர் 1848 இல் நடைபெற்ற கலகத்தின் போது செய்யப்பட்ட எல்லை மீறிய செயல்களால் சிக்கலுக்குள் மாட்டிக் கொண்டனர். ரொறிங்டன், சேர் எமர்சன் ரெனன்ற், வூட்கவுஸ் ஆகியோரும் இவர்களில் அடங்குவர். பாராளுமன்ற ஆணைக்குழுவின் முன்பாக நடந்த விசாரணையில் சமூகமளிப்பதற்காக ரெனன்ற் இலங்கையை விட்டு நீங்கு முன், பொன்னம்பலம் ரெனன்ற் அவர்களுக்கும் அவரது குடும்பத்துக்கும் தனது வீட்டில்

விருந்து வைத்தார். பழமை மரபுகளில் பிடிப்புள்ள பொன்னம்பலம் விருந்தில் ஒரு சேர இருந்து உணவு உட்கொள்வதை தவிர்த்தார்.

பொன்னம்பலம் இருவேறு பண்பாட்டு உலகத்தில் வாழும் ஒரு மனிதராக இருந்தார். மரபு வழிப்பட்ட இந்து பக்தர், சமய ஆசார சீலர் என்பது ஒன்று. கிடைக்கும் வியாபார வாய்ப்புகளையும், அரசாங்கப் பதவிகளையும் பெற்றுவிட வேண்டும் என்ற ஆவல் உடைய மனிதர் என்பது இன்னொன்று. தமிழர்களைக் கொழும்பில் ஆதரித்து உதவும் புரவலர்கள் என்ற தகுதியைப் பொன்னம்பலம் குடும்பத்தினர் பெற்றுக் கொண்டனர். குறிப்பாக தமிழ் இளைஞர்களுக்கு ஆங்கில வங்கிகளிலும், பிற வர்த்தக நிலையங்களிலும் பொறுப்புமிக்க பதவிகளை பெற்றுக் கொடுக்க பொன்னம்பலம் குடும்பம் உதவியது. பொன்னம்பலம் - செல்லாச்சி தம்பதியினருக்கு மூன்று புதல்வர்கள் பிறந்தனர். அவர்கள் தேசிய அளவில் புகழ் பெற்றவர்களாயினர். மூத்தவர் பொ. குமாரசுவாமி (1849 -1905); இவர் சட்டசபை அங்கத்தவராக இருந்தார். அடுத்தவர் பொ. இராமநாதன் (1851-1930); இவர் நியாயவாதியாகவும், அரசியல்வாதியாகவும் விளங்கினார். அடுத்தவர் பொ. அருணாசலம் (1853-1924); தலை சிறந்த சிவில் சேவை அதிகாரியாகவும் அரசியல் சமூக இயக்கங்களில் முன்னணி வகித்த தலைவருமாக இவர் விளங்கினார்.

முதலியார் குமாரசுவாமியும், அவரது மருமகனான பொன்னம்பலமும் காலனித்துவ சமூகத்தில் அரச பதவிகளில் உயர்ந்ததோடு, உயர்பதவிகளில் உள்ளோருடன் நெருங்கிய தொடர்புகளையும் வளர்த்துக் கொண்டனர். இதனை விட பணக்கார வர்த்தகர்களுடன் அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட உறவுகளும் அவர்களுக்கு சமூகத்தில் உயர்ச்சியைப் பெற உதவின. 19 ஆம் நூற்றாண்டின் செல்வந்தர்களான தமிழ் வர்த்தகர்களுள் நன்னித்தம்பி, நமசிவாயம், தம்பையா என்போர் மிக முக்கிய புள்ளிகள். இவர்கள் மூவரும் திருமண உறவுகள் மூலம் ஒருவரோடு ஒருவர் பிணைப்புடையவர்கள். முதலியார் நமசிவாயம் நன்னித்தம்பியின் சகோதரியை விவாகம் செய்தார். நமசிவாயம் கொழும்புத் தமிழர்களின் முக்கிய தலைவர்களில் ஒருவர். தமிழ் இயக்கங்களில் முக்கிய பங்கேற்றவர் (றைட் 1907: 504). 'வில்சன் றிச் அன்ட் கோ' என்னும் கம்பனியில் புரோக்கராக நமசிவாயம் கடமையாற்றினார். சிந்திரியாமுல்ல என்ற தோட்டத்தை (400 ஏக்கர்) நாத்தாண்டியவிலும், கட்டுக்கந்த தோட்டத்தை (750 ஏக்கர்) நீர்கொழும்பிலும், புலுஹாக தோட்டத்தை (350 ஏக்கர்) ஹப்பிட்டிக் கோறவிலும் வைத்திருந்த நமசிவாயம் 1500 ஏக்கர் விஸ்தீரணமுடைய தென்னந் தோட்டங்களின் உடைமையாளராவார் (பெர்குசன் டிரைக்டரி 1880:70-79). இவ்வாறு செல்வந்தராக நமசிவாயம் விளங்கியபடியால் தனது புத்திரிகளுக்கு பெரும் தகுதிகளை அடையப்போகிற கணவர்மாரை தேர்ந்து கொள்ள முடிந்தது. பொன்னம்பல முதலியாரின் மக்களான குமாரசுவாமியும் அருணாசலமும் நமசிவாயத்தின் இரு புத்திரிகளை மணம் முடித்தனர். முதலியார் சண்முகம் தம்பையா நன்னித்தம்பியின் மைத்துனராவர். அவர் கொழும்பு செட்டித் தெருவில் வசித்து வந்தார். அக்காலத்தில் கொழும்பில் வர்த்தகம் செய்தவர்களில் தம்பையா பிரபலமானவர். அவர் 'லேடி லோங்டன்' (அக்காலத்தில் கவர்னராக இருந்த லோங்டனின் மனைவியின் பெயர்) என்ற பெயரில் சரக்குக் கப்பல் ஒன்றை வைத்திருந்தார். இக்கப்பல் தென்னிந்தியாவுடனான வர்த்தகத்திற்கு உபயோகிக்கப்பட்டது. உள்ளூர் விவகாரங்களிலும் முனைப்பாக ஈடுபட்ட தம்பையா முனிசிப்பல் கவுன்சிலின் உறுப்பினராகவும் இருந்தார். தம்பையா தோட்டங்களில் முதலீடு செய்திருந்தார். நீர்கொழும்பு டிக்கந்த தோட்டம் (700) ஏக்கர்) அவருக்குச் சொந்தமானது (பெர்குசன் டிரைக் டரி 1880). த. சண்முகம் (1867-1932) இவரது மகன்களில் ஒருவர். நமசிவாயத்தின் மகள் கமலாட்சியை சண்முகம் விவாகம் செய்தார். இன்னொரு மகனான த. முத்துக்குமாரசுவாமி (1873-1927) பொ. இராமநாதனின் மூத்தமகளை விவாகம் செய்தார். இன்னொரு மகன் த. முருகேசர் (1868 -1904) பொ. அருணாசலத்தின் மகளை விவாகம் செய்தார். இவ்வகையில் எல்லோரும் நெருங்கிய உறவினர்களாயினர்.

தமிழ் வர்த்தகர்கள் யாவருள்ளும் மிகவும் முக்கியமான ஒருவர் இ. நன்னித்தம்பி. 'அக்காலத்தில் மிகப் பெரிய பணக்காரர். செல்வாக்குள்ளவர், கப்பல் சொந்தக்காரர்,

*ஏற்றுமதி வர்த்தகத்தில் குறிப்பாக கோப்பி ஏற்றுமதியில் முன்னணியில் திகழ்ந்தவர்' என்று வைத்திலிங்கம், நன்னித்தம்பி பற்றிப் புகழ்ந்துரைக்கிறார். நன்னித்தம்பி 'சண்ட் அன்ட் கோ' என்ற கம்பனியின் புரோக்கராக இருந்தவர் என்றும், பெரும் செல்வத்தை உடைமை கொண்டிருந்த செல்வாக்குடைய மனிதர் என்றும் வைத்திலிங்கம் கூறுகிறார் (மேலது:105). கோப்பித் தோட்டங்களையும் தென்னந் தோட்டங்களையும் உடைமையாக வைத்திருந்த யாழ்ப்பாணத் தமிழர்கள் சிலரில் நன்னித்தம்பியும் ஒருவர். இவருக்குப் பெரிய தோட்டங்கள் சொந்தமாக இருந்தன. நன்னித்தம்பியுடன் ஒப்பிடும்பொழுது குமாரசுவாமி பொன்னம்பலம் பணக்காரர் அல்லர். அவரது குடும்பத்தினர் பணவலிமையை விட உத்தியோகச் சிறப்பால் சமூகத்தில் மேல்நிலைக்குச் சென்றவர்கள். நன்னித்தம்பி பணத்தால் வலிமை பெற்றவர். இவர் குமாரசுவாமி பொன்னம்பலம் குடும்பத்தோடு விவாக உறவால் ஐக்கியமானதன் மூலம் பணம், உத்தியோகம் இரண்டும் இணைந்தன. நாம் முன்னர் குறிப்பிட்டது போல் நன்னித்தம்பியின் சகோதரி விசாலாட்சி முதலியார் குமாரசுவாமியை விவாகம் செய்தார். விசாலாட்சியின் மகள் செல்லாச்சி, முதலியார் பொன்னம்பலத்தை விவாகம் செய்தார். செல்லாச்சியின் மகன் இராமநாதன் நன்னித் தம்பியின் மகளை விவாகம் புரிந்தார்.*

*ஒன்றுக்குள் இன்னொன்று விவாகத்தால் பிணைப்புறுவதான இந்த அகமணக்குழு, யாழ்ப்பாணத்தின் மிகப் பிரபலமான குடும்பங்களில் ஒன்றாக முன்னணிக்கு வந்தது. பணம், இராசமரியாதைகள், பட்டங்கள், மிகக் கவனமாகத் தேர்ந்துகொண்ட விவாக பந்தங்கள், விவாகத்தின்போது பெற்றுக் கொண்ட பெருந்தொகைச் சீதனம் என்பன இக்குடும்பத்தை உயர்நிலைக்கு இட்டுச் சென்றன. பொன்னம்பலம் - குமாரசுவாமி குடும்பம் காலனித்துவ சமூகத்தின் போது எழுச்சி பெறுவதற்கு மரபையும், நவீனத்துவத்தையும் நல்ல முறையில் கலவை செய்தனர். இக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் யாவரிலும் முத்துக்குமாரசுவாமி (183-379) குடும்பத்தின் உயர்ச்சிக்குச் செய்த பங்களிப்பு விதந்து குறிப்பிடப்பட வேண்டியது. முத்துக் குமாரசுவாமி, குமாரசுவாமி முதலியாரின் முதல் மனைவியின் பிள்ளை. முத்துக்குமாரசுவாமியின் சகோதரி பொன்னம்பல முதலியாரை விவாகம் செய்தார்.*

*முத்துக்குமாரசுவாமி கொழும்பு அக்கடமியில் (றோயல் கல்லூரி) 1842 - 1851 காலத்தில் கல்வி கற்றார். பின்னர் டாக்டர் மக் ஐவர் என்ற பெயருடைய கிரேக்க, லத்தீன் (செவ்வியல்) இலக்கிய புலமையாளரிடம் மாணவராகப் பாடம் கேட்டார். 1851 இல் ஆளுநருக்கு இவரது மைத்துனர் (பொன்னம்பல முதலியார்) விருந்தளித்து கௌரவித்த போது முத்துக்குமாரசுவாமி ஆளுநர் முன் ஆங்கிலத்தில் உரையாற்றினார். இவரின் பேச்சை கேட்டதால் கவரப்பட்ட ஆளுநர் இவரை கொழும்புக் கச்சேரியில் எழுது வினைஞராக நியமனம் செய்தார். பின்னர் முத்துக்குமாரசுவாமி பொலிஸ் நீதவான் பதவிக்கு நியமனம் பெற்றார் (மேலது:109-10). 1862-1865 காலத்தில் முத்துக் குமாரசுவாமி இங்கிலாந்தில் சட்டம் பயின்றார். அத்தோடு அக்காலத்தில் சுற்றுப் பிரயாணம் செய்து பல இடங்களையும் பார்த்தார். அக்காலத்தில் பிரித்தானியாவில் கிறிஸ்தவர் அல்லது யூதர் அல்லாதவர்களை சட்டத் தொழில் செய்வதற்கு அனுமதிப்பதில்லை. அங்கு சட்டத்தொழில் செய்வதற்குப் பெரும் கஷ்டப்பட்டு வாதாடி அவர் இறுதியில் வெற்றி பெற்றார். அவ்வகையில் சட்டத்தொழில் செய்ய அனுமதிக்கப்பட்ட முதலாவது இந்து முத்துக்குமாரசுவாமி ஆவார். விரைவில் முத்துக்குமார சுவாமி லண்டனின் உயர் வகுப்பினர் மத்தியில் பிரபலமானார். வெயின்மன் (1947: 16) குறிப்பிட்டது போல் அவர் 'கீழைத்தேசத்து இளவரசன்' (Oriental Prince) என அழைக்கப்பட்டார்.*

**முதலியார் குமாரசுவாமியும், அவரது மருமகனான பொன்னம்பலமும் காலனித்துவ சமூகத்தில் அரச பதவிகளில் உயர்ந்ததோடு, உயர்பதவிகளில் உள்ளோருடன் நெருங்கிய தொடர்புகளையும் வளர்த்துக் கொண்டனர். இதனை விட பணக்கார வர்த்தகர்களுடன் அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட உறவுகளும் அவர்களுக்கு சமூகத்தில் உயர்ச்சியைப் பெற உதவின.**

‘அவர் (முத்துக்குமாரசுவாமி) முதலாவது இந்து பரிஸ்டர் ஆவார். இத்தொழிலில் புகுந்த பின் அவர் லண்டனின் கீழைத்தேய இளவரசனாகப் பிரகாசித்தார். லண்டனில் இளவரசர்கள் அதிகம் பேர் இருக்கவில்லை. அந்தக் குழுவைப் பிரநிதித்துவப்படுத்திய ஒரே ஒரு நபர் இவர் தான். கிழக்குக்கே உரிய ஆடம்பரத்துடனும், பகட்டுடனும் அவர் நடந்து கொண்டார். மொங்டொன் மில்னஸ் என்பவர் அவருடன் கைகோர்த்துக் கொண்டு அவரை லண்டனின் ஆடம்பர இல்லங்களிற்கும் அரங்குகளுக்கும் கூட்டிச் செல்வார். “முத்துக்குமார சுவாமியின் மேம்பட்ட நாகரிகப் பழக்கவழக்கங்கள், எடுப்பான அழகிய தோற்றம், அற்புதமான ஆங்கிலம் என்பன அவருக்கு சென்றவிட மெல்லாம் சிறப்பைத் தந்தன.” இவ்வாறு வெயின்மன் (1947:16) குறிப்பிட்டுள்ளார்.



சேர். முத்துக்குமார சுவாமி

Image Source - ta.wikipedia.org

ஆங்கில மொழிப்புலமையும், அம்மொழியில் கணீரென்ற குரலில் பேசக்கூடிய நாவன்மையும் அக்காலத்தில் போற்றி மதிக்கப்பட்ட குணப் பண்புகள். இப்பண்புகளில் சிறந்து விளங்கிய முத்துக்குமாரசுவாமி வெற்றிப் பாதையில் வீறுநடை போட்டார். முத்துக்குமாரசுவாமியை வரவேற்று விருந்தளித்து மதிப்பளித்தோர்களில் மூன்றாம் நெப்போலியன், கிளாட்ஸ்ரன், பார்மஸ்டன், டிஸ்ரேலி, யோவற் ஆகியோரும் றிச்சார்ட் மொங்டன் மின்னஸ் என்ற பாராளுமன்ற உறுப்பினரும் அடங்குவர். றிச்சார்ட் மொங்டன் மின்னஸ் நகைச்சுவையாகப் பேசும் ஆற்றல் மிக்கவர். லண்டனின் இலக்கியக் கழகங்களிலும், உயர்நிலை சமூக வட்டங்களிலும் ஊடாடும் பிரபலஸ்தராக அவர் விளங்கினார். சேர். சாள்ஸ் மக்கார்த்தி அப்போது இலங்கையில் ஆளுநராக இருந்தார். மொங்டன் மின்னஸ்லிற்கு ‘முத்துக்குமார சுவாமியைச் சந்தியுங்கள்’ என்று மக்கார்த்தி கடிதம் அனுப்பி வைத்தார் (துரைராஜசிங்கம் 1973:11). மெக்லாலே, ஆங்கிலம் கற்ற நவமனிதர்களான ‘இங்கிலிஷ்கார இந்தியர்கள்’ பற்றி ஆரூடம் கூறினார். முத்துக்குமாரசுவாமி அத்தகைய ஒருவராக மிளிர்ந்தார். அவர் அடைந்த பிரபலத்திற்கு ஆங்கிலக் கலாசாரத்தில் ஊறித் திளைத்த அவரது உயர்சிறப்பு காரணமாயிற்று. ‘த இலஸ்ட்ரேட்டட் லண்டன் நியூஸ்’ சஞ்சிகை 25 ஏப்பிரல் 1863 இதழில் முத்துக்குமாரசுவாமியின் படத்தைப் பிரசுரித்தது. தலைப் பாகையும், நீண்ட மேலங்கியும் அணிந்து எடுப்பான தோற்றத்துடன் காட்சி தரும் படம் இது. ‘த டைம்ஸ்’ பத்திரிகை முத்துக்குமாரசுவாமியின் சட்டத்துறை நியாயவாதி தொழிலின் பிரவேசம் பற்றி எழுதும் போது, “இந்துப் பிரபுத்துவ உயர்குலம் அண்மைக் காலத்தில் அடைந்து வரும் முன்னேற்றத்தின் அடையாளம் இது” என்றும் “இந்தியர்கள் இன்னும் சோம்பிக் கிடப்பதற்கு தயாரில்லை. மதிப்புக்குரிய உயர் பதவிகளுக்கும், கௌரவங்களுக்கும் தகுதியுடையவர்களாகத் தம்மை ஆக்கிக் கொள்ள முன்வந்துள்ளார்கள். எமது அரசாங்கமும் நாம் உருவாக்கிய நிறுவனங்களும் கொண்டு வந்த நன்மைகளைப் போற்றுகிறார்கள்” என்றும் குறிப்பிட்டது. சுதேசிகளால் பரீட்சைகளில் சித்தியடையவும், கல்வியில் சமதையாகப் போட்டியிடவும், வெற்றி பெறவும் முடியும் என்பது மட்டுமன்றி ஆங்கில சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படும் சமூக அந்தஸ்தையும் பெற முடியும் என்பதை முத்துக்குமாரசுவாமி நிரூபிக்க முனைந்தார். ‘அத்தீனியன் கிளப்’ என்பது லண்டன் நகரில் மேட்டிமையோர் கூடும் இடம். இதன் உறுப்புரிமையைப் பெற்ற முதலாவது ஆசிய நாட்டவர் என்ற பெருமை முத்துக்குமார சுவாமிக்குரியது. “அழகாக உடையணிந்து,

நாகரிகமான பாணியும் நடையும் உடையவராய் சுத்தமான உச்சரிப்போடு கூடிய அருமையான ஆங்கிலம் பேசும் முத்துக்குமாரசுவாமி மீது லண்டன் நகரின் நவ நாகரிகர்களான சிங்க வேட்டைகாரர்களுக்கு அலாதியான பிரியம்" என்று 1860 இல் எழுதப்பட்ட குறிப்பொன்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மொங்கடன் மில்னஸ்ஸு¬ற்கு 'Serlby' என்றொரு கிராமப்புற வீடு இருந்தது. முத்துக்குமாரசுவாமி அங்கு போயிருக்கிறார். அந்தப் பயணம் அவருக்கு நன்றாகப் பிடித்தமானதாயிருந்தது. அவர் வேட்டை நாய்களோடு வேட்டையாடக் கிளம்பினார். நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட சோடிகளாக ஆண்களும், பெண்களும் ஆடும் 'குவார்ட்ரில்' (Quadrille) எனப்படும் நடனத்தினை ஆடி மகிழ்ந்தார்.

1877 ஆம் ஆண்டு முத்துக்குமாரசுவாமி எலிசபெத் பீபி என்ற ஆங்கிலப் பெண்மணியை விவாகம் செய்தார். அவர் எந்தளவுக்கு ஆங்கிலேயர் வாழ்க்கையில் மூழ்கிப் போனார் என்பதை இது எடுத்துக் காட்டும். முத்துக்குமாரசுவாமி - எலிசபெத் பீபி தம்பதியினரின் மகன் ஆனந்த குமாரசுவாமி பின்னாளில் பிரபல கலை வரலாற்றாசிரியராகவும், அறிஞராகவும் புகழ் பெற்றார். ஆனந்த குமாரசுவாமி 1906 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு ஒன்றில் தன் தந்தையின் மேற்கத்தைய நாகரிக நாட்டத்திற்கான காரணம் யாது எனக் குறிப்பிட்டார்.

"முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் முன்னணியில் திகழ்ந்த தமிழராக என் தந்தை இருந்தார். அவர் அளவுக்கு மீறிய முறையில் மேற்கத்தைய மயமாதலுக்கு உட்பட்டிருந்தார். அக்காலத்தில் மாற்றமுற்ற சூழலுக்கு ஏற்ப எங்களை மாற்றிக் கொள்ள வேண்டிய தேவை இருந்தது. அத்தோடு மேற்கு நாட்டவர்கள் ஈட்டிய சாதனைகளை எம்மாலும் அடைய முடியும் என்பதை நிரூபிக்கும் தேவையும் இருந்தது (துரைராஜசிங்கம் 1973: முகப்பு பக்கம்)."

'மேற்கு நாட்டவர்கள் ஈட்டிய சாதனைகளை' ஈட்டி அவர்களுக்குச் சமதையானவர்கள் ஆகவோ அல்லது அவர்களையும் விட மேம்பட்டவர்களாகவோ ஆக வேண்டும் என்று எண்ணிய முத்துக்குமாரசுவாமி ஒருவகை முரட்டுத் துணிச்சலையும், படாடோபத்தையும் வெளிப்படுத்தி நின்றார். ஈ.எவ்.சி. லுடோவைக் அவரைப் பற்றி எழுதும்போது "சுவாரஸ்யமான ஒருவர், படாடோபம்மிக்க ஆளுமை கொண்டவர்' என்று குறிப்பிட்டார் (மேலது: அறிமுக உரை). பிரித்தானியாவின் பிரதமராக இருந்த பெஞ்சமின் டிஸ்ரேய்லியும் படாடோபம் மிக்க ஒரு மனிதர். அவர் முத்துக்குமாரசுவாமியின் நாகரிக நடையை நயந்து பாராட்டினார். அவருக்கு பிரபுப் பட்டம் வழங்குவதற்குச் சிபாரிசு செய்தார். 1874 ஆம் ஆண்டு இச் சிபாரிசை வழங்கியபோது டிஸ்ரேய்லி இலங்கையில் உள்ள நிர்வாகத்தினரை இது பற்றிக் கலந்தாலோசிக்கவில்லை. டிஸ்ரேய்லி முடிவுறாத நிலையில் ஒரு நாவலை விட்டுச் சென்றார். இது அவர் இறந்த பின் பிரசுரிக்கப்பட்டது. இந்நாவலில் வரும் 'குசிநார' என்ற பாத்திரம் முத்துக் குமாரசுவாமி தான் என்று ராதிகா குமாரசுவாமி குறிப்பிட்டுள்ளார். கிழக்கத்தைய தத்துவம் பற்றிப் போதிக்கும் குசிநார எப்போதும் பௌதிகவதிதமான அர்த்தமில்லாத விடயங்களை அலட்டிக் கொண்டிருப்பதாக சித்திரிக்கப்பட்டுள்ளது. டிஸ்ரேய்லியின் மனதில் முத்துக்குமாரசுவாமி பற்றி ஆழப்பதிந்திருந்த எதிர்மறை அபிப்பிராயம் இந்நாவலில் குசிநார பாத்திர வர்ணிப்பில் வெளிப்படுவதாகவும் ராதிகா குறிப்பிடுகிறார் (1991:28). இதனைவிட 'கோமாளி இந்தியன்' பாத்திரம் நகைப்புக்குரிய ஒரு விடயமாக ஆங்கில இலக்கியத்திலும், ஜனரஞ்சக எழுத்துக்களிலும் குறிப்பிடப்படுவதுண்டு என்பதை இவ்விடத்தில் குறிப்பிடலாம்.

முத்துக்குமாரசுவாமி இலங்கைச் சட்டசபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்தார். அவர் தனது 44 ஆவது வயதில் 1879 ஆம் ஆண்டு காலமானார். தனது சகோதரியின் (சிற்றன்னையின் மகள்) பிள்ளைகளான இராமநாதன், அருணாசலம் ஆகிய இருவரையும் முழுமையாக தன் செல்வாக்கின் கீழ் உருவாக்கும் பேற்றை பெறாமலேயே அவர் காலமானார். இராமநாதன் கொழும்பு அக்கடமியில் முதலில் கல்வி கற்றார். பின்னர் இராமநாதனும் (1857 - 1930) அவரது தமையனும் சென்னை பிரசிடன்சிக் கல்லூரிக்கு அனுப்பப்பட்டனர். அப்போது அவருக்கு 13 வயது ஆகியிருந்தது. அக்கல்லூரியில் மேற்கத்தைய செவ்வியல் கல்வி போதிக்கப்பட்டது. இந்தியப் பண்பாடு,

விளையாட்டு என்பனவும் பிரசிடன்சிக் கல்லூரியின் படிப்பில் முக்கியம் பெற்றன. ‘இந்தியாவினதும், மேற்கினதும் உயர்வான பண்பாட்டு மரபுகள் எவையோ அவை யாவற்றினதும் ஒன்றிணைந்த’ வகையில் அக்கல்வி அமைந்தது (வைத்திலிங்கம் 1971:84 85). இராமநாதனுக்கும் அவரது காலத்துச் சிங்களப் பிரமுகர்களிற்கும் உள்ள வித்தியாசத்தையும், இராமநாதனின் குண இயல்பின் சாதகமான அம்சத்தையும் இங்கு சுட்டிக் காட்டல் முடியும். அக்காலத்தின் சிங்களப் பிரமுகர்கள் முழுமையான மேற்கத்தைய கலாசாரத்தில் ஊறியவர்களாய், மரபுவழிக் கலாசாரத்தை முற்றாக இழந்தவர்களாயினர். இராமநாதன் மரபுவழிக் கலாசாரத்திலும் ஊறியவராய் இருந்தார். சென்னையில் படிப்பை முடிப்பதற்கு முன்பாகவே இராமநாதனின் தந்தை அவரைக் கொழும்புக்குத் திருப்பி அழைத்தார். கொழும்பில் தொழில் புரிந்த ரிச்சார்ட் மோர்கன் என்னும் நியாயவாதியின் கீழ் பயிலுநராக இராமநாதன் வேலை செய்யத் தொடங்கினார். இதற்கு அவரின் மாமனின் (முத்துக்குமாரசுவாமி) செல்வாக்கு காரணமாயிருந்தது. ரிச்சார்ட் மோர்கன் பின்னர் சட்ட அதிபதிநாயகமாகப் (அட்டர்ணி ஜெனரல்) பதவி வகித்தார். அக்காலத்தின் மோர்கன் தலைசிறந்த முற்போக்குவாதியாக (லிபரல்) விளங்கியவர். 1873 ஆம் ஆண்டு இராமநாதன் நியாயவாதியாக (சட்டத்தரணி) பதிவு செய்து தொழில் புரிய ஆரம்பித்தார். அவர் இத்தொழிலில் மிகுந்த திறமை பெற்ற ஒருவராக விளங்கியதோடு 1886 வரை நியாயவாதியாகத் தொழில் புரிந்தார் (: 90 -104).

23 வயதாக இருக்கும்போது இராமநாதன் ‘பண்பட்ட கனவான்’ ஆகவும் முற்போக்கு மனப்பான்மை கொண்டவராகவும் விளங்கினார். அரசாங்க உத்தியோகத்தர்களுடன் உறவை வளர்த்துக் கொண்டதால் ஆரம்ப முதலே உயர்நிலை எய்திய ஒரு குடும்பத்தில் அவர் பிறந்தார். மரபுச் சமூகத்தினதும், ஆங்கில அரசினதும் பட்டங்கள், பதவிகள் இக்குடும்பத்திற்குக் கிடைத்தன. வெளிநாட்டுக் கல்வியாலும் இக்குடும்பம் தன் சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொண்டது. இராமநாதனுக்கு ஒரே ஒரு குறைதான் இருந்தது. அவரது குடும்பம் பொருளாதார ரீதியில் ஸ்திரமானதாக இருக்கவில்லை. தந்தையார் பொன்னம்பலம் வியாபாரத்தில் நட்டமடைந்து பணமுடைவால் கஷ்டப்பட்டார். இராமநாதனின் விவாகம் மூலம் இந்தக் கஷ்டத்தில் இருந்து குடும்பம் மீள முடிந்தது. நன்னித்தம்பியின் இரண்டாவது மகள் செல்லாச்சியம்மாளை 1874 ஆம் ஆண்டு இராமநாதன் விவாகம் செய்தார். இராமநாதனின் மாமனார் முத்துக்குமாரசுவாமி வகித்த சட்டசபை உறுப்பினர் பதவிக்கு அவர் நியமிக்கப்பட்டார். 1879 - 1892 வரை அவர் சட்டசபை உறுப்பினராக இருந்தார். காலனித்துவ ஆட்சியாளர்களை கடுமையாக விமர்சனம் செய்தார். பல விடயங்களைச் சுட்டிக்காட்டினார். பௌத்தர்களின் சார்பாகப் பேசினார். 1893 இல் அவர் சொலிசிற்றர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். 1905 இல் இப்பதவியில் இருந்து இளைப்பாறினார். 1911 இல் மீண்டும் அரசியலில் (சட்டசபை உறுப்பினர்) புகுந்த இவர் 1930 ஆம் ஆண்டு இறக்கும் வரை அரசியலில் ஈடுபட்டார்.



சேர். பொன். இராமநாதன்

Image Source - en.wikipedia.org

இளைஞரான இராமநாதன் முற்போக்காளராக இருந்தார். ஆனால் அவரின் வயது ஏறஏற அவர் பழமைவாதியாக மாறினார். 20 ஆம் நூற்றாண்டின் ஜனநாயகப் போக்குகளுடன் இவர் இணங்கிப் போகாமல் விலகி நின்றார். இவரது இளைய சகோதரர் பொ. அருணாசலமும் இளமையில் முற்போக்காளராகவே இருந்தார். ஆனால் வயதில் முதியவர் ஆகும் போது தீவிரவாதியாக மாறினார். அருணாசலம் 1853 இல் பிறந்தார். கொழும்பு அக்கடமியில் கல்வி கற்றார். 1886 இல் மிகச் சிறந்த மாணவனிற்கான ரேணர் பரிசு இவருக்குக் கிடைத்தது. 1870 இல்

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் கிறைஸ்ட் கல்லூரிக்கு புலமைபரிசில் பெற்றுக் கல்வி கற்கச் சென்றார். அங்கு செவ்வியலையும், கணிதத்தையும் பாடங்களாகக் கற்றார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இவருக்குப் படிப்பித்த ஆசிரியர்கள், இவருடன் கற்ற மாணவர்கள் ஆகியோரைக் கொண்ட நண்பர்கள் பெரு வட்டம் ஒன்றில் உலவும் பேறு இவருக்கு கிடைத்தது.

"எனது கணித ஆசிரியர் சேர் யோன் சீலி, மௌல்டன் பிரபு, பேராசிரியர் Fawcett, ஹர்கோட் போன்ற பெரியோர்களின் செல்வாக்கும் ஆளுகையும் என் மீது ஏற்படும் பெரும்பேறு எனக்குக் கிடைத்தது. இவர்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். கேம்பிரிட்ஜை அலங்கரித்த இளைஞர் குழாம் ஒன்று இருந்தது. பல்போர், லைட்டிறொன், டெனிசன் என்ற குடும்பங்களைச் சேர்ந்தோர், சட்ட அறிஞர் மெயிற்லண்ட், இசையமைப்பாளர் ஸ்ரான் போர்ட், கவிஞர் எட்டவார்ட் காப்பென்டர், இலங்கையின் பிரதம நீதியரசர்களாய் இருந்த இருவர்... இன்னும் பலர் என் நண்பர்களாக இருந்தனர். அவர்கள் எனக்கு ஆதர்சமாக விளங்கினர்." (வைத்திலிங்கம் 1977:485)

அருணாசலம் தனது கேம்பிரிட்ஜ் வாழ்க்கை பற்றிய நினைவுகளைப் பற்றி மேற்கண்டவாறு பதிவு செய்துள்ளார். அருணாசலம் சுதந்திர வேட்கை மிகுந்த உள்ளம் படைத்தவர். ஒரு தடவை கேம்பிரிஜ்ஜில் யோக் ஆண்டகை (Archbishop of York) சமய உரையாற்றும் போது இந்தியச் சமயங்கள் பற்றி அவமதிக்கும் வார்த்தைகளைக் கூறிவிட்டார். மாணவராக இருந்த அருணாசலம் 'ஸ்பெக்டேட்டர்' 1874 சஞ்சிகையில் இவ்வுரைக்கு ஆட்சேபம் தெரிவித்துக் கடிதம் எழுதினார். 1875 இல் சட்டப் பரீட்சையில் தேறியதோடு, அவ்வாண்டு நடந்த சிவில் சேவைப் பரீட்சையிலும் சித்தியெய்தித் தெரிவானார். சிவில் சேவை நுழைவுப் பரீட்சையில் சித்தியெய்திய முதலாவது இலங்கையர் என்ற பெருமையையும் பெற்றார். 1875 இல் இலங்கைக்குத் திரும்பிய அவர் சிவில் சேவை உத்தியோகத்தராக 1913 வரை பணியாற்றி இளைப்பாறினார். இலங்கையின் பல பாகங்களில் பல்வேறு பதவிகளில் கடமையாற்றினார். பொலிஸ் நீதவான், மாவட்ட நீதிபதி ஆகிய பதவிகளை வகித்தார். அப்பதவிகளை வகித்தவேளை பிரசித்தி பெற்ற தீர்ப்புக்களை வழங்கினார். பதிவாளர் நாயகம் பதவியில் பின்னர் பணியாற்றிய போது பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். பல சட்டங்கள் இயற்றப்படுவதற்கு காரணமாக இருந்தார். அவரிடம் திறமை இருந்தது எனினும் இதனை மதித்து அவருக்கு சிவில் சேவையில் உயர் பதவிகளை வழங்க அரசாங்கம் முன்வரவில்லை. அவருக்கு வழங்கப்பட்ட 'சேர்' பட்டமும் காலந்தாழ்த்தி, அவர் ஓய்வு பெற்றிருந்த காலத்தில் வழங்கப்பட்டது. 1901 ஆம் ஆண்டு சனத்தொகைக் கணக்கெடுப்பு வேலை இவரது மேற்பார்வையில் நடத்தப்பட்டது. அந்த அறிக்கையையும் இவரே எழுதினார். 'இலங்கையின் சிவில் சட்டத் தொகுப்பு' என்ற நூலை தொகுக்கும் பெரும்பணியை ஆரம்பித்தார். இத்தொகுப்பு இலங்கையில் செல்லுபடியாகும் ரோமன் டச்சுச் சட்டம் என்ற பெரும் பரப்புடைய விடயம் பற்றிய தேடல் முயற்சியாகும். இது முன்னோடியான பெரும்பணி (ரட்ணம் 1953:7). அருணாசலம் சட்ட நிர்வாக சபைக்கு உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இதனால் அவர் சட்டசபையில் உறுப்பினராக பங்குபற்றினார். 1912 இல் சம்பளத் திட்டம் பற்றிய அரசாங்கக் கொள்கைக்கு எதிராக வாக்களித்தார். பதவி வழி உறுப்பினர்கள் செய்யத் துணியாத கருமம் ஒன்றைச் செய்து பலரையும் வியப்பில் ஆழ்த்தினார்.

அரசாங்க சேவையில் இருந்த காலத்தில் அரசியல் நடவடிக்கைகள் எதிலும் பங்குபற்ற முடியாத கட்டுப்பாடு இருந்தது. எனினும் அருணாசலம் பிரித்தானியாவின் லிபரல்களான வில்லியம் டிக்பி போன்றோரைச் சந்தித்துப் பேசினார். இலங்கைக்குக்குச் சுயாட்சி வழங்குதல் உட்பட்ட பல விடயங்கள் குறித்து கடிதத் தொடர்புகளையும் மேற்கொண்டார். சோஷலிஸ்டுகளோடும் தொடர்பு கொண்டார் (அவரது நண்பர் எட்வார்ட் காப் பெண்டர் ஒரு சோஷலிஸ்ட்).

இலங்கையில் வழிகாட்டக் கூடிய நல்ல அரசியல் தலைவர்கள் இல்லையே என்று அருணாசலம் கவலை கொண்டார். அரசியல் சீர்திருத்தத்தின் தேவை குறித்து பெயர் குறிப்பிடாமல் பத்திரிகைகளில் எழுதினார் (மேலது: 910). தமது 60 ஆவது

வயதில் அரசாங்க சேவையில இருந்து ஓய்வு பெற்றபின் பல சீர்திருத்த இயங்கங்களை முன்னின்று நடத்தினார். 1913 முதல் அவர் மரணம் எய்திய 1924 ஆம் ஆண்டு வரையுள்ள காலம் வரை கிளர்ச்சி நடவடிக்கையாளராகவும் தீவிரவாதியாகவும் அவர் காணப்பட்டார். அவர் மூன்று விடயங்களில் ஆர்வத்துடன் செயற்பட்டார். முதலாவது சமூகச் சீர்திருத்தம். பேபியன் சீர்திருத்தங்களிலும் (Fabian Reforms) சமூக சேவைத் திட்டங்களிலும் அவருக்கு அனுபவமும் அறிவும் இருந்தது. தரும நிறுவனங்கள், முனிசிப்பல் சபைகள் என்பன பிரித்தானியாவில் செய்து வரும் பணிகள் பற்றி அவர் தெரிந்து வைத்திருந்தார். 1915 ஆம் ஆண்டில் 'இலங்கைச் சமூக சேவை முன்னணி' என்ற அமைப்பை நிறுவினார். அந்த அமைப்பு பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நிலை, நகரங்களின் சேரிகளின் நிலை, பொதுக்கல்வி ஆகிய விடயங்கள் குறித்து அக்கறை கொண்டு உழைத்தது. 'இலங்கைத் தொழிலாளர் முன்னணி' என்ற அமைப்பை 1915 இலும் 'இலங்கைத் தொழிலாளர் சம்மேளனம்' என்ற அமைப்பை 1920 இலும் அவர் நிறுவினார். கொழும்பு நகரத்தின் தொழிலாளர் வாழ்க்கை நிலை பற்றியும், அவர்களின் கூலி பற்றியும் இந்த அமைப்புகள் அக்கறை கொண்டிருந்தன (ஜயவர்த்தன 1972). அரசியல் துறையில் அவர் செய்த பங்களிப்புகள் வரலாற்றில் அழியாத இடம் பெறுவன. இலங்கைக்குச் சுயாட்சி வேண்டும் என்று அவர் கோரினார். முக்கிய சட்டச் சீர்திருத்தங்களைக் கொண்டு வரவேண்டும் எனப் பாடுபட்டார். 'எமது அரசியல் தேவைகள்' என்ற தலைப்பில் 1917 ஆம் ஆண்டு இலங்கைத் தேசியக் கழகத்தில் பிரதான உரையொன்றை நிகழ்த்தினார். 1919 இல் இலங்கைத் தேசிய காங்கிரஸ் அமைக்கப்பட்ட போது அதன் முதலாவது தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். காலனிய ஆட்சியாளர்களின் கொள்கைகளை



சேர். பொன். அருணாசலம்

Image Source - en.wikipedia.org

விமர்சிப்பதிலும் கண்டிப்பதிலும் தமிழ் பூஷ்வா வர்க்கத் தலைவர்கள் பின்னிற்கவில்லை.

அவர்கள் பெரும்பாலும் லிபரல், முற்போக்கு நிலைப்பாட்டை எடுத்தனர். தமிழர்களின் சட்டசபைப் பிரதிநிதிகள் தமது கண்டனங்களை ஒளிவுமறைவு இன்றி வெளிப்படுத்தினர். நில உடைமையாளர்களான முதலியார்கள், வர்த்தகர்கள், குத்தகை முதலாளிகள் ஆகியோரின் பிரதிநிதிகளாகவிருந்த சிங்கள பூஷ்வாக்களின் தலைவர்கள் தமிழ்த் தலைவர்களுக்கு மாறாக பழைமைவாதக் கொள்கைகளை ஆதரித்தனர். தமிழ் பூஷ்வாக்களில் பெரிய நில உடைமையாளர்கள் குறைவு. அவர்கள் சிங்கள பூஷ்வாக்களை விட செல்வத்திலும் பணபலத்திலும் குறைந்த தரத்தில் இருந்தனர். இருந்த போதும் உள்நாட்டிலும் வெளியிலும் அவர்களின் சமூக அந்தஸ்தும் செல்வாக்கும் உயர்வாக இருந்தது. சட்டசபையில் உறுப்பினர்களாய் இருந்தமையால் உள்ளூரில் அவர்கள் செல்வாக்கு உயர்ந்தது. அவர்கள் பிரித்தானியாவின் உயர் சமூகத்துடனும், அந்நாட்டின் லிபரல் அரசியல்வாதிகளுடனும் தொடர்புகளைக் கொண்டிருந்தனர். பிரபுப் பட்டம் பெற்ற முதலாவது இலங்கையர் சேர். முத்துக்குமாரசுவாமி ஆவர். இலங்கைச் சட்ட சபைக்கு நியமிக்கப்பட்ட (1862 இல்) முதலாவது லிபரல் முற்போக்காளரும் அவரேயாவர். சிங்களவரும் புதுப் பணக்காரருமான ஒருவர் 1912 ஆம் ஆண்டில் பிரபுப் பட்டம் பெற்றார். பிரபுப் பட்டம் பெற்ற இரண்டாமவர் 50 ஆண்டுகளின் பின்னரே தோன்ற முடிந்தது.

தமிழ் பூஷ்வாத் தலைவர்கள் அரசியலில் லிபரல் முற்போக்காளர்களாய் இருந்தனர். சிங்கள பூஷ்வாக்கள் அரசியலில் பழமைவாதிகளாக இருந்தனர். இது மிக முக்கியமான வேறுபாடு. இதற்குக் காரணம் இருந்தது. சிங்கள முதலாளிகள் நில உடைமையைக் குறியாகக் கொண்டவர்கள். அவர்கள் பெருந்தோட்டங்களில் முதலீடு செய்தனர்.

குமாரசுவாமி பொன்னம்பலம் குடும்பத்தினர் கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களாய் இருந்தனர் என்பதைக் குறிப்பிடுதல் மிகவும் பொருத்தமுடையது. கிறிஸ்தவ எதிர்ப்பில் அவர்கள் தீவிரம் காட்டினர். இக்குடும்பத்தின் உறுப்பினர்கள் இந்து மதத்தின் நன்மைக்கான விடயங்களுக்கு ஆதரவு கொடுத்தனர். இந்துப் பண்பாட்டையும், அறிவு, கல்வி விருத்தி என்பனவற்றையும் ஊக்குவித்தனர்.

ஆகவே, காலனித்துவ ஆட்சியாளர்கள் வழங்கக்கூடிய பாதுகாப்பில்தான் அவர்களது பொருளாதார நலன்கள் தங்கியிருந்தன. இவர்கள் இருசாராரையும் வேறுபடுத்திய முக்கிய அம்சம் பொருளாதார நலன்களாகும். தமிழ் பூஷ்வாக்களில் நகரம்சார் உயர் தொழில்களில் ஈடுபட்டவர்களும், புரோக்கர்களும் லிபரல்களாகவும் முற்போக்காளர்களாகவும் இருந்தனர். 1862 முதல் 1897 வரையான காலத்தில் தமிழர்களின் சட்டசபைப் பிரதிநிதிகளாக இருந்தோர் நியாயவாதிகளாக இருந்தனர். நியாயவாதித் தொழில் சுதந்திரமான மனப்போக்கை உருவாக்கக்கூடியது. அவர்களின் செல்வமும் சொத்துக்களும் பணக்கார வர்த்தக குடும்பங்களில் விவாகம் செய்ததனால் தேடியனவாக இருந்தன என்பது உண்மையே. ஆனாலும் பொருளாதார நலன்களுக்காக அடிபணிந்து போகும் ஒரு கட்டாயம் தமிழ்த் தலைவர்களுக்கு இருக்கவில்லை.

குமாரசுவாமி - பொன்னம்பலம் குடும்பத்தினர் கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களாய் இருந்தனர் என்பதைக் குறிப்பிடுதல் மிகவும் பொருத்தமுடையது. கிறிஸ்தவ எதிர்ப்பில் அவர்கள் தீவிரம் காட்டினர். இக்குடும்பத்தின் உறுப்பினர்கள் இந்து மதத்தின் நன்மைக்கான விடயங்களுக்கு ஆதரவு கொடுத்தனர். இந்துப் பண்பாட்டையும், அறிவு, கல்வி விருத்தி என்பனவற்றையும் ஊக்குவித்தனர். அரசாங்கத்தின் சமயக் கொள்கைகளைக் கண்டித்தனர். கிறிஸ்தவர் அல்லாதவர்களின் நலன்களிற்காக வாதாடினர். கல்வித்துறையில் மிஷனரிகளின் ஆதிக்கத்தைத் தீவிரமாக எதிர்த்தனர். சட்டசபையில் கரை நாட்டுச் சிங்களவர்களின் பிரதிநிதிகளாக இருந்தோர் கிறிஸ்தவர்களாய் இருந்தமையினால் பௌத்தர்களின் பிரச்சினைகள் சட்டசபையில் கிளப்பப்பட்டபோது அவை பற்றி தமிழ் இந்துக்களான பிரதிநிதிகளே பௌத்தர்களுக்கு ஆதரவு தெரிவித்துப் பேச வேண்டி ஏற்பட்டது. இக்குடும்பத்தினர் வர்த்தக மூலதனத்துடன் பிணைப்பை கொண்டிருந்தனர். அதன் மூலம் கல்வியில் அவர்களால் உயர முடிந்தது. கல்வி உயர்ச்சி சமூக அந்தஸ்தையும், அரசியல் செல்வாக்கையும் அவர்களுக்குப் பெற்றுக் கொடுத்தது. இவர்களின் சமூக பொருளாதார பின்புலத்தை நோக்கும் பொழுது 'தேசிய முதலாளித்துவம்' என்ற வகைப்பாடு இவர்களுக்குப் பொருந்தாது.

வர்த்தகமும் நிலச் சொத்துக்களின் உடைமையுமே இவர்களின் பொருளாதாரப் பின்புலம். இவர்களால் கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பித்து அத்துறையில் முன்னேற முடியவில்லை. படித்த ஆய்வறிவாளர்களாய் விளங்கினர் எனினும், இந்தத் தமிழ் லிபரல் முற்போக்குவாதிகள் தீவிர தேசியவாதிகளாகப் பரிணமிக்கவில்லை. அந்நியர் ஆட்சிக்கு எதிராகக் குரல் கொடுக்கவோ, அடிப்படையான சமூக மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக பாடுபடவோ இவர்கள் முன்வரவில்லை. மதச்சார்பின்மை என்பதையும் இவர்கள் ஒரு கொள்கையாகக் கொண்டிருக்கவில்லை.

சாதி பேதம் நீங்கிய சமத்துவம், பெண்களுக்குச் சமத்துவம் என்பன அவர்களின் கொள்கைகளாக இருக்கவில்லை. அரசியலில் ஏற்பட்ட தேக்கநிலையை விமர்சித்தல், கண்டித்தல், பிரித்தானியரின் ஆளுகைக்கு உட்பட்டதான நிலையில் அரசியல் சீர்திருத்தங்களைக் கோருதல், சமூக மட்டத்தில் மரபு வழிப்பட்ட வழமைகள், மரபுகளைப் பேணுதல் என்பன இவர்களது கொள்கைகளாக இருந்தன.

(தொடரும்)

ஈழம் சார்ந்தும் ஈழப்பிரச்சினை சார்ந்தும் ஆங்கிலத்திலும் தமிழல்லாத பிற மொழிகளிலும் பல்வேறு நூல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. 2009 இற்கு பின்னர் வெளியாகிய அபுனைவு நூல்களை அவற்றின் சமூக – அரசியல் முக்கியத்துவம் கருதி தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் நோக்கோடு 'திக்குகள் எட்டும்' என்ற தொடர் வெளிவருகின்றது. இத்தொடரின் மூலம் தமிழ் சூழலுக்கு தமிழல்லாத பரப்பில் நடைபெறும் ஈழம் சார்ந்த வெளிப்பாடுகள் அறிமுகமாகும்.




**சிவராஜா ரூபன்**

சிவராஜா ரூபன் அவர்கள் 1993 ஆம் ஆண்டு சிறுவனாக இருக்கும்போது ஈழத்திலிருந்து நோர்வேக்குப் புலம்பெயர்ந்தார். தற்போது கட்டுரைகள், கவிதைகள், மொழிபெயர்ப்பு, நாடகம் மற்றும் ஊடகம் ஆகிய தளங்களில் இவர் செயற்பட்டு வருவதுடன் அரசியல், சமூகம், கலை, இலக்கியம் சார்ந்தும் எழுதி வருகிறார். ஈழம், தமிழகம், மற்றும் புலம்பெயர் ஊடகங்கள், இதழ்களில் இவரது எழுத்துக்கள் தொடர்ந்து வெளிவருகின்றன.
'எதிர்ப்பரசியல்', 'அதிகார நலனும் அரசியல் நகர்வும்' (உலக அரசியல் கட்டுரைகளின் தொகுப்பு), 'எழுதிக் கடக்கின்ற தூரம்' (கவிதைத் தொகுப்பு), 'கலைப்பேச்சு' (திரை நூல் அரங்கு) என்பன இவரது படைப்புகளாகும்.




ஒய்வின்ட் புக்லறூட்

Image Source - www.nettavisen.no

பகுதி 1

# 'இலங்கையின் போரும் சமாதானமும்': நோர்வேயின் சமாதானத் தோல்வியின் விளைவுகள்

## நோர்வேஜியப் பேராசிரியர் ஒய்வின்ட் புக்லறூட் எழுதிய நூல்

இலங்கைத் தீவின் அரசியலை அதன் கொலனித்துவக் காலத்திலிருந்து, சிங்களப் பெருந்தேசியவாதத்தின் எழுச்சி, இன முரண்பாடு, தமிழர்களின் விடுதலைப் போராட்டம், போர்கள், சமாதான முயற்சிகள், போருக்குப் பின்னான நிலைமைகள், சமகாலம் என பெரும் பரப்பினை இந்நூல் பேசுகின்றது. இலங்கைத்தீவின் இன முரண்பாடுடன் தொடர்புடைய உள்நாட்டுத்தரப்புகள், பிராந்திய சக்திகள், தமிழ் டயஸ்போறா, நோர்வே உட்பட்ட சர்வதேச சக்திகள் என அனைத்துத் தரப்பினரைப் பற்றியதும் நோக்கியதுமான விமர்சனங்களும் கணிசமாக உள்ளன.

**நூலாசிரியர்:**

ஒய்வின்ட் புக்லறூட் (*Øivind Fuglerud*) : நோர்வேஜிய சமூக மானிடவியற்துறைப் பேராசிரியர். முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக இலங்கைத்தீவின் அரசியல், சமூக, பொருளாதார, இன முரண்பாடுகள் குறித்த ஆய்வுகளை முன்னெடுத்து வருபவர் மட்டுமல்லாது நோர்வேத் தமிழ்ச் சமூகம்

**இலங்கைத்தீவின் இனமுரண்பாட்டுக்கான சமாதான அனுசரணை (2000 - 2009) நோர்வேயின் வெளியுறவு அரசியலில் அதீத முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வென்ற பிம்பம் நோர்வேயினால் கொடுக்கப்பட்டு வந்துள்ளது. நோர்வேயின் சமாதான முயற்சியின் தோல்வி. அது தொடர்ச்சியாகப் பலதளங்களில் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற விளைவு ஆகியன பற்றி ஆராய்கிறது இப் புத்தகம்.**




**நூலின் முன்னட்டை**

Image Source - www.universitetsforlaget.no


தொடர்பான ஆழ்ந்த அறிதலுடையவர். ஈழத் தமிழர்களின் நாடுகடந்த வாழ்வு பற்றிய அறிதலும் ஆய்வனுபவமுமுடையவர். இலங்கையின் பல பாகங்களுக்கும் பயணம்செய்து, தங்கியிருந்து கள ஆய்வுகளை மேற்கொண்ட அனுபவம் மிக்கவர். இலங்கை நிலைமைகளில் நிபுணத்துவ அறிதல் உடைய கல்வியாளர்களில் முக்கியமானவர்.

இலங்கை தொடர்பான தன்னுடைய அனுபவமும் ஈடுபாடும் தொடர்பாக நூலின் முதல் அத்தியாயத்தில் இப்படிக் குறிப்பிடுகின்றார்:

முதலில் மாணவனாகவும், அடுத்து நோர்வே வெளிநாட்டுத் திணைக்களத்தின் புகலிட விண்ணப்ப கையாளுகைகளில் உண்மை கண்டறிபவனாகவும் தகவல் உறுதிப்படுத்துபவனாகவும் (*Fact finder*), பின்னர் ஆய்வாளனாகவும் பல ஆண்டுகள் இலங்கைத் தீவின் முரண்பாட்டின் கூறுகளைப் புரிந்துகொள்ள விழைந்திருக்கின்றேன். தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள் மத்தியில் நண்பர்களைக் கொண்டிருப்பவன். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தைச் சேர்ந்த பலரை அறிந்திருந்தேன். போரின் முடிவுடன் 30 ஆண்டுகால ஆய்வும் ஈடுபாடும் திடீர் ஸ்தம்பிதமடைந்த நிலையை உணர்த்தியது.

### நோர்வேயின் சமாதான முயற்சியின் தோல்வி

இலங்கைத்தீவின் இனமுரண்பாட்டுக்கான சமாதான அனுசரணை (2000 - 2009) நோர்வேயின் வெளியுறவு அரசியலில் அதீத முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வென்ற பிம்பம் நோர்வேயினால் கொடுக்கப்பட்டு வந்துள்ளது. நோர்வேயின் சமாதான முயற்சியின் தோல்வி, அது தொடர்ச்சியாகப் பலதளங்களில் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற விளைவு ஆகியன பற்றி ஆராய்கிறது இப் புத்தகம். சமாதான முயற்சியின் தோல்வியின் காரணங்களையும் ஆராய்கின்றது. அதற்கான அடிப்படையாக இலங்கைத்தீவின் அரசியல் வரலாற்றுப் பின்னணி - இனமுரண்பாட்டுக்கான மூலக் காரணிகள் - அரசியல், இன, மத, சமூக, பொருளாதார, பண்பாட்டு முரண்களும் யதார்த்தங்களும் நுணக்கமாகவும் விரிவாகவும்



# Innhold


FORORD 3

KAPITTEL 1 EN ØY I ET HAV 15
Land og folk 26
En kulturell trykk-koker 31
Krigen og det norske fredsengasjementet 34
Voldens kjemi 44
Perspektiv i boken 49
Noter 52

KAPITTEL 2 MYTER OG MORD 55
Dhammadipa 58
Tank, tempel og undertøy 65
Eliter og protest 68
S.W.R.D. Bandaranaike og valget i 1956 76
JVP: patriotisme, død og dobbel gjenoppstandelse 82
Noter 95

KAPITTEL 3 TAMILSK SELVSTENDIGHETSKAMP 99
Fedre og ulydige sønner 100
Etnisitet og intern ulikhet 106
I skyggen av India 117
Indisk intervensjon og det 13. grunnlovstillegget 122
LTTE: «Vår ære er troskap» 127
Noter 133

KAPITTEL 4 KRIG, FRED OG GRANSKINGSRAPPORTER 135
Ekspertpanelet og LLRC 139
Genève-prosessen 146
OISL-rapporten og Resolusjon 30/1 150





Tall og kritiske røster 157
Noter 168

KAPITTEL 5 TRIUMF OG TORTUR 173
Rajapaksa-tiden: familien først! 178
Uoversiktlig farvann 187
Religiøse minoriteter neste 195
Noter 203

KAPITTEL 6 MINORITETSSTRATEGIER 207
Sri Lanka Muslim Congress, fredsprosessen og religiøs vekkelse 213
Den tamilske diasporaen og hjemlandet 218
Politikk på Jaffna-vis 228
Noter 233

KAPITTEL 7 TI ÅR ETTER 237
Den liberale freden 242
*Viyath Maga* – kunnskapens vei? 245
Noter 250

LITTERATURLISTE 253

STIKKORDSREGISTER 262


**நூலின் உள்ளடக்கம்**

பேசப்படுகின்றன. பெரும் விடயப்பரப்புகளை இந்நூல் கையாண்டிருக்கின்றது.

முள்ளிவாய்க்கால் பேரழிவின் பத்தாண்டு நிறைவில் (2019) இந்தப்புத்தகம் வெளிவந்தது. இலங்கைத்தீவின் இன முரண்பாட்டுடன் தொடர்புடைய உள்நாட்டுத்தரப்புகள், பிராந்திய சக்திகள், தமிழ் டயஸ்போறா, நோர்வே உட்பட்ட சர்வதேச சக்திகள் என அனைத்துத் தரப்பினரைப் பற்றியதும் நோக்கியதுமான விமர்சனங்களும் கணிசமாக உள்ளன.

நோர்வேயின் அனுசரனையுடனான இலங்கைத் தீவின் சமாதான முயற்சியானது நோர்வேயில் உள்நாட்டு மட்டத்தில், ஊடகப்பரப்பில் போதியளவு கவனத்தைப் பெறவில்லை. சமாதான அனுசரனைப் பாத்திரத்தின் பொறுப்புப் பற்றி உரிய விவாதங்கள் முன்னெடுக்கப்படாமை நோர்வேயின் வெளியுறவுக் கொள்கையிலும் பொதுவிவாதத்தினதும் குறைபாடாகச் சுட்டப்படுகின்றது. நோர்வேயின் சமாதான வகிபாகம், இலங்கையில் அரசியல் தாக்கங்களை ஏற்படுத்தியதோடு, இன்றும் அத்தாக்கங்கள் வலுவானவையாக உள்ளன. இந்நூல் சமாதான முயற்சிகள் குறித்த தனியான மீளாய்வு அல்ல. ஆனால் சமாதான முன்னெடுப்பின் ஒரு பகுதியாக நிகழ்ந்த முக்கியமானவற்றை நோர்வேஜிய வாசகர்களுக்கு அறிமுகம் செய்கின்றது. அதனூடாகச் சமாதானத் தோல்வியின் விளைவுகள் பற்றியும் பேசுகின்றது.

ஒய்வின்ட் புக்லறூட் தனது ஆய்வுப் பணிகளின் பொருட்டான இலங்கைப் பயணங்களில் சிங்கள, தமிழ், முஸ்லீம் தரப்புகளைச் சேர்ந்த பல்வேறு மனிதர்களுடனான நேரடி உரையாடல்களின் அனுபவங்கள், தகவல்கள், பார்வைகளை ஆங்காங்கே பொருத்தமான இடங்களிற் பகிர்ந்து கருத்துகளை விவாதித்துச் செல்கின்ற ஒரு அணுகுமுறையும் இந்நூலின் தனித்துவங்களில் ஒன்று.

## நூலின் பேசுபொருட்கள்

எனது ‘திக்குகள் எட்டும்’ தொடரின் இந்தப்பகுதியானது, ஒய்வின்ட் புக்லறூட் அவர்களின் இந்நூலின் முதல் இரண்டு அத்தியாயங்களின் அறிமுகமாக அமைகின்றது. அவை இலங்கைத் தீவின் புவியியல் அமைவிலிருந்து அதன் மொழி, இன, கலாச்சார, சமூக, பொருளாதாரக் கூறுகளை வரலாற்று ரீதியாகவும் தகவல், தரவுகள் ரீதியாகவும் முன்வைக்கின்றன. சிங்களத் தேசியவாதத்தின் தோற்றத்திலிருந்து அதன் போக்கு, தமிழ்த் தேசியவாதம், அதன் போக்கு, இனமுரண்பாடு, போர் மற்றும் சமாதான முயற்சிகள், வன்முறைகள், சிங்கள உயரடுக்குகளும் அவற்றுக்கெதிரான ஜே.வி.பி தலைமையிலான ஆயுதக் கிளர்ச்சிகளும், ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சிகள் என்பவற்றின் மீது ஆழமான ஆய்வுப் பார்வையை முன்வைக்கின்றன. ‘திக்குள் எட்டும்’ தொடரின் அடுத்த பகுதி இப்புத்தகத்தின் ஏனைய அத்தியாயங்களின் மீது பார்வையைச் செலுத்தும்.

## இனமுரண்பாடு

இலங்கைத்தீவு 400 ஆண்டுகளுக்கு மேலான கொலனித்துவ வரலாற்றைக் கொண்டுள்ளது. பல வல்லரசுகள் மூலோபாய முக்கியத்துவமாகக் கருதும் அமைவிடத்தையும் அது கொண்டுள்ளது. கொலனித்துவ காலத்தில் உருவாக்கம் பெற்ற இனத்துவ மற்றும் பொருளாதார முரண்பாடுகள் தேசிய ஒருமைப்பாட்டினைக் கட்டியெழுப்புவதில் எதிர்கொள்ள நேர்ந்துள்ள சவால்கள் குறித்த வரலாற்றுப் புள்ளிகளை ஆராய்கிறது புத்தகத்தின் முதலாவது அத்தியாயம்.

2019 இன் ஈஸ்டர் குண்டுவெடிப்புப் போன்ற வன்முறைகளின் நீடிப்பிற்குக் காரணம் சிங்களப் பெரும்பான்மை அரச இயந்திரத்தினது போக்கு என முன்னுரையிற் குறிப்பிடப்படுகின்றது. நாட்டின் சகல பகுதி மக்களுக்கும் உரிய பாதுகாப்பும் சம உரிமைகளும் வழங்குவதற்குரிய விருப்பும் திறனும் அற்ற நிலையிலுள்ளது இலங்கை அரசு. 2009 இல் போர் முடிவுக்கு வந்தபின்னர், போரினால் களைப்படைந்து உழலும் மக்களை ஒருங்கிணைத்து ஒரு இனத்துவப் பன்முகத்தன்மை மற்றும் மத நல்லிணக்கச் சூழலை உருவாக்குவதற்கு மாறாக சிறிலங்கா அரசாங்கம் பௌத்த தேசியவாதத்தினைச் சிங்களப் பெரும்பான்மை சமூகத்தின் மத்தியில் வளர அனுமதித்திருக்கின்றது என்கிறார் ஒய்வின்ட். இலங்கையின் இனத்துவ அடையாள அரசியல் என்பது சமகாலத்திலும் முக்கியத்துவம் நிறைந்த பேசுபொருளாக இருக்கின்றது என ஈஸ்டர் குண்டுவெடிப்பினை முன்வைத்து அவதானங்களைப் பதிவுசெய்கின்றார். மூன்று இனக்குழுமங்களின் மத்தியிலுள்ள கடும்போக்குச் சக்திகள் ஒன்றையொன்று அடிப்படைவாதத்திற்குள் தள்ளுகின்ற எதிர்மறைச் சூழலை உருவாக்கிவருகின்றது என்கிறார்.

## ஒரு கடலுக்குள் ஒரு தீவு : நாடும் மக்களும்

‘ஒரு கடலுக்குள் ஒரு தீவு’ என்பது இந்நூலின் முதலாவது அத்தியாயத்தின் தலைப்பு. போர் முடிவுக்கு வந்த நான்கு ஆண்டுகளின் பின்னர் (2013), பேராசிரியர் ஒய்வின்ட் புக்லறூட் இலங்கைப் பயணம் மேற்கொண்ட அனுபவங்களின் நினைவுத் தெறிப்பாக ஒரு கதைசொல்லல் முறையில் அதன் பகிர்வுகள் அமைந்துள்ளன. போர் அழிவுகளின் எச்சங்கள் தொடர்பாகக் கண்ணுற்ற காட்சிகள், இறுதிப்போர் நடைபெற்ற வன்னிப் பிரதேசங்கள், குறிப்பாக முள்ளிவாய்க்கால் குறித்த விபரிப்புகள் இடம்பெற்றுள்ளன. நந்திக்கடல் வரை நேரடியாகச் சென்று பார்த்து இறுதிக்கட்டத்தில் நடந்தவற்றை மீள்பார்வை செய்கின்றார். அந்தக் காட்சி விபரிப்புகளிலிருந்து 2008-2009 சம்பவங்களை

> முள்ளிவாய்க்கால் பேரழிவின் பத்தாண்டு நிறைவில் (2019) இந்தப்புத்தகம் வெளிவந்தது. இலங்கைத்தீவின் இன முரண்பாட்டுடன் தொடர்புடைய உள்நாட்டுத்தரப்புகள், பிராந்திய சக்திகள், தமிழ் டயஸ்போறா, நோர்வே உட்பட்ட சர்வதேச சக்திகள் என அனைத்துத் தரப்பினரைப் பற்றியதும் நோக்கியதுமான விமர்சனங்களும் கணிசமாக உள்ளன.

மீள்நினைவுகளாகப் பதிவுசெய்திருக்கின்றார். நோர்வே உட்பட்ட மேற்குநாடுகளில் வாழும் தமிழ்மக்கள் போரை நிறுத்தக் கோரி, சர்வதேச சமூகத்திடம் சிறிலங்கா அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்குமாறு முன்னெடுத்த கவனயீர்ப்புப் போராட்டங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். ஆர்ப்பாட்டங்கள் ஒருபுறம் இடம்பெற மறுபுறம் அரசியல்வாதிகளுடன் இடம்பெற்ற கூட்டங்கள், உரையாடல்களில் இலங்கை அரசியல் விவகாரத்தில் ‘நடுநிலை ஆய்வு நிபுணராக’ தன்னைத் தமிழ் நண்பர்கள் அழைத்தமை குறித்த தகவல்களையும் குறிப்பிடுகின்றார்.

தொடர்ந்து, சமாதான முயற்சிகள் குழம்பிய சூழல், போருக்கு இட்டுச் சென்ற காரணிகள், இறுதிக்கட்டப் போரைச் சிறிலங்கா இராணுவம் முன்னெடுத்த முறை, புலிகள் அதனை எதிர்கொண்ட விதம், மக்கள் முகம்கொடுத்த அவலங்கள், அழிவுகள், படுகொலைகள், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உட்பட்ட உயர்மட்டத் தளபதிகளின் மரணம், போரின் பின்னான நிலைமைகள் என்பவை குறித்த தகவல்கள் இடம்பெறுகின்றன.

‘முள்ளிவாய்க்கால்’ - நோர்வே தலைமையிலான சமாதான முயற்சிக்கு அறுதியானதும் இரத்தக் களறியுடனுமான முற்றுப்புள்ளி வைக்கப்பட்ட இடம் என்கிறார். ஓரிரு சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்ட அந்த இடத்தில் நூறாயிரம் வரையான பொதுமக்களும் சில நூறு எஞ்சியிருந்த விடுதலைப் போராளிகளும் கடைசி மூன்று வாரங்கள் புகை மண்டலம், குருதி, சாவுகளுக்கு மத்தியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு இடைவிடாத தாக்குதல்களுக்கு முகம்கொடுத்த நிகழ்வுகளைப் பதிவுசெய்கின்றார்.

‘நாடும் மக்களும்’ என்ற துணைத்தலைப்பின் கீழ் இலங்கைத் தீவின் புவியியல் அமைப்பிலிருந்து, இனங்கள், மொழிகள், மதங்கள், அரசியல், சமூகம், பொருளாதாரம், பண்பாடுகள் உட்பட்ட அம்சங்களைத் தகவல் மற்றும் வரலாற்றுப் பார்வையில் முன்வைக்கின்றார். சிங்கள - தமிழ் - முஸ்லீம் - மலையகத் தமிழ்ச் சமூகங்கள், சமூகங்களுக்கிடையிலான முரண்பாடுகளுடன் நிலவுகின்ற சாதிய வேறுபாடுகள் சார்ந்த முரண்களையும் வெவ்வேறு சிக்கல்களையும் தொட்டுச் செல்கின்றார்.

### இறுதிப்போர் : சிறிலங்கா இராணுவ நகர்வும் புலிகள், தமிழரின் நிலையும்

போரை முடிவுக்குக் கொண்டுவருதல் என்ற வாக்குறுதியோடு 2005 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ச தேர்தலில் வென்று அதிகாரத்திற்கு வந்தார். பாதுகாப்பு அமைச்சராகப் பதவிக்கு வந்த அவரது சகோதரர் கோத்தபாய ராஜபக்ச பல்லாயிரக்கணக்கில் இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பினை மேற்கொண்டதோடு, பெருந்தொகை வெளிநாட்டுக் கடனில் ஆயுதக் கொள்வனவுகளையும் செய்து படைத்துறையைப் பலப்படுத்தினார். 2005 - 2008 காலப்பகுதியில் மாதாந்தம் 5000 புதிய இளைஞர்கள் இராணுவத்தில் இணைக்கப்பட்டனர். 2006 சமாதான முயற்சிகள் முறிவடைந்து போர் தொடக்கப்பட்ட போது சிறிலங்காப் படைகள் மூன்று முனைகளில் அடிமேல் அடிவைத்து முன்னேறின. 58 ஆவது படைப்பிரிவு மேற்குக் கரையோரமாக மன்னாரிலிருந்து பூநகரிக்கும் பின்னர் கிழக்கு நோக்கியும் - 57 ஆவது படைப்பிரிவு உட்புறமாக வவுனியாவிலிருந்து கிளிநொச்சி நோக்கியும் - 59 ஆவது படைப்பிரிவு வடக்கு நோக்கி, கிழக்குக் கரையோரமாக திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவு மற்றும் புதுக்குடியிருப்பு நோக்கியும் படைகளை நகர்த்தி முன்னேறின. 53 மற்றும் 55 ஆவது படைப்பிரிவின் சிறப்பு அதிரடிப்படையினர் முன்னணிக் களங்களிலும் குறுக்குவெட்டாகவும் போரில் ஈடுபட்டன. இத்தகு பாரிய மும்முனை இராணுவ ஆக்கிரமிப்பின் விளைவு, போராளிகளும பொதுமக்களும் அரச படைகளின் சூழ்ச்சிப்பொறிக்குள் சிக்கும் நிலைக்குள் இட்டுச் சென்றது என விபரிக்கப்படுகின்றது.

புலிகள் அதற்குப் பதிலாக பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியதோடு, கட்டாய ஆட்சேர்ப்பினையும் தீவிரமாக முன்னெடுத்தனர். இதனால் ஆட்சேர்ப்பு அணிகளின் கண்களிற் படாமலிருக்கத் தமது பிள்ளைகளைப் பெற்றோர் நீண்ட காலம் மறைத்து வைத்திருக்க நேர்ந்திருக்கின்றது. இறுதியில் அதிகாரப் பிரயோகத்துடன் பிள்ளைகள் இழுத்துச் செல்லப்பட்ட பல கதைகள் உள்ளன

எனவும் குறிப்பிடப்படுகின்றது. இராணுவ ரீதியான பின்வாங்கல் தொடங்கியதிலிருந்து விடுதலைப் புலிகள் இயக்கம் பொதுமக்கள் வெளியேறுவதைத் தீவிரமாகத் தடுத்தது. இறுதிப்போரின் போது இராணுவத்திடம் சரணடைய முயன்ற குழந்தைகள், பெண்கள் உட்பட்ட பொதுமக்கள் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டதற்கான ஆதாரபூர்வமான கதைகள் உள்ளன என்றும் பதிவுசெய்யப்படுகின்றது.

2008 இல் ஐ.நா உட்பட்ட தன்னார்வ நிறுவனங்களின் பணியாளர்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் வழங்க முடியாது என சிறிலங்கா அரசாங்கம் அறிவித்ததை அடுத்து அந்நிறுவனங்களின் வெளிநாட்டுப் பணியாளர்கள் (உள்நாட்டுப் பணியாளர்கள் தவிர்த்து) வெளியேறினர். அது அடிப்படையில் சர்வதேசப் பிரசன்னத்தை இல்லாமற் செய்கின்றதும், போர் மீறல்கள், படுகொலைகளை மறைப்பதற்கான சிறிலங்கா அரசின் முன்னேற்பாடு. அவ்வெளியேற்றத்தைச் சுற்றி நடந்த சம்பவங்கள், விளைவுகள் குறித்து விபரமாக எழுதப்பட்டுள்ளது.

### கொலனித்துவ ஆட்சிகள் பதித்த தடங்கள்

கொலனித்துவ ஆட்சிகள் இலங்கை அரசியலில் ஆழமான தடங்களைப் பதித்துள்ளன. கிறிஸ்தவ மிசனரிகளை உருவாக்கியதோடு, கொலனித்துவ ஆட்சிகள் இட்டுச்சென்ற முக்கிய மற்றும் நிலைத்திருக்கின்ற சமூக மாற்றங்களில் ஒன்று, பொருளாதார உயரடுக்குகளின் அபார வளர்ச்சி ஆகும். அவர்களே காலப்போக்கில், அரசியல் அதிகாரத்தை நிர்வகிக்கும் நிலைக்கும் வந்தனர். சமகாலத்திலும் இந்தப்போக்கின் தொடர்ச்சியை அவதானிக்க முடியும். இலங்கைத் தீவின் அரசியலின் பிரச்சாரமயம், கூர்மையான முரண்நிலைகள் உட்பட்ட கணிப்பிடமுடியாத போக்குகளுக்கு இந்தப் பொருளாதார உயரடுக்குகளுக்கு முதன்மைப் பங்குண்டு. உயரடுக்குகளுக்கும் சாதாரண வாக்காளர்களுக்குமிடையிலான இடைவெளி இன்றும் விவாதிக்கக்கூடிய அம்சமாக உள்ளது. திடமான கட்சிகள், சமூக அமைப்புகள், மற்றும் அடிமட்ட (மக்கள் மயப்பட்ட) இயக்கங்களின் பற்றாக்குறையானது அரசியல்வாதிகள் வெறுமனே கவர்ச்சிவாத நிலைப்பாடுகள் மற்றும் மிகைப்படுத்தல்கள் வாயிலாக வாக்குகளுக்குப் போட்டியிடுகின்ற நிலையைத் தக்கவைத்துள்ளது என்கிறார் ஒய்வின்ட்.

மாறிமாறி ஆட்சிசெய்த கொலனித்துவ சக்திகளின் அதிகாரப் பிரயோகத்திற்கும் சமகாலத்தின் இராஜதந்திர சதுரங்கத்திற்கும் இடையில் ஒரு தொடர்ச்சி உள்ளது. அந்தத் தொடர்ச்சிக்கான மூலகாரணி பிராந்திய நலன்கள் சங்கமிக்கின்றதும் பிளவுபடுகின்றதுமான ஒரு பகுதியில் இலங்கை அமைந்துள்ளமையாகும். ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டும் சுதந்திரத்திற்குப் பின் (பிரித்தானியாவிடமிருந்து) தமது வாக்கு வங்கிகளை எவ்வாறு தக்கவைத்துக் கொண்டன என்பதை வரலாற்று ரீதியாக விவாதிக்கின்றார். அக்கட்சிகளை நிறுவிய தலைவர்களின் ( டி.எஸ்.சேனநாயக்கா - ஐ.தே.க, S.W.R.D பண்டாரநாயக்கா - சிறிலங்கா சுதந்திரக் கட்சி) குடும்பப் பின்னணிகள், தலைமுறை தலைமுறையாகக் கட்சித் தலைமையைத் தம்மகத்தே கொண்டிருந்த வரலாறுகளும் பகிரப்படுகின்றன.

### அடையாள அரசியல்

அடையாள அரசியல் இந்த நூல் முழுவதும் முக்கிய பரிமாணத்தைக் கொண்டுள்ளது. இலங்கைத் தீவின் முரண்நிலை அரசியலின் மைய அச்சாக 'தேசியப் பிரச்சனை' உள்ளது. அது அரசியல் அதிகாரம் மற்றும் ஆள்புலப் பங்கீடு தொடர்பானது; தெற்கின் சிங்களப் பெரும்பான்மைக்கும், வடக்கு கிழக்கின் தமிழர்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் தொடர்பானது. பிரித்தானிய கொலனித்துவத்திலிருந்து நாடு விடுதலையடைந்த பின்னர் ஏற்படுத்தப்பட்ட பிரதிநிதித்துவ ஜனநாயகம் என்பது சிங்களப் பெரும்பான்மைக்குச் சாதகமானது. பல்லினத் தேசிய மக்களுக்கு உகந்த விளைவுகளைக் கொடுக்கவில்லை. தமிழ் அரசியல்வாதிகள் உரத்துக் குரலெழுப்பியுள்ளபோதும், இன்றும் எழுப்பிவருகின்ற போதும் அக்குரல்கள் செவிமடுக்கப்படவில்லை என்று விளக்குகின்றார். ஜனநாயகத்தின் மறுபக்கம் எப்படியிருக்கும் என்பதற்கு இலங்கை பொருத்தமான உதாரணம் என்று கூறும் ஒய்வின்ட் சிறுபான்மை இனக்குழுமங்கள் ஜனநாயகத் தேர்தல்களில் தமது நிலைப்பாடுகளுக்குரிய அங்கீகாரத்தை

அடையக்கூடிய உத்தரவாதப் பொறிமுறைகளைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புகளின்றி, பெரும்பான்மையினர் தீர்மானங்களை எட்டும்போது என்ன நிகழும் என்பதற்கு இலங்கையின் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தினை உதாரணமாகச் சுட்டுகின்றார். இன்னும் சொல்லப்போனால், 'போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால் போரை உருவாக்கிய காரணிகள் முடியவில்லை (தீர்க்கப்படவில்லை) என்ற ஒற்றை வாசகத்தை புத்தகத்தின் மையப்பேசுபொருளாகச் சொல்லலாம்.

## சிங்களத் தேசியவாதம்

இலங்கையின் சிங்களத்தரப்பில், ஓரளவு விளிம்புநிலையில் இருந்த அரசியற் கட்சிகள் நோர்வேயையும் அதன் சமாதான அனுசரனை வகிபாகத்தையும் கருவியாக்கிச் சிங்கள மக்கள் மத்தியில் எதிர்ப்பிரச்சாரங்களை மேற்கொண்டு மைய அரசியற் களத்திற்கு வந்தடைந்தன. எதிர்ப்பிரச்சாரம் என்பது தமிழர்களுக்கு ஆதரவாக, சிங்களவர்களுக்கு எதிராக மேற்குலகின் சார்பில் நோர்வே களமிறக்கிவிடப்பட்டுள்ளது என்பதான கருத்துருவாக்கங்களைக் குறிக்கின்றது.

இலங்கைத் தீவின் இனமுரண்பாட்டுக்கான காரணிகள் பல என்பதோடு அவை பன்முகப்பட்டவை. அடையாள அரசியல், இனமுரண்பாடு, சிங்களத் தரப்பின் குடும்ப ஆட்சிகள், ஒடுக்குமுறைகள், சமநிலையற்ற அபிவிருத்தி, சமாதான மற்றும் தீர்வு முயற்சிகளில் வெளிச்சக்திகளின் தோல்வி என அவை பல கூறுகளைக் கொண்டுள்ளன.

எல்லாவற்றிற்கும் மேலாக பிரித்தானியாவிலிருந்து நாடு சுதந்திரமடைந்த 1948 இலிருந்து நாட்டின் ஜனநாயக அமைப்பு முறைமை ஒரு நாட்டின் அனைத்துப் பிரதேச மக்களுக்கும் சம உரிமைகளையும் பாதுகாப்பினையும் வழங்குவதற்குரிய உத்தரவாதமும் விருப்புடனுமான ஒரு அரசைக் கட்டியெழுப்புவதில் இலங்கை தோல்வி கண்டிருக்கின்றது. பௌத்த தலைவர்களும் தேசியவாதிகளும் இலங்கைத் தீவின் முற்றுமுழுதான வரலாற்று நோக்கம் என்பது பௌத்த மதத்தைப் பேணுவதற்கானது என்று கருதுகின்றனர். அதிலும் மதபோதனையாக மட்டுல்லாமல், நிலப்பரப்பிலும் (வாக்களிக்கப்பட்ட பூமி கோட்பாடு), வாழ்வுமுறை, நெறிமுறைகளிலும் பொறிக்கப்பட்டதாகக் கருதுகின்றனர்.

## தமிழ்த் தேசியவாதம்

தமிழ்த் தேசியவாதத்திற்கு இருபக்கமுள்ளதாகச் சுட்டப்படுகின்றது. கூட்டுணர்வை உருவாக்கும் வகிபாகத்தோடு துரோகிகளை உருவாக்கும் போக்கினையும் அது கொண்டிருக்கின்றது. உள்நாட்டுப் போர் இடம்பெற்ற போதான விடுதலைப் புலிகளின் மேலாதிக்க காலங்களில் 'தமிழராய் இருத்தல்' என்பது புலிகளின் இலக்கு மற்றும் அவர்களின் வழிமுறைகளை ஒருமித்து ஆதரிப்பதைக் குறித்து நின்றது. தமிழராய் இருத்தல் எதனை உள்ளடக்குகின்றது என்பது தொடர்பாக ஒரு மாறுபட்ட பார்வையைக் கொண்டிருத்தல் சிக்கலானது மட்டுமல்ல, ஆபத்தானதும்கூட. சிங்கள மற்றும் தமிழ்த் தரப்பு அரசியல்வாதிகளால் 'துரோக முத்திரை' அதிகம் பயன்படுத்தப்பட்டது. சிங்களத் தேசியவாதம் பௌத்தர் அல்லாதவர்களை விழுங்கியது. தமிழ்த் தேசியவாதம் தன்னைச் சார்ந்தவர்களையும் விழுங்கியது.

## நோர்வேயின் சமாதான அனுசரனை

நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கான முன்னெடுப்பு 1997 இல் தொடங்கியது. 2002 இல் இருதரப்பிற்குமிடையிலான போர்நிறுத்த உடன்படிக்கையும் அதனைத் தொடர்ந்து ஸ்கன்டிநேவிய நாடுகளின் உறுப்பினர்களைக் கொண்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு உருவாக்கமும் முக்கியமான அடைவுகள்.

2002 - 2003 காலப்பகுதியில் இருதரப்பும் நேரடியாகச் சந்தித்துக் கொண்ட 6 சுற்றுப் பேச்சுகள் இடம்பெற்றன. 2003 ஏப்ரலில் பேச்சுவார்த்தை முறிந்த நிலையில் நேரடிப் பேச்சுவார்த்தைகளின் ஆயுட்காலம் என்பது ஏறக்குறைய ஒரு வருடமே. அதற்குப் பின் 3 ஆண்டுகள் நோர்வே இருதரப்புடனும் தனித்தனியாகவே சந்திப்புகளை நடாத்தியது.

2006 இல் ஜெனிவாவில் 2 சுற்றுப் பேச்சுகளில் இருதரப்பும் நேரடியாகக் கலந்துகொண்டிருந்தபோதும் அப்பேச்சுகள் விளைவுகளைத் தரவில்லை.

செப் 11' தாக்குதலின் பின்னர் உருவான அமெரிக்காவின் பயங்கரவாதத்திற்கு எதிரான உலகளாவிய போர், புலிகள் போன்ற அமைப்புகள் மீதான பார்வையை உலகளவில் மாற்றியிருந்தன. இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டமைப்பு (CoChairs : USA, EU, Japan, Norway) புலிகளின் முன்னைய தவறுகளைப் புறந்தள்ளி, (ராஜீவ் காந்தி, பிரேமதாசா கொலைகள் உட்பட) ஒரு சமாதானத் தீர்வை அமையக்கூடிய செயல்முறைக்குள் அவர்களை இழுப்பதற்கு முனைந்தது. அவர்களை ஒரு ஜனநாயக மற்றும் சட்ட வரையறைகளுக்கு உட்பட்ட பாதைக்குக் கொண்டுவர முயற்சித்தது. புலிகளிடம் சர்வதேசம் எதிர்பார்த்த மாற்றம் நிகழவில்லை.

சமாதான முயற்சிகளின் ஒவ்வொரு கட்டங்கள் குறித்த தகவல் ரீதியான சித்தரிப்புகள், பேச்சுவார்த்தைகளைச் சுற்றி நிகழ்ந்த சம்பவங்கள், விளைவுகளின் சாதகபாதகத் தன்மைகள் குறித்த பார்வை புத்தகத்திற் பகிரப்பட்டுள்ளது. சமாதான முன்னெடுப்பின் அம்சங்களுக்கும் அந்நேரம் இலங்கையில் நிகழ்ந்த மாற்றங்களுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்து நோக்கப்படுகின்றது. சமாதான முயற்சி குறித்த விரிவான மீளாய்வு இடம்பெறவில்லை. அது தொடர்பாக நோர்வேயின் 'நூறாட்' நிறுவனத்தின் (நோர்வே வெளியுறவு அமைச்சகத்தின் கீழ் இயங்குகின்றது. சர்வதேச நிதியுதவி தொடர்பான ஆய்வு மற்றும் ஆலோசனைகளை வழங்கும் செயல்மையம்) மையத்தின் பணிப்பிற்கு அமைய சுயாதீன ஆய்வாளர்களால் நோர்வேயின் சமாதான முன்னெடுப்புத் தொடர்பான மீளாய்வும் மதிப்பீடும் செய்யப்பட்டு அறிக்கை வெளிவந்திருந்தது. அந்த ஆய்வின் சில கூறுகளைத் தன் நோக்குநிலையில் விவாதித்துள்ளார்.

இரண்டு சூழமைவுகளில் உருவாக்கப்பட்ட குறுகிய வாய்ப்புகளுக்குள் நோர்வேயின் சமாதான செயல்முறை முன்னெடுக்கப்பட்டதாக 'நூறாட்' இன் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஒன்று பேச்சுவார்த்தைகளின் போது தமிழர்களின் விடுதலைப் போராட்ட அமைப்பினை சமதரப்பாக அங்கீகரிப்பதற்கான பிரதான தரப்புகளின் இணக்கம் சார்ந்தது. மற்றையது இருதரப்பிற்குமிடையிலான இராணுவச் சமநிலை.

## ஈழத்தமிழர்களின் புலப்பெயர்வும் சர்வதேச ஈடுபாடும்

போரும் பொருளாதார வாய்ப்புகளின் குறைபாடுகளும் நாட்டின் பெரும்பகுதி மக்களை நாட்டைவிட்டு வெளியேற வைத்தது. 1980 - 1990 தமிழர் பிரச்சினைக்கான பரந்த அளவிலான சர்வதேச அரசியல் அநுதாபம் கிட்டத்தொடங்கிய காலமாகும். 1983 தமிழர்களுக்கு எதிரான படுகொலைகளும் (கறுப்பு ஜூலை) அதன் விளைவாக திட்டமிட்ட முறைகளில் விரிவுபடுத்தப்பட்ட போர் நடவடிக்கைகளும் அதற்கான காரணிகளாகும். இந்தியா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான தமிழர்களின் அகதித் தஞ்சமடைவுகள் இலங்கையில் தமிழர்கள் மீதான துன்புறுத்தல்களை சர்வதேச ரீதியில் ஓர் அரசியற் பேசுபொருளாக்கியது. 1986-1992 காலப்பகுதியில் மட்டும் 120,000 ஈழத்தமிழர்கள் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் கோரினர். இன்றைய அளவுகோலில் அந்த எண்ணிக்கை மிகப்பெரியது. குறைந்தது அதே எண்ணிக்கையான தமிழர்கள் கனடாவுக்குச் சென்றனர். இன்று கனடாவில் ஒரு மில்லியனுக்கு மேலானவர்கள் வாழ்கின்றனர். இலங்கைக்கு வெளியே அதிக ஈழத்தமிழர் வாழும் நாடு கனடா.

ஆரம்ப காலங்களிலேயே புலம்பெயர் நாடுகளில் விடுதலைப் புலிகள் தமது கருத்துகளை மேற்கு நாடுகளின் அரசாங்கங்களுக்கு எடுத்துச் சொல்வதற்கான தமது உட்கட்டுமானங்களை உருவாக்கியிருந்தனர். பெருந்தொகையான அகதிகள் மற்றும் ஒரு மோசமான அரசிற்கு எதிரான தமிழர்களின் நியாயமான

பாதுகாவலர் என்ற புலிகள் தொடர்பான ஒரு முழுமையற்ற தோற்றம் ஆகிய இரண்டும் அரசியற் தீர்வு தொடர்பான சர்வதேச ஈடுபாட்டுக்கு இட்டுச்சென்றன.

## விடுதலைப் புலிகளின் இராணுவ பலமும் சமதரப்பு அங்கீகாரமும்

புலிகளின் இராணுவ ரீதியிலான முன்னேற்றம் அரச தரப்பினைப் பேச்சுவார்த்தைக்கு நிர்ப்பந்தித்தது. 1996 இல் இலங்கை மத்திய வங்கி மீதான தற்கொலைத் தாக்குதல் - 2000 ஆம் ஆண்டு யாழ் நகரின் நுழைவாயிலும் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்ததுமான ஆனையிறவுப் படைத்தளத்தினைக் கைப்பற்றியமை - 2001 இல் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் மீதான புலிகளின் தாக்குதல்கள் ஆகியன புலிகளின் இராணுவ வலிமையை நிரூபித்த தாக்குதல்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடனும் தொடர்புகளைக் கொண்டிருப்பதற்குரிய சர்வதேச சமூகத்தின் விருப்பு - சிறிலங்கா அரசாங்கத்திற்கு இணையான தரப்பாக அவர்களை அணுகிய சூழல் ஆகியன ஆயுதம் தரித்த விடுதலை அமைப்புகளுக்கு அரிதாகக் கிட்டும் அங்கீகாரம். அமெரிக்காவைத் தவிர, ஐரோப்பிய ஒன்றியம் ஜப்பான் ஆகிய சிறிலங்காவின் முக்கிய வணிக உறவு நாடுகள் புலிகளுடன் நேரடித் தொடர்புகளைக் கொண்டிருந்தன. ஆனால் சர்வதேச அரசியற் போக்கில் ஏற்பட்டுவந்த மாற்றங்கள் குறித்த உரிய புரிதற்திறனைப் புலிகளின் தலைமை கொண்டிருக்கவில்லை அல்லது அதற்கான விருப்பினைக் கொண்டிருக்கவில்லை என்பதையே அவர்களின் பல அணுகுமுறைகள் தெளிவுபடுத்தின என்ற விமர்சனம் முன்வைக்கப்படுகின்றது.

## விடுதலைப் புலிகளின் அணுகுமுறையும் சர்வதேச எதிர்வினையும்

'செப் 11' தாக்குதலின் பின்னர் உருவான அமெரிக்காவின் பயங்கரவாதத்திற்கு எதிரான உலகளாவிய போர், புலிகள் போன்ற

**நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கான முன்னெடுப்பு 1997 இல் தொடங்கியது. 2002 இல் இருதரப்பிற்கும் இடையிலான போர்நிறுத்த உடன்படிக்கையும் அதனைத் தொடர்ந்து ஸ்கன்டிநேவிய நாடுகளின் உறுப்பினர்களைக் கொண்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு உருவாக்கமும் முக்கியமான அடைவுகள்.**

அமைப்புகள் மீதான பார்வையை உலகளவில் மாற்றியிருந்தன. இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டமைப்பு (CoChairs : USA, EU, Japan, Norway) புலிகளின் முன்னைய தவறுகளைப் புறந்தள்ளி, (ராஜீவ் காந்தி, பிரேமதாசா கொலைகள் உட்பட) ஒரு சமாதானத் தீர்வை அமையக்கூடிய செயல்முறைக்குள் அவர்களை இழுப்பதற்கு முனைந்தது. அவர்களை ஒரு ஜனநாயக மற்றும் சட்ட வரையறைகளுக்கு உட்பட்ட பாதைக்குக் கொண்டுவர முயற்சித்தது. புலிகளிடம் சர்வதேசம் எதிர்பார்த்த மாற்றம் நிகழவில்லை. 2006 இல் கனடாவைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியம் புலிகளைத் தமது பயங்கரவாதப் பட்டியலில் இணைத்துக் கொண்டது. முன்னைய (2005) ஆண்டு ஐரோப்பிய ஒன்றியம் அவர்களுக்குப் பயணத் தடை விதித்திருந்தது. சிறிலங்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் புலிகளால் கொலை செய்யப்பட்டமையின் நேரடி விளைவே ஐரோப்பிய ஒன்றித்தின் தடை.

## பேச்சுவார்த்தைகளில் சிறிலங்கா, விடுதலைப்புலிகளின் மாறுபட்ட இலக்குகள்

'நூறாட்' இன் மீளாய்வின்படி, இரு தரப்பும் தத்தமது அரசியல் தொலைநோக்குகளோடு பேச்சுவார்த்தைகளுக்குள் நுழைந்தார்களே தவிர, பேச்சுவார்த்தைகளின் மூலம் அவற்றில் மாற்றங்களைஏற்படுத்துவது குறித்துப் பெரியளவில் ஆர்வம் கொண்டிருக்கவில்லை. அக்கருத்துத் தொடர்பான தனது நிலைப்பாட்டினை முன்வைக்கும் ஒய்வின்ட், இருதரப்பும் பேச்சுவார்த்தையை முதன்மையாகத் தமது அரசியல் இலக்குகளுக்கான கருவியாக அணுகின என்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு (ரணில்) சர்வதேச உதவிகளும் முதலீடுகளும் முதன்மையானவை. கட்சியின் தேர்தற் பிரச்சாரத்தில் நாட்டின் மோசமடைந்த பொருளாதாரத்தை மேம்படுத்துவது முதன்மைப் பேசுபொருளாக இருந்தது. அதற்கு புலிகளுடனான பேச்சுவார்த்தை அவசியமான படிக்கல். புலிகளைப் பொறுத்தவரை போரிடும் தரப்புகளுக்கிடையிலான எல்லைகளை உறுதிப்படுத்துவதோடு, சிறிலங்காப் படைகளுடன் சேர்ந்து இயங்கிய தமிழ்க் குழுக்களிடமிருந்து ஆயுதக் களைவினைச் சாத்தியப்படுத்துவதற்கான வாய்ப்பினைப் போர் நிறுத்த ஒப்பந்தம் வழங்கியது. அதனைத் தமது அரசுருவாக்கச் செயல்முறைகளை விரிவுபடுத்தும் நோக்கிற்குப் பயன்படுத்துவதும் புலிகளின் இலக்கு.

சமாதானப் பேச்சுவார்த்தைகளின் தோல்விக்குப் பொறுப்பு நோர்வே இராஜதந்திரிகள் என 'நூறாட்' ஆய்வாளர்களின் மீளாய்வில் சுட்டப்படவில்லை. சமாதான அனுசரணையாளராக இரு தரப்புகளின் சர்வதேச சமூகத்துடனான உறவு தொடர்பாக எந்த அளவிற்கு நோர்வே கவனமெடுத்தது என்பது தொடர்பான கேள்வி இந்நூலில் எழுப்பப்படுகின்றது.

## படுகொலைகள்

1953 இல் நிகழ்த்தப்பட்ட தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள், 1983 இன் கறுப்பு ஜூலை படுகொலைகள் உட்பட்டவற்றினை முன்னிறுத்தி வன்முறைகளின் போக்கு, அவற்றின் தன்மைகளை விளக்குகின்றார். தமிழர்களின் கூட்டு உளவியலையும் விழிப்புணர்வையும் கட்டமைத்ததில் கறுப்பு ஜூலை ஒரு திருப்புமுனையாக அமைந்தது. பொதுமக்கள் மீதான படுகொலைகள், மாற்றுத் தெரிவு ஏதும் இல்லை என்பதனையும் தமிழ் உயிர்களைப் பாதுகாக்க வேறெவரும் இல்லை என்பதனையும் தெளிவுபடுத்திய நிகழ்வாக மாறியது.

சிங்கள மற்றும் முஸ்லீம் மக்கள் மீதான புலிகளின் படுகொலைகள், அவற்றின் விளைவுகள் பற்றிய பார்வைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. 1984 - 1990 வரை, 1984 இல் முல்லைத்தீவில் டொலர் மற்றும் கென்ற் பண்ணைகளில் 62 சிங்கள மக்கள் கொல்லப்பட்டமை, 1985 இல் அநுராதபுரப் படுகொலை (146 பொதுமக்கள்), கிழக்கில் ஏறாவூரில், காத்தான்குடி முஸ்லீம்கள் மீதான படுகொலைகள் எனவாக பட்டியலிடப்படுகின்றன. இத்தகு வன்முறைகளும் படுகொலை நடவடிக்கைகளும் எந்தெந்தப் புறநிலைகளில், எவற்றின் விளைவுகளாக, எவற்றின் பின்னணிகளில் நடந்தேறின என்ற சூழமைவுகளையும் விளக்குகின்றார்.

## இராணுவத்திலும் இயக்கத்திலும் இணைவதற்காக இளைஞர்களின் உந்துதல்

இருதரப்பிலும் படைத்துறையில் இணைவதற்கான இளைஞர்களின் உந்துதல்கள் வேறுபட்டவை. மானிடவியலாளர் Michele Ruth Gamburd, சிங்களக் கிராமமொன்றில் சிப்பாய்களுடன் நிகழ்த்திய ஆவணப்படுத்தப்பட்ட உரையாடலை மேற்கோள் காட்டிச் சிங்கள இளைஞர்களின் உந்துதல் குறிப்பிடப்படுகின்றது. அரசியல்வாதிகள் மேடைகளில் முன்னிறுத்த விரும்புகின்ற தேசியப்பற்று, பயங்கரவாதத்தை ஒழித்தல் என்பனவல்ல சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் அதிகம் இணைந்ததற்கான உந்துதல். பொருளாதார மாற்று வழிகளின்மை, குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்ற முடியாமை, எதிர்காலம் தொடர்பான நம்பிக்கையீனங்களே அவர்களை இராணுவத்திற் சேரத் தூண்டிய புறக்காரணிகள். அவர்களைப் பொறுத்தவரையில் 12 - 24 ஆண்டுகால இராணுவசேவை ஒப்பந்தமென்பது, குடும்பத்திற்கு உணவளிக்கக்கூடிய வருமானத்தைத் தருகின்றது. இராணுவத்திலிருந்து பல்லாயிரக்கணக்கில் தப்பியோடுதல், இணைவிற்கான உண்மையான காரணங்களின் பிரதிபலிப்பினைக் காட்டுகின்றன. 2000 ஆம் ஆண்டுகளில் 35,000 - 60,000 வரையானவர்கள் தப்பியோடியதாகத் தரவுகள் கூறுகின்றன.

மனித உரிமைச் செயற்பாட்டாளர் மாலதி புலிகளின் நிர்வாகப் பகுதியின் வாழ்வு தொடர்பாக எழுதியுள்ள தனது புத்தகத்தில், இயக்கத்தில் இணைந்த பெண்களிற் பெரும்பாலானவர்களின் குடும்பங்கள் அழிவுகளைச் சந்தித்தவை என்பதை மேற்கோள் காட்டுகின்றார். போராட்டத்தில்

இணைந்தமைக்கான முதன்மைக் காரணம் தனிநாட்டினை அடைவதுது அல்ல. தமது குடும்ப உறவுகளைக் கொன்ற இராணுவத்தினரைத் தண்டிக்கின்ற எண்ணமே அவர்களின் உந்துதல். வீடுகளை இழந்தமை, கல்விவாய்ப்பின் பற்றாக்குறைகள், மோசமான வறுமை என்பன இயக்கத்தில் இணைவதற்கான ஏனைய காரணிகளாக இருந்துள்ளன.

### பௌத்த சிங்கள இனவாதம்

இனத்துவ முரண்பாடுகள் சார்ந்த அம்சங்களோடு, இந்நூலில் நுணக்கமாகக் கையாளப்படும் மற்றுமோர் விடயம், 1948 இல் பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரமடைந்த காலத்திலிருந்து சமகாலம் வரை, அரசு திட்டமிட்டமுறையில் ஜனநாயகச் செயல்முறையின் கீழ் அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்காமையின் விளைவுகள் ஆகும். சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இனவாதமும் அதிகரித்து வந்துள்ளமை குறித்தும் பிரஸ்தாபிக்கப்படுகின்றது. வன்முறைக்கான திறவுகோலாக மட்டும் இனவாதம் தொழிற்படவில்லை. வன்முறையைத் தக்கவைத்து உந்தித்தள்ளுகின்ற கருவியாகவும் இது இருந்து வருகின்றது. அதன் ஒரு பரிமாணம் முற்றிலும் பொருளாதார ரீதியிலானது; ஆயுத வணிகத்தினால் எட்டப்படும் இலாபம், படைத்துறையில் இராணுவத்தினருக்கான வேலைவாய்ப்பு, சேவை மற்றும் தொழிற்துறையின் இராணுவமயமாக்கல், டயஸ்போறாவில் நிகழும் மூலதனப் பரம்பல் என்பன. பகை முரண்பாட்டுநிலையைப் பேணுவதன் ஊடாகவும் 'மற்றவர்களிடமிருந்து வரக்கூடிய' அச்சுறுத்தலை நிலையானதாக ஆக்குவதனூடாகவும் தமது இலக்கிற்கான ஆதரவைத் தக்கவைத்தல் இரண்டாவது பரிமாணமாகும். காலவோட்டத்தில் இத்தைகைய போக்குகள் சமூகத்தை நிலையான எதிர்மறை மாற்றங்களுக்குள் இட்டுச்செல்கின்றது என்ற பார்வை முன்வைக்கப்படுகின்றது.

### பொறுப்புக்கூறலின் அவசியம்

யாழ்ப்பாணம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த 1995 காலப்பகுதியில் அங்கும், 2002 இல் சமாதான காலத்தில் வன்னிக்கும், போர் முடிந்து 4 ஆண்டுகளின் பின்னர் 2013 இல் தமிழர் பிரதேசங்களுக்கும் பயணித்த தனது அனுபவங்கள், எதிர்கொண்ட சம்பவங்கள், நிகழ்ந்த உரையாடல்களை விரிவாகவும் நிலைமைகளின் பன்முகத்தன்மையை விளக்கும் வகையிலும் விபரிக்கின்றார்.

சமகாலத்திலும் நிலவுகின்ற முரண்பாட்டுக்கான அரசியற் தீர்வைக் கண்டடைவதற்கு வரலாற்று நிகழ்வுகள் மீதான ஒரு பொறுப்புக்கூறல் அவசியம் என்ற நம்பிக்கையோடு இந்தப் புத்தகம் எழுதப்பட்டுள்ளதாக ஒய்வின்ட் ஓரிடத்தில் குறிப்பிடுகின்றார். சிங்களத் தரப்பின் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் எந்தளவிற்கு அவசியமோ, அதேபோல் அரசியல் ஈடுபாடு கொண்ட தமிழர்கள், செயற்திறனையும் விமர்சனபூர்வமான அணுகுமுறையையும், தமது சொந்த வரலாறு சார்ந்து கொண்டிருத்தல் அவசியம். தமிழீழத் தனியரசு அவர்களது இலக்கு என்றால் அத்தகு அணுகுமுறை அதிகமதிகம் அவசியமாகுகின்றது என வலியுறுத்துகின்றார்.

### மகாவம்சம் கட்டமைத்த சிங்களப் பெருந்தேசியவாதம்

இரண்டாவதும் மூன்றாவதுமான அத்தியாயங்கள் சிங்களத் தேசியவாதத்தினுடைய தோற்றம், உள்ளடக்கம், கட்டமைப்பு, போக்கு என்பனவற்றை வரலாற்று ரீதியாக அணுகுகின்றன. சிங்களத் தேசியவாதத்தின் வேர் முற்றிலும் பௌத்தத்தை மையப்படுத்தியது; முழு இலங்கைத் தீவினதும் ஆள்புலம், நிலப்பரப்பு மீதான கோரலை மையப்படுத்தியது. புத்தர், பௌத்த மதம், நாடு, சிங்கள மக்கள் ஆகியவற்றுக்கிடையிலான இணைப்பாகக் கட்டமைக்கப்பட்டதே சிங்களத் தேசியவாதம். மகாவம்சம் அதனது 'ஆதாரம்'. இது 6 ஆம் நூற்றாண்டில் பௌத்த பிக்குகளால் தொகுக்கப்பட்ட புராணக்கதைகளின் தொகுப்பு நூல். இந்தக் கதைகளுக்குப் பின்னால் தான் பௌத்த மதபீடம் தன்னைக் கட்டமைத்து வைத்துள்ளது. அரசியல்வாதிகள் அதனைப் பிரதிபலிக்கின்றனர்.

மகாவம்சத்தின் முக்கிய கதைகளில் ஒன்று 'லங்கா' எப்படிக் கண்டுபிடிக்கப்பட்டது என்பதாகும். வட இந்திய இளவரசனான

விஜயன் (சிங்கபாகுவின் மூத்த மகன்) 700 தோழர்களுடன் இலங்கையை வந்தடைந்தாக கூறப்படுகின்றது. கௌதம புத்தர் தன் பூலோக வாழ்வைத் துறந்த சமகாலத்தில் அது நிகழ்ந்ததாக மகாவம்சம் சொல்கிறது. புத்தரின் போதனைகள் (தம்மம்) காக்கப்பட வேண்டும் என்பதற்காக பொ.மு 544 இல் இலங்கைத் தீவு புத்தரால் சிங்களவர்களுக்கு அருளப்பட்டதாகவும் அதிற் கூறப்படுகின்றது.


மகாவம்சத்தின் மற்றொரு அம்சம் துட்டகைமுனு இலங்கை முழுவதையும் எவ்வாறு ஒற்றை ஆட்சியின் கீழ் கொண்டுவந்தான் என்பது பற்றியதாகும். துட்டகைமுனுவும் அவனது சகோதரன் மகாநாகவும் பொ.மு இரண்டாம் நூற்றண்டில் தென் இலங்கையின் ருகுண இராச்சியத்தில் இளவரசர்களாகப் பிறந்தனர் என்கிறது மகாவம்சம். அது தென் இந்தியாவைச் சேர்ந்த (மகாவம்சத்தின் படி) எல்லாளன் அநுராதபுரத்தினை தலைமையகமாகக் கொண்டு இலங்கையின் மாபெரும் இராச்சியத்தை ஆண்டுவந்த காலப்பகுதியாகும். எல்லாளனைப் போரில் வென்றே துட்டகைமுனு இலங்கை முழுவதையும் ஒற்றையாட்சியின் கீழ் கொண்டுவந்ததாகக் கூறப்படுகின்றது. மகாவம்சத்தின் துட்டகைமுனு - எல்லாளன் கதையையும் அதன் ஏனைய கதைகளையும் எவ்வாறு அர்த்தப்படுத்துவது என்பது தொடர்பாகப் பல விவாதங்கள் இடம்பெற்றே வந்துள்ளன. அதனை எழுதியவர்கள் தமிழ் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான சிங்கள மக்களின் யுத்தத்தை விபரித்ததாக எடுத்துக்கொள்ள முடியாது. ஆனால் பல சிங்களத் தேசியவாதிகளால் அக்கதை அவ்வாறுதான் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது.

எல்லாள மன்னன் பற்றிய மகாவம்சத்தின் விபரிப்புகள் பெரும்பாலும் பாராட்டுதல்களாகவும் மதிப்பளிப்புகளாகவுமே உள்ளன. பௌத்த மதத்தைப் பின்பற்றுபவனாக இல்லாவிட்டாலும், பௌத்த மரபுகள், பாரம்பரியங்களையும் போதனைகளையும் பாதுகாத்த ஒரு மன்னன் அவன் எனும் குறிப்புகள் உள்ளன.  அவனது மரணத்திற்குப் பின்னர் முழுமையான அரச சடங்குகளுடன் அடக்கம் செய்யப்பட்டதோடு, அவனது கல்லறையைக் கடந்து செல்லும் அனைவரும் மரியாதை செய்யவேண்டுமெனவும் பணிக்கப்பட்டிருந்தது. துட்டகைமுனு - எல்லாளன் கதை சார்ந்த மகாவம்சக் குறிப்புகள், இராச்சியங்களுக்கு இடையிலான மோதலில் துட்டகைமுனுவுக்கு சமமான எதிர்த்தரப்பு எல்லாளன் என்ற நோக்குநிலை சார்ந்தது. மகாவம்சத்தினை ஒரு சிங்கள தமிழ் இன மோதலின் வெளிப்பாடாக அர்த்தப்படுத்துவது இலங்கை வரலாற்றின் நவீன காலப் பிரதிபலிப்பினைச் சார்ந்தது என பல வரலாற்றாசிரியர்கள் கருதுவதாக ஒய்வின்ட் மேற்கோள் காட்டுகின்றார்.

## ஜே.வி.பி : தோற்றமும் பின்னணியும் விளைவுகளும்

ஜே.வி.பியினரின் தோற்றம், பின்னணி, ஆயுதப் புரட்சி, ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சிகள், அரசியற் கட்சியாக அவர்களின் செயற்பாடுகள் விபரிக்கப்படுகின்றன. ஜே.வி.பியின் தோற்றத்தின் சமூக, பொருளாதாரக் காரணிகள் பேசப்படுகின்றன. அரசியல்வாதிகள், நாட்டை ஆண்ட உயரடுக்குகளுடன் தொடர்பில்லாத விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே அதிகமாக ஜே.வி. பியில் இணைந்த இளைஞர்கள். அவர்கள் சுதந்திரத்திற்குப் பின்னரான கல்வித்துறை ஜனநாயகப்படுத்தலின் உற்பத்திகள். அதாவது கல்விவாய்ப்பைப் பெற்ற சிங்கள இளைஞர்கள் வேலை வாய்ப்பின்மையால் எதிர்காலம் தொடர்பான நம்பிக்கையீனங்களின் விளைவாக அரசுக்கெதிரான நடவடிக்கைகளில் இறங்கும் உந்துதலைப் பெற்றனர். ஜே.வி.பி நிறுவனர் ரோஹண விஜயவீரவினது வரலாறும் இலங்கை அரசியலில் ஏற்பட்ட நிகழ்வுகளும் விளைவுகளும் ஆழமாகப் பேசப்படுகின்றன.

ஜே.வி.பி தொடர்பான பார்வைகளை இலங்கையைச் சேர்ந்த மானிடவியலாளர் *Gananath Obeyesekere* மேற்கொண்ட ஆய்வொன்றின் பெறுபேறுகளை முன்வைத்து ஒய்வின்ட் விளக்குகின்றார். ஆட்சியதிகாரத்தில் நீடித்தவர்கள் பிரித்தானிய ஆட்சியின் கீழ் கல்வி வாய்ப்பினைப் பெற்ற உயரடுக்கினைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மொழியை, கல்விநிறுவனங்களை, கலாச்சார முதுசங்களை முன்னிறுத்தி வாக்காளர்களை உசுப்பேத்தி, ஆட்சியதிகாரத்தைத் தக்கவைப்பதில்




நூலின் பின்னட்டை

**யாழ்ப்பாணம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த 1995 காலப்பகுதியில் அங்கும், 2002 இல் சமாதான காலத்தில் வன்னிக்கும், போர் முடிந்து 4 ஆண்டுகளின் பின்னர் 2013 இல் தமிழர் பிரதேசங்களுக்கும் பயணித்த தனது அனுபவங்கள், எதிர்கொண்ட சம்பவங்கள், நிகழ்ந்த உரையாடல்களை விரிவாகவும் நிலைமைகளின் பன்முகத்தன்மையை விளக்கும் வகையிலும் விபரிக்கின்றார்.**

வெற்றி கண்டனர். ஆனால் அரசியற் தீர்மானங்களை எடுப்பதில் புதியவர்களை உள்வாங்கவில்லை.

கல்விப்பின்புலம், வலைப்பின்னல் ஆகியவற்றின் அடிப்படையில் சரியான அடையாளங்களைக் கொண்ட புதியவர்களுக்கு மட்டுமே உயரடுக்கு கதவுகள் திறந்திருந்தன. ஒரு இளைஞனுக்கான பிரகாசமான எதிர்காலம் என்பது உரிய தேர்வுமதிப்பீடுகள், ஆங்கிலத்திறன் மற்றும் அதிகார அடுக்குகளில், அதிகாரிகள் மட்டத்தில் அணைவுகளைக் கொண்டிருப்பதிற் பெரிதும் தங்கியிருந்தது. இவற்றையெல்லாம் பெறுவதற்கு ஒரு நல்ல குடும்பப் பின்னணியும் அவசியம் என்ற நிலையிருந்தது. 1956 இன் தேர்தல் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியதோடு, சிறுபான்மைத் தேசிய இனங்கள் சார்ந்து பாரிய எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தியது. ஆனால் சிங்களச் சமூகத்தின் மத்தியில் அது அதிகாரப் பகிர்வு மற்றும் பிற நிலைமைகள் சார்ந்து நேர்மறையான மாற்றத்திற்கும் வழிகோலவில்லை.

1970 இல் 31 வீதமான நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாட்டின் 5 முன்னணி உயரடுக்கு கல்லூரிகளில் கல்வி கற்றவர்களாக இருந்தனர். இருபது அமைச்சர்களில் 11 பேர் அதே கல்லூரிகளிற் பயின்றவர்களாக இருந்தனர். படிநிலை அடுக்குகளைச் சமன் செய்வதற்குப் பதிலாக இலங்கையின் ஜனநாயக அமைப்பு முறைமையானது வர்க்க சமூகத்தை மேலும் ஏற்றத்தாழ்வுகளுக்குள் இட்டுச்சென்றது. தேசிய உயரடுக்குச் சமூகம் ஏனைய வர்க்கச் சமூகங்களை வெளியில் நிறுத்தியது. இந்நிலை இன்னும் தொடர்கின்றது. பெரும்பாலும் வாய்ப்புகளுக்கான அணுகல், ஒப்பீட்டளவில் சாதாரணமான பதவிகள் கூட, தகுதிகள் மற்றும் திறந்த போட்டியின் ஊடாக அல்லாமல் - செல்வாக்குமிக்க நபர்களுடனான தொடர்புகளால் தீர்மானிக்கப்படுகின்றது. செல்வாக்குமிக்கவர்கள் எனும்போது அது நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் முக்கியஸ்தர்கள், அதிகார உயரடுக்குகளைச் சேர்ந்த நபர்களைக் குறிக்கின்றது. 1971 இன் ஜே.வி.பி, புரட்சி அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான முயற்சி மட்டுமல்ல அது சிறிலங்காவின் உயரடுக்கு மீதான தாக்குதலும்கூட என்பது ஒபயசேகரவின் பார்வை. 'திக்குள் எட்டும்' தொடரின் அடுத்த பகுதி இப்புத்தகத்தின் ஏனைய அத்தியாயங்களின் மீது பார்வையைச் செலுத்தும். அது தமிழர்களின் தனிநாட்டுக்கான போராட்டம், போர் - சமாதானம் - விசாரணை அறிக்கைகள், வெற்றிக்களிப்பும் சித்திரவதைகளும், சிறுபான்மை மூலோபாயங்கள், பத்து ஆண்டுகளுக்குப் பின் ஆகிய தலைப்புகளிலான பெரும் அத்தியாயங்களின் கீழ் பேசப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான பார்வையாக அமையும். (தொடரும்)

இலங்கையில் பண்பாட்டுத் தனித்துவம் கொண்ட பல்வேறு நிலப்பரப்புகளுள் கிழக்கு மாகாணத்தின் கீழைக்கரை எனும் நிலப்பரப்பும் ஒன்றாகும். இந்நிலப்பரப்பு ஒரு நெடிய பாரம்பரியத்தையும், ஆதிவேரான பழங்குடிகளின் தொல்மரபையும் கொண்டமைந்துள்ளது. அவ் வரலாற்றை சிங்கள வரலாற்றாதாரங்களுடன் ஒப்பிட்டு, நவீன ஆய்வுப்பார்வையில் எழுதும் முயற்சியே 'ஈழத்துக் கீழைக்கரை: ஒரு வரலாற்றுப் பார்வை' என்ற இத்தொடராகும். இதன்படி, இலங்கையின் கிழக்கு மாகாணம் எனும் அரசியல் நிர்வாக அலகின் பெரும்பகுதியையும் அப்பகுதியைத் தாயகமாகக் கொண்ட மக்களின் பண்பாட்டையும் வரலாற்று ரீதியில் இது ஆராய்கிறது. கிழக்கிலங்கையின் புவியியல் ரீதியான பண்பாட்டு வளர்ச்சியையும், அங்கு தோன்றி நிலைத்திருக்கும் தமிழர், சோனகர், சிங்களவர், ஏனைய குடிகள் போன்றோரின் வரலாற்றையும், இன்றுவரை கிடைத்துள்ள சான்றுகளை வைத்துத் தொகுத்துக் கூறும் தொடராக இது அமைகிறது.




**விவேகானந்தராஜா துலாஞ்சனன்**

விவேகானந்தராஜா துலாஞ்சனன் அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் மூலக்கூற்று உயிரியலும் உயிர் இரசாயனவியலும் கற்கைநெறியில் இளமாணிப் பட்டம் பெற்றவர். அதே பல்கலைக்கழகத்தின் பட்டக்கற்கைகள் பீடத்தில் பொது நிர்வாகமும் முகாமைத்துவமும் துறையில் முதுமாணிக் கற்கையைத் தொடர்கிறார்.
இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாகக் கடமையாற்றும் இவர் தற்போது மட்டக்களப்பு போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளராகப் பணி புரிகிறார்.
இலங்கை சைவநெறிக்கழக வெளியீடான 'அலகிலா ஆடல்: சைவத்தின் கதை' எனும் சைவ வரலாற்று நூலையும் (2018), தனது திருமண சிறப்புமலராக 'மட்டக்களப்பு எட்டுப் பகுதி' நூலையும் (2021) வெளியிட்டுள்ளார்.


# கீழைக்கரை:

## துட்டகாமணி முதல் வட்டகாமணி வரை

ஆரம்பத்தில் பத்து உடன்பிறந்தார் குலத்தோரை அடையாளம் காண சிங்கள வரலாற்றாசிரியர்கள் தடுமாறியிருக்கிறார்கள். ஏனெனில், அனுராதபுர மன்னன் மூத்தசிவனுக்குப் புதல்வர்களாக பத்து உடன்பிறந்தார் இருந்தார்கள் (மகாவம்சம் 11:56). கொத்ததாமூக்கல், போவத்தகல் கல்வெட்டுகளை முதலில் படித்தபோது செனரத் பரணவிதானவும் அதிலுள்ள உதியன், அபயன் ஆகிய பெயர்களை மூத்தசிவனின் பத்து மைந்தருடையது என்றே கருதினார் (Paranavitana, 1970:lli). எனினும் பின்னாளில் அவர்கள் தனி அரசகுலம் என்று கருத்தை மாற்றிக்கொண்டார்.

மூத்தசிவனின் பத்து மைந்தர்களில் இளையவன் அசேலன். அவன் தன் தமையனை வென்று அனுராதபுர அரசை 22 ஆண்டுகள் (பொமு. 237 - 215) அபகரித்த சேனன் - குத்தகன் எனும் இரு குதிரை வணிகர் மைந்தரைக் கொன்று மீண்டும் ஆட்சியில் அமர்ந்தான்.

சேனன், குத்தகன் இருவரதும் தந்தை மகாவம்சத்தில் அ`ச்`சநாவிக (assanஷி vika - குதிரை நாவாய்க் காரன்) என்று குறிப்பிடப்படுவதால் (மகாவம்சம் 21:11) அவர்கள் தென்னகத்திலிருந்து வந்து குதிரை வணிகம் செய்தோர் என்று ஊகிக்கிறார்கள். ஆனால் மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம், கீழைக்கரையில் முதல் அரசை அமைத்தவனாக கூத்திகனைப் பாடும் (கமலநாதன் & கமலநாதன், 2005: 1, 11-13). மகாவம்சத்துக்கு மாறாக கூத்திகனின் மகனே சேனன் என்றும் அது சொல்லும். கூத்திகன் தென்னகத்திலிருந்து குடிகளை வரவழைத்து குடியேற்றி இங்கு "மேட்டுக்களப்பு" எனும் அரசை அமைத்தான். எனினும் சேனன் - குத்தகனை நினைவுகூருமாற் போல், மகாவம்சம் பின்னோர் இடத்தில் கீழைக்கரையில் இருந்த "சேனகுத்தகாமம்" எனும் ஊரொன்றைச் சொல்கிறது (சூளவம்சம் 58:41-47). உண்மையிலேயே சேன - கூத்திகர்களுக்கும் கீழைக்கரைக்கும் உறவேதும் இருந்ததா என்பதை உறுதியாகக் கூறமுடியாதுள்ளது. எனினும் கீழைக்கரைக்குத்

தெற்கே கதிர்காமத்துக்கு அருகே உள்ள சிற்றாலைப்பர்வத (சிதுல்பவ்வ) மலையில் குதிரையேற்றம் பழக்கும் பெருமகன் திசையன் என்பவன் பற்றிய பிராமிக் கல்வெட்டு கிடைப்பதாலும், மட்டக்களப்பு போரதீவுப்பற்று களுமுந்தன்வெளியிலும் (உரு. 01), ஏறாவூர்ப்பற்று இலாவணையிலும் நாகர் கால குதிரையின் உருவங்கள் கண்டறியப்பட்டுள்ளதாலும் (பத்மநாதன், 2016:157, 307) அக்கால கீழைக்கரை மக்கள் குதிரையையும் குதிரை வணிகத்தையும் அறிந்திருந்தனர் என்பதை உறுதிப்படுத்தலாம்.




**உரு. 01 போரதீவுப்பற்று களுமுந்தன்வெளியில் கிடைத்த நாகர் கால குதிரைச் சிற்பம் (படம்: பத்மநாதன், 2016)**

மூத்த சிவனின் மைந்தர்களில் ஒருவனும் தேவானாம்பிரிய திசையனின் தம்பியுமான மகாநாகன், தெற்கு உரோகணத்தில் மாகாம அரசை அமைத்தபோதும், அவனது மகனான யத்தாலய திசையன் பற்றி மகாவம்சத்தில் விரிவான தகவல்கள் இல்லை. ஆனால் மொனராகல மாவட்டத்தின் மடுல்ல பிரதேசத்தில் தம்பகல்லுக்கு அருகே கினிவல்கொடையில் கிடைத்த தெய்யன்னகேம பிராமிக் கல்வெட்டிலும், அம்பாந்தோட்டை மாவட்டத்தின் ரூகம பிராமிக் கல்வெட்டிலும் அவன் “மகாரா|சா யதலக திசையன்” என்று குறிப்பிடப்பட்டுள்ளதால், அவன் உரோகணத்தின் முதன்மை அரசனாகவே விளங்கினான் என்பதை அறிந்துகொள்ளலாம். பத்து உடன்பிறந்தார் தோன்றிய கதிர்காம சத்திரிய அரசுடனான முதலாவது முரண்பாடு இவன் காலத்திலேயே ஏற்பட்டிருக்க வேண்டும்.

அந்த முரண்பாடு யத்தாலய திசையனின் மகன் கோட்டபயன் காலத்தில் பத்து உடன்பிறந்தாரில் பெரும்பாலானோரைக் கொன்றொழிக்குமளவு பெரும் குரோதமாக வளர்கிறது. இந்தக் கோட்டபயன் மகன் காக்கைவண்ண திசையனுக்குப் பிறந்தவனே மகாவம்சத்தின் கதாநாயகனான துட்டகாமணி (பொமு 161 - 137).

காக்கைவண்ண திசையன் காலத்தில் வடக்கே அனுராதபுரம் எல்லாளனின் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது. அவன் காக்கைவண்ண திசையனின் தந்தைவழிக் கொள்ளுப்பாட்டனாகிய அசேலனைக் கொன்று முடிசூடியிருந்தான். எல்லாளன் ஆட்சியின் காரணமாகவே மூத்தசிவன் வம்சத்தில் (உரு. 02) வந்த ஏனையோர் அனுரையைக் கைவிட்டு உரோகணத்தில் பல்வேறு சிற்றரசுகளை அமைத்து ஆண்டு வந்திருக்க வேண்டும்.

எல்லாளனின் ஏகபோக அனுராதபுர அரசன்றி, தென்னிலங்கையிலும் உரோகணத்திலும் ஏராளமான




**உரு. 02 மூத்தசிவன் வம்சத்தில் உதித்த மன்னர்கள்**

சிற்றரசுகள் இக்காலத்தில் நீடித்தன என்பதை கல்வெட்டுகளிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது (Ranawella, 2018:54). அந்த அரசரில் முக்கியமானோர் நாம் போன அத்தியாயத்தில் கண்ட பத்து உடன்பிறந்தார் குலத்தின் மூன்றாம் தலைமுறை அரசர்கள். அவர்கள் பாணமைப்பற்று (போவத்தகல்), அக்கரைப்பற்று (சாகாமம்), ஏறாவூர்ப்பற்று (குசலான்மலை), விந்தனைப்பற்று (கெனன்னேகல்) உள்ளிட்ட கீழைக்கரையை ஆண்டு வந்தார்கள். குமுக்கனாற்றுப் படுகையை ஆண்டு வந்த மூத்தவன் சர்வனின் பேரன் ஆய் மகாதிசையன், கல்லோயாவின் தென்பகுதியை ஆண்டு வந்த உபராசன் நாகனின் மருகன் வழிப் பேரன் காமணி திசையன், முந்தனை ஆற்றுப் படுகையை ஆண்டு வந்த உபராசன் நாகனின் மகன் வழிப் பேரன் காமணி திசையன், என்போரை இவர்களில் குறிப்பிடத்தக்க சமகாலத்தவராகச் சொல்லலாம்.

எல்லாளன் இவற்றில் எந்தவொரு அரசையும் வெல்ல முயன்றதாக கல்வெட்டு - இலக்கியச் சான்றுகளெதுவும் கிடைக்கவில்லை. எனவே கீழைக்கரையின் பத்து உடன்பிறந்தார் குலத்துடனும், உரோகணத்தில் இருந்த மூத்தசிவன் வம்சத்தினருடனும் ஏனைய சிற்றரசுகளுடனும் எல்லாளன் நல்லுறவிலேயே நீடித்திருக்கிறான் எனலாம்.

உரோகணத்தின் மாகாமம் காக்கைவண்ண திசையன் ஆட்சியில் அனுரைக்குச் சமனான செல்வச் செழிப்புடன் விளங்கியதை மகாவம்சமும் சொல்வதால் துட்டகாமணியின் அனுரைப் படையெடுப்புக்கு முழுத் தீவையும் தனது ஆட்சியின் கீழ் கொணரவேண்டும் என்ற பேராசை ஒன்றே காரணமாக இருந்தது என்பதை ஊகிக்க முடிகின்றது. ஆனால் மகாவம்சம் சித்தரிப்பது போலன்றி, அனுரையை துட்டகாமணி வெல்வதற்கான வழியை வகுத்ததிலும் ஏற்பாடுகளைச் செய்து கொடுத்ததிலும் அவனது தந்தை நுண்ணரசியல் செய்திருப்பதாகவே புரிந்துகொள்ள முடிகின்றது. அனுராதபுரத்துக்கு பூர்விகமாக உரிமைகொண்டிருந்த மூத்தசிவன் வம்சத்தாரை அங்கிருந்து அகற்றி உரோகணக் காடுகளில் அலையவிட்ட வன்மத்தை அதன் மூலம் காக்கைவண்ண திசையன் ஆற்றிக்கொள்ள முடிந்திருக்கும் எனலாம்.

மாகாமத்து மூத்தசிவன் வம்சத்தினருக்கு பிறவிப் பகையாக விளங்கிய பத்து உடன்பிறந்தார் குலத்தினர் இதில் எல்லாளனுக்கே சார்புநிலை எடுத்திருக்க வாய்ப்புகள் அதிகம். எனவே முதற்கட்டமாக அவர்களை வெல்ல காக்கவண்ண திசையன் தன் மூத்த மகன் சத்தாதிசையனை இறக்காமத்துக்கு அருகே தீகவாவியில் தங்க வைத்திருக்கிறான். எந்த இலக்கியத்திலும் விரிவான தகவல்கள் கிடைக்கவில்லை

என்றபோதும், பெரும்பாலும் சத்தாதிசையனின் தீகவாவி வருகைக்குப் பின்னர், கீழைக்கரையை ஆண்ட பத்து உடன்பிறந்தார் குலம் வலுவிழந்திருக்கவேண்டும், அல்லது அவனோடு போரிட்டு மறைந்திருக்கவேண்டும்.

சத்தாதிசையனின் முகாம் அமைந்திருந்த தீகவாவி, இன்று கல்லோயா என்று அழைக்கப்படும் கல்லாறு, பைந்தாறு, செங்கற்படை ஆறு, களியோடை என்று மூன்று கிளையாறுகளாகப் பிரியும் மல்கம்பிட்டிக்குத் தென்கிழக்கே, களியோடை எனும் தெற்குக் கிளையின் தென்கரையில் அமைந்துள்ளது. தொடர்ச்சியான வெள்ளப்பெருக்குகள், வண்டல் மண் படிவால் இந்த சிற்றாறுகள் அவ்வப்போது திசை மாறியிருக்கலாம். எவ்வாறெனினும், கல்லாற்றின் இந்த மூன்று கிளைகளூடும் நுழையும் படகுகள் சந்திக்கும் புள்ளியாக தீகவாவி இருந்ததால் அது வணிக நகராக வளர்ச்சி கண்டது எனலாம்.

தீகவாவியை அடுத்து உள்ள மல்கம்பிட்டியில் மண் எடுத்துத் தான் மேட்டுக்களப்பை நிரப்பி கூத்திகன் மட்டக்களப்பு நகரை அமைத்தான் என்கிறது மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம். பூர்வசரித்திரத் தொன்மத்திலுள்ள இந்த 'மட்டுக்களப்பு' நகர் உண்மையில் தீகவாவி தான் என்றுகொண்டால், தீகவாவி நகரின் தோற்றத்தை கூத்திகனுக்கும் சத்தாதிசையனுக்கும் இடையேயுள்ள நூறாண்டு இடைவெளியில் பொருத்திப் பார்க்க முடிகின்றது.

தீகவாவியைச் சூழ கல்லாற்றின் இரு கரைகளிலும் தொன்மையான வணிகம் செழித்த குடியிருப்புகள் அமைந்திருக்கின்றன. இந்தப் பகுதியில் குடுவில், மல்வத்தை, களியோடை, முள்ளிக்கொளுந்துமலை முதலிய இடங்களில் பல பிராமிக் கல்வெட்டுகள் வாசிக்கப்பட்டுள்ளன. தீகவாவிக்குத் தென்மேற்கே ஏழு கி.மீ தொலைவில் அமைந்துள்ள குடுவில்லில் "தீகவாவி வணிகர்களின்" மைந்தரை மணந்திருந்த "தமிழச்சி திசை" என்பவளின் குகை அமைந்திருந்தது (IC 1, 480). மல்வத்தையில் கிடைத்த ஒரு பிராமிக் கல்வெட்டில், சித்திரா தேவியின் வரி சேகரிப்பாளரும் பெருமகன் உதியனின் மகனுமான பெருமகன் சுசாதன் என்பவன் பற்றிக் கூறப்படுகிறது (IC 1, 471). வரி வசூலிக்குமளவு வணிக நடமாட்டமிக்க இடமாக தீகவாவிப் பகுதி இருந்தது என்பதற்கான சான்று இது.

நிற்க, காக்கைவண்ண திசையன் இறந்த பின்னர் மகாகாம அரியணைக்காக சகோதரர்களான சத்தாதிசையனும் துட்டகாமணியும் போரிட்டிருக்கிறார்கள். இறுதியில் பிக்குகள் தலையிட்டு அவர்களை சமாதானப்படுத்த வேண்டி நேரிட்டது. துட்டகாமணி முடிசூட, சத்தாதிசையன் மீளவும் தீகவாவிக்கே அனுப்பப்படுகிறான். துட்டகாமணி அனுரைக்குப் படையெடுத்து எல்லாளனை வெல்வது அதன்பிறகே நிகழ்கிறது.

ஆனால் துட்டகாமணியின் அனுரைப் படையெடுப்பு, மகாவம்சத்துக்கும் முந்தைய "சிகளவத்துப்பகரண" நூலில் சற்று வேறுபட்டுச் சொல்லப்படுகிறது. இலங்கையை ஆளும் முப்பத்திரண்டு தமிழ் அரசர்களை வென்று அதன் ஆட்சியை ஒரு குடையின் கீழ் கொண்டு வருவதாக சூளுரைத்து சிற்றாலைப் பர்வதத்தில் பிக்குகளுக்கான மாபெரும் அன்னதானமொன்றை ஏற்பாடு செய்த துட்டகாமணி, தீகவாவியில் இரு தமிழ் அரசர்களை வென்றபின்னர் அம்பாரகம எனும் ஊரை அண்மித்த "மகா அம்பலப்பிட்டியாங்கன" எனும் இடத்தில் முகாமிட்டு மகாகங்கை ஆற்றின் கரையோரமாக அனுரை நோக்கிப் படைகளுடன் பயணித்தான் (Ranawalla, 2008:62).

"சிகளவத்துப்பகரண" சொல்லும் சம்பவத்தைக் கொண்டு, தீகவாவியில் துட்டகாமணி வென்ற தமிழ் அரசர்களை பத்து உடன்பிறந்தோர் குலத்தைச் சேர்ந்த இரு அரசர்களாகவும், அம்பாரகமத்தை இன்றைய அம்பாறையாகவும், மகாகங்கையை மகா ஓயாவாகவும் அடையாளம் காண்பது ஆர்வமூட்டுகிறது.

துட்டகாமணியின் படையிலிருந்த பத்து பெருவீரர்களில் ஒருவன் பெயர் நந்திமித்திரன். "பெருமகன் நந்தியின் மைந்தன் மித்திரன்" என்று அவன் பெயர் பாணமைப்பற்று தென்குடும்பி மலையிலுள்ள பிராமிக் கல்வெட்டொன்றில் பொறிக்கப்பட்டுள்ளது. எனவே துட்டகாமணியின் காலத்திலேயே பாணமைப்பற்று பகுதி பத்து உடன்பிறந்தார் குலத்தின் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேறிவிட்டது என ஊகிக்கலாம்.

துட்டகாமணியின் இறுதிக்காலத்தில் தீகவாவியில் அவனது இளவல் சத்தாதிசையனால் விகாரம் ஒன்று கட்டப்படுகிறது. அதுவே இன்றுள்ள தீகவாவி விகாரம் (உரு.03) என அடையாளம் காண்கிறார்கள். மூத்தசிவன் வம்சத்தில் வந்த துட்டகாமணியும் அவன் தம்பி சத்தாதிசையனும் மீண்டும் அனுரை அரியணையில் அமர்ந்த பின்னர், அதுவரை தனியரசுகளாகக் காணப்பட்ட உரோகண அரசுகள் அனுரை அரசின் மேலாதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. அனுரை அரசனுக்கு அடுத்து அரசுரிமை பெறும் இளவரசன் (உபராசன்) “ஆப்பா” என்ற பெயரில் உரோகணத்தை நிருவகிக்க வேண்டும் என்ற வழமை உண்டானது.

துட்டகாமணியின் இறுதிக்காலத்தில் தீகவாவியில் அவனது இளவல் சத்தாதிசையனால் விகாரம் ஒன்று கட்டப்படுகிறது. அதுவே இன்றுள்ள தீகவாவி விகாரம் (உரு.03) என அடையாளம் காண்கிறார்கள்.

உரோகணத்தில் இலாஞ்ச திசையன் தீகவாவியிலேயே உபராசனாக இருந்திருக்கிறான் என்பதற்குச் சான்று, தீகவாவிக்கு அருகே விந்தனைப்பற்றின் இராசக்கல் மலையிலுள்ள அவனது பெயர் பொறித்த ஒரு கல்வெட்டு (*Paranavitana*, 1970:33). திசையனின் மகன் ஆய் திசையன் பொறித்ததாக அதே மலையில் காணப்படும் இன்னும் இரு கல்வெட்டுகளும் சத்தாதிசையனின் மகனான இதே இலாஞ்சதிசையன் பொறித்தவை தான் என இனங் காண்பார்கள். இராசக்கல்லின் அருகே வக்கி எல்லையில் கிடைத்த இன்னொரு கல்வெட்டும் இலாஞ்ச திசையன் பெயரைக் குறிப்பிடுகிறது.



உரு. 03 தீகவாவி விகாரம் – இன்றைய தோற்றம். (படம்: விக்கிபீடியா)

இலாஞ்ச திசையன் மறைந்தபிறகு சத்தாதிசையனின் மூன்றாவது மகன் கல்லாடநாகனும் (பொமு 109 – 103), அவனுக்கும் பின்னர் நான்காவது மகன் வட்டகாமணி அபயனும் (பொமு 103) அனுரையை ஆண்டு வருகிறார்கள். இவர்களது காலங்களில் கீழைக்கரை உள்ளிட்ட உரோகணத்தின் ஆட்சி நிலவரம் தெளிவாக அறியக்கூடவில்லை. ஆனால் அனுரையின் அடுத்த ஆட்சிக்குரிய உபராசன் உரோகணத்தை ஆளும் வழக்கம் காணப்பட்டதாக அறியமுடிவதால், இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் ஆட்சிக்காலத்துக்கு முன்னர் உரோகணத்தை

சத்தாதிசையனுக்குப் பின்னர் (பொமு 137 – 119) அவன் இளைய மகன் தூலத்தனன் (பொமு. 119) அனுரையில் முடிசூடப்பட்டான். ஆனால் உரோகணத்தை ஆண்டுவந்த மூத்த மகன் இலாஞ்ச திசையன் (பொமு 119 – 109) படையெடுத்து வந்து தம்பியை வென்று ஒன்பது ஆண்டுகள் அனுரையை ஆண்டான்.

உபராசர்களாக ஆண்டு வந்தனர் எனலாம். இவர்களது காலத்திலும் சத்தாதிசையனால் அரசிருக்கையாக உருவாக்கப்பட்ட தீகவாவியே கிழக்கு உரோகணத்தின் தலைநகராக விளங்கியது என ஊகிக்கமுடிகின்றது.

வட்டகாமணி அபயன் காலத்தில் உரோகணத்தில் அவனுக்கு எதிராக கிளர்ச்சி ஏற்படுகின்றது. அதை முன்னெடுத்தவன்

**வாலகம்பாகு என்பது வட்டகாமணி அபயனின் சிங்களப்பெயர். திய்யன் வட்டகாமணிக்கெதிராக கிளர்ச்சி செய்து கிழக்கு உரோகணத்தின் சுயாட்சியைப் பெற்றுக்கொண்டதும் இறுதியில் வட்டகாமணி திய்யனோடு சமாதானம் செய்துகொண்டதுமே இப்பாடலின் அடிநாதம். பிராமணனான திய்யனுக்கும் இன்று முக்குகர் சமூகத்தைச் சேர்ந்தோராக தம்மை இனங் காட்டிக்கொள்ளும் படையாட்சி குடியினருக்கும் இடையே இருந்த தொடர்பு எத்தகையது என்பது தெரியவில்லை**

உரோகணத்தில் நகுலநகரத்தில் வாழ்ந்த பிராமணன் திய்யன்.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல, தெற்கே திய்யனின் கிளர்ச்சி பரவ, வடக்கே தென்னகத்திலிருந்து ஏழு தமிழ் வீரர்கள் அவன் மீது போர் தொடுக்க மாதோட்டத்தில் வந்திறங்கியிருப்பதாக செய்தி வருகிறது.

இரு முனைகளிலும் ஏற்பட்ட அழுத்தங்களை வட்டகாமணி இராசதந்திரத்தோடு முகங்கொடுக்க முடிவெடுத்தான். முதலில் உள்ளூர்க்காரனான திய்யனோடு உடன்படிக்கை மேற்கொண்டு அவனோடு இணைந்தான். வட்டகாமணிக்கு ஆதரவாக மாதோட்டம் சென்ற திய்யனின் படைகள் பாண்டியரிடம் தோற்றன. வட்டகாமணியின் சிங்களப்படைகளையும் வென்று பாண்டியப்படைகள் அனுராதபுரத்தைக் கைப்பற்றின. வட்டகாமணி குடும்பத்தாருடன் வெசகிரி எனும் காடுகளுக்குத் தப்பியோடினான்.

ஏழு பாண்டியப் பிரதானிகளில் இருவர் திரும்பிச் செல்ல புலஃகத்த (பழஞ்சாத்தன்?), |பாஃகிய (வாகையன்?), பனையமாறன் (பனையன் மாறன்?), பிலியமாறன் (பழையன் மாறன்?), |தாதிகன் (இருதிசையன்?) எனும் ஐவர் ஒருவர் பின் ஒருவராக இங்கிருந்து ஆண்டனர். சில பாளி நூல்கள் சொல்வதன்படி, இறுதிப் பாண்டியனுக்குப் பின்னர் பதினான்கு ஆண்டுகள் திய்யனும் அனுரையை ஆண்டான். திய்யன் மாதோட்டப் போரில் தோற்ற பின்னர் பாண்டியருக்குக் கீழ்ப்படிந்து அனுரையிலேயே தங்கியிருந்ததால் அது சாத்தியமாயிற்று என்று பரணவிதான அனுமானிப்பார். அல்லது அவன் பழையபடி உரோகணத்திலேயே தங்கியிருந்து பாண்டியர் காலத்தில் சுயாட்சி செலுத்தி வந்திருக்கலாம்.

இதில் சுவையான விடயம் என்னவென்றால், மட்டக்களப்புப் பூர்வ சரித்திரத்தில் முக்குவர் மரபு எனும் தலைப்பின் கீழ் படையாட்சி குடி எனும் சமூகப் பிரிவினருக்குரியதாக பதிவு செய்யப்பட்டுள்ள பாடலொன்று தான்:

"கொண்டல் எனும் திசை தனது என
மனதொடு குடி படை வைத்து அரசன்
பண்டு முறைப்படி ஆண்டனர் திறை பெறு வாலகம்பாகு ஒருவன்
தண்டு தளத்தொடு சென்றனர் கண்டு மனைக்கு அதிபர்
விண்டுதிறை பணம் என்றுமில்லாமலே வேண்டினதால்
அகமகிழ் குகனே.

“கிழக்குத் திசையை குடியும் படையும் வைத்து பழைய முறைப்படி அரசாண்டு வரும் போது தாங்கள் திறை கேட்ட வாலகம்பாகு என்பவன் தனது படைத்தளங்களோடு வந்து தன்னிடம் திறைப்பணம் கோரக்கூடாது என்று வேண்டியமையால் [அவன் கூறியதை ஏற்றுக்கொண்டு] அகம் மகிழ்ந்த பெருமைக்குரிய குகன் குலம் தாங்கள்.”

வாலகம்பாகு என்பது வட்டகாமணி அபயனின் சிங்களப்பெயர். திய்யன் வட்டகாமணிக்கெதிராக கிளர்ச்சி செய்து கிழக்கு உரோகணத்தின் சுயாட்சியைப் பெற்றுக்கொண்டதும் இறுதியில் வட்டகாமணி திய்யனோடு சமாதானம் செய்துகொண்டதுமே இப்பாடலின் அடிநாதம். பிராமணனான திய்யனுக்கும் இன்று முக்குகர் சமூகத்தைச் சேர்ந்தோராக தம்மை இனங் காட்டிக்கொள்ளும் படையாட்சி

குடியினருக்கும் இடையே இருந்த தொடர்பு எத்தகையது என்பது தெரியவில்லை. ஆனால், குலப்பாடல்கள் வழியே நினைவுகூரப்பட்டு வந்த குறித்த சம்பவம் ஏதோ ஒரு காலத்தில் இந்த சமூகப் பிரிவினரின் பெருமைக்குரிய விடயமாக வாய்மொழிப் பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை வியப்போடு நாம் உறுதிசெய்துகொள்ள முடிகின்றது.

## அடிக்குறிப்புகள்

1. மகாவம்ச உரைநூலின் படி, அபயன், தேவானாம்பிரிய திசையன் (பொமு 307 - 267), உதியன் (பொமு 267 முதல் ), மகாசிவன் (பொமு 250கள்), மகாநாகன், மத்தாபயன், சூர திசையன் (பொமு 237 வரை), கீரன், மித்திரன், அசேலன் (பொமு 215 - 205) ஆகிய பதின்மர். இவர்களில் மூத்தசிவனுக்குப் பின்னர் இரண்டாவது மைந்தன் தேவானாம்பிரிய திசையனே முடிசூடுவதால், மூத்தவன் அபயன் இளவயதிலேயே மறைந்துவிட்டான் போல தென்படுகின்றது. மத்தாபயன், கீரன், மித்திரன் ஆகியோராலும் அரசிருக்கையை அலங்கரிக்க இயலவில்லை. மகாநாகன் தெற்கே மகாகாமத்தில் அரசை நிறுவியவன்.

2. பருமக அசருய திசஃக ||சய உப`சிக |குரய லெனெ (*parumaka asaruya tisaha upasika guraya lene*). குதிரை பழக்குநர் பெருமகன் திசையனின் மனைவி அடியவள் குரையின் குகை (IC 1 : 606 Paranavitana, 1970, p. 46).

3. *parumaka nadika putasa parumaka mitasa lene mahasudassane sagasa dine*. பருமக ந|திக புதச பருமக மிதச லெனெ மஃக சுதச்சனெ ச|கச |தினெ. பெருமகன் நந்தியின் புதல்வன் பெருமகன் மித்திரனின் குகையான மகாசுதர்சனம் சங்கத்துக்கு வழங்கப்பட்டது (IC 1 No. 498).

4. *devanapiya maharajha gamini tisaha puta lajhaka rajhaha [i]da pa[tita]pita site lene paca visati*. |தெவநபிய மஃகர||ச |கமிணி தி`சஃக புத ல||சஃக இ|த ப[தித]பித சிதெ லெனெ பச விசதி. தேவர்கள் அன்பன் [சத்தா] திசைய மகாராசாவுடைய மைந்தன் இலாஞ்ச திசையன் இங்கு தாபித்த இருபத்தைந்து குளிர்ந்த குகைகள் (IC 428).

5. அவர்களை பாண்டிய அரசர்களாக இனங்காண்பார்கள். எவ்வாறெனினும் ஒரே நேரத்தில் ஏழு அரசர் படையெடுத்து வருவது சாத்தியமில்லை என்பதால், இவர்களை பாண்டியப் படையில் முக்கிய பிரதானிகளாக இருந்தவர்கள் என்று கருதலாம். இவர்களுக்கும் உரோகணத்தில் பாண்டிய வம்சத்தில் வந்த பத்து உடன்பிறந்தார் குலத்துக்கும் பிராமணன் தியனுக்கும் இருந்த தொடர்பு தெளிவில்லை. ஒருவேளை துட்டகாமணியின் காலத்தின் பின்னரும் பத்து உடன்பிறந்தார் குலம் கிழக்கு உரோகணத்தில் நீடித்ததெனில் அவர்களுக்கு ஏற்பட்ட ஒடுக்குமுறை அல்லது அழிவுக்குப் பகரமாகவும் தெற்கே அவர்களது ஆதரவாளரை இணைத்து தியனும் வடக்கே பாண்டியரும் வட்டகாமணிக்கு எதிராக படையெடுத்திருக்கலாம்.

## உசாத்துணை


கமலநாதன், சா.இ. கமலநாதன், கமலா. (2005). மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம், கொழும்பு - சென்னை:குமரன் புத்தக இல்லம்.

பத்மநாதன், சி. (2016). இலங்கைத் தமிழர் வரலாறு: கிழக்கிலங்கையில் நாகரும் தமிழரும் (கிமு 250 - கிபி 300). கொழும்பு: இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்.

*Paranavitana, S. (1970). Inscriptions of Ceylon: Volume I, Ceylon: Department of Archaeology.*

*Ranawella, G.S. (2018). History of the Kingdom of Rohana: From the Earliest Times to 1500 AC. Colombo: Ministry of Higher Education and Department of Archaeology.*


இவ்வத்தியாயத்தில் பிறமொழி ஒலிப்புக்களை சரியாக உச்சரிப்பதற்காக, ISO 15919 ஐத் தழுவி உருவாக்கப்பட்ட தமிழ் ஒலிக்கீறுகள் (Diacritics) பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்த ஒலிக்கீறுகளின் முழுப்பட்டியலை இங்கு காணலாம்.

(தொடரும்)

"யாழ்ப்பாணக் குடாநாட்டின் நூலகப் பாரம்பரியம் என்ற இத்தொடரானது, யாழ்ப்பாணத்தில் புராதன நூலக வரலாறு முதல் நவீன தனியார் நூலக வளர்ச்சி, பொது நூலக வளர்ச்சி, நூலகவியல் கல்வியின் அறிமுகம், நூலகத்துறையில் ஈழத்தமிழர்களின் முன்னோடி முயற்சிகளாக யாழ்ப்பா ணத்தில் எழுந்த நூலகவியல்சார் நூல் வெளியீடுகள், நூலகவியல் துறைசார் சஞ்சிகைகளின் வெளியீடுகள், யாழ்ப்பாண கல்வியியல் வரலாற்றில் தடம் பதித்த நூலகங்களின் வரலாறு என்பவை உள்ளிட்ட விடயங்களை பற்றி பேசவிழைகின்றது.



● நடராஜா செல்வராஜா

நடராஜா செல்வராஜா, யாழ். இராமநாதன் பெண்கள் கல்லூரியில் நூலகராகவும், யாழ்ப்பாண, சர்வோதய சிரமதான சங்கத்தின் யாழ்.மாவட்ட நூலகப் பொறுப்பாளராகவும், இலங்கை உள்ளூராட்சி அமைச்சின் நூலகராகவும், இந்தோனேசியா, ஐக்கியநாடுகள் சபையின் கிராமிய பொது நூலக அபிவிருத்திப் பிரதிநிதியாகவும், ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்தின் ஆய்வு நூலகத்தின் பொறுப்பாளராகவும், கொழும்பு இனத்துவக் கல்விக்கான சர்வதேச நிலைய ஆய்வு நூலகப் பொறுப்பாளராகவும் பதவி வகித்துள்ளார்.

அயோத்தி நூலக சேவையின் ஸ்தாபகரும், நூலகவியல் காலாண்டுச் சஞ்சிகையின் தாபக ஆசிரியராகவும் செயற்பட்டார். ஊடகத்துறையிலும் பணியாற்றிவிட்டு, தற்போது ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் இவர், ரோயல் மெயில் தபால் நிறுவனத்தின் அந்நிய நாணயப்பிரிவில் அதிகாரியாக தற்போது பணியாற்றுகின்றார். இவர் நூலகவியல் பற்றி தொடர் ஆய்வுகளை மேற்கொண்டு வருவதுடன், நூலகவியல் பற்றியும் பல வெளியீடுகளை செய்துள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் உருவான சில ஆரம்பகால நூலகங்கள்

10





Image Source - www.tamildigitallibrary.in

## காரைநகர்ச் சைவமகாசபை நூல்நிலையம்

காரைநகர்ச் சைவமகாசபை பொன்விழா மலர் 1967 இல் வெளிவந்தது. இம்மலராசிரியராக வைத்தீஸ்வரக் குருக்கள் சிறப்புறப் பணியாற்றி சைவமகாசபையின் வரலாற்றை முடிந்தவரை பதிவுசெய்ய முயன்றுள்ளார்.

அவரது குறிப்புகளின்படி காரைநகர்ச் சைவமகாசபை 1926 ஆம் ஆண்டிலேயே 347 தமிழ்ப் புத்தகங்களும் 279 ஆங்கிலப் புத்தகங்களும் கொண்டதொரு நூலகத்தை தன்னகத்தே கொண்டிருந்துள்ளதென்ற செய்தியை அறியமுடிகின்றது. அந்த ஆண்டில் மாத்திரம் 126 புதிய புத்தகங்கள் நூலகத்தில் சேர்க்கப்பட்டிருந்தனவென்ற செய்தியும் காணக்கிடைக்கின்றது. 13 புதினப்

பத்திரிகைகளும் உள்ளூரிலும் வெளியூரிலும் இருந்து வரவழைக்கப்பட்டு வாசகர்களுக்கு நூலகத்தில் வாசிப்பிற்காக வழங்கப்பட்டு வந்துள்ளது.

காரைநகரைச் சேர்ந்த சைவாபிமானியான திரு.க. கதிரவேலு அவர்களின் முன்முயற்சியின் பயனாக திருவாளர்கள் மு. திசைநாயகம், இ. நாகலிங்கம், ஆ. முருகேசு, இ. கந்தையா, ஆ.ச. கதிரைவேல், வே. தம்பிஐயா, அ. சின்னத்தம்பி, க. நவரத்தினம், பிரம்மஸ்ரீ கா.சி. மகேசசர்மா ஆகியோர் காரைநகர்ப் பிரதேசத்தில் சமூகத் தொண்டு செய்யும் நோக்கில் ஒன்று திரண்டார்கள். 15.03.1915 அன்று ஆயிலி சிவஞானோதய வித்தியாசாலை மண்டபத்தில் திரு மு. திசைநாயகம் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற முதலாவது கூட்டத்தில் 'காரை இளைஞர் கல்வித் தேர்ச்சிச் சங்கம்' என்ற பெயருடன் ஒரு சங்கம் ஆரம்பமாகியது. காரைநகர்க் கிராமத்து மாணவர்களைக் கல்வியில் முன்னேற்றமடையச் செய்வதே அவ்வேளையில் அச்சங்கத்தின் மேலான நோக்கமாகவிருந்தது.

மேற்படி சங்கம் தமது நோக்கத்துக்கமைய மாணவர்களைச் சேர்த்து சமயம், தமிழ் மொழி என்பவற்றையும் கல்வித் தேர்ச்சிக்குரிய பிற பாடங்களையும் போதித்து வந்தனர். 1918 இல் (21.12.1918) இச்சங்கத்தின் பெயரை 'காரை இந்து வாலிபர் சங்கம்' என்று மாற்றினார்கள். காரை இந்து வாலிபர் சங்கத்தின் தலைவராக திரு பொ. வேலுப்பிள்ளை அவர்களும் உபதலைவர்களாக திருவாளர்கள் மு. திசைநாயகம், ஐ. ஆறுமுகம், பிரம்மஸ்ரீ ச. பஞ்சாட்சரஐயர் ஆகியோரும், காரியதரிசியாகத் திரு இ. நாகலிங்கம் அவர்களும் உப காரியதரிசியாக திரு இ. கந்தையா அவர்களும் தனாதிகாரியாக திரு ஆ.ச. கதிரவேல் அவர்களும் உப தனாதிகாரியாக திரு க. நமசிவாயம் அவர்களும் கல்வி விருத்திக் காரியதரிசியாக திரு.சு. இராமநாதன் அவர்களும் கல்வி விருத்தி உப காரியதரிசியாக திரு சி.வே. தம்பிஐயா அவர்களும் நிர்வாகசபை அங்கத்தவர்களாக திரு வே. சபாபதி, பிரம்மஸ்ரீ கா.சி. மகேசசர்மா ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

இந்து வாலிபர் சங்கம், இந்து சமயப் பிரசங்கங்களைச் செய்வித்தும், சமய வகுப்புகளை நடத்தியும் அக்காலத்தில் நிலவிய காலனியாதிக்கவாதிகளின் மதமாற்றச் சூழலில் எதிர்நீச்சல் அடிக்கவேண்டியிருந்தது. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வித்தியாசாலையின் (பின்னாளில் காரைநகர் இந்துக் கல்லூரியாகப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது) தலைமை ஆசிரியராக இருந்த பிரம்மஸ்ரீ ஈ.கே. சுப்பிரமணியஐயர் சமய வகுப்பகளை நடத்திவந்தார். உதவியாளர்களாக பிரம்மஸ்ரீ ச. பஞ்சாட்சரஐயர் அவர்களும் திரு மு. திசைநாயகம் அவர்களும் இயங்கிவந்தனர்.

சிறப்புடன் இயங்கிவந்த காரை இந்து வாலிபர் சங்கத்திற்கு சொந்தக் கட்டிடம் ஒன்றை அமைப்பதற்கு நிர்வாக சபை தீர்மானித்தது. அமரர் இ. நாகலிங்கம் அவர்களின் பெருமுயற்சியால் 'பூதனடைப்பு' என்னும் காணியில் இரண்டு பரப்பு நிலம் அதன் உரிமையாளர் திருமதி வே. வள்ளியம்மையிடம் நன்கொடையாகப் பெறப்பட்டு 17.7.1919 அன்று புதிய கட்டிடத்திற்கான அத்திவாரம் இடப்பட்டது. புதுக்கட்டிடப் பிரவேசம்







Image Source - archive.org

1921 சித்திரை மாதத்தில் நடந்தேறியது. சில மாதங்களின் பின்னர் அக்கட்டிடத்தில் ஒரு நூல்நிலையம் தொடங்கப்பெற்று வாசகர் சேவையும் நடைபெற்றது.

1924 ஆம் ஆண்டு ஆனி மாதம் 14 ஆம் திகதி சேர்.வை. துரைசுவாமி அவர்கள் தலைமையில் மேற்படி சங்கத்தின் ஒன்பதாவது வருடாந்தக் கூட்டத்தை கூட்டியிருந்தனர். அக்கூட்டத்தில் பிரசங்கம் செய்த ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தர் அவர்கள், இளைஞர் முதியோர் என்ற பாகுபாடின்றி யாவரும் பயனடையும் வகையில் 'இந்து வாலிபர் சங்கம்' என்ற பெயரை 'சைவமகாசபை' என்று மாற்றுவதால் ஏற்படும் நன்மைகள் பற்றி எடுத்துரைத்தார். அவர் கூற்றுப்படியே காரை சைவமகாசபை என்ற பெயர்மாற்றம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சைவமகாசபையில் பெரிய கூட்டங்கள் நடத்தும் பொருட்டும் தேசிய வகுப்புகளை நடத்தும் வகையிலும் தற்போதைய மண்டபம் பெருப்பிக்கப்பட வேண்டும் என்று தீர்மானித்தார்கள். அதனை எவ்வித சிக்கலுமின்றி ஆயிரம் ரூபா வரையில் செலவிட்டு 12.12.1924 அன்று கட்டிமுடித்தார்கள். மேற்படி வகுப்புகளை நடத்த ஒரு ஆசிரியரும் நியமிக்கப்பட்டார்.

1925 இல் காரை சைவமகாசபையின் பத்தாவது வருடாந்தக் கூட்டம் சேர்.பொன். இராமநாதன் அவர்களின் தலைமையில் வெகு விமரிசையாக நடந்தது.

தொழிற்கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் நெசவுப் பாடசாலை ஒன்றினை நிறுவும் வகையில் சைவமகாசபையினர் திட்டமிட்டனர். இதற்கென காரைமலாய ஐக்கிய சங்கத்தினர் சைவமகாசபைக்கு 1200 ரூபா நன்கொடையாக வழங்கினர். சைவமகாசபையில் இடவசதி இல்லாமையால், வியாவில் சைவ பரிபாலன வித்தியாசாலை நிர்வாகி திரு இ. நாகலிங்கம் அவர்கள், தமது பாடசாலையில், சைவமகாசபையின் ஆதரவுடன் நெசவு வகுப்பொன்றை நடத்த ஒப்புக்கொண்டார். இரண்டாண்டுகள் இவ்வகுப்பு நடைபெற்று, பின்னர் பணத்தட்டுப்பாடு காரணமாக இம்முயற்சி கைவிடப்பட்டது.

காரை சைவமகாசபையின் அபிவிருத்திப் பணியில் ஓரங்கமாக வியாவில் கடற்கரையில் ஒரு மடாலயம் கட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு ருத்ரோற்காரி ஆண்டு (1923 ஆம் ஆண்டு) சித்திரை மாதம் 11 ஆம் திகதி மடாலயக் கட்டிட வேலைகள் தொடங்கப்பெற்றன. இம்மடாலயம் சம்பந்தமான பணிகளை காரைநகரின் கருங்காலி, பலுராகாடு ஆகிய குறிச்சிகளைச் சேர்ந்த மக்கள் மேற்கொண்டனர். மேலும் இம்மடாலயத்தில் ஒரு சைவ ஆசாரியரைக் குடியிருத்தவும், நூல்நிலையத்தை மடாலயத்தின் கட்டிடத்தில் விரிவாக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

காரை சைவமகாசபை 19.09.1955 அன்று பொது ஸ்தாபனச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டமை மற்றுமொரு முக்கியமான நிகழ்வாகும்.

ஆரம்பகாலந் தொட்டுச் சமய வகுப்புகளும் சமயப்பாடப் பரீட்சைகளும் காரை சைவமகாசபையில் நடைபெற்று வந்தன. 1926 1927 ஆண்டுக் காலத்தில் 'சிவஞானசித்தியார்' வகுப்பு பரமேஸ்வரா கல்லூரியின் உப அதிபர் திரு மு. ஞானப்பிரகாசம் அவர்களாலும்,

***1935-36*** *காலகட்டத்தில் தமிழ்ப் பாலபண்டித வகுப்பு ஸ்ரீமத் சி. சுப்பிரமணிய தேசிகர் அவர்களாலும் நடத்தப்பட்ட வேளையில் காரை சைவமகாசபையின் நூல்நிலையம் மாணவர்களின் பாவனைக்குப் பெரும் உதவியாக இருந்துள்ளது. மேற்படி இரு ஆசிரியர்களாலும் தமிழ் இலக்கண, இலக்கிய வகுப்புகள் தொடர்ந்தும் வெற்றிகரமாக நடத்தப்பட்டு வந்துள்ளமையும் இம்மாணவர்களுக்கு மாத்திரமல்லாது, ஆசிரியர்களுக்கும் இந்நூலகம் தனது சேவையை ஆரவாரமின்றி அமைதியாக ஆற்றி வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.*

*காரை சைவமகாசபையினரின் அறிவுச் செழுமைக்கு அவர்களால் வெளியிடப்பட்டுவந்த நூல்கள் சாட்சியமாக உள்ளன. Our young men and their Culture, நரகசதுர்த்தசி ஸ்நானம், திருமுறைப் பெருமை, நித்திய கருமம், நடராஜ வடிவம், தில்லைத் திருநடனம், குருகுல வித்தியாலயம், மஹோற்சவ விளக்கம், புதுவருஷ சோபனம், திருவெம்பாவை விளக்கம் என்பன சபையினரால் காலத்துக்குக் காலம் வெளியிடப்பட்டு வந்த நூல்களாகும்.*


***1924*** *முதல்* ***1966*** *வரை காலத்திற்குக் காலம் வருகைதந்து சொற்பொழிவாற்றிய அறிஞர்கள் 38 பேரின் பட்டியல் ஒன்று காரைநகர் சைவமகாசபையின் செழுமைக்கும் அக்காலத்தில் அச்சபையின் வகிபாகத்திற்கும் சான்றாக உள்ளது.*

*சேர் வை. துரைசுவாமி (1924), ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தா, ஸ்ரீமத் சுவாமி சதானந்தா, ஸ்ரீமத் சுவாமி சர்வானந்தா, மகாத்மா காந்தியடிகள், ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியார், பண்டித ஜவஹர்லால் நேரு, ஸ்ரீமதி கமலா நேரு, ஸ்ரீமதி இந்திரா காந்தி, ஸ்ரீமதி கமலாதேவி சட்டோபாத்தியாய, சுவாமி சச்சிதானந்த ராஜயோகிகள் (சங்கரசப்பையர்), ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள், ஸ்ரீமத் நாகலிங்க சுவாமிகள், திரு. சத்தியமூர்த்தி, சாத்தூர் வழக்கறிஞர் தூ.ச. கந்தசாமி, டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை, கோவை ஸ்ரீ சுப்பிரமணிய முதலியார் என்னும் சம்பந்த சரணாலயத் தம்பிரான், கோவை ஸ்ரீ எம். இராமச்சந்திரன் செட்டியார், தூத்துக்குடி ந. சிவகுருநாதபிள்ளை, ஸ்ரீ. ச. சச்சிதானந்தபிள்ளை, சித்தாந்த சரபம் ஈசானசிவாச்சாரியார், சு. முருகேச முதலியார், திரு அ.ச. ஞானசம்பந்தன், திருப்புகழ் மணி ரி.எம். கிருஷ்ணசுவாமிஐயர், சு. சிவபாதசுந்தரம்பிள்ளை, சி. அருணைவடிவேலு முதலியார், பண்டிதமணி சு. நவநீதகிருஷ்ண பாரதியார், பண்டிதர் வே. மகாலிங்கசிவம், டாக்டர் ஜே.சீ. குமரப்பா, திரு சு. நடேசபிள்ளை, கௌரவ வி.வி. கிரி, கௌரவ எம்.எஸ். ஆனே, சித்தாந்த சிகாமணி க. வச்சிரவேலு முதலியார், திரு ஈ.டபிள்யூ. அரியநாயகம், திரு மு. ஞானப்பிரகாசம், வித்துவான் கி.வா. ஜகந்நாதன், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, டாக்டர் பீம்சேன் சச்சார் (1966) ஆகியோரே இக்காலகட்டத்தில் காரை சைவமகாசபைக்கு விஜயம் செய்து உரையாற்றிச்சென்ற அறிஞர்களாவர்.*

### மாவிட்டபுரம் ஆதீனச் சுவடிச்சாலை

*மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் ஆதீனத்தில் சிறந்த சுவடி நூலகம் ஒன்று செயற்பட்டது என்ற தகவலைப் பெற முடிகின்றது. இக்கோவிலின் அருகாமையில் அமைந்து காணப்பட்ட ஆலயங்களின் தேவைகளுக்கும் இச் சுவடிகள் கொடுத்து உதவப்பட்டன என்ற செய்தியும் மாவை ஆதீனச் சுவடிச்சாலை பற்றிய தேடலுக்குரிய ஆர்வத்தினை வலுப்படுத்தியது.*

*யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆரம்ப காலங்களில் சுவடிச் சாலைகளில் காணப்படுவதை விட ஏராளமான சுவடிகள் தனிநபர்களிடம் காணப்பட்டிருந்தன என்று பொதுவாகக் கருதுவோருளர். ஓலைச் சுவடிகளின் பதிப்பு முயற்சியில் ஈடுபட்டிருந்தவர்களான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம்பிள்ளை முதலானோரின் இத்துறை அனுபவங்கள் இதற்கு ஆதாரமாக உள்ளன.*



மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டிற்கு உரியதாகக் கருதப்படுகின்றது. ஆலயத் தோற்றம் பற்றிய கதை யாழ்ப்பாண வைபவ மாலையிலும் காணப்படுகின்றது. யாழ்ப்பாண வைபவமாலையில் கூறப்பட்டுள்ள மேற்படி கோவில் தொடர்பான செய்திகள் கர்ணபரம்பரை மரபைக் கொண்டு எழுதப்பட்டுள்ளதாகத் தோன்றுகின்றது. யாழ்ப்பாணத்தை ஆண்ட அரசர்களின் காலத்தில் இவ்வாலயத்தின் நிலை பற்றியோ அதற்கு முன்னைய கால கட்டிட அமைப்பு பற்றியோ விரிவான செய்திகள் எவையும் இன்று கிடைக்கக்கூடியதாக இல்லை. இவ்வாலயம் பற்றிய வரலாற்றுப் பண்புகள் எதிர்காலத்தில் விரிவாக ஆராயப்பட வேண்டியவை.

**போர்த்துக்கேயர் அழித்த நல்லூர் கந்தசுவாமி கோவில், திருக்கோணம லை கோணேசர் கோவில் ஆகியவை பற்றிய செய்திகள் போர்த்துக்கேயர்களின் பதிவேடுகளில் காணப்படுவதை வரலாற்றாய்வாளர்கள் பலவிடங்களிலும் பதிவு செய்துள்ளார்கள். மாவிட்டபுரம் ஆலயம், கீரிமலை ஆலயம் பற்றிய செய்திகள் எவையும் போர்த்துக்கேயரால் ஆவணப்படுத்தப்படவில்லை என்பதும் கவனத்திற்கெடுக்க வேண்டியுள்ளது.**

இவ்வாலயச் சூழலில் இக்கோவிலின் வரலாற்றுப் பழமையை உணர்த்தும் தொல்பொருட் சின்னங்கள் எவையும் இதுவரை அகழ்ந்தெடுக்கப்படவில்லை. இவ்வாலயம் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. இதுபற்றிய விபரமான கர்ணபரம்பரையிலான வரலாற்றுக் குறிப்பினை அக்கோயிலின் பரம்பரைக் குருக்களான சு.து. ஷண்முகநாதக்குருக்கள் எழுதிய ‘மாவிட்டபுரத் திருத்தல வரலாறு’ என்ற நூல் தருகின்றது.

போர்த்துக்கேயர் அழித்த நல்லூர் கந்தசுவாமி கோவில், திருக்கோணமலை கோணேசர் கோவில் ஆகியவை பற்றிய செய்திகள் போர்த்துக்கேயர்களின் பதிவேடுகளில் காணப்படுவதை வரலாற்றாய்வாளர்கள் பலவிடங்களிலும் பதிவு செய்துள்ளார்கள். மாவிட்டபுரம் ஆலயம், கீரிமலை ஆலயம் பற்றிய செய்திகள் எவையும் போர்த்துக்கேயரால் ஆவணப்படுத்தப்படவில்லை என்பதும் கவனத்திற்கெடுக்க வேண்டியுள்ளது. மாவிட்டபுரம் கோவில் பராமரிப்பாளர்களின் செவிவழிக் கதைகள் வாயிலாக, மாவிட்டபுரம் சம்பந்தமான பட்டயம் மூலஸ்தானத்துக்குள் வைக்கப்பட்டிருந்து பின்னர் அங்கேயே கட்டப்பட்டதாக அறியப்படுகின்றது. சு.து. சண்முகநாதக் குருக்களின் ‘மாவிட்டபுரத் திருத்தல வரலாறு’ என்ற நூல் குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரால் 1965 இல் வெளியிடப்பட்டது. சு.து. சண்முகநாதக் குருக்களின் கருத்துப்படி இவ்வாலயத்தின் இன்றைய கட்டிட அமைப்பானது பதினெட்டாம் நூற்றாண்டுக்குப் பிந்தைய வளர்ச்சியைச் சார்ந்ததாகவே கருத முடிகின்றது.

இது பற்றிய விபரங்களை ’மாவிட்டபுரத் திருத்தல வரலாறு’ என்ற நூலில் அதன் ஆசிரியர் சு.து. ஷண்முகநாதக் குருக்கள் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்:

“யாழ்ப்பாணக் கச்சேரியிலுள்ள கோவில்களின் இடாப்பின் பிரகாரம் இப்போதுள்ள கோவில் 1782 ஆம் ஆண்டில் குமாரசாமிக் குருக்கள், சபாபதிக் குருக்கள் ஆகியோராற் கட்டப்பட்டதென அறியப்படுகிறது. சபாபதிக்குருக்கள் வயோதிப நிலையடைந்ததும் இக்கோவிலின் நிர்வாகப் பொறுப்படையாளங்களை குமாரசாமி ஐயர் சொக்கநாதர் ஐயர் அவர்களுக்கு 13.12.1825 இல் கையளித்திருந்தார்.”

சு.து. ஷண்முகநாதக்குருக்கள் தொடர்ந்து, கோவில் பராமரிப்பு கைமாறிய விபரங்களை உள்ளடக்கிய 18 ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட அண்மைக்கால வரலாற்றை இந்நூலில் திகதிவாரியாக விரிவாகப் பதிவு செய்திருக்கிறார்.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் சுற்றாடல் பகுதியில் விரிவானதொரு தொல்லியலாய்வினை மேற்கொண்டால் மட்டுமே இவ்வாலயத்தின்

பழைமை பற்றியும், அதன் வரலாற்று அந்தஸ்து பற்றியும் உறுதியாக ஏதும் கூறமுடியும். அதுவரையில் பக்தி இலக்கியங்களும், செவிவழிக் கதைகளுமே இவ்வாலயத்தின் வரலாற்றை சந்ததிகள் தோறும் காவிச்செல்லப் போகின்றன.

த. சண்முகசுந்தரம் அவர்களின் 'கலையும் மரபும்' என்ற நூல் தெல்லிப்பழை கலைப்பெருமன்ற வெளியீடாக 1974 இல் வெளிவந்தது. அதில் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தோடு தொடர்புகொண்ட கலைஞர்களின் வரலாறும் பாரம்பரியமும் கூறப்பட்டுள்ளது. கோவிலின் பண்டைய கலாசாரத்தின் எச்சங்களையும் சமுதாய அமைப்பையும் இந்நூல் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது. இந்நூலில் மேற்படி கோவிலில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் மரபுகள் பற்றி விரிவாக ஆங்காங்கே பதிவுசெய்யப்பட்டுள்ளன.

'பூர்வகலா' என்ற தலைப்பிலான தொல்பொருள் ஆய்வுச் சஞ்சிகையொன்று யாழ்ப்பாணத் தொல்பொருளியற் கழகத்தினால் 1973 இல் வெளியிடப்பட்டது. இக்கழகம் யாழ்ப்பாணக் கல்லூரியின் பின்புலத்தில் இயங்கியது. இதன் முதலாவது இதழ் 1973 இல் பிரசுரமாகியிருந்தது. இதன் பதிப்பாசிரியர்களாக வி. சிவசாமி, ஆ. சிவநேசச்செல்வன் ஆகியோரும் பதிப்பாலோசகராக கா. இந்திரபாலா அவர்களும் பணியாற்றியிருந்தனர்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பின்புலத்தில் இவ்விதழின் ஒரு இதழே வெளிவந்திருப்பதாகக் கருதுகின்றேன். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்துக்காக திருநெல்வேலி பரமேஸ்வரா கல்லூரி சுவீகரிக்கப்பட்டு, பல்கலைக்கழக கல்விசார் தேவைக்காக யாழ்ப்பாணக் கல்லூரியின் நூலகத்தின் பட்டக்கல்லூரிப் பிரிவு (Undergraduate Section) நூலகமும், நூலகர் உள்ளிட்ட ஊழியர்களும், பட்டதாரிப் பிரிவின் சிறந்த பல விரிவுரையாளர்களும் பல்கலைக்கழகத்தினால் உள்வாங்கப்பட்ட காலத்திலே 'பூர்வகலா' வெளிவந்த நிலையில், அவ்வேளை நிலவிய குழப்பகரமான சூழலில் அவ்வாய்விதழைத் தொடர்வதற்கு சம்பந்தப்பட்டவர்களால் முடியாமல் போனது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதன் பின்னர் எதிர்கொண்ட சிக்கல்கள் இன்று வரலாறாகிவிட்டது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றிய திரு ஆ. சிவநேசச்செல்வன் (பின்னாளில் 1984 முதல் வீரகேசரியின் ஆசிரிய பீடத்தினை அலங்கரித்தவர்தற்போது கனடாவில் வாழ்கின்றார்), 'பூர்வகலா' இதழில் 'மாவிட்டபுர ஆதீனச் சுவடிச் சாலையும் ஏட்டுப் பிரதிகளும்' என்ற தலைப்பில் எழுதியிருந்த கட்டுரை மாவிட்டபுரம் சுவடி நூலகம் பற்றிய பல தகவல்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்திருந்தது. யாழ்ப்பாணக் கல்லூரியில் பணியாற்றிய வேளையில் திரு ஆ. சிவநேசச்செல்வன் அவர்கள் திரு த. சண்முகசுந்தரம் அவர்களின் உதவியுடன் மாவிட்டபுரம் ஆலயத்தின் பரம்பரைவழி வந்த பிரம்மஸ்ரீ சு. துரைச்சாமிக்குருக்களின் இல்லத்தில் அவருடன் நேரடியாக உரையாடும் பாக்கியத்தைப் பெற்றவர். அத்துடன் அவரது இல்லத்தில் பேணிவைக்கப்பட்டிருந்த மாவிட்டபுர ஆதீனச் சுவடிச்சாலைக்குரிய ஏடுகளையும் பிற ஆவணங்களையும் நேரில் பார்த்து அதிசயிக்கும் வாய்ப்பினையும் பெற்றவர்.

"சூழலும் பாரம்பரியமும் உணர்த்தும் இவ்வாலயத்தின் பழைமை, கல்வியையும் கலைகளையும் பேணிய தன்மையைக் குறிப்பாக விளக்குகின்றது. இன்று இவ்வாதீனச் சுவடிச்சாலையிற் காணப்படும் சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட ஏட்டுப் பிரதிகளும், அவை பற்றி ஆதீனம் கூறும் கதை மரபுகளும் நீண்டதொரு வரலாற்றுத் தடத்தின் தொடர்பையும், சமூகத்தில் இவ்வாலயம் ஏற்படுத்திய தாக்கத்தையும் நினைவூட்டுகின்றன. இப்போதைய ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ சு. துரைச்சாமிக் குருக்கள் வாழையடி வாழையாக வந்த மரபை நினைவூட்டும் வகையில் ஆதீனச் சவடிச்சாலை பற்றியும், ஆதீனம் அவற்றைப் பேணிய மரபையும் தமது நினைவைக் கொண்டும் முன்னோர் ஞாபகங்களைக் கொண்டும் கூறினார்" என்று குறிப்பிடும் திரு ஆ. சிவநேசச்செல்வன், தனது கட்டுரையில் பிரம்மஸ்ரீ சு. துரைச்சாமிக் குருக்களின் உரையாடலை அவரது வாய்மொழியாகவே கீழ்க்கண்டவாறு பதிவுசெய்திருக்கிறார்:

"எமது ஆதீனத்தில் சுவடிச்சாலையொன்று நீண்டகாலமாகப் பேணப்பட்டு வருகின்றது. முன்னர் ஆலயத்தில் இதற்கெனவுரிய இடத்தில் வைத்துப் பேணப்பட்டது. இன்று ஆதீனகர்த்தரின் இல்லத்தில் மிகவும் பாதுகாப்பாகப் பேணி வைக்கப்பட்டுள்ளது.

செல்லரிக்காமலிருப்பதையும் ஏடுகள் கைமாறாமலிருப்பதையுமே இங்கு குறிப்பிடுகின்றேன். உற்சவ தினங்களை யொட்டிய அல்லது படிப்புத் தினங்களை யொட்டிய ஏடுகள் மட்டும் தற்போது பிள்ளையார் வாசலுக்கருகிலுள்ள களஞ்சியத்தில் வைக்கப்பட்டு வேண்டிய நேரம் எடுத்துப் புராணம் படிப்பவர்களிடம் உரிய முறையில் வழங்கப்படுகின்றன. எமது முன்னோரால் எழுதிப் பேணப்பட்ட ஏடுகள்தாம் இவை. எமது ஆதீனத்தில் நான் அறிந்த காலம் வரை மூன்று அல்லது நான்கு பேர் ஏட்டுச் சட்டங்களைத் தயாரிப்பதற்கும் படியெடுப்பதற்கும் பொறுப்பாக இருந்தார்கள். மரபு வழி வந்த ஏடுகளின் பிரதிகளே இவை."

திரு ஆ. சிவநேசச்செல்வன் அவர்கள், பிரம்மஸ்ரீ சு. துரைச்சாமிக் குருக்களின் இல்லத்தில் பேணப்பட்டுவந்த மாவை ஆதீனச் சுவடிச்சாலையின் எச்சங்கள் பற்றி தனது நேரடி அவதானிப்பினை கீழ்க்கண்டவாறு தனது கட்டுரையில் பதிவு செய்திருக்கிறார்:

"மாவை யாதீனத்தில் உள்ள ஏடுகளிற் பெரும்பாலானவை கிரந்தத்திலுள்ளவை. கோவிலுக்குரிய கிரியை விதிகள் அடங்கியவை. உற்சவ விபரங்களை அளிக்கும் பத்ததிகளும் பல காணப்படுகின்றன. கோவிலமைப்புப் பற்றிய சிற்ப நூல்களும், சிறந்த இலக்கண நூல்களும் காணப்படுகின்றன. பல தமிழ் மொழிபெயர்ப்புக்களுடன் உள்ளன. கிரந்தத்தில் உள்ள பல தத்துவ நூல்களும் காணப்படுகின்றன. தொல்காப்பியம், வீரசோழியம், திருவாசகம், தேவாரம் ஆகிய ஏடுகளுடன் புராண ஏடுகளே இன்று எஞ்சியுள்ளன. கவனக் குறைவினாலும் ஆவணங்களை செவ்வனே பேணாமையினாலும் இவற்றிற் பல சிதைந்துவிட்டன. தொல்காப்பிய ஏடு அங்கு உரையுடன் காணப்படுகின்றது. அது ஆறுமுக நாவலருடையது" என ஆதீனகர்த்தர் குறிப்பிட்டார். இது ஆய்விற்குரியது. அதில் குறிப்புரைகளும் காணப்படுகின்றன.

ஆதீனத்தில் தங்கி ஓலை எழுதிப் பணிபுரிந்தவர்களைப் பற்றி ஆதீனகர்த்தர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"மூல ஏடு ஒன்று சற்றுப் பழுதடைந்த நிலையில் இருக்குமாயின் அதனை மறுபிரதி செய்தலே இவர்கள் பணியாகும். இது தவிர, கோவிலுக்கு வேண்டிய பட்டோலை, உற்சவத்துக்கு வேண்டிய அறிவித்தல்கள் செய்தல், கோவிலுக்கு வேண்டிய வருமதிகள் செலவினங்கள் நிலபுல வருவாய்கள் ஆகியனவற்றைப் பதிந்து வைத்தலும் இவர்களது கடமையாகவிருந்தது. இவ்வாறான பதிவேடுகள் பல இருந்தன. அவை இப்பொழுது அழிந்துவிட்டன."

தமிழ்நாட்டு ஆலயங்களில் கல்வெட்டுகளிலும் பட்டயங்களிலும் பேணப்பட்ட மரபு போன்றதே இது. இம்மரபு நீண்டகாலமாகப் பேணப்பட்டதாக ஆதீனகர்த்தர் குறிப்பிட்டார். ஓலை படியெடுப்பவர்களும் ஆதீனத்தில் தங்கிப் பணிபுரிந்தார்கள். அச்சுக்கலை விருத்தியடையத் தொடங்க முன்னர் மாவையாதீனத்தில் சுந்தரக் குருக்கள், இராமநாதக் குருக்கள் என்போர் பஞ்சாங்கம் கணிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். இது மரபுவழியாக வந்ததொன்றாகும். பஞ்சாங்கங்களைத் தயாரித்து அவற்றை ஏட்டுப் பிரதிகளிற் பொறித்து வைத்தனர். இவற்றைப் படியெடுத்துப் பலரும் உபயோகித்தனர். இன்றும் இப்பஞ்சாங்கம் வாசிக்கும் மரபு வருஷ உற்சவம் முடிந்த பின்னர் கொடிஸ்தம்பத்தின் அருகில் நடைபெற்று வருகின்றது.

மாவையாதீனத்தில் சுவடிச்சாலை தொடர்பான திண்ணைப் பள்ளிக்கூட மரபும் நிலவிவந்துள்ளது. வடமொழிக் கல்விக்கும் தமிழ்க் கல்விக்கும் அதி முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பிராமணச் சிறுவர்களும், பிறரும் இங்கே பயின்றுவந்தனர்.

ஏட்டுப் பிரதிகளைச் சூழவுள்ள ஆலயங்களுக்குப் படிப்புக் காலங்களில் கொடுத்துதவும் பணியையும் சுவடிச்சாலை மேற்கொண்டிருந்தது. பல அறிஞர்கள் இங்குள்ள ஏட்டுப் பிரதிகளை இரவலாகப் பெற்றுப் படித்தனர். இதனால் பல ஏட்டுப்பிரதிகள் கைதவறியும் போயுள்ளன. ஒரு வகையில் மாவையாதீனச் சுவடிச்சாலை அக்காலத்தில் பலருக்கு உடனுதவும் நூலகமாகவும் விளங்கிவந்துள்ளது. கோவில் மரபின் சின்னமாக விளங்கும் இச்சுவடிகள் பேணப்பட வேண்டியவை. அச்சுவாகனம் ஏறாத ஏட்டுப் பிரதிகளும் அங்குள்ளதை அறியமுடிகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், நூலக நிறுவனம் போன்றவை இவ்வாவணங்களை மேலும் அழிவிலிருந்து பாதுகாப்பதற்கு தமது பங்களிப்பினை நல்குவார்கள் என நம்புவோம்.

(தொடரும்.)

இலங்கையில், குடியேற்றவாத காலத்திலிருந்துதான் நிலப்படங்களும் வரைபடங்களும் நமக்குக் கிடைக்கின்றன. குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்தவை இலகுவாகக் கிடைக்கின்றன. எழுத்துமூல ஆவணங்கள், புழங்கு பொருட்கள், ஓவியங்கள், தொல்லியற் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றையும் இவற்றைப்போன்ற இன்னோரன்ன பழைய நிலப்படங்கள், வரைபடங்கள் வரலாற்றுத் தகவல்கள் என்பனவும் இங்கு பொதிந்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த நிலப்படங்களும் வரைபடங்களும் இவற்றுள் அடங்கும். எனினும், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவற்றைப் பயன்படுத்துவது குறைவாகவே உள்ளது. வரலாற்றுத் தகவல்களை வழங்குவதில் குடியேற்றவாதக் கால நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாகவும், யாழ்ப்பாணத்தின் வரலாற்றுத் தகவல்களை நிலப்படங்கள் வரைபடங்களிலிருந்து விளக்குவதாகவும், நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் தகவல் உள்ளடக்கங்கள் குறித்து ஆராய்வதாகவும் 'யாழ்ப்பாணப் பிரதேசத்தின் குடியேற்றவாதக் காலத்து வரலாற்றுத் தகவல் மூலங்களாக நிலப்படங்களும் வரைபடங்களும்' என்ற இத்தொடர் அமையவுள்ளது.




**இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்**

இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் அவர்கள் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கச் சூழல் துறையில் விஞ்ஞான இளநிலைப் பட்டத்தையும் (B.Sc. (BE)) பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலையில் விஞ்ஞான முதுநிலைப் பட்டத்தையும் (M.SC. (Arch)) பெற்றார். அத்துடன் இலங்கைக் கட்டடக்கலைஞர் சங்கம் (AIA (SL)), பிரித்தானியக் கட்டடக் கலைஞர்களின் அரச சங்கம் (RIBA) ஆகியவற்றில் பட்டயம் பெற்ற உறுப்பினராவார்.

தமிழ் விக்கிப்பீடியா தொடங்கிய காலத்திலிருந்து அதன் முதற் பயனராகப் பங்களிப்புச் செய்து வருகின்றார். தமிழ் விக்கிப்பீடியாவில் 4500இற்கும் மேற்பட்ட கட்டுரைகளைத் தொடங்கியுள்ளதுடன், மேலும் பல ஆயிரம் கட்டுரைகளின் விரிவாக்கத்திலும் பங்களிப்புச் செய்துள்ளார். தமிழ் விக்கிப்பீடியாவில் இவரது பங்களிப்புக்காக கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2015 ஆம் ஆண்டின் வாழ்நாள் சாதனையாளருக்கான இயல்விருது பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் ஆனந்தவிகடன் இதழ் வழங்கும் நம்பிக்கை விருதுகளில் 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த 10 மனிதர்களுள் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு விருதை பெற்றுள்ளார்.


# லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் யாழ்ப்பாணக் கட்டளையகம் 2



இந்தத் தொடரின் சென்ற கட்டுரையில் லெயுசிக்காம் நிலப்படத் தொகுப்பிலுள்ள யாழ்ப்பாணக் கட்டளையகத்தை முழுமையாகக் காட்டும் நிலப்படத்தின் சில அம்சங்கள் குறித்து ஆராய்ந்தோம். அதன் தொடர்ச்சியாக, இந்தக் கட்டுரையில் மேற்படி நிலப்படத்தில் வேறு சில அம்சங்களைப் பற்றிப் பார்க்கலாம்.

## கோட்டைகளும் நகரங்களும்

இந்த நிலப்படத்திலும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் யாழ்ப்பாணக் கோட்டை, ஆனையிறவுக் கோட்டை, பெஸ்ச்சூட்டர் கோட்டை, பைல் கோட்டை என்பவற்றையும்; தீவுப் பகுதியில் ஊர்காவற்றுறைக் கடற் கோட்டையையும்; தலை நிலத்தில் பூநகரிக் கோட்டையையும்; மன்னார்த்தீவில் மன்னார்க் கோட்டையையும் குறித்துள்ளனர். ஆனால், தூர்ச்சியின் நிலப்படத்தில் காட்டிய அரிப்புக் கோட்டையை இந்நிலப்படம் காட்டவில்லை. இது தவறுதலாக விடப்பட்டிருக்கலாம் என்றே தோன்றுகிறது.

யாழ்ப்பாணக் கோட்டை, மன்னார்க் கோட்டை ஆகியவற்றுக்கு அருகில் அமைந்திருந்த, ஒழுங்கான வலைப்பின்னல் வடிவிலான பழைய நகரங்களையும் நிலப்படம் குறியீட்டு வடிவில் காட்டுகிறது. யாழ்ப்பாணக் கட்டளையகத்தின் முக்கியமான


இவ்விரு நகரங்களும் போர்த்துக்கேயரால் தோற்றுவிக்கப்பட்டு ஒல்லாந்தரால் மேம்படுத்தப்பட்டவை. நிலப்படத்தில் இந்நகரங்களைக் குறியீடுபோலவே காட்டியிருந்தாலும், யாழ்ப்பாண நகருக்கான குறியீட்டை நுணுக்கமாகப் பார்த்தால், பிற்கால நிலப்படங்களிலுள்ள அந்நகரின் அமைப்பும் குறியீடு காட்டும் அமைப்பும் ஒத்திருப்பதை அறியலாம். 18 ஆம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளிலேயே யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய நகரங்கள் ஒழுங்கான வலையமைப்பு வடிவத்தைப் பெற்றுவிட்டன என்பதை இந்நிலப்படத்திலிருந்து அறியமுடிகிறது.

## தேவாலயங்கள்

ஒல்லாந்தர்காலத் தொடக்கத்தில் யாழ்ப்பாணக் கட்டளையகத்தில் கிறிஸ்தவ மதம் தொடர்பான நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகப் பணியாற்றியவர் போல்டேயஸ் பாதிரியார். இவர் பிற்காலத்தில் தான் எழுதிய நூலில் யாழ்ப்பாணக் கட்டளையகத்தில் இருந்த தேவாலயங்களைப் பற்றிய விவரங்களைத் தந்துள்ளார்.[1] மேற்படி தேவாலயங்களுட் பலவற்றின் தோற்றங்களைக் காட்டும் படங்களும் நூலில் காணப்படுகின்றன. எனினும், இப்படங்கள் அக்காலத்திலிருந்த தேவாலயங்களைப்போல இல்லை என்றும், போல்டேயசின் வாய்மொழிமூல விவரிப்புகளையோ சரியாக வரையப்படாத படங்களையோ அடிப்படையாகக்கொண்டு அவற்றை நேரில் பார்க்காத ஓவியர் ஒருவர் கற்பனையாக வரைந்திருக்கலாம் என்றும் மேற்படி தேவாலயங்களை நேரில் பார்த்த யொகான் வூல்ஃப்காங் ஹைட் என்பார் குறிப்பிட்டுள்ளார்.[2] படங்கள் அக்காலத் தேவாலயங்களை இருந்தபடி காட்டாவிட்டாலும் பாதிரியார் தந்த எழுத்துமூல விவரங்கள் பிழையாக இருக்க வாய்ப்பில்லை.

போல்டேயஸ் விவரித்த தேவாலயங்களில் ஒன்றைத் தவிர ஏனையவற்றை நிலப்படம் காட்டுகிறது. நல்லூரில் இருந்ததாக தூர்சியின் நிலப்படமும் போல்டேயஸ் பாதிரியாரின் நூலும் தகவல் தரும் தேவாலயம் (படம் -1) நிலப்படத்தில் இல்லை. இதுபற்றி இத்தொடரின் இன்னொரு கட்டுரையில் விரிவாகப் பார்க்கலாம். நல்லூரைத் தவிர, யாழ்ப்பாணக் குடாநாட்டில் 25, தீவுப்பகுதியில் 8, மன்னாரில் 7, வன்னியின் எல்லையை அண்டி ஒல்லாந்தரின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் அடங்கிய பூநகரி, பல்லவராயன்கட்டு, இலுப்பைக்கடவை,






இடதுபக்கம் உள்ளது நிலப்படத்தில் உள்ளபடி நல்லூர்க் கோயிற்பற்றைக் காட்டும் படம். இதில் தேவாலயம் குறிக்கப்படவில்லை. படத்தில் வலதுபக்கக் கீழ் மூலையை அண்டிக் காணப்படுவது வேறு கட்டடம். நல்லூரில் தேவாலயம் இருந்ததைக் குறிப்பிட்டு அதன் படத்தையும் போல்டேயஸ் பாதிரியாரின் நூல் தருகிறது. அப்படத்தை வலப்பக்கத்தில் காணலாம்.

பெருங்கழி, மாதோட்டம், நானாட்டான், முசலிப்பற்று ஆகிய பிரிவுகளில் 7 என மொத்தம் 47 தேவாலயங்களையும் நிலப்படத்தில் காணமுடிகின்றது. மேற்படி தேவாலயங்கள் அனைத்தும் போர்த்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்கத் தேவாலயங்களாக இருந்தவை. இவற்றைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் தமது புரட்டஸ்தாந்த கிறிஸ்தவ மதத் தேவைகளுக்கு ஏற்ப மாற்றம் செய்து பயன்படுத்தினர். ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனியின் நேரடி ஆளுகைக்குள் வராத வன்னிப் பிரிவுகளில் தேவாலயம் எதையும் நிலப்படம் காட்டவில்லை.

தேவாலயங்களுடன் அவற்றுக்கு அருகில் இருந்த குருமனைகளையும் படத்தில் குறித்துள்ளனர். (படம்- 2) போல்டேயசின் நூலில் உள்ளபடி யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்த நல்லூர், வண்ணார்பண்ணை (படம் -3), சுண்டிக்குழி ஆகிய இடங்களில் அமைந்த தேவாலயங்களுக்கு அருகில் குருமனைகள் இருக்கவில்லை. அந்நூலிலுள்ள படங்களும் குருமனைகளைக் காட்டவில்லை. நிலப்படமும் வண்ணார்பண்ணையிலும் சுண்டிக்குழியிலும் குருமனைகளைக் காட்டவில்லை. நல்லூரில் தேவாலயத்தையே காட்டவில்லை என மேலே குறிப்பிட்டோம். தீவுப்பகுதியிலும் வேலணை, நெடுந்தீவு ஆகியவை தவிர்ந்த ஏனைய இடங்களில் தேவாலயங்களுக்கு அருகில் குருமனைகளைக் காணமுடிகிறது. மன்னார்த் தீவிலும் தலைநிலப்பகுதியிலும் அமைந்திருந்த தேவாலயங்களுக்கு அருகில் குருமனைகளை நிலப்படம் காட்டவில்லை. போல்டேயஸ் பாதிரியாரும் இவ்விடங்களில் குருமனைகள் இருந்ததுபற்றிய குறிப்புகள் எதையும் தரவில்லை. எனவே, இவ்விடயத்தில் லெயுசிக்காமின் நிலப்படம் போல்டேயஸ் பாதிரியாரின் நூலிலுள்ள தகவல்களை உறுதிப்படுத்துகிறது எனலாம்.

## மடங்கள்

தூர்சியின் நிலப்படத்தில் உள்ளதுபோலவே இங்கும் 'மடம்' என்னும் பின்னொட்டுகளுடன் கூடிய பெயர்கள் பல காணப்படுகின்றன. முன்னர் குறிப்பிட்டது போலவே இப்பெயர்கள் மடங்களைக் குறிப்பதாகவோ மடங்களின் பெயர்களைத் தழுவிய ஊர்ப் பெயர்களாகவோ இருக்கக்கூடும். தூர்சியின் நிலப்படத்தில் 14 மடங்களும், இந்த நிலப்படத்தில் 20

**பூநகரிப் பிரிவில் வௌவால்தூங்கி மடம், பல்லவராயன்கட்டில் கல்லடி மடம், நானாட்டானில் துவெட்டி மடம் ஆகியவற்றையும் மேல்பற்றுப் பிரிவில் அன்னதேவன் மடம், பாலிமடம் ஆகிய இரண்டு மடங்களையும் லெயுசிக்காம் நிலப்படம் புதிதாகக் காட்டுகிறது. இங்கே அன்னதேவன்மடம் என்று குறிப்பிட்டுள்ள இடத்தை வேறு ஒரு நிலப்படம் அன்னதேவன் மடு எனக் குறிப்பிடுகிறது.**

மடங்களும் உள்ளன. இவற்றுள் 10 மடங்கள் இரண்டிலும் பொதுவாகக் காணப்படுகின்றன. தூர்சி சுண்டிக்குளத்தில் மடம் எனக் குறித்துள்ள மடம் லெயுசிக்காம் நிலப்படத்தில் தில்லைமடம் என்ற பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேவேளை முன்னைய நிலப்படத்தில், சுண்டிக்குளம் கடல்நீரேரியின் தென்கரையில் காட்டியுள்ள குளவியாதன்குழி மடமும் கார்த்தியன் மடமும் பிந்திய நிலப்படத்தில் இல்லை. பதிலாக, கரையா மடம், வைரவப்பணிக்கன் மடம் என்ற இரண்டு மடங்கள் உள்ளன. இவையும் முன்னைய மடங்களுக்கான வேறு பெயர்களாக இருக்கக்கூடும்.

பூநகரிப் பிரிவில் வௌவால்தூங்கி மடம், பல்லவராயன்கட்டில் கல்லடி மடம், நானாட்டானில் துவெட்டி மடம் ஆகியவற்றையும் மேல்பற்றுப் பிரிவில் அன்னதேவன் மடம், பாலிமடம் ஆகிய இரண்டு மடங்களையும் லெயுசிக்காம் நிலப்படம் புதிதாகக் காட்டுகிறது. இங்கே அன்னதேவன்மடம் என்று குறிப்பிட்டுள்ள இடத்தை வேறு ஒரு நிலப்படம் அன்னதேவன் மடு எனக் குறிப்பிடுகிறது. 1895 ஆம் ஆண்டில் வெளியான எல்.பி. லூயிசின் வன்னிக் கையேட்டிலும் [3] 1926 ஆம் ஆண்டின் ஊர்களின் பட்டியலிலும் [4] அன்னதேவன் மடு என்ற பெயரே காணப்படுகிறது. ஆனாலும், இவ்வூர் பற்றிக் குறிப்பிட்ட லூயிஸ், ஒல்லாந்தர் காலத்தில் அங்கே ஒரு தங்குமடம் (Rest House) இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.[5] இம்மடத்தை

அன்னதேவன் மடம் என்று அழைத்திருக்க வாய்ப்பு உண்டு.

## யானை அடைப்பு

இத்தொடரின் சென்ற கட்டுரையில் ஒல்லாந்தரின் யானை வணிகம் பற்றியும் இதற்காக வன்னிப் பகுதியில் யானைகள் பிடிக்கப்பட்டது பற்றியும் குறிப்பிட்டோம். வன்னியின் மேற்கு எல்லைப் பகுதியில் ஒல்லாந்தரின் நேரடிக் கட்டுப்பாடிலிருந்த பூநகரி, பல்லவராயன்கட்டு, இலுப்பைக்கடவை, மாதோட்டம் முதலிய பகுதிகளில் யானைகளைப் பிடிப்பதற்காக ஆட்களை நியமித்திருந்தது குறித்தும் அறிந்தோம். இதற்காக யானைகளைப் பிடிப்பதற்கான அடைப்புகளை (Elephant Kraal) ஆங்காங்கே அமைத்திருந்தனர். ஒல்லாந்த ஆளுநர் இளைய ரைக்குளோஃப் வான் கூன்ஸ் *1679* இல் எழுதிய குறிப்பொன்றில் பூனகரி, பல்லவராயன்கட்டு, இலுப்பைக்கடவை ஆகிய பகுதிகளில் இருந்த யானை அடைப்புக்களைத் திருத்துவதற்குக் கட்டளை வழங்கப்பட்டது பற்றி அறியமுடிகிறது.[6] மற்ற இடங்களில் யானை அடைப்புகள் எதையும் நிலப்படம் காட்டாவிட்டாலும் இலுப்பைக்கடவைப் பிரிவுக்கு உட்பட்ட வேலங்குளம் பகுதியில் யானை அடைப்பு ஒன்றைக் குறித்துள்ளனர். (படம்4) யாழ்ப்பாணத்துக்கான ஒல்லாந்தக் கட்டளைத் தளபதி சுவார்டெக்குரூனும் *1697* இல் தான் எழுதிய குறிப்பு ஒன்றில் இவ்வாறான இரண்டு அடைப்புகள் பூநகரியில் அமைத்திருந்ததைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.[7]

## யானைப்பந்திகள்

இந்நிலப்படத்தில் பல இடங்களில் யானைப்பந்திகளைக் குறித்துள்ளனர். இப்பந்திகள் வன்னியர்களிடமிருந்து திறையாகப் பெறும் யானைகளையும், ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனி தமது பணியாட்கள் மூலம் அல்லது குத்தகைக்காரர் மூலம் பிடிக்கும் யானைகளையும் ஏற்றுமதி செய்வதற்கு முன்னர் வைத்துப் பராமரிப்பதற்கான இடங்களாக இருக்கக்கூடும். அத்துடன், பாரந்தூக்குதல் பாரமான பொருட்களை இடத்துக்கிடம் எடுத்துச் செல்லுதல் முதலிய பல்வேறு வேலைகளுக்காக ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனியும் சொந்தமாகப் பழக்கிய யானைகளை வைத்திருந்திருப்பர். அவற்றைப் பராமரிப்பதற்கும் பந்திகள் இருந்திருக்கும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் பரவலாகப் பல இடங்களில், குறிப்பாக வண்ணார்பண்ணை, மானிப்பாய், மல்லாகம், புத்தூர், சாவகச்சேரி, கச்சாய், எழுதுமட்டுவாள், முகமாலை, தம்பகமை, புலோப்பளை, வரணி, கட்டைவேலி ஆகிய பிரிவுகளிலும் மன்னார்த் தீவில் நகரத்திலும் கரிசலிலும் யானைப்பந்திகளைக் காணமுடிகின்றது. ஒல்லாந்தர் காலத்தில் யானை வணிகம் பெற்றிருந்த முக்கியத்துவத்தை மேற்படி யானைப்பந்திகள் காட்டுகின்றன. தீவுப் பகுதியிலும் வன்னியிலும் யானைப்பந்திகள் எவற்றையும் நிலப்படம் காட்டவில்லை.





**பண்டத்தரிப்புக் கோயிற்பற்றில் இருந்த தேவாலயமும் குருமனையும். இடதுபுறம் உள்ளது நிலப்படத்தில் தேவாலயத்தையும் குருமனையையும் குறித்திருப்பதைக் காட்டுகிறது. வலதுபுறம் உள்ளது போல்டேயஸ் பாதிரியாரின் நூலில் பண்டத்தரிப்புத் தேவாலயத்தையும் குருமனையையும் காட்டும் படம்.**

உண்மையில் ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனிக்குச் சொந்தமான யானைப்பந்திகளை மட்டுமே இங்கே காட்டியுள்ளனர் எனத் தோன்றுகிறது. யானைகளைப் பிடித்து அவற்றை அதிகாரிகளிடம் கையளிப்பதற்கு முன்னர் அவை நல்ல நிலையில் உள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்குக் குறிப்பிட்ட காலம் யானை பிடிப்பவர்களே அவற்றைப் பராமரிக்கவேண்டும். இத்தேவைக்காக வன்னிப்பகுதியில் யானைப்பந்திகள் இருந்திருக்கும். அவை கம்பனிக்குச் சொந்தமானவை அல்ல என்பதால் அவற்றை நிலப்படத்தில் காட்டவில்லை எனலாம். நல்ல நிலையில் கையளிக்கப்பட்ட யானைகளைக் கம்பனிக்குச் சொந்தமான பந்திகளில் வைத்துப் பராமரித்தனர். அக்காலத்தில் வளர்ந்த ஆண்கள் அனைவரும் ஆண்டுக்குக் குறிப்பிட்ட எண்ணிக்கையான நாட்கள் கம்பனிக்குப் பல்வேறு வகையான வேலைகளைக் கூலியின்றிச் செய்யவேண்டியிருந்தது. இது ஊழியம் எனப்பட்டது. இதன் ஒரு பகுதியாகக் கம்பனியின் பந்திகளில் வைத்துப் பராமரிக்கப்படும் யானைகளுக்கு உணவளிப்பதற்குப் பனையோலைகளை வழங்குவது குறிப்பிட்ட சில சாதிகளைச் சேர்ந்தவர்களின் கடமையாக இருந்தது குறிப்பிடத்தக்கது.[8]






வண்ணார்பண்ணைக் கோயிற்பற்றில் இருந்த தேவாலயம். இடதுபக்கப் படம் நிலப்படத்தில் தேவாலயம் மட்டும் குறிக்கப்பட்டிருப்பதைக் காட்டுகிறது. வலது பக்கப் படம் போல்டேயஸ் பாதிரியாரின் நூலில் உள்ளபடி வண்ணார்பண்ணைத் தேவாலயத்தின் தோற்றத்தைக் காட்டுகிறது. இதிலும் குருமனை இல்லை.


## இடப்பெயர்கள்

ஊர்கள், ஆறுகள், குளங்கள், மடங்கள் ஆகியவை உள்ளிட்ட பல்வேறு அம்சங்களின் பெயர்கள் இந்த நிலப்படத்திலும் காணப்படுகின்றன. முன்னர் விவரித்த தூர்சியின் நிலப்படத்தில் உள்ளதைவிட அதிகமான பெயர்கள் இதில் உள்ளன. வன்னியில் மட்டும் 500 இற்கும் மேற்பட்ட பெயர்களைக் குறித்துள்ளனர். தூர்சியின் நிலப்படத்தை விவரிக்கும்போது குறிப்பிட்டது போலவே இதிலும் பெருமளவு பெயர்கள் ஐயத்துக்கு இடமின்றித் தமிழ்ப் பெயர்களே.

## ஊர்கள்

தூர்சியின் நிலப்படத்தை விளக்கியபோது குறிப்பிட்டதுபோல் இந்த நிலப்படத்திலுள்ள நூற்றுக்கணக்கான ஊர்ப் பெயர்களில் பல இன்றும் பயன்பாட்டில் உள்ளன. சில பெயர்கள் இன்றைய ஊர்களின் பட்டியலில் இடம்பெறவில்லை. முன்னர் முக்கியத்துவம் பெற்றிருந்த ஊர்கள் அந்த முக்கியத்துவத்தை இழந்தமை, அல்லது பழைய பெயர்கள் வழக்கொழிந்து புதிய பெயர்களைப் பெற்றமை இதற்கான காரணங்களாக இருக்கக்கூடும் எனவும் முன்னர் குறிப்பிட்டோம். அத்துடன், பல்வேறு காரணங்களால் ஊர்கள் கைவிடப்பட்ட அல்லது அழிந்துபோன நிகழ்வுகள் பற்றியும் அறியமுடிகிறது.

வன்னிப் பகுதியில் இருந்த பெரும்பாலான ஊர்கள் மிகக்குறைந்த மக்கள்தொகையைக் கொண்டனவாகவே காணப்பட்டன. ஜே.பி. லூயிஸ் எழுதி 1895 இல் வெளியான "இலங்கையின் வன்னி மாவட்டங்கள் தொடர்பான கையேடு" என்னும் நூலில் 19 ஆம் நூற்றாண்டில் வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்த 555 ஊர்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.[9] இவற்றுள், 1891 ஆம் ஆண்டில் இருந்த 326 ஊர்களில் 65 ஊர்கள் மட்டுமே 50 இற்கு மேற்பட்ட மக்கள்தொகையைக் கொண்டிருந்தன. 56 ஊர்கள் 10 அல்லது அதற்கும் குறைவான






**நிலப்படத்தில், இலுப்பைக்கடவைப் பிரிவில் வேலங்குளம் பகுதியில் யானை அடைப்புக் குறிக்கப்பட்டிருப்பதை இடப்பக்கத்தில் உள்ள படம் காட்டுகிறது. வலப்பக்கத்தில் உள்ளது போல்டேயஸ் பாதிரியாரின் நூலில் காணப்படும் யானை பிடிக்கும் படம். அடைப்பையும் படத்தில் காணலாம்.**

மக்கள்தொகையைக் கொண்டவை. இவ்வாறு மிகக் குறைந்த மக்கள்தொகையுடன் கூடிய பெருமளவு ஊர்கள் இருந்ததால், தொற்று நோய்கள் முழு ஊரையும் காவுகொள்ளுதல், குளங்கள் தூர்வதாலும் வேறு காரணங்களாலும் முழு ஊருமே கைவிடப்படல் போன்ற நிகழ்வுகள் 19 ஆம் நூற்றாண்டில் அடிக்கடி நிகழ்ந்ததாகத் தெரிகிறது. இதனால், 1817 இல் 417 ஆக இருந்த ஊர்களின் எண்ணிக்கை 1891 இல் 326 ஆகக் குறைந்திருந்தது. இந்தப் பின்னணியில் பார்க்கும்போது ஒல்லாந்தர் காலத்தில் இந்த நிலப்படம் வரையப்பட்ட 1719 இலிருந்து 1817 வரையிலான காலப்பகுதியிலும் பழைய ஊர்கள் கைவிடப்பட்டும் புதிய குடியேற்றங்கள் உருவாகியிருக்கவும் வாய்ப்புகள் உண்டு. எனவே, 1719 இல் நிலப்படத்தில் குறித்துள்ள பல ஊர்கள் தற்காலப் பட்டியல்களில் இல்லாதது வியப்புக்குரியது அல்ல.


தொடக்ககால வன்னிக் குடியேற்றங்களைப் பற்றிக் கூறும் வையாபாடல் என்னும் குடியேற்றவாதக் காலத்துக்கு முந்திய நூல் வாவெட்டி, வாவெட்டி மலை ஆகியவை பற்றிப் பல இடங்களிற் குறிப்பிடுகிறது. யாழ்ப்பாண இராச்சியத்துக்கு முற்பட்ட காலத்திலேயே உக்கிரசிங்க சேனன் என்பவன் வாவெட்டி மலையில் இருந்து அரசாண்டதாக இந்நூல் கூறுகிறது. ‘மாநகர் வாவெட்டி மலை’ என்றும் ‘செப்பரிய வாவெட்டி மலை’ என்றும் வையாபாடல் குறிப்பிடுவதுடன், பிற்காலத்தில், யாழ்ப்பாண அரசன், இளவரசன் சங்கிலியை இங்கே குடியமர்த்தியது பற்றியும் கூறுகிறது.[10] இதிலிருந்து, குடியேற்றவாதக் காலத்துக்குப் பல நூற்றாண்டுகள் முன்பிருந்தே இது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இடமாக இருந்ததாகக் கொள்ளலாம்.

வாவெட்டி (Bawitty) இந்த நிலப்படத்திலும் உள்ளது. இன்று ஒரு குடியிருப்பாக முக்கியத்துவம் பெறாத இந்த ஊருக்கு நிலப்படத்தில் முக்கியத்துவம் கொடுத்துக் குறிப்பிட்டிருப்பதுடன், இது அமைவிட முக்கியத்துவம் கொண்ட ஒரு இடமாகவும் தெரிகிறது. ஐந்து முக்கிய வீதிகள் சந்திக்கும் இடத்தில் இவ்வூர் அமைந்துள்ளது. (படம்-5) எனவே, இந்நிலப்படம் வரையப்பட்ட காலத்திலும் வாவெட்டி முக்கியமான குடியிருப்பாக இருந்தது எனக் கொள்ளமுடியும். ஜே.பி. லூயிசின் வன்னிக் கையேட்டில் உள்ள ஊர்களின் பட்டியலில் இந்த ஊர் இல்லாததால், 19 ஆம் நூற்றாண்டிலேயே வாவெட்டி தனது முக்கியத்துவத்தை இழந்துவிட்டது எனலாம்.

ஆனாலும், வாவெட்டி மலை என்னும் பெயர் இன்றும் புழக்கத்தில் உள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்னர் வாவெட்டி மலையில் கல் அகழ்வதன் மூலம் நமது மரபுரிமைகள் அழிக்கப்படுவது தொடர்பாக ஊடகங்களில் செய்தி வெளியாகியது குறிப்பிடத்தக்கது.

அண்மைக் காலத்தில் முத்தையன்கட்டு எனவும் தற்போது முத்து ஐயன் கட்டு எனவும் அறியப்படும் இடமும் இந்த நிலப்படத்தில் குறிக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தின் பழைய பெயர் முத்தரையன்கட்டு எனவும் முத்து ராயன் கட்டு [11] எனவும் பல்வேறு கருத்துகள் உள்ளன. மேற்படி நிலப்படத்தில் இப்பெயர் டச்சு மொழியில் Moetreancattoe என உள்ளது. இதை 'முத்ரியன்கட்டு' என வாசிக்கலாம். இது 'முத்தரையன்கட்டு' என்பதற்கு நெருக்கமாக உள்ளதாகவே தெரிகின்றது. லெயுசிகாம் தொகுப்பிலுள்ள இன்னொரு நிலப்படத்தில் இதை Moeteren Cattoe (முத்தெரென் கட்டு) என எழுதியுள்ளனர். இதுவும் முத்தரையன் கட்டு என்பதன் வேறுபாடாகவே தெரிகிறது. கிபி 600900 காலப்பகுதியில் தமிழ்நாட்டின் சில பகுதிகளை முத்தரையர் வம்சத்தைச் சேர்ந்த சிற்றரசர்கள் ஆண்டுள்ளனர். இவர்களுக்கும் முத்தரையன்கட்டு என்னும் பெயருக்கும் தொடர்பு உண்டா என்பது ஆய்வுக்கு உரியது.

இந்த நிலப்படம் தொடர்பாக இன்னும் சில விவரங்களை அடுத்த கட்டுரையிலும் பார்க்கலாம்.



நிலப்படத்தில் வாவெட்டியைக் (Bawitty) காட்டும் பகுதி. ஐந்து வீதிகள் இவ்விடத்தை நோக்கிக் குவிவதையும், நிலப்படத்தில் வாவெட்டிக்கு முக்கியத்துவம் கொடுத்துக் குறித்திருப்பதையும் கவனிக்கவும்.

## குறிப்புகள்


*Phillipus Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", trans. Pieter Brohier, The Ceylon Historical Journal, vol. VIII nos.* **14** *(July* **1958***April* **1959), 287288, 294, 318340.**

*Johann Wolffgang Heydt, Heydt's Ceylon, Being the Relevant Sections of the Allerneuester Geographisch und Topographischer Schau Plats,trans. RevenHart (Ceylon Government Information Department,* **1952), 8586.**

*J. P. Lewis, A Manual of the Vanni Districts, Ceylon (New Delhi: NAVRANG,* **1895), 74.**

*Department of Census and Statistics, Alphabetical and Numerical Lists of the Villages in the Northern Province (Colombo: Government Printer,* **1926), 44.**

*J. P. Lewis, A Manual of the Vanni Districts,* **54**

*Instructions from the GovernorGeneral and Council of India to the Governor of Ceylon* **1656 1665,** *trans. Sophia Pieters (Colombo: Ceylon Government Printer,* **1908), 20.**

*Memoir of Hendrick Zwaardecroon, Commandeur of Jaffnapatam* **1697,** *trans. Sophia Pieters (Colombo: Ceylon Government Printer,* **1911), 10.**

க. வேலுப்பிள்ளை, யாழ்ப்பாண வைபவ கௌமுதி (புது டில்லி: ஏசியன் எடுகேஷனல் சர்வீசஸ், **2004), 111.**

*J. P. Lewis, A Manual of the Vanni Districts,* **6479.**

க. செ, நடராசா, (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம் செகராசசேகர மகாராசாவின் சமஸ்தான வித்துவான் வையாபுரி ஐயர் செய்த வையா பாடல் (கொழும்பு: கொழும்புத் தமிழ்ச் சங்கம், **1980), 36, 51, 57.**

*S. Arumugam, Water Resources of Ceylon, Its Utilisation and Development (Colombo: Water Resources Board,* **1969), 279.**


(தொடரும்)

ராஜ் ராஜரட்ணம், சட்டத்துக்கு முரணாக 'உட்தகவல் வணிகம்' (Inside Trading) செய்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில், அமெரிக்கப் புலனாய்வுப் பணியகத்தால் 2009 ஒக்டோபரில் கைது செய்யப்பட்டார். அக் குற்றச்சாட்டுப் பொய்யானது என வாதாடியும், நீதிமன்றம் அவருக்கு 11 வருடங்கள் சிறைத்தண்டனையும் அமெரிக்க வரலாற்றிலே உச்சபட்சமான அபராதத் தொகையும் விதித்தது. ராஜ் ராஜரட்ணம் தான் அவமானப்படுத்தப்பட்டதாக உணர்ந்தார்; தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக் கெதிராகப் பேச வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டார். இந் நிலையில், சிறையிலிருந்தவாறே அவர் ஆங்கிலத்தில் எழுதிய நூலே 'Uneven Justice'. இந்நூல் அமெரிக்க நீதித்துறை மீதும், நீதிபதிகள் மீதும், அமெரிக்க வழக்குரைஞர் நாயகத்தின் மீதும், எப்.பி.ஐ. மீதும் மிகக் கடுமையான விமர்சனங்களை முன்வைக்கிறது. மூன்று வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்ட இந்நூல் அண்மையில் ஓய்வுநிலைப் பேராயர் பேரருட்கலாநிதி எஸ். ஜெபநேசன், முனைவர் சோ. பத்மநாதன் (சோ.ப) ஆகியோரால் 'சமனற்ற நீதி' எனும் பெயரில் தமிழாக்கம் செய்யப்பட்டு, 'யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மன்றத்தினால்' வெளியிடப்பட்டது. தமிழ் வாசகர்கள் அறியும் நோக்கில் இந் நூல் 'சமனற்ற நீதி ' எனும் பெயரிலேயே எழுநாவில் தொடராக வெளிவருகிறது.

தமிழில் : ஓய்வுநிலைப் பேராயர் பேரருட்கலாநிதி எஸ். ஜெபநேசன், முனைவர் சோ. பத்மநாதன் (சோ.ப)

# சமனற்ற நீதி : என் இளமைக்காலம்

*1957 ஜூன் 15 ஆம் தேதியன்று, இலங்கையின் தலைநகரான கொழும்பில் நான் பிறந்தேன். எனது பெற்றோருக்குப் பிறந்த ஐந்து குழந்தைகளில் நானே முதலாவது ஆண் குழந்தை. எனது குடும்பம் கட்டுப்பாடான வாழ்க்கையையும் கல்வி மீதான வேட்கையையும் இயல்பிலேயே கொண்டிருந்தது. விடா முயற்சியும் கடமை தவறாமையையும் என்னுடைய பாட்டனிடமிருந்தும் தந்தையிடமிருந்தும் குழந்தைகளுக்குக் கடத்தப்பட்டிருந்தன. ஒரு மத்தியதர வர்க்கத் தமிழ்க் குடும்பத்தின் கலாசாரமும் வழமைகளும் எங்களால் பின்பற்றப்பட்டன.*

*எனது தந்தை தன்னுடைய விடாமுயற்சியால் வாழ்க்கைப் பயணத்தில் முன்னேறிச் சென்றவர். அவர் இலங்கை பல்கலைக் கழகத்தில் பட்டதாரியாகியதும், இங்கிலாந்தில் கணக்கியல் மேற்படிப்பைத் தொடருவதற்கான புலமைப் பரிசில் அவருக்குக் கிடைத்தது. இங்கிலாந்துக்கு எனது தாயாரையும் அழைத்துச் சென்றிருந்தார்.*



## ராஜ் ராஜரட்ணம்

திரு ராஜ் ராஜரட்ணம் அவர்கள் 1957 இல் கொழும்பில் பிறந்தார். ஆரம்பக் கல்வியை கொள்ளுப்பிட்டி புனித தோமையர் கல்லூரியில் கற்றார். பின்னர் இங்கிலாந்து சென்று பள்ளிப் படிப்பை நிறைவுசெய்து சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டம் பெற்றார். 1983 இல் பென்சில்வேனியா உவார்ட்டன் பல்கலைக்கழகக் கல்லூரியில் எம்.பி.ஏ பட்டம் பெற்றார். ராஜ் ராஜரட்ணம் தனது பணியை முதன்முதலில் சேஸ் மான்ஹட்டன் வங்கியில் கடன் வழங்கும் அதிகாரியாகத் தொடங்கினார். 1985 இல் நியூயோர்க்கின் நீடம் நிறுவனத்தில் சேர்ந்து பணியாற்றினார். 1987 இல் அந்நிறுவனத்தின் ஆய்வுப் பகுதியின் தலைவராகவும், மார்ச் 1991 இல் அந்நிறுவனத்தின் தலைவராகவும் ஆனார்.
1997 இல் தனது சொந்த நிறுவனமான கலியன் முதலீட்டு நிதியத்தை ஆரம்பித்தார். இந்நிதியத்தைப் பின்னர் அவர் கலியன் குழுமம் எனப் பெயர் மாற்றினார். இது உலகின் மிகப்பெரிய முதலீட்டு நிறுவனங்களில் ஒன்றாக மாறியது. ஒரு காலகட்டத்தில் கலியன் குழுமம் 180 பணியாளர்களுடன் 7 பில்லியன் அமெரிக்க டொலர்களை நிருவகித்தது.
2009 இல் அமெரிக்கப் புலனாய்வுப் பணியகம் ராஜ் ராஜரட்ணத்தைத் திட்டமிட்டுக் கைது செய்தது. உட்தகவல்களைப் பெற்று வர்த்தகம் செய்ததாகவும் 0.01 சதவீதம் குற்றமிழைத்ததாவும் அவர் மீது பொய்க்குற்றச் சாட்டுக்களை முன்வைத்தது. குற்றத்தைப் ஒப்புக்கொள்ளுமாறு அவர்மீது பல்வேறு அழுத்தங்களைப் பிரயோகித்தது. தான் நிரபராதி என்பதில் உறுதியாக நின்ற ராஜ் ராஜரட்ணம் அமெரிக்க நீதித்துறையில் உள்ள பேராசை பிடித்த சில தனிபர்களின் சதிகளாலும் பொய்ச்சாட்சிகளாலும் வஞ்சிக்கப்பட்டார். 11 ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்ற ராஜ் ராஜரட்ணம் அவர்கள் 7 ஆண்டுகளில் விடுவிக்கப்பட்டார். சிறையில் இருந்து ராஜ் எழுதிய நூல் Uneven Justice என்ற பெயரில் 2021 இல் வெளிவந்தது. இந்நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு 2024 இல் யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாண போதனா மருத்துவமனை மன்றத்தால் வெளியிடப்பட்டது. ராஜ் ராஜரட்ணம் தற்போது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ்ச் சமூகத்தின் மீள்கட்டுமானப் பணிகளுக்கு பல்வேறு வழிகளில் உதவி வருகிறார்.

ஐந்து வருடங்களில் தந்தையாரின் மேற்படிப்பு நிறைவுற்றதும், அவசரமாக அவர்கள் இலங்கைக்குத் திரும்பினார்கள். அப்போது எனது தாயார் நிறைமாதக் கர்ப்பவதியாக இருந்தார். மிக நெருக்கடியான காலத்தில் நீண்ட கடற்பயணத்தை அவர்கள் மேற்கொண்டார்கள். அப்போது சூயஸ் கால்வாய் மூடப்பட்டுப் பதற்றமான சூழல் நிலவிக் கொண்டிருந்தது. பெற்றோர் பயணித்த கப்பல் ஆபிரிக்காவின் நன்நம்பிக்கை முனையைச் சுற்றியே செல்ல வேண்டிவிருந்தது. பெற்றோர் இலங்கை வந்து



ராஜ் ராஜரட்ணம் அவர்களின் தந்தை - ஜே.எம். ராஜரட்ணம்

Image Source - en.wikipedia.org

சேர்ந்து ஒரு மாதம் கழித்து நான் பிறந்தேன்.

எனது தந்தை 'சிங்கர்' பல்தேசிய நிறுவனத்தில் நல்ல வேலையொன்றைத் தேடிக்கொண்டார். அந்த நிறுவனத்தின் ஏணிப் படிகளில் தனது கடுமையான உழைப்பால் விரைந்து முன்னேறினார். அவருடைய நாற்பது வயதைத் தொடுவதற்கு முன்னரே, சிங்கர் நிறுவனத்தின் இலங்கைக்கான தலைமை நிறைவேற்று அதிகாரியானார்.

அப்பொழுது சிங்கர் தையல் இயந்திரம் உலகெங்கும், குறிப்பாக ஆசியாவில் மிகப் பிரபலமாக இருந்தது. பெரும்பாலான ஆசியப் பெண்களின் கனவு ஒரு சிங்கர் தையல் இயந்திரத்தைச் சொந்தமாக்கிக் கொள்வதே என்று கூடச் சொல்லலாம். இந்தக் காலகட்டத்தில் தையற்கலை ஏராளமான பெண்களை ஈர்த்தது. சிங்கர் தையல் இயந்திரமொன்றைச் சொந்தமாக வைத்திருப்பது ஒருவரின் செல்வத்திற்கும் சமூக அந்தஸ்திற்கும் அடையாளமாகவிருந்தது. 1950-1970 வரையான காலப்பகுதியில் ஒரு தெற்காசியக் குடும்பத்தின் உடைமைகளைக் கணக்கிட்டால், அதிலே பெரும்பாலும் ஒரு தையல் இயந்திரமும் இருக்கும். என்னுடைய தந்தையார் பணி ஓய்வுபெறும்போது, சிங்கர் நிறுவனத்தின் தூரகிழக்கு ஆசியாவுக்கான பிராந்தியத் தலைவராக இருந்தார்.

என்னுடைய தாயார் கல்லூரிப் படிப்பை நிறைவு செய்தவர். உயிரியலையும் விலங்கியலையும் சிறப்புப் பாடங்களாகக் கற்றவர். தனது குழந்தைகளது கல்வியில் மிகக் கவனத்துடன் இருந்தார். எங்களுக்கு அவர் கற்பித்தார். கணிதச் சமன்பாடுகளைக் குறித்தும், மனித உடலியல் கூறுகளைக் குறித்தும் அவர் எனக்குக் கற்பித்தது இனிய நினைவுகளாக எனது மனதில் இன்னும் அழியாமலிருக்கின்றன. குழந்தைகள் எங்களது கல்வி தொடர்பான ஒவ்வொரு அசைவையும் பெற்றோரே தீர்மானித்தார்கள். கல்வியே எமது வாழ்வின் அடி ஆதாரம். இந்த எண்ணம் எங்களது குடும்பத்திற்குள் மரபாகக் கடத்தப்பட்டிருந்து.

யாழ்ப்பாணத்திலுள்ள 'அல்வாய்' எனும் சிறிய கிராமத்தில் எனது தந்தைவழித் தாத்தாவும் பாட்டியும் வாழ்ந்தார்கள். தாத்தா ஆண்கள் பாடசாலையில் தலைமையாசிரியராக இருந்தார். பாட்டி பெண்கள் பாடசாலையில் தலைமையாசிரியையாக இருந்தார். அவர்கள் கல்வியின் முக்கியத்துவத்தை நன்றாக உணர்ந்திருந்ததால், தங்களுடைய ஆறு பிள்ளைகளையும் கல்லூரிகளில் படிக்க வைத்தார்கள். தமது ஒரேயொரு மகளையும் கல்லூரிக்கு அனுப்பினார்கள். அக்காலகட்டத்தில் பெண் பிள்ளைகளைக் கல்லூரிக்கு அனுப்புவது யாழ்ப்பாணச்

சமூகத்தில் அதிசயமான நிகழ்வாகவிருந்தது. பெண்கள் பருவ வயது எய்தியவுடனேயே திருமணம் செய்து வைத்து விடுவார்கள்.

எனது தாய்வழித் தாத்தாவும் பாட்டியும் விவசாயிகள். அவர்களுடைய மூன்று பெண் குழந்தைகளில் முதலாவது குழந்தை எனது தாயார். அந்தத் தாத்தா மனவுறுதி மட்டுமல்லாமல், அதீத உடலுறுதியும் வாய்க்கப் பெற்றிருந்தார். தனது கடைசி மகளை அவளது கணவன் திட்டியதற்காக, மருமகனைக் கைகளால் அலேக்காகத் தூக்கி எடுத்து மாடிச் சுவரில் தொங்க விட்டாராம்.

தாத்தா எழுபது வயதைக் கடந்த பின்னர், ஒரு மோட்டார் காரை விலைக்கு வாங்கினார். அந்த முதிய வயதில் மூன்று தடவைகள் முயற்சித்து சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டார். நான் ஒருமுறை அவரது வீட்டில் தங்கியிருந்துவிட்டு கொழும்புக்குத் திரும்பும்போது, என்னைத் தனது மோட்டார் காரிலேயே பேருந்து நிலையத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டுமென்று பிடிவாதமாக இருந்தார். அந்தப் பிரயாணம் என் வாழ்வின் மிகப் பயங்கரமான பிரயாணமாகவிருந்தது. பாதசாரிகளுக்கும் கட்டாக்காலி மாடுகளுக்கும் நடுவாக மோட்டார் கார் தடுமாறிச் சென்றது. வண்டியை ஓட்டும் தாத்தாவின் முகம் ‘ஸ்டியேரிங்’கிற்கு அரையடி தூரம்தான் விலகியிருந்தது.

கிறிஸ்துமஸ் விடுமுறையின்போது, தாத்தாக்களையும் பாட்டிகளையும் காண்பதற்காக நாங்கள் கொழும்பிலிருந்து எட்டு மணிநேரம் பயணம் செய்து யாழ்ப்பாணத்திற்குப் போவோம். இந்த பயணத்துக்காகவே பல மாதங்களாக ஆவலோடு காத்திருப்போம். பரபரப்பான தலைநகரத்திலே வளரும் எங்களுக்கு யாழ்ப்பாணத்தின் கிராமப்புற அமைதியான வாழ்க்கை மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஆடுகளிலிருந்து பால் கறத்தல், கோழி முட்டைகளைச் சேகரித்தல் போன்ற வேலைகளில் பாட்டிக்கு உதவி செய்ய உற்சாகத்தோடு இறங்கிவிடுவோம். அதிகாலையில் எழுந்து தாத்தாவுடன் கடற் கரைக்குச்சென்று, மீனவர்களின் தோணிகளுக்காகக் காத்திருப்போம். கடலிலிருந்து திரும்பும் மீனவர்களிடம் துள்ளித் துடிக்கும் மீன்களையும் நண்டுகளையும் கணவாய்களையும் வாங்குவோம். தாத்தாமாருடனும் பாட்டிமாருடனும் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருப்போம். அவர்கள் எங்களிடம் கல்வி குறித்தும் வாழ்க்கை குறித்தும் சமூகம் குறித்தும் ஆழமான கேள்விகளை விதைத்தார்கள். நாங்கள் அந்தக் கேள்விகளைக் குறித்த சிந்தனைகளுடன் யாழ்ப்பாணத்தின் தோட்டவெளிகளில் திரிந்தோம். புதியனவற்றைக் கண்டறிவதற்கும் தனித்துவமாகச் செயற்படுவதற்குமான உத்வேகத்தை முதன்முதலில் எனது தாத்தாக்களிடமிருந்தும் பாட்டிகளிடமிருந்துமே நான் பெற்றுக்கொர்டேன்.

இலங்கையைப் பற்றிய எனது சிறு பிராயத்து நினைவுகள் பெரிதும் இனிமையானவை. கண்ணீர்த் துளியின் வடிவிலிருக்கும் அந்த நாடு அதன் உற்சாகமூட்டக்கூடிய காலநிலைகளைப் போன்றே உயிர்த்துடிப்புடன் காணப்பட்டது. மணல் சொரிந்திருக்கும் அழகிய கடற்கரைகள், பசுமையான மலைச்சாரல்கள், நன்கு கத்தரிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட தேயிலைத் தோட்டங்கள், ஓங்கி வளர்ந்த தென்னந் தோட்டங்கள், மலைக் காடுகள், ஆறுகள், நீர்வீழ்ச்சிகள் என இலங்கை இயற்கை அழகால் ததும்பியிருக்கிறது. பூலோக சொர்க்கம் என்ற புகழ் மொழிக்கு மிகப் பொருத்தமான நாடுதான்.

இலங்கை பல்லின மக்களின் சகவாழ்வை வரித்துக்கொண்ட நாடு. அதன் குடிமக்கள் பல நூற்றாண்டுகளாகவே வெவ்வேறு இன மக்களுடன் கலந்து வாழப் பழகியிருந்தார்கள். இனங்களுக்கிடையில் மோதல் கட்டங்களும் இருந்தன. பெரும்பான்மையினரான சிங்களவருக்கும், சிறுபான்மையினரான தமிழருக்கும் இடையில் இன முரண்பாடுகள் வளர்ச்சியுற்ற காலத்தில், நான் எனது பதின்ம வயதுகளில் இருந்தேன். இந்த இனமுரண் மெல்லமெல்ல வளர்ச்சியுற்று, அந்த அழகிய தீவை

எனது பிள்ளைப் பருவத்தை நான் மிகவும் விரும்புகிறேன். என்னுடைய வாழ்வில் அதுவொரு வசந்தகாலமே. ஏராளமான நண்பர்களும் குடும்ப உறவுகளும் என்னைச் சூழ்ந்திருந்தனர். வாழ்க்கை அமைதியாகவும் அவசரமற்றும் தெளிந்த அழகிய நீரோடைபோல நகர்ந்தது. நியூயோர்க்கிலோ வாழ்க்கையும் தொழிலும் மூச்சுத் திணறவைக்கும் நாயோட்டமாக இருக்கிறது.

முப்பதாண்டு காலக் கொடிய யுத்தத்திற்கு இட்டுச் சென்றது. வகைதொகையின்றி மக்கள் கொல்லப்பட்டார்கள், பல்லாயிரக்கணக்கான மக்கள் காணாமலாக்கப்பட்டார்கள். இனமுரண் தீர்க்கப்படாத பிரச்சினையாகவே, நாட்பட்ட புண்ணாகவே இன்றுவரை இருக்க, இனமுரண்களுக்குள் சிக்கியிராத ஒரு சமூகச் சூழலிலேயே நான் சிறு பிராயத்தில் வளர்ந்தேன். அங்கே சிங்களவர், தமிழர், இஸ்லாமியர், பறங்கியர் என்ற பேதமேதும் கிடையாது. வீதியோரம் கிரிக்கெட் விளையாட இறங்கினால், எல்லா இனத்துப் பிள்ளைகளும் ஒன்றாகவே விளையாடினோம். சேர்ந்தே பாடசாலைக்குச் சென்றோம். நாங்கள் வெவ்வேறு வகுப்பறைகளில் இருந்தாலும், விளையாட்டு மைதானம் எங்களை இணைத்தது. ஒருவரது வீட்டில் அடுத்தவர் தங்கிக் கொள்வோம். இன, மத பேதங்களுக்கு அப்பாற்பட்டு நான் வளர்ந்த சூழலே எனது எதிர்கால வாழ்க்கைக்கு வெளிச்சம் பாய்ச்சும் அற்புத விளக்காக அமைந்தது. உலகின் எந்தவொரு இனத்தை, மதத்தை, நிறத்தைச் சேர்ந்தவருடனும் என்னால் நட்பாகவும் புரிந்துணர்வுடனும் இருக்க முடிந்தது.

எனது பிள்ளைப் பருவத்தை நான் மிகவும் விரும்புகிறேன். என்னுடைய வாழ்வில் அதுவொரு வசந்தகாலமே. ஏராளமான நண்பர்களும் குடும்ப உறவுகளும் என்னைச் சூழ்ந்திருந்தனர். வாழ்க்கை அமைதியாகவும் அவசரமற்றும் தெளிந்த அழகிய நீரோடைபோல நகர்ந்தது. நியூயோர்க்கிலோ வாழ்க்கையும் தொழிலும் மூச்சுத் திணறவைக்கும் நாயோட்டமாக இருக்கிறது.

கொழும்பில், காலனிய காலத்துக் கட்டடக்கலையால் உருவாகியிருந்த பெரியதும் அழகானதுமான வீடொன்றில் நாங்கள் வசித்தோம். வீட்டின் விசாலமான முற்றம் ஒழுங்காகக் கத்தரிக்கப்பட்டிருந்த பூஞ்செடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதையொரு சிறிய நந்தவனம் என்றே கூறலாம். தோட்டக் கலையில் ஆர்வமுள்ள எனது தாயாரால் அது சிரத்தையுடன் பராமரிக்கப்பட்டது. வீட்டுக்குப் பின்னாலிருந்த வளவுக்குள் சடைத்திருந்த மரங்களில் மாம்பழங்கள், கொய்யாப்பழங்கள் உட்படப் பல வகைப் பழங்கள் வனப்பாகத் தொங்கின. நன்கு கனிந்த மாம்பழத்தைப் பறித்துத் துளையிட்டுச் சாறினை உறிஞ்சிக் குடிப்பது எனக்கு மிகவும் பிடித்தமான விடயம்.

ஞாயிற்றுக்கிழமைகள் கடற்கரைக்குச் செல்லும் நாட்களாகும். கொழும்புக்கு வெளியேயுள்ள ஆரவாரமற்ற கடற்கரைக்கு மோட்டார் வாகனத்தில் அயல் குடும்பத்தினரோடு செல்வோம். வாகனத்தின் பின்புறம் காலையில் சமைத்த பண்டங்கள் கூடைகளில் நிறைந்திருக்கும். கடற்கரையிலே சூரியனின் அனல் வெப்பத்தைத் தென்னைமரங்கள் தடுத்து நிற்கும். பெரிய குடைகளையும் படுக்கைத் துணிகளையும் விரித்துக் கூடாரம் தயாராகும். தாய்மார்கள் உணவுகளைப் பரிமாற, தந்தைமார்கள் கேலி, கிண்டல் அரட்டைகளிலும் சீட்டு விளையாட்டிலும் நேரத்தைப் போக்குவார்கள். குழந்தைகள் நாம் மணலில் கோட்டைகளைக் கட்டுவது, கிரிக்கெட் விளையாடுவது, கடலில் நீந்தித் திளைப்பது போன்றவற்றில் மும்முரமாகிவிடுவோம்.

இளமையில் கடற்கரையில் மகிழ்ச்சியாகக் கழித்த நாட்களே எனக்கு நீர்நிலைகளின் மீது ஆழமானதும் மாறாததுமான பற்றுதலை ஏற்படுத்தியிருக்கின்றன. எனக்கு மனச்சோர்வு ஏற்படும் போது, நான் கடற்கரையோரமாகப் பல மணிநேரங்கள் தொடர்ந்து நடப்பதுண்டு. அப்படிச் செய்தால் மனம் தெளிந்து, உற்சாகத்தை மீண்டும் பெறுவேன். நான் ‘சசெக்ஸ்’ பல்கலைக்கழகத்தில் படித்த

காலத்தில், அருகிலேயே கடற்கரை இருந்தமை எனக்குப் பொன்னான வாய்ப்பாக அமைந்தது. எனது திருமண பந்தம் உறுதியானது ஜெனிவா ஏரியில்தான். எனது திருமண விழா மான்ஹட்டன் தீவைச் சுற்றிவந்த படகில் நிகழ்ந்தேறியது. நான் நியூயோர்க்கில் வசிக்கும் வீடு கிழக்கு நதியைப் பார்த்தவாறு நிற்கிறது.

இலங்கையில், என் இளமைப் பருவத்தில் நான் கற்றுக்கொண்ட இன்னொரு முக்கியமான விடயத்தையும் என்னுடைய வாழ் நாள் முழுவதும் நான் கடைப்பிடிக்கிறேன். குடும்ப உறவுகளோடும் நண்பர்களோடும் கூடி இசைந்து வாழ்வதில் எனக்கொரு போதையே உண்டு. என்னைச் சூழவர இருப்பவர்களை மகிழ்விக்கவும் உற்சாகப்படுத்தவும் என்னால் முடிந்த எல்லாவற்றையுமே செய்வேன். எனது குடும்பத்தினரோடும் நண்பர்களோடும் கரீபியன் தீவுகளில் விடுமுறையைக் கழிப்பதற்கு அடிக்கடி ஏற்பாடுகளைச் செய்வேன். வாரயிறுதி நாட்களில் எனது வீடு நண்பர்களினாலும் அவர்களது குழந்தைகளினாலும் குதூகலத்தோடு நிரம்பியிருக்கும்.

இலங்கையில், பருவமழைக் காலத்தில் குழந்தைகள் நாங்கள் மழையில் நனைந்து திளைப்போம். பொதுவாகத் தாய்மார்கள் குழந்தைகள் மழையில் நனைவதைத் தடுப்பார்கள். ஆனால், எங்களது தாயார் மழைக்குள் விளையாடுமாறு எங்களை உற்சாக மூட்டுவார். நாங்கள் மழையில் ஆசைதீர நீராடிவிட்டு வீட்டுக்குள் நுழையும்போது, நாங்கள் குளிப்பதற்கு வேண்டிய வெந்நீரோடு அம்மா தயாராகயிருப்பார்.

எனது தாயார் பாரம்பரியத் தமிழ்க் கலாசாரத்தில் பற்றுக் கொண்டிருந்தாலும், அவரிடம் தாராளவாத எண்ணமும் சுதந்திர உணர்ச்சியுமிருந்தன. அவர் இரவு நேரங்களில், நமது மூதாதையர்கள் குறித்த கதைகளையும் சமயப் புராணங்களையும் பண்டைய வரலாறுகளையும் எங்களுக்குப் போதிப்பார். அவை நேர்மை, துணிவு, மனவுறுதி போன்றவற்றை எங்களுக்குக் கற்பித்தன. அவர் கூறியவற்றில் எனக்கு மிகவும் பிடித்தமானது ‘வீரத்தாய்’ என்ற கதையாகும்.

அந்தக் கதையில் ஒரு தாய் தன்னுடைய ஒரே மகன் போர்க்களத்தில் அம்பு தைத்து இறந்துவிட்டான் என்று கேள்விப்படுகிறாள். மகனுடைய மார்பிலா, முதுகிலா அம்பு தைத்தது என்ற கேள்வியோடு அவள் போர்க்களத்திற்கு ஓடிப்போகிறாள். என் மகனின் முதுகில் அம்பு தைத்திருந்தால் அவனுக்குப் பாலூட்டிய மார்பை அறுத்தெறிவேன் என்று சபதமேற்கிறாள். ஆனால், போர்க்களத்தில் மகன் புறமுதுகிடாமல் மார்பில் அம்பு தைத்தே மாண்டிருப்பது கண்டு பெரிதும் உவகையடைகிறாள்.

இந்தக் கதையை முதலில் கேட்டபோது, ஒரு தாய் தன்னுடைய ஒரே மகன் இறந்து கிடப்பதைப் பார்த்து எப்படி மகிழ்ச்சியடைய முடியும் என்ற வியப்பே எனக்கு ஏற்பட்டது. எனது தாயார் இந்தக் கதையில் பொதிந்திருக்கும் நீதியை எனக்குப் பொறுமையாகச் சுட்டிக்காட்டினார். எந்தச் சூழ்நிலையிலும் எவருக்கும் வளைந்து கொடுக்காமை, எந்தத் துன்பத்தையும் மனவுறுதியோடும் மாண்போடும் எதிர்கொள்ளல், துணிச்சல் ஆகியவற்றை இந்தக் கதை நமக்குக் கற்றுத்தருகிறது.

பிள்ளைப் பருவத்திலிருந்து இன்றுவரைக்கும் எனது மனதிலே பசுமையாகப் பதிந்திருக்கும் இன்னொரு கதை வீரபாண்டிய கட்டப்பொம்மனின் கதையாகும். ஒரு சிறிய பாளையக்காரனான கட்டப்பொம்மன், மாபெரும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தை எதிர்த்து நின்று கலகம் செய்தான். ஆங்கிலேயருக்குப்பணிய மறுத்ததால், இறுதியில் புளியமரத்தில் தூக்கிலிடப்பட்டான். அவனுடைய அடிபணியாத குணமும் துணிச்சலும் என்னை இன்றுவரை பிரமிப்பில் ஆழ்த்துகின்றன.

நான் ஒரு சிறந்த மாணவனாகவே பாடசாலையில் விளங்கினேன். எனது

வகுப்பிலுள்ள அதிசிறந்த மூன்று மாணவர்களுள் ஒருவனாக எப்போதுமே இருந்தேன். பாடசாலையில் வகுப்புகள் மொழிவாரியாகப் பிரிக்கப்பட்டிருந்தன. நான் தமிழ் மாணவர்களுக்கான வகுப்பில் இருந்தேன். அந்த வகுப்பில் ஏறத்தாழ முப்பது மாணவர்கள் இருந்தார்கள். சிங்கள மாணவர்களுக்கும் ஆங்கிலம் பேசும் மாணவர்களுக்கும் தனித்தனி வகுப்புகள் இருந்தன.

பாடசாலையில், இடைவேளைக்காக ஆவலோடு காத்திருப்போம். இடைவேளைக்கான மணி ஒலித்ததும் நான் விளையாட்டு மைதானத்தை நோக்கித் தலைதெறிக்க ஓடுவேன். நான் கிரிக்கெட் விளையாட்டை நேசித்தாலும், மல்யுத்தத்தையே அதிகம் விரும்பினேன். அதற்கு ஏற்றவாறு தமிழ் வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களை விடவும் நானே உயரமான, பருமனான உடல்வாகு கொண்டவனாக இருந்தேன். மைதானத்தில் தமிழ் வகுப்பு மாணவர்களோடு சிங்கள, ஆங்கில வகுப்பு மாணவர்களும் விளையாட்டுகளில் இணைந்துகொள்வார்கள்.



புனித. தோமையார் பாடசாலை - கொழும்பு

Image Source - www.facebook.com/STPSSL

மல்யுத்தப் போட்டிக்காக ஒரே உயரமும், பருமனும் கொண்ட மாணவர்களை ஒவ்வொரு அணிக்கும் பிரித்துக்கொள்வோம். மணற்புழுதியில் ஒரு வட்டத்தை உருவாக்கிக் களத்தைத் தயார் செய்ததும், மல்யுத்தம் கோலாகலமாக ஆரம்பமாகும். இந்தப் போட்டிக்குத் திட்டவட்டமான விதிகள் இருந்தன. பிறாண்டுவது, பற்களால் கடிப்பது, எல்லைக்கோடு கடந்தவனோடு மல்யுத்தம் செய்வது என்பன தடைசெய்யப்பட்டிருந்தன. போட்டியாளர்கள் சரிநிகராக இருக்க வேண்டும், நேர்மையான முறையில் சண்டை செய்ய வேண்டும், விதிகளைத் தெளிவாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதையெல்லாம் சிறுவயதிலேயே நான் கற்றுக்கொண்டேன்.

வானொலி கேட்பதும் அப்போது எங்களுடைய முக்கியமான பொழுதுபோக்காக இருந்தது. ஆங்கிலப் பாடல்கள், பைலாப்பாடல்கள், தென்னிந்தியத் தமிழ்ப் பாடல்கள் போன்றவை எனது பெற்றோரால் விரும்பிக் கேட்கப்படும். நானும் அந்தப் பாடல்களிடம் இயல்பாகவே ஈர்க்கப்பட்டேன். வானொலியில் கிரிக்கெட் வர்ணனை ஒலிபரப்பாகும்போது, நாங்கள் பரபரப்பாகிவிடுவோம். துடுப்பாட்டக்காரரின் துணிவு, பந்து வீசுபவரின் தந்திரோபாயங்கள், எடுக்கப்படும் ஓட்டங்கள் என்று வர்ணனையாளரின் கம்பீரமான குரல் சொல்லச் சொல்ல, வெற்றி எந்தப் பக்கம் என்ற மயிர்க்கூச் செறியும் பதைபதைப்பு எங்களைத் தொற்றிக்கொள்ளும். கிரிக்கெட்டில் டெஸ்ட் போட்டிகள்

ஐந்து நாட்களுக்கு நடைபெறும். அப்போதெல்லாம் நான் மற்ற வேலைகளைக் கூடியவரை ஒதுக்கிவிட்டு, வானொலிக்குப் பக்கத்திலேயே இருந்து கொள்வேன்.

அநேகமான இலங்கையர்களும் பிற தெற்காசிய நாட்டு மக்களைப் போலவே கிரிக்கெட் விளையாட்டின் தீவிர அபிமானிகள். கிரிக்கெட் மெதுவாக நடைபெறும் விளையாட்டு என்று அமெரிக்கர்கள் சொல்வதுண்டு. ஆனால், கிரிக்கெட்டை நன்றாக அறிந்தவர்களுக்கு அந்த விளையாட்டு மானிட வாழ்க்கையையே பிரதிபலிப்பதாகத் தோன்றும். கிரிக்கெட்டி விளையாட்டின் அமைதியும் அர்த்தமும் கொண்ட ‘சந்தம்’ வாழ்க்கையை நடத்துவதற்கும் தேவையானது. கிரிக்கெட்டைப் புரிந்து கொள்வதன் மூலம் வாழ்க்கையைப் புரிந்து கொள்ளலாம் என்று கூடச் சொல்லலாம்.

துரதிர்ஷ்டவசமாக, பிள்ளைப்பராயம் நீடித்து நிலைப்பதில்லை. என்னுடைய அமைதியான வாழ்வு சடுதியாக முடிவுக்கு வந்தது. என்னுடைய பதினோராவது வயதில், நான் எனது குடும்பத்தைப் பிரிந்து செல்ல நேரிட்டது. இந்தியாவிலுள்ள ‘ஏற்காடு மாண்ட்ஃபோர்ட் விடுதிப் பாடசாலை’க்கு என்னை அனுப்பத் தகப்பனார் தீர்மானித்தார். நான் சிறந்த பள்ளியில் ஆங்கில மொழிவழியில் படிக்க வேண்டுமென அவர் விரும்பினார். எனது தகப்பனாருடைய தீர்மானம் தீர்க்கதரிசனம் நிறைந்ததாக இருந்தது.

மூன்று வருடங்களுக்குப் பின்னர், அதாவது, 1972 ஆம் ஆண்டில், தந்தையார் பிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சிங்கப்பூர் அலுவலகத்திற்குச் சென்றார். குடும்பமும் அவருடன் குடிபெயர்ந்தது. எனது தகப்பனாருக்கு சிங்கர் நிறுவனத்தில் மேலும் மேலும் பொறுப்பான பதவிகள் வழங்கப்பட, எனது குடும்பம் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை அமெரிக்கா, இந்தியா, தாய்லாந்து, மீண்டும் சிங்கப்பூர் என வெவ்வேறு நாடுகளுக்குக் குடிபெயர்ந்தது.

நானோ இந்தியாவில் தனிமையில் உழன்றேன். ஆரம்பத்திலிருந்தே விடுதிப் பாடசாலை எனக்குப் பிடிக்கவில்லை. பழைய சம்பவங்களையும் வீட்டு நினைவுகளையும் மனதில் மீட்டியவாறே காலத்தைக் கடத்தினேன். எனது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரைத் தேடி என்னுடைய குழந்தை உள்ளம் ஏங்கியது. இலங்கை உணவையும் இசையையும் கடற்கரையையும் என் மனம் நாடியது.




யாழ்ப்பாண வறுத்த மிளகாய்த்தூளில் சமைக்கப்பட்ட கோழி இறைச்சிக்கறியும் என் வீட்டு வளவில் கிடைத்த வாசனையான புளிப்புப் பழங்களும் அலையடிக்கும் நீலக்கடலும் இங்கில்லை. இசையைக் கேட்காமலிருப்பதும் சோர்வையளித்தது. விடுதியில் இசைக்கு அனுமதியில்லை. உற்சாகமற்ற விடுதி வாழ்வைச் சகித்துக் கொள்ளலாம்தான். ஆனால், அங்கிருந்த மிதமிஞ்சிய விதிகளும் கடுமையான

கண்காணிப்பும் எனது சுதந்திரத்தைப் பறித்துவிட்டதாகவே உணர்ந்தேன்.

புதிய வாழ்க்கையைச் சமாளிக்கவும் சகிக்கவும் எனக்குள்ளேயே போராடிக்கொண்டிருந்தேன். பிரிவுத்துயர், தனிமை, விடுதிப் பாடசாலையின் கடினமான வாழ்க்கை குறித்தெல்லாம் நான் ஒருபோதுமே பெற்றோரிடம் முறையிடவில்லை. ஆனால், எனது தாயார் என் துயரங்களையும் சிரமங்களையும் அறிந்திருந்தார். ஏனெனில், விடுமுறைகளின் முடிவில் நான் கொழும்பிலிருந்து இந்தியாவுக்குப் புறப்பட ஆயத்தமாகும்போது, அம்மா நீண்ட நேரம் எனக்குப் புத்திமதிகள் சொல்வார். தனது பிள்ளைகளில் நான் மாத்திரமே வருகின்ற சவால்கள் எல்லாவற்றையும் சமாளிக்ககூடிய ஆற்றல் கொண்டவன் என்பது தனது நம்பிக்கை என்று கூறுவார். ஒவ்வொருவருடைய வாழ்விலும் சவாலான காலங்கள் ஏற்படுகின்றன. நான் வெறும் பதினொரு வயதிலே விடுதிப் பாடசாலைக்கு சென்றதும், அங்கே என்னை நானே காப்பாற்றிக்கொள்ளப் பயிற்சி பெற்றதும் அப்படியானதொரு காலமாகும். என் குடும்பத்தை விட்டு இன்னும் தொலைவுக்கு என்னை இழுத்துச் செல்லக் காலம் காத்திருந்தது. புலம்பெயர்ந்த அநேக உத்தியோகத்தர்களது குடும்பங்களில் நடப்பது போலவே, நானும் இங்கிலாந்திலுள்ள விடுதியுடன்கூடிய உயர்நிலைப்பள்ளிக்கு அனுப்பப்பட்டேன். கல்வியையே மூலதனமாகக் கொள்ளும் இலங்கை மக்கள் இங்கிலாந்தில் விடுதிப் பாடசாலைக் கல்வியைப் பெரும்பேறாகக் கருதினர். இதன் விளைவாக எனது சிறு பராயத்து வாழ்க்கை இந்தியாவிலும் இங்கிலாந்திலுமுள்ள விடுதிப் பாடசாலைகளில் கழிந்தன. நான் விடுதிப் பாடசாலைகளில் இருந்த காலம் முழுவதுமே எனது தாயார், அவர் உலகின் எந்தப் பாகத்தில் இருந்தாலும், ஒவ்வொரு வாரமும் எனக்குக் கடிதம் எழுதுவார். அவருடைய வற்றாத அன்பு எனக்குத் தோன்றாத் துணையாக நின்றது.

இங்கிலாந்தில் உயர்நிலைப் பள்ளியில் கல்வியை நிறைவு செய்து கொண்டு, சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தேன். விடுதிப் பாடசாலையின் அன்றாடக் கட்டுப்பாடுகளும் கெடுபிடிகளும் இல்லாத, பரந்து விரிந்து கிடந்த பல்கலைக்கழகச் சூழல் எனக்குச் சுதந்திரத்தையும் புத்துணர்ச்சியையும் மகிழ்வையும் அளித்தது. பல்கலைக்கழக வாழ்க்கையை நான் முழுவதுமாகக் கொண்டாடி இரசித்தேன். எனினும், என்னைச் சுய கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளவும் கற்றுக் கொண்டேன். 1970 களின் நடுப்பகுதியில் சசெக்ஸ் பல்கலைக்கழகம் இடதுசாரிக் கருத்தியல்களைக் கொண்ட பேராசிரியர்களால் நிரம்பியிருந்ததுடன் ‘லிபரல்’ சிந்தனை கொண்ட சர்வதேச மாணவர்களின் கூடாரமாகவுமிருந்தது.

உயர்பள்ளியைப் போலவே, பல்கலைக்கழகத்திலும் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சிறந்து விளங்கினேன். பொறியியல் பட்டம் பெறுவதற்காகப் படித்தேன். ஆனால், எனக்குப் பொறியியலில் பெரிய ஆர்வம் இல்லை என்பதை விரைவிலேயே உணர்ந்து கொண்டேன். அதில் படைப்பூக்கச் சிந்தனைகளுக்கு இடமில்லாதிருந்தது. பொறியியல் படிப்புடன் ‘செய்பணி ஆய்வியல்’ என்ற பாடத்தை இரண்டாம் நிலைப் பாடமாகச் சேர்த்துக்கொண்டேன். அந்தப் பாடமானது உலகளாவிய வணிகப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குக் கணக்கியலை உபயோகிக்கும் விஞ்ஞானமாகும்.

நான் என்னுடைய சக மாணவர்களோடு இணைந்து செயற்படுவதிலும் வாழ்வதிலிலும் பல்கலைக்கழகத்திற்கே முன்னுதாரணமாக இருந்தேன். அந்தப் பல்கலைக்கழகத்தில் கற்றுக் கொண்டிருந்த மாணவர்கள் வெவ்வேறு இனங்களையும் தேசங்களையும் சேர்ந்தவர்கள். பெருந்தொகையான இலங்கை மாணவர்களும் அங்கிருந்தார்கள். அவர்களும் என்னைப் போன்ற குடும்பப் பின்னணியைக் கொண்டவர்களே. அவர்களில் சிலர் இன்று வரை



சசெக்ஸ் பல்கலைக்கழகம்

Image Source - www.sussex.ac.uk

எனது நண்பர்களாக இருக்கிறார்கள். விடுதிப் பாடசாலைகளைப் போன்று மணி ஒலித்தால் இயங்க வேண்டிய அவசியம் இங்கிருக்கவில்லை. விருப்பம் போலத் தூங்கிவிட்டு, விரிவுரைகள் நடக்கும் நேரத்திற்குச் சற்றுமுன் தான் படுக்கையிலிருந்து எழுவேன். என்னுடைய மாலை நேரத்தின் பெரும் பகுதியை உடற்பயிற்சிக் கூடத்திலும் விளையாட்டுக்களிலும் கழித்தேன்.

பட்மின்டன், ஸ்குவாஷ், டென்னிஸ் ஆகியவையும் எனக்கு விருப்பமான விளையாட்டுகளானாலும், டேபிள் டென்னிஸ் விளையாட்டிலேயே நான் அதிக நேரத்தைச் செலவழித்தேன். குறிப்பாக, அந்த விளையாட்டின் ஒற்றையர் ஆட்டத்திற்குப் பரம விசிறியாக இருந்தேன். பல்கலைக்கழகத்தின் டேபிள் டென்னிஸ் அணியிலும் சீக்கிரமே இடம் பிடித்தேன். நான்கு வீரர்களைக்கொண்ட எமது அணி பிரிட்டிஷ் பல்கலைக்கழகங்களுக்கு இடையே நடக்கும் சுற்றுப்போட்டிகளில் எப்போதுமே 'சம்பியன்' பட்டத்தை வென்றது.

பல்கலைக்கழக வளாகத்தைச் சூழ ஏழெட்டு மதுச்சாலைகள் இருந்தன. மாலை மயங்கியதும் நாங்கள் மதுச்சாலை ஒன்றுக்குள் நுழைவோம். அங்கே மணிக்கணக்காக உட்கார்ந்திருந்து பல்கலைக்கழக நடப்புகள், அரசியல், விளையாட்டு, உலக நடப்புகள் போன்றவற்றைப் பற்றிக் கலந்துரையாடுவோம். ஆழமான தத்துவங்களில் தொடங்கி கேலி, கிண்டல் வரை வானத்திற்குக் கீழிருந்த எல்லாவற்றைப் பற்றியும் பேசித் தீர்த்தோம். சில சமயங்களில் அதையும் தாண்டிச் சென்றோம்.

1970 களின் பிற்பகுதியில் இங்கிலாந்தில், விவாதங்களிலும் கலந்துரையாடல்களிலும் சில விடயங்கள் முக்கிய இடத்தைப் பெற்றன. சமபாலுறவாளர்களின் உரிமைகளுக்காகப் போராடிய இயக்கங்கள் வளர்ச்சிப்போக்கில் இருந்தன. அதேபோன்று, தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கைக்குக் கடுமையான சவால்கள்

1980 இல் நான் சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் பட்டதாரியான போது, இலங்கையில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் கடுமையான முரண்பாடுகள் ஏற்படும் அறிகுறிகள் காணப்பட்டன. இலங்கைக்கு திரும்புவதும், அங்கு பொறியியலாளராகப் பணியாற்றுவதும் எனது திட்டங்கள் அல்ல. எனக்கு வணிகத்தில் ஆர்வமிருந்தது.

எழுந்துகொண்டிருந்தன. வியாழன், வெள்ளி இரவுகளில் நான் வளாகத்தின் இசை நடன அரங்காகிய 'கிரிப்ட்' மண்டபத்தில் தவறாமல் இருப்பேன். இசையும் நடனமும் இதயங்களை இணைக்கும் பட்டு நூல்களாக இருந்தன. நாங்கள் காதல் வயப்பட்டோம், காதலில் வெற்றி பெற்றோம், காதலில் தோல்வியுற்றோம். நான் பரவசத்தின் உச்சத்தில் இருந்தேன்.

சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் சுதந்திரமும் மகிழ்ச்சியும் இருந்த போதிலும், இங்கிலாந்தில் நான் இனவெறியையும் எதிர்கொள்ள நேரிட்டது. 1970 களில் இங்கிலாந்து கடினமான காலத்திற்கூடாகச் சென்றுகொண்டிருந்தது. சம்பள உயர்வின்மை, பாரிய வேலையின்மை நெருக்கடி போன்றவற்றால் நாடு தத்தளித்தது. தெற்காசியாவிலிருந்து வந்த குடியேற்றத் தொழிலாளர்களே இந்த நிலைமைக்குக் காரணம் என்று கணிசமான ஆங்கிலேயத் தொழிலாளர்கள் கருதினர். இந்த அதிருப்தி உணர்ச்சியைத் தீவிர வலதுசாரிகளான தேசிய முன்னணிக் கட்சியினர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தினார்கள். அவர்கள் மேடைகள் தோறும் "தெற்காசியர்கள் இங்கிலாந்திலிருந்து வெளியேற்றப்படல் வேண்டும்" என்று கூச்சலிட்டார்கள். நவீன நாஸி மொட்டைத் தலையர்களின் குழுக்கள் தெருக்களில் கட்டற்றுத் திரிந்து, தெற்காசிய மக்களைப் பயமுறுத்தியும் தாக்கியும் அட்டகாசம் செய்தன.

நான் பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டு மாணவனாக இருந்தபோது, இலண்டன் நகரத்தில் வாழ்ந்துகொண்டிருந்த எனது மாமாவைச் சந்திக்கச் சென்றேன். புலம்பெயர்ந்த மக்கள் அதிகமாக வசித்த பகுதியில்தான் மாமாவின் தங்குமிடம் இருந்தது. நானும் மாமாவும் தெருவில் நடந்து சென்றபோது, நிற வெறியர்களான ஒரு மொட்டையர் குழுவினால் பலாத்காரமாக வீதியிலிருந்து தள்ளி விடப்பட்டோம்.

நாங்களும் விட்டுக்கொடுக்கவில்லை. மொட்டையர் குழுவைக் கடுமையாகத் திருப்பித் தாக்கினோம். ஆனாலும், அவர்களுடைய தொகை அதிகமாக இருந்ததால், அதிகமாக அடிகளைப் பெற்றுக் கொண்டோம். அந்தத் தெருவில் வசித்த பாகிஸ்தானியர்களும் கடை நடத்திக்கொண்டிருந்த இந்தியர்களும் எமக்கு உதவி செய்ய விரைந்து வந்தபோது, மொட்டையர்கள் ஓடிவிட்டார்கள். இந்த மொட்டையர் கும்பல் அடிக்கடிவந்து தம்மைத் துன்புறுத்துவதாகவும் தமது கடைகளிலிருந்து திருடுவதாகவும் இந்தியக் கடைக்காரர் ஒருவர் சொன்னார்.

நான் இலங்கையில் சிறுவனாக இருந்தபோது, என்னிலும் சில வயதுகள் அதிகமான ஒருவன் எங்களது தெருவால் போய்வரும் சிறார்களை இரக்கமேயின்றி அடித்துதைத்துத் தொந்தரவு செய்வான். ஒருநாள் அவன் என்னை அடிக்க வந்தபோது, நான் எனது காற்சட்டைப் பைக்குள் தயாராக வைத்திருந்த மிளகாய்த்தூளை எடுத்து அவனுடைய கண்களில் விட்டெறிந்து, அவனை அழப் பண்ணினேன். அந்த எரிச்சலான சம்பவத்திற்குப் பிறகு அவன் சிறார்களோடு சேட்டை செய்வதை நிறுத்திவிட்டான். பல வருடங்களுக்குப் பின்னர், இலண்டனில் எனது

காற்சட்டைப் பைக்குள் மிளகாய்த்தூளை மொட்டையர் குழுவிடமிருந்து என்னைப் பாதுகாப்பதற்காகக் கொண்டு செல்லத் தொடங்கினேன். எனினும், அதனை உபயோகிக்க வேண்டிய சூழல் ஒரு போதும் ஏற்படவில்லை. ஆலோசனையைப் பின்பற்றி வருகின்றேன்.

*1980* இல் நான் சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் பட்டதாரியான போது, இலங்கையில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் கடுமையான முரண்பாடுகள் ஏற்படும் அறிகுறிகள் காணப்பட்டன. இலங்கைக்கு திரும்புவதும், அங்கு பொறியியலாளராகப் பணியாற்றுவதும் எனது திட்டங்கள் அல்ல. எனக்கு வணிகத்தில் ஆர்வமிருந்தது. அமெரிக்காவில் எம்.பி.ஏ படிப்பதற்காக விண்ணப்பித்தேன். பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தின் 'வோற்றன் வணிக மேலாண்மைப் பள்ளி'யில் எம்.பி.ஏ. படிப்பதற்கு இருக்கை கிடைத்தது.

துறை எதுவென்று கண்டு கொண்டேன். சசெக்ஸ் பல்கலைக்கழகத்தைப் போலன்றி, இங்கே மாணவர்கள் படிப்பில் தீவிரமான சிரத்தையுடன் இருந்தார்கள். பள்ளியில் நான் உற்சாகத்துடன் முன்னேறிச் சென்றேன்.

வோற்றன் பள்ளியில் என்னோடு பயின்றவர்களில், முப்பதிற்கும் அதிகமான சகாக்களுடன் நான் ஒரு தசாப்த காலத்திற்கும் மேலாக நெருங்கிய தொடர்பைப் பேணிவந்தேன். கலியன் நிறுவனத்தை நான் ஆரம்பித்தபோது, நம்பத்தகுந்த நிர்வாகி ஒருவரைத் தேடினேன். வோற்றன் பள்ளியில் எனது உடன் மாணவராக இருந்த ஒருவரை அந்தப் பதவியில் இருத்தினேன். அவரைத் தவிர, என்னுடைய உடன் மாணவர்கள் மூவரை கலியனில் பதவிகளில் அமர்த்தினேன். இவர்கள் முதுநிலை நிதி மேலாளர்களாகப் பணியாற்றினார்கள். எனது வோற்றன் பள்ளிச் சகாக்கள் தலைமை தாங்கிய இரண்டு நிதி நிறுவனங்களைத் தொடக்குவதற்கும் முதலீடு செய்துள்ளேன். வேறுசில வோற்றன் பள்ளிச் சகாக்களின் 'ரியல் எஸ்டேட்' முதலீட்டு நிறுவனங்களிலும் முதலீடு செய்துள்ளேன். வோற்றன் பள்ளித் தொடர்புகள் எனக்கு மிகவும் முக்கியமானவையாகும்.

1970 களின் பிற்பகுதியில் இங்கிலாந்தில், விவாதங்களிலும் கலந்துரையாடல்களிலும் சில விடயங்கள் முக்கிய இடத்தைப் பெற்றன. சமபாலுறவாளர்களின் உரிமைகளுக்காகப் போராடிய இயக்கங்கள் வளர்ச்சிப்போக்கில் இருந்தன. அதேபோன்று, தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கைக்குக் கடுமையான சவால்கள் எழுந்துகொண்டிருந்தன. வியாழன், வெள்ளி இரவுகளில் நான் வளாகத்தின் இசை நடன அரங்காகிய 'கிரிப்ட்' மண்டபத்தில் தவறாமல் இருப்பேன்.

வோற்றன் பள்ளியில் நான் படித்த காலத்தை எனது பொற்காலம் என்றே சொல்லலாம். அங்கிருந்த பேராசிரியர்கள் மிகச் சிறந்தவர்கள். அதிபுத்திசாலிகளான மாணவர்கள் வெவ்வேறு சுவாரஸ்யமான பின்னணிகளில் இருந்து வந்தவர்கள். பாடத்திட்டம் சவால் விடுவதாகவும், எனக்கு மிகவும் பிடித்ததாகவுமிருந்தது. பள்ளியில் மிகச் சிறந்த மாணவனாக இருந்தேன். எனக்கு நிதியியலில் பேரார்வம் ஏற்பட்டது. குறிப்பாக, சர்வதேச நிதி முதலீடுகள் குறித்துக் கற்பதில் எனக்குப் பெரும் காதலே ஏற்பட்டது. எனது ஆர்வத்திற்குரிய

*1983* ஆம் ஆண்டு, மே மாதத்தில் நான் எம்.பி.ஏ பட்டதாரியானேன். சேஸ் மான்ஹட்டன் வங்கியில் எனக்கு ஊதியத்துடன் கூடிய ஒன்பது மாதப் பயிற்சிக்குப் பின்னான முழுநேர வேலை என்பது உறுதியாகியிருந்தது. அந்த வருடத்தின் இலையுதிர்க் காலத்தில் பயிற்சி தொடங்கவிருந்தது. இடையிலிருந்த நீண்ட கோடை விடுமுறையில் இலங்கைக்குத் திரும்பினேன்.

ஜூலை மாதத்தில் இலங்கையில் நிகழ்ந்தேறிய இனரீதியான வன்செயல்கள் மிகக் கொடூரமானவையாக இருந்தன.

அப்போது, நான் கொழும்பில் எனது மாமாவின் வீட்டில் தங்கியிருந்தேன். சிங்கள இனவெறி பிடித்த காடையர் கூட்டங்கள் தமிழர்களின் வீடுகளைத் தேடிச் சென்று தாக்குவதிலும் கொல்வதிலும் கொள்ளையடிப்பதிலும் எரிப்பதிலும் வெறியோடு ஈடுபட்டிருந்தன. எனது மாமியும் மச்சாள்களும் எமது அயலில் வாழ்ந்துவந்த சிங்களக் குடும்பமொன்றின் வீட்டில் தஞ்சமடைந்து ஒளிந்துகொண்டார்கள். நானும் எனது மாமாவும் என்னுடைய வயதையொத்த மைத்துனர்களும் ஒளிந்து கொள்வதற்கு மறைவிடம் தேடாமல், எது வந்தாலும் சந்தித்துவிடுவது என்ற உறுதியுடன், எங்களது வீட்டைப் பாதுகாப்பதற்காகக் கத்திகளுடனும் தடிகளுடனும் வீட்டில் தயாராகக் காத்திருந்தோம். அந்த வீதியில் இருந்த பல தமிழர்களுடைய வீடுகளைக் காடையர் கும்பல் தாக்கியபோதும், எங்களது வீட்டுக்கு அந்தக் காடையர் கும்பல் வரவேயில்லை. அந்த மாதத்தில் நிகழ்ந்த இன வன்செயல்களில் இரண்டாயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். இந்தக் கொடுமையான நிகழ்வே நாட்டில் முனைப்புடன் போர் தொடங்குவதற்கு ஆரம்பப் புள்ளியாக அமைந்தது.

ஜுலை மாதத்தின் இறுதியில் நான் இலங்கையிலிருந்து வெளியேறினேன். எனது சொந்த நாட்டிலேயே எனக்குப் பாதுகாப்பு இல்லை என்பதைக் கண்களால் கண்டு, தெளிவாக உணர்ந்துகொண்டேன். நான் அமெரிக்காவிற்குத் திரும்பியதும் குடியுரிமைக்கு விண்ணப்பித்தேன். அடுத்த பத்து வருடங்கள் நான் இலங்கைக்குப் போகவேயில்லை. எனது பிள்ளைப்பருவ வாழ்க்கையை இனிமையாக்கிய இலங்கைத் தீவின் மீது நான் கொண்ட பற்றும் பாசமும் எப்போதுமே என்னோடு இருக்கும். ஆனால், எனது தாய்நாட்டிலேயே எனக்குப் பாதுகாப்பு இல்லாதிருந்தபோது, அமெரிக்காவே என்னை இருகரம் நீட்டி வரவேற்றது. எனது எஞ்சிய வாழ்க்கையை நியூயோர்க்கில் வாழ்வதற்குத் தீர்மானித்தேன். இதற்காக நான் அமெரிக்காவுக்கு மிகவும் நன்றியுடையவனாக இருக்கிறேன். அதேவேளையில், நான் அமெரிக்காவில் எப்போதுமே ஓர் அந்நியன்தான் என்பதையும் என்னுடைய உள்மனதால் உணர்ந்திருக்கிறேன். நியூயோர்க் மாநகரம் தன்னிடம் வந்த குடியேறிகளுக்கு ஆண்டாண்டு காலமாகவே வழங்கி வந்த சுதந்திரத்தை எனக்கும் வழங்கியது. நான் நியூயோர்கில் வெறும் கைகளுடன் எனது வாழ்க்கையைத் தொடங்கினேன். கடுமையான உழைப்பு, எக்காலத்திலும் சோர்வின்மை, பாதைகளிலே வரும் தடைகளைத்தாண்டி முன் செல்லல் என்பதுவே எனது வாழ்க்கைத் தத்துவமாகும். நியூயோர்க் நகரம் எனது ஆற்றலுக்கும் கடின உழைப்பிற்கும் ஏற்ற களமாக இருந்தது. எல்லையற்ற பாதைகள் என் முன்னே திறந்திருந்தன. எனது தாயகமான இலங்கையில் புரையோடிக் கிடக்கும் இன ரீதியான அரசியல் முரண்பாடுகளின் மீது எனக்குக் கடுமையான அதிருப்தி இருந்தாலும், நான் இலங்கை மீது பற்றுக் கொண்டுள்ளேன். இலங்கையின் இன, மத முரண்கள் மற்றும் அவை எவ்வாறு ஒவ்வொரு தலைமுறையிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பது பற்றியெல்லாம் ஏராளமான நூல்கள் எழுதப்பட்டுவிட்டன. இவற்றைக் குறித்து நான் ஒரேயொரு கருத்தை மட்டும் கூற விரும்புகின்றேன். இனரீதியான அரசியலும், மதரீதியான அரசியலும் மக்களிடையே இரண்டு சக்திகளினால் தூண்டிவிடப்படுகின்றன. ஒன்று அறியாமை, மற்றையது வறுமை.

பல வருடங்களாகவே நான் இலங்கையில் ஆதரவற்றோர் பாடசாலைகளுக்கும், மருத்துவத்துறை வளர்ச்சிக்கும் நிதி வழங்கி ஆதரவளித்து வருகிறேன். அவற்றில் எனக்குக் கிடைத்த இரண்டு முக்கியமான அனுபவங்களை உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். ஒருமுறை, யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்த ஒரு கிராமத்திற்கு நான் சென்றிருந்தேன். அங்கே, ஒற்றைக் கால் மட்டுமேயுள்ள

குழந்தைகள் கூடி விளையாடிக் கொண்டிருந்தார்கள். கண்ணி வெடிகள் பொதுமக்கள் மீது எவ்வளவு மோசமான பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பதை அங்கே நேரடியாகவே பார்த்தேன். குழந்தைகள் நடமாடுவதற்கும் விளையாடுவதற்கும் பாதுகாப்பான இடமென எதுவுமே இல்லை. யுத்தம் நடந்த பகுதிகளில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளைக் கண்டுபிடிப்பதற்காக அமெரிக்காவிலிருந்து மோப்ப நாய்களை வரவழைப்பதற்கு நான் நிதி வழங்கி ஏற்பாடு செய்தேன். வளர்ச்சி குன்றிய நாடுகளிலிருந்து நான்கு அல்லது ஐந்து மாணவர்கள் அமெரிக்காவுக்கு வந்து படிப்பதற்கு வருடாந்தப் புலமைப்பரிசில்களை உருவாக்கினேன். பல விண்ணப்பங்கள் வந்து சேர்ந்தன. அவற்றை நன்கு ஆராய்ந்து முதலாவது அணியைத் தேர்வு செய்தபோது, இலங்கையைச் சேர்ந்த சிங்கள மாணவரொருவரும் தேர்வானார். புலமைப்பரிசிலை வழங்குவதற்கு அந்த மாணவரின் இனம் எனக்கு ஒரு தடையாகவே இருக்கவில்லை. அவர் அமெரிக்காவுக்கு வந்து, வோற்ரன் பள்ளியில் எம்.பி.ஏ படித்தார். உள்ளகப் பயிற்சியை கலியனில் மேற்கொண்டார். இலங்கையின் மூவினங்களையும் சேர்ந்த இருபத்தைந்து மாணவர்கள் கலியனில் தங்களது உள்ளகப் பயிற்சியைப் பெற்றுள்ளார்கள். இந்தப் புலமைப் பரிசில் திட்டம் இன்றுவரை இயங்கிக் கொண்டிருக்கிறது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் இத்திட்டத்தால் பயனடைந்துள்ளார்கள்.

> பல வருடங்களாகவே நான் இலங்கையில் ஆதரவற்றோர் பாடசாலைகளுக்கும், மருத்துவத்துறை வளர்ச்சிக்கும் நிதி வழங்கி ஆதரவளித்து வருகிறேன். அவற்றில் எனக்குக் கிடைத்த இரண்டு முக்கியமான அனுபவங்களை உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

2004 ஆம் ஆண்டு, இலங்கையின் தென்பகுதியில் எனது குடும்பத்துடன் விடுமுறையைக் கழித்துக்கொண்டிருந்தேன். அப்போது, சுனாமி நிலத்தை விழுங்கி நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மனிதர்களையும் சொத்துக்களையும் வீடுகளையும் அழித்தது. இந்தப் பேரழிவை நான் எனது கண்களால் கண்டேன். என்னுடைய மனம் பேதலித்துக் கலங்கிவிட்டது. கலியன் நிறுவனத்தை மூடிவிட்டு, இலங்கையில் ஒரு தொண்டு நிறுவனத்தை ஆரம்பித்து, சுனாமியால் பாதிக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான மக்களின் புனர்வாழ்வுக்கான நடவடிக்கைகளில் ஈடுபடத் திட்டமிட்டேன். ஆனாலும், எனது குடும்பத்தாரதும் நண்பர்களதும் ஆலோசனை வேறு விதமாக இருந்தது. தொடர்ச்சியாகச் சம்பாதித்துக் கொண்டிருந்தால் மட்டுமே தொடர்ச்சியாகத் தொண்டு செய்ய முடியும் என்று அவர்கள் அறிவுறுத்தியதை ஏற்றுக்கொண்டேன். சுனாமியால் வீடுகளை இழந்து நின்றிருந்த மீனவர்களிடையே இன, மத பேதம் பார்க்காமல் அவர்களுடைய வீடுகளை மீளவும் கட்டிக் கொடுத்தேன். இன்றுவரை நான் இலங்கையில் சுதேசியாகவும் அதேவேளையில் அந்நியனாகவும் இருநிலைகளில் இருப்பதாக உணர்கின்றேன். ஒவ்வொருமுறையும் விமானம் இலங்கையில் இறங்குவதற்காகத் தாழப் பதியும்போது, நான் பிறந்த மண்ணை விமானத்தின் ஜன்னல் வழியாகப் பார்த்துக்கொள்வேன். என்னுடைய மனதில் உணர்ச்சியலைகள் கொந்தளிக்கத் தொடங்கிவிடும். போர் உக்கிரமாக நடைபெற்ற காலத்தில் நான் இலங்கையில் வாழவில்லை. என்னுடைய நாட்டு மக்கள் எத்தகைய இன்னல்களை அனுபவித்தார்கள் என்பது பற்றி எனக்கு நேரடியான அனுபவமோ விளக்கமோ இல்லை. இது என்னை ஓரளவு அந்நியனாக மாற்றியுள்ளது. பிள்ளைப் பருவத்தில் நான் கண்ட இலங்கை என் மனதில் இனிய நினைவாகவும் கனவாகவும் தேங்கிக் கிடக்கிறது.

(தொடரும்)

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக வர்க்க அரசியலை மேவியதாக அடையாள அரசியல் மேலெழுந்து வந்துள்ளது. இனத்தேசியம் மதபேதம் என்பவற்றுக்கு அப்பால் சாதியுணர்வுடன் இணைந்த அடையாள அரசியல் முதன்மை இடம்பெற்றுள்ள இன்றைய சூழலில் எமது சமூக கட்டமைப்பில் வர்க்கமும் சாதியும் பின்னிப்பிணைந்துள்ளன எனும் விடயம் பேசுபொருளாகியுள்ளது. எமது சமூக உருவாக்கம் வர்க்க அடித்தளம் உடையதல்ல சாதிகளின் கட்டமைப்பு சார்ந்து இயங்கும் எமக்கான அரசியல் செல்நெறி வர்க்க அமைப்பின் வரலாற்றுச் செல்நெறிக்குரியதினின்றும் வேறுபட்டது என்ற விடயத்தினை தமிழர் வரலாற்றுத் தொடக்கமாக அமைந்த திணை வாழ்வியலை மையமாக கொண்டு ஆய்வு செய்வதாக 'தமிழ்ப் பண்பாடு: ஊற்றுகளும் ஓட்டங்களும்' என்ற இத்தொடர் அமைகிறது.





**நடேசன் இரவீந்திரன்**


இரவீந்திரன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கலைப்பட்டதாரி. பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே முதுகலைமாணிப்பட்டத்தினையும் 'திருக்குறளின் கல்விச்சிந்தனை' எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் மலையகத்தின் சிறிபாத கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளதுடன் 1995இல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் பணியாற்றியுள்ளார்.

இரவீந்திரன் 18இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் 'பாரதியின் மெய்ஞ்ஞானம்', 'இலங்கையின் சாதியமும் அவற்றிக்கெதிரான போராட்டங்களும்', 'பின்நவீனத்துவமும் அழகியலும்', 'கலாச்சாரம் எதிர் கலாச்சாரம் புதிய கலாச்சாரம்', 'இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும்', 'சாதியமும் சமூக மாற்றங்களும்', 'இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்', 'சாதி தேசம் பண்பாடு' என்பன குறிப்பிடத்தக்கவை.

# தமிழ் பண்பாட்டில் சமரச சன்மார்க்கம்




சோழப் பேரரசின் ஆளுகைக்குட்பட்டிருந்த பிரதேசங்கள்

Image Source - www.geeksforgeeks.org

உலக நாடுகளின் எதிரி சீனா என அடையாளம் காட்டி அனைத்துத் தேசங்களும் அதனை நிராகரிக்க வேண்டும் என்று சொல்லி வந்த ஐக்கிய அமெரிக்கா அண்மையில் மக்கள் சீன ஜனாதிபதியைத் அதனது மண்ணுக்கே வரவேற்று உரையாட வேண்டி இருந்தது. காலனித்துவ ஒடுக்குமுறைக்கு ஆட்பட்டிருந்து 'உலகின் நோய்' என்ற அடையாளத்தை இருபதாம் நூற்றாண்டின் நடுக்கூறு வரை பெற்றிருந்த சீன தேசம் இன்று 'உலகின் முதல் நிலை வல்லரசு' எனும் அந்தஸ்துடன் திகழும் மேலாதிக்கவாத நாட்டுக்கே சவால்விடும் துரித வளர்ச்சியை எட்டியிருப்பதன் பேறானது இந்த மாற்றம்.

விடுதலைத் தேசிய அரசியல் முன்னெடுப்புக்கு உரிய மாஓ சேதுங் சிந்தனையைக் கையேற்று சோசலிச நிர்மாணத்துக்கும் ஆனதாக வளர்த்தெடுத்துப் பிரயோகிப்பதன் வாயிலாக ஏகாதிபத்திய வல்லரசையும் மேவிச்சென்று முந்துகின்ற பொருளாதார விருத்தியை எட்டும் மக்கள் சீனம், தானும் ஒரு வல்லரசாக ஆகிவிடாமல் இருப்பதுடன் ஒடுக்கப்பட்ட தேசங்கள் சுயசார்புப் பொருளாதாரத்தில் முன்னேறும் வகையிலான வழிப்படுத்தலை முன்னெடுத்து வருகிறது. அவ்வாறு சுதந்திர வளர்ச்சியை எட்டத்தக்க தேசங்கள் தமக்கு இடையே பரஸ்பரம் சமத்துவத்தை வென்றெடுப்பதன் வாயிலாகவே இருபத்தோராம் நூற்றாண்டுக்கான உலகச் சோசலிச மாற்றியமைத்தல் சித்திக்க இயலும்.

அத்தகைய மாற்றப்போக்கைத் தடுக்க முனையும் ஐக்கிய அமெரிக்காவின் முயற்சிகள் தவிடுபொடியாகச் சிதறுவதனை உக்ரேனிலும் இஸ்ரேலிலும் மட்டுமன்றி அதனது சொந்த மண்ணிலும் ஐக்கிய அமெரிக்கா உணர்வதன் காரணத்தாலேயே மக்கள் சீன ஜனாதிபதியை வரவேற்றுப் பேச வேண்டிய நிர்ப்பந்தம் பைடனுக்கு. இதுவரை காலமும் இயங்கிவந்த காலனித்துவ மேலாதிக்கவாதம் மரண அடியைச் சந்திக்கும் மாற்றப்போக்குத் துல்லியமாக வெளிப்பட்டு வருவதற்கான ஒரு அறிகுறி இந்த வரவேற்பு நிகழ்வு. இருபதாம் நூற்றாண்டின் நடுக்கூறில் காலனித்துவ நாடுகள் பல நேரடியான ஏகாதிபத்தியப் பிணைப்பைத் தகர்த்து அரைசுதந்திரம் எட்டப்பட்ட போது காலனித்துவ ஒடுக்குமுறையாளர்களுக்குக் கிடைத்த பலமான அடியைக் காட்டிலும் இது பாரதூரமானது. அப்போது முன்னாள் ஏகாதிபத்தியமாக இருந்து பாட்டாளி வர்க்கப் புரட்சி வாயிலாகச் சோசலிசத்தை வரித்துக்கொண்ட சோவியத் ருஷ்யா ஒடுக்கப்பட்ட தேசங்களுக்குத் தலைமைச் சக்தியாக இருந்தது. அதுவரை தீர்மானகரமிக்க மார்க்கமாக இயங்கி வந்த வர்க்க அரசியலைத் தொடர்ந்தும் அதீத முனைப்புடன் செயலுருப்படுத்தி வந்தது சோவியத் யூனியன்; 'விடுதலைத் தேசிய முன்னெடுப்புக்கான' அரசியல் செல்நெறியே தீர்க்கமன பங்குப் பாத்திரம் வகிக்கத் தொடங்கிவிட்டமையைக் கவனம் கொள்ளாமல் செயற்பட்டமையினால் சோவியத் ருஷ்யாவும் வீழ்ச்சியைச் சந்தித்தது. நவகாலனித்துவச் செயலொழுங்குடன் இயங்கிவந்த ஏகாதிபத்தியம் மீண்டும் வலுப்பெற்று முன்னேற இயலுமான சூழலும் வளர்ந்து வந்தது.

ஒடுக்கப்பட்ட தேசங்களை நவகாலனித்துவ அரசியல் பிரயோகம் வாயிலாகப் பெற்ற மேலாதிக்க வாய்ப்புடன் ஐக்கிய அமெரிக்கா



இராஜேந்திர சோழன் போரிடுவதை விளக்கும் சிற்பம்
Image Source - en.wikipedia.org

சுரண்டி வந்த ஏகபோகம் இழக்கப்பட்டு வரும் இன்றைய மாற்றப்போக்கில் முன்னாள் காலனித்துவச் சீனா மட்டும் முன்னிலைக்கு வரவில்லை. சோசலிச முன்னெடுப்புத் தகர்ந்ததைத் தொடர்ந்து ஒட்டாண்டி நிலைக்குத் தள்ளப்பட்டு இருந்த ருஷ்யா மீளெழுச்சி பெற்று ஆளுமையுடன் தனக்கான வர்த்தகத் தொடர்பாடல்களை மேற்கொள்ளத் தொடங்கிவிட்டது. அண்மைக் காலம் வரை வறிய நாடாக இனங்காணப்பட்டு வந்த முன்னாள் காலனித்துவ நாடான இந்தியா பிரத்தியேகமான வரலாற்று - புவியரசியல் காரணிகளால் ஏகாதிபத்தியத் திணைக்கான தலைமைக் கேந்திரமாக மாற்றம்பெற்று வருகிறது. கேந்திர முக்கியத்துவம் மிக்க ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் தலைமைப் பண்பை வெளிப்படுத்தவல்ல வலுமைமிக்க நாடுகள் பலவும் வெளிப்பட்டு வருவதோடு நாடுகளது கூட்டுறவுடன் பிராந்திய அமைப்புகள் உருவாகி மிகுந்த ஆளுமையுடன் செயலாற்றத் தொடங்கி உள்ளன.

பிரித்தானியா, அமெரிக்கா எனுமிரு ஏகாதிபத்திய வல்லரசுகள் இருபதாம் நூற்றாண்டின் முன்பின் என்ற இரு கூறுகளுட்பட 21 ஆம் நூற்றாண்டின் இரு தசாப்தங்கள் வரை ஒற்றை மைய மேலாதிக்கத்தைச் செயற்படுத்தி வந்தது போன்ற வாய்ப்பு இனி எந்தவொரு தனியான வல்லரசுக்கும் சாத்தியப்படப் போவதில்லை. அதிகாரம் பெறத்தக்க பலவேறு வல்லரசுகளில் ஒன்றெனும் தகுதியையே எந்தவொரு மேலாதிக்க நாட்டினாலும் எட்ட வாய்ப்புள்ள வகையில் அரசியல் - சமூக - பொருளாதார - பண்பாட்டு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

உலகளவில் அதிகார மைய நீக்கம் ஏற்பட்டு வரும் இத்தகைய மாற்றப்போக்கை ஏழெட்டு நூற்றாண்டுகளுக்கு முந்திய தமிழகம் தன்னளவில் தரிசித்திருந்தது. மூலதனம் உலகனைத்தையும் வெற்றிகொண்டது போன்றதல்ல நிலப்பிரபுத்துவக் கால கட்டத்துக்கான உச்சம். நிலப்பிரபுத்துவத்தின் இயல்பே பிராந்தியப் பண்புடையது தான். நிலப்பிரபுத்துவ வரலாற்றுக் கட்டத்தின் உலகளவிலான அதியுச்ச விருத்தியின் முதல் நிலைக்கு உரியதாகச் சோழப் பேரரசு திகழ்ந்தது. அதன் தத்துவார்த்த வெளிப்பாடு, உலக மதங்கள் எவற்றிலும் கண்டு காட்டப்பட்ட கடவுளுக்கான வியாபிதங்கள்





Image Source - www.panuval.com

எவற்றை விடவும் சைவ சித்தாந்தத்தின் பதிக் கோட்பாடு அதியுச்சமாக அமைந்துள்ளமை பற்றிப் பார்த்து வந்திருக்கிறோம். சோழப் பேரரசின் இராணுவ வல்லாண்மை கடாரம் வரை (இன்றைய இந்தோனேசியா, மலேசியா) கடற்படையுடன் சென்று யுத்த வெற்றியைப் பெற்ற இராஜேந்திர சோழனின் படையெழுச்சியில் வெளிப்பட்டு இருந்தது.

மருதத் திணை மேலாதிக்கத்தின் வாயிலாக ஒடுக்குமுறை வரலாற்றைத் தொடக்கிய கிமு 3 ஆம் நூற்றாண்டு முதலாக ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகள் முன்னேற்றகரமான படையெடுப்புகளில் அபகரிப்புகளைப் பெற்று அதிகார உச்சங்களைத் தொட்ட நிலவுடமைச் சாதி கிபி 13 ஆம் நூற்றாண்டுகள் வரை பாரதூரமான நெருக்கடிகளைச் சந்தித்ததில்லை.

கிபி 2 ஆம் நூற்றாண்டு நூற்றாண்டு முதல் நான்கு நூற்றாண்டுகள் நிலவுடமைச் சாதியின் மேலாதிக்கம் இழக்கப்பட்ட போதிலும் தனிப் பேரரசுகளுக்கு உரியனவாய் அல்லாத களப்பிரர்கள் எனப்படும் பல நூறு குறுநில மன்னர்களது ஆட்சி நிலவிய அக்காலத்தில், வீரயுக எழுச்சி வாயிலாக ஏற்பட்டிருந்த சமூக உருவாக்கம் தகர்க்கப்படும் செயலொழுங்கு எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. அந்தக் காலத்தில் வணிக நலன் மேலோங்க இடமேற்பட்ட அதேவேளை வீரயுகத்தில் கிழார்கள் என மருதத் திணை மேலாதிக்கத்தின் ஊடாக நிலவுடமையாளர்களாக மாறியவர்கள் வெள்ளாளர் எனும் சாதியாகக் கட்டமைக்கப்படும் விருத்தி தடுக்கப்படவில்லை. வேறு நிலவுடமைச் சாதி எதனையும் ஆதிக்கப் போட்டிக்கு உரியோராக நிலைநிறுத்தவும் இல்லை. விஜயநகரப் பேரரசர் ஆட்சி ஏற்பட்ட பின்னர் பின்னடைவுகளைச் சந்தித்த போது தெலுங்கு நிலப்பிரபுக்களது பிரசன்னம் காரணமாக தனித்த அதிகார மையம் என்ற தகைமையை வெள்ளாளர்கள் இழந்தனர். அதன்போதான சமூக அசைவியக்கங்கள் பற்றிய தெளிவுகள் இன்றைய செல்நெறியைப் புரிந்துகொள்ள உதவ இயலும்!

### நிலப்பிரபுத்துவத் திணைகள் இடையேயான முரண்பாடுகள்

களப்பிரர் ஆட்சியை முடிவுக்கு ஆட்படுத்தி பல்லவர்களும் பாண்டியர்களும் (முறையே வட - தென் தமிழகப் பகுதிகளில்) பேரரசுகளை உருவாக்கிக்கொண்ட ஆரம்பத்தின் போது அவ்விரு பேரரசுகளும் சரி, முன்னதாகக் குறுநிலப் பரப்புகளை ஆட்சி செய்த களப்பிரர்களும் சரி, வணிக நலன் பேணும் அரசியல் முன்னெடுப்புகளை மேற்கொண்டதற்கு அப்பால் வெள்ளாளர்களது நிலவுடமைக்குப் பங்கம் ஏற்படுத்தவோ அவர்களது நிலங்களை அபகரிக்கவோ முற்பட்டார்களில்லை. ஆயினும் அக்காலத்திலேயே (முன்னதாக வீரயுகக் காலம் தொட்டே) வேறொரு 'ஆக்கிரமிப்பு' தமிழகத்தில் தொடக்கம் பெற்று வளர்ந்ததான 'வரலாறு' ஒன்றும் பேசுபொருளாக நிலவி வருகிறது. குறிப்பாக பல்லவ, பாண்டிய பேரரசர்கள் பக்தி இயக்கத் தொடக்குனர்களான நாவுக்கரசராலும் ஞானசம்பந்தராலும் சைவ சமயத்துக்கு மாற்றப்பட்டதில் இருந்து 'ஆரியப் பிராமணர்களது மேலாதிக்கம்' இடம்பெறத் தொடங்கியதாக அந்த 'வரலாற்று வாசிப்பு' அமையும்.

வீரயுகத்ததில் நில ஆக்கிரமிப்பைப் பெற்ற போதிலும் சரி, பின்னதாகப் பக்திப் பேரியக்கத்தில் நிலப்பிரபுத்துவ அதிகாரத்தை வெற்றிகொண்டு முன்னேறிய போதும் சரி மருதத் திணை மேலாதிக்கச் சமூக சக்தியான வெள்ளாளர் தீர்மானகரமான சக்தியாகத் திகழ்ந்து பிராமணர்களை அரவணைப்புடன் நிலக்கொடை அளித்துத் தமக்கான துணைச் சக்தியாக வரித்தவாறு வளர்ந்தனர் என்பதே இயக்கம்பெற்று வந்த வரலாறு என்பதனைப் பார்த்து வந்துள்ளோம். விஜயநகரப் பேரரசர் ஆட்சி ஏற்பட்ட பின்னர் அரவணைக்கும் ஆட்சியுரிமை வெள்ளாளர் கையைவிட்டு நீங்கி வேறு தளத்துக்கு மாறியமையால் வெள்ளாளர் - பிராமணர் முரண் வேறொரு பரிமாணத்தைப் பெற்றது; அதன் பேறாக வெள்ளாளர்களுக்கான சைவசித்தாந்தம் ஆளுமையுடன் வெளிப்பட இயலுமான அளவில் முன்னதாகப் பிராமணர் அப்படியொன்றும் ஆக்கிரமிப்புப் பேராற்றல் பெற்றில்லை என்பது வெள்ளிடை மலை!

அடுத்து வந்த நூற்றாண்டுகள் வெள்ளாளர்களது மேலாதிக்கத்தை மேவிய பல பண்புக்கூறுகள் பிராமண நிலப்பிரபுத்துவத்துக்கு வாய்ப்பளிப்பதாக அமையலாயிற்று. மருதத் திணை மேலாதிக்கத்தைத் தொடர்ந்த வரலாற்றில் தமக்கான ஒடுக்கும் அதிகாரத்தைப் புனித அந்தஸ்தாகக் காட்டுவதன் பொருட்டு சுரண்டலுக்கான கூட்டாளிகளாக ஆக்கப்பட்டவர்கள் வேறு மேலாதிக்க சக்திகளுக்கும் நெருக்கமான நட்பு சக்திகளான பின்னரே அந்தப் பண்பு மாற்றம் சாத்தியப்பட்டது.
அத்தகைய வரலாற்றுக்கட்ட நகர்வின் போதுகூட பிராமணிய எதிர்ப்பைச் சைவசித்தாந்த வெள்ளாளர்கள் வெளிப்படுத்தியதில்லை. பிந்திய வரலாற்று நகர்வில் தமது மேலாதிக்கத் தனியுரிமையை நிராகரித்துப் புதிய நட்பில் கலந்த பிராமண நிலப்பிரபுத்துவ சக்தி (திணை) மட்டுமன்றி அந்தப் புதிய மேலாதிக்கத்துக்கு உரிய தெலுங்கு நிலப்பிரபுக்கள் எனும் மற்றொரு திணையின் போட்டிக்கும் முகங்கொடுத்தாக வேண்டிய நிர்ப்பந்தம் வெள்ளாள நிலப்பிரபுக்கள் எனும் சமூக சக்திக்கு (திணைக்கு) உண்டு!

தெலுங்குப் பெரு நிலப்பிரபுக்களுக்கான முழுமுதல் கடவுளாக சிவன் அன்றி விஷ்ணுவே போற்றப்படுபவர் என்ற வகையில் விஜயநகரப் பேரரசர் காலத்தில் சாத்தியப்பட்ட அவர்களது தமிழக இருப்பின் வாயிலாகச் சிவனது மேலாதிக்கம் கேள்விக்குட்படும் நிலை வளர்ந்தது (வாழ்வியலில் வெள்ளாள நிலப்பிரபுத்துவத் தனி மேலாதிக்கத்தின் போட்டியாளர்கள் உருவாகிவிட்டதற்கான ஆன்மிகத் தளத்தின் பிரதிபலிப்பாக). சிவனுடைய மேலாதிக்கம் தெலுங்கு வைணவர்களது உருவாக்கத்தின் பின்னராக மட்டுமே சவாலுக்கு ஆட்பட்டது என்றில்லை; அவைதிக மதங்களை வீழ்த்துவதில் ஒன்றுபட்டு இயங்கத் தொடங்கிய ஆரம்பத்தில் தமிழர் வழிபாட்டில் இடம்பெற்றிருந்த திருமாலை இணைத்துக்கொண்ட தமிழ் வைணவப் பரப்புரையாளர்களான ஆழ்வார்களே கூட விஷ்ணுவின் மேலாண்மையை வலியுறுத்தும் நிர்ப்பந்தத்தை உணர்ந்து செயற்பட்டிருந்தனர். பக்திப் பேரியக்கத் தொடக்க நிலையில் பல்லவ, பாண்டிய மன்னர்கள் சைவத்துக்கு மாற்றப்பட்டு இருந்தனர்.

பெரு நிலப்பிரபுக்களுக்கான சிவன் இதனூடாக ஆட்சியாளர்களது கடவுளான போது இலக்கியத் தளத்திலேனும் விஷ்ணுவை அரச அந்தஸ்த்துக்கு உயர்த்த வேண்டிய தேவை ஆழ்வார்களுக்கு முன்னால் எழுந்தது. வால்மீகி இராமாயணத்தின் வீர நாயகனான ராமனை விஷ்ணுவின் அவதாரங்களில் ஒரு நிலைக்கு உரிய வழிபாட்டுத் தலைவராக ஆழ்வார்கள் வெளிப்படுத்திக் கொண்டனர் (முன்னதாக வடக்கில் வழிபாட்டுக்கு உரியவராக இராமர் வரவில்லை என்பதனை சுவீரா ஜெய்ஸ்வால் காட்டி இருப்பது குறித்து முன்னர் பார்த்துள்ளோம்). சோழப் பேரரசு சைவ மேலாதிக்கத்தை உலகறிய ஏற்றிப்போற்றிய போது சிவ பக்தனான இராவணனை வதம் செய்தடக்கிய இராமரை அதியுச்ச நிலையில் பாடிப்பரவிய கம்பராமாயணம் தமிழுக்கான பெருங்கொடையாக வெளிப்பட்டது. விஷ்ணுவைத் தத்துவத் தளத்தில் முன்னிறுத்திய இராமானுஜர் சோழப் பேரரசின் எல்லையைக் கடந்து தூர தேசத்துக்குத் தப்பிச்சென்று தஞ்சம் புகுந்ததைப் போலக் கம்பரும் நாடு கடந்துபோக நேர்ந்ததான நாட்டார் கதைகளின் அனைத்து அம்சங்களும் நிராகரிக்கத் தக்கனவல்ல!

சிறிய, பெரிய நிலப்பிரபுத்துவ சக்திகள் இடையேயும் தமிழியல் வரலாற்றுத் தொடர்ச்சிக்கு அப்பாலிருந்து பிரவேசித்த புதிய நிலப்பிரபுத்துவ சக்தியுடனுமான முரண்பாடுகள் ஒரே உற்பத்தி உறவுத் தளத்துக்கு உரியன. சைவ மேலாண்மையானது தனக்குரிய அரச ஆதரவை இழந்த 13 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரான வணிக சக்தியுடனான முரண்பாடும் இன்னொரு வகைப் பரிமாணத்தைப் பெறத் தொடங்கியது. விவசாய எழுச்சிக்கு முன்னரான வணிக விருத்தியைப் பெற்று வணிக - கைத்தொழிற்துறை வளர்ச்சியின் வெளிப்பாடான பண்பாட்டு உருவாக்கம் தமிழர் வரலாற்றுத் தொடர்ச்சிக்கான தனித்துவத்தை கிமு 6 ஆம் நூற்றாண்டில் இருந்து வழங்கி வந்தமை பற்றி முன்னதாகப் பார்த்து வந்துள்ளோம். சைவ மேலாதிக்க உச்சத்துக்குரிய சோழப் பேரரசில் இராஜேந்திர சோழனின் கடாரத்துக்கான கப்பல் படை முன்னெடுப்பும் கூட தமிழ் வணிகர்களது நலன்களை அந்தப் பிராந்தியத்தில் உறுதிப்படுத்துவதற்கானதாகவே அமைந்திருந்தது. அப்போதெல்லாம் சிவனது மேலாதிக்கத்துக்கு உட்பட்டதாக வணிகத் திணையின் ஆன்மிக ஊடாட்டம் அமைந்து இயங்கி வரலாயிற்று. நிலப்பிரபுத்துவ மேலாண்மை சக்திகள் தமக்குள் திணைப் பிளவுற்ற உள் முரணுக்கு ஆட்படுதல் வலுப்படுவதனைத் தொடர்ந்து வணிகத் திணை தனக்கான தனித்துவ முன்னெடுப்பை மேலெழச் செய்வது தவிர்க்கவியலாத ஒன்றாக அரங்கேறத் தொடங்கியது!

## நிலப்பிரபுத்துவக் காலகட்டத்தில் நகர்மயம்

உலகளவில் நிலப்பிரபுத்துவ உச்சத்தின் முதல்நிலை நாடாக இருந்த தமிழகத்தில் அந்தப் பொருளுற்பத்தி முறையின் அனுசரணையுடன் அதற்கானதாக இயங்கிய வணிகமும் உயர் விருத்தியுடன் அமைந்திருக்கும் என்பதில் ஆச்சரியம் இல்லை. ஆயினும், மூலதனக் குவிப்பின் உச்சத்தை எட்டிய மேலைத்தேச நோக்குநிலை மேவியிருந்த இருபதாம் நூற்றாண்டில் கீழைத்தேசம் முழுமையும் வரலாறற்ற - பின்தங்கிய பிரதேசங்கள் என்ற மனப்பாங்கை விதைக்கும் 'ஆய்வு முடிவுகள்' தலைதூக்கி

இருந்தன. 'நகரம்' பற்றிய ஐரோப்பிய எண்ணப்பாங்கின் அடிப்படையில் தமிழகத்தில் இயங்கிய முற்பட்ட கால நகரங்களை மதிப்பிட முனைந்த அக்கால ஆய்வுகள் இங்கு நகரங்களே இருந்ததில்லை என்ற கருத்தை உருவாக்கி ஏற்புடையதாக்கி வந்தன. அதற்கு மாறாக, நகருக்குரிய இந்தியப் பண்பை வெளிப்படுத்திய ஆர். சம்பகலக்ஷ்மியின் "வணிகம் கருத்தியல் நகர்மயம் - தென் இந்தியா: கிமு 300 முதல் கிபி 1300 வரை" எனும் நூல் தமிழகத்தின் புராதன நகரங்கள் குறித்த தெளிவை வழங்கி உள்ளது. இருபதாம் நூற்றாண்டின் இறுதி வரையிலான தொல்லியல் - இலக்கிய ஆதாரங்களில் அதிகூடிய முக்கியத்துவத்தை காவிரிப்பூம் பட்டினம் (பூம்புகார்) பெற்றிருந்த வகையிலும் கீழடி ஆதாரங்கள் கண்டறியப்படாத சூழலிலும் சம்பகலக்ஷ்மி வெளியிட்டிருந்த மேல்வரும் கருத்துக் கவனிப்புக்கு உரியது:

"புகார் போன்ற இடங்களில் யவனர்களுக்கான தனிப்பட்ட தங்குமிடங்கள் அறியப்பட்டுள்ள நிலையில், அரிக்கமேடு ரோமானியர்களின் வர்த்தக நிலையமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அதே சமயம் இத்தகைய தங்குமிடங்கள் பின்னாளைய ஐரோப்பிய தொழிற்சாலைகளை (factories) போலவே சுயேச்சைச் சலுகை பெற்றன அல்ல. 'காலனிகள்' அல்லது இதேபோல, இச்சமகால வர்த்தக நடவடிக்கைகளில், இந்த யவன வியாபாரிகளின் பங்கு மிகை மதிப்பிடப்படுகிறது. கிரேக்க வியாபாரிகளின் நடவடிக்கைகள் பொதுவாகப் பிரதான வர்த்தக மையங்களில் கட்டுண்டு இருந்த நிலையில், உட்புற நிலங்களில் பல்வேறு சரக்குகளின் உற்பத்தி மேலாண்மையும், அவற்றின் போக்குவரத்தும் தமிழர்களின் கைகளில் தான் இருந்தது என்று ஃபில்லியோஜட் (Filliojat) மற்றும் மலோனி (Maloney) ஆகியோர் சுட்டிக்காட்டுகிறார்கள். வெளிநாட்டு வர்த்தகர்களுக்குத் தேவையான மிளகு உள்ளூர் படகுகளில் பகோர் (Bacare) துறைமுகத்துக்கு கொண்டுவரப்பட்டு அதன்பின் கிரேக்கக் கப்பலில் ஏற்றப்பட்டது குறித்த பிளினியின் கூற்றும், அத்துடன் ஒரு தமிழ் வணிகருக்கும் அலெக்சாண்ட்ரியாவின் கிரேக்கர் ஒருவருக்கும் ஒரு பெரிய சரக்குக் கப்பல் அலெக்சாண்ட்ரியாவிற்கு அனுப்பட்டது குறித்த ஒப்பந்தம் ஒன்று வியன்னாவின் பாப்ரிசில் (Vienna Papyrus) பதியப்பட்டுள்ளதும் தமிழ் வணிகர்கள் வெளிநாட்டு வணிகர்களோடு சரிக்குச் சரியாக வணிகம் செய்துள்ளதைக் காட்டுகிறது" (ஆர். சம்பகலக்ஷ்மி, "வணிகம் கருத்தியல் நகர்மயம் - தென் இந்தியா: கிமு 300 - கிபி 1300 வரை", 2021. தமிழில்: வேட்டை S. கண்ணன், பாரதி புத்தகாலயம், சென்னை. ப. 146).

கிமு 3 ஆம் நூற்றாண்டில் மூவேந்தர்களது எழுச்சிக்கு உரிய வீரயுகம் தொடக்கம் பெற்றது (கிமு நாலாம் நூற்றாண்டில் வடக்கில் இருந்து சமண, பௌத்த துறவிகள் தெற்கு நோக்கி வந்தார்கள்) எனும் கால எல்லை தொட்டு தமிழகத்தில் களப்பிரர்களது ஆட்சி ஏற்பட்ட இடைக்கட்டம் வரையான இலக்கியங்களின் தொகுப்பு "சங்ககாலப் பாடல்கள்" என அறியப்பட்டு வருகிறது. அவ்வாறு தொகுக்கப்பட்டுள்ள சங்க இலக்கியம் வெளிப்படுத்துவதான நகரங்கள் கூட வட தேசங்களுக்கு உரிய வேறு நகரங்களின் சாயலில் கற்பனையாகப் புனையப்பட்டவை தாம் என வரலாற்று ஆய்வாளர்கள் கருதும் வகையில் அக்காலத்துக்கு உரியதான கட்டுமானங்கள் எவையும் கண்டறியப்பட்டு இருக்கவில்லை. பிந்திய வரலாற்றுக்கால நகரங்கள் பற்றிய சம்பகலக்ஷ்மியின் கருத்துக் கனதி காரணமாக வெவ்வேறு தேவைகளின் பொருட்டு அவ்வப்போது வெளிப்படுத்தப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளாக இருந்தவை அனைத்தையும் தொகுத்துத் தனி நூலாக உருவாக்கும் உத்வேகத்தை ரோமிலாதாப்பர் ஊட்டியதன் பேரிலேயே மேற்படி நூல் வெளிப்பட்டு இருப்பதாக நூலாசிரியர் பதிவு செய்துள்ளார் என்பது கவனிப்புக்கு உரியது (ப. 10). கைத்தொழிற்பேட்டைகளும் வணிகச் செழிப்புக்கான நகர் கட்டுமானங்களும் கிமு 6 ஆம் நூற்றாண்டு முதல் கீழடியில் இருந்துள்ளமையை 2015 இற்குப் பின்னரான தொல்லியல் ஆய்வுகள் வெளிப்படுத்திய சூழலில் 'இந்திய வரலாறு தமிழகத்தை மையமாக வைத்து மறுவரைவு செய்யப்பட வேண்டும்' எனக் கூறியிருந்தார் ரோமிலாதாப்பர். ஏற்கனவே, பிற்கால (மத்தியகால) தமிழக வரலாறு குறித்துப் புதிய தெளிவுகளைச் சென்ற நூற்றாண்டின் கடைக்கூறில் ரோமிலாதாப்பர் வெளிப்படுத்தி உள்ளமையை அறிவோம். அதற்கு செம்பகலக்ஷ்மியின் இந்த ஆய்வுகளும் தூண்டுகோலாக அமைந்திருந்திருக்கும்

என்பதில் ஐயமில்லை என்ற வகையில் அவரது "வணிகம் கருத்தியல் நகர்மயம்" எனும் நூல் மிகுந்த கவனிப்புக்கு உரியது.

விவசாய விரிவாக்கத்தில் சத்திரியர் துணையுடன் பிராமண வர்ணம் நில ஆக்கிரமிப்பை வலுவுடன் நிறைவாக்கிய நிலையில் வணிக (வைசிய) வர்ணத்தார் மேலாண்மை பெறத் தொடங்கும் கிமு 6 ஆம் நூற்றாண்டில் புதிய திணைக்கான (வைசியருக்கான) கருத்தியல்களாகச் சமணமும் பௌத்தமும் எழுச்சி பெறுவதுடன் இணைந்ததாகவே வட இந்தியாவுக்கான நகருருவாக்கம் சாத்தியப்பட்டு இருந்தது; அத்தகைய நகர்க் கட்டுமானத்தை தொல்லியல் ஆய்வுகள் ஏற்கனவே அங்கே கண்டறிந்த காரணத்தால், தமிழகம் வரலாற்று உருவாக்கத்தைத் தொடங்க முன்னரே வடக்கில் வரலாற்று வளர்ச்சி துரிதப்பட்டதான கருத்து பல தரப்பாரிடையேயும் நிலவி வந்தது. வடக்கின் நகருருவாக்கத்துக்கு முன்னரே தமிழகத்தின் நகர எழுச்சி மிகுந்த விருத்தியுடன் இருந்தமையைக் கீழடி உட்படப் பல இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழாய்வுகள் எடுத்துக்காட்டி வருகின்றன. விவசாயச் செழிப்புக்கு முன்னரான வணிக - கைத்தொழில் துறை விருத்தி தமிழகத்தில் சாத்தியப்பட்ட காரணத்தால் நான்கு திணைகள் மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாகச் சமத்துவ ஊடாட்டத்துடன் இங்கே இயங்க இயலுமாக இருந்தன.

பின்னரான மருதத் திணை மேலாதிக்கம் வாயிலாக ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுச் சமூக வாழ்முறைக்கு உரிய சாதியத்தை வடக்கிலிருந்து பெற்றுத் தமிழகம் இயங்கி வந்ததாகிய தனித்துவமிக்க வரலாற்றுச் செல்நெறியின் ஒழுங்கு முறை காரணமாகவே வர்க்கங்கள் பெற்று வந்த இயக்கப் போக்குக்கு அப்பால் முழுச் சமூக சக்திகளிடையேயான ஊடாட்டங்களின் செயற்பாங்குகளை "திணை அரசியல்" என வரையறைப்படுத்த இயலுமாக இருந்தது. இவை ஏற்கனவே பேசப்பட்டு வந்த விடயங்கள். விவசாய - வணிக திணைகள் இடையேயான மோதல்கள் வாயிலாக ஏற்படும் மேலாதிக்கக் கைமாறுதலே எமக்கான சமூக அமைப்பில் மாற்றத்தை நிகழ்த்தும் செயலொழுங்கு என்பதனைப் பார்த்து வந்துள்ளோம். இங்கு எமக்கு அவசியப்படுவது, பக்திப் பேரியக்கத்தைத் தொடர்ந்து கீழடக்கப்பட்டவாறு இயங்க அனுமதிக்கப்பட்ட வணிகத் திணையானது நிலப்பிரபுத்துவ மேலாதிக்க அணிகளுக்குள் இடம்பெறும் உள்திணை (பெரிய - சிறிய - புதிய நிலப்பிரபுத்துவ சக்திகளிடையேயான) முரண்பாட்டு மோதல்களை எவ்வாறு கையாண்டு வந்தது என்பது தான்!

நிலப்பிரபுத்துவக் காலச் சமூகத்தின் மையமகக் கோயில்களே விளங்கின என்ற வகையில் வணிக நகரங்களும் கோயில் பிரகாரங்களுடன் இணைந்தே அமைவன என்பதனை சம்பகலக்ஷ்மி எடுத்துரைத்துள்ளார். சமூக முரண் இயக்கங்களும் கருத்தியல் தளச் செயலொழுங்குகள் ஊடாகவே வெளிப்பட்டு வந்தன. அந்தவகையில், மேலாதிக்கத் தரப்புத் தமக்குள் இயங்கும் உள் மோதல்கள் முனைப்படைந்து சிக்கலில் உழலும்போது வணிகத் திணை தனக்கான தனித்துவ எழுச்சி வாய்ப்பினை எத்தகைய வடிவத்தினூடாக வெளிப்படுத்த முற்பட்டது என்ற தேடலை மேற்கொள்வதன் வாயிலாக இன்றைய வரலாற்றுக் கடமையைக் கையேற்கும் மார்க்கத்துக்கான திறவுகோலைக் கண்டடைய இயலும்!

### முருகனில் சிவன்

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன் சிவன் மட்டுமே என வலியுறுத்த முனைந்த தொடர் பாய்ச்சலைத் தமிழக மேலாதிக்கச் சமூக சக்தி விஷ்ணுவை முன்னிறுத்தும் போட்டியாளருடன் மல்லுக்கட்ட வேண்டிய வரலாற்றுக் கட்டம் ஏற்பட்ட பின்னர் வணிகத் திணை தனக்கான தனித்துவக் கடவுளை மேலெழச் செய்யும் வாய்ப்பினைப் பெற்றது. சைவ - வைணவ மோதல் ஒரு எல்லையைக் கடந்துவிட இயலாத வகையில் அக, புறக் காரணிகள் உறுத்திக்கொண்டே இருந்தன. தமக்கான சாதிய மேலாதிக்கத்தை நிலப்பிரபுத்துவ சக்திகளனைத்தும் தொடர்ந்து பேணும் வகையில் 'இந்து சமயமாக' (அன்றைய உரையாடலில் 'சனாதன தர்மம்', 'வைதிக நெறி' என்பனவாக) இணைந்து இயங்கியாக வேண்டி இருந்தது. இந்த அகக் காரணிக்கு அப்பால் இஸ்லாமியத் தாக்கத்தினால் வைதிக நெறிக்கு விரோதமாக மக்கள் சென்றுவிடாமல் தடுக்க வேண்டிய தேவையும் இருந்தது.

தமிழகத்தில் குறுகிய காலம் மதுரை உள்ளிட்ட

**விஜயநகரப் பேரரசர்களது ஆட்சியுடன் அறிமுகப்பட்ட தெலுங்கு வம்சாவழி – தமிழ் நிலப்பிரபுக்களுக்கு இடையிலான வைணவ – சைவப் பிரிவுகளுக்கு மட்டுமன்றி வணிகத் திணையாகிய வைசியர்களால் 'முழு முதல் கடவுளாக்கப்படுகிற' முருக வழிபாட்டுக்கும் வேதாகம – வேதாந்தப் பிராமணர்களே ஆன்மீகத் தலைவர்களாக (பூசகர்களாக) அங்கீகரிக்கப்பட்டு இருந்தனர்.**

சில இடங்களில் முஸ்லிம் மன்னர்கள் ஆட்சி நிலவிய போதிலும் நேரடி ஆட்சி எல்லைக்கு உட்பட்டிராத ஏனைய பகுதிகளில் ஏராளமான மக்கள் இஸ்லாத்தைத் தழுவும் நிலை இருந்து வந்துள்ளது. சாதி ரீதியிலான வலுமையான ஒடுக்குமுறையை அனுபவித்த தரப்பினர் மட்டுமன்றி சமூக மேலாண்மையுடன் இருந்த வணிகத் திணைக்குரிய பலரும் இஸ்லாத்துக்கு மாறியிருந்தனர். குறிப்பாகப் பக்தி இயக்கத்தில் பௌத்த - சமணம் வீழ்த்தப்பட்ட போது அந்த மார்க்கங்களைப் பின்பற்றியோரில் ஒரு தரப்பினர் மட்டும் வைதிக மதங்களைத் தழுவினர். ஏராளமானோர் இஸ்லாத்தை வரித்துக்கொள்ளும் வகையில் அவர்களுக்கான வணிகக் கருத்தியலுடன் அந்தப் புதிய மதம் திகழ்ந்திருந்தது. மிக அதிக வீரயுகக் காலத் தமிழ் சொற்கள் முஸ்லிம் மக்களிடையே இன்றுவரை புழக்கத்தில் தொடர்வதற்கு இவ்வகையில் உட்பிரவேசித்த தமிழ் மக்களே காரணமாயிருந்தனர்.

வைதிக சமயங்களை வரித்துக்கொண்ட வணிகர்கள் ஆரம்பத்தில் சிவனுடைய மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்ட போதிலும் அவரது முதன்மைப் பீடம் ஆட்டங்காணத் தொடங்கிய பின்னர் தமக்கான கடவுளாகக் குன்றத்துக் குமரனான 'தமிழ்க் கடவுள் முருகனை' முன்னிறுத்தும் போக்கு வளரலாயிற்று. அக - புறக் காரணிகளால் வைதிக சமயம் அச்சுறுத்தலைச் சந்தித்த பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பியர் வருகையும் அவர்களூடாகக் கிறிஸ்தவத்தின் ஊடுருவலும் அறிமுகப்பட்டு வலுவடையத் தொடங்கிவிட்ட காரணத்தால் இரண்டாவது பக்தி இயக்கத்துக்கான அவசியம் ஏற்படலாயிற்று. இந்த எழுச்சியில் கடல் வழி வாணிகத்தில் பெரும் பொருளீட்டியவரான பட்டினத்தடிகள் 17 ஆம் நூற்றாண்டில் தலைமைப் பண்பு மிக்கவராகத் திகழ்ந்தார். அருணகிரிநாதர் (1370 - 1450), குமரகுருபரர் (1625 - 1688) போன்றோர் முருக வழிபாட்டினை வலுப்படுத்துவோராக அமைந்தனர்.

இவ்வகையில் வணிகத் திணை தனி வழித்தடத்தில் முன்னேறுவது விவசாயத் திணைக்கு உகந்ததுமல்ல, அவர்கள் அனுமதிக்க ஏற்றதுமல்ல. நிலப்பிரபுத்துவ நலனுக்கு உட்பட்ட அளவில் வணிகப் பெருக்கத்தை அனுமதிப்பதனைக் கடந்து தனிப்போக்கு வலுப்பது என்பது மூலதனத் திரட்சியைப் பெருக்கி விவசாயத் தேவையைக் கடந்த தொழிற்துறை விருத்தியில் சுயமாக வளர வணிகத் திணைக்கு வாய்ப்பளித்து விடவும் இடமளிக்கும். எமக்கேயான மூலதனத் திரட்சிக்கு உரிய திசையில் வரலாறு தொடரவில்லை என்பதோடு பகை முரணாக வளரத்தக்க தமது போட்டியாளர்களான வணிகத் திணையினர் இவ்வகையில் தனியான கடவுளை முன்னிறுத்திய பக்தி இயக்கம் ஒன்றை முன்னெடுப்பதனை நிலப்பிரபுத்துவத் திணை எவ்வாறு அனுமதித்தது என்பது தான் இங்கு அவசியமான விடயமாகிறது!

சிவன் - விஷ்ணு எனும் மேலாதிக்கக் கடவுளர்கள் இடையேயான முரண் என்பது தமிழர் சமூகத்தின் பெரு நிலப்பிரபுக்களில் மிகப் பெரும்பான்மையினராயுள்ள வெள்ளாளர்களது சமூகத் தளத்தில் 'ஆளும் மதமான' சைவத்துக்கும் மிகச் சிறுபான்மையினராயுள்ள புதிய நிலப்பிரபுத்துவ சக்தியின் (ஆட்சியாளர் மதமான) வைணவத்துக்கும் இடையிலானது. இரு தரப்பினரும் சமநிலையுடன் மேலாதிக்கத்தைச் செயற்படுத்துகிறவர்கள்; "ஒரு முழு முதல்

கடவுளாகிய பரம்பொருள் ஏனைய கடவுளர்களை மேலாண்மை செய்யும்" ஒரே கோட்பாட்டுக்கு உரிய வைதிக நெறியினர். இரு மதங்களும் 'தொன்றுதொட்டு' குடும்ப உறவுடன் ஊடாடும் கடவுளர்கள் பற்றிய கர்ணபரம்பரைக் கதைகளை ஒரேவகையில் பேணி வருவன (ஒரே கதையில் எவர் முழுமுதல் கடவுள் என்பதற்கு ஏற்பச் சிறிய அளவிலான பாடபேதம் இன்று வழக்கிலுள்ள இந்து மதங்களான சைவம், சாக்தம், வைணவம் என்பவற்றில் ஏற்பட்டிருக்கும்). அதனடிப்படையில் விஷ்ணுவின் தங்கையான சக்தி (சாக்தத்தின் முழு முதல் கடவுளான உமை, பார்வதி, கொற்றவை, அம்மன்) சிவனது மனைவி; சிவ - சக்தி மகனான முருகன் விஷ்ணுவின் மருமகன் என்ற வகையில் 'பகைநிலைக்கு வளரத்தக்க திணைக்கு உரிய' வைசியர்கள் முருக வழிபாட்டை முன்னிறுத்துவதான புதிய பக்தி இயக்கத்தை ஏற்றாக வேண்டிய நிர்ப்பந்தம் விவசாயத் திணைக்கு ஏற்பட்டிருந்தது.

விஜயநகரப் பேரரசர்களது ஆட்சியுடன் அறிமுகப்பட்ட தெலுங்கு வம்சாவழி - தமிழ் நிலப்பிரபுக்களுக்கு இடையிலான வைணவ - சைவப் பிரிவுகளுக்கு மட்டுமன்றி வணிகத் திணையாகிய வைசியர்களால் 'முழு முதல் கடவுளாக்கப்படுகிற' முருக வழிபாட்டுக்கும் வேதாகம - வேதாந்தப் பிராமணர்களே ஆன்மீகத் தலைவர்களாக (பூசகர்களாக) அங்கீகரிக்கப்பட்டு இருந்தனர்.

'பிராமணர்' எனும் திணையுடன் ஓரிரு நூற்றாண்டுகளின் முன்னர் வெள்ளாளர்களுக்கு 'உள் - பகை முரண்' ஏற்பட்ட கையோடு சைவ சித்தாந்தத்தை உருவாக்கி இருந்த வெள்ளாளர்கள் சைவ - வைணவச் சமரசத்துக்கு ஆட்பட்ட பின்னணியில் இடை சக்தியான வேத - வேதாந்தப் பிராமணத் திணையுடனும் (சமூக சக்தியுடனும்) சமரசத்துக்கு வந்தாக வேண்டிய நிர்ப்பந்தம் வெள்ளாளர் திணைக்கு (மருதத் திணை மேலாதிக்கம் வாயிலாகத் தமிழகத்தின் சாதிய வாழ்வை ஏற்படுத்திக்கொண்ட சமூக சக்திக்கு) உருவாகியது.

திணை மேலாதிக்கப் போட்டி காரணமாகப் பிராமணரது பிரமம் பற்றிய கருதுகோளில் இருந்து அடிப்படையான கோட்பாட்டு வேறுபாட்டுடன் வெள்ளாளர்கள் வெளிப்படுத்தி இருந்த சைவசித்தாந்தம் தொடர்ந்தும் அதனது தனித்துவ மேலாதிக்கத்தை நிலைநிறுத்த இயலாமலாயிற்று (சமூகத் தளத்தில் மேலாதிக்க சக்திகள் பரவலாக்கமடைந்ததன் பேறாக).

வேதாந்த - சைவசித்தாந்தத் தத்துவங்கள் இடையே 'சமரச சன்மார்க்க' உறவை ஏற்படுத்தியவர் 'பிராமணச் சதிக்கு' உரிய பணியை மேற்கொள்ளவில்லை; தவிர்க்கவியலாத அந்த உடன்போக்கு பிராமணரல்லாதவரான தாயுமான சுவாமிகளால் (1705 - 1742) மேற்கொள்ளப்பட்டது.

வேதாரண்யத்தைச் சேர்ந்த கேடிலியப்பா - கஜவல்லி அம்மை ஆகியோருக்கு மகனாகப் பிறந்தவரான தாயுமானவர் திருமூலரின் மரபைச் சேர்ந்த மௌனகுருவிடம் உபதேசம் பெற்று துறவு வாழ்வை மேற்கொண்டார். மிக எளிய பாடல்கள் வாயிலாகக் கடவுளை மனித உணர்வுக்கு நெருக்கமாக வருவித்த தாயுமானவரின் மேலாதிக்க நிராகரிப்புடனான ஜனநாயக மனப்பாங்கு அடுத்தடுத்த நூற்றாண்டுகளில் வள்ளலார், பாரதி போன்றோரில் மென்மேலும் சமத்துவ நெறி நோக்கிய நகர்வைச் சாத்தியமாக்கி வந்தது!

மேலாதிக்கச் சிவனை நீங்கிச் சமத்துவத் திணை வாழ்வுக் காலத்துக் குறிஞ்சிக் கடவுளான முருகன் முன்னிறுத்தப்பட்ட போதே கடவுளர் தளத்தில் மூலதனம் விருப்புக் கொள்ளக்கூடிய ஜனநாயக வாழ்வியல் அறிமுகப்பட்டிருந்தது. "கந்தபுராணம்" வாயிலாக முருகனைச் சிவனின் ஒரு மூர்த்தமாக வலியுறுத்த வேண்டிய வகையில் மேலாதிக்கத் தளம் பன்முகப்பட்டுப் போயிருந்தது.

சமூகத் தளத்தில் ஒற்றைக் கடவுள் மேலாதிக்கத்துக்கு அப்பாலான வழிபாட்டுச் சுதந்திர உணர்வோட்டங்கள் மேலெழுந்து வருவதனைப் பள்ளு, குறவஞ்சி போன்ற இலக்கிய வடிவங்கள் வெளிப்படுத்தலாயின. இத்தகைய மாற்றங்கள் மதங்களைக் கடந்த ஆன்மீகத் தேடலுக்கு ஆற்றுப்படுத்தும் வளர்ச்சி நிலையைப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சாத்தியப்படுத்தியது. அதுபற்றி அடுத்த அமர்வில் உரையாட இயலும்!

(தொடரும்)

‘இலங்கையில் பௌத்தம்’ என்னும் இந்தத்தொடர் பௌத்தம் பற்றி மானிடவியலாளர்களாலும் சமூகவியலாளர்களாலும், அரசியல் விஞ்ஞானிகளாலும் எழுதப்பட்ட ஆய்வுகள் பற்றி அறிமுகம் செய்வதாக அமைகின்றது. குறிப்பாக 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையின் பௌத்த சமய சீர்திருத்தவாதம், சமூகம், பண்பாடு, அரசியல், இன உறவுகளில் ஏற்பட்ட மாற்றங்களில் அரசியல் பௌத்தத்தின் வகிபாகம் என்பன பற்றி ஆய்வாளர்களின் கருத்துக்கள் விரிவாக இந்தத் தொடரில் நோக்கப்படும். கணநாத் ஒபயசேகர, ஸ்டான்லி ஜே. தம்பையா, எச். எல். செனவிரத்தின, கித்சிறிமலல் கொட, சரத் அமுனுகம, ஜயதேவ உயன்கொட, குமாரி ஜயவர்த்தன, லெஸ்லி குணவர்த்தன ஆகிய இலங்கையின் சமூக விஞ்ஞானிகளின் நூல்களும் ஆய்வுக் கட்டுரைகளும் , ஹவ்வார்ட் றிஜின்ஸ், உர்மிலா பட்னிஸ், றிச்சார்ட் கொம்பிரிட்ஜ், யொனதன் ஸ்பென்சர் முதலிய இலங்கையரல்லாத ஆய்வாளர்களின் ஆய்வுகள் சிலவும் இந்தக் கட்டுரைத்தொடரில் விமர்சன நோக்கில் வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவுள்ளது.




● கந்தையா சண்முகலிங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த ‘இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்’ என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

‘நவீன அரசியல் சிந்தனை’, ‘கருத்தியல் எனும் பனிமூட்டம்’, ‘இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்’ ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.


# இலங்கையில் பௌத்த சமய மறுமலர்ச்சியும் மாற்றமும் 1750–1900:

## கித்சிறி மலல்கொடவின் நூல் பற்றிய அறிமுகம்

*இலங்கையில் பௌத்த சமயத்தின் வரலாறு பற்றிய சமூகவியல் நோக்கிலான ஆய்வுகளை எழுதியவர்களில் முக்கியமான ஒருவரான கித்சிறி மலல்கொட அவர்களின் நூல் பற்றிய அறிமுகமாக இக்கட்டுரை அமைகிறது. கித்சிறி மலல்கொட 1960 களின் பிற்பகுதியில் ஒக்ஸ்போர்ட் பல்லைக்கழகத்தில் கலாநிதிப் பட்ட ஆய்வை மேற்கொண்டார். 1970 இல் அவரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு பின்னர் திருத்தங்களுடன் 1976 இல் ‘யுனிவர்சிட்டி ஒவ் கலிபோர்னியா பிரஸ்’ வெளியீடாகப் பிரசுரிக்கப்பட்டது. ‘BUDDHISM IN SINHALESE SOCIETY 1750 - 1900 : A STUDY OF RELIGIOUS REVIVAL AND CHANGE’ என்பது நூலின் ஆங்கிலத் தலைப்பாகும். இந்நூலின் தலைப்பில் ‘மறுமலர்ச்சியும் மாற்றமும்’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*யாழ்ப்பாணத்தில் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆறுமுகநாவலரின் சமூக சீர்திருத்தப் பணிகளின் பயனாக சைவமறுமலர்ச்சி ஏற்பட்டதைப் பற்றி நாம் நன்கு அறிவோம். இலங்கையின் வடபகுதியில் ஏற்பட்ட இச்சமய மறுமலர்ச்சி இயக்கத்திற்கும் தென்னிலங்கையில் தோன்றிய பௌத்த சமய மறுமலர்ச்சி இயக்கத்திற்கும் இடையே அடிப்படையான வேறுபாடு ஒன்று உள்ளது. தென்னிலங்கையில் பௌத்த சமய சீர்திருத்தமும் மறுமலர்ச்சியும் இருவேறு கட்டங்களில் ஏற்பட்டது.*

*முதலாவது சீர்திருத்த இயக்கம் கண்டி இராச்சியப் பகுதிக்குள் வாழ்ந்தவரான சரணங்கர தேரர் என்ற சமயத்துறவியினால் 18 ஆம் நூற்றாண்டில் தொடக்கி வைக்கப்பட்டது. இம்முதலாவது கட்ட சீர்திருத்த இயக்கமும் அதன் பயனான மாற்றங்களும் 1860 ஆம் ஆண்டு வரை தொடர்ந்தன. 1860 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பாணந்துறை விவாதம் இரண்டாவது கட்ட சீர்திருத்தங்களினதும் பௌத்த சமய மறுமலர்ச்சியினதும் தொடக்கமாக அமைந்தது.*

*பண்டைநாளில் சிறந்து விளங்கிய சமயக் கொள்கைகளும் நடைமுறைகளும் பின்னர் நலிவடைந்த நிலையை அடைந்த வேளையில் அவற்றை மீள உயிர்ப்பித்து புது மலர்ச்சியை*





Image Source - slbooks.lk

உண்டாக்கும் இயக்கமே மறுமலர்ச்சி இயக்கம் எனக் குறிப்பிடப்படுகிறது. 1750 – 1900 காலப்பகுதியில் பௌத்த சமயத்தில் ஏற்பட்ட வளர்ச்சிப் போக்குகளை 'மறுமலர்ச்சி' என்று மட்டும் கூற முடியாது. இவ்வளர்ச்சிப் போக்குகளில் முக்கிய மாற்றங்களும் வெளிப்பட்டன. ஆகையால் மறுமலர்ச்சியும் மாற்றமும் என்று குறிப்பிட்டுள்ளதாக மலல்கொட தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 1750 – 1900 காலப் பகுதியில் பௌத்த சமயத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் பின்னணியில் இரண்டு அம்சங்கள் இருந்தன.

(1) மரபுவழி அரசியல் சமூக அமைப்புக்களில் மாற்றங்கள் ஏற்பட்டன. அம்மாற்றங்களின் விளைவாக சமயத்துறையில் மறுமலர்ச்சியும் மாற்றமும் நிகழ்ந்தது.

(2) இக்காலத்தில் கிறிஸ்தவ மிசனரிகளின் தாக்கமும் பௌத்த சமயத்தைப் பாதித்தது.

இலங்கையில் பௌத்த சமய மறுமலர்ச்சியும் மாற்றமும் என்ற விடயத்தோடு மேற்குறித்த இரு அம்சங்கள் தொடர்புபட்டிருப்பது முக்கியமானது. மேலும் இக்காலப்பகுதியில் டச்சுக்காரரும் (1796 வரை) பின்னர் பிரித்தானியரும் இலங்கையை ஆட்சி செய்தனர். தனித்து சுதந்திரமாகச் செயற்பட்ட கண்டி அரசும், 1815 இல் பிரித்தானியர் ஆட்சியின் கீழ் வந்தது.

## சமய மறுமலர்ச்சியின் இருவேறு கட்டங்கள்

1750 ஆம் ஆண்டுக்குப் பிந்திய காலத்தில் ஏற்பட்ட சமய மறுமலர்ச்சி இயக்கத்தை இருவேறு கட்டங்களாகப் பிரித்து நோக்குதல் முடியும்.

சரணங்கர தேரர் என்னும் சமயத்துறவி தொடக்கி வைத்த சீர்த்திருத்தங்களும், அதன் தொடர்ச்சியாக சியாம் நிகாயவில் இருந்து பிரிந்து சென்ற கீழ்நாட்டு சிங்கள பௌத்த துறவிகளின் அமரபுர விகாரையின் தோற்றமும் வரையான கட்டம் சமய மறுமலர்ச்சியின் முதலாவது கட்டமாகும். இக்கட்டம் 1860 இல் முடிவடைகிறது. மலல்கொடவின் நூலின் முதலாம் பகுதி இக்கட்டத்தைப் பற்றிய விரிவான ஆய்வாகும். அத்தியாயம் II, III, IV, V என்ற நான்கு அத்தியாயங்களில் இது பற்றி விபரிக்கப்பட்டுள்ளது.

நூலின் இரண்டாம் பகுதியில் கிறிஸ்தவத்திற்கு எதிர்ப்பாகத் தோன்றிய சீர்த்திருத்தவாத இயக்கமும் அதன் விளைவான சமய மறுமலர்ச்சியும் விளக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பகுதி VI, VII என இரு அத்தியாயங்களைக் கொண்டது. இரண்டாம் கட்ட மறுமலர்ச்சி இருபதாம் நூற்றாண்டிலும் தொடர்ந்த ஒரு இயக்கம் ஆயினும் நூலாசிரியர் தம் ஆய்வை 1900 என எல்லையிட்டுக் கொண்டுள்ளார். இவ்விரண்டாம் கட்டம் 1860 களில்

ஆரம்பித்தது. இரண்டாம் கட்டத்தில் எழுந்த இயக்கத்தை 'புரட்டஸ்தாந்திய பௌத்தம்' (Protestant Buddhism) என்று மலல்கொட குறிப்பிடுகின்றார். இரண்டாம் பகுதியின் தலைப்பாகவும் இத்தொடரையே அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நிலைமாற்றம் என்ற கருத்து

இந்தியாவில் புத்தபிரான் காலத்தில் தோன்றிய ஆரம்பகாலப் பௌத்தம் பல மாற்றங்களைப் பெற்று வளர்ச்சியடைந்தது. கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் அசோக சக்கரவர்த்தியின் காலத்தில் பௌத்தத்தில் முக்கிய பல மாறுதல்கள் ஏற்பட்டன. இலங்கையில் பௌத்தம் புகுந்த போதும் இலங்கை நிலைமைகளுக்கு ஏற்ப அது பல மாற்றங்களைப் பெற்றது. பௌத்த சமயத்தின் வரலாற்றில் ஏற்பட்ட இம்மாற்றங்களிற்கு மக்ஸ்வெபர் என்ற சமூகவியலாளர் நிலைமாற்றம் (Transformation) என்ற கருத்தை உபயோகித்து விளக்கம் கொடுத்தார். மலல்கொடவின் நூல், நிலைமாற்றம் என்ற இக்கருத்தை பிரயோகித்து இலங்கையின் பௌத்தத்தில் ஏற்பட்ட மாற்றங்களிற்கு விளக்கம் கொடுக்கிறது. நூலின் முதலாம் அத்தியாயமான முன்னுரையிலும், இரண்டாம் அத்தியாயமான 'பின்னணி' (The Background) என்ற தலைப்பில் உள்ள அத்தியாயத்திலும் நிலைமாற்றம் பற்றிய கோட்பாட்டு விளக்கங்களை மலல்கொட தருகின்றார். வரலாறு, சமூகவியல், ஒப்பீட்டுச் சமயம் ஆகிய துறைகளின் கல்வியில் அக்கறையுடையோருக்கு இக்கோட்பாட்டு விளக்கங்கள் மிகுந்த பயனுடையவை.

ஆரம்பகால பௌத்தம் ஞானிகளின் மார்க்கமாகும், பௌத்த சமயத் துறவிகள் சமூகத்தில் இருந்து விலகி, உலகியல் வாழ்க்கையை நிராகரித்து தமது ஆன்மீகப் பயணத்தில் கவனம் செலுத்தினர். அவர்கள் தியானத்திலும், சமயஞானச் சிந்தனையிலும் தம் கருத்தைச் செலுத்தினர். புத்தர் போதித்த சமயம், காலப்போக்கில் பெருந்தொகையான மக்களின் சமயமாக மாறிய போது ஆரம்பகால பௌத்தத் துறவிகளில் இருந்து வேறுபட்ட இயல்புகளையுடைய துறவிகள் தோன்றினர். உலகை முற்றாகத் துறந்து காடுகளை நோக்கிச் செல்லும் சந்நியாச நெறிக்குப் பதிலாக மக்களுடன் சமூகத்தில் வாழ்ந்து சாதாரண மக்களின் சமயத் தேவைகளை நிறைவு செய்யும் துறவிகளிற்கான தேவை எழுந்தது. பௌத்தம், குடியான் விவசாயச் சமூகங்களில் வேரூன்றிய போது பெருந்தொகையான ஜனத்திரளின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் சமயமாக மாறியது. பெருந்தொகையான மக்களின் சமயம் சில முன் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று மக்ஸ்வெபர் கூறினார். முதலாவதாக அது அடிநிலை மக்களின் ஆன்மீகத் தேவைகளை (Plebian Religious Needs) பூர்த்தி செய்ய வேண்டும். இரண்டாவதாக அச்சமயம் உலகியல் சார்ந்த நிறுவனங்களுடனும், அரசுடனும் பிணைப்புக்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். அசோகச் சக்கரவர்த்தியின் ஆட்சியில் பௌத்தம் மேற்குறித்த இரு இயல்புகளையும் பெற்றது. அவ்வாறு நிலை மாற்றம் பெற்ற பௌத்தம் சாதாரண மக்களின் தேவைகளுக்கு உரிய மதமாகியது.

பௌத்தம் உலகச் சமயமாகப் பிறநாடுகளில் பரவிய வரலாற்றுப் போக்கை 20 ஆம் நூற்றாண்டின் சமூகவியலாளர்கள் பலர் ஆராய்ந்தனர். தாய்லாந்தின் பௌத்தம் பற்றி இலங்கையரான ஸ்ரான்லி ஜே. தம்பையா ஆராய்ந்தார். யங், Kaufman போன்ற ஆய்வாளர்களும், தாய்லாந்து பௌத்தம் பற்றி ஆராய்ந்தனர் என்று கூறப்படுகிறது. நாஷ், ஸ்பைறோ என்ற இருவர் பர்மா பற்றிய ஆய்வைச் செய்தனர். இலங்கையின் பௌத்தம் பற்றி கணநாத் ஒபயசேகர, அமிஸ், யால்மன், கொம்பிரிட்ஜ் ஆகிய ஆய்வாளர்கள் சிறப்பான ஆய்வுகளைச் செய்தனர். இவ்வரிசையிலேயே தமது நூலும் அடங்குவதாக மலல்கொட குறிப்பிடுகிறார்.

## 'மிசனரி' வேட்கை

பௌத்தம் உலக மதமாகத் தழைத்து வளர்வதற்கு அது சாதாரண மக்களின் சமயத் தேவைகளை பூர்த்தி செய்வதாய் மாற்றம் பெற்றமையோடு இன்னோர் அம்சமும் துணை செய்தது. அதனையே மதம் பரப்பும் 'மிசனரி வேட்கை' (Missionary Zeal) என்று வெபர் குறிப்பிடுகிறார். இந்தியாவின் ஆரம்பகாலப் பௌத்தம் அரசியல் சார்பற்றதாக இருந்தது. அது சமூகத்தில் இருந்து விலகிய துறவிகளின் சமயமாக இருந்தது. கி.மு.3 ஆம் நூற்றாண்டில் அசோகச் சக்கரவர்த்தி ஆட்சி செய்த போது அரசு அதிகாரம் பௌத்தத்திற்கு துணையாக மாறியது. சமயத்தைப் பரப்பும் வேட்கையும் வெளிப்பட்டது. இலங்கையிலும் அசோகனின்

சம காலத்தவரான தேவநம்பியதீசன் (கடவுளின் அன்பைப் பெற்றவர்) அரசானாக முடி சூட்டிக்கொண்டார். காலப்போக்கில் இலங்கையில் போதிமர வழிபாடு, புத்தரின் புனித சின்னங்களை வைத்து வழிபடும் சைத்தியங்களை அமைத்தல், பெரும் சமய விழாக்களை நடத்துதல் ஆகிய சடங்கு முறையிலான வழிபாடுகள் என்பனவும் வளர்ச்சி பெற்றன. பௌத்தம் பெரும் ஜனத்திரளின் சமயமாகியது.

## மடாலய நிலப்பிரபுத்துவம்

பெருந்தொகையான மக்கள் திரள் பௌத்த சமயிகளாக ஆகும்போது எதிர்கொள்ளும் சிக்கல்களையும், தூய்மையான சமயக் கோட்பாடுகளில் இருந்து நடைமுறைச் சமயம் விலகுவதையும் மலல்கொட சமூகவியல் நோக்கில் தெளிவுபடுத்துகிறார். பௌத்தத்தின் முதன்மையான நோக்கம் ஆன்மீக ஈடேற்றம் அல்லது துக்க நீக்கம் மூலம் நிர்வாண நிலையை அடைதல் ஆகும். இம்முதன்மை நோக்கத்தை விட வேறு சில இரண்டாம் நிலை நோக்கங்களும் இருந்தன. அவை உலகியல் வாழ்வில் ஈடுபட்டுள்ள இல்வாழ்வோரை, நல்வழிப்படுத்தும் கடமைகளை கொண்டனவாக இருந்தன. வனவாசம் (ஆரண்ய) மேற் கொள்ளாது சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டு (ஹம்வாசி) பணிசெய்யும் துறவி உலகியல் கருமங்களில் இருந்து தன் பிணைப்புக்களை அறுத்துக் கொள்ளவில்லை. துறவிகள் ‘சங்க’ என்ற அமைப்பை ஒரு நிறுவனமாகக் கட்டமைத்துக் கொண்டனர். ஆழமான கல்வியில் ஈடுபட்ட துறவிகள் ‘அபிதம்மம்’ என்னும் பௌத்த மெய்யியலில் ஆராய்ச்சியை மேற்கொண்டனர். நூல்களைப் பாளி மொழியில் அறிவாளிகளுக்காக எழுதினர். இன்னொரு பிரிவினர் சாதாரண மக்களுக்கு மதத்தைப் போதிக்கும் பணியில் ஈடுபட்டனர். இவர்கள் பொதுமக்களின் மொழியான சிங்களத்தில் மக்களுக்கு விளங்கக் கூடிய வகையில் நூல்களை எழுதினர். பிக்குகளின் பொருண்மியத் தேவைகளை நிறைவு செய்யும் தேவை ஏற்பட்டது. மடாலயங்கள் தோன்றின. இம் மடாலயங்களுக்குச் செல்வந்தர்கள் பணத்தையும், பொருளையும் தானமாக வழங்கினர். நிலங்கள் கொடையாக வழங்கப்பட்டன. மடாலயங்கள் பெரும் சொத்துடமை நிறுவனங்கள் ஆயின. பௌத்தம் நிலமானிய அமைப்பின் நிறுவனச் சமயம் என்ற நிலையைப் பெற்றது. மக்ஸ்வெபர் பௌத்தம் அடைந்த இந் நிலைமாற்றத்தை மடாலய நிலப் பிரபுத்துவம் (*Monastic landlordism*) என்று குறிப்பிட்டார். மத்திய கால இலங்கையில் பௌத்தம் மடாலய நிலப்பிரபுத்துவமாக நிலைமாற்றம் பெற்றது.

## பெரு நெறியும் சிறு நெறியும்

சமூகம் பற்றிய சமூகவியலாளர் பெருநெறி (*Great tradition*), சிறு நெறி (*Little tradition*) என்ற கருத்தாக்கங்களை பிரயோகித்துச் சமய நம்பிக்கைகள், சடங்குகள் ஆகியவற்றின் இயல்புகளை விளக்குவதுண்டு. தேரவாத பௌத்தம் அறிவாளிகளிற்குரிய கோட்பாடுகளை கொண்ட மதம். அதன் சமய வழிபாட்டு முறைகளும், சமயச் சடங்குகளும் பெரு நெறி என்ற வகைக்குள் அடங்குவன. பௌத்தம் அல்லாத நம்பிக்கைகள், பௌத்தத்திற்கு எவ்விதம் புகுந்தன; நிலைத்திருந்தன, பௌத்தம் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் இங்கிருந்த சமய நம்பிக்கைகளும், இந்து சமய நம்பிக்கைகளும், மகாயான பௌத்த மரபுகளும் எவ்விதம் பௌத்தத்தில் நுழைந்தன என்பன பற்றி வரலாற்று முறைப் பரவல் (*Historical diffusion*) வகையான விளக்கங்கள் உள்ளன. பௌத்தத்திற்கு அந்நியமானவையும், அதன் கொள்கைகளோடு முரண்பட்டனவுமான நம்பிக்கைகளும் வழக்கங்களும் ஏன் இலங்கைப் பௌத்தத்தில்

**இந்தியாவில் புத்தபிரான் காலத்தில் தோன்றிய ஆரம்பகாலப் பௌத்தம் பல மாற்றங்களைப் பெற்று வளர்ச்சியடைந்தது. கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் அசோக சக்கரவர்த்தியின் காலத்தில் பௌத்தத்தில் முக்கிய பல மாறுதல்கள் ஏற்பட்டன. இலங்கையில் பௌத்தம் புகுந்த போதும் இலங்கை நிலைமைகளுக்கு ஏற்ப அது பல மாற்றங்களைப் பெற்றது.**

நிலைத்திருந்தன என்பதற்கு வரலாற்று முறைப்பரவல் என்ற நோக்குமுறையினால் திருப்தியான விளக்கத்தை தரமுடியாது என்று மலல்கொட கூறுகிறார்.

முரண்பாடுடைய சிறு நெறி மரபுகள் பௌத்தத்தில் நிலைத்திருப்பதற்குரிய காரணத்தை 'அடிநிலை மக்களின் சமயத் தேவைகள்' என்ற கருத்தின் இன்னோர் அம்சமான அவசரகால உதவி அல்லது ஆபத்து உதவி (Emergency aid) என்ற கருத்தின் துணையுடன் விளக்க முடியும் என மலல்கொட குறிப்பிடுகிறார். இதுவும் மக்ஸ்வெபர் குறிப்பிட்டதொரு கருத்தாக்கமே ஆகும். மனிதர் இரு வகையான ஆபத்துக்களை எதிர்நோக்குகின்றனர். அகத்தே இருந்து வரும் அச்சம், சந்தேகம், கலக்கம் என்பன ஒருவகை. புறத்தே இருந்து வரும் நோய், வறுமை, வன்முறை முதலிய ஆபத்துக்கள் இன்னொரு வகையின. சமயத்தின் பெருநெறி சார்ந்த தத்துவ விசாரமும், சமய ஒழுக்கங்களும் ஆபத்து உதவியாக அமைவதில்லை. மந்திரம், தந்திரம் என்பனவும் பேய் ஓட்டுதல் போன்ற சடங்குகளும், வரம் தரும் கடவுளர்களுமே ஆபத்தில் இருந்து மக்களுக்குப் பாதுகாப்பை வழங்க முடியும். கர்மவினையின் தொடர்ச்சி, பிறப்பு, மறு பிறப்பு ஆகிய பௌத்த சமயக் கருத்துகள் கர்மா என்ற காரண காரியக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டவை. ஆபத்து உதவி என்ற கருத்தின் முதலாவது அம்சம் காரணகாரிய விளக்கம் ஆகும். கிரகங்களின் தாக்கம், துட்ட தெய்வங்கள், பிசாசுகள், ஆவிகள் கொண்டு வரும் தீமைகள், வரம் தரும் நல்ல தெய்வங்கள் தரும் நன்மைகள் என்பவை இரண்டாவது அம்சம்.

**சாதிக்கும் சமயத்திற்கும் உள்ள நெருங்கிய பிணைப்பை மலல்கொடவின் நூலின் சில பகுதிகள் சிறப்பாக விபரிக்கின்றன. நூலின் முதற் பகுதியில் அமரபுர நிகாயவின் தோற்றமே சாதி அந்தஸ்தில் குறைந்தவர்களாகக் கருதப்பட்ட சாதியினரின் எதிர்ப்புணர்வின் வெளிப்பாடு என்பதை அவர் தெளிவுபடுத்துகிறார்**

### சாதியும் பௌத்த சமயமும் - அமரபுர நிகாயவின் தோற்றத்தின் பின்புலம்

இலங்கையின் நிலமானிய சமூகத்தின் பிரிக்க முடியாத ஓர் அங்கமாக சாதி முறை இருந்து வந்தது. இலங்கையின் பௌத்த சமயமும் சாதி என்ற சமூக நிறுவன ஒழுங்கிற்கு இயைந்ததாக தன் நடைமுறைகளை மாற்றிக் கொண்டது.

சாதிக்கும் சமயத்திற்கும் உள்ள நெருங்கிய பிணைப்பை மலல்கொடவின் நூலின் சில பகுதிகள் சிறப்பாக விபரிக்கின்றன. நூலின் முதற் பகுதியில் அமரபுர நிகாயவின் தோற்றமே சாதி அந்தஸ்தில் குறைந்தவர்களாகக் கருதப்பட்ட சாதியினரின் எதிர்ப்புணர்வின் வெளிப்பாடு என்பதை அவர் தெளிவுபடுத்துகிறார். மலல்கொடவின் கூற்றொன்றை இங்கே மொழிபெயர்ப்பாகத் தருகின்றேன்.

"கொள்கையளவில் பௌத்த துறவிகள் சாதிக்கு அப்பாற்பட்டவர்கள். ஏனெனில், சாதி என்ற வகைமை சமூகம் சார்ந்தது. சமூகத்தை துறந்த துறவிகளுக்கு சாதியென்று ஒன்று கிடையாது. ஆயினும் நடைமுறையில் இந்த இலட்சிய நிலையை காண்பது அரிது. குறிப்பாக எமது ஆய்வுக்குரிய காலப்பகுதியில் இந்த இலட்சியநிலை நடைமுறையில் காணப்படவில்லை. இதற்குரிய காரணங்களை நான் பின்னர் இங்கு கூறவுள்ளேன். துறவிகளாகச் 'சங்க' அமைப்பில் சேரும் பிக்குகள் சாதி அடையாளங்களைத் துறப்பது கிடையாது. மாறாக அவர்கள் தமது சாதிபற்றிய உணர்வு உடையவர்களாகவே இருந்தனர். இந்நூலில் 'சலாகம் துறவி',

*‘கராவ துறவி’ போன்ற தொடர்களை நான் உபயோகிப்பதன் காரணம் யாதெனில் இச் சாதிகளைச் சேர்ந்த துறவிகளே இந்த அடையாளப் பெயர்களால் அக் காலத்தில் தம்மை அழைத்துக் கொண்டார்கள் என்பதாகும். (பக்.88)”*

சாதியும் சமயமும் ஏன் ஒன்றாகப் பிணைப்புண்டிருந்தன என்பதை மலல்கொட பின்வருமாறு விளக்குகிறார்:

*“இலங்கையில் பிற பௌத்த நாடுகளைப் போன்றே ஒழுங்கமைக்கப்பட்ட சமயம் ஒரு சமூக நிறுவனம் என்ற வடிவத்தைப் பெற்றது. சமூகத்துடன் தமக்கு உள்ள பிணைப்புக்களை அறுத்துக் கொண்ட தனிநபர்களின் சேர்க்கையாகச் சமயம் விளங்கவில்லை. அது நிறுவனமாக நிலை பெற்றதால் கோட்பாட்டளவில் சமயத்திற்கும், சமூகத்திற்கும் இடையில் நிலவிய வேறுபாடு யதார்த்தத்தில் நடைமுறையில் காணப்படவில்லை. சமூகத்தில் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய அளவுகோல்கள் எவையோ, அத்தகைய (சாதி) அளவுகோல்கள் சமய நிறுவன அமைப்புக்குள்ளும் புகுந்து கொண்டன. (பக்.89)”*

நிலப்பிரபுத்துவச் சாதியமைப்பு அரசியல் கட்டமைப்புக்களில் எவ்விதம் வெளிப்பட்டதோ, அவ்விதமே சமய நிறுவனக் கட்டமைப்புக்களிலும் பௌத்த விகாரைகளின் சமய நடவடிக்கைகளிலும் வெளிப்பட்டதை மலல்கொட பின்வருமாறு எடுத்துக் கூறுகிறார்:

*“நிலமானிய பொருளாதார முறையின் சிக்கலான தொழில் பிரிவினை சாதியை அடிப்படையாகக் கொண்டிருந்தது. மடாலயங்களின் சொத்துக்களின் நிர்வாகக் கட்டமைப்பிலும் இது போன்ற தொழில் பிரிவினை இருந்தது. மடாலயங்களுக்குச் சொந்தமான ‘முத்தெட்டு’ வகை நிலங்களை கொவிகம சாதியினைச் சேர்ந்தோர் குத்தகைக்குப் பயிரிட்டனர். கோவில்களின் சமயத் துறவிகளுக்கு அவர்களின் அறுவடையின் ஒரு பகுதி வழங்கப்பட்டது. ஏனைய சாதிகளைச் சேர்ந்தவர்கள் கோவில்களுக்கு தமது சேவைகளை வழங்கினார். இவர்களுக்கு சேவைக்குரிய கூலியாக அரிசி வழங்கப்பட்டது. அல்லது கோவில் நிலத்தில் பயிரிடும் உரிமை வழங்கப்பட்டது. கோவில்களைக் கட்டுதல், பிற தொழில்நுட்ப வேலைகள் தெரிந்த உழைப்பாளர்களையும், சித்திர வேலைகள், வர்ணம் பூசுதல் போன்ற வேலைகளில் தேர்ந்தவர்களான ஆட்களையும் நவண்டன சாதிக் குழு வழங்கியது. செங்கல், ஓடு, மட்பாண்டங்கள் என்பனவற்றை கோவிலுக்கு வழங்குபவர்களாக குயவர் சாதியினர் பணி செய்தனர். கோவில்களதும் மடாலயங்களதும் சுவர்களுக்கு வெள்ளையடிக்கவும், நிலத்திற்கு வெள்ளையடிக்கவும் தேவையான சுண்ணாம்பை ‘குணு’ சாதியினர் வழங்கினர். ‘ரதவ்’ என்னும் வண்ணார் குலத்தவர் சலவை செய்த துணியையும், விளக்கு எரிப்பதற்கான திரிச்சீலையையும் கொடுத்தனர். ‘பெரவயோ’ எனப்படும் சாதியினர் மேளமடித்தல், குழல் ஊதுதல், நடனம் ஆடுதல் ஆகிய பணிகளை கோவில்களில் நிகழ்த்தினர். ‘படுவோ’ சாதி ஆட்கள் சுமைகளைத் தூக்கிச் செல்லுதல், கோவிலின் தலைமைத் துறவியை பல்லக்கில் வைத்துக் காவிச் செல்லுதல் ஆகிய பணிகளைச் செய்தனர். இவ்விதமாக வெவ்வேறு சாதிகள் கோவிலின் பிரதம துறவிக்கு ஆற்றிய பணிகளை நோக்கும் போது நிலப் பிரபுவிற்கும் சேவைச் சாதிகளுக்கும் இடையிலான உறவு முறை கோவில் அமைப்புக்குள்ளே செயல்பட்டதைக் காண்கிறோம். (பக். 90)”*

கரையோர மாகாணங்களின் சாதிக்கட்டமைப்பில் சலாகம, கராவ, துராவ என்ற மூன்று சாதிகள் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன. இச்சாதிகள் கொவிகம சாதியைவிடத் தாழ்ந்த அந்தஸ்தை பெற்றன. காலனிய ஆட்சியின் தாக்கத்தினால் இச்சாதிகள் பொருளாதார நிலையில் படிப்படியாகத் தம்மை உயர்த்திக் கொண்டன. இம்மூன்று சாதிகளுள் சலாகம சாதியினர் டச்சு ஆட்சியின்போது பொருளாதார நிலையில் உயர்ந்தனர். கறுவாப்பட்டை உரிக்கும் தொழிலைச் செய்தவர்களான சலாகம சாதியில் இருந்து பொருளாதார நிலையில் உயர்வு பெற்ற உயர்குழாம் உருவாகியது. இவ்வுயர் குழாத்தில் இருந்து கிராமத் தலைமைக்காரன் போன்ற நிர்வாகப் பதவிகளிற்கு ஆட்களை டச்சுக்காரர் நியமனம் செய்தனர். சலாகம கிராமத் தலைமைக்காரர்கள் தம் சாதியைச் சேர்ந்த பிக்குகளுக்கு ஆதரவு கொடுத்தனர். கண்டியின் சியாம் நிக்காய பீடத்தால் ‘உபசம்பாத’ மறுக்கப்பட்ட சலாகம துறவிகள்

கரையோர மாகாணங்களின் சாதிக்கட்டமைப்பில் சலாகம, கராவ, துராவ என்ற மூன்று சாதிகள் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன. இச்சாதிகள் கொவிகம சாதியைவிடத் தாழ்ந்த அந்தஸ்தை பெற்றன.



மாற்றுவழி தேடினர். வலித்தர என்ற இடத்தைச் சேர்ந்த டி சொய்சா ஜயதிலக சிறிவர்த்தன என்னும் சலாகம கிராமத் தலைமைக்காரர், பர்மாவின் தலை நகராக அன்று விளங்கிய அமரபுரம் என்ற நகருக்கு தூதுக் குழுவொன்றை அனுப்புவதற்கான பிரயாணச் செலவை கொடுத்து உதவினார். அங்கிருந்து 1803 ஆம் ஆண்டு நாடு திரும்பிய குழு பர்மிய தேசத்துப் பிக்குகளை அழைத்து வந்தது. உபசம்பாதச் சடங்கை நடத்தியது. இந்நிகழ்வுடன் தோன்றியதே அமரபுர நிகாய என்ற பௌத்தமத பீடம். சமயத்துறையில் கண்டியின் கொவிகம சாதி ஆதிக்கத்திற்கு எதிரான எதிர்ப்பியக்கத்தின் தோற்ற வரலாறு மலல்கொடவின் நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அவ்விபரங்களை இங்கு விரிவஞ்சித் தவிர்த்துள்ளோம். தாழ் நிலையில் இருந்த சிலசாதிகளின் பொருளாதார அந்தஸ்து மாற்றத்திற்கும் சமயத் துறையின் மறுமலர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் உள்ள தொடர்பை மேற்கூறியவை எடுத்துக் காட்டுகின்றன.

தமிழ் மொழியில் இந்து நாகரீகம், இஸ்லாமிய நாகரீகம் ஆகிய பாடங்கள் உயர் கல்விப் பீடங்களில் கற்பிக்கப்படுகின்றன. இப்பாடங்களைப் படிக்கும் மாணவர்கள் சமயங்களை ஒப்பீட்டு முறையில் கற்றல் மிகுந்த பயன்தருவது. ஒப்பீட்டுச் சமயம் (Comparative religion) என்ற கல்வித் துறையை வளப்படுத்தக் கூடிய நூல் என்ற வகையில் கித்சிறி மலல்கொடவின் நூல் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்குப் பயன்படக்கூடியது.

### கித்சிறி மலல்கொட

இவர் 1960 களின் முற்பகுதியில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் சமூகவியலை சிறப்புப் பாடமாகக் கற்றவர். இலங்கையின் தென் பகுதியான மாத்தறையின் இராகுல கல்லூரியில் இருந்து பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர். பேராதனையில் இளமாணிப் பட்டம் பெற்ற பின்னர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார்.

இவரது *'Buddhism in Sinhalese Society 1750 1900 : a Study of Religious Revival and Change'* எனும் நூல் 1976 இல் யுனிவேர்சிட்டி ஒவ் கலிபோர்னியா பிரஸ் பிரசுரமாக வெளியாயிற்று. இந் நூலின் இரண்டாம் பதிப்பு அண்மையில் இலங்கையில் வெளியாகியுள்ளது. கித்சிறி மலல்கொட நியூசிலாந்தில் சமூகவியல் பேராசிரியராகப் பணியாற்றினார். 2019 ஆம் ஆண்டு இவர் இயற்கை எய்தினார்.

(தொடரும்)

நீண்டகால யுத்தத்தின் முடிவிற்கு பின்னர், போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டமைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு சாத்தியமாகாத நிலையில், மீள்கட்டுமானத்திற்கும் அபிவிருத்திக்கும் அரசிடமிருந்து போதுமான ஆதரவு கிடைக்காத சூழலே யதார்த்தமாகியிருக்கிறது. இந்நிலையில், வடக்கில் முனைப்படைந்து வரும் தொழில் முயற்சிகளையும் முயற்சியாளர்களையும் பலரதும் கவனத்திற்கு கொண்டுவருவதே 'வளரும் வடக்கு' எனும் இத் தொடரின் நோக்கமாகும். வடக்குப் பிரதேசத்தில் புலம்பெயர் சமூகத்தின் முதலீடு, புத்தாக்க தொழில் முனைப்புகள், வேலைவாய்ப்புகளை உருவாக்கும் எத்தனிப்புகள், தொழில் முனைவோரின் அனுபவப் பகிர்வு, முயற்சிகளின் தோல்விகளில் இருந்து கற்ற பாடம், வடக்கு பிரதேசத்தில் தனித்துவமாகக் காணப்படக்கூடிய பிரச்சனைகள், உலகளாவிய சமூகத்துடன் இணைந்து முயற்சிகளை வெற்றிகரமாக மாற்றக்கூடிய சந்தர்ப்பங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக இத்தொடர் அமையும். இத் தொடர் வடக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமூக, பொருளாதார முயற்சிகளை விபரிப்பதோடு மட்டுமே நின்றுவிடாது, அதன் தொடர்ச்சியான அசைவிற்குத் தேவையான முன்னெடுப்புகளின் சாத்தியம் குறித்தும் இலங்கையின் பொருளாதாரப் பின்னணியில் தரவுகளோடு ஆராய்கிறது. இது புதிய முயற்சியாளர்களுக்கு பாடமாக அமைவதோடு மேலும் பல முயற்சியாளர்களை வடக்கை நோக்கி வரவழைக்கும்.

*தமிழில் : த. சிவதாசன்*




**ஜெகன் அருளையா**

இக் கட்டுரை ஆசிரியர் ஜெகன் அருளையா, இலங்கையில் பிறந்து தனது 2 வயதில் தனது பெற்றோருடன் பிரித்தானியாவிற்கு இடம் பெயர்ந்தவர். லண்டனில் வளர்ந்து, 1986 இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இயற்கை விஞ்ஞானத்தில் பட்டம் பெற்ற அவர் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக தகவற் தொழில்நுட்பத் துறையில், அதில் பாதிக் காலம் மென்பொருள் தயாரிப்பாளராக, இலங்கையிலும் வேறு நாடுகளிலும், பிரித்தானிய நிறுவனங்களிலும் பணியாற்றியவர். 2015 இல், நிரந்தரமாக யாழ்ப்பாணத்துக்குக் குடிபெயர்ந்து அங்கு சமூக, பொருளாதாரத் திட்டங்களில் தன்னை ஈடுபடுத்தி வருகிறார்.


# 3AxisLabs :

## யாழ். தகவல் தொழில்நுட்பச் சமூகத்திற்கு மேலுமொரு வருகை

யாழ்ப்பாணத்தில் தகவல் தொழில்நுட்பம் செழித்தோங்குவதற்கு, Yarl IT Hub எனும் நிறுவனத்தினால் நடாத்தப்பட்டுவரும் The Yarl Geek Challenge (YGC) எனப்படும் போட்டி நிகழ்வு ஒரு முக்கிய காரணமாகும். இந் நிகழ்வு இலங்கை முழுவதும் தகவல் தொழில்நுட்பத் துறையில் பல நூற்றுக்கணக்கான அறிவுடையோரை உருவாக்கித் தந்ததுடன் இத் துறையில் பிரபலமான பல நிறுவனங்களையும் உருவாக்கியுள்ளது. இதில் உள்ள விசேடம் என்னவென்றால் YGC தனியே தமது புதிய படைப்புக்களையோ அல்லது பண்டங்களையோ இங்கு காட்சிப்படுத்தவில்லை. மாறாக அது நமது சமூகத்திலிருந்து முளைத்தெழும் இளைய




3AxisLabs ஊழியர்கள்

Image Source - marumoli.com

தலைமுறையினரையும் அவர்களது கூட்டு முயற்சிகளையுமே காட்சிப்படுத்துகிறது. பல தடவைகளில் போட்டி முடிவில் இவர்களது படைப்புகள் பயனளிக்காமல் போய்விடுவதுண்டு எனினும் அவற்றை

முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றிகளை ஈட்டிவருவது இந் நிகழ்வுக்குப் பெருமை சேர்ப்பதாகும். 3AxisLabs என்னும் நிறுவனம் இப்போட்டியின் விளைவாக உருவாக்கப்பட்ட படைப்பு மட்டுமல்ல வெற்றிகரமாக இயங்கிவரும் வியாபார முயற்சியுமாகும்.




**கணனியில் ஆசனங்களைத் தெரிவுசெய்யும் படிவம்**

Image Source - marumoli.com

## Busseat.lk

Busseat.lk என்ற தனியார் பஸ்சேவை பயணச்சீட்டுகளை ஒதுக்கீடு செய்யும் சேவையை வழங்கும் இணையத்தளத்தை எடுத்துக் கொள்வோம். இது 2014 இல் நடைபெற்ற, YGC போட்டித் தொடரின் மூன்றாவது நிகழ்வில் (YGC3) பங்குபற்றி வெற்றியீட்டிய ஒரு இளைஞர் குழுவின் வெற்றிக் கதை. ஐந்து பேரைக் கொண்ட இக்குழுவிலிருந்து மூவர் பிரபல தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் பணியாற்றச் சென்றுவிட்டார்கள். ஒருவர் PhD மேற்படிப்பை மேற்கொள்வதற்கெனச் சென்றுவிட்டார். இறுதியில் தனித்துவிடப்பட்ட நிலையில் அக் குழுவின் தலைவரான பிரசாந்த் சுபேந்திரனுக்கு கொழும்பிலுள்ள மிகவும் பிரபலமான தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திலிருந்து முதன்மை தொழில்நுட்ப அதிகாரி (CTO) பதவிக்கான அழைப்பு வந்தது. ஆனாலும் அப் பதவியை அவர் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டு Busseat.lk நிறுவனத்தை ஆரம்பித்தார்.

YGC3 நிகழ்வின் வழிகாட்டிகளில் ஒருவரும், YGC நிறுவனத்தின் ஆலோசககருமான ஜெஸ்டன் நிரோஜன் 3AxisLabs நிறுவனத்தின் இணை ஸ்தாபகர்களில் ஒருவராவார். பிரசாந்தின் குழுவினருக்கு அவர் வழிகாட்டியாக (mentor) இருக்காவிடினும், அக்குழுவின் நடவடிக்கைகளை உற்று அவதானித்த ஜெஸ்டன குறிப்பாக ஒரு விடயத்தை அவதானித்தார். அதாவது, காட்சிப்படுத்தலின்போது பிரசாந்தின் கவனம் தொழில்நுட்பத்தில் எழுந்த சவால்களை எதிர்கொள்வதை விடவும் அதன் வியாபார முன்னேற்பாடுகள் குறித்த சவால்கள் மீதே குவிந்திருந்தது. பின்னர் ஒருநாள், வெள்ளவத்தையில் நிரோஜன் பிரசாந்தைச் சந்திக்கும் சந்தர்ப்பம் நேரிட்டபோது பிரசாந்தின் கோரிக்கையை ஏற்று அவரோடு இணைந்து செயற்பட இணங்கிக்கொண்டார்.

இச் சந்திப்பைத் தொடர்ந்து கொழும்பின் பிரபலமான நிறுவனமான Hsenid இல் பணிபுரிந்து கொண்டிருந்த நிரோஜன் தன் பதவியைத் துறந்துவிட்டு பிரசாந்துடன் சேர்ந்து தனது கனவுப் பயணத்தில் காலடி எடுத்து வைத்தார். வாரத்தில் திங்கள் முதல் வியாழன் வரை காலை 7 மணி முதல் நள்ளிரவு வரை, வெள்ளிகளில் காலை 7 முதல் பி.ப. 3 மணிவரை, சனிஞாயிறு என்று வாரம் முழுவதும் முழுநேரமாக இருவரும் உழைத்தனர். சமைப்பதற்கோ உடை அலங்காரத்திற்கோ இருவருக்கும் நேரமில்லை. வெள்ளவத்தை கடைகளே அவர்களுக்கு உணவளித்தன. Busseat.lk முகிழ்த்தது. அதில் இணைந்து கொள்ளுமாறு கொழும்பிலுள்ள தனியார் சொகுசு வாகன உரிமையாளர்களிடம் வேண்டிக்கொண்டனர். அவ்வப்போது சினிமாவுக்கும் அழைத்துப்போவது வழக்கமாகியது. மே 2015 இல் Busseat.lk இற்கான மென்பொருள் தயாரிப்பு ஆரம்பமாகியது. ஐந்தே மாதங்களின் பின்னர் அதே வருடம் ஆகஸ்ட்டில்

Busseat.lk தனது சேவைகளை ஆரம்பித்தது.

தனது மொறட்டுவ பல்கலைக்கழகத் தோழர்கள் நவநாகரீக ஆடைகளை அணிந்துகொண்டு குளிரூட்டப்பட்ட கொழும்புக் கோபுர அறைகளில் பணிபுரியும்போது தான் மட்டும் வியர்வையில் தோய்ந்து முதலாளிகளின் படிகளில் ஏறி இறங்குவதைப் பற்றி பிரசாந்த் முகச்சுழிப்போடு கூறிக்கொள்வார். பஸ் முதலாளிகளைத் தமது சேவையில் இணைத்துக்கொள்வது ஏறத்தாழ இயலாமலேயே இருந்தது. பொதுவாக தொழில்நுட்ப அறிவற்றவர்களாக இருந்த அவர்கள் அந்நியமாக இருந்த இச்சேவையை ஏற்றுக்கொள்ளத் தயங்கினார்கள். இலங்கையில் இருந்த 20 பஸ் நிறுவனங்களும் ஒட்டுமொத்தமாக மறுப்புத் தெரிவித்துவிட்டன. அதன் பின்னர நோர்வேயிலிருந்து இலங்கையில் சொகுசு வாகனச்சேவை ஒன்றை நடத்திக்கொண்டிருந்த தமிழர் ஒருவரை அணுகினார்கள். ஆரம்பத்தில் தன்னிடமுள்ள ஒவ்வொரு வாகனத்திலும் நான்கு ஆசனங்களை அவர் Busseat.lk இற்கு வழங்கினார். இதைப் பார்த்த இதர முதலாளிகள் பலரும் படிப்படியாக Busseat.lk இற்குப் படையெடுத்தனர். இவர்களது வரவுடன் Busseat.lk இன் மென்பொருள் அபிவிருத்தியும் வளர்ச்சியடைந்தது. வாகனச் சேவைகளின் பாதைகளையும் நேரகால அட்டவணைகளையும் செவ்வனே நிர்வகிக்க Busseat.lk இன் மென்பொருள் அவர்களுக்கு மிகவும் உதவியது. பயணிகளும் முகவர்களும் ஆசனங்களை முற்கூட்டியே பதிவுசெய்ய Busseat.lk இன் சேவை உதவியது.

### குறைந்தபட்ச சாத்தியப் பண்டம் (Minimum Viable Product - MVP)

தலைப்பு குழப்பமாக இருந்தாலும் கருத்து இதுதான். ஒரு பண்டத்தை - இவ்விடயத்தில் ஆசன ஒதுக்கீடு - தெரிவு செய்யும்போது அத் தேர்வு முறையை எது இலகுவாக ஆக்குகிறதோ அப்பண்டத்தையே மக்கள் விரும்புவார்கள்.



3AxisLabs ஸ்தாபகர்கள்:
பிரசாந்த், நிரோஜன், சாஹித்யன்

Image Source - marumoli.com

இப்படியான அணுமுகுறையுடனேயே Busseat.lk தனது சேவைய ஆரம்பித்தது. பூரண திருப்தி தரும் ஒன்றாக அது இல்லாவிட்டாலும் ஒப்பீட்டளவில் ஏனைய சேவைகளைவிட Busseat.lk மிகவும் தரமானதாகவும் இலகுவானதாகவும் இருந்தது. ஒரு பாவனையாளர் தனது வாகன ஆசனப் பதிவுக்காக பயண முகவர்களைத் தேடி யாழ்ப்பாணத்தின் புழுதி தெளித்த வீதிகளில் அலையாமலோ அல்லது தொலைபேசிகளில் நீண்ட நேரத்தைச் செலவழிக்காமலோ பதிவுகளைச் செய்வதற்கு Busseat.lk வசதி செய்தது. நானே எனது கொழும்புப் பயணத்துக்காக தொலைபேசிகளில் தூங்கி வழிந்தும், ஆஸ்பத்திரி வீதியில் பயண முகவர் அலுவலகங்களில் ஏறி இறங்கியுமிருக்கிறேன். இப்போது Busseat.lk எனது குறைகளை நிவர்த்தி செய்திருக்கிறது. குறிப்பாகத் தமிழ் மொழிப் பாவனையில் இடர்படும் எனக்கு, மனிதத் தொடர்பாடல்களே அவசியமில்லாது எனது காரியங்களைப் பூர்த்தி செய்ய இச்சேவை உதவுகிறது.

பூரண திருப்தியைத் தராதபோதும் அத்தியாவசியத் தேவைகளை வழங்கக்கூடிய 'குறைந்த சாத்தியப் பண்டமாக' அறிமுகப்படுத்தப்பட்ட Busseat.lk பயணிகளின் (பயண) அனுபத்தை அறிந்துகொள்வதையே தனது முதல் குறியாகக் கொண்டிருந்தது. பிரயாணிகள் தமது பயணத் தேவைகளை இலகுவாகப் பதிவு செய்துகொள்வதை அது இலகுவாக்கியது. பதிவுகளைப் பெற்றதும் பின்னணியில் அத் தகவல்களைக் கையாள்வது

முதல் பயணிகளுக்கு அவற்றை மின்னஞ்சல் மூலம் அறிவிப்பது வரை எல்லாமே மனிதர்களாலேயே செய்யப்பட்டது.

வருடங்கள் நகர, பயணிகளின் அனுபவங்களைக் கொண்டு Busseat.lk மேலும் வளர்ச்சியடைந்தது. விமானப் பயணச்சீட்டுகளைப் பதிவுசெய்யும் தரத்துக்கு அது இப்போது வளர்ந்திருக்கிறது. வாகனத்தின் பயண இருக்கைகளைக்கூட ஒரு பயணி தற்போது தேர்வுசெய்துகொள்ளலாம். ஒரு பெண் பயணி தனக்குப் பக்கத்தில் இன்னுமொரு பெண்ணே இருக்கவேண்டுமெனத் தீர்மானித்தால் அதையும்கூட பதிவின்போது தெரிவு செய்யமுடியும். நாட்டு நடப்புகளை விடுப்புப் பார்க்க விரும்பும் ஒருவர் யன்னலோரமாக ஆசனங்களைத் தெரிவு செய்துகொள்ளவும் வசதியுண்டு. குடும்ப உறவினர் எல்லோரும் அருகருகேயோ, விருப்பமில்லாவிட்டால் மிகவும் தூரத்திலேயோ தமது ஆசனங்களைத் தெரிவு செய்துகொள்ளலாம்.

2015 இல் Busseat.lk நிறுவனத்தை ஆரம்பித்ததுமே பிரசாந்தும் நிரோஜனும் ஒரு மென்பொருள் நிறுவனத்தை ஆரம்பிக்க முடிவுசெய்தனர். ஆனால் அதைச் சாத்தியமாக்குமளவிற்குப் போதுமான திட்டங்கள் அவர்கள் கைவசம் இருக்கவில்லை. இதனால் பிரசாந்த் கொழும்பில் தங்கி Busseat.lk அலுவல்களைக் கவனிக்க, 2017 இல் நிரோஜன் யாழ்ப்பாணம் திரும்பினார். யாழ்ப்பாணத்தில் அவர் ஆரோக்யா லைஃப் சிஸ்டம்ஸ் (Arogya Life Systems) என்னும் நிறுவனத்தில் முதன்மைத் தொழில்நுட்ப அதிகாரியாக (CTO) இணைந்து கொண்டார். YGC நிகழ்வுகளின் பெறுபேறாக உருவாகிய இன்னுமொரு தொழில்நுட்ப நிறுவனமே 'ஆரோக்யா'. முன்னணி மருத்துவமனைகளான Durdans, Hemas உட்பட இலங்கையின் பல மருத்துவமனைகளின் செயற்பாடுகளை நிர்வகிக்கும் மென்பொருளைத் தயாரித்தது இந் நிறுவனமே.

## 3AxisLabs இன் ஆரம்பம்

2021 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட கோவிட் நகர்முடக்கம் Busseat.lk இன் செயற்பாட்டுக்கு மிகவும் பேராபத்தாக அமைந்தது. மக்களின் நகர்வுகளுக்கு விதிக்கப்பட்ட நீண்டகாலப் பயணத்தடையால் Busseat.lk இன் ஆசனப்பதிவுகள் ஏறத்தாழ இல்லாமலேயே போய்விட்டது. 2019 இல் பிரசாந்தும் நிரோஜனும் மீண்டும் இணைந்து இன்னுமொரு தொழில்நுட்ப நிறுவனத்தை ஆரம்பிக்கத் திட்டமிட்டார்கள். அதுவே 3AxisLabs. ஆரோக்யாவின் சகோதர நிறுவனமான அரிமாவில் பணியாற்றிக்கொண்டிருந்த தனது நண்பரான சாஹித்யன் விக்னேஸ்வரனையும் நிரோஜன் தம்முடன் இணைத்துக்கொண்டார். 2019 முதல் 2021 வரை இம் மூவரும் தமது திட்டத்தைப் பூரணப்படுத்தினார்கள். பிரசாந்த், நிரோஜன், சாஹித்யன் ஆகிய மூவரையும் இணை ஸ்தாபகர்களாகக் கொண்டு, ஏப்ரல் 2021 இல் 3AxisLabs பிறந்தது. ஒரு வருடத்தின் பின்னர், ஏப்ரல் 2022 இல் அது மேலும் 9 பணியாளர்களைத் தன்னுடன் இணைத்துக்கொண்டது.

ஒரு நிறுவனத்தைத் தனியாக ஆரம்பிப்பதென்பது இலகுவானதொரு காரியமல்ல என்கிறார் பிரசாந்த். மாறுபட்ட செயற்திறன்களைக் கொண்டுள்ளவர்களைப் பங்காளிகளாகக் கொண்டிருப்பது எப்போதுமே நல்லது. ஒவ்வொருவரும் தத்தமது திறன்களில் நம்பிக்கையோடு செயற்படவும் மற்றவர்கள் தமது துறைகளிலும் அதே போன்றே செயற்படுவார்கள் என்ற நம்பிக்கையுடன் நிறுவனத்தை முன்கொண்டு நகர்த்தவும் இது உதவும் என்பது பிரசாந்தின் நம்பிக்கை. 3AxisLabs நிறுவனத்தில் பிரசாந்த் பண்ட விருத்தி (product development), விற்பனை (sales), திட்ட நிர்வாகம் (project management), வாடிக்கையாளர், முதலீட்டாளர் தொடர்புகள் (customer and investor relations) ஆகிய விடயங்களைக் கையாள்கிறார். தொழில்நுட்ப முனைவராக சாஹித்யன் செயலிகள் உருவாக்கம் (mobile applications), முன்னணி (front end), பின்னணி (back end) இயங்குதளங்கள் மற்றும் சிஸ்டம் கட்டுமானம் (system architecture) ஆகிய விடயங்களைக் கையாள்கிறார். முதன்மை தொழில்நுட்ப அதிகாரியாக (Chief Technology Officer) நிரோஜன், நிறுவனத்தின் தொழில்நுட்ப வளர்ச்சித் திட்டங்களை உருவாக்குவதில் செலவிடுகிறார்.

## சர்வதேச வாடிக்கையாளர்கள், கவர்ச்சியான பெயர்

3AxisLabs நிறுவனத்திற்கு அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், டென்மார்க், பிரித்தானியா போன்ற நாடுகளில் வாடிக்கையாளர்கள் இருக்கிறார்கள். பெரும்பாலான வாடிக்கையாளர்கள் புலம்பெயர் தமிழர்களின் சிபாரிசுகள் மூலமாகவே வருகிறார்கள். லிங்க்ட் இன் (linkedin) போன்ற சமூக ஊடகத் தளங்களும் பேருதவி புரிகின்றன. பிரித்தானியாவிலுள்ள நிறுவனமொன்று

2017 இல் இந்தியாவில் தனது பண்டமொன்றைத் தயாரித்தது. ஆனால் வேறு துறைகளுக்கு மாறிக்கொண்டுவிட்டதனாலோ என்னவோ அதன் இந்தியத் தயாரிப்பாளர் பின்னர் காணாமற் போய்விட்டார். மிகவும் தெளிவற்ற மூலாதாரத் தகவல்களைக் கொண்ட இத் திட்டத்தை *3AxisLabs* தத்தெடுத்துக்கொண்டது மட்டுமல்லாது அதை மேலும் மெருகூட்டியும் கொடுத்தது. புதிய பண்டங்களைத் தயாரிப்பதில் மட்டுமல்ல ஏற்கனவே இயங்குநிலையில் இருக்கும் பண்டங்களையும் புதிய தளங்களில் (*platforms*) இயங்குவதற்கேற்றவாறு மாற்றியமைத்துக் கொடுப்பதிலும் *3AxisLabs* மிகத் திறமையாகச் செயற்பட்டு வருகிறது. அது மட்டுமல்லாது சிங்கப்பூரிலுள்ள ஒரு வாடிக்கையாளரின் மென்பொருள் அபிவிருத்திக் குழுவில் இணைந்து பணியாற்றுவதற்கென தனது பணியாளர்களையும் இணைத்துக்கொண்டுள்ளது.

எப்படியான தொழில்நுட்பத் தளங்களில் மென்பொருள்களைத் தயாரிக்கிறீர்கள் என நான் பிரசாந்திடம் கேட்டேன். நான் அறிந்தே இராத நீண்ட பட்டியலோடு வந்தார். இங்கு எழுதமுடியாத அளவுக்கு நீண்டது அது. *Clojure, Quarkus, Flutter, MongoDB, Neo4j, Hadoop, Kubernetes, JanusGraph* ஆகியன அவற்றில் சில. எனது மென்பொருள் பணிக்காலத்தில் எனக்குத் தெரிந்த மென்பொருள் மொழி *BASIC* மட்டுமே. தொழில்நுட்பவியலாளர்கள் இப்போது தமது கற்பனைகளை எங்கெங்கெல்லாமோ கொண்டுபோய் விட்டார்கள்.

*3AxisLabs* இணை ஸ்தாபகர்கள் எது தேவையோ அதைச் செய்து முடிக்கும் வல்லமை கொண்டவர்கள். ஒரு பணி அதன் உயர் தரத்துக்கேற்பச் செய்து முடிக்கப்படாவிடில் மூவரில் ஒருவர் அவரது துறைக்கேற்ப வழிகாட்டியாக இயங்கி அப்பணியைத் திறம்பட முடித்துவிடுவார். அல்லாது போகில் அவரே அப்பணியை எடுத்து எதிர்பார்த்த தரத்திற்கு அதைச் செய்து முடித்துவிடுவார். மென்பொருள் நிறுவனமாயிருந்தாலென்ன வெதுப்பகமாயிருந்தாலென்ன, மெழுகுதிரித் தொழிற்சாலையாகவிருந்தாலென்ன சிறு நிறுவனங்களின் ஸ்தாபகர்கள் தேவையானால் தாமே களத்தில் இறங்கித் தமது பண்டத்தின் தரத்தைச் சீர்செய்து கொள்ளவேண்டும்.

> சமகால பொருளாதாரச் சீர்குலைவு நாட்டைப் பாதித்திருக்கும்போது இப்படியான நிறுவனங்களுக்கு ஆதரவு தருவதன் மூலம் நாம் அனைவருமே நன்மையைப் பெறமுடியும்.

## இப்போது இல்லாவிடில் எப்போது?

தனது பெரும்பாலான வாடிக்கையாளர்களை *3AxisLabs* புலம்பெயர் தமிழர்கள் மூலமாகவே பெற்றுக்கொள்கிறது. வடக்கின் மீள்நிர்மாணத்தைச் செய்வதற்குப் புலம்பெயர் தமிழர்களால் செய்யக்கூடிய அதியுயர் உதவி இதுவாகவே இருக்கும். பண முதலீடுகள் மட்டுமல்ல வெளிநாட்டு நிறுவனங்களுடனான இணைப்பை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமாக வியாபார வலையமைப்பை விருத்திசெய்வதும் எமது மக்களுக்கான உதவிதான்.

பிரசாந்த், நிரோஜன், சாஹித்யன் ஆகியோர் உற்சாகத்துடனும், இலட்சியத்துடனும் தமது இளைய நிறுவனத்தைக் கட்டியெழுப்பி வருகிறார்கள். மென்பொருளுக்கும், தகவல் தொழில்நுட்பத்துக்கும் உலகம் தேடும் சிறந்த இடமாக யாழ்ப்பாணம் இன்னும் உருவாகவில்லை. வாடிக்கையாளர்களை ஈர்ப்பதற்கும், அனுபவம் மிக்க பணியாளர்களைத் தேடி தனியார் நிறுவனங்கள் ஓடி வருவதற்கும் தக்க வகையில் பிரபலமானதொரு யாழ்ப்பாணத்தை உருவாக்க வேண்டும். ஆரோக்யா, *3AxisLabs, Yarl IT Hub, Yarl Geek Challenge* உட்பட்ட நிறுவனங்களும் அமைப்புகளும் இப்பணியைச் செய்வதற்குப் பாடுபடுகின்றன. சமகால பொருளாதாரச் சீர்குலைவு நாட்டைப் பாதித்திருக்கும்போது இப்படியான நிறுவனங்களுக்கு ஆதரவு தருவதன் மூலம் நாம் அனைவருமே நன்மையைப் பெறமுடியும்.

வடக்கில் தொழில் நிறுவனங்களை ஆரம்பிக்க எண்ணுபவர்களும், முதலீடுகளைச் செய்ய விரும்புபவர்களும் 'சரியான தருணத்துக்காக' தாம் எதிர் பார்த்திருப்பதாகக் கூறுகிறார்கள். இப்படியாகப் பலர் எதிர்பார்த்து எதிர்பார்த்து சரியான தருணங்களை இழந்துவிட்டிருக்கிறார்கள். 'முழுநிறைவு முன்னேற்றத்தின் எதிரி' (*Perfection is the enemy of Progress*) என வின்ஸ்டன் சேர்ச்சில் கூறுவார். "அழகற்ற வைரம் சிப்பியை விடச் சிறந்தது" (*A flawed diamond is better than a pebble*) எனக் கூறுகிறார் கொன்ஃபூசியஸ். பிரசாந்த் சுபேந்திரனோடு தொடர்புகொள்ள விரும்புபவர்கள் *prasanth@3axislabs.com* என்னும் மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

# நான்காம் வருடத்தைப் பூர்த்திசெய்யும் வட தொழில்நுட்ப நிறுவனம்

# (Northern Technical Institute)

இலங்கை பூராகவும் உள்ள இளைய தலைமுறையினர் உகந்த வேலையைப் பெறுவதில் மிகுந்த சிரமப்படுகிறார்கள். இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிபரப்படி, 15 முதல் 19 வயது வரையுள்ள இளையவர்களில் 4 பேர்களில் ஒருவர் வேலையைப் பெறமுடியாது அவஸ்தைப்படுகின்றார். 20 முதல் 29 வயதுள்ளவர்களில் 7 பேர்களில் ஒருவருக்கு வேலை கிடைப்பது அரிது. ஒருவர் வேலை தேடி, அது கிடைக்காதபோது அவர் வேலையற்றவர் (*unemployed*) என்ற அந்தஸ்தைப் பெறுகிறார் என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். வேலை தேடுவதில் அக்கறையில்லாது உறவினர்களின் பணத்தில் ஒய்யாரமாகச் சீவிக்கின்றவர்களை நாம் இப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளவில்லை.

நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தியடையாமல் இருப்பதனால் இளையதலைமுறை தமக்கு உகந்த வேலைகளைப் பெறமுடியாதுள்ளனர் என்பது உண்மை. மத்திய வங்கியின் புள்ளி விபரங்களின்படி 30 வயதுக்கு மேற்பட்டவர்களோடு ஒப்பிடும்போது 30 வயதுக்குட்பட்டவர்களிடையே வேலையற்றோர் வீதம் அதிகமாகவிருப்பது தெரிகிறது. இதற்குக் காரணம் இந்த இளம் தலைமுறையினர் தமக்குத் திருப்தி தரும் வேலைகள் கிடைக்காதபோது மனம் தளர்ந்து விரக்தியில் வேலை தேடுவதைப் பிற்போட்டுவிடுகிறார்கள். வயது முதிரும்போது இவர்கள் தமக்கு கிடைக்கும் தரம் குறைந்த வேலைகளை எடுத்துக்கொண்டு தொடர்ந்து தமக்குப் பிடித்தமான வேலைகளைத் தேடுவதை நிறுத்திவிடுகிறார்கள் எனவும் கருத இடமுண்டு.

நமது இளையோரின் இந்த இக்கட்டான நிலையைப் போக்க இரு தமிழர்கள் தீர்மானம் எடுத்துக்கொண்டார்கள். அவர்களில் ஒருவர், சமீபத்தில் அமெரிக்காவிலிருந்து யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிய 'கோபி' என அழைக்கப்படும் கோபிநாத் அமரசிங்கம்; மற்றவர் இலங்கையில் வை.எம். சீ.ஏ. அமைப்பின் தேசிய கவுன்சிலின் பணிப்பாளராக இருந்து ஒய்வுபெற்ற விஜே குலசிங்கம். இளையவர்கள் தமக்குப் பிடித்தமான வேலைகளைப் பெறுவதற்குச் சிரமமாக இருப்பதற்கு காரணம் எமது நாட்டின் கல்வி முறைமையே என இவ்





Image Source - marumoli.com

இருவரும் தீர்மானித்தார்கள். பாடசாலை, பல்கலைக்கழகம் என்ற இரண்டு நிறுவனங்களால் மாணவர்களை அவர்கள் மனதிற்கு உகந்த வேலைகளைப் பெறுவதற்கு தயார்ப்படுத்த முடியவில்லை. மிகத் திறமையான பட்டங்களைப் பெற்றுக்கொண்ட பட்டதாரிகள் கூட வேலைகளுக்கு விண்ணப்பிக்கும்போது நேர்முகப் பரீட்சைகளை எதிர்கொள்ள முடியாமல் தவிக்கிறார்கள். கல்வியின் தராதரத்திற்கும் வேலைகளைப் பெறுவதற்கான தராதரத்துக்குமிடையில் பாரிய இடைவெளிகளோடு இவர்கள் வெளியேறுகிறார்கள் என்பது இந்த இரட்டையரின் கணிப்பு.



கோபிநாத் அமரசிங்கம்

Image Source - marumoli.com

**ஒருவர் வேலை தேடி, அது கிடைக்காதபோது அவர் வேலையற்றவர் (unemployed) என்ற அந்தஸ்தைப் பெறுகிறார் என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். வேலை தேடுவதில் அக்கறையில்லாது உறவினர்களின் பணத்தில் ஒய்யாரமாகச் சீவிக்கின்றவர்களை நாம் இப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளவில்லை.**

கோபிநாத்தின் தந்தையார் பரி. யோவான் கல்லூரியில் பல வருடங்கள் உதவி அதிபராகக் கடமையாற்றியவர். கோபி, இலங்கையில் B.Com. படிப்பையும், அதைத் தொடர்ந்து London CIMA படிப்பையும் முடித்துக்கொண்டு 1987 இல் அமெரிக்கா சென்று அங்கு MBA படிப்பை முடித்தவர். இதைத் தொடர்ந்து அவர் வங்கித் துறையில் நீண்டகாலம் பணியாற்றியதுடன் தொழில் முயற்சிகளிலும் ஈடுபட்டு வெற்றி கண்டவர்.

YMCA தேசிய கவுன்சில் பணிப்பாளராகவிருந்து ஓய்வு பெற்றதும் விஜே, ஏஞ்செல் சர்வதேச பாடசாலை மற்றும் யாழ் பரி. யோவான் கல்லூரி ஆகியவற்றில் நிர்வாகப் பணிகளில் ஈடுபட்டிருந்தார்.

கோபி, விஜே இருவரது சிந்தனையில் உதித்தது தான் வட தொழில்நுட்ப நிறுவனம் (Northern Technical Institute - NTI). வடக்கு இளைஞர்களை காத்திரமான மனதிற்கு உகந்த வேலைகளைப் பெறுவதற்குத் தகுந்த வகையில் தயாரிப்பதை நோக்கமாகக் கொண்டு இருவரும் இந் நிறுவனத்தை உருவாக்கினார்கள்.

விஜே தனது தொடர்புகளைப் பாவித்து, யாழ். கச்சேரிக்கு அருகில் இருக்கும் வை.எம். சீ.ஏ. கட்டிடத்தில் மாதம் 10,000 ரூபா வாடகைக்கு நிறுவனத்துக்குத் தேவையான இடத்தைப் பெற்றுக் கொண்டார். தேசிய தொண்டு நிறுவனங்கள், நண்பர்கள், அமெரிக்காவில் கோபி முன்னர் தலைவராகப் பணிபுரிந்த International Sustainable Livelihood Foundation (ISLF) அமைப்பு ஆகியவற்றின் உதவியுடன் தொழில்நுட்ப நிறுவனத்துக்குத் தேவையான கணனிகள், உபகரணங்கள் மற்றும் நிதி போன்றவற்றைப் பெற்றுக்கொண்டனர். முகநூல் மற்றும் வாய்வழிச் செய்திகள் மூலமும், துண்டுப்பிரசுரங்கள் மூலமும் நிறுவனம் தன் இருப்பையும் நோக்கத்தையும் பறைசாற்றிக் கொண்டது.

2016 இல் கதவுகளைத் திறந்த இந்த நிறுவனம் இம் மாதம் தனது நான்காவது வருடத்தை நிறைவு செய்கிறது. இதுவரை 160 பட்டதாரிகளை உருவாக்கித் தந்திருக்கிறது. கட்டுமானப் பணியாளர், மரவேலைப் பணியாளர், உருக்கு / ஒட்டுத் தொழில் பணியாளர், விவசாயிகள் போன்ற பல தொழில் பின்னணிகளைக் கொண்ட குடும்பங்களிலுமிருந்தும் வந்த மாணவர்கள், பாடசாலையில் கல்வி கற்க முடியாமல் வெளியேறியவர்கள், பட்டதாரிகள் எனப் பலதரப்பட்டவர்களையும் மாணவர்களாக உள்வாங்கியிருந்தது வட தொழில்நுட்ப

நிறுவனம். இவர்களில் பெரும்பாலானவர்கள் க.பொ.த. உயர்தரம் முடித்தவர்களும், பட்டதாரிகளுமாவர். மாணவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் இளம் பெண்கள். சிலர் ஏற்கெனவே தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் பகுதி நேரமாகக் கடமையாற்றுபவர்கள். சிலர் தமது சுய தொழில்நுட்ப தொழில் முயற்சிகளில் ஈடுபடுபவர்கள். வட தொழில்நுட்ப நிறுவனம் இவர்களுக்கு தொழிற்கல்வியை மாத்திரமல்ல நவீன வியாபார அபிவிருத்தி உத்திகளையும் கற்பிக்கிறது. இங்கு பட்டம் பெற்ற சிலர் சுய தொழில்களை ஆரம்பித்து ஏனையவர்களுக்கும் வேலைகளை வழங்கி வருகிறார்கள். ஒருவர் கட்டுமான நிறுவனம் ஒன்றை ஸ்தாபித்துள்ளார். சிலர் வெதுப்பகத் தொழில்களையும், ஆபரண உற்பத்தி, ஆடைகள் தயாரித்தல் போன்ற தொழில்களையும் ஸ்தாபித்திருக்கிறார்கள்.

வை.எம்.சீ.ஏ. மண்டபம் இந் நிறுவனத்திற்கு நல்ல இருப்பிடமாக இருப்பதோடு, மாணவர்கள் பொதுப் போக்குவரத்துப் பயணம் மூலம் அடையக்கூடியதாகவும் இருக்கிறது. இருப்பினும் கிராமப் புறங்களிலிருந்து நெடுநேரம் பயணம் செய்யவேண்டியிருப்பதால், தற்போது இந் நிறுவனம் யாழ் குடாநாடு முழுவதும் கிளைகளைத் திறந்துள்ளது. இதன் பொருட்டு பல சமூக அமைப்புக்களும் அவ்வமைப்புகளின் வரவேற்பு மண்டபங்களில் தற்காலிகமாக வகுப்புக்களை நடத்த அனுமதி வழங்கியுள்ளன. இதன் பிரகாரம் வகுப்புக்கள் விரைவில் 9 இடங்களில் நடைபெறவுள்ளது. அவையாவன:

1. தலைமையகம் (வை.எம்.சீ.ஏ. யாழ்ப்பாணம்)
2. கலைவாணி சனசமூக நிலையம் - தொல்புரம், சுழிபுரம்
3. ஆரவெளி சனசமூக நிலையம் - நுணாவில், சாவகச்சேரி
4. சனசமூக நிலையம் - பாண்டவேட்டை, சுழிபுரம்
5. வை.எம்.சீ.ஏ. - நவாலி
6. சனசமூக நிலையம் - கைதடி
7. சனசமூக நிலையம் - பெரியபளை
8. சனசமூக நிலையம் - உரும்பிராய்
9. Refuge Tabernacle தேவாலயம் - மூளாய்

யாழ். தலைமையகத்தில் கல்வி கற்பவர்களில் பெரும்பாலோர் உயர்தரம் அல்லது சாதாரண தரக் கல்வியை முடித்துக் கொண்டவர்களாக இருப்பினும், கிராமப்புறங்களிலிருந்து வருபவர்களில் பலர் சாதாரண தரக் கல்வியில் சித்தி பெறாதவர்களாகவே உள்ளனர். இதனால் இம் மாணவர்களுக்கு சாதாரண தரக் கல்வியைப் பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களை மீண்டும் பரீட்சை எடுப்பதற்கு உதவி செய்வதையும் NTI நிறுவனம் தன் பணிகளிலொன்றாக எடுத்துள்ளது.

அத்தோடு, தேசிய தொழிற்கல்வித் தராதரத்துக்காக (National Vocational Qualification - NVQ) தனது மாணவர்களை ஊக்குவிக்கும் முயற்சிகளிலும் இந் நிறுவனம் இறங்கியுள்ளது. இக் கல்வியைப் பெற்றுத் தொழில் முனைவர்களாக வர விரும்புபவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் தொடர்புகளையும் இந் நிறுவனம் ஏற்படுத்திக் கொடுக்கிறது.

கோவிட் தொற்று ஊர்முடக்கத்தின் போது, இக் கிராமங்களிலிருக்கும் மக்களுக்கு நல்மனம் கொண்டவர்களின் உதவிகளோடு உணவுப் பொதிகளை இந் நிறுவனம் வழங்கியிருந்தது. இதற்காகப் பலரும் உதவிகளை வழங்கியிருந்தாலும் ஒரு தாயார் மிகப் பெரிய நிதியுதவியைத் தந்துதவியதைக் கூறிக்கொள்ள வேண்டும். அவரது ஒரே மகனான கீரன், அவரது 11 ஆவது வயதில் உயிர்த்த ஞாயிறுக் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டதை நினைவுகூர்ந்து இத் தாயார் தன் மகனின் நினைவாக இப் பண உதவியைச் செய்திருந்தார்.

வட தொழில்நுட்ப நிறுவன மாணவர்கள் சிறப்பான எதிர்காலமொன்றிற்கான பாதையை வகுத்து வருகிறார்கள். இதில் கற்றுத் தேர்ந்த மாணவர்கள் பலர் யாழ், மொறட்டுவ மற்றும் இதர பல்கலைக்கழகங்களில் பட்டதாரிக் கல்வியைத் தொடரும் முயற்சியிலும் இறங்கியிருக்கிறார்கள். சிலர் மானிப்பாய் கிரீன் மருத்துவமனையில் தாதிப் பயிற்சிகளைப் பெறுவதற்கான கல்வியை மேற்கொள்கிறார்கள்.

வட தொழில்நுட்ப நிறுவன மாணவர்கள் சிறப்பான எதிர்காலமொன்றிற்கான பாதையை வகுத்து வருகிறார்கள். இதில் கற்றுத் தேர்ந்த மாணவர்கள் பலர் யாழ், மொறட்டுவ மற்றும் இதர பல்கலைக்கழகங்களில் பட்டதாரிக் கல்வியைத் தொடரும் முயற்சியிலும் இறங்கியிருக்கிறார்கள்.



இரு மாணவர்கள்

Image Source - marumoli.com

பலர் தொழிற்கல்வி பயிற்சி நிர்வாகத்தாலும், தொழில்நுட்பக் கல்லூரிகளாலும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறார்கள்.

மார்ச் 2020 முதல், கோவிட் ஊர்முடக்கக் காலத்தில் நிறுவனத்தின் 50 மணவர்களும் அவர்களது குடும்பங்களும் இணைந்து வீட்டுத் தோட்டத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தினார்கள். இதைவிட, இதர தொழில் முயற்சித் திட்டங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சாம்பிராணிக் குச்சி, மெழுகுதிரி, வாயு அடுப்பு, உணவுத் தயாரிப்பு உபகரணம் மற்றும் பல வீட்டுத் தேவைகள், உலருணவுத் தயாரிப்புகளை இலகுவாக்கும் உபகரணங்கள் தயாரிப்பு போன்ற உருவாக்க முயற்சிகளில் மணவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

மாணவர்களுக்கு வழிகாட்டல் செய்வதற்கென கற்றோரை ஒழுங்கு செய்யும் முயற்சிகளில் சமீபத்தில் இந் நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது. இதன் பிரகாரம் நிறுவனத்தின் வெவ்வேறு நிலையங்களிலுள்ள 15 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு அமெரிக்காவிலுள்ள 15 நிபுணர்கள் வழிகாட்டிகளாகச் செயற்படுவார்கள். இதன் ஒருங்கிணைப்பாளராக டாக்டர் ரோய்.எஸ். கங்கராஜ் பணியாற்றுகிறார்.

அமெரிக்காவிலுள்ள *ISLF USA*, கொழும்பிலுள்ள *ComeShare Foundation* மற்றும் நிதி, வள உதவிகளை வழங்கிவரும் பல தனியான ஆதரவாளர்கள் அனைவருக்கும் *NTI* நிறுவனம் தனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

வட தொழில்நுட்ப நிறுவனத்தைப் பற்றி மேலதிக விபரங்களை அறிய விரும்பின் கோபிநாத் அமரசிங்கம் அவர்களை 0094 (0) 76 602 2126 என்ற தொலைபேசி இலக்கம் மூலமாகவோ அல்லது *nygobi@gmail.com* என்னும் மின்னஞ்சல் மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்.

நிறுவனத்துக்கு நிதிப் பங்களிப்பை செய்ய விரும்புபவர்களுக்கான தகவல்:

*Company Reg No: PVT* 121637
*Facebook: ntijaffna*
*Web; ntijaffna.com*
*Email: svijayakulasingam@yahoo.com, ntijaffna@gmail.com*

*Bank : HNB, Jaffna branch,*
*AC Name; Northern Technical Institute,*
*AC Number;* 219020001106
*Swift code: HBLILKLX*

நன்றி : மறுமொழி, *Lanka Business Online (www.lankabusinessonline.com)*

(தொடரும்.)

கனடா, பெல்ஜியம், சோவியத் ஒன்றியம், சுவிற்சர்லாந்து, இந்தியா, ஸ்பானியா (Spain) ஆகிய ஆறு நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமைகளைப் பற்றி ஆழமான ஆய்வுகளாக இக்கட்டுரைத்தொடர் அமைகிறது. மேற்குறித்த நாடுகளின் அரசியல் வரலாறும், அரசியல் யாப்பு வரலாறும், போருக்கு பிந்திய இலங்கையின் அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு வழிகாட்டியாக அமையும், அரசியல் பாடங்களை (political lessons) கற்றுக்கொள்வதற்கு உதவுவனவாக 'சமஷ்டி அரசியல் முறைமைகள்' என்ற இத்தொடர் அமைகின்றது. இக்கட்டுரைத்தொடர் அரசியல் கோட்பாடுகள் (Political theories) அரசியல் யாப்பு தத்துவங்கள் (constitutional principles) என்பன சார்ந்த விடயங்களை குவிமையப்படுத்தும் உரையாடலை தொடக்கிவைப்பதாக அமைகிறது. தமிழ் சமூகவெளியில் (social space) சமஷ்டி முறைதொடர்பான ஆரோக்கியமான ஒரு விவாதம் இக்கட்டுரைத்தொடரின் பெறுபேறாக அமையும்.

ஆங்கில மூலம் : டேவிட்.ஆர். கமரன்




● கந்தையா சண்முகலிங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.




# கனடாவின் பாரளுமன்ற சமஷ்டி முறைமை

கனடா ஒரு பாராளுமன்ற ஜனநாயக முறையை உடைய நாடு. கனடாவின் அரசுத் தலைமையாளாக பிரித்தானியாவின் எலிசபெத் II அரசி விளங்குகிறார். அவரின் பிரதிநிதியான ஆளுநர் நாயகம் சமஷ்டி அரசின் பிரதிநிதியாக விளங்குவார். அவ்வாறே மாகாணங்களில் ஆளுநர்களும் அரசியின் பிரதிநிதியாக உள்ளனர். கனடாவின் புவி இடப்பரப்பு 9 மில்லியன் சதுர கிலோமீற்றர் ஆகும். இப் புவிப்பரப்பு மூன்று நேர வலயங்களை (TIME ZONES) உள்ளடக்கியது. இந்நாட்டின் சனத்தொகை 31 மில்லியன் ஆகும். சனத்தொகையின் பெரும் பங்கினர் நகரங்களிலும் பட்டினங்களிலும் செறிந்துள்ளனர். இந்நகரங்களும் பட்டினங்களும் பெரும்பான்மை கனடாவின் வடக்கே ஐக்கிய அமெரிக்க எல்லையோரமாக நேர்கோட்டில் அமைந்துள்ளன.

1867 இல் பிரித்தானியாவின் மூன்று காலனியப் பிரதேசங்களை ஒன்றியமாக (UNION) 'பிரித்தானிய வட அமெரிக்கா' என அமைத்த போது கனடா என்ற தேசம் தோன்றியது. நோவா ஸ்கோஷியா, நியு பிறவுண்ஸ்விக், கனடாவின் ஐக்கிய மாகாணங்கள் என்பனவே மேற்குறிப்பிட்ட மூன்று காலனிகளாகும். இறுதியாகக் குறிப்பிட்ட கனடாவின் ஐக்கிய மாகாணம் (UNITED PROVINCE OF CANADA) கிழக்கு, மேற்கு என்ற இரு பிரிவுகளைக் கொண்டிருந்தது. 1867 இன் பின்னர் இவை

முறையே குயுபெக், ஒன்டாரியோ என இரண்டு மாகாணங்களாகப் பிரிந்தன. பின்னர் ஆறு வெவ்வேறு மாகாணங்களும் கனடாவுடன் இணைந்தன. அவையாவன:

மனிட்டோபா (1870), பிரித்தானிய கொலம்பியா (1871), பிரின்ஸ் எட்வேட் தீவு (1873), சஸ்கற்சுவானும் அல்பேர்ட்டாவும் (1905), நியுபவுண்ட்லாந்து (1949), இவற்றை விட யுகொன், வடமேற்குப் பிரதேசம், நுனாவுட் என்னும் மூன்று வடக்குப் பிராந்தியங்கள் (NORTHERN TERRITORIES) 1999 இல் உருவாக்கப்பட்டு கனடாவின் பிராந்தியங்களாக அமைந்துள்ளன.




கனடாவின் பிராந்தியங்களும் மாகாணங்களும்

Image Source - www.mappr.co

கனடாவின் பன்மைத்துவம் மூன்று வகையினதாக இணைந்து அமைந்துள்ளது.

1) மொழி அடிப்படையான பன்மைத்துவம் - ஆங்கிலம், பிரஞ்சு என்பன முதன்மை மொழிகளாகவும் ஏனைய பல மொழிகள் பிற இனக்குழும மொழிகளாகவும் உள்ளன.

2) பிராந்திய ரீதியான பன்மைத்துவம் (REGIONAL DIVERSITY)

3) இனக்குழும பண்பாட்டுப் பன்மைத்துவம் (ETHNO - CULTURAL DIVERSITY)

வரலாற்று ரீதியாக ஆங்கிலம், பிரஞ்சு ஆகிய இரு மொழிகளின் நாடாக உருவான கனடாவின் இருமொழிச் சமூகங்கள் பிரதான மொழிச் சமூகங்களாக (MAIN LANGUAGE COMMUNITIES) உள்ளன. ஆங்கிலம் கனடாவின் 65% வீத மக்களின் தாய்மொழியாக உள்ளது. பிரஞ்சு 24% வீத மக்களின் தாய் மொழியாக உள்ளது. பிரஞ்சு மொழியினர் குயுபெக்கிலேயே பெரும் பங்கில் செறிந்து வாழ்கின்றனர். கனடாவின் குடியேற்றமும், அதன் வளர்ச்சியும் குடிவரவில் தங்கியிருப்பதால் பிறமொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட சனத்தொகை 14% வீதமாக உள்ளது. 1991 இல் 1 மில்லியன் மக்கள் தாம் பழங்குடியினர் மூலத்தை ஓரளவுக்காயினும் உடையவர்கள் எனக் குறிப்பிட்டனர்.

மேற்குலகின் கைத்தொழில் வளர்ச்சியுற்ற நாடுகளில் கனடா ஏழாவது இடத்தைப் பெறுகிறது. அது கைத்தொழில் நாடுகளின் கூட்டான 'GROUP 8' (எண்மர்குழு) இல் உறுப்பினராக உள்ளது. கனடாவிற்கும் பிற நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னர் மேம்பட்டு, தடைகள் குறைக்கப்பட்டு வந்துள்ளன. கனடாவின் ஏற்றுமதிகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) 40% ஆக உள்ளது. இது உலகின் பிறநாடுகளுடன் ஒப்பிடும் போது மிக உயர்வான நிலை ஆகும். கனடாவின் ஏற்றுமதிகளில் 80% வீதம் ஐக்கிய அமெரிக்காவிற்கு செல்கிறது. கனடாவின் பொருளாதாரம் ஐக்கிய அமெரிக்காவுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. இவ்விரு நாடுகளின் வர்த்தக உறவுகளில் கவனிப்புக்குரிய விடயம் யாதெனில் கனடாவின் மிகப்பெரிய வர்த்தகப் பங்காளியாக ஐக்கிய அமெரிக்காவும், ஐக்கிய அமெரிக்காவின் மிகப்பெரிய வர்த்தகப் பங்காளியாக கனடாவும் விளங்குவதாகும். இவ்விரு நாடுகளதும் வர்த்தக உறவுகள் 1989 இல் மேற்கொள்ளப்பட்ட கனடா - ஐக்கிய அமெரிக்கா சுதந்திர வர்த்தக உடன்படிக்கையால் பலப்படுத்தப்பட்டுள்ளன. பின்னர் 1992 இல் கனடா ஐக்கிய அமெரிக்கா, மெக்சிக்கோ ஆகிய மூன்று நாடுகளும் இணைந்து வட அமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (NAFTA) ஒன்றைச் செய்து கொண்டன. இவ் உடன்படிக்கை இவ்வுறவுகளை மேலும் பலப்படுத்தியுள்ளது.

**மேற்குலகின் கைத்தொழில் வளர்ச்சியுற்ற நாடுகளில் கனடா ஏழாவது இடத்தைப் பெறுகிறது. அது கைத்தொழில் நாடுகளின் கூட்டான 'GROUP 8' (எண்மர்குழு) இல் உறுப்பினராக உள்ளது. கனடாவிற்கும் பிற நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னர் மேம்பட்டு, தடைகள் குறைக்கப்பட்டு வந்துள்ளன.**

கனடாவின் பொருளாதாரம் அதன் நிறைந்த இயற்கை வளங்களை ஆதாரமாகக் கொண்டு வளர்ச்சியுற்றது. கனியவளம், விவசாயம், மீன்பிடி, வனத்துறை என்பவற்றோடு இன்று கைத்தொழில்களும் உயர் தொழில்நுட்பத் துறைகளும் பொருளாதாரத்தில் பிராந்தியப்படுத்தப்பட்டதாக உள்ளது. கனடாவின் உற்பத்தியின் பெரும்பங்கு ஒன்டாரியோ, குயுபெக் ஆகிய மத்திய மாகாணங்களின் பங்களிப்பாக உள்ளது. இவ்விரு மாகாணங்களும் சேர்ந்து கனடாவின் கைத்தொழில் உற்பத்திக்கு 80% வீத பங்களிப்பை வழங்குகின்றன. கனடாவின் அரசியல் உறுதிநிலைக்கு கனடாவின் பொருளாதார வளர்ச்சி ஒரு முக்கிய காரணமாக உள்ளது. இதனை விட இரண்டாம் உலக யுத்தத்திற்கு பிற்பட்ட காலத்தில் பின்வரும் நான்கு காரணிகள் கனடாவின் சமஷ்டி முறையின் வளர்ச்சிக்கும் நிலைபேறுக்கும் உதவின.


அ) கனடாவின் சமூகநல அரசு (WELFARE STATE) உருவாக்கம் பெற்றுப் பலப்படுத்தப்பட்டது. அது சமூக நலன்களை கட்டுப்பாட்டில் கொண்டு வரும் அரசாகவும் வளர்ச்சியுற்றது.

ஆ) பிரஞ்சுக்காரர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட குயுபெக் மாகாணத்தில் 1960 களில் தாராண்மைத் தேசிய வாதம் (LIBERAL NATIONALISM) வளர்ச்சியுற்றமை இரண்டாவது காரணியாகும்.

இ) குயுபெக்கில் தேசியவாதம் வளர்ச்சியுற்ற அதேவேளை பிற எல்லா மாகாணங்களிலும் மாகாணங்களைப் பலப்படுத்தல், கட்டி வளர்த்தல் (PROVINCE BUILDING) என்னும் செயல்முறையும் இயக்கம் பெற்றது.

ஈ) நான்காவதாக கனடாவின் பூர்வகுடிகள் (ABORIGINES) சுயநிர்ணய உரிமையை (SELF DETERMINATION) அவாவி நின்றனர்.

இந்த நான்கு காரணிகள் மட்டுமல்லாது வேறு பல காரணிகளையும் அடையாளம் காண முடியும். ஆயினும் மேற்கூறிய நான்கும் கனடாவின் சமஷ்டி பற்றிய புரிதலில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.




**கனடாவில் ஆங்கிலம், பிரெஞ் ஆகிய மொழிகள் பேசப்படும் இடங்கள்**

Image Source - www.statcan.gc.ca

## சமஷ்டி குறித்த அரசியல் யாப்புக் கூறுகள்

பிரித்தானியாவின் பாராளுமன்ற முறையுடன் சமஷ்டி முறையை இணைத்து பாராளுமன்ற சமஷ்டி (PARLIAMENTARY FEDERATION) என்ற யாப்பு முறையை நடைமுறைப்படுத்திய முதலாவது நாடு கனடாவாகும். இம்முறையில் மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கங்கள் என்ற இரு வகை அரசாங்கங்களிடையே



கனடிய பாராளுமன்றம்

Image Source - en.wikipedia.org

இறைமை பிரிபட்டு இருக்கும். இவ் இருவகை அரசுகளும் பாராளுமன்றங்களைக் கொண்டிருக்கும். இதுவே பிரித்தானியப் பாராளுமன்ற ஜனநாயக முறையுடன் சமஷ்டி இணைத்திருப்பதன் தாற்பரியமாகும். சமஷ்டி முறை கனடாவில் பிரிக்கப்பட்ட மாதிரியில் அல்லாத பகிரப்பட்ட மாதிரியாக (SHARED MODEL OF FEDERALISM) உள்ளது. கனடாவின் மத்திய அரசின் மாகாணங்களின் பிரிதிநிதித்துவம் பலமற்றதாக உள்ளது. செனற்சபை பலம் குறைந்தது. இதனால் ஒட்டாவாவில் உள்ள நிர்வாகத்துறை பலமுற்றது. அதைப் போன்றே மாகாண அரசுகளின் நிர்வாகத் துறைகளும் பலம் மிக்கவை. கனடாவின் அரசு முறையில் நிர்வாகத்துறையின் மேலாதிக்கம் (EXECUTIVE DOMINATION) இருந்து வருகிறது.

1867 இல் கனடா மத்தியப்படுத்தப்பட்ட சமஷ்டியாக உருவாக்கப்பட்டது. அவ்வேளை கனடாவின் ஒட்டாவா அரசாங்கம் பலமுடையதாகவும், மாநிலங்களின் மீது ஆதிக்கம் கொண்டதாகவும் இருந்தது. ஆரம்பம் இவ்வாறு அமைந்த போதும் கனடா இன்று பெருமளவில் பரவலாக்கப்பட்ட அதிகாரங்களை உடையதாக மாறியுள்ளது. இவ்வாறு பரவலாக்கம் நிகழ்ந்தமைக்குப் பல காரணங்கள் இருந்தன.

அ) நீதிமன்றங்களின் அதிகாரங்களின் பகிர்வு பற்றிய வியாக்கியானங்களை வழங்கும் தீர்ப்புகள் மாகாண அரசுகளுக்குச் சாதகமாக அமைந்தன.

ஆ) கனடாவின் மத்திய அரசு நிறுவனங்கள் மாகாணங்களின் நலன்களை பிரிதிநிதித்துவம் செய்யக்கூடியனவாய் இருக்கவில்லை. அது கனடாவின் பன்மைத்துவத்திற்கு ஈடு கொடுக்கக்கூடிய நிலையில் இருக்கவில்லை. இந்நிலையில்

மாகாண அரசுகள் தமது அதிகாரங்களைப் பலப்படுத்துவதற்கு மக்களின் ஆதரவு கிடைத்தது.

இ) சுகாதாரம், சமூகநலன் சேவைகள், கல்வி என்பன மாகாணங்களுக்குரிய விடயங்களாகும். இவை 19 ஆம் நூற்றாண்டில் அதிக முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை. 20 ஆம் நூற்றாண்டில் இவை முக்கியம் பெற்றதால் மாகாணங்களின் அதிகார எல்லையும் விரிவடைந்தது.

ஈ) இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னர் குயுபெக்கில் தேசியவாதம் தீவிர வளர்ச்சி பெற்றது. குயுபெக் அரசாங்கத்திற்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதனால் ஏனைய மாகாணங்களும் நன்மை பெற்றன.

மேற்குறித்த காரணங்களால் கனடாவின் ஒட்டாவா அரசாங்கமும் மாகாண அரசாங்கங்களும் அதிகாரப்பலம் மிக்கனவாக விளங்குகின்றன.

அவை இன்று சமூக அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி என்பனவற்றில் முக்கிய பங்காற்றுகின்றன. அரசாங்கங்களுக்கு இடையிலான ஒருங்கிணைவிலும் முன்னேற்றம் காணப்படுகிறது. இடையிடையே அரசாங்கங்களுக்கிடையிலான முறுகல் நிலை எழுந்த போதும், பொதுவாக ஒருங்கிணைப்பும் கூட்டுறவும் முன்னேற்றப் பாதையில் செல்கிறது.

கனடாவின் பிரதான அரசியல் யாப்பு ஆவணங்கள் இரண்டாகும்.

**அரசியல் யாப்புச் சட்டம் 1867**

**அரசியல் யாப்புச் சட்டம் 1982**

1867 சட்டம் 'பிரித்தானிய வடஅமெரிக்க சட்டம்' எனவும் அழைக்கப்பட்டது. அச்சட்டம் பிரித்தானியப் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டது. அச்சட்டம் ஆரம்பத்தில் மூன்று காலனிப் பகுதிகளை ஒன்றிணைத்து கனடாவிற்கு சமஷ்டி முறையையும், பாராளுமன்ற முறையையும் வழங்கியது. 1867 சட்டத்தில் தான் அதிகாரப் பகிர்வு பற்றிய பொது விதிகள் கூறப்பட்டுள்ளன. பாராளுமன்றம், மாகாண சட்டசபைகள், நீதிமன்றங்கள் என்பன பற்றியும் இச்சட்டமே வரையறை செய்துள்ளது. அரசியல் யாப்புச் சட்டம் 1982 அதிகாரங்களை பிரித்தானியாவில் இருந்து கனடாவிற்கு மாற்றுவதற்கான சட்டமாகும். இச்சட்டம் அரசியல் யாப்பை திருத்துவதற்குரிய அதிகாரத்தைக் கனடாவிற்கு வழங்கியுள்ளது. இதனைவிட கனடாவின் பூர்வ குடிகளது உரிமைகள், உடன்படிக்கை உரிமைகள் (TREATY RIGHTS) என்பவற்றை உறுதிப்படுத்துவதாகவும், அனைத்துப் பிரஜைகளுக்கும் பொருந்துவதும் அனைத்து அரசாங்கங்களையும் சட்ட சபைகளையும் கட்டுப்படுத்துவதுமான 'உரிமைகளும் சுதந்திரங்களும் பட்டயத்தை' (CHARTER OF RIGHTS AND FREEDOMS) அறிமுகப்படுத்துவதாகவும் 1982 ஆம் ஆண்டுச் சட்டம் அமைந்தது.

1867 அரசியல் யாப்புச் சட்டத்தின் பிரிவு 91-95 இன் படி சமஷ்டி அரசாங்கத்திற்கும் மாகாண அரசாங்கங்களிற்கும் உரிய அதிகாரங்கள் வகுத்து ஒதுக்கப்பட்டுள்ளன. இச் சட்டத்தின்படி கனடாவின் பாராளுமன்றம் அகல் விரிவான அதிகாரங்களை உடையதாக உள்ளது. கனேடிய பாராளுமன்றத்திற்கென குறிப்பாக ஒதுக்கப்படாத எந்தவோர் அதிகாரமும் கனடாவின் (சமஷ்டி) பாராளுமன்றத்திற்குரிய எஞ்சிய அதிகாரங்கள் (RESIDUAL POWERS) ஆகும். அவை கனேடிய பாராளுமன்றத்திற்கு உரித்தானவை. மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் குறிப்பானவையாகவும் வரையறுக்கப்பட்டவையாகவும் (SPECIFIC AND LIMITED) இருந்தன. ஆயினும் நீதிமன்ற விளக்கம் (JUDICIAL INTERPRETATION) பிரிவு 92 (13) இன் படியான சொத்துக்களும் சிவில் உரிமைகளும் பற்றிய மாகாணங்களின் அதிகாரங்களை ஒரு வகை எஞ்சிய அதிகாரங்களாக மாற்றியுள்ளன.

## P.O.G.G அதிகாரங்கள்

சமஷ்டி பாராளுமன்றத்தின் சட்டவாக்க அதிகாரங்கள் அரசியல் யாப்புச் சட்டம் 1867 இன் பிரிவு 91 இல் கூறப்பட்டுள்ளன. இப் பிரிவு கனேடிய பாராளுமன்றம் 'சமாதானம், ஒழுங்கு கனடாவின் நல்லாட்சி' என்னும்

நோக்கங்களோடு சட்டங்களை, மாகாணச் சட்ட சபைகளுக்குக் குறித்தொதுக்கப்படாத விடயங்களில் ஆக்கலாம் எனக் குறிப்பிடுகிறது. இது அதன் விரிந்த சட்டவாக்க அதிகாரத்தை எடுத்துக் காட்டுவது. இது கனடாவின் சமஷ்டி பாராளுமன்றத்திற்கு கொடுக்கப்பட்ட பொதுவான அதிகாரமாகும். அரசியல் யாப்பினை வரைந்தவர்கள் இப் பொது அதிகாரத்தின் கீழ் அமைவனவான 29 அதிகாரங்களின் தலைப்புகளை அறிவித்தார்கள். இவ் அதிகாரம் 'P.O.G.G ' அதிகாரம் எனக் குறிப்பிடப்படும். அதாவது சமாதானம், ஒழுங்கு, கனடாவின் நல்லாட்சி (PEACE, ORDER AND GOOD GOVERNANCE OF CANADA - சுருக்கம் P.O.G.G) என்னும் பொது அதிகாரம் என்ற பொருள் உடையதாகும். 1867 இன் பின்னர் நீதிமன்றங்கள் (P.O.G.G 'POWERS') பி.ஓ.ஜி.ஜி அதிகாரங்கள் என்பனவற்றை அங்கீகரிக்க மறுத்துள்ளன. P.O.G.G அதிகாரங்களை மூன்று நிலைமைகளுக்கு மட்டும் சமஷ்டிப் பாராளுமன்றம் பிரயோகிக்கலாம் என நீதிமன்றங்கள் தீர்ப்பளித்தன. அம்மூன்று நிலைகளாவன:

1) அதிகாரப் பகிர்வில் ஓர் சட்டவாக்க இடைவெளி (LEGISLATIVE GAP) உருவாகியிருத்தல் : உதாரணமாக கடற்கரையோர கனிய வளங்கள் அல்லது சமஷ்டி மொழிக் கொள்கை

2) 'தேசிய நலன் சார்ந்த கவலை'க்குரியதும் கனடாவின் பாராளுமன்றத்திற்குரிய அதிகாரங்களாகக் குறிப்பிடப்படாதனவும். உதாரணங்கள் கடல் அழுக்காதல், விமானப் போக்குவரத்து

3) தேசிய அவசர காலநிலை (NATIONAL EMERGENCY) ஏற்பட்டிருத்தல். உதாரணம் : நாட்டில் சிவில் குழப்பம் (CIVIL DISORDER) ஏற்படுதல், மோசமான பணவீக்கத்தால் பொருளாதார நெருக்கடி ஏற்படுதல்.

29 தலைப்புக்களில் குறிப்பிடப்பட்டவற்றுள் முக்கியமானவை சில வருமாறு:

- வியாபாரத்தையும் வர்த்தகத்தையும் ஒழுங்குபடுத்துதல் - பிரிவு 91(2) - இது தற்போது முழு நாட்டினையும் பாதிக்கும் சர்வதேச வியாபாரமும் வர்த்தகமும், மாகாண வியாபாரமும் வர்த்தகமும் என்பனவற்றை உட்படுத்துவதாக உள்ளது.

- வேலையற்றோருக்கான காப்புறுதி - பிரிவு 91(2a) - இப்பிரிவு 1940 ஆம் ஆண்டின் அரசியல் யாப்புச் சட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

- வரிவிதிப்பு - பிரிவு 91(3). இப்பிரிவு எம்முறையிலோ, வகையிலோ வரிவிதிக்கும் அதிகாரத்தைச் சமஷ்டி அரசுக்கு வழங்கியது.

- இந்தியர்களும், இந்தியர்களுக்கு ஒதுக்கப்பட்ட காணிகளும் - பிரிவு 91(24) (இந்தியர் என்பது பழங்குடிகளைக் குறிப்பது).

- உடன்படிக்கைகளைச் செய்யும் அதிகாரம் - பிரிவு 132. இப்பிரிவு சர்வதேச உடன்படிக்கைகளைச் செய்யும் அதிகாரத்தை சமஷ்டி அரசாங்கத்திற்கு வழங்கியது. உடன்படிக்கை மாகாணங்களின் நியாயாதிக்கத்திற்கு உட்பட்ட விடயமாயின் மாகாணங்கள் அவ் உடன்படிக்கையை ஏற்று அங்கீகரிக்கும் வரை செயற்பாடுடையதாகாது.

- பணமும் வங்கிகளும் பற்றிய அதிகாரம், மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து அதிகாரம்.

1867 ஆம் ஆண்டின் அரசியல் அமைச்சுச் சட்டம் 92 விடயங்களை மாகாணங்களுக்கு உரியன எனக் குறிப்பிட்டுள்ளது. அவற்றுள் மிக முக்கியமானவை பின்வருவன:

- நேரடி வரிகள் - பிரிவு 92 (2)

இப் பிரிவு நேரடி வரிகள் (DIRECT TAXES) மாகாணத் தேவைகளுக்கான வருமானத்தைப் பெறும் அதிகாரத்தை மாகாணங்களுக்கு வழங்கியது.

- அரசாங்க காணிகளின் விற்பனையும் முகாமை செய்தலும் - பிரிவு 92(5) - மாகாணத்தில் உள்ள காணிகளும் அரசாங்க காணிகளும் இயற்கை வளங்களும் அம்மாகாணத்தின் சொத்தாகும். இவற்றின் மூலம் குறிப்பிடத்தக்களவு அரச வரிகள் வருவாய் கிடைப்பதோடு, இவ் வரிவருவாய் மாகாணத்தின் பொருளாதாரத்தை இயக்குவதற்கு உபயோகமாகிறது.

• சுகாதாரமும் நலன்புரி சேவைகளும் - பிரிவு 92(7) - இது 20 ஆம் நூற்றாண்டில் முக்கியத்துவம் பெற்ற ஒரு துறையாகும். இன்று சுகாதாரப் பராமரிப்பு மாகாண அரசாங்கங்களுக்குப் பெரும் செலவை ஏற்படுத்துவதாக உள்ளது.

• மாநகரசபை நிறுவனங்கள் - பிரிவு 92(9) - அதாவது மாநகரசபை அரசாங்கங்களை மாகாண அரசாங்கங்கள் ஆக்கவும் முடியும்; அழிக்கவும் முடியும்.

• பிரதேசப் பணிகளும் நடவடிக்கைகளும் - பிரிவு 92(10).

• மாகாணத்தினுள் சொத்துரிமைகளும் குடியியல் உரிமைகளும் - பிரிவு 92(13). மாகாணங்களின் அதிகாரங்களில் இதுவே முக்கியமானதாகக் கொள்ளப்படுகிறது. ஏனெனில் மாகாணங்கள் இப்பிரிவில் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களை உபயோகித்து காணிச் சொத்துக்கள், குடியியல் உரிமைகள் ஆகியன தொடர்பாக தத்தமது மாகாணங்களுக்குரிய சட்டங்களை இயற்றலாம்.

• உள்ளூர் சார்ந்த தனியாள் சார்ந்த விடயங்கள் - பிரிவு 92 (16). இது மாகாண அதிகாரத்தின் இன்னொரு மூலமாகக் கருதப்படுகிறது. உள்ளூர் சார்ந்த அல்லது தனிநபர் சார்ந்த விடயங்களுடன் தொடர்புடையவை. மேலும் மாகாணங்களின் வேறு அதிகாரங்களுடன் குறிப்பிட்டு சொல்லப்படாதவற்றுடன் இது தொடர்புடையதாக இருக்கின்றது.

ஒருங்கிணை அதிகாரங்கள் (CONCURRENT POWERS) நான்கு உள்ளன.

• முதலாவது ஒருங்கிணை அதிகாரமாக குறிப்பிடத்தக்கது விவசாயமும் குடிவரவும் (பிரிவு 95) ஆகும். 95 ஆம் பிரிவு இவ்விடயங்கள் சம்மந்தமாக சமஷ்டி பாராளுமன்றமும் மாகாண பாராளுமன்றங்களும் சட்டம் இயற்றலாம் எனக் குறிப்பிடுகின்றது. முரண்பாடு ஏற்படுமிடத்து சமஷ்டி சட்டமே வலிதுடையதாகும்.

• இரண்டாவது ஒருங்கிணை அதிகாரம் இயற்கை வளங்களுடன் தொடர்புடையது. பிரிவு 92 A, 1980-92 காலத்தில் அரசியல் யாப்பு தொடர்பான உரையாடல்கள் இடம்பெற்றன. அதன் பயனாக இப்பிரிவு 92(A) சேர்க்கப்பட்டது.

இப்பிரிவின் அதிகாரத்தை உபயோகித்து மாகாணங்கள் தமது பகுதியின் புதுப்பிக்கப்பட முடியாத வளங்கள், வனவளம், மின்சாரவளம் என்பன பிற மாகாணங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதைக் கட்டுப்படுத்தலாம். முன்னர் மாகாணங்கள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை இப்பிரிவு நீக்கி விட்டது. இவ்விடயத்திலும் முரண்பாடு ஏற்படுமிடத்து சமஷ்டி பாராளுமன்றச் சட்டமே வலிதுடையதாகும்.

• மூன்றாவது ஒருங்கிணை அதிகாரம் கல்வி பற்றிய பிரிவு 93 ஆகும். கல்வி தொடர்பாக சமஷ்டி பாராளுமன்றத்திற்கு உரிய அதிகாரம் பொதுவானது அன்று. விசேட சூழ்நிலைகளின் போது (SPECIAL SITUATIONS) சம்மந்தப்பட்டதே இதுவாகும். கல்வி மாகாணங்களிற்குப் பொறுப்பான அதிகாரமாகும். சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகள் சமயப் பாடசாலைகள் ஆகியவற்றின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இவ்வுரிமை வழங்கப்படுகிறது. இதன்படி மாகாணங்களின் அதிகாரத்தில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. கல்வி தொடர்பாக சமஷ்டி பாராளுமன்றம் குறைதீர் சட்டவாக்கத்தையும் (REMEDIAL LEGISLATION) கொண்டு வரலாம். ஆயினும் இவ் அதிகாரம் இதுவரை உபயோகிக்கப்படவில்லை. 20 ஆம் நூற்றாண்டின் நவீன ஜனநாயக அரசாக கனடா வளர்ச்சியுற்றுள்ள நிலையில் சுகாதாரம், நலன்புரி சேவைகள் போன்று கல்வியும் மிக முக்கியமான பொறுப்பாக மாறியுள்ளது. உலகின் சமஷ்டிகளுள் கனடா, சமஷ்டி அசராங்கத்திற்கு குறைந்தளவு அதிகாரங்களை வழங்கும் சமஷ்டி முறையாக விளங்குவது ஒரு வழமைக்கு மாறான சிறப்பாகும்.

• நான்காவது ஒருங்கிணை அதிகாரம் ஓய்வூதியம் தொடர்பான 94 (a) ஆகும். இப்பிரிவு 1951 இல் புதிதாகச் சேர்க்கப்பட்டது. பின்னர் 1964 இல் திருத்தம் செய்யப்பட்டது. இது முதிய வயது ஓய்வூதியம் அதற்குத் துணையான மேலதிக நன்மைகள் பற்றிய அதிகாரமாகும். மாகாணச் சட்டங்களுக்கும் சமஷ்டிச் சட்டங்களுக்கும் முரண்பாடு ஏற்படுமிடத்து இவ்விடயத்தில் மாகாணச் சட்டங்களே வலிதுடையனவாகும் என்று குறிப்பிட்டிருப்பது வழமைக்கு மாறானது.

மேற்குறிப்பிட்டவற்றை விட மாகாணச் சட்டவாக்க உரிமைகளும் சமஷ்டி சட்டவாக்க உரிமைகளும் மேவுகை (OVERLAP) ஏற்படும் மூன்று விடயங்கள் உள்ளன.

முதலாவது, குற்றவியல் சட்டம் தொடர்பான பிரிவு 91 (27) ஆகும். இப்பிரிவு சமஷ்டி பாராளுமன்றத்திற்கு குற்றவியல் தொடர்பான சட்டங்கள், அதன் நடைமுறை (CRIMINAL PROCEDURE) என்பன பற்றி சட்டமியற்றும் அதிகாரத்தை வழங்குகிறது. ஆயினும் பிரிவு 92 (14) மாகாணங்களுக்கு நீதி நிர்வாக அதிகாரத்தை (ADMINISTRATION OF JUSTICE) வழங்குகிறது. ஆகவே குற்றவியல் சட்டக்கோவை சமஷ்டி அரசாங்கத்தின் சட்டமாகவும், காவல் பணியும் (POLICING) வழக்குத் தொடுத்தலும் (PROSECUTION) மாகாணங்களால் பிரிவு 92(14) மூலம் நிறைவேற்றப்படுவனவாகவும் உள்ளன.

> ”
>
> **கனடாவின் இரண்டாவது அல்லது மேற்சபை செனற் ஆகும். இச்சபையில் 105 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் ஆளுநர் நாயகத்தினால் பிரதமரின் சிபாரிசின் படி நியமிக்கப்படுபவராவர். இந் நியமனங்கள் பிராந்திய நலன்கள், அரசியல் சார்பு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படுபவை.**

இரண்டாவது, நீதிமன்றுகள் தொடர்பானவை. கனடா ஒன்றிணைந்த நீதி முறைமையை உடையதாய் விளங்குகிறது. சமஷ்டி அரசாங்கம் உயர்நீதிமன்றுகளின் நீதிபதிகளது நியமனம், சம்பளம், படிகள், ஓய்வூதியம் என்பனவற்றிற்குப் பொறுப்பாக உள்ளது. மாகாண அரசாங்கங்கள் நீதிமன்றுகளைத் தாபித்தல் அவற்றின் நிர்வாகம் என்பனவற்றிற்குப் பொறுப்பாக உள்ளன. ஒவ்வொரு மாகாணத்தினதும் கீழ்நிலை நீதிமன்றங்களின் நிர்வாகமும் அந்தந்த மாகாணத்திடமே உள்ளது.

மூன்றாவது ஒருங்கிணை அதிகாரம் சமஷ்டி அரசாங்கத்தின் செலவிடும் அதிகாரமும் (SPENDING POWER) பகிரப்பட்ட செலவுத் திட்டங்களுமாகும். பகிரப்பட்ட செலவுத்திட்டத்தின்படி சமஷ்டி அரசாங்கம் மாகாண அரசுகளுக்கு அவற்றின் அரசியல் யாப்புப் பொறுப்புக்கள் சிலவற்றை நிறைவேற்றுவதற்குரிய நிதியை வழங்குகிறது. இது பெரும் சர்ச்சைக்குரிய விடயமாக இருந்து வருகிறது. சுகாதாரம், சமூக உதவி, இரண்டாம் நிலைக் கல்விக்குப் பிந்திய கல்வி என்பன இவற்றுள் பெரும் செலவுத் திட்டங்களாகும். இவை தற்போது கனடா சுகாதார சமூக மாற்றத் திட்டத்தில் (CANADA HEALTH AND SOCIAL TRANSFER PROGRAM) இணைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் கீழ் காசாகவும், வரிப்பண மாற்றாகவும் 25 மில்லியன் கனடிய டொலர்கள் ஆண்டு தோறும் மாகாணங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. சமஷ்டி அரசாங்கத்தின் இச் செலவிடும் அதிகாரம் (SPENDING POWER) 91 ஆவது பிரிவில் வெளிப்படையாகக் குறிப்பிட்ட அதிகாரம் அன்று. இது 1867 ஆண்டுச் சட்டத்தின் பல பிரிவுகளின் ஏற்பாடுகளின்படி ஊகித்துக் கொள்ளப்படும் (INFERRED) அதிகாரமாகும்.

கனடாவின் இரண்டாவது அல்லது மேற்சபை செனற் ஆகும். இச்சபையில் 105 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் ஆளுநர் நாயகத்தினால் பிரதமரின் சிபாரிசின் படி நியமிக்கப்படுபவராவர். இந் நியமனங்கள் பிராந்திய நலன்கள், அரசியல் சார்பு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படுபவை. கட்சி விசுவாசம் அர்ப்பணிப்புடைய சேவை என்பனவற்றிற்காக வழங்கப்படும் வெகுமதியாகவும் இவை கருதப்படுகின்றன. சட்டங்கள் சனப் பிரதிநிதிகள் சபை, செனற் என்ற இரண்டினாலும் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இதனால் செனற்றுக்கு ‘வீட்டோ’ (VETO) அதிகாரம் கிடைக்கின்றது. இவ் ‘வீட்டோ’ அதிகாரம் மிக அருமையாகவே நடைமுறையில் பிரயோகிக்கப்பட்டது. எதிர்காலத்திலும் இது பிரயோகிக்கப்படும் சாத்தியம் குறைவு. செனற் சபை தெரிவு செய்யப்பட்ட சபை அன்று. அது நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சபையாகும். ஆகையால் பிரதம மந்திரியின் ஆதரவாளர்களைக் கொண்ட சபையாக உள்ள இச்சபை ஜனநாயக ஏற்புடைமை பெற்ற சபையாக இல்லை. செனற் சபைச் சீர்திருத்தம் பற்றிய ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. மாகாணங்களின் குரலாக செனற் சபை ஒலிக்க வேண்டுமானால் அது தெரிவு செய்யப்பட்ட சபையாக இருக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. ஆயினும் இன்றுவரை எவ்வித சீர்திருத்தமும் மேற்கொள்ளப்படவில்லை.

கனடிய அரசியல் யாப்புச் சார்ந்த சட்டங்களுக்கு விளக்கமளித்தல், சமஷ்டி அரசாங்கம் - மாகாண அரசாங்கங்கள் என்ற இரு வகை அரசாங்கங்கள் மத்தியில் எழக்கூடிய சட்டப் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் ஆகியன நீதித்துறை அதிகாரம் சார்ந்த விடயங்களாகும்.

இவ் அதிகாரம் 1949 ஆம் ஆண்டு வரை, பிரித்தானியாவின் பிரபுக்கள் சபையின் ஒரு அங்கமாக விளங்கும் கோமறைக்கழகத்தின் பிரித்தானிய நீதிக்குழுவின் (JCPC) அதிகாரமாக இருந்தது. இச் சபைக்கு மேன்முறையீடு செய்தல் 1949 இல் ஒழிக்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை அதி உயர் நீதி அதிகாரம் பெற்றதாகக் கனடிய உயர்நீதிமன்றம் விளங்குகிறது. இம் மாற்றம் அரசியல் யாப்புத் திருத்தமாக அரசியல் யாப்பின் பகுதியாக உட்படுத்தப்படவில்லை. கனடிய சமஷ்டி அரசாங்கத்தின் சாதாரண சட்டம் மூலம் இம் மாற்றம் கொண்டுவரப்பட்டது. உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகள் கனடிய அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிறார்கள். இந் நியமனங்களில் மாகாணங்களிற்கு எவ்வித முறைசார் வகிபாகமும் இல்லை. ஆயினும் நீதிபதிகள் பிராந்திய அளவுகோல்களின் படி நியமிக்கப்படுகின்றனர்.

1982 ஆம் ஆண்டு அரசியல் யாப்புச் சட்டம் பிரித்தானியர் தொடர்பில் இருந்து விடுபட்டு கனடாவின் அரசியல் யாப்புத் திருத்தத்திற்கான வழிவகைகளையும் சேர்த்துக் கொண்டுள்ளது. இதனால் பிரித்தானியாவின் பங்களிப்பு இல்லாமலே அரசியல் யாப்பைத் திருத்திக் கொள்ள முடிகிறது. கனடாவின் அரசியல் யாப்பைத் திருத்துவதற்கான ஐந்து வழிமுறைகள் உள்ளன. செய்யப்படவேண்டிய திருத்தத்தின் தன்மையைப் பொறுத்து ஐந்து முறைகளில் ஒன்று தேர்வு செய்யப்படும். ஆயினும் எல்லா வகைத் திருத்த முறைகளுக்கும் பொருத்தமான பொதுவான திருத்த விதிமுறை (AMENDING FORMULA) ஒன்று உள்ளது. அதன்படி கனடிய பாராளுமன்றமும், கனடாவின் பத்து மாகாணங்களின் சட்டசபைகளுள் ஏழு மாகாணங்களின் சட்டசபைகளின் அங்கீகாரத்துடன் திருத்தம் செய்யப்படும். மாகாண சபைகள் ஏழினதும் சனத்தொகை கனடாவின் மொத்தச் சனத்தொகையின் 50 வீதத்தை உள்ளடக்கியதாக இருத்தலும் வேண்டும்.

### டேவிட்.ஆர். கமரன் (David.R. Cameron)

இவர் அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத் துறையின் பேராசிரியரும், அத் துறையின் ஐரோப்பிய யூனியன் கற்கைகள் திட்டத்தின் பணிப்பாளரும் ஆவார். ஐரோப்பிய நாடுகளின் வர்த்தகம், பொருளாதாரம், அரசியல், அயலுறவுக் கொள்கை ஆகிய விடயங்கள் பற்றி ஆய்வுகளை எழுதி வெளியிட்டுள்ளார். கனடாவின் சமஷ்டி முறை பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றை எழுதியுள்ளார். இக் கட்டுரை இவரால் 2004 ஆம் ஆண்டு



டேவிட்.ஆர். கமரன்

Image Source - macmillan.yale.edu

எழுதப்பட்டது. இது *'The federal Idea'* என்னும் தலைப்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிறுவனத்தின் (CPA) வெளியீட்டில் இடம்பெற்றுள்ளது.

மேலதிக தகவல்களைப் பெறக் கூடிய மூலங்கள் (SOURCES FOR FURTHER INFORMATION) :

*Funston, Bernard and Eugene Meehan, Canada's Constitutional Law in a Nutshell, Toronto: Carswell,* 1998.

*Hogg. Peter, Constitutional Law of Canada, Student Edition, Toronto: Carswell* 2003.

*Russell, Peter, Constitutional Odyssey: Can Canadians Become a Sovereign People? Toronto and Buffalo: University of Toronto Press. Third edition pending.*

*Canadian Network for Federalism Studies, www.cnfsrcef.net*

*Forum of Federations, www.forumfed.org*

*Government of Canada, www.gc.ca*

*Queen's University, Institute of Intergovernmental Relations, www.iigr.ca*

*Statistics Canada, Canada Year Book, Ottawa, www.statcan.gc.ca*

மலையக மக்கள் தென்னிந்தியாவிலிருந்து கோப்பித் தோட்டங்களிலும் தேயிலைத் தோட்டங்களிலும் கூலி வேலைக்காக அழைத்துவரப்பட்டு 200 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. 'இந்திய வம்சாவளித் தமிழர்கள்' எனும் பெயரோடு ஆரம்பித்த இரு நூற்றாண்டுப் பயணம் 'மலையகத் தமிழர்' எனும் தேசிய அடையாளமாக இவர்களை முன்னிலைப்படுத்தும் அரசியற் பாதைக்கு வழி செய்திருக்கிறது. இந்த இடைப்பட்ட காலத்து அரசியல், சமூக, பொருளாதார வரலாற்றில் வீழ்ச்சிகளும் உண்டு; எழுச்சிகளும் உண்டு. இதனை நினைவுபடுத்துவதாகவும் மீட்டல் செய்வதாகவும் 'மலையகம் 200' நிகழ்வுகள் உலகு தழுவியதாக நடைபெற்றன. இவை மலையக மக்களின் பிரத்தியேக கலை, கலாசாரம், பண்பாடு, சமூக – பொருளாதார நிலை, அரசியல் போன்ற விடயங்களில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள், பின்னடைவுகள், செல்ல வேண்டிய தூரம் போன்ற விடயங்களை வெளிப்படுத்துவதாக அமைந்தன. அதற்கேற்ப, விம்பம் அமைப்பு எழுநாவின் அனுசரணையுடன் கட்டுரைப் போட்டியொன்றை நடத்தியது. இப் போட்டியில் வெற்றி பெற்ற வெவ்வேறு எழுத்தாளர்களின் கட்டுரைகள் 'மலையகம் 200' எனும் தலைப்பில் தொடராக எழுநாவில் வெளியாகின்றன.

எஸ். ராஜேந்திரன்

'மலையம் 200' நிகழ்வுகளை முன்னிட்டு, விம்பம் அமைப்பினரால் எழுநாவின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் எஸ். ராஜேந்திரன் அவர்களால் எழுதப்பட்ட 'மலையக மக்களின் போராட்ட வரலாறு' எனும் இக் கட்டுரை மூன்றாம் பரிசைப் பெற்றது. இக் கட்டுரை எழுநாவில் இரண்டு பகுதிகளாக வெளியாகின்றது.



# மலையக மக்களின் போராட்ட வரலாறு

## பகுதி 1,2

> சிலோன் நாட்டில் முன்னேற்றமடைந்து வரும் கோப்பிப் பயிர்ச் செய்கையானது உண்மையிலேயே மிகவும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய தோற்றப்பாடாக உள்ளது. இந்தத் தீவில் இத்தகைய நிலமைகளை முன்னர் கண்டிருக்க முடியாது. சிங்கள மக்களின் நம்பிக்கையின் படி பூதங்களே மனித குலத்துக்காக இவற்றை உருவாக்கி இருக்கக்கூடும்
>
> Ceylon Miscellany 1866

> ”தேயிலை வளருகின்ற இடங்கள்; அது மலைகளாக இருக்கலாம் அல்லது பள்ளத்தாக்குகளாக இருக்கலாம். அவை புனிதமானவையாகும்.
>
> Drinking of Tea : Rules of Health, Japan. (12th century)

இருநூறு வருடங்களுக்கு மேற்பட்ட மலையக மக்களின் வரலாறு தொழிலாளர்களின் கண்ணோட்டத்தில் ஆராயப்பட வேண்டும். அதுவே உண்மையானதாக அமையும். இந்தியாவிலிருந்த இடம் பெயரத் தொடங்கிய காலம் முதல் இன்று தனது வாழிடம் மற்றும் தொழில்சார் உரிமைகள் தொடர்பாக நம்பொடை தோட்ட மக்கள் (புஸ்ஸல்லாவ) முன்னெடுக்கும் போராட்டம் வரை இடம் பெற்றுள்ள நிகழ்வுகள் அனைத்தும் சமூக விஞ்ஞான அடிப்படையில் அணுகப்பட வேண்டும். அயராத உழைப்பு, தொழிற் சங்கங்கள் அமைப்பதற்கான முயற்சிகள், மக்கள் எழுச்சி, வேலை நிறுத்தங்கள், உண்ணாவிரதப் போராட்டங்கள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், உயிர்த் தியாகங்கள் உள்ளிட்ட அனைத்தும் மலையக வரலாற்றைப் படைத்தளித்த உழைப்பாளர் சார்பாக, அவர்களின் எதிர்கால நன்மைக்காக ஆராயப்பட வேண்டும். வெளிக்


கொணரப்படும் விடயங்கள் பல்வேறு வடிவங்களில் மீண்டும் மக்களுக்கு கொண்டு செல்லப்படுவதோடு அதனூடாக நாட்டில் சமமாக வாழ்வதற்குரிய போராட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதும் அவசியமானதாக உள்ளது. போராட்ட வரலாற்றைக் கற்றல் என்பது சுயலாபத்திற்காகவன்றி அல்லது மனனஞ் செய்யும் கல்வி நடவடிக்கைகளிற்காகவன்றி மக்கள்சார் செயலுக்கான தூண்டுதலாக அமைய வேண்டும்.

இந்த நாட்டினை ஆங்கிலேயர் ஆட்சி செய்த காலத்திலும், உள்ளூர் ஆட்சியாளர்களின் கைகளுக்கு ஆட்சி அதிகாரம் கைமாற்றப்பட்ட பின்னரும் மாறி மாறி வந்த ஆட்சியாளர்கள் பேரினவாத அடிப்படையிலும், முதலாளித்துவ அணுகுமுறையின் அடிப்படையிலும் ஈவிரக்கமின்றிய சுரண்டலை முன்னெடுத்த முறைகள் தொடர்பிலும் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்ட சம்பவங்கள் தொடர்பிலும் விரிவான தேடல்களை முன்னெடுப்பது கட்டாயமானதாக அமைகின்றது. இதைவிட மலையக மக்களை ஒன்றிணையவிடாது செயற்படுகின்ற மக்கள் விரோத அரசியல், தொழிற்சங்கச் செயற்பாடுகள், மற்றும் 'துர்நாற்றத்திற்கு வாசனைத் திரவியங்களைப் பூசிக் கொள்ளத் தூண்டுகின்ற' அரச சார்பற்ற நிறுவனங்களின் மறைமுக நிகழ்ச்சி நிரல்கள் பற்றியும் கவனம் செலுத்த வேண்டும்.

முதலாளித்துவ ஆட்சி முறை, தாராளவாதம், தனியார்மயம், பேரினவாதம், அடக்குமுறைச் சட்டங்கள் போன்றன எவ்வாறு இந்த நாட்டின் தொழிலாளர், விவசாயிகள், கீழ் மத்திய தர வர்க்கத்தினரை ஈவிரக்கமின்றி சுரண்டிக் கொழுக்கின்றன என்பதையும் இவர்களை ஒன்றிணையவிடாது தடுத்து நிற்கின்றன என்பதையும் சரியாக விளங்கிக் கொள்வதன் மூலமே எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். குறிப்பாக கடந்த இருநூறு வருடங்களுக்கு மேலாக இந்நாட்டின் நலனுக்காக உழைத்த மலையகத் தொழிலாளர்கள் தமது போராட்ட வரலாற்றையும் ஒற்றுமையின் மூலமாக வெற்றி கொண்ட உரிமைகள் பற்றியும் ஆழமாக விளங்கிக் கொள்வதன் மூலம் மட்டுமே எதிர்காலப் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்ல முடியும் என்பதை விளங்கிக் கொள்ளுதல் மிகவும் அவசியமானதாகும்.

மலையக மக்களின் வரலாற்றை கற்பதற்குரிய வாய்ப்புகள் வரையறைக்குட்பட்டதாகவே காணப்படுகின்றன. ஆங்கில மொழியில் எழுதப்பட்ட பல நூல்கள் மொழிபெயர்ப்புச் செய்யப்பட வேண்டியனவாக உள்ளன. மேலும் ஆங்கிலேயர்களால் எழுதப்பட்ட நூல்கள், தோட்டங்களின் அழகு - இயற்கைக் காட்சிகள் - துரைமாரின் வாழ்க்கை பற்றியே அதிகம் பேசுகின்றன. மனிதர் அண்டாத பகுதியை வளமுள்ள பணத்தினை அள்ளித் தருகின்ற பசுஞ் சோலைகளாக மாற்றிய தொழிலாளர்கள், அவர்களது தொடர்ச்சியான போராட்டங்கள், உயிர் தியாகங்கள் போன்றன குறித்த பதிவுகள் குறைவானாகவே காணப்படுகின்றன. அவற்றை மீளவும் தேடித் தொகுப்பது காலத்தின் தேவையாகும்.

தனது சமூக வரலாற்றை மறந்த இனம் வாழ்ந்ததாகச் சரித்திரம் இல்லை. மானுட வரலாறையும் உலக வரலாறையும் ஆழமாகக் கற்கும் அதே வேளையில் இலங்கையின் வரலாற்றையும் மலையக மக்களின் வரலாற்றையும் சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் அணுகிக் கற்க வேண்டும். ஆனால் எமது கலைத்திட்டங்களில் மலையக மக்களின் வரலாறு இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது. அதிலும் பேரினவாதமும் மதவாதமும் மேலோங்கிக் காணப்படுகின்றது. வரலாறு திரிபுபடுத்தப்பட்டுள்ளது. எனவே மக்கள் பணிகளில் ஈடுபடுவோர், கலைஞர்கள், இலக்கியவாதிகள், ஆசிரியர்கள் போன்றோர் மலையக மக்களின் வரலாற்றை மாணவர்கள் கற்பதற்கான விசேட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். பல்வேறு கலை நுட்பங்களின் மூலமாக உழைக்கும் மக்களுக்கு வரலாறு குறித்த புரிதலை ஏற்படுத்துதல் முக்கியமான பணியாக அமைகிறது. மலையக



மக்கள் ஒரு தேசிய இனம் என்பதை வரையறை செய்து கொள்வதற்கு இத்தகைய அணுகுமுறை பெரிதும் பயன்படும்.

இந்தக் கட்டுரையானது மலையக மக்கள் மீதான அடக்குமுறைகள் குறித்தும் அதற்கெதிராக நடைபெற்ற மக்கள் போராட்டங்கள் பற்றியும் ஆய்வு செய்வதற்கான அடிப்படைகளை உள்ளடக்கி உள்ளது. இதனை மேலும் விரிவுபடுத்தி ஆய்வு செய்வதும், கற்றுக் கொண்டவற்றை பல்வேறு செயல்நுட்பங்களின் அடிப்படையில் மக்களிடம் கொண்டு செல்வதும் மிகவும் பயனள்ளதாக அமையும்.

இடம்பெயர்ந்து வருவதற்கு முன்னர், இந்தியாவில் பிரித்தானியாவின் காலனித்துவ ஆட்சி தொடங்கும் காலத்தில், நிலபிரபுத்துவ சமூகத்தின் ஒடுக்கு முறை பரவலாகக் காணப்பட்டது. நிலமற்ற விவசாயிகள் பல்வேறு அடக்கு முறைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டது. அதேவேளையில் காலனித்துவ ஆட்சி வளச்சுரண்டலையும் இலாப நோக்கையும் அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டமையால் விவசாயம், கிராமியக் கைத்தொழில் போன்றன வீழ்ச்சியடைந்தன. வறுமை, பஞ்சம், கொள்ளை நோய்கள், சாதிய அடக்குமுறைகள் மென்மேலும் அதிகரித்தன.

17 ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட ஆங்கிலேயரின் கிழக்கிந்தியக் கம்பனி பலமுள்ளதாக இருந்தது. அதன்மூலம், பல்வேறு உடன்படிக்கைகள் ஆங்கிலேயருக்குச் சார்பாக மேற்கொள்ளப்பட்டன. மதராஸ், ஆங்கிலக் கம்பனியின் மையமாக இருந்தது. கல்கத்தா நகரத்தில் அமைக்கப்பட்ட வில்லியம் கோட்டை காலனித்துவத்தின் செயல் மையமாக விரிவுபடுத்தப்பட்டது. தென் இந்தியாவுக்கான திறவு கோல் என்று அழைக்கப்பட்ட திருச்சிராப்பள்ளி கோட்டை இன்னுமொரு நிலையமாக இருந்தது. ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டங்கள் தொடர்ந்தாலும் படைத்துறை ஒப்பந்தங்கள் மூலமாக மக்களை அடக்கும், அடிமைப்படுத்தும் நடவடிக்கைகள் இலகுவாக்கப்பட்டன. இராணுவ மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள், சட்டங்கள், அடக்குமுறை நடவடிக்கைகள் மூலமாக தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட காலனித்துவ ஆட்சி தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டன.

ஆங்கிலேயர் இந்தியாவை முழுமையாக தமது ஆட்சிக்குக்கீழ் கொண்டு வந்த போது பொருளாதார நிலை மிகவும் சீரழிந்து காணப்பட்டது. அதேவேளை இங்கிலாந்து ஆட்சி முறை முதலாளித்துவத்தின் கோர முகங்களை வெளிப்படுத்துவதாக அமைந்தது. இங்கிலாந்துக்கான பொருளாதார அணுகுமுறை இந்திய மக்களின் இரத்தத்தை உறிஞ்சிக் குடிப்பதாக இருந்தது. இதன் விளைவாக வறுமை தாண்டவமாடத் தொடங்கியது. நிலவரி முறைகள், குத்தகைப் பணம் என்பன காரணமாக உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. ஏழை விவசாயிகள் செத்து மடிய நேரிட்டது. பல இடங்களில் ஜமீந்தாருக்கு எதிரான போராட்டங்கள் இடம் பெற்றன. ஜமீந்தார்கள் விரட்டப்பட்டனர். எனினும் அத்தகைய நிலங்களை கிழக்கிந்திய கம்பனியே பெற்றுக் கொண்டது

நிலப்பிரபுத்துவ மற்றும் முதலாளித்துவ ஆட்சி முறை ஏற்படுத்திய சமூகப் பொருளாதார விளைவுகள் வறுமை நிலையையும் மரணத்தையும் அதிகரித்துச் சென்றன. வறட்சியும் குடிநீர் இன்மையும் இவற்றை மேலும் தீவிரப்படுத்தின. இலஞ்சமும் ஊழலும் நிறைந்த நீதிமன்ற முறையானது பிரித்தானியச் சுரண்டலுக்கும் ஒடுக்குதலுக்கும் சாதகமாக அமைந்தது. புதிதாக ஆக்கப்பட்ட சட்டங்களும் விதிகளும் அடிமை முறையை பலப்படுத்துவனவாகவே அமைந்தன.

இத்தகைய சூழலில் கண்டிச் சீமை (சிலோன்), பினாங்கு, பிஜி, மொரிசியஸ் போன்ற இடங்களுக்குச் சென்றால் சுகமாக வாழலாம் என்ற வதந்திகள் கிராமங்களில் பரவத் தொடங்கியது. கிராமங்களில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. பொய்யும், ஏமாற்றும் மக்களை கிராமங்களிலிருந்து வெளியே தள்ளியது. சென்றவர்கள் திரும்பி வராத காரணத்தால் உண்மை நிலை என்ன என்பதை அவர்களால் புரிந்துக் கொள்ள முடியவில்லை. சியாம் இரயில் பாதையை அமைக்கும் பொருட்டு பலியான பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பற்றிய செய்திகள் இந்தியக் கிராமங்களை சென்று சேராததைப் போல கண்டிச் சீமையிலும், மலேசியாவிலும், பிஜி தீவுகளிலும், மொரிசியசிலும் எதிர் நோக்கிய

துன்பங்களும், அடக்குமுறைகளும் கிராம மக்களால் விளங்கிக்கொள்ளப்படவில்லை. இத்தகைய நிலையானது ஆங்கிலேயத் துரைமார்களுக்கும் 'ஆள் கட்டப் புறப்பட்ட' கங்காணிகளுக்கும் வாய்ப்பாகப் போய்விட்டது. நாசுக்காகப் பேசி 'ஆள் கட்டும்' கங்காணிகளுக்கு வழங்கப்பட்ட பணமும் பொய் வாக்குறுதிகளும் வறுமை நிலையிலிருந்த மக்களை கிராமங்களிலிருந்து வேகமாகத் தள்ளிக் கொண்டு போனது.

வாக்குறுதிகளை நம்பிச் சென்றவர்கள் மீளாத நிலை இலட்சக்கணக்கான மக்கள் இடம் பெயர்வதற்குக் காரணமாகியது. 'தேயிலைச் செடிக்குள் தேங்காயும் மாசியும்' கிடைக்கும் என நம்பி வந்தனர் என்பதெல்லாம் வெறும் கட்டுக் கதையே ஆகும். நேர்வழியில் உழைத்தால் தேங்காயையும் மாசியையும் வாங்கி உண்ணலாம் என்ற நம்பிக்கையே இவர்களை இடம் பெயரச் செய்தது என்பதே உண்மையான வரலாறாகும். இன்றைய சூழலில் கூட மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றால் அதிக பணம் உழைக்கலாம் என்று நம்பிச் சென்று பிணமாகத் திரும்புவோரையும், காணாமல் போவோரையும், அதேவேளை அங்கு சென்று உழைப்பதற்காக 'ஏஜென்சி' மற்றும் 'விசா' காரியாலயங்களில் வரிசையில் காத்திருப்போரையும் நன்கு அவதானித்தால் அக்காலத்தின் நிலமைகளை இலகுவில் புரிந்துக் கொள்ள முடியும்.

பயணத்தின் போது முதலாளித்துவமும் காலனி ஆதிக்கமும் இலாபமீட்டுவதற்காக எதையும் செய்வதற்கு தயாராக இருந்தமையை உலக வரலாற்றைக் கற்பதன் மூலமாக அறிந்து கொள்ள முடியும். அதற்குச் சிறந்த உதாரணமாக கண்டிச் சீமைக்கான பயணத்தைக் குறித்துக் காட்ட முடியும். அந்த வகையில் இந்தியக் கிராமங்களில் தொடங்கிய பயணம் முதலில் திருச்சி, துறையூர், சேலம், நாமக்கல், மதுரை, திருநெல்வேலி, அறந்தாங்கி, தஞ்சாவூர், விழுப்புரம், அரக்கோணம் போன்ற இடங்களில் அமைக்கப்பட்டிருந்த 'ஏஜென்சி ஆபிசுகளை' அடைந்தது. பல்வேறு பொய்களைக் கூறி 'ஆள் கட்டும்' இடங்களாக அவை செயற்பட்டன. ஒப்பந்தக் கூலிகளைத் திரட்டவதற்காக ஆங்கிலத் துரைமார்கள் வழங்கிய பணத்தின் பெறுமதியை கங்காணிகளின் சிரித்த முகங்களும், 'தங்கப் பற்களும்' வெளிப்படுத்தின.

அந்த நிலையங்களிலிருந்து இராமேஸ்வரம் கரையை அடையும் வரை பல நூறு கிலோ மீற்றர் தூரம் கால் நடையாகவே பயணித்த வரலாற்றை காலனித்துவ அடக்குமுறையினால் விளைந்த துன்பத்தின் இன்னுமொரு விளைவாகவே அடையாளங்காட்ட முடியும். எல்லாவிதமான துன்பங்களையும் தாங்கிக் கொண்டு கண்டிச் சீமையை அடைந்து விட்டால் இன்பமாக வாழலாம் என்ற உந்துதலே முக்கிய சக்தியானது. வரிசையாகப் பயணித்த ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், வறுமையின் அடையாளமாக தலைகளில் வைக்கப்பட்ட சிறு மூட்டையும் கங்காணிகளின் ஏச்சும், உரத்த சத்தங்களும் ஒரு மனித பேரவலத்தின் சாட்சியமாகவே அமைந்தன. அத்தனை துன்பங்களை எதிர்கொண்டமையையும் நம்பிக்கையுடன் பயணத்தைத் தொடர்ந்தமையையும் வாழ்க்கைக்கான போராட்டத்தின் தொடர்ச்சியாகவே அடையளங்காணலாம். உயிர்வாழ போராடுதல் என்பதே இதன் அடிப்படையாகும்.

### கரையைக் கடத்தலும் இறங்குதலும்

கப்பல் மற்றும் படகுகள் மூலமான பயணமானது மக்கள் உயிர்வாழ்வதற்கான போராட்டத்தின் உச்சத்தைத் தொட்டுச் செல்லும் சான்றுகளாகும். சிறு கப்பல்கள் மூலமான பயணம் புதிய அனுபவமாகவும், அச்சம் தரும்

> ஆங்கிலேயர் இந்தியாவை முழுமையாக தமது ஆட்சிக்குக்கீழ் கொண்டு வந்த போது பொருளாதார நிலை மிகவும் சீரழிந்து காணப்பட்டது. அதேவேளை இங்கிலாந்து ஆட்சி முறை முதலாளித்துவத்தின் கோர முகங்களை வெளிப்படுத்துவதாக அமைந்தது.

நிகழ்வாகவும் அமைந்து விட்டது. வாந்தியும் வயிற்றோட்டமும், ஒத்துவராத பயண நிலமைகளும், உயர்ந்து எழும் கடலலைகளின் காரணமாக ஏற்பட்ட பீதியும், குளிர் நடுக்கமும், கடல் நீரின் சாரலும் இவற்றால் ஏற்பட்ட விளைவுகளும் உழைக்கும் மக்கள் மீதான பாரிய அடக்குமுறைகளே.

அளவுக்கதிகமாகப் பயணிகளை ஏற்றியதன் காரணமாக ஏற்பட்ட விபத்துகளில் இறந்தவர்கள் பற்றிய பதிவுகள் மிகச் சரியான வகையில் இடம்பெறவில்லை. அவை தொடர்பான செய்திகளும் குறைவாகவே காணப்படுகின்றன. தொழிலாளர்களில் சில ஆயிரம் பேர் விபத்துகளால் பலியாகும் சம்பவங்கள் முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கு ஒரு பொருட்டாகவே அமைவதில்லை. அவர்களுக்கு இலாபமீட்டல் மட்டுமே குறிக்கோளாக இருக்கும் என்பதற்கு மலையகத்தில் இடம்பெற்ற சம்பவங்களையும் சியாம் இரயில் பாதையை அமைப்பதற்காக உயிர்நீத்த பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் மரணங்களையும் சிறந்த உதாரணங்களாகச் சுட்டிக்காட்ட முடியும்.

ஆதிலட்சுமி என்ற படகு மன்னார் வங்காலையிலிருந்து ஏறத்தாழ 150 டொன் பொருட்கள் மற்றும் தொழிலாளர்களுடன் பயணித்த போது கடலில் மூழ்கிய சம்பவத்தை வரலாறு பதிவு செய்கிறது. 05.02.1864 அன்று அப்படகு கடலில் மூழ்கிய வேளையில் அதில் பயணித்த 120 தொழிலாளர்களில் 14 பேர் மட்டுமே உயிர் பிழைத்ததாக செய்தி எழுதப்பட்டுள்ளது. அதே போல 'சாரா ஆர்மி டேஜ்' என்ற சிறு கப்பல் சிலாபத்துக்கு அருகில் சீறி எழுந்த பேரலையில் சிக்குண்டு மூழ்கியதில் 560 தொழிலாளர்கள் உயிரிழந்தமையை அக்காலத்தின் ஆளுநர் ஹென்றி வார்டின் பதிவு செய்துள்ளார். தமது உயிருக்கு உத்தரவாதமில்லாத சூழலிலும் கடுமையான போராட்டத்துடன் பயணித்து சிலோனை வந்தடைந்த தொழிலாளர்களின் வரலாறு, அடிப்படையில் போராட்டங்கள் நிறைந்தவை என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

## மன்னாரிலிருந்து மலையகத்திற்கு

மன்னாரில் வந்திறங்கிய தொழிலாளர்களுக்கு இலங்கையை ஆட்சி செய்த காலனித்துவ முதலாளிகளின் நிருவாகத்தில் மென்மேலும் துன்பங்களே வந்து சேர்ந்தன. மன்னாரிலிருந்து ஏறத்தாழ 250 கிலோ மீற்றர் தூரத்தை கால் நடையாகவே நடந்து வந்த நிகழ்வுகள் மீண்டும் மீண்டும் சிந்திக்கப்பட வேண்டியதொன்றாகும். அடர்ந்த வன்னிக் காட்டைக் கடந்து அனுராதபுரம், மாத்தளையைக் கடந்து கண்டிச் சீமையை அடைந்த வரலாறு உழைக்கும் மக்களின் வாழ்க்கைக்கான போராட்டத்தின் அடுத்த படி நிலையாகும். மன்னாரிலிருந்து கொழும்பிற்கு சிறு கப்பல்கள் மூலமாகப் பயணித்து அங்கிருந்து புகையிரதம் மூலமாக கண்டிக்குச் செல்லும் வழி இருந்த போதிலும், போக்குவரத்துக்கான பணம் போதாமை காரணமாகவும், கங்காணிகளின் வட்டிப் பணம் கடனாக மாறும் என்ற காரணத்தாலும் கால்நடைப் பயணத்தையே மலையக மக்கள் மேற்கொண்டனர்.

கொலரா, மலேரியா, அம்மை போன்ற கொடிய நோய்களின் தாக்கம் காரணமாக வரும் வழியிலேயே பலர் மரணித்தனர். நோய்வாய்ப்பட்டவர்களை காட்டுப் பாதையிலேயே விட்டு வந்த நிகழ்வுகளை கேர்னல் ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் பதிவு செய்துள்ளார். இதை விட தேள், பாம்பு போன்றனவற்றின் தீண்டுதலுக்குட்பட்டும் பலர் மடிந்தனர். குடிநீர் இன்றிய பயணமும் பசியும் மரண பயமும் உயிர் வாழ்வதற்கான பாரிய போராட்டமாகவே அமைந்தன. கண்டிச் சீமைக்குச் சென்றுவிட்டால் தொழில் செய்து வாழலாம் என்ற நம்பிக்கை மேலெழுந்து இருந்தமையே இம்மக்கள் போராடியதற்குக் காரணமாகும்.

## ஆரம்ப காலம்

பல்வேறுபட்ட இழப்புகளுக்குப் பின்னர் மலையகப் பிரதேசத்தை அடைந்த போது ஆங்கிலத் துரைமார்களினதும் கங்காணிகளினதும் அடக்குமுறையின் புதிய வடிவங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டது. மனிதக் காலடியே படாத காடுகளை அழித்து பசுஞ் சோலைகளை அமைப்பதற்காக தொழிலாளர்கள் தனது உயிரையே கொடுத்தனர். உழைப்பின் சாராம்சம், அதன் குவிப்பு மலைகளின் உச்சி வரை விரிந்தது. துரைமார்கள் ஆனந்தம் கொண்டாடக் கூடியதாக அனைத்தும் அமைக்கப்பட்டது. தேயிலை எனும் பச்சைத் தங்கம், இறப்பர் எனும் பால் கொட்டும் மரம் என்பன தன்னலங்கருதாத உழைப்பினால் சாத்தியமானது. ஆங்கிலத் துரைமார்கள்

மலையகத்தின் எழிலை இரசித்து எழுதிய அளவுக்கு மக்களின் உழைப்புத் திரட்சியின் விளைவை பதிவு செய்ய முடியாமல் போனதற்கான காரணம் காலனித்துவ மன நிலையும் உழைப்புச் சுரண்டலின் தேவையுமாகும்.

“ஆங்கில முதலாளிகளால் குறிப்பாக தோட்டத் துரைமார்களால் அடையாளங்காணப்பட்ட பகுதிகள், இது வரை மனித குடியேற்றம் நிகழாத இடங்களாக இருந்தன. அவற்றை தேயிலைத் தோட்டங்களாக உருவாக்கிய கூலிகள் தனித்தன்மை கொண்டவர்களாவர்” எனக் குறிப்பிடுகின்றார் ஹென்றி வில்லியம்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட தோட்டங்கள் மூடிய நிலையிலேயே காணப்பட்டன. சகலதும் தோட்டத்துக்குள்ளே எனும் நிலை உருவாக்கப்பட்டிருந்தது. தொழிலாளர்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ள முடியாதவாறு தோட்ட முகாமைத்துவம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. மனிதாபிமானமற்ற, அடக்கு முறை சார்ந்ததாகவே நிருவாக நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டன. தொழிலாளர்கள் அதிகாலை முதல் மாலை இருள் பரவும் வரை தொடர்ந்து உழைக்கக் கூடிய வகையில் தோட்ட நிருவாகம் ஒழுங்கமைக்கப்பட்டது.

தொழிலாளர்கள் வாழும் லயன் அறைகள், தொழில்முறை யாவும் அடக்குமுறையுடன் கூடிய நடவடிக்கைகளுக்குத் துணை புரிவனவாகவே அமைக்கப்பட்டன. வாழ்வதற்குப் பொருத்தமற்ற வீடுகள், சாதிய அடிப்படையிலான குடியிருப்புகள், உயரமான இடத்தில் அமைக்கப்பட்ட வெள்ளைக்காரன் பங்களா, ‘ஸ்டோர்’ நிருவாகிகளுக்கு அமைக்கப்பட்ட வீடுகள் போன்றனவற்றைச் அதற்கு உதாரணமாகச் சுட்டிக்காட்டலாம்.

குறைவான கூலியை வழங்கியதன் மூலம் தொழிலாளர்களைக் கடன் நிலையிலேயே வைத்திருந்தமை தோட்டங்களை விட்டு வெளியேற முடியாத சூழலை ஏற்படுத்தியது. கங்காணியினதும் துரைமார்களினதும் அடக்குமுறைக்குச் சாதகமாகவே, வழங்கப்பட்ட கூலியும் அமைந்திருந்தது. கங்காணிக்கு உரித்தான கடைகளில் உணவுப் பொருட்களை வாங்கியமை, பிழையான கணக்கு விபரங்கள் போன்றன கடன் சுமையை மேலும் இறுக்கியது.

துண்டு முறையும் பற்றுச் சீட்டும் தொழிலாளர்களை தோட்டத்துக்குள்ளேயே அடக்கி வைத்தன. வெளியேற முயன்றவர்கள் கங்காணிகளால் அடித்துத் துன்புறுத்தப்பட்டனர். அடிமை முறையைப் பேணக்கூடியதாகவே சகல நடவடிக்கைளும் ஒழுங்கமைக்கப்பட்டன. தொழிலாளர்கள் ஒன்று கூடுவதற்கான வாய்ப்புகள் தடுக்கப்பட்டன. இதன் காரணமாக நாளாந்த வாழ்வில் பல துன்பங்களுக்கும் வன்முறைகளுக்கும் முகங்கொடுக்க நேரிட்டது. நிருவாகத்திற்கு எதிரானவர்கள் ‘பற்றுச் சீட்டின்றி’ வெளியேற்றப்பட்டனர்; தாக்கப்பட்டனர். தொழிலாளர்கள் தமது கோபத்தை, வெறுப்பினைக் காட்டக் கூடியதாக மலைகளெங்கும் சாமிகளை உருவாக்கிக் கொண்டனர். அத்தகைய சாமிகளுக்கு சிவப்புப் பட்டு அல்லது துணியைக் கட்டியிருந்தனர். ‘நாசமா போக... அவன் வீட்டுல எழவு விழுக....கடவுளே நீ இருந்தா பார்த்துக்க’ என மண்ணை வாரி இறைத்துச் சாபமிட எவ்வித தடையும் இருக்கவில்லை. ஆனால் இந்த அடிமை முறை வாழ்வு நீண்ட காலத்திற்கு நிலைக்கவில்லை. தொழிற் சங்கம் என்ற சக்தி அவர்களை ஒன்று திரட்டியது. போராட்டம் எனும் ஆயுதத்தைக் கையிலெடுக்க வழி ஏற்பட்டது. வாழ்வதற்கான போராட்டம் என்பது தொழில் உரிமைக்கான போராட்டங்களாக வளர்ச்சி பெற்றமையானது தியாகங்களின் அறுவடையே எனத் துணியலாம்.

### தொழிற்சங்கப் போராட்டங்கள்

ஏறத்தாழ நூறு ஆண்டுகள் நீடித்த அடக்குமுறையுடன் கூடிய அடிமை முறை வாழ்வை மாற்றியமைப்பதில் தொழிற்சங்க நடவடிக்கைகள் பெரிதும் பங்களித்தன. தோட்டப்பகுதிகளில் தொழிற்சங்கங்களை அமைப்பதற்கு தொழிலாளர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பாரிய சவாலுக்குரியதாகவே காணப்பட்டன. தொழிலாளர்கள் ஒன்று கூடுவதை துரைமார்களும் கங்காணிகளும் ஏற்றுக் கொள்ளவில்லை. தொழிலாளர்களின் ஒருங்கிணைவு, பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதையும் தங்களது அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு பாதகமாக அமையும்

தொழிலாளர் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான வழிமுறையாக தொழிற்சங்க இயக்கம் அமைந்தது. தனியாகவும் கூட்டாகவும் செயற்பட்டதன் விளைவாக தொழிற்சங்க நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டன. இலங்கை இந்திய காங்கிரஸ், அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், செங்கொடிச் சங்கம் போன்ற தொழிற்சங்கங்கள் இவ்வகையில் தோற்றுவிக்கப்பட்டவையே ஆகும்.

என்பதையும் தோட்ட நிருவாகம் நன்கு அறிந்திருந்தது. ரஷ்யப் புரட்சியின் விளைவுகளும் பிரித்தானியாவில் மேற்கொள்ளப்பட்ட தொழிலாளர் இயக்கச் செயற்பாடுகளும் தோட்டத்து ராஜாக்களுக்கு பல எச்சரிக்கைகளை ஏற்கனவே வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொழிலாளர்கள் மீதான அடக்குமுறைகளுக்கு எதிராக ஒன்றிணைவதற்கான முக்கிய சக்தியாக தொழிற்சங்கம் காணப்பட்டது. தொழிற்சங்கங்கள் தொடர்பான விளக்கத்தையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதில் தேசபக்தன் கோ. நடேசையர் முக்கிய பங்கினை வகித்தார். 1905 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட தோட்டப் பாடசாலைகளும் இதற்கு வாய்ப்பாக அமைந்தது.



கோ. நடேசய்யர்

Image Source - tamil.wiki

‘தேசபக்தன்’ கோ. நடேசையர், இந்தியாவின் குஜராத் எனுமிடத்தில் பிறந்த மணிலால் மங்கன்லால் (28.07.1881 - 08.01.1956) எனும் தேசியவாதி, பொதுவுடைமைச் செயற்பாட்டாளனின் கருத்து மற்றும் நடவடிக்கைகளினால் கவரப்பட்டவராக இருந்தார். மணிலால் அவர்களால் வெளியிடப்பட்ட வாராந்தரப் பத்திரிகையான இந்துஸ்தானி தனிநபர் சுதந்திரம், ஒன்றிணையும் உரிமை மற்றும் இனங்களுக்குமான சமத்துவம் ஆகியவற்றைக் கருப்பொருளாகக் கொண்டிருந்தது. மணிலால் 1907 முதல் 1910 வரையிலான காலப்குதியில் மொறிசியஸ் நாட்டில் சட்டத்துறை சார்ந்த கடமைகளை முன்னெடுத்தார். அந்த நாட்டில் வாழ்ந்த இந்தியத் தொழிலாளர்கள் அடக்குமுறைகளுக்கு எதிராக போராடுவதற்கான அடிப்படைகளை வழங்கி இருந்தார். அவரது போராட்ட அரசியல் செயற்பாடுகள் காரணமாக பிஜி நாடு அவரை அங்கிருந்து வெளியேற்றியது. அவர் இலங்கையில் இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் துன்பங்களை நேரடியாகக் கண்டறிந்தார். நடேசையர் அவர்களும் அவரது மனைவியான மீனாட்சியம்மாள் அவர்களும் தொழிலாளர்களை ஒன்றிணைப்பதற்கும் தொழிற்சங்கத்தை அமைத்து போராட்டங்களை முன்னெடுப்பதற்கும் மணிலால் பெரிதும் உதவினார். எனினும் மணிலால் சிலோனில் தங்கியிருக்க பிரித்தானிய ஆட்சியாளர்கள் அனுமதி அளிக்கவில்லை.

ஆரம்ப காலங்களில் தொழிற்சங்கங்களை அமைப்பது என்பது இலகுவானதாக அமையவில்லை. வெள்ளைக்காரத் துரைமார் மற்றும் கங்காணிகளின் கண்டிப்பு, நோட்டம்

விடுதல், கருங்காலிகளைப் பயன்படுத்துதல், காவல்காரனைப் பயன்படுத்துதல், பேச்சுக் கொடுத்துப் பார்த்தல் என பல உத்திகளைப் பயன்படுத்தி தொழிற் சங்கம் பற்றி கதைப்போரை கண்டறிதல், தோட்டத்தை விட்டு பற்றுச்சீட்டில்லாமல் வெளியேற்றல், கட்டி வைத்து அடித்தல், பொலிஸ்காரர்களின் ஒத்துழைப்புடன் அடக்குமுறையை முன்னெடுத்தல், காயப்படுத்துதல், காவலில் வைத்தல், சிறைக்கு அனுப்புதல், சுட்டுக் கொல்லுதல் என நீண்டது அடக்குமுறை.



**மீனாட்சியம்மாள்**

Image Source - tamil.wiki

ஆனால் இவற்றையெல்லாம் கடந்து துன்பங்களை ஏற்று தொழிற் சங்கத்தை அமைத்த தொழிலாளர்களின் போராட்ட வல்லமை இறுதியில் வெற்றியடைந்தது. இரகசியச் சந்திப்பு, இரவில் கூடுதல், வேலைத்தலத்தில் கதைத்தல் போன்ற நுட்பங்களை அவர்கள் கண்டறிந்தனர். தோட்டத் துரைமார்கள், கங்காணிகள், காட்டிக் கொடுப்போர் ஆகியவர்களோடு பொலிசும் இணைந்து எதிர் நடவடிக்கைகளை முன்னெடுத்த போதிலும் தொழிற்சங்கம் அமைப்பதில் தொழிலாளர் வெற்றி பெற்றமை போராட்ட வரலாற்றில் உச்சம் தொட்ட நிகழ்வு எனக் குறிப்பிடலாம்.

### தொழிற்சங்கங்களை அமைப்பதற்கான போராட்டங்கள்

தொழிலாளர் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான வழிமுறையாக தொழிற்சங்க இயக்கம் அமைந்தது. தனியாகவும் கூட்டாகவும் செயற்பட்டதன் விளைவாக தொழிற்சங்க நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டன. இலங்கை இந்தியன் காங்கிரஸ், அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், செங்கொடிச் சங்கம் போன்ற தொழிற் சங்கங்கள் இவ்வகையில் தோற்றுவிக்கப்பட்டவையே ஆகும்.

கம்பனித் தோட்டங்களில் தொழிற்சங்கங்களை ஆரம்பிப்பதை விட தனியார் தோட்டங்களில் தாபிப்பது பெரும் சவாலுக்குரியதாக இருந்தது. தோட்டச் சொந்தக்காரனும் பொலிசாரும் இணைந்து தொழிற் சங்கங்களுக்கு எதிராக செயற்பட்டதன் விளைவு பல தொழிலாளர்கள் காயப்படுவதற்கும், உயிரிழப்பதற்கும் காரணமாக அமைந்தன. தோட்டங்களுக்கு அருகில் காணப்பட்ட கிராமங்களில் வாழ்ந்த இனவாதக் காடையர்களைப் பயன்படுத்தி தொழிலாளர்களை தாக்கும் நிகழ்வுகளும் இடம் பெற்றுள்ளன.

தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டங்களில் கொட்டியாகலை தோட்டத்தில் 1939 ஆம் ஆண்டில் இடம் பெற்ற போராட்டம் முக்கியமானதாகும். மது விற்பனை மற்றும் சூது விளையாட்டு ஆகியவற்றுக்கெதிராக ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்து இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. வெள்ளைக்காரத் துரையால் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு எதிராக பல அடக்குமுறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் இறுதியில் தொழிலாளர் வெற்றியடைந்தனர். பிற்காலத்தில் தொழிற்சங்கத்தை அமைப்பதற்கான வாய்ப்பினை இப்போராட்டம் பெற்றுக் கொடுத்தது.

அக்காலத்து தொழிலாளர் கட்டுப்பாட்டு அதிகாரியாகப் பணியாற்றிய ஜிம்சன் பின், இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை இந்தியத் தொழிலாளர் முன்னெடுத்த முக்கியப்

போராட்டமாகவும் பிற்காலத்தில் பல வேலை நிறுத்தப்போராட்டத்திற்கு வித்திட்டதாகவும் குறிப்பிடுகின்றார்.

அதே காலத்தில் பொலிஸ் மா அதிபராகச் செயற்பட்ட பி.என். பேங்ஸ் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளதை நடேசன் எஸ். (1993) தனது நூலில் பின்வருமாறு எடுத்துக் காட்டுகின்றார்.

"பல்வேறு காரணிகளின் செல்வாக்குக் காரணமாக தொழிலாளர்கள் அரசியல் சிந்தனையுடன் செயற்படுவதை அவதானிக்க முடிகின்றது. அவர்கள் தற்போதைய வாழ்க்கை மற்றும் தொழில் ஆகியன தொடர்பில் திருப்தியாக இல்லை. அதன் காரணமாக வேலை நிறுத்தங்களில் ஈடுபடுகின்றனர். தோட்டத் துரைமார்கள் இத்தகைய போராட்டக்காரர்களை வெளியேற்ற நீதிமன்ற ஆணைகளைப் பெற்றுள்ளனர். ஆகவே பொலிஸார் எத்தகைய நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதை தெரிந்து கொள்ள வேண்டியவர்களாக உள்ளனர்." பிற்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டங்களின் போது தொழிலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பில் ஏற்கனவே தீர்மானங்கள் மேற்கொள்ளபட்டுள்ளன என்பதை இதன் மூலமாக அறிய முடிகின்றது.

கண்டி, நுவரெலியாப் பகுதிகளில் தொழிற்சங்கம் அமைக்கும் போராட்டம் வெற்றி அடைந்தாலும் இரத்தினபுரிப் பகுதியில் இத்தகைய முயற்சிகளை மேற்கொள்வது கடினமாகவே இருந்தது. 1945 ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து வருகை தந்த குட்டிப்பிள்ளை எனும் பெயருடைய செயற்பாட்டாளனின் முயற்சியால் மயிலிட்டியா தோட்டதில் இலங்கை இந்தியன் காங்கிரஸ் அமைக்கப்பட்டது. பல்வேறு அடக்குமுறைகளை வெற்றி கொண்ட எண்ணூறு தொழிலாளர்கள் தொழிற்சங்க அங்கத்தவர் ஆனார்கள். தொழிலாளர் போர்க்குணம் வெற்றியடைந்தது.

1953 ஆம் ஆண்டு சாமிமலைப் பகுதியைச் சேர்ந்த மீரியாகோட்டை தோட்டத்தில் தொழிற்சங்கம் அமைப்பதற்கான போராட்டத்தில் தோட்ட முதலாளிக்கு ஆதரவாகச் செயற்பட்ட பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தமையால் பதினேழு தொழிலாளர்கள் காயமடைந்ததோடு பி. வெள்ளையன் என்ற தொழிலாளி மரணமானார்.

அவ்வாறே 1957 ஆம் ஆண்டு தொழிற்சங்க காரியாலயம் ஒன்றை உடபுசல்லாவ நகரில் அமைப்பதற்கான போராட்டத்தில் தொழிலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக கொம்பாடி மற்றும் பொன்னையா ஆகிய இரு தொழிலாளர்கள் தியாகி ஆனார்கள். இந்த தொழிற்சங்க காரியாலயத்தை அமைப்பதற்கு எதிராக நகர வர்த்தகர்களும் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. எனினும் தொடர் போராட்டத்தின் மூலமாக தொழிற்சங்க காரியாலயம் அமைக்கும் உரிமையும் வென்றெடுக்கப்பட்டது.

1961 ஆம் ஆண்டு நாவலப்பிட்டிக்கு அருகிலுள்ள மொன்டிசிரஸ்டோ தோட்டத்தில் தொழிற்சங்கம் அமைப்பதற்கான போராட்டம் உக்கிரமாக முன்னெடுக்கப்பட்ட போது ஆராயி, நடேசன், செல்லையா, மாரியப்பன் ஆகிய தொழிலாளர்கள் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். தொழிற்சங்கத் தலைவர்கள் கிராமத்தைச் சேர்ந்த காடையர்களால் தாக்கப்பட்டனர்.

தொழிற்சங்கத்தை கட்டி எழுப்புவதற்கு பெரும் தடையாக இருந்த தோட்டத் துரைமார்கள் மற்றும் முதலாளிகள் தொழிற்சங்க செயற்பாடுகளுக்கு எதிராகவும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். உதாரணமாக, பத்தனை டெவன் தோட்டத்தில், தொழிலாளர்களுக்கான வசதிகளைச் செய்து கொடுக்குமாறு கோரிக்கையை முன்வைத்து போராட்டத்தை முன்னெடுத்த போது தொழிலாளர்கள் தாக்கப்பட்டனர். மு. வைத்திலிங்கம் என்ற தொழிலாளி கொலை செய்யப்பட்டார்.

தோட்டத் தொழிலாளர்கள் வேலை நேரத்தில் சுகயீனம் அடைகின்றபோது, விபத்துகளை சந்திக்கும் போது, அல்லது கரப்பிணித் தாய்மார்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் போது, வாகனம் கோரிப் பெறுவது என்பது கால தாமதத்தை ஏற்படுத்தும் செயலாகும். அதற்கான அனுமதி பெறுவது, போக்குவரத்துப் பாதைகள் முறையாக இல்லாமை, இனவாதம் போன்ற காரணங்களால் உரிய வேளைக்கு

வைத்தியசாலைக்குச் செல்லாமையினால் பலர் உயிரிழந்துள்ளனர். தோட்ட வைத்தியசாலைகளிலும் முறையான மருத்துவ உதவியைப் பெற முடியாது. வாகன வசதியைப் பெறுவதற்குக் கூட பாரிய போராட்டங்களை தொழிலாளர்கள் முன்னெடுத்துள்ளனர். பதுளை, குயினஸ்டவுன் நகருக்கு அண்மையிலுள்ள சினாக்கொல்லை தோட்டத்தில் 1970 ஆம் ஆண்டு இதற்கான போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. சுமார் தொண்ணூறு நாட்கள் முன்னெடுக்கப்பட்ட வேலை நிறுத்தப்போராட்டத்தை அடக்குவதற்கு வழமை போல பொலிஸ் உதவி கோரப்பட்டு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அதில் லெட்சுமண் அழகர் மற்றும் பெருமாள் இராமையா ஆகியோர் உயிரிழந்தனர். பாரிய போராட்டம் வெடித்தது. தொழிலாளர் போராடி வென்றனர்.

ஆரம்ப காலத்தில் தொழிங்சங்கங்கள் தொழிலாளர் சார்பாக செயற்பட்ட போதிலும் 1950 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அந்தப் போக்கிலிருந்து நழுவிச் சென்றமையைக் காண முடியும். அவை தொழிலாளர் ஒற்றுமையைச் சிதைத்ததோடு சில சந்தர்ப்பங்களில் தோட்ட நிருவாகத்திற்கு ஆதரவாகச் செயற்பட்ட போக்கும் பதிவாகி உள்ளது. 1956 ஆம் ஆண்டில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிலிருந்து விலகிய அப்துல் அசீஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் எனும் தொழிற்சங்கத்தை அமைத்தார். இவ்விரு தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான முரண்பாடு காரணமாக பல மோதல்கள் இடம் பெற்றுள்ளன. ஐக்கியத்துக்காகப் போராட வேண்டிய தலைமைத்துவம், தொழிலாளர்களிடையே முரண்பாடுகளை விதைத்த வரலாறு இன்று வரை தொடர்வதைக் காணலாம். தொழிற்சங்கப் பலம், தொழிலாளர் நலன், உரிமைகளுக்காகப் போராடுதல், ஐக்கியத்தை வலுப்படுத்தல் போன்ற மகோன்னதமான தொழிற்சங்க நடவடிக்கைகளைக் கைவிட்ட தொழிற்சங்கங்களை இன்றும் காண முடியும். மலையகச் சமூகம் தனது அடையாளத்தை வென்றெடுக்க முடியாமல் இருப்பதற்கும் தொழிங்சங்க உரிமைகளை தொடர்ந்து பாதுகாத்து மேம்படுத்திக்கொள்ள முடியாமல் வலுவிழந்து நிற்பதற்கும் இத்தகைய பிற்போக்குத் தொழிற்சங்கங்களே காரணமாகும்.

1956 ஆம் ஆண்டு மஸ்கெலியா பகுதியைச் சேர்ந்த நல்லதண்ணி தோட்டத்தில் தொழிற்சங்க மோதல் காரணமாக நாற்பது தொழிலாளர்கள் கைது செய்யப்பட்னர். தோட்ட நிருவாகத்தின் கையாட்களால் இளம் தொழிலாளி பெ. கருமலை என்பவர் கொலை செய்யப்பட்டார். அதே ஆண்டில் நிகழ்ந்த தொழிற்சங்க மோதல் காரணமாக இருபத்து மூன்று வயது நிரம்பிய அப்புஹாமி ஏப்ரகாம் சிங்கோ எனும் பெயருடைய தொழிலாளி சுட்டுக் கொல்லப்பட்டார். இக்கொலையைத் தொடர்ந்து தொழிலாளர்கள் நாற்பத்தெட்டு நாட்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. ஒரு தோட்டத்தில் ஒரு தொழிற்சங்கம் மட்டும் என்ற நிலையை மாற்றி தொழிலாளர்களின் தெரிவுக்கேற்ப மாற்றுத் தொழிற்சங்கத்தையும் அமைக்கலாம் என்ற உரிமை இந்தப் போராட்டத்தின் மூலமாக வெற்றி கொள்ளப்பட்டது.

தோட்டத் துரைமார்களின் பிரித்தாளும் சூழ்ச்சி காரணமாகவும் தொழிலாளரிடையே முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. நிருவாகத்திற்கு ஆதரவான ஒரு தொழிற்சங்கத்தை உருவாக்குவதன் மூலமாக தொழிலாளரிடையே காணப்படும் ஒற்றுமையைக் குலைக்க மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக 1959 ஆம் ஆண்டு மாத்தளை எல்கடுவ தோட்டத்து தொழிலாளி காலக்கார முத்துசாமி கொலை செய்யப்பட்டார். அதே பகுதியில் 1964 ஆம் ஆண்டு கந்தே நுவர தோட்டத்தில் நிருவாகத்திற்கு ஆதரவாகச் செயற்பட்ட பிற்போக்குத் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக அழகர் மற்றும் ரெங்கசாமி ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.



செங்கொடிச் சங்கத்துக்கு எதிராக, நிருவாகமும் மக்கள் விரோதத் தொழிற்சங்கமும் செயற்பட்ட போதிலும் பெரும்பாலான தொழிலாளர்கள் செங்கொடிச் சங்கத்தையே ஆதரித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.




Image Source - thinakkural.lk

துரைமார் மற்றும் பொலிஸார் இணைந்து தொழிலாளருக்கு எதிராகச் செயற்பட்டது போல தோட்டத்தில் வேலை செய்யும் கணக்குப்பிள்ளை, கண்டாக்கு, தொழிற்சாலைக் காவல்காரன் போன்ற 'சிறு துரைமார்'களின் கெடுபிடி காரணமாகவும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 1967 ஆம் ஆண்டு மடுல்கலை சின்ன கிளாப்போக்கு தோட்டத்தில் இடம்பெற்ற சம்பவத்தில் அழகன் சோணை என்ற தொழிலாளி கணக்குப்பிள்ளையால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவமும், மயிலிட்டியா தோட்டத்தில் இடம்பெற்ற போராட்டத்தின் போது தொழிற்சாலை காவலாளி துப்பாக்கியால் சுட்டதில் அந்தோனிசாமி எனும் தொழிலாளி தியாகி ஆனதும், 1970 ஆம் ஆண்டில் மாத்தளை கருங்காலி (நாளந்தா) தோட்டத்தில் காவல்காரன் சுட்டதில் மரணமான பார்வதி (18 வயது), கந்தையா, இராமசாமி என்ற சிறுவன் ஆகியோர் மரணமானதும் இதற்குச் சிறந்த உதாரணங்களாகும்.

### இனவாதமும் தொழிலாளர் போராட்டங்களும்

மலையக மக்களை பேரினவாத அடிப்படையில் நோக்குதலும் அதற்கேற்ற வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் ஆரம்ப காலத்திலிருந்தே இனவாத தலைவர்களாலும் அரசாங்கங்களினாலும் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளமையைக் காணலாம். 1948 இல் மலையக மக்களது குடியுரிமையைப் பறித்ததும் இனவாதத்தின் அடிப்படையிலே ஆகும். இதை விட 1958, 1977, 1983 ஆகிய ஆண்டுகளில் நாடு முழுவதும் இடம்பெற்ற இனக்கலவரங்களால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதை விட இரத்தினபுரி, களுத்துறை, கேகாலை, காலி, மாத்தறை, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் வாழும் தொழிலாளர்கள் மீதான வன்முறைகள் தொடர்ந்து இடம் பெற்ற வண்ணம் உள்ளது. பாதுகாப்பற்ற சூழல் தொடர்ந்து நிலவி வருகின்றது.

மலையக மக்களின் குடியுரிமையைப் பறித்த டி.எஸ். சேனநாயக்க அரசாங்கம் 1945 ஆம் ஆண்டுக் காலப்பகுதில் முன்னெடுத்த 'தொழிலாளர்களை தோட்டங்களிலிருந்து விரட்டியடித்தல்' என்ற நடவடிக்கைகளுக்கு சிறந்த உதாரணங்களாக நேஸ்மியர் மற்றும் உருளவள்ளி தோட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட இனவாதக் குடியேற்ற நடவடிக்கைகளைக் குறிப்பிடலாம். தான் உருவாக்கிய தோட்டங்களில் தொடர்ந்து வாழ்வதற்கு மக்கள் கடுமையான போராட்டங்களை நடத்த வேண்டியவர்களாக இருந்துள்ளனர். 1942 ஆம் ஆண்டில் கந்தப்பளை பகுதியில் இடம் பெற்ற காணிப் பறிமுதல், தொழிலாளர்களை தோட்டங்களில் இருந்து வெளியேற்றியமை போன்ற நடவடிக்கைளும் இனவாத அடிப்படையிலேயே முன்னெடுக்கப்பட்டன.

களனிவெளி பகுதியிலுள்ள நேஸ்மியர் தோட்டம் புளத்கோபிட்டிய நகரத்திற்கு அண்மையில் காணப்படுகின்றது. இந்தத் தோட்டம் 820 ஏக்கர் பரப்பினைக் கொண்டதாகவும் தேயிலை மற்றும் இறப்பர் பயிரிடப்படும் பிரதேசமாகவும் காணப்பட்டது. 1900 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இந்தக் காட்டுப்பகுதி துப்பரவு செய்யப்பட்டு பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை

மேற்கொள்ளப்பட்டது. 1942 ஆம் ஆண்டு மதிப்பீட்டின் படி 515 பேர் இங்கு வாழ்ந்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1945 ஆம் ஆண்டு இவர்களை உடனடியாக தோட்டத்தை விட்டு வெளியேறும் படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தொழிலாளர்கள் வாழ்ந்த இடங்களைச் சுற்றி முள்ளுக்கம்பி வேலியும் அமைக்கப்பட்டது. எனினும் இலங்கை இந்திய காங்கிரஸ் தொழிற்சங்கத்தின் வழிகாட்டலில் மூன்று வாரங்களுக்கு மேலான வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. களனிவெளி, கேகாலை, அவிசாவளை, யட்டியாந்தோட்டை பகுதியைச் சேர்ந்த தொழிலாளர்கள் இவ்வேலை நிறுத்தத்திற்கு ஒத்துழைப்பு நல்கினர். அதனைத் தொடர்ந்து மஸ்கெலியா, ஹட்டன், நுவரெலியா பகுதிகளைச் சேர்ந்த தொழிலாளர்களும் ஆதரவுப் போராட்டத்தை முன்னெடுத்தனர். நாற்பது வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வரும் தோட்டத்திலிருந்து வெளியேற்ற முற்படும் விரோதச் செயலுக்கு எதிராக சத்தியாக்கிரகப் போராட்டத்தையும் தொழிலாளர்கள் முன்னெடுத்தனர். அவர்களுக்கு எதிராக 110 வழக்குகள் தொடுக்கப்பட்டன. 14 வழக்குகள் பெண் தொழிலாளர்களுக்கு எதிரானதாக இருந்தன. தொழிலாளியான எஸ். செல்வநாயகத்திற்கு இரண்டு மாதக் கடூழியச் சிறைத் தண்டனையும் ஏனையோருக்கு இரண்டு முதல் மூன்ற வார கடூழியச் சிறையும் வழங்கப்பட்டன. மலையக மக்களின் போராட்ட வரலாற்றில் முதன் முதலாகச் சிறை சென்ற தொழிலாளி எஸ். செல்வநாயகம் என பத்திரிகைகள் எழுதின. தொடர்ச்சியான போராட்டம் காரணமாகவும் பிரிவுக் கவுன்சிலுக்கு மேன் முறையீடு செய்யப்பட்டதன் அடிப்படையிலும் இப் போராட்டம் வெற்றி கொள்ளப்பட்டது. தொழிலாளர்களின் உறுதியும் ஒற்றுமையுமே இப் போராட்டம் வெல்வதற்குக் காரணமாகியது.

1946 ஆம் ஆண்டு புளத்கோபிட்டிய நகரத்திற்கு அருகில் அமைந்திருக்கும் உருளவள்ளி தோட்டத்தில் இன்னுமொரு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இலங்கை - இந்திய காங்கிரஸ் தொழிற்சங்கத்தின் வழிகாட்டலின் அடிப்படையில் இது மேற்கொள்ளப்பட்டது. இந்தத் தோட்டத்தில் வாழ்ந்து வந்த தொழிலாளர்கள் தமது தேவைக்காக மரக்கறித் தோட்டத்தை அமைத்து நீண்ட காலமாகப் பயிர் செய்து வந்த நிலையில், அந்தப் பகுதியில் இனவாதக் குடியேற்றத்தை மேற்கொள்ளும் பொருட்டு தொழிலாளர்களை வெளியேற்றும் முயற்சி முன்னெடுக்கப்பட்டது. தொழிலாளர்கள், வெளியேற மறுத்ததன் காரணமாக கைது செய்யப்பட்டனர். இதன் விளைவாக பெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. உருளவள்ளி தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக எட்டியாந்தோட்டை மற்றும் கேகாலைப் பகுதியைச் சேர்ந்த ஒரு லட்சத்து இருபத்தையாயிரம் பேருக்கு

> மலையக மக்களின் குடியுரிமையைப் பறித்த டி.எஸ். சேனநாயக்க அரசாங்கம் 1945 ஆம் ஆண்டுக் காலப்பகுதில் முன்னெடுத்த 'தொழிலாளர்களை தோட்டங்களிலிருந்து விரட்டியடித்தல்' என்ற நடவடிக்கைகளுக்கு சிறந்த உதாரணங்களாக நேஸ்மியர் மற்றும் உருளவள்ளி தோட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட இனவாதக் குடியேற்ற நடவடிக்கைகளைக் குறிப்பிடலாம்.

மேற்பட்டவர்கள் சுமார் இருபது நாட்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இப் போராட்டத்தில் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளை வலியுறுத்தி நான்கு அம்சக் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1956 ஆம் ஆண்டு எஸ்.டபிள்யு. ஆர்.டி பண்டாரநாயக்க பிரதமராகி தனிச்சிங்கள மசோதவைக் கொண்டு வந்ததோடு வாகனங்களில் ஸ்ரீ எனும் எழுத்தை பயன்படுத்த வேண்டும் என ஆணை பிறப்பித்தார். தமிழ் தலைவர்கள் இதனை எதிர்த்தனர். இதன் காரணமாக நாட்டில் இனவாதத் தாக்குதல்கள் தொடங்கின. ஏறத்தாழ நூற்றி ஐம்பது பேர் கொல்லப்பட்டனர். மலையகத்திலும் தாக்குதல்கள் இடம்பெற்றன. பொகவந்தலாவை நகரில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக

பொலிசார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர். துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக பிரான்சிஸ் மற்றும் ஐயாவு ஆகியோர் மரணித்தனர்.

1977 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் முழுமையான ஆதரவுடன் புஸ்ஸெல்லாவ டெல்டா பகுதியில் தாக்குதல்கள் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து பல இடங்களில் இத்தகைய வன்முறைகள் இனவாதிகளால் மேற்கொள்ளப்பட்டன.

1977 ஆம் ஆண்டு மே மாதம், பத்தனை டெவன் தோட்டத்தில் இடம்பெற்ற போராட்டம் நில உரிமைக்காகவும், தோட்டங்களைப் பாதுகாக்கவும் மேற்கொள்ளப்பட்ட பெரும் போராட்டமாகும். இப்பகுதியில் காணப்பட்ட ஏழாயிரம் ஏக்கர் தேயிலைக் காணியை இனவாத அடிப்படையில் பிரித்துக் கொடுக்க எடுக்கப்பட்ட முயற்சி போராட்டத்தின் மூலம் தடுக்கப்பட்டது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இப் போராட்டத்தில் இருபத்து இரண்டு வயது நிரம்பிய இளம் போராளி சிவனு இலட்சுமணன் தியாகி ஆனார். இனவாத நிலப்பறிப்பு முயற்சி ஒன்றிணைந்த போராட்டத்தால் தடுத்து நிறுத்தப்பட்டது. ஆனால் அதே இடத்தில் இன்று தனியார் குடியேற்றங்களும் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் நபர்கள் தங்குவதற்கான உல்லாச விடுதிகளும் அமைக்கப்பட்டுள்ளமையைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். 1997 ஆம் ஆண்டு இரத்தினபுரி வேவல்வத்த தோட்டத்தில் இடம்பெற்ற தாக்குதல், லயன்களுக்கு தீ வைத்தமை, 2007 ஆம் ஆண்டு இரத்தினபுரி பம்பேகம தோட்டத் தொழிலாளர்கள் தாக்கப்பட்டு விரட்டப்பட்டமை, 2000 ஆம் ஆண்டு பிந்துனுவெவ படுகொலைகளுக்கு எதிராக தலவாக்கலை நகரில் இடம்பெற்ற கூட்டத்தின் போது காராளன், மணிவண்ணன் உள்ளிட்ட நான்கு தொழிலாளர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டமையும் இனவாத அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளே ஆகும். இவை சில உதாரணங்கள் மட்டுமே ஆகும். பேரினவாத அரசாங்கம் அதற்கு ஆதரவான பொலிஸ் மற்றும் இராணுவ அமைப்புகள் திட்டமிட்ட வகையில் இத்தகைய மக்கள் விரோதச் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபட்ட போதிலும் தொழிலாளர்களின் மன உறுதியும் போராட்ட குணாம்சமும் அனைத்தையும் எதிர்கொண்டன என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டிய அம்சமாகும்.

### கூலி அல்லது சம்பள உயர்விற்கான போராட்டங்கள்

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தமக்கான உரிமைகள், சலுகைகள், அனைத்தையுமே போராட்டங்கள் மூலமே பெற்றுக் கொண்டனர் என்பதே வரலாற்று உண்மையாகும். அவற்றுள் முக்கியமானது சம்பள உயர்விற்கான போராட்டமாகும். பல்வேறு போராட்டங்கள் நிகழ்ந்துள்ள போதிலும், அவர்கள் 1000 ரூபாவை அடிப்படை நாளாந்தச் சம்பளமாகப் பெற முடியாதவர்களாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. 2015 ஆம் ஆண்டு முதல் இடம்பெறுகின்ற சம்பள உயர்வுப் போராட்டங்கள் சிறந்த விளைவுகளைப் பெற்றுக் கொடுக்கவில்லை. மக்கள் விரோதத் தொழிற்சங்கங்களே இதற்குப் பிரதான காரணமாக அமைகின்றன. இதனை




Image Source - www.namathumalayagam.com

விளங்கிக்கொண்டு மாற்று வழிகளைத் தேடுவதும் மக்கள் சார்பான தொழிற்சங்கச் செயற்பாடுகள் மற்றும் அரசியலை முன்னெடுப்பதுமே சரியான வழியாகும்.

### முல்லோயா போராட்டம்

முல்லோயா தோட்டம் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இத்தோட்டம் மலையக மக்களின் வரலாற்றில் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணம் தோட்டத் தொழிலாளர்கள் சம்பள உயர்வுக்காக முன்னெடுத்த வேலை நிறுத்தமும் கோவிந்தன் எனும் தொழிலாளி தியாகி ஆகியமையுமாகும். முல்லோயா வேலைநிறுத்தப் போராட்டம் மலையகத் தொழிற்சங்க வரலாற்றின் முக்கிய சாதனையாக அமைகின்றது. மலையகத்தில் தொழிற்சங்கங்கள் வேரூன்றி வளர்வதற்கும் தொழிலாளர்கள் பலம் பெறுவதற்கும் இப்போராட்டம் அடிப்படையாக அமைந்தது.

அக்காலத்தில் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட கூலி ஆண்களுக்கு ஐம்பத்து நான்கு சதமாகவும், பெண்களுக்கு நாற்பத்து மூன்று சதமாகவும், பிள்ளைகளுக்கு முற்பத்து இரண்டு சதமாகவும் காணப்பட்டது. அது வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்குப் போதுமானதாக அமையவில்லை. இதனை முன்வைத்து முல்லோயா பகுதியிலிருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தமக்கான கூலியை பதினாறு சதத்தால் உயர்த்துமாறு கோரி வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். குறித்த தோட்டத்தில் வாத்தியராக இருந்த திரு. ஜெகநாதன் என்பவர் தொழிலாளர்களுடன் இணைந்து செயற்பட்டமையை அறிய முடிகின்றது. இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை ஒழுங்கமைப்பதிலும் தொழிலாளர்களுக்கான ஆலோசனைகளை வழங்குவதிலும் இவரது பங்கு அதிகமாவே இருந்திருப்பதைக் காணமுடியும். இவ் ஆசிரியர் அக்காலத்தில் உத்வேகத்துடன் இயங்கிய லங்கா சம சமாஜக் கட்சியின் உறுதியான செயற்பாட்டாளராக இருந்துள்ளமையே இதற்கான பிரதான காரணமாகும்.

முல்லோயா தோட்டத்தின் சொந்தக்காரனாகவிருந்த வெள்ளைக்காரன் டபிள்யூ.ஈ. ஸ்பார்லிங் குறித்த ஆசிரியர் மீது கடுமையான கோபம் கொண்டதோடு அவர் தங்கியிருந்த லயன் அறையிலிருந்தும் தோட்டத்திலிருந்தும் வெளிறுமாறு கட்டளையிட்டான். தொழிலாளர்கள் இதற்கும் எதிர்ப்புக் காட்டினர். வேலை நிறுத்தத்திலும் ஈடுபட்டனர். இது தொடர்பாக தோட்ட நிருவாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதென தொழிற்சங்கத் தலைவர்கள் தீர்மானித்ததன் அடிப்படையில் முக்கிய தொழிற்சங்கத் தலைவராகவிருந்த திருவாளர் பி.எம். வேலுசாமி முல்லோயா தோட்டத்துக்குச் சென்றார். நிருவாகம் பேச்சு வார்த்தைக்கு இணக்கம் தெரிவிக்காததோடு தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வை வழங்கவும் மறுத்தது. தொழிலாளர்கள் உடனடியாக வேலைக்குத் திரும்ப வேண்டும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பாக இருந்தது. மேலும் தொழிலாளர்கள் ஒன்று கூடுவது, தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவது போன்றனவற்றை வெள்ளைக்கார துரையும் அவனுக்குக் கீழிருந்த நிருவாகமும் அங்கீகரிக்கவில்லை. தொழிலாளர்களோ தமது கோரிக்கையில் உறுதியாகவிருந்து வேலைநிறுத்தப் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

போராட்டத்துக்கு அடிப்படையாக அமைந்தது தொழிற்சங்கமே என்பதை அறிந்துகொண்ட வெள்ளைக்கார துரையும் அவனுக்குக் கீழிருந்த நிருவாகமும் அவர்களுக்கு எதிராகச் செயற்பட்டமை, வேலை நிறுத்தம் செய்யக்கூறி தொழிலாளர்களைத் தூண்டியமை போன்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து கண்டி பொலிசார் மூலமாகத் தொழிற்சங்கத் தலைவர் திரு.பி.எம். வேலுச்சாமியைக் கைது செய்தனர். மேலும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டாமென தோட்டத் தொழிலாளர்களை எச்சரித்தனர். இவ்விரு சம்பவங்களும் தொழிலாளர்களின் உணர்வை மேலிடச் செய்தது.

லங்கா சமசமாஜக் கட்சி, தொழிலாளர்களுக்குச் சாதகமாக இருந்து, தொழிலாளர்கள் முன்னெடுத்த வேலை நிறுத்தத்தை ஊக்குவித்தது. இதன் காரணமாக அக்காலத்தில் அரச சபை உறுப்பினராகவிருந்த அபே குணசேகர என்பவர் சமசமாஜக் கட்சிக்கு எதிராக கடுமையான விமர்சனங்களையும் தொழிலாளிகளின் போராட்டத்தக்கு எதிரான கருத்துகளையும் முன்வைத்தார். இவர் வேலை நிறுத்தத்தைக் கட்டுப்படுத்தவும் தொழிலாளர்களை அடக்கவும் பொலிசாருக்கு ஆதரவாகச் செயற்பட்டமையை அறிய முடிகின்றது.

நாளுக்கு நாள் வேலை நிறுத்தம் உத்வேகமடைந்தது. நிலமைகள் மோசமடைவதைக் கண்ட தோட்ட நிருவாகம் தொழிலாளர்களை அடக்க நினைத்தது. பல்வேறு அடாவடி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. தொழிலாளர்களைப் பிரிப்பதற்கு தொடர்ந்து பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தொழிலாளர்களின் உறுதி, வேலை நிறுத்தச் செயற்பாடுகள் ஒரு புறமாகவும், மறுபுறம் நிருவாகத்தின் கெடுபிடிகள் காரணமாகவும் முல்லோயா தோட்டத்தில் அமைதியின்மை தோன்றியிருந்தது.

அக்கால அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொழிலாளர்களுக்கு எதிராக இருந்தமை, வெள்ளைக்கார துரைமார்களின் அடக்கியாளும் மனநிலை, தொழிலாளர் விரோதப் போக்கு, பொலிசாரின் நடவடிக்கைகள் போன்றன நிலமைகளை மேலும் மோசமாக்கின. தொழிலாளர்களைப் பிரிப்பதற்கும் வேலை நிறுத்தப் போராட்டத்தை அடக்கவும் மேற்கொண்ட நடவடிக்கைகள் பலனளிக்கவில்லை. தொழிலாளர்கள் உறுதியுடன் இருந்து போராட்டத்தைத் தொடர்ந்தனர். தோல்வி கண்ட தோட்ட நிருவாகமும் பொலிசாரும் அமைதியை ஏற்படுத்துதல், பிரச்சினையைக் கட்டுப்படுத்தல் என்ற போர்வையில் தொழிலாளர்கள் மீதான வன்முறையை ஏவி விட்டனர். தொழிலாளர்கள் தாக்கப்பட்டனர்.

தொழிற்சாலையிலிருந்து கையில் பெரிய கம்பு ஒன்றுடன் வந்துகொண்டிருந்த முல்லோயா தோட்டத் தொழிலாளி கோவிந்தன் மீது டி.ஜி. சுரவீர என்ற பொலிஸ்காரன் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டான். இதனால் படுகாயமடைந்த அந்தத் தொழிலாளி மரணமடைந்தான். அவனது செங்குருதி, அவன் உருவாக்கிய தோட்ட மண்ணில் கரைந்தது. கோவிந்தன் வீரத் தியாகி ஆகினான்.

கண்டி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த அதிகாரி ரொபினின் பணிப்புரைக்கு அமையவே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது எனக் கூறப்பட்டது. எனினும் தொழிலாளர்களின் போராட்டத்தை அடக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட திட்டமிடப்பட்ட கொலையாகவே இதனை அடையாளப்படுத்த முடியும்.

இந்தப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் பொருட்டு பொலிசும் தோட்ட நிருவாகமும் பயன்படுத்திய இன்னொரு உபாயம் இன ரீதியான பிரிவை தொழிலாளர்களிடையே ஏற்படுத்த முனைந்தமையாகும். இதற்கென பபுன் என்ற பெயருடைய பொலிஸ் உத்தியோகத்தர் பயன்படுத்தப்பட்டமையையும் பதிவுகள் மூலம் அறிய முடிகின்றது. எவ்வாறாயினும் இன அடிப்படையில் தொழிலாளர்களைப் பிரிப்பதற்கு எடுத்த முயற்சி இறுதியில் தோல்வியடைந்தது.

தியாகி முல்லோயா கோவிந்தன் சுட்டுக் கொல்லப்பட்டதை நேரில் கண்ட பெரியசாமி என்ற தொழிலாளி பாதையில் வேகமாக ஓடியபோது அவர் மீது பொலிஸ் வாகனமொன்றை மோதச்செய்து படுகாயங்களுக்கு உள்ளாக்கிய சம்பவமும் பதிவாகி உள்ளது. கோவிந்தனை படுகொலை செய்ததைக் கண்ட சாட்சியாக இருந்த தொழிலாளியின் உயிரைப் பறிக்கச் செய்யப்பட்ட சதியாகவே இதனைக் காண முடியும்.

இச்சம்பவம் இடம்பெறுவதற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் பதினாறு பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொழிலாளர்கள் தங்கியிருந்த லயன் அறைகளுக்குச் சென்று வேலை நிறுத்தத்தைக் கைவிடுமாறும் அவ்வாறு செய்யத் தவறின் துப்பாக்கியால் சுடப்படுவீர்கள் எனக் கூறி மிரட்டியுள்ளனர். குறித்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் நடந்து முடிந்த பின்னர் ஜனவரி பன்னிரெண்டாம் திகதி முல்லோயா தோட்டத்தின் நடுப்பிரிவுக்குச் சென்ற பொலிசார் வேலைக்குத் திரும்புமாறு கூறி எச்சரிக்கை விடுத்துள்ளனர். தொழிலாளர்களின் உறுதியும் தொழிற்சங்கத்தின் வழிகாட்டலும் இத்தகைய எச்சரிக்கைகளுக்கு அடி பணியாத நிலையைத்



Image Source - thalam.lk

தோற்றுவித்திருந்தது.

தொழிலாளர்களின் உறுதிப்பாட்டை பலவீனப்படுத்தும் பொருட்டும் கொலைக் குற்றத்தைத் திசைமாற்றும் பொருட்டும் இன்னொரு உத்தி கையாளப்பட்டமையை அறிய முடிகின்றது. அதாவது தொழிலாளர்கள் தோட்டத்தின் நிருவாகத்துக்குச் சொந்தமான பகுதியில் அனுமதியின்றி மரக்கறித் தோட்டச் செய்கையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து பதின்மூன்று தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர். மனிதாபிமானமற்ற வகையில் அவர்களை ஒரு வாகனத்தில் அடைத்து கண்டி நோக்கிக் கொண்டு சென்றமை பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் தெழிலாளர்கள் நீதி மன்றத்தின் முன்னிலையில் கொண்டு செல்லப்படாமல் நீதிபதியின் தீர்ப்புடன் சிறையில் அடைக்கப்பட்டனர்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் போராட்ட வரலாற்றில் பல்வேறு பாடங்களையும் அனுபவங்களையும் தந்த முல்லோயா போராட்டம் பிற்காலத்தில் தொழிலாளர்கள் அடக்குறைக்கு எதிராகப் போராடும் உத்வேகத்தையும் அளித்தது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் உரிமைக்காகப் போராடிய தியாகிகளின் வரலாற்றின் முதலாவது பதிவாகவும் கோவிந்தனின் அர்ப்பணிப்பு அமைகின்றது.

முல்லோயா போராட்டத்தைத் தொடர்ந்து பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகள் தொழிலாளர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. உதாரணங்களாக சில:

அ. ஏப்ரல் மாதம்

றம்பொடை தோட்டத்தில் சுமார் எழுநூறு தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து தோட்டத்துரையின் அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வெலிஓயா தோட்டத்தில் தோட்ட நிருவாகியின் தொழிலாளர் விரோத போக்கிற்கு எதிரான போராட்டம்.

ஆ. மே மாதம்

நேஸ்பி தோட்டத்தில் இடம்பெற்றப் போராட்டம் - இது தொழிலாளர்களுக்கிடையே மோதல்களைத் தோற்றுவித்திருந்தது.

நீட்வுட் தோட்டப் போராட்டம் - பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நடைபெற்ற

போராட்டத்தில் இரண்டு பொலிசாரும் தாக்கப்பட்டனர்.

ரதல்லை தோட்டப் போராட்டம் - தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து பிரச்சினைகளைக் கொடுத்து வந்த பெரிய கங்காணிக்கு எதிரான போராட்டம்.

வேவஸ்ஸ போராட்டம் - பாரியளவில் மேற்கொள்ளப்பட்ட இப்போராட்டம் தோட்டத் துரையை வெளியேற்றுமாறு கோரி முன்னெடுக்கப்பட்டது. ஊவா பகுதியெங்கும் பரவிய இப்போராட்டம் மிகவும் முக்கியமான ஒன்றாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சென் அன்றூஸ் தோட்ட போராட்டம் - தோட்டத்துரையின் அடக்குமுறையை எதிர்த்து முன்னெடுக்கப்பட்டது.

முல்லோயா போராட்டத்தின் விளைவாக தொழிலாளர்களுக்குச் சாதகமான உடன்படிக்கை ஒன்றும் துரைமார் சங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தொழிலாளர்களின் பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்காக தொழிலாளர் சபையினை (Workers Council) ஏற்படுத்துவது எனவும் மேலும் தோட்டங்களுக்குள் பொலிசார் பிரவேசிக்கும் போது ஆயுதங்களைக் கொண்டு செல்லக் கூடாது என்றும் தோட்டப் பிரச்சினைகள் தொழிலாளர் சபையுடன் பேசி தீர்க்கப்பட வேண்டும் எனவும் உடன்பாடு காணப்பட்டது. தொழிலாளர் போராட்டத்தின் மூலமாக வென்றெடுத்த கோரிக்கை இதுவாகும்.

### பஞ்சப்படி போராட்டம்

**1965 - 1970** காலப்பகுதியில் டட்லி சேனநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி பதவியில் இருந்தது. அந்த அரசாங்கத்தின் பொருத்தமற்ற பொருளாதார நடவடிக்கையினால் தேசிய வருமானம் வீழ்ச்சியடைந்த காரணத்தினால் வாழ்க்கைச் செலவு அதிகரித்துக் காணப்பட்டது. பெருந்தோட்ட நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் எவ்விதமான அக்கறையும் மேற்கொள்ளப்படவில்லை. முதலாளித்துவ நாடுகளுடனான தொடர்பும் தாராள பொருளாதார முறையும் இறக்குமதிகளைச் சார்ந்து நிற்கும் பொருளாதாரக் கொள்கையும் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாதகமாகவே அமைந்தன. பல்வேறு போராட்டங்களின் விளைவாக அரசாங்க ஊழியர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்பட்டது. ஆனால் வழமை போல பெருந்தோட்டத் தொழிலாளர்கள் புறக்கணிக்கப்பட்டனர்.

வாழ்க்கைச் சுமைக்கேற்ப **17** ரூபாய் **50** சதம் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி தோட்டத் தொழிலாளர்களால் தொடர்ச்சியான போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டமே பஞ்சப்படி போராட்டமாகும். நாளொன்றுக்கு **67** சதம் சம்பள அதிகரிப்பைக் கோரி பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டது. இதற்கு முதலாளிமார் சம்மேளனம் இணங்கவில்லை. போராட்டம் தொடர்ந்தது. பிரதமராகவிருந்த டட்லி சேனநாயக்க இந்தப் போராட்டம் தொடர்பாக எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. சம்பள நிருணய சபையுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணுமாறு கூறி ஒதுங்கிக் கொண்டார்.

**1966** ஆம் ஆண்டு நாற்பத்தைந்து நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற போராட்டம் மலையகம் முழுதும் வியாபித்து இருந்தது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிலிருந்து பிரிந்து சென்ற ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் இந்தப் போராட்டத்திற்கான தலைமையை ஏற்றிருந்தது. இந்தக் கோரிக்கை தொடர்பாக இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த மயிலிட்டியா தோட்டத்தில் மூன்று மாத காலம் வேலை நிறுத்தம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இறுதியில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் படி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் **10** சதம் சம்பள உயர்விற்கு ஒத்துக் கொண்டது. போராட்டம் தோல்வியில் முடிந்தது. மக்கள் விரோதத் தொழிற்சங்க நடவடிக்கைக்கு இதுவும் சிறந்த உதாரணம் ஆகும். இத்தகைய நடவடிக்கை தொழிற்சங்கம் மீதான பற்றுதலையும் வலுவிழக்கச் செய்தது.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பான போராட்டங்கள்

தொடர்ந்த வண்ணமே உள்ளது. கடந்த ஆறு வருடங்களாக இது தொடர்பில் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அரசாங்கம் அடிப்படைச் சம்பளமாக ஆயிரம் ரூபா என்பதைக் கூறி வந்தாலும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு தயாராக இல்லை. தனியார் கம்பனிகள் அரசாங்கத்துக்கு மேலான அதிகாரத்தைக் கொண்டிருப்பது போல தோன்றுகின்றது. இன்றைய விலைவாசி உயர்வு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்றன தொழிலாளர்களை மேலும் அழுத்துகின்றன. உரிய சம்பளத்தை வென்றெடுப்பதற்காக தொடர்ந்து போராட வேண்டியது அவசியமாகின்றது.

## இன அடையாளம் மற்றும் காணி, வீட்டு உரிமைக்கான போராட்டங்கள்

தொழிற்சங்கம் அமைத்தல், வேதன அதிகரிப்பு, தோட்டங்களைப் பாதுகாத்தல் போன்றனவற்றின் அடிப்படையில் மலையகத் தொழிலாளர் முன்னெடுத்த போராட்டங்களின் அடுத்த கட்டமாக தேசிய இன அடையாளத்தை வென்றெடுப்பதற்கான போராட்டங்கள் மேலெழுந்துள்ளன.

இந்திய வம்சாவளி என்ற அந்நிய நாட்டின் அடையாளத்தை நீக்குவதோடு இந்நாட்டை உருவாக்கிய மக்களை 'மலையகத் தமிழர்' என அடையாளப்படுத்த வேண்டும் என்ற கருத்து முன்னிலை பெற்று வருகின்றது. இதற்கான பிரகடனமும் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இவர்கள் இந்நாட்டில் வாழ்கின்ற நான்கு தேசிய இனங்களில் ஒன்றாகக் கருதப்பட வேணடும் என்ற கோரிக்கையும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும் மலையக மக்களுக்கான காணி, வீட்டுரிமை பற்றிய போராட்டங்களும் இன்னொரு கட்டத்துக்கு வளர்ச்சியடைந்துள்ளன. வீடுகளை அமைப்பதற்கான பத்து பேர்ச்சஸ் காணியும், விவசாயம் மற்றும் தோட்டச் செய்கைக்கான இருபது பேர்ச்சஸ் காணியும் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக பல்வேறு போராட்டங்கள் 1980 ஆண்டு முதல் மக்கள் சார்ந்த செயற்பாட்டாளர்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய கோரிக்கைகளை வென்றெடுக்க, கடுமையானதும் தொடர்ச்சியானதுமான போராட்டங்களை




Image Source - www.wsws.org

முன்னெடுத்துச் செல்ல வேண்டியது காலத்தின் கட்டாயமாக அமைகின்றது.

### என்ன செய்ய வேண்டும்?

இயற்கையோடும் வறுமையோடும் போராடிய மலையக மக்கள் முதலாளிகளின் அடக்குமுறைகளுக்கும் இனவாத நடவடிக்கைகளுக்கும் எதிராக போராடியதன் விளைவாகவே பல்வேறு உரிமைகளைப் பெற முடிந்தது. ஐக்கியம், ஒருமைப்பாடு, தன்னலங்கருதாத செயற்பாடுகள், தலைமைத்துவம், துணிவு போன்ற காரணிகளே வெற்றிகளைப் பரிசாகத் தந்தன. தொழிற்சங்கத் தெரிவு, வேறுபாடுகளை மறந்தமை, ஒருவருக்காருவர் ஒத்தாசை நல்கியமை போன்றன அதற்கு வலுவூட்டின. மக்கள் சார்பான தொழிற்சங்கம், அவற்றின் செயற்பாடுகள், மக்கள் தலைவர்களின் துணிவு மிக்க முடிவுகள் போன்றனவும் பங்களித்தன.

ஆனால் இன்றைய சூழலில் இவை யாவும் நிர்மூலமாக்கப்பட்டு சிதைவடைந்த நிலைக்குச் சென்றுள்ளதைக் காணமுடியும். ஐக்கியம் சிதறடிக்கப்பட்டுள்ளது. போராட்டப் பலம் பலவீனமாக்கப்பட்டுள்ளது. தொழிற்சங்க நடவடிக்கைகளும் அரசியல் செயற்பாடுகளும் ஒன்றுடன் ஒன்று கலந்து நம்பிக்கையற்ற நிலையைத் தோற்றுவித்துள்ளன. தோட்டங்களை தனியார் கையேற்ற பின்னர் எவ்வித அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படாமல் அவை காடுகள் மற்றும் புதர் நிலங்களாக மாற்றப்படுகின்றன. தனியார் தோட்டங்களிலிருந்து தொழிலாளர்கள் வெளியேற வேண்டுமென்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. புசல்லாவை பகுதியிலுள்ள நம்பொடை தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துப் போராடுகின்றனர்.

முதலாளித்துவ பொருளாதாரம் மற்றும் சீரற்ற கல்வி முறையால் சுயநல எண்ணம் மேலோங்கியுள்ளது. தொழிலாளர் உதிரிகளாக மாற்றப்பட்டுள்ளனர்.

**இந்திய வம்சாவளி என்ற அந்நிய நாட்டின் அடையாளத்தை நீக்குவதோடு இந்நாட்டை உருவாக்கிய மக்களை மலையகத் தமிழர் என அடையாளப்படுத்த வேண்டும் என்ற கருத்து முன்னிலை பெற்று வருகின்றது. இதற்கான பிரகடனமும் வெளியிடப்பட்டுள்ளது.**

கடுமையான உழைப்பாலும் போராட்டத்தாலும் கட்டியெழுப்பப்பட்ட மலையகம் திட்மிடப்பட்ட வகையில் சிதைக்கப்படுகின்றது. எனவே இதனை மாற்றியமைக்க சகலரும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டியது அவசியமாகும். இந்த நோக்கத்துக்காக பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

- தொழிலாளர்களை ஐக்கியப்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கக்கூடிய தொழிற்சங்க கட்டமைப்பை உருவாக்குதல். தொழிலாளர் கல்வித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல். உழைக்கும் மக்கள் சார்பான தொழிற்சங்கத்தின் முக்கியத்துவத்தை அறியச் செய்தல்.
- அரசியல் அடிப்படையில் ஆளுமையுள்ள சமூகமாக தலை நிமிர்வதற்குரிய, மக்கள் நலன்சார்ந்த கட்சியைக் கட்டியெழுப்புதல். சலுகை அரசியலை மட்டுமன்றி உரிமை சார்ந்த விடயங்களை வென்றடுப்பதற்கான வேலைத் திட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்தல்.
- பேரினவாத முதலாளித்துவ அரசாங்கங்களுக்கு எதிராக செயற்படும் ஏனைய அரசியல் கட்சிகள், ஜனநாய அமைப்புகளுடன் இணைந்து செயலாற்றுதல்.
- சுய உற்பத்தி, நுகர்வு, பண்டப்பரிமாற்றம் போன்ற பொருளாதார நடவடிக்கைகளைப் பலப்படுத்துதல்.

- மலையக மக்களின் வரலாறு மற்றும் கலை, பண்பாட்டு அம்சங்களைப் பாதுகாக்கும், மீண்டும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் கலாசாரத்தைக் கட்டியெழுப்புதல்.
- மலையகத்தின் இயற்கைச் சூழலை, வளங்களைப் பாதுகாப்பதற்கான அமைப்பை மக்களின் ஒத்துழைப்புடன் கட்டியெழுப்புதல்.
- போதையற்ற இளைஞர்கள் என்ற இலக்கை அடைவதற்கு விளையாட்டு மற்றும் பயனுள்ள பொழுதுபோக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- பெண் தலைமைத்துவத்தை உருவாக்குதல்.
- மாணவர் இயக்கங்கள், சிறுவர் அமைப்புகளைப் பலப்படுத்துதல்.
- புதிய பண்பாட்டுப் பயணத்தினை சகல மாவட்டங்களுக்கும் விஸ்தரித்தல்.

## முடிவுரை

மலையக மக்களின் வரலாறு என்பது போராட்டங்களால் வடிவமைக்கப்பட்டதாகும். தற்போதைய நிலையில் மலையக மக்கள் அனுபவித்து வரும் உரிமைகள் மற்றும் சலுகைகள் இத்தகைய போராட்டங்களால் வெற்றி கொள்ளப்பட்டவையாகும். சாதாரண வேலை நிறுத்தம் தொடக்கம் பல நாட்கள் நீடித்த பரந்துபட்ட வேலை நிறுத்தம் வரை இத்தகைய போராட்டங்களின் தன்மைகள் படிப்படியாக வளர்ச்சியடைந்துள்ளன. போராட்டங்களின் உச்சமாக உயிர்த் தியாகங்கள் இடம் பெற்றுள்ளன. எனவே மலையக மக்களின் வரலாறு செங்குருதியால் புடம் போடப்பட்டுள்ளது எனக் குறிப்பிட முடியும். இத்தகைய வீரம் மிகுந்த போராட்டங்களின் திரட்சியாகவே மலையகத்தை அடையாளப்படுத்த வேண்டும். பிற்போக்கு தொழிற்சங்கம் மற்றும் அரசியல் நடவடிக்கைகள் இத்தகைய தனித்துவ வரலாறு மேலும் வளர்ச்சி பெறாத தேக்க நிலையைத் தோற்றுவித்துள்ளது. மேலும் மாறி மாறி பதவிக்கு வந்த, பேரினவாதம் மற்றும் மதவெறி கொண்ட அரசாங்கங்களின் நடவடிக்கைகளும் போராட்டத்தின் வளர்ச்சியைத் தடை செய்துள்ளன. மேலும் திறந்த பொருளாதாரக் கொள்கை, தனியார்மயம், பொருத்தமற்ற கல்வி போன்றன காரணமாகவும் போராட்டக் கலாசாரம் மழுங்கடிக்கப்பட்டுள்ளது.

மக்கள் சார்ந்த அரசியலை முன்னெடுப்பவர்கள் இது குறித்து மிகச் சரியான தீர்மானத்தை மேற்கொண்டு போராட்ட வாழ்க்கைப் பண்பாட்டையும் வரலாறையும் மீளவும் வளர்த்தெடுக்கும் பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியமானதாக உள்ளது. மலையக மக்களின் போராட்டங்களில் இன்னொரு வளர்ச்சிப்படியாக இன அடையாளத்திற்கான போராட்டங்களும் காணி, வீட்டுரிமைக்கான போராட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. மலையகம் 200 அதனை சாத்தியமாக்குவதற்கு கடந்த கால வெற்றிகளை படிப்பினைகளாகக் கொள்வது சிறந்த விளைவுகளைத் தரும்.

## உதவிய நூல்கள்


1. இராஜேந்திரன் சிவ. 2019. தடை மலைகளை உடைத்தல், செம்பதாகை சஞ்சிகை, புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி, கொழும்பு.
2. கந்தையா மு.சி. சிதைக்கபட்ட மலையகத் தமிழர்கள், 2015 விடியல் பதிப்பகம், கோயம்புத்தூர்.
3. சாரல் நாடன் (1988). தேசபக்தன் கோ. நடேசையர் : ஒரு வரலாற்று ஆய்வு, மலையக வெளியீட்டகம் கண்டி.
4. புதிய நீதி (2021). மலையகத் தமிழ் மக்களும் மாற்று அரசியல் மார்க்கமும், புதிய நீதி வெளியீட்டகம், கொழும்பு.
5. ரோகிணி மாத்தளை (1993). உரிமைப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகள், இளவழகன் பதிப்பகம், சென்னை.
6. லோரன்ஸ். அ (2006). மலையக சமகால அரசியல் தீர்வு, மலையகம் வெளியீட்டகம், தலவாக்கலை.
7. *Nadesan N. (1993). A history of Up country Tamil People in Sri Lanka, Nandalala Publication, Hatton.*


(தொடரும்)

‘இலங்கை பிராமிக் கல்வெட்டுக்களில் நாகர்’ எனும் இத்தொடர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றை தொல்லியல் ரீதியாக நிரூபிக்கத் தேவையான ஆதாரங்களைக் கொண்ட ஆவணமாகும். நாகர் தமிழ் மொழி பேசியவர்கள் எனவும், ஆதி இரும்புக் காலப் பண்பாட்டை பிரதானமாக அவர்களே இலங்கையில் பரப்பினார்கள் எனவும், இங்கு கி.மு ஏழாம் நூற்றாண்டு முதலாகத் தமிழ் ஒரு பேச்சு வழக்கு மொழியாக நிலை பெற்றிருந்தது எனவும் பேராசிரியர் எஸ். பத்மநாதன் கூறியுள்ளார். இலங்கையில் 2300 ஆண்டுகளுக்கு முன்பு பொறிக்கப்பட்ட சுமார் 100 பிராமிக் கல்வெட்டுக்களில் நாக மன்னர்கள், நாக தலைவர்கள், நாக பிரதானிகள், நாக சுவாமிகள், நாக அதிகாரிகள் ஆகியோர் பற்றிய குறிப்புகள் உள்ளன. இலங்கையின் வரலாற்றுதயக் காலத்தில் நாக எனும் பெயர் கொண்ட மன்னர்கள் பலர் ஆட்சி செய்துள்ளனர். இவர்களில் பலர் தமிழ்ச் சமூகத்தோடு தொடர்புடையவர்கள். இவர்கள் பற்றிய வரலாறு மற்றும் வழிபாட்டுப் பாரம்பரியம் ஆகியவை பிராமிக் கல்வெட்டுக்களை ஆதாரமாகக் கொண்டு இத்தொடரில் ஆராயப்படுகின்றன.

# நாகசேனன் பற்றிக் குறிப்பிடும் சித்துள்பவ்வ கல்வெட்டுகள்



● என்.கே.எஸ். திருச்செல்வம்


கடந்த 25 வருடங்களாக இலங்கைத் தமிழர் வரலாறு, தமிழர் வழிபாட்டுப் பாரம்பரியம், பிராமிக் கல்வெட்டுகள், இந்து சமயம் என்பன தொடர்பாக ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டுவரும் கலாநிதி என். கே.எஸ். திருச்செல்வம் அவர்கள் வரலாற்றுத்துறையில் இளமாணிப் பட்டத்தைப் பெற்றவர். தனது எழுத்துப்பணிக்காகப் பல விருதுகளையும் பெற்றுள்ளார்.
இவர் இதுவரை பல உள்நாட்டு மற்றும் சர்வதேசக் கருத்தரங்குகளில் தனது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளதுடன் 18 நூல்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய நூல்களில் ‘தென்னிலங்கையின் புராதன இந்துக்கோயில்கள்’, ‘புதையுண்டுபோன புராதன இந்துக் கோயில்கள்’, ‘இந்து சமயம் ஓர் அறிவியல் பொக்கிஷம்’, ‘யார் இந்த இராவணன்’, ‘பாரம்பரியமிக்க கதிர்காம பாத யாத்திரை’, ‘பண்டைய தமிழ் நூல்களில் சிவன்’, ‘கன்னியா: பண்டைய சைவத் தமிழரின் பாரம்பரிய அடையாளம்’, ‘தமிழரின் குமரி நாடு உண்மையா? கற்பனையா?’ போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். இவர் தேசிய மற்றும் சர்வதேச சஞ்சிகைகள், பத்திரிகைகள் ஆகியவற்றில் இதுவரை 295 ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

## அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நாகர்

தென்னிலங்கையில் பொ.ஆ.மு 3 ஆம் நூற்றாண்டில் மகாகம எனும் ஓர் இராச்சியத்தை அமைத்தவன் தேவநம்பிய தீசனின் சகோதரனான மகாநாகன் என்பவனே. இவன் ஓர் நாக மன்னனாவான். இவன் அமைத்த மகாகம இராச்சியத்தில் முதன் முதலாக நாகமகா விகாரை எனும் வழிபாட்டுத் தலத்தை இவன் அமைத்தான். தேவநம்பிய தீசனின் பின் அரசனாக வேண்டியவன் என்பதால் இவன் ‘உப ராஜா மகா நாகன்’ என அழைக்கப்பட்டான். தென்னிலங்கையில் கிரிந்த, திஸ்ஸ மகராம ஆகிய இடங்களில் பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுகளில் தவறான நம்பிக்கைகளை உடைய (இந்து சமய நம்பிக்கைகள்) இவன் புத்த மதத்தைத் தழுவினான் எனக் கூறப்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் திஸ்ஸ மகாராமையின் அருகில் இருந்த ‘நநிகிரி’ எனும் இடம் பற்றி பொ.ஆ 2 ஆம் நூற்றாண்டிற்குரிய தொலமியின் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது நாகவழிபாடு நிலவிய இடம் என அறிஞர்கள் கூறியுள்ளனர். பொ.ஆ 1 ஆம் நூற்றாண்டில் திஸ்ஸ மகாராமையில் இருந்த நாக மாகாவிகாரை ஈழநாகன் எனும் மன்னனால் புனரமைக்கப்பட்டது. மேலும் தொலமியின் வரைபடம் குறிப்பிடும் ‘நசடும’ எனும் நாகரின் நகரமும் இப்பகுதியில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ரம்பா விகாரை அமைந்துள்ள பகுதி ஓர் பண்டைய நாக வழிபாட்டுத் தலமாகும். இதன் பண்டைய பெயர் மகாநாக குளம் என்பதாகும். மகாநாக குளம் நகரின் முக்கிய வழிபாட்டிடமான ரம்பா விகாரையை



602

**நாகசேனன் எனும் சொல் பொறிக்கப்பட்ட சித்துள்பவ்வ கல்வெட்டு**

நாகசேனன் எனும் துறவி பராமரித்து வந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

மேற்சொன்ன இடங்களைத் தவிர நாக வழிபாடு நிலவிய பத்துக்கும் மேற்பட்ட வழிபாட்டுத் தலங்கள் தென்னிலங்கையில் இருந்தன. இவை நாகமலை, நாககல்லு, நாகவில்லு, நாககுளம், நாகதுறை, நாககண்டி, நாகமடு, நாகதொடுவாய், நாகவத்த, நாகபவத்த, நாகஹெல, நாகவல, நாககுளி போன்ற இடங்களாகும். தற்பொழுது இவை நாக விகாரை எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ளன.

தென்னிலங்கையில் நாக வழிபாடு தொடர்பான 6 பிராமிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் 'பருமகன்' என்ற பட்டத்துடன் சேர்த்தே நாகன் எனும் பெயர் அதிகளவில் காணப்படுவதால், இப்பகுதியில் நாக வணக்கத்தைக் கடைப்பிடித்தோர் அரச பிரதானிகளாகவோ அல்லது தலைவர்களாகவோ இருந்திருக்க வேண்டும். மேலும் நாக யுவராஜன் பற்றிய கல்வெட்டுக்களும் தென்னிலங்கையில் காணப்படுகின்றன. இது நாக சிற்றரசன் எனப் பொருள்படும்.

## நாகசேனன் பற்றிக் குறிப்பிடும் சித்துள்பவ்வ கல்வெட்டுகள்

இலங்கையின் தென் மாகாணத்தில் உள்ள அம்பாந்தோட்டை மாவட்டத்தில், கதிர்காமத்தின் கிழக்குப் பகுதியில் சுமார் 16 கி.மீ தூரத்தில், யால வனவிலங்குகள் சரணாலயம் அமைந்துள்ள காட்டின் தென்மேற்குப் பகுதியில் சித்துள்பவ்வ என்னுமிடம் அமைந்துள்ளது. இங்கு கோரவக் கல, சித்துள்பவ்வ, தெகுந்தரவெவ எனும் மூன்று மலைப் பகுதிகள் காணப்படுகின்றன. இம் மூன்று இடங்களிலும் நூற்றுக்கணக்கான கற்குகைகள் காணப்படுகின்றன.

இக்குகைகளில் பண்டைய காலம் முதல் கதிர்காமத்திற்கு தல யாத்திரை வந்த சித்தர்களும், முனிவர்களும் அதிகளவில் தங்கிச் சென்றுள்ளனர். இதன் காரணமாக இம் மலை சித்தர் மலை எனப் பெயர் பெற்றுள்ளது. இதுவே சிங்கள மொழியில் சித்தர பப்பத்த என அழைக்கப்பட்டு, பின்பு சித்தல பப்பத்த என மருவியுள்ளது. பப்பத்த என்பது மலை எனப் பொருள்படும். இப்படி காலத்துக்குக் காலம் மருவி வந்து தற்போது சித்துள்பவ்வ என அழைக்கப்படுகின்றது.

சித்தர் மலைப் பகுதியிலுள்ள குகைகளிலும், பாறையிலும் 64 முற்கால பிராமிக் கல்வெட்டுக்களும், 11 பிற்கால பிராமிக் கல்வெட்டுக்களுமாக மொத்தமாக 75 கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. சித்துள்பவ்வ எனும் சித்தர் மலையில் மட்டும் 31 பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றில் 15 கல்வெட்டுக்களில் இந்து சமயம் மற்றும் தமிழர் பற்றிய பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இக் கல்வெட்டுகளில் சிவன், நாகம், வேலன் போன்ற இந்து தெய்வங்கள் தொடர்பான பெயர்களும், சுவாமி, பிராமணன், பெருமகன் போன்ற தமிழர் தொடர்பான பெயர்களும் காணப்படுகின்றன.

இவற்றில் இரண்டு கல்வெட்டுகளில் நாகசேன எனும் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. முதலாவது கல்வெட்டின் விபரங்கள் பின்வருமாறு,

"நாகசேன தேரச லேன சகச"


இதன் பொருள் "தேரர் நாகசேனனின் குகை சங்கத்திற்கு" என்பதாகும். இது ஆங்கிலத்தில் "The cave of the elder Nagasena, [is given] to the sangha" எனப் பொருள்படுகிறது.

முதலாவது கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வாசகங்களே இரண்டாவது கல்வெட்டிலும் பொறிக்கப்பட்டுள்ளன. இக் கல்வெட்டின் படியெடுக்கப்பட்ட படம் கிடைக்கவில்லை. இக்கல்வெட்டில் உள்ள விபரங்கள் பின்வருமாறு,

*“நாகசேன தேரஹ லேன சகச”*

இதன் பொருள் “பெரியவர் நாகசேனனின் குகை சங்கத்திற்கு..” என்பதாகும்.

சிவனின் மகன் நாகன் பற்றிக் குறிப்பிடும் பிற்கால பிராமிக் கல்வெட்டுகள்


Nos. 1, 2, 3

**நாகன், சிவன் ஆகிய பெயர்கள் உள்ள கல்வெட்டுகளின் படம்**

சித்துள் பவ்வவில் பிரதான கற்குகைக்கு முன்பக்கம் உள்ள சித்துள்பவ்வ குளத்தின் வலது கரையில் உள்ள ஓர் பாறையில் பிற்கால பிராமிக் கல்வெட்டுக்கள் பல பொறிக்கப்பட்டுள்ளன. இப்பாறையில் மொத்தமாக **6** பிற்கால பிராமிக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் பொ.ஆ **3** முதல் **6** ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுகளாகும். கல்வெட்டு ஆய்வாளர் மாலினி டயஸ் இவற்றில் **5** கல்வெட்டுகளைப் பதிவு செய்துள்ளார். இவற்றில் **2** கல்வெட்டுகளில் நாகன், சிவன் ஆகிய பெயர்கள் காணப்படுகின்றன.


No. 52

**மருமகன், நாக ராமணி ஆகிய சொற்கள் பொறிக்கப்பட்ட சித்துள்பவ்வ பாறைக் கல்வெட்டின் படியெடுக்கப்பட்ட படம்**

இக்கல்வெட்டுக்கள் இரண்டிலும் ஒரே செய்தியே பொறிக்கப்பட்டுள்ளது. அதன் விபரங்கள் பின்வருமாறு:

“ஹித உதய என்னுமிடத்தை சேர்ந்த சிவனின் மகன் நாகன் இங்கிருந்த மடாலயத்தில் நடைபெற்ற ஆரியவாச எனும் விழாவிற்காக நூறு கஹப்பணம் வழங்கினான்”

## நாக ராமினி பற்றிக் கூறும் பிற்கால பிராமிக் கல்வெட்டு

பாறையில் பொறிக்கப்பட்டுள்ள அடுத்த கல்வெட்டு பற்றிய பெயர்ப் பலகையும் கல்வெட்டின் அருகில் வைக்கப்பட்டுள்ளது. இக் கல்வெட்டில் மருமகன், நாக ராமணி ஆகிய தமிழ் சொற்கள் காணப்படுகின்றன. கல்வெட்டின் விபரம் பின்வருமாறு:

இதன் பொருள் “சித்தம்... மகாராஜனின் மருமகன் யுவராஜா தீசனின் மகள் க.... ராஜாவின் மகள்.......நாகராமினி மகாராஜா.........................” என்பதாகும்.

*சித்த............மகாராஜஹ மருமகனஹ யுவராஜா திசயஹ*

*ஜித க.......ரஜஹ ஜித......... நாகராமினிய மகாராஜா....*

இக்கல்வெட்டில் ஓர் மகாராஜனின் (மகாராஜனின் பெயர் சிதைவடைந்துள்ளது) மருமகனான உபராஜன் தீசனின் மகள் (மகளின் பெயரும் சிதைவடைந்துள்ளது), இன்னுமோர் ராஜனின் மகள் (இரண்டாவது ராஜனின் பெயரும் சிதைவடைந்துள்ளது), நாக ராமினி மகாராஜன் (மகாராஜனின் பெயர் கூறப்படவில்லை) ஆகியோர் இப்பகுதிக்கு செய்த ஏதோ ஒரு பணி பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது.

(தொடரும்)

ஈழநாடானது தமிழகத்திலிருந்து கடலால் பிரிக்கப்பட்ட நாடாக அமைகின்ற போதும், பண்டைக்காலந்தொட்டே தமிழர்களின் மரபுத் தொடர்ச்சியான பண்பாட்டுக் கூறுபாடுகளை உடைய மண்டலமாக காணப்பட்டு வருகிறது. தொல்காப்பியம் சுட்டும் பல இலக்கண விதிகள் இன்று தமிழகத்தில் வழக்கில் இல்லாத போதும் ஈழத்தில் அவை வழங்கப்பட்டு வருகின்றன. பண்பாட்டு வாழ்வியல்களின் அடிப்படையிலும் பண்டைத் தமிழரின் மரபுகள் பலவற்றை ஈழத்தில் காணவியலும். இந்நிலையின் தொடர்ச்சியாகவே பண்டைத் தமிழரின் சமயப் பண்பாட்டு மரபுகளையும் கருதலாம். அந்த வகையில், வடக்கே பருத்தித்துறைமுதல் தெற்கே தேவேந்திரமுனைவரை உள்ள தமிழ் மக்களிடமும், சிங்கள மக்களிடமும் காணப்படும் வழிபாட்டு முறைகளில் பண்டைத் தமிழ் நூல்களில் காணப்படும் வழிபாட்டு மரபுகளை ஆய்வுப் பரப்பாகக் கொண்டு பண்டைத் தமிழ் இலக்கியங்களிலும், இலக்கணங்களிலும் காணப்படும் வழிபாட்டு மரபுகளில் இலங்கையில் இன்றளவும் வழங்கி வருகின்ற மரபுத் தொடர்ச்சியினை ஆராய்வதே 'இலங்கையில் பண்டைத் தமிழரின் வழிபாட்டு மரபுகள்' எனும் இத் தொடரின் நோக்கமாகும். இத் தொடர், இலங்கையில் பண்டைத் தமிழரின் வழிபாட்டு மரபுகள் இன்றளவும் தொடர்கின்றன என்னும் கருதுகோளினை அடையும்.




**ஜெகநாதன் அரங்கராஜ்**

முனைவர் ஜெ. அரங்கராஜ் யாழ்ப்பாணம் நீர்வேலியைச் சேர்ந்தவர். இவர் பழந்தமிழ் இலக்கியத் துறையில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். மேலும் தமிழ் இலக்கியம், இலக்கணம், வரலாறு, சமயம் முதலான துறைகளில் தமது ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். சிங்கப்பூர்த் தமிழ்ப் பாடநூற்கள் குறித்தும் பண்டைத் தமிழர்களின் அயலகத் தொடர்புகள் குறித்தும் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். 'செம்மொழித் தமிழ் இலக்கண, இலக்கிய மேற்கோள் அடைவு' என்னும் இவரது நூல் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இன்றைய நிலையில் ஈழம், தமிழகம் என இரண்டு தலங்களிலும் ஆய்வு மேற்கொண்டுள்ள ஆய்வாளராக இவர் திகழ்கின்றார்.


# ஆசீவகமும் திருக்குறளும்



Image Source - www.tamilnadutourism.tn.gov.in

பௌத்தமும் சமணமும் தென்னகம் வருதலுக்கு முன்பே பண்டைத் தமிழகத்திலும் ஈழத்திலும் தழைத் தோங்கிய மெய்யியற் சமய மரபாக விளங்கியது ஆசீவகம் ஆகும். தேவனாம்பிரிய திசையன் என்னும் மன்னனுக்கு முன்பு இலங்கையை ஆண்ட மன்னர்களில் பலர் ஆசீவக சமய மரபினைப் பின்பற்றியவர்களே என்பதற்கான சான்றுகள் மகாவம்சத்தில் காணப்படுகின்றது. சங்க இலக்கியங்களில் பல பாடல்கள் ஆசீவகக் கருத்தியலை உடையனவாக உள்ளன. சிலப்பதிகாரத்தில் முதல் முறையாக ‘அண்ணலாம் பெருந்தவத்து ஆசீவகர்கள்’ என ஆசீவகர்களின் பெயர் சுட்டப்படுகின்றமையினைக் காணலாம். மணிமேகலையின் சமயக்கணக்கர் தம்திறன் உரைத்தகாதையில் பிறசமயங்களின் கருத்துக்களைக் காட்டிலும் ஆசீவக சமயங்களின் கருத்துக்களே மிகுதியான அடிகளிற் சுட்டப்பட்டுள்ளமை அறியத்தக்கதாகும். இவற்றின்வழி கி.மு 5 ஆம் நூற்றாண்டினுக்கு முற்பட்டே ஆசீவக சமயக் கருத்துக்கள் தமிழகத்தில் செல்வாக்கு பெற்றுள்ளமையினை அறியலாம்.

வைதீக எதிர்ப்பு நிலையிலுள்ள சமயங்களில் முதலாவதாக விளங்குவது ஆசீவக சமயமாகும். வடபுல நூல்களில் ஆசீவக சமயக் கருத்துக்கள் முழுமையற்ற நிலையிலேயே காணப்படுதலினைக் காணலாம். மணிமேகலை, நீலகேசி, சிவஞானசித்தியார் முதலான வேறுபட்ட சமயங்களைச் சார்ந்ததும், வேறுபட்ட காலங்களில் எழுந்ததுமான தமிழ் நூல்களிலேயே, ஆசீவக மெய்யியல் சார்ந்த கருத்துக்கள், முழுமையும் தொடர்ச்சியும் உடையனவாக அமையக் காணலாம். தெற்காசியாவில் தோன்றிய மெய்யியல் மரபுகளையும் பிறபகுதிகளிற் தோன்றிய மெய்யியல் மரபுகளையும் தன்னகத்தே தோன்றிய மெய்யியல் மரபுகளையும் ஒருங்கே கொண்ட ஒருமொழியாக விளங்குதல் தமிழ் மொழியின் சிறப்புக்களில் ஒன்று.

ஆசீவக சமயத் தோற்றுனர்களில் மற்கலி கோசவர், பூரணகாயப்பர், பகோடகச்சாயனார் (பக்குடுங்கை நண்கணியார்) முதலானோர் சிறப்பிடம் பெறுகின்றனர். இவர்களின் பிறப்பிடம் குறித்தான மாறுபட்ட கருத்துக்கள் பல உள்ளன. ஆசீவக மரபானது ஊழ், இயல்பு, தற்செயல் என்பனவான மும்மைக் கோட்பாடுகளை முதன்மையாகக் கொண்டது.

இனித் திருக்குறளில் காணப்படும் ஆசீவக சமயக் கருத்துக்களை நோக்குவோம். பௌத்தம் நடுநிலை (மத்தியஸ்தம்) என்னும் கொள்கையினைச் சிறப்பு நிலையில் கடைப் பிடித்தமை போல் ஆசீவகம் ஊழினைத் தனது முதன்மைக் கோட்பாடாகக் கைக் கொண்டதெனலாம். ஆசீவகத்தின் அளவு ஊழினுக்கு முதன்மை கொடுத்த சமயம் வேறொன்றில்லை எனலாம். திருவள்ளுவரும் தமது நூலில் ஊழினுக்கே பல இடங்களில் முதன்மை கொடுத்துள்ளார். திருக்குறள் அல்லாத மற்ற அறநூல்கள் யாவும் கருமக் கோட்பாட்டினுக்கே முதன்மை கொடுக்க திருக்குறள் மாத்திரமே கருமக் கோட்பாட்டினும் ஊழினுக்கு மிகுதியான முதன்மையினைக் கொடுப்பதாக அமைந்தது எனலாம். ஊழ் குறித்து திருக்குறள் ஊறும் கருத்துகள் ஆசீவகத்துடன் பொருந்துவதைக் காணலாம்.

திருவள்ளுவர் தம் குறளின் ஊழ் என்னும் மனித வாழ்வை வழிநடத்தும் முறைமை குறித்து விளக்குதற் பொருட்டு ஒரு அதிகாரத்தினையே படைத்துள்ளார். ஊழ் என்னும் அதிகார முன்னுரையில் பரிமேலழகர் “அஃதாவது இருவினைப்பயன் செய்தவனையே சென்றடைதற்கு ஏதுவாகிய நியதி, ஊழ், பால்முறை, உண்மை, தெய்வம், விதியென்பன ஒரு பொருட் கிளவி” என விளக்கங் கூறுவார். ஆனால் இது ஏற்புடையதல்ல. திருக்குறளில் இடம்பெறும் ஊழ் என்னும் சொல் முன்னமே முடிவு செய்யப்பட்டது; மனித வாழ்வினை வழிநடத்துவது என்பதன் அடிப்படையிலேயும் ஊழின்வழி நடந்தே உயிர்களின் வீடுபேற்றினை நோக்கி நகர இயலும் என்னும் முறைமைத் தன்மையை விளக்குவதாகவுமே அது அமையக் காணலாம். ஒருவனுக்கு எது நடக்க வேண்டும் என முன் முடிவு செய்யப்பட்டதே அதுவே நிகழும். அந் நிகழ்வு எக் காலகட்டத்தில் நிகழ வேண்டுமோ அக் கால கட்டத்திலேயே நிகழும். இதனையே ஆசீவக மெய்யியல் மரபு, சதுவா நியதங்கள் என வழங்கும். இதனையே,

**பேதைப் படுக்கும் இழவுஊழ் அறிவகற்றும்**
**ஆகல்ஊழ் உற்றக் கடை** **(குறள் 372)**

என்னும் குறள், துன்பம் நிகழ்தலும் இன்பம் சேர்தலும் முன்னமே ஊழின் வழி

முடிவு செய்யப்பட்டதாகும்; இழத்தலும் சேர்த்தலும் உயர்த்தலும் தாழ்த்தலும் ஊழின் அடிப்படையிலேயே நிகழ்வன எனக் கூறுவதன் வழி ஆசீவகக் கருத்தியலை வெளிப்படுத்துவதைக் காணலாம்.

**ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்**
**போகூழால் தோன்றும் மடி** (குறள் 371)

பொருள் தேடலுக்கான முயற்சியினை உருவாக்குதலும் ஊழின் வழி நிகழ்வதுதான்; பொருள் இழப்பிற்கு ஏதுவாகிய மடியினை உருவாக்குவதும் ஊழின் வழிப்பட்டதுவேதான்; எவை எவை எவ்வெவ் காலத்து நிகழுமோ அவ்வவ் காலத்து நிகழும்; ஆக்கமும் கேடும் ஊழின் வழிப்பட்டே நிகழ்வன; இவற்றினுக்குக் காரண காரியத் தேடல் என்பது தேவையற்றதாகின்றது என்னும் ஆசீவக மெய்யியலை மேற்படி குறளில் காணலாம். ஊழினை ஆசீவக மரபு குறித்துக் கூறும் நூல்களினையும் தாண்டி ஆகும், போகும், இழவும், ஆகல்ஊழ் என்பனவாக திருக்குறளே வகைமை செய்கின்றது. ஊழினை விட வலியது ஒன்றுமில்லை எவ்வகையில் முயன்றாலும் ஊழினைக் கடந்து ஒன்றினையும் செய்துவிட இயலாது. ஊழே பெரு வலிமையினையுடையது.

**ஊழின் பெருவழி யாவுள மற்றொன்று**
**சூழினும் தான்முந் துறும்** (குறள் 380)

முயற்சி, துணைவலி, ஆண், செல்வம், படை, மாச்சி என்பனவான எவை சூழினும் அவை ஊழின் முன் வெற்றி பெறுதலியலாது. ஊழின்முன் அவை தோற்றொதுக்கும். இதனையே சிலப்பதிகாரக் கதைப்போக்கு நமக்குத் தெளிவுறுத்தும். கோவலனின் ஊழினை முன்கூட்டியே கனவின் வழி அறிந்த நிலையிலும் அதனைத் தடுத்தலுக்கான முன் முயற்சிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் சமணக் காப்பியமான சீவகசிந்தாமணியில், சீவகன் ஊழினை எதிர்த்து வெற்றி பெறுபவனாகக் காட்டப்பட்டுள்ளான். இதன்வழி திருக்குறள் சமண மரபிலிருந்து மாறுபட்டு ஆசீவக மரபின் வழி நிற்றலினை அறியலாம். ஊழின் வலியினை கழுவாய்கள் செய்தோ நல்வினைகள் செய்தோ மாற்றுதல் என்பது இயலாத செயலாகும். ஊழினால் விளையும் நன்மைகளை எவ்வாறு துய்க்கின்றோமோ அவ்வாறே அதன் விளைவால் வரும் துன்பங்களையும் துய்க்க வேண்டியிருக்கும். எவ்வகைக் கழுவாயும் தேடிக் கொள்வது என்பது இயலாது.

**நன்று ஆம்கால் நல்லவாக் காண்பவர் அன்றுஆக்கால்**
**அல்லற் படுவது எவன்** (குறள் 399)

இன்பத்தினையும் துன்பத்தினையும் ஒன்றாகக் கருதுதல் என்பது ஆசீவக மரபு. துன்பத்துள் இன்பம் தேடுதல் என்பது அம்மரபின் கொள்கையாகும். அதனை தெளிவுறுத்திய வகைமையிலேயே மேற்கண்ட குறள் அமைந்துள்ளமையினைக் காணலாம். நன்மையும் தீமையும் முன்பே முடிவு செய்யப்பட்டன. மனிதர்களின் செயல்களால் அவை நிகழ்வதில்லை. அவை மனிதர்களுக்கு அப்பாற்பட்டவை என்பதான ஆசீவகத்தின் கருத்தியலை விளக்குவதாகவே மேற்கண்ட திருக்குறள் அமைந்துள்ளது. மனிதர்களின் அறிவினால் செயல்கள் நிகழ்வதில்லை.

> வைதீக எதிர்ப்பு நிலையிலுள்ள சமயங்களில் முதலாவதாக விளங்குவது ஆசீவக சமயமாகும். வடபுல நூல்களில் ஆசீவக சமயக் கருத்துக்கள் முழுமையற்ற நிலையிலேயே காணப்படுதலினைக் காணலாம்.

ஒருவன் அடையக்கூடிய நற்பேறும் ஒருவன் அடையக்கூடிய இழிவும் அவனவன் செயல்களால் நிகழ்வனவல்ல. அவை முன்னமே முடிவானவை. ஒரு நூல் கண்டினை உயர்ந்த இடத்திலிருந்து உருட்டிவிட்டால் அது எவ்வாறு முடியும் வரை நீளுமோ, அது போலவே, முன்னம் முடிவு செய்யப்பட்ட ஊழின் வழிப்பட்டே மனித வாழ்வானது செல்லும். அதில் எவ் இட மாறுதலுக்கும் இடமில்லை. இதனையே வள்ளுவரும்,

**இருவேறு உலகத்து இயற்கை திருவேறு**
**தெள்ளிய ராதலும் வேறு** (குறள் 374)

என்ற குறளின் வழிக் கூறுகின்றார். இரு வேறு உலகம் என்றமையால் வறுமை, செழுமை ஆகிய பண்புகள் வேறுபட்டதே உலகம் என்பது ஆசீவகக் கொள்கையாகும். இதனை

‘ஒரில் நெய்தல் கரங்கு’ என்ற புறப்பாடலின் கருத்துடனும் ஒப்பிட்டு நோக்கலாம். இவையாவும் ஆசீவகக் கருத்தியலாகவே அமைபவை.

அணுக்கள் புதிதாகத் தோன்றுவதுமில்லை அழிவதுமில்லை; மாறுதலும் இல்லை. அணுக்கள் ஒன்று சேர்ந்து பொருட்களை உருவாக்குகின்றன. பின் அவ்வணுக்கள் தனித்தும், பிரிகின்ற நிலையில் மீண்டும் தங்கள் பழைய நிலையினையே அடைகின்றன. அணுக்கள் சேரும் பொழுது எந்த அணுவின் விழுக்காடு மேலோங்கியுள்ளதோ, அந்த அணுவின் தன்மையையே பெறும் என்பது ஆசீவக மெய்யியல். அதனடிப்படையில் ஒருவன் எத்துணை அறிவினை வளர்க்கும் முயற்சியை மேற்கொண்டாலும், அவனது உண்மையறிவே வெளிப்படும் என்னும் கருத்தியலில் அமைந்த குறளாக,

**நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்**
**உண்மை யறிவே மிகும் (குறள் 373)**

என்ற குறள் அமைந்துள்ளமையினைக் காணலாம். நகம் செய்யும் நல்வினையால் நன்மைகள் நடக்கும்; தீவினையால் தீயது நடக்கும் என்ற கர்மக் கோட்பாட்டில் ஆசீவகர்களுக்கு நம்பிக்கை இருந்ததில்லை. ‘இல்லன தோன்றா உள்ளன மறையா’ என்னும் கருத்தியலிலேயே மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். ஒருவன் அனைத்தும் கற்ற அறிஞனாகவிருப்பதும், ஏதுமறியாதோனாக இருப்பதும் முன்னமே முடிவு செய்யப்பட்டது. இவற்றில் அத் தனிமனிதனின் பங்களிப்பு என்பது ஏதுமில்லை. ஆதலால்தான் பழந்தமிழ் புறப்பாடலும் ‘பெரியோனென வியத்தலுமிலனே சிறியோனென இகழ்தலுமிலனே’ எனப் பாடுகின்றது. இதனையேதான் வள்ளுவரும் ஒருவன் எத்தனை நுட்பமான நூல்களைக் கற்பினும் அவனது உண்மை அறிவின் அடிப்படையிலேயே அவற்றின் நுட்பமும் திறனும் வெளிப்படும் என்று கூறுகின்றார். அதனையொப்பவே, இவ்வுலகியல் இன்பங்களை ஒருவன் எவ்வகையில் எவ்வளவு காலம் துய்க்க வேண்டும் என்பதும், என்னென்னவாறான வளங்களைப் பெற்று வாழவியலுமென்பதும், வளங்களற்ற வாழ்வினையே கொண்டு செல்லவேண்டிய சூழல் அமைவதும், ஊழின் வழிப்பட்டு முன்னமே முடிவு செய்யப்பட்டனவாம். இதனை சிலப்பதிகாரத்திலும் காணலாம். மாதவியுடன் உள்ள காலம் முடிந்ததும் சிறிது காலம் கூட கூடுதலாக அவளுடன் கோவலனால் இருக்க இயலவில்லை என்பதினைச் சிலம்பு காட்டும். அம் மரபினை ஒத்ததாகவே,

**வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி**
**தொகுத்தார்க்கு துய்த்தல் அரிது (குறள் 377)**

என்ற வள்ளுவரின் குறளும் அமைகிறது. ஒருவர் வாழ்வில், நிகழ்வுகள் முன்னமே முடிவு செய்யப்பட்டவை; அவை எப்படி நிகழவேண்டும் என்பதும் முன்னமே முடிவு செய்யப்பட்டது; அதனைக் கடந்து எதுவும் நிகழாது என்பதும் முன்னமே முடிவு செய்யப்பட்டது என்பதாக ஆசீவகக் கருத்தியலை இக் குறள் கொண்டுள்ளமையினைக் காணக் கூடியதாக உள்ளது.

**பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்**
**சொரியினும் போகா தம (குறள் 376)**

தமக்கே உரியவையை தெருவிலே கைவிட்டபோதும் புறத்தே போகாது; தமக்கு எழுதப்படாதவை, எத்தனைதான் முயன்றாலும் கிட்டாது என்னும் ஆசீவகக் கருத்தியலை மேற் குறித்த குறளிலே காணலாம். ஊழ் குறித்த கருத்துக்களில் வள்ளுவர் சில இடங்களில் முரண் கொள்வதாகக் கூறுவோரும் உண்டு. உற்று நோக்கில் அதனை முரணாகக் கொள்ளலென்பது இயலாது. சான்றாக,

**தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சி தன்**
**மெய்வருத்தக் கூலி தரும் (குறள் 619)**

**பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து**
**ஆள்வினை இன்மை பழி (குறள் 618)**

**ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
**தாழாது உஞற்று பவர் (குறள் 620)**

ஆகிய மூன்று குறட் பாக்களையும் கூறுவர். ஆனால் ஊழின் உப்பக்கம் காணுதலும் முயற்சியை மேற் கொள்ளுதலுமான தன்மைகள் ஆசீவகர்களின் கோட்பாட்டிற்கு உட்பட்டனவே. அவையும் ஊழின் வழி அமைவனவேயாகும்.

மேற்கண்டவாறாக ஆசீவக சமயக் கருத்துக்கள், ஊழியலிலும் திருக்குறள் முழுமையிலும் விரவிக் கிடக்கின்றமையினைக் காணலாம்.

(தொடரும்)

# விபுலானந்தர் ஆய்வுத்தடத்தில் தமிழிசையின் மீட்டுருவாக்கம்




● நாகலிங்கம் சண்முகலிங்கன்

நாகலிங்கம் சண்முகலிங்கன் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் சமூகவியல் பேராசிரியரும், முன்னாள் துணைவேந்தருமாவார். அத்துடன் எழுத்தாளர், ஆக்க இசைக் கலைஞர் என பன்முக ஆளுமை கொண்ட இவர், நாடகம், திரைப்படம், இலத்திரனியல் ஊடகம், நுண்சமூகப்பொறிமுறையியல் போன்றவற்றில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியவர். சமயத்தின் சமூகவியல், பண்பாட்டு மானுடவியல், ஊடகக் கல்வி, செயல்முறைவடிவிலான நுண் சமூகப் பொறிமுறையியல் என்பன இவரது சிறப்பு ஆய்வு ஆர்வங்களும் ஆய்வுப்புலமும் ஆகும். மரபுகளும் மாற்றங்களும், சமூகவியல் கட்டுரைகள், 2001, சமூக மாற்றத்தில் பண்பாடு, சமூகவியல் கட்டுரைகள், 2000, பண்பாட்டின் சமூகவியல், சமூகவியல் கட்டுரைகள் 2002, தொல்சீர் சமூகவியல் சிந்தனையாளர் 2002, இலங்கை இந்திய மானிடயவில், சமூகவியல் மானுடவியல் கட்டுரைகள் 2004, சமூகவியல் கோட்பாட்டு மூலங்கள் அமைப்பும் இயங்கியலும், கட்டுரைகள் 2008, Cult Murukan in Eastern Sri Lanka, ஆய்வு நூல் 2003, A New Face of Durga, Kalinga Publications போன்ற பலநூல்களை எழுதியுள்ளார்.



தமிழிசையின் செல்நெறி, சுகமான ஒரு பயணம் அல்ல. மக்களின் வாழ்வியலுக்குள் இலக்கியச் செழுமைக்குள் புதைந்திருந்த தமிழிசையின் தனித்துவமான அடையாளங்கள், காலவெளியில் கண்டுவந்த மாற்றங்களும் படிமலர்ச்சியும், பண்பாட்டு அரசியல் மேலாண்மைகளுக்குள் எதிர் கொண்ட சவால்கள், தன்னைத் தகவமைத்துக் கொள்ள எடுத்துக்கொண்ட பிரயத்தனங்கள் என்பன தமிழர் வாழ்வியல் வரலாறாகும்; தமிழ்ப் பண்பாட்டின் வரலாறுமாகும். இந்த வகையில் தமிழிசையின் மீட்டுருவாக்கதில் உயிர் விசைகளாக விளங்கிய முன்னோடிகளின் உருவாக்கம், பங்களிப்பு பற்றிய தெளிவான புரிதல் இன்றியமையாதது. தமிழிசையின் அடையாளங்களைத் தேடி வெளிப்படுத்திய விபுலானந்தர் ஆய்வுத்தடம் பற்றிய இனமரபு இசையியல் பகுப்பாய்வாக இக்கட்டுரை அமைகின்றது. இசையை அதன் சமூக, பண்பாட்டுச் சூழமைவில் கற்கும் தனித்துவமான துறையாக இனமரபு இசையியலானது முகிழ்த்துள்ளது. குறித்த புவியியல் புலத்து மக்களின் வாழ்வில் இசையின் வகிபங்கினை அறிதல் இனமரபு இசையியலின் குவிமையமாகவுள்ளது.

பொதுமனிதர் பார்வையில் மட்டுமன்றி இசைத்துறையினர், இசைபற்றி பேசும் அறிவுஜீவிகளிடத்தும்கூட இசை பற்றிய முழுதளாவிய பார்வை இல்லையெனலாம்; அதன் வழியேதான் தமிழிசை பற்றிய தரிசனங்களும். இசையின் யாதேனும் ஒரு பிரிவை அழுத்துவதாகவே இவர்களின் பேச்சும் எழுத்தும் அமைவது அனுபவமாகும். பெரும்பாலும் சாஸ்திரிய சங்கீதமே சங்கீதம்; ஏனையவை எளிமையானவை அல்லது எளியவை என்ற எண்ணக்கருவாக்கமே ஆதிக்கம் செலுத்தக் காணலாம். இந்தப் பின்னணியில் தமிழிசையின் வரையறையும் வளர்ச்சியும் அதன் வரலாற்று அரசியலுக்குள் அமிழ்ந்து போயுள்ளன. தமிழிசை மரபினை, இத்தகைய பண்பாட்டுச் சூழமைவில், அறிவார்ந்த புரிதலுக்கான துறையாக முகிழ்த்த இனமரபு இசையியலின் பல்துறை இணை நோக்கில் (*Interdisciplinary approach*) வெளிப்படுத்திய விபுலானந்த ஆளுமையின் செல்நெறியினை இனங்காட்டுவதும் இவ்வாய்வுத் தேடலின்

இலக்காகும்.

வாழ்வியலோடு இசைந்த தமிழ்ப் பண்பாட்டின் இசை-இலக்கியக் கூறுகளின் காலவெளியில் மறைந்தும் மறக்கப்பட்டும் போன பண்டைத் தமிழிசையின் நிலம் சார்ந்த பண்களை வெளிக்கொணர்ந்தும், பழந் தமிழிசைக் கருவியான யாழின் படிமலர்ச்சியை ஆய்ந்து அதனை மீளக் கட்டமைத்தும் விபுலானத்த அடிகளார் ஆற்றிய பணி முதன்மையானது. தமிழ் ஆய்வுப் பண்பாட்டில் அதற்கென அறிவாராய்ச்சியியல் மரபொன்றினை மீள் உருவாக்கும் காலக் கடமையில் தமிழிசை ஆய்வுக்கான முழுதளாவிய முறையியல் பற்றிய புரிதலுக்கு வழிகாட்டும் அவரின் ஆய்வுப் பண்பாடானது, தமிழிசையின் மீள் உயிர்ப்புக்கான நிகழ்கால ஆக்க விசையுமாகும்.

சங்ககாலம், பரிபாடற்காலம், சிலப்பதிகாரகாலம், தேவாரகாலம், பெரியபுராணகாலம் எனும் பருநிலைகளும், தமிழிசையின் தாயெனப் போற்றப்படும் காரைக்காலம்மையார் திருவாலங்காட்டு பதிகம் என நுண் நிலையில் ஆற்றிய ஆய்வுகளும், இலக்கியங்களுக்கு அப்பால் தமிழிசையின் கால ஆராய்ச்சிக்கென குடுமியா மலைக் கல்வெட்டில் தீட்டப்பட்ட இசை நூல்களும், பல்துறை இணை நோக்கிலான இன்றைய இனக்குழும இசையியல் ஆய்வு வழிப்பட்டன எனலாம். அவ்வாறே தமிழிசையின் செல்நெறியில் - வரலாற்றில் நிகழ்ந்த திரிபுகளை வெளிச்சத்துக்கு கொண்டுவந்த அவரது ஆய்வு முடிவுகள் தமிழிசையின் எதிர்காலத்துக்கான திசைகாட்டிகள் எனலாம். தமிழிசையின் செல்நெறியை மீளக்கட்டமைக்கும் இசையியல் ஆய்வின் தரவுப் பெட்டகமான, சங்க இலக்கியங்கள் என்ற சொல்லாட்சியுடன் வழங்கப்படுகின்ற பாட்டும் தொகையுமாய் அமைந்த வீரயுக பாணர் பாடல்களையும் புலவர் பாடல்களையும், யாழ் நூல் தந்த விபுலானந்த அடிகளார் அழகாகவும் ஆதங்கத்துடனும் வெளிப்படுத்துவார் (விபுலானந்தர், 1936:2003).




சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆய்வரங்கில் சுவாமி விபுலானந்தர்

Image Source - en.wikipedia.org

தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் (1917), விபுலானந்த அடிகளார் மற்றும் இவர் வழி தமிழிசை ஆய்வுகளினை மேற்கொண்டவர்களின் பயனாக, தமிழிசையின் வேர் பற்றிய நிறைய விடயங்கள் இன்று கிடைக்கப் பெறுகின்றன; அவைதான் எமது மூலதனம். சங்க இலக்கியங்களில் இசைக் கருவிகள், இசை வாணர்கள் பற்றிய பல தரவுகள் உள்ளன. திணை வாழ்வு கண்ட குறிஞ்சிப்பண், செவ்வழிப்பண், முல்லைப்பண், மருதப்பண், பாலைப் பண், காஞ்சிப்பண், விளரிப்பண், காமரம், நைவளம், ஆம்பல் பண் போன்ற பண்களைப் பற்றிய குறிப்புகளும் நிறையவே உள்ளன.

இனமரபு இசையியல் சார்ந்து விபுலானந்தருக்கு விழிப்புணர்வும் அதனடியான தமிழிசை ஆர்வமும் ஆய்வும் வசப்பட்டமைக்கு அவருக்கு வாய்த்த இளமைக்கால சமூகமயமாக்கம் அடிப்படையானது என அறிய முடிகின்றது. பிள்ளைப் பருவத்திலேயே அவரது சமூகமயமாக்க சூழலான காரை தீவு கண்ணகையம்மன் சடங்குகளில் பாடப்பட்ட

கண்ணகி வழக்குரைப் பாடல்கள், உடுக்குச்சிந்து, காவியம் என்பன சிலப்பதிகாரத்தின் மீது ஏற்படுத்திய ஈர்ப்பிலிருந்தே அவரது தமிழிசை ஆய்வுத் தேடல் தொடங்கியதெனலாம். ஆரம்ப, இடைநிலைக் கல்வியை முடித்தபின் கொழும்பிலே பொறியியல் கற்கும் போது யாழ்ப்பாணத் தமிழறிஞர் கைலாய பிள்ளையவர்களிடம் சிலப்பதிகாரத்தினை முறைப்படி பயின்றார். இந்தக் காலத்திலேயே சிலப்பதிகாரத்திலே விரிவாகப் பேசப்படும் தமிழிசையை ஆராயும் எண்ணம் முகிழ்த்த தென்பார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைப் பேராசிரியராக விளங்கிய காலத்தில் இசைத் துறையினை மேற்பார்வை செய்யும் பணியிடை அவரது இசை பற்றிய அறிவுத் தேடல் அதிகரித்த தெனலாம். இசை ஆசிரியரான பொன்னையா பிள்ளையுடனான ஊடாட்டம், அந்நாள் கரந்தைத் தமிழ்ச்சங்க தலைவர் உமா மகேசுவரம் பிள்ளை தந்த ஊக்கம் என்பன அரணாக, அர்ப்பணிப்பான அவரது தமிழிசைத் தவம் நடந்தது. சிலப்பதிகாரத்து அரங்கேற்று காதையின் யாழாசிரியனமைதி கூறும் அடிகளோடு இசைந்த ஏனைய இலக்கிய தொல்லியல் கல்வெட்டு ஆதாரங்களின் வழி பல்துறை இணை ஆய்வனுபவமாக யாழின் மீளுயிர்ப்பு வசமானது. இந்த வகையில் சங்ககாலம், பரிபாடற் காலம், சிலப்பதிகாரகாலம், தேவாரகாலம், பெரிய புராணகாலம் என்பவற்றை பருநிலையிலும் தமிழிசையின் தாயெனப் போற்றப்படும் காரைக்காலம்மையாரின் திருவாலங்காட்டுப் பதிகம் என்பவற்றினை நுண்நிலையிலும், ஆழ ஆய்ந்த விபுலானந்தர், இலக்கியங்களுக்கு அப்பால் தமிழிசையின் கால ஆராய்ச்சிக்கென குடுமியாமலைக் கல்வெட்டில் தீட்டப்பெற்ற இசை நூல்களைத் தேடியவண்ணம் அவரது ஆய்வு முறையியலின் முழுதளாவிய தனித்துவத்தினை வெளிப்படுத்தினார். பத்து ஆண்டுகளுக்கும் மேலான ஒரு தவமாகவே யாழ் நூல் ஆய்வு அமைந்தமை இன்றைய தலைமுறை ஆய்வாளருக்கான விபுலானந்த ஆய்வாளுமையின் மிக முக்கிய பாடமெனலாம். விபுலானந்தரின் ஆய்வுச் செல்நெறியானது தமிழிசையை இலக்கியங்களுக்குள் தேடும் குறுகிய பயிற்சியாக மட்டுப்படாமல் இன்றைய இனவரைவியல், இலக்கிய மானிடவியல் புலங்கள் அவாவி நிற்கும்



**யாழ் நூல் - மூன்றாம் பதிப்பு**
Image Source - tamil.wiki

வாழ்வியல் வழிப்பட்டது என்பதும் ஈண்டு கவனத்திற்குரியது.

இவை அனைத்துக்கும் அப்பால் சமூக மேலாண்மைகளினடியாக மொழி அந்நியப்படுத்தலுக்கு (Language Alienation) உட்பட்டு, இசையில் தமிழ் மறுப்பு உச்சமானபோது, தமிழிசைப் பாடல்களுக்கான இடமாக, எடுத்துரைப்புக்கான அமைப்பாக தமிழிசை இயக்கம் உருவாகியவேளை வெறுமனே தமிழில் பாடுவது மட்டும் தமிழிசையல்ல என்ற தெளிவோடு அழகிய அர்த்தமுள்ள தமிழ்ப் பாடல்களை ஆக்கியும் தமிழின் கொடுமுடியாக இன்று நாம் ஆராதிக்கும் பாரதியின் தமிழ்ப்பாட்டை அன்றைய எதிர்ப்புகளின் மத்தியில் தமிழுலகுக்கு அறிமுகம் செய்தும் பாடசாலையின் இசைக் கலைத்திட்டங்களின் வழிநிலை நாட்டியும் அவராற்றிய பணி, தமிழிசையின் நிலைபேற்றுக்கான வரலாற்றுப் பங்களிப்பாகும்.

இவ்வாறே தமிழிசையின் செல்நெறியில் - வரலாற்றில் நிகழ்ந்த திரிபுகளை வெளிச்சத்துக்கு கொண்டு வந்த அவரது ஆய்வு



யாழ் நூல் அரங்கேற்றம்

Image Source - tamil.wiki

முடிவுகள் தமிழிசையின் எதிர்காலத்துக்கான திசைகாட்டிகள் எனலாம். எடுத்துக்காட்டாக மொழி மேலாண்மைக்குள் தன் பெயர் அடையாளத்தினை இழந்த 'நைவளம்' என்ற பண்ணின் கதையை அடிகளார் வெளிப்படுத்திய விதம் சுவாரஸ்யமானது; சுயவிழிப்புக்கானது.

> **தமிழர் வழங்கிய 'நைவளம்' என்னும் பண்ணினை வடநாட்டார் கைப்பற்றி வேசரஷாடவத்திற்கு பாஷாங்கராகமாக்கி 'நாட்யா' எனப் பெயர் புனைந்தார்கள். வேற்று மொழியிலிருந்து எடுத்து வடமொழி வழக்கிற் சேர்க்கப்பட்டதெனக் குறிப்பாக இது 'நாட்டியபாஷா' எனவும் வழங்கப்பட்டது. தமிழர் தாம் இழந்த பொருளினை கண்டறிய மாட்டாதாராய், தமிழ் என்பதைக் குறித்து நின்ற பாஷா என்னும் சொல்லைப் 'பாடை' யாக்கி, 'நட்டபாடை'ப் பெயர் வழங்கி இடர்ப்படுவராயினர். இனி இப் பண்ணினை நைவளம் என வழங்குவதே முறையாகும்.**
>
> **(விபுலானந்தர், 1947:286)**

நிறைவாக விபுலானந்த ஆளுமை பற்றிய மேற்கண்ட பெருமிதங்களுக்கு அப்பால் எங்கள் பண்பாட்டு உணர் திறனும் தமிழிசைசார் ஆக்கப் பணிகளும் எந்நிலையில் உள்ளன என்ற சுய விசாரணையும் இங்கு அவசியமானது. அரிதின் முயன்று அன்று விபுலானந்த அடிகளார் கண்டுணர்த்திய கணக்கின் வழியாக அமையப் பெற்ற கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் சங்கீதபூஷணம் க.பொ. சிவானந்தம்பிள்ளையினால் இசைத்து அரங்கேற்றம் செய்யப்பட்ட யாழ் கருவிகள் தொடர்பாக பின்னாளில் நம் இசையுலகம் மேற்கொண்ட செயற்பாடுகள் எவை? அடிகளாரின் யாழ் நூலை பல்துறை இணை அறிவுடன் விளங்கவும் விளக்கவும் எடுக்கப்பட்ட முயற்சிகள் எவை? அடிகளார் மறைந்து ஏழு தசாப்தங்கள் கடந்தும் மேலே அடிக்கோடிட்ட 'இனி இப் பண்ணினை நைவளம் என வழங்குவதே பொருத்தமானது' என்ற ஆய்வு முடிவுக்கு நாம் தந்த மதிப்பென்ன? இன்னமும் எங்கள் பாட நூல்களில் (கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 2018). 'நட்டபாடை' யென்றே பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். தமிழிசை மேம்பாட்டில் இசையுலக மதிப்பீடுகளுக்கு - கலையியல் பெறுமானங்களுக்கு அப்பால் அடுக்கமைவு சார்ந்து கட்டமைக்கப்பட்ட சமூக உளவியலின் மேலாண்மை இன்னமும் தொடர்கின்றமை பற்றிய பகுப்பாய்வின் பின்புலத்திலே மேற்கண்ட வினாக்களுக்கான விடைகளைக் காண்பது அவசியமாகும்.

### உசாத்துணைகள்


ஆபிரகாம்பண்டிதர்(1917)கர்ணாமிர்தசாரம்,தஞ்சாவூர்கல்விவெளியீட்டுத்திணைக்களம்(2018)சைவநெறி : தரம் 10, பத்தரமுல்ல, இசுருபாய

விபுலானந்தர் (2003) பண்டைத் தமிழிசை ஆராய்ச்சி, (மீள்பதிப்பு) விபுலம், கனடா சுவாமி விபுலானந்தர் மன்றம்

விபுலானந்தர், (1947 ) யாழ்நூல், கரந்தை தமிழ்ச்சங்கம், தஞ்சை : யாதுமாகிஅச்சகம்

Stock, Jonathan P.J (2007) Alexander J. Elliss and his place in the History of Ethnomusicology, Ethnomusicology, Vol:51:No.2, University of Illinois: Society for Ethnomusicology

ஈழத்தில் போர் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக உக்கிரமாக நடந்திருக்கின்றது. அது அங்கிருந்த அனைத்து மக்களையும் ஏதோ ஒருவகையில் பாதித்திருக்கின்றது. இப்போது யுத்தம் முடிந்து பதினைந்து ஆண்டுகள் ஆகின்றன. போர் ஒரு கொடுங்கனவாய் மக்களின் மனதில் இருந்து மறக்கடிக்கப்பட்டிருந்தாலும், அதன் நிமித்தம் ஏற்பட்ட உடல்/உள வடுக்கள் இன்னும் இல்லாமல் போகவில்லை. இனங்களிடையே நல்லிணக்கம் மட்டுமில்லை, போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆற்றுப்படுத்தல்கள், உதவிகள் கூட போரால் வெற்றி கொள்ளப்பட்ட அதிகாரத் தரப்பால் நிகழ்த்தப்படவில்லை. இன்னுமின்னும் இலங்கையில் இருக்கும் ஒவ்வொரு இனங்களும் துவிதங்களாகப் பிரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் ஈழத்துப் போர்ச்சூழலின் பின்னணியில் எழுதப்பட்ட பனுவல்களை முன்வைத்து வாசிப்புச் செய்யப்படுகின்ற ஒரு தொடராக 'இருத்தல்களின் மீது கவியும் இன்மைகள்' அமைகின்றது.




**இளங்கோ**

யாழ்ப்பாணம் அம்பனையில் பிறந்தவர். ஈழத்திலிருந்து போரின் நிமித்தம் தனது பதினாறாவது வயதில் கனடாவுக்குப் புலம்பெயர்ந்து தற்போது ரொறொண்டோவில் வசித்து வருகிறார். கவிதைகள், சிறுகதைகள், நாவல் தவிர, 'டிசே தமிழன்' என்னும் பெயரில் கட்டுரைகளும், விமர்சனங்களும், பத்திகளும் பல்வேறு இதழ்களிலும், இணையத்தளங்களிலும் எழுதி வருகின்றார். நாடற்றவனின் குறிப்புகள் (கவிதைகள் 2007), சாம்பல் வானத்தில் மறையும் வைரவர் (சிறுகதைகள் 2012), பேயாய் உழலும் சிறுமனமே (கட்டுரைகள் 2016), மெக்ஸிக்கோ (நாவல் 2019), உதிரும் நினைவின் வர்ணங்கள் (திரைப்படக்கட்டுரைகள் 2020), ப்யூகோவ்ஸ்கி கவிதைகள் (மொழிபெயர்ப்பு 2021), தாய்லாந்து (குறுநாவல் 2023) ஆகியவை இதுவரையில் இவர் எழுதிய பனுவல்கள் ஆகும்.


# வாசுகி கணேசானந்தனின் 'சகோதரனற்ற இரவு'



வாசுகி கணேசானந்தன்

Image Source - scroll.in

இலங்கை, பிரித்தானியர்களிடமிருந்து சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து ஒரு பதற்றமான சூழ்நிலையிலேயே இருந்து வந்திருக்கின்றது. 1956 தனிச் சிங்களச் சட்டம், இன்னொரு இனத்தின், மொழியின் மீதான வெறுப்பிற்கான மிகச் சிறந்த உதாரணமாகும். அதன் நீட்சியாக 1956, 1958 இல் தமிழர் மீதான படுகொலைகள் நடந்திருக்கின்றன. ஒரு சிறிய தீவு நாட்டின் அனைத்து இனங்களையும், அவர்களின் மொழி, கலாசாரங்களையும் அரவணைத்துச் செல்ல வேண்டுமென்பது அரச அதிகாரத்தை எடுத்துக் கொண்டவர்களுக்குத் தெரியவில்லை.

அதனால்தான், பின்னரான காலங்களில் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள் அநியாயமாக இந்தச் சிறிய தீவு நாட்டில் காவு கொள்ளப்பட்டிருக்கின்றன. இலங்கை சுதந்திரம் அடைந்த பின், முழுநாடும் அமைதியாக இருந்த காலங்கள் என்று பார்த்தால் அது மிக அரிதாகவே இருக்கும். தமிழர்களின் மீதான சிங்களப் பேரினவாதத்தால் 1977, 1983 காலங்களில் பல படுகொலைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன. பின்னர் 2009 வரை நாடு முற்றுமுழுதாக போரிற்குள் அமிழ்ந்திருக்கின்றது.

இவ்வாறாக பல்வேறு சூழ்நிலைகளால் தத்தளித்துக் கொண்டிருக்கின்ற நாட்டின் யாழ்ப்பாணப் பிரதேசத்தை பின்னணியாக வைத்து வாசுகி கணேசானந்தன் 'சகோதரனற்ற

இரவு' (Brotherless Night) எனும் நூலை எழுதியிருக்கின்றார். யாழ்ப்பாணத்தில் 1980-1989 வரை நடந்த நிகழ்வுகள் பல இங்கே விரிவாகச் சொல்லப்படுகின்றன.

சசி என்கின்ற பெண்ணே இந்தக் கதையை நமக்குச் சொல்கின்றார். சசிக்கு நான்கு ஆண் சகோதரர்கள். அந்தக் குடும்பத்தில் எல்லோரும் வைத்தியராக வர விரும்புகின்றவர்கள். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருக்கும் சசியின் மூத்த சகோதரன் நிரஞ்சன் வைத்தியராகத் தயாராகி விட்டிருந்தார். சசி அவரின் சகோதரர்கள் சீலனோடும், அவரின் நண்பரான 'கே'யுடனும் சேர்ந்து உயர்தரப் பரீட்சைக்குப் படிக்கின்றார். அப்படிப் பழக்கமாகின்ற 'கே'யுடன் சசிக்குக் காதல் வருகின்றது. அது ஒரு வகையான 'யாழ்ப்பாணத்துக் காதல்'. சொல்லியும், சொல்லாமலும், தெரிந்தும், தெரியாமலுமாக முகிழ்கின்ற நேசமென எடுத்துக்கொள்ளலாம்.

இந்தக் காலத்திலேயே இவர்கள் படிக்கச் செல்லும் யாழ். பொதுசன நூலகம் தீக்கிரையாக்கப்படுகின்றது. ஈழத்தில் தமிழர்களின் நீண்டகால வரலாற்றைச் சொல்லும் பல நூல்கள் அழிந்து போகின்றன. இந்தக் காலங்களில் யாழில் பொலிஸ் மீதான தமிழ் இளைஞர்களின் தாக்குதல்கள் நிகழ்கின்றன. இதன் நிமித்தம் பொதுசனமாக இருந்த கேயும், சசியின் சகோதரர்களும் பொலிஸால் விசாரிக்கப்படுகின்றனர், தாக்கப்படுகின்றனர்.

சுகயீனம் காரணமாக சசியால் உயர்தரப் பரீட்சையை முதற் தடவையில் சிறப்பாகச் செய்யமுடியவில்லை. மறுமுறை பரீட்சைக்குப் படிக்க அவர் அவரது மூத்த சகோதரனான நிரஞ்சனோடு கொழும்புக்குப் அனுப்பபடுகின்றனர். இப்போது நிரஞ்சன் ஒரு வைத்தியசாலையில் வேலை பார்க்கும் மருத்துவர் ஆகிவிட்டார். சசியும், நிரஞ்சனும் அவர்களின் அம்மம்மாவின் வீட்டில் தங்கியிருக்கின்றனர். இந்தக்




Image Source - www.amazon.in

காலகட்டத்தில்தான் கொழும்பில் 1983 ஜூலைக் கலவரம் தமிழர்களுக்கெதிராக நிகழ்கின்றது. கிட்டத்தட்ட 3000 இற்கு மேற்பட்ட தமிழர்கள், தமிழ் மொழி பேசுகின்றவர்கள் என்ற ஒரே காரணத்திற்காய் அடையாளமிட்டுக் கொல்லப்பட்டார்கள்.

இந்தப் படுகொலையில் ஒரு மாதிரியாக சசியும், அவரின் அம்மம்மாவும் தப்பி யாழ் வந்து சேர்கின்றார்கள். துன்பியல் நிகழ்வாக, இன்னொரு நண்பருடன் தெஹிவளைக்குச் சென்ற நிரஞ்சன் என்றென்றைக்குமாய்த் திரும்பாமல் காணாமற் போகின்றார். பிறகு சில மாதங்களுக்குப் பிறகு நிரஞ்சன் சிங்களக் காடையர்களால் கொல்லப்பட்டுவிட்டார் என்ற செய்தி கொழும்பில் இருந்த வேறொரு குடும்பத்தால் உறுதிப்படுகின்றது. சசி மிக நெருக்கமான ஒருவரின் இழப்பை வாழ்வில் முதன்முதலாகச் சந்திக்கின்றார்.

மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பிவரும் சசிக்கு, அவர் நேசிக்க விரும்பும் 'கே' மட்டுமல்ல, அவரது இரண்டு சகோதரர்களான சீலனும், தயாளனும் கூட புலிகள் இயக்கத்தில் இணைந்த செய்தி காத்திருக்கின்றது. சில வருடங்களில் மருத்துவத் துறைக்குத் தேர்வு செய்யப்பட்ட சசி, அஞ்சலி என்கின்ற அவரது பேராசிரியரைப் பல்கலைக்கழகத்தில் சந்திக்கின்றார். அஞ்சலியினதும், அவரது துணைவரான வரதனதும் நட்பானது சசியின் வாழ்க்கையை வேறொரு திசையில் அழைத்துச் செல்கின்றது. இதே காலகட்டப் பகுதியில் இந்திய இராணுவம், 'அமைதிப்படை' என்கின்ற பெயரில் இலங்கைக்குள் வந்து இறங்குகின்றது.





Image Source - www.penguin.co.uk

புலிகளுக்கும், இந்திய இராணுவத்துக்கும் போர் மூளத் தொடங்குகின்றது. இந்தக் காலத்தில் புலிகள் போராட்டத்தின் பெயரில் செய்யும் கொலைகளை, அவ்வப்போது வீட்டுக்கு வரும் அவரின் சகோதரர்கள், கே உள்ளிட்டோரோடு சசி விவாதிக்கின்றார். காயமடையும் புலிகளை, ஒரு மருத்துவர் என்ற ரீதியில் சசி காப்பாற்றவும் செய்கின்றார். ஒருவகையில் இங்கே சசி இருதலைக் கொள்ளியாக, ஒரு பக்கம் சகோதரர்களையும் காதலர் கேயையும் புரிந்து கொள்கின்றவராகவும், மறுபுறத்தில் அநியாயமாக பலர் கொலை செய்யப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாத ஒருவராகவும் தவிக்கின்றார்.

இதே காலகட்டப் பகுதியில் 'கே' புலிகளின் சார்பில் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கின்றார். அந்த உண்ணா விரதத்தின் ஒவ்வொரு நாள் நிகழ்வும் விபரமாக இங்கே விபரிக்கப்படுகினறது. 'கே'யின் மீது நேசம் வைத்த சசி, அவரின் இறுதி மூச்சு வரை அந்த உண்ணா விரத மேடையில் ஒரு வைத்தியராக இருக்கின்றார்.

யாழ்ப்பாணத்தின் நிலைமை இன்னும் மோசமாகின்றது. இந்திய இராணுவம் உள்ளிட்ட இயக்கங்களின் பொது மக்கள் மீதான வன்முறையை பேராசிரியர்களான அஞ்சலியும், வரதனும் எழுத்தில் பதிவு செய்கின்றனர். அந்த இரகசியான செயற்பாட்டில் சசி தன்னையும் இணைத்துக் கொள்கின்றார். ஒரு முறை இந்திய இராணுவத்தால் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்ட பிரியா என்கின்ற பெண்ணுக்கு சசி வைத்தியம் பார்க்க வேண்டியிருக்கின்றது. பிரியாவின் நான்கு சகோதரர்களும் பிரியா வன்புணர்வு செய்யப்பட்ட நாளில் இந்திய இராணுவத்தால் கொல்லப்படுகின்றனர். பிரியா வன்புணர்வினால் கருத்தரித்துவிட்டார் என்பதை சசி கண்டுபிடிக்கின்றார்.

இனியும் யாழ்ப்பாணத்தில் சசியை வைத்திருக்க முடியாதென, சசியையும் அவரது கடைசிச் சகோதரனான ஆர்யனையும் இங்கிலாந்துக்கு சசியின் பெற்றோர் அனுப்புகின்றனர். இதன் நிமித்தம் இவர்கள் கொழும்பிற்கு சென்ற போது புலிகளின் தற்கொலைத் தாக்குதல் ஒன்று அங்கே நடக்கின்றது. அந்த தற்கொலைப் போராளி வன்புணர்வுக்குள்ளாகி கருத்தரித்திருந்த பிரியா என்பதை ஒருவகையில் சசி கண்டடைகின்றார்.
இங்கிலாந்தில் கொஞ்சக்காலம் வசித்துவிட்டு சசி மீண்டும் யாழ்ப்பாணத்துக்குத் திரும்புகின்றார். அப்போது அஞ்சலியைப் புலிகள் கடத்திக் கொண்டுபோய் காணாமற் செய்துவிடுகின்றார்கள். காணாமற் போன அஞ்சலியின் உடைமைகளைப் வந்து எடுத்துச்

செல்லுமாறு புலிகள் அவரின் கணவரான வரதனிடம் சொல்கின்றார்கள். அஞ்சலியின் இருப்புக் குறித்து விசாரிக்க வரதனும், சசியும் புலிகளின் முகாமுக்கு செல்கின்றனர். அந்த முகாம் பொறுப்பாளாரான 'ரி' என்பவருடன் சீலனும் நிற்கின்றார்.

காணாமற் போய்விட்ட அஞ்சலி இறந்துவிட்டார் என்பதை அறிந்து பல்கலைக்கழக மாணவர்கள், பொதுசனங்கள் அவ்வளவு அச்சத்துக்கு நடுவிலும் ஒரு பேரணியைச் செய்கின்றார்கள். அதில் முன்னே போகும் வரதன், அதுவரை எழுதப்பட்ட இரகசிய அறிக்கைகளில் ஒன்றை வெளியிடுகின்றனர். அந்த நினைவஞ்சலிக் கூட்டத்தோடு வரதனும், சசியும் தலைமறைவாகின்றனர். அதுவரை இரகசியமாக எழுதப்பட்ட இரண்டு யாழ்ப்பணத்தின் குறிப்புகளை ஒரு நூலாக சசி தன்னோடு கொண்டு வருகின்றார். அதை அவர் ஒரு நாள் நியூயோர்க்கிலிருக்கும் ஐ.நா சபையில் சமர்ப்பித்துப் பேசுகின்றார். இவ்வாறு 1980 வரை யாழ்ப்பாணத்தில் நிகழும் சம்பவங்களினூடாக கதை சொல்லப்படுகின்றது. இறுதியில் அது, 2009 இற்கு, ஈழத்தில் நடந்த இறுதி யுத்தத்திற்குத் தாவிவிடுகின்றது.

இப்போது போரில் இருந்து ஏதோ ஒருவகையில் தப்பி வந்த சீலன், அவரின் சகோதரியான சசியிடம், அங்கே அகப்பட்டிருக்கும் மக்களை காப்பாற்ற ஐ.நாவில் சென்று பேசக் கேட்கின்றார். முதலில் மறுத்தாலும், ஒரு தவறான நபர், சரியான விடயத்தைக் கேட்கும்போது அதைச் செய்யாது தட்டிக் கழிக்க முடியாதெனச் சொல்லி சசி ஐ.நாவுக்கு இறுதி யுத்தம் பற்றிப் பேசச் செல்கின்றார். அத்துடன் நாவல் முடிவடைகின்றது.

இலங்கை பற்றியோ, ஈழப்போராட்டம் பற்றியோ ஆங்கிலத்தில் எழுதப்படும் புதினங்களில் 1983 இனப்படுகொலை மையமாக இருப்பதை எளிதாக எவரும் அவதானிக்க முடியும். ஒரு வகையில் கொழும்பில் நடைபெற்ற அந்த இனவழிப்பால் சாதாரண மக்கள் மட்டுமல்ல, கொழும்பு வாழ் உயர் வர்க்க தமிழ்ச் சமூகமும் பாதிப்புக்கு உள்ளானது. அவர்களில் பெரும்பான்மையினரே இந்தக் கலவரத்தை முன்னிட்டு வேறு நாடுகளுக்கு முதன் முதலாகப் புலம் பெயர்ந்தவர்களாவர். அவர்கள் அதை பல்வேறு வகையில் ஆவணப்படுத்தினார்கள், பேசினார்கள் என்பதால் அடுத்து வரும் தலைமுறைக்கு இது சம்மந்தமாக அறிய பல ஆவணங்கள் கிடைத்தன. 1983, முக்கிய பேசுபொருளாக ஷியாம் செல்லத்துரை, மேரி ஆன் மோகன்ராஜ் போன்றவர்களின் புதினங்களில் மட்டுமல்ல, சிங்களப் படைப்பாளியான நயோமி முன்னவீரா போன்றோரின் படைப்புக்களிலும் இருப்பதைக் காண்கின்றோம். ஒரு வகையில் அதுவே இலங்கை அரசியலின் திருப்பு முனை. 1983 இல் நிகழ்ந்ததைப் பேசாது, இலங்கையின் அண்மைக்கால வரலாற்றை எவரும் பேசவிடவும் முடியாது.

1983 இற்குப் பிறகு போரின் ஒரு காலகட்டத்தைப் பதிவு செய்த ஆவணமாக ராஜனி திராணகம உள்ளிட்ட யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தால் பதிப்பிக்கப்பட்ட 'முறிந்த பனை' நூலைக் (Broken Palmyrah) கூறலாம். இது, இந்திய இராணுவம் 'அமைதிப்படை' என்ற பெயரில் இலங்கைக்குள் நுழைந்த காலப்பகுதியில் இந்திய இராணுவத்தாலும், விடுதலைப் புலிகள், ஈ.பி.ஆர்.எல்.எப் உள்ளிட்ட தமிழ் இயக்கங்களாலும் பொதுமக்கள் மீது நிகழ்த்தப்பட்ட கொடுமைகளைச் சொல்கின்றது. ஒரு வகையில் முறிந்த பனை இல்லாவிட்டால் நமக்கு இந்திய இராணுவ காலத்தின் துயரத்தைச் சொல்ல எந்த ஆவணமும் இல்லாது போயிருக்கும்.

வாசுகி கணேசானந்தன் இரண்டு முக்கிய காலப் பகுதிகளின் ஆவணங்களை உசாத்துணையாக வைத்து இந்தப் புதினத்தை எழுதியிருக்கின்றார். ஆனாலும் அவர் இதை புறவயமாக, சம்பவங்களினூடாக எழுத முயற்சித்திருப்பது ஒரு வகையில் பலவீனமாக அமைந்து விடுகின்றது. மூத்த சகோதரனான நிரஞ்சனை 1983 கலவரத்துக்கு பலி கொடுத்து, இன்னொரு சகோதரனான தயாளனை ஈழப் போராட்டத்துக்கு காவு கொடுத்து, அவரின் பிரியமான பேராசிரியரான அஞ்சலியை இயக்கத்தின் பழிவாங்கலுக்கு கொடுத்து, உறவுகளை அநியாயமாக இழந்த சசி என்கின்ற பெண்ணின் அகவுலகினூடு ஓர் அற்புதமான கதையை வாசுகி சொல்லியிருக்க முடியும். ஆனால் அவர் இந்த இழப்புக்கள் ஒவ்வொன்றையும் மிக வேகமாக தாண்டிச் செல்வதால் சசியின் பாத்திரத்தினூடாக வாசகர்

நுழைந்து பார்க்க முடியாத ஒரு அவதிநிலை ஏற்படுகின்றது.

மேலும் இந்நாவல் 1980 வரை நடந்த பல சம்பவங்களை விரிவாகச் சொல்லிவிட்டு, சட்டென்று 2009 இற்குப் பாய்ந்து சென்றுவிடுகின்றது. அந்த இடைவெளியுள்ள 20 ஆண்டுகளில் ஈழத்தில் யுத்தம் இன்னும் கோரமாக நிழந்திருக்கின்றது. இரண்டு தலைமுறை அதற்குள் தோன்றி போரைத் தவிர வேறு தெரிவு எதுவும் இல்லாது வளர்ந்தும் வந்திருக்கின்றது. வாசுகி, கதையை 1989 இல் முடித்திருக்கலாம். அவர் 2009 இற்குத் தாவியதால், இரண்டு தலைமுறையின் வாழ்வை வரலாற்றில் இருந்து இல்லாமற் செய்கின்றார்.

வாசுகி, 1970 களில் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து சென்ற தமிழ்ப் பெற்றோருக்கு 1980 இல் பிறந்தவர். அவர் இந்த நாவல் நடக்கும் காலப்பகுதியில் ஈழத்தில் இருக்கவில்லை. போரின் எந்தத் துளியாலும் தீண்டப்படவுமில்லை. படைப்பாளியாகவும், பேராசிரியாகவும் இருக்கும் வாசுகி ஒரு வெளியாளின் பார்வையில் இவை எழுதப்பட்டதென்கின்ற குறிப்புக்களை நாவலின் தொடக்கத்தில் சொல்லியிருக்க வேண்டும். ஏனெனில் இந்த நாவல் பெரும்பாலும் நடந்த சம்பவங்களையும், அசல் மனிதர்களின் கதைகளையும் சொல்கின்றது.

இந்த நாவலில் 'கே' என்கின்ற பாத்திரத்தில் வருவது புலிகள் இயக்கத்து திலீபன் என்பதும், அஞ்சலி என்ற பெயரில் வருவது ராஜனி திராணகம என்பதும் எல்லோருக்கும் எளிதில் புரியக்கூடியது. போருக்கு வெளியே, போரால் நேரடியாக பாதிக்கப்படாத ஒருவராக இருக்கின்றேன் என்றுதான் அனுக் அருட்பிரகாசம் இறுதிப் போர்க் காலத்தையும், அதன் பின்னரான காலத்தையும் வைத்து இரண்டு அருமையான நாவல்களை எழுதுகின்றபோது நமக்கு நினைவூட்டுகின்றார். அவ்வாறாக தம்மை இந்த யுத்தப் பின்னணியில் எங்கே இருக்கின்றோம் என அடையாளப்படுத்துவது - முக்கியமாக உண்மைச் சம்பவங்களின் அடிப்படையில் புனைவை எழுதும் - எந்தப் படைப்பாளியும் செய்ய வேண்டிய நல்லதொரு காரியமாகும். ஆனால் துரதிஷ்டவசமாக ஆங்கிலம் போன்ற பிறமொழிகளில் எழுதும் வாசுகி மட்டுமல்ல, தமிழில் எழுதுபவர்களும் இந்தத் தவறைத் தெரிந்தே செய்கின்றார்கள்.

இலங்கையில் அடிப்படைப் பிரச்சினையாக இருப்பது சிங்களப் பேரினவாதமும், அவ்வப்போது தோன்றிக் கொண்டிருக்கும் இனவாத, மதவாத அரசியல் கட்சிகளுமே ஆகும். ஆகவேதான் இன்று யுத்தம் முடிந்த பின்னும் இலங்கையில் ஒரு நிரந்தரமான அமைதி ஏற்படாமல் இருக்கின்றது. அந்தப் பேரினவாதத்திற்கு காலத்துக்கு காலம் ஒரு எதிரி தேவைப்பட்டபடி இருக்கின்றது. வெற்றிடத்தைக் காற்று நிரப்பும் என்பதைப் போல அந்த எதிரிகளாக சிறுபான்மை இனங்களும், அவர்களுக்குள் தோன்றும் இயக்கங்களும் அமைந்துவிடுகின்றன. சில வேளைகளில் சிறுபான்மையினர் தம்மைப் பலிகொடுக்க தயாராக இல்லாதபோது, இதே பேரினவாதப் பிசாசு தன் இருப்புக்காய், நீதி கேட்டுப் போராடும் சிங்கள இளைஞர்களையும் காவு கொள்ளத் தயங்குவதில்லை. அதற்குச் சிறந்த உதாரணங்களாக, ஜேவிபி முன்னெடுத்து, பின் அரசினால் கொடூரமான முறையில் அடக்கப்பட்ட இரண்டு புரட்சிகளும் வரலாற்றில் அழியாக் கறையாக நம் முன்னே இருக்கின்றன. இன்றைக்கும் ஏன் இலங்கையில் அனைத்து இனங்களும் சமாதானமாக இருந்து நாட்டை சுபீட்சமாக வளர்க்க முடியவில்லை என்பதை நாமனைவரும் யோசித்துப் பார்க்க வேண்டும்.

இந்த நாவலும் இந்தக் கேள்விகளை எளிதாகத் தவிர்த்து, யுத்ததிற்கான அடிப்படைக் காரணங்களுக்குள் செல்லாது, அதன் எதிர் வினைகளையும், பின் விளைவுகளையும் முக்கியமானதாக் காட்ட விழைகின்றது. ஒரு பேரினவாத அரசுக்கெதிராக, ஒரு கொரில்லா இயக்கமாகத் தோன்றி, பின்னர் மரபுவழி இராணுவமாக ஒரு குறிப்பிட்ட பகுதியை தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த புலிகளை, அரசுக்கு நிகராக வாசுகி முன்னிறுத்த விரும்புகின்றார். அதனாலே இந்தப் புனைவு 2009 இல் புலிகள் மக்களை பணயக் கைதிகளாக வைத்திருந்தனர் என்பதை முதன்மையாகச் சொல்கின்றது. புலிகள் மக்களை வெளியே செல்லவிடவில்லை என்பது உண்மை. புலிகள் பல நாடுகளால் தடை செய்யபட்ட ஓர் 'தீவிரவாத' இயக்கம். ஆனால் தனது சொந்த மக்களையே காப்பாற்ற வேண்டிய பொறுப்புள்ள அரசு இவ் விடயத்தில் செய்ததுதான் என்ன? இந் நாவல் நடக்கும் 1980 களின் நடுப்பகுதியில், ஒரு அரசானது தனது சொந்த மக்களைக் கொல்ல விமானத்

தாக்குதல்களையும் ஷெல் தாக்குதல்களையும் நடத்தி, எவ்வாறு சொந்த நாட்டு மக்களையே அந்நியமாகப் பார்த்தது என்பதற்கு நம்மைப் போன்ற பலர் சாட்சிகளாக இருக்கின்றோம்.

இன்றைக்கு பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் செய்து கொண்டிருக்கும் படுகொலைகளுக்கு நாம் ஹமாஸை இஸ்ரேல் அரசுக்கு நிகராக வைத்துப் பேசுவது நியாயமாக இருக்க முடியுமா? இந்த அடிப்படைக் கேள்விகளைத்தான் 'சகோதரனற்ற இரவு' என்கின்ற இப் புதினத்தை முன்வைத்து வாசுகியை நோக்கி நாம் கேட்க வேண்டியவராகின்றோம்.

ஓர் அரசியல் நாவல் முடியும் போது அது பாதிப்படைந்தவர்களின் பக்கம் நம்மை அழைத்துச் செல்வதோடு, அவர்களின் பலவீனங்களையும் ஏதோ ஒருவகையில் ஏற்றுக் கொள்ள வைக்கும். அனுக் அருட்பிரகாசத்தின் நாவல்களை வாசித்தவர்கள் - அவர் எந்தத் தரப்பையும் வெளிப்படையாகச் சொல்லாமல் - கதாப்பாத்திரங்களினூடாக உள்ளிறங்கி எழுதுவதன் மூலம் நம்மை நிலைகுலையச் செய்வதை அறியலாம். வாசுகியின் இந் நாவலின் கதை சொல்லியான சசியினூடாக இந்த முயற்சியை நிகழ்த்திப் பார்த்திருக்கக்கூடிய சந்தர்ப்பம் இருந்த போதும் அது நிகழாதது ஒரு வகையில் இழப்பேயாகும். ஈழத்து அரசியல் தெரிந்த எங்களைப் போன்றவர்களுக்கு இதில் இருந்து அறிந்துகொள்ள புதிதாக அவ்வளவாக எதுவும் இல்லை. நமக்குப் பரிச்சயமான களங்கள், நபர்கள், சம்பவங்களே இதில் இருக்கின்றன. ஆனால் இது தமிழர் அல்லாதவருக்கும், புலம்பெயர்ந்தவர்களின் இங்கு பிறந்த முதல் தலைமுறையினருக்கும் வாசிக்கச் சுவாரசியமாக இருக்கும்.

2008 இல் வாசுகியின் முதல் புத்தகமான 'Love Marriage' இனை வாசித்து என் வாசிப்பை எழுதியிருந்தேன். அப்போது ஈழத்தில் இறுதி யுத்தம் உக்கிரமாக நடந்து கொண்டிருந்த காலம். அதில், "இன்று மிகச் சிக்கலாகவும், பலவீனமாகவும் போய்க்கொண்டிருக்கும் தமிழரின் போராட்டத்தை, எல்லாத் தரப்புகளும் பிழை செய்கின்றன என்று எளிதாகக் கூறித் தப்பியோட முடியாது. தொடக்க காலத்தில் தமிழரின் உரிமைக்காய் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்திற்கு எவ்வளவு வலுவான காரணங்களிலிருந்ததோ அந்தப் பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படாமலேயே இருக்கிறது என்பதை சிங்களப் பேரினவாதத்திற்கோ, உலக நாடுகளுக்கோ மட்டுமில்லாது, வெற்றி தோல்விகளின் எண்ணிக்கையை வைத்துக் கொண்டாடிக் குதூகலிக்கும் 'புதிய சனநாயகவாதிகளுக்கும்' நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது. இந்நாவலில் தமிழர் தரப்பின் தீர்க்கப்படாத பிரச்சினைகளின் ஆழங்களை அலசாமல், பொதுப்படையாக/எளிமையாக அனைவரும் தவறு செய்கின்றார்கள் என்று எழுதுவது/ பேசுவது, ஈழப் போராட்டம் குறித்து அவ்வளவு அறியாதவர்களுக்கு தவறான நிலைப்பாட்டை விதைக்கக் கூடியதாகவிருக்கும். முக்கியமாய் தமிழல்லாத, ஆங்கிலம் போன்ற பிற மொழிகளில் நேரடியாக எழுதுபவர்கள் இவை குறித்து அதிக கவனத்தோடு, கடந்த கால வரலாற்றை ஆழமாய் அறிந்து கொள்வதினூடே நிதானமாய் எழுத வேண்டியிருக்கிறது." எனக் குறிப்பிட்டிருப்பேன்.

யுத்தம் முடிந்து 15 வருடங்களுக்குப் பிறகும் ஏன் இலங்கை இப்படி பெரும் அரசியல்/ பொருளாதார நெருக்கடிக்குள் இருக்கின்றது? எதன் பொருட்டு ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் பொது மக்கள் மீது நிகழ்த்தபட்டது? இறுதி யுத்தத்தை முடித்து வைத்த வீர நாயகர்கள் எனக் கொண்டாடப்பட்ட ராஜபக்சே சகோதரர்களில் ஒருவரான கோத்தபாய ஏன் நாட்டின் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி பதவியில் இருந்து அவரது சொந்த மக்களாலேயே தூக்கியெறியப்பட்டு சொந்த நாட்டைவிட்டு துரத்தப்பட்டார்? போன்ற கேள்விகளை நாம் கேட்கும்போது, தமிழ் இயக்கங்களோ, ஜேவிபியினரோ நடத்திய ஆயுதப் போராட்டம் மட்டும் இலங்கையின் சீரழிவுக்கு முக்கிய காரணமில்லை என்பது விளங்கும். அந்தப் புள்ளிகளில் முதன்மையாக கவனத்தைக் குவித்து, போராட்ட இயக்கங்களின் பலவீனங்களோடு ஒடுக்கப்பட்டவர்களின் வலிகளைப் புரிந்துகொள்ள முயன்றிருந்தால் ஓர் அசலான படைப்பாக மட்டுமின்றி பாதிக்கப்பட்டவர்களின் குரல்களையும் அடையாளப்படுத்துகின்ற ஒரு முக்கியமான வரலாற்று ஆவணமாகவும் இந்த நாவல் மாறிவிட்டிருக்கக்கூடும். ஆனால் அது வாசுகியின் 'சகோதரனற்ற இரவில்' முழுமையாக நிகழவில்லை என்பதுதான் துயரமானது.

(தொடரும்)

இலங்கையைப் பொறுத்தமட்டில், தமிழர்களின் தொன்மையான வரலாறு இன்னும் மகாவம்ச இருளால் மூடப்பட்டிருக்கும் சூழலில், இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற தொல்லியல் ஆய்வுகள் இலங்கையில் பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் மக்களின் இருப்பியல் தகவல்களை வெளிக்கொணர்ந்துள்ளன. அந்தவகையில் 'இலங்கையின் அண்மைக்கால தொல்லியல் ஆய்வுகள்' என்ற இத்தொடர் சமகாலத்தில் இலங்கையில் குறிப்பாக வடக்கு – கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் தொடர் அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட தொல்லியல் ஆதாரங்களின் அடிப்படையில், பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்தில் இலங்கைத் தமிழ் மக்களிடம் நிலவிய நாகரிகம், அவர்களின் கலாச்சார பண்பாட்டு அம்சங்கள், பொருளாதார சமூக நிலவரங்கள், வெளிநாட்டு உறவுகள், உறவு நிலைகள், சமய நடவடிக்கைகள் போன்ற அம்சங்களை ஆதாரபூர்வமாக வெளிக்கொணர்வதாக அமைகின்றது.




பரமு புஷ்பரட்ணம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியரான பரமு புஷ்பரட்ணம் அவர்கள், தனது இளமாணி மற்றும் முதுமாணிப் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், கலாநிதிப் பட்டத்தைத் தஞ்சாவூர் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக்கொண்டார்.
இவர் எழுதிய பதினைந்து நூல்களில் நான்கு நூல்கள் இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசையும், மூன்று நூல்கள் மாகாண சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றன. இவர் 82இற்கும் மேற்பட்ட தேசிய, சர்வதேச ரீதியிலான ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளதுடன், இதுவரை 55 சர்வதேச மற்றும் தேசிய கருத்தரங்குகளில் பங்குபற்றியுள்ளார்.
வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 18 இடங்களில் இவரால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் மூன்று அகழ்வாய்வுகள் தொடர்பான விடயங்கள் நூல்வடிவில் வெளிவந்துள்ளன.




சேது நாணயங்கள்

# யாழ்ப்பாண இராசதானிக் காலத்திற்குப் புதிய அடையாளம்: அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட அரிய பொன், வெள்ளி நாணயங்கள்

இலங்கைத் தமிழர் வரலாற்றில் ஒரு மன்னனின் ஆளுகைக்கு உட்பட்ட முதலாவது அரசாக நல்லூரரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசு காணப்படுகின்றது. கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை ஆட்சியில் இருந்த இவ்வரசின் ஆதிக்கத்துக்குள் வடஇலங்கையும் கிழக்கிலங்கையின் சில பாகங்களும், சில சந்தர்ப்பங்களில் தென்னிலங்கையும் உள்ளடங்கியிருந்தது. இவ்வாறு ஏறத்தாழ 350 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த இவ்வரசின் வரலாற்றை அறிய உதவும் நம்பகரமான ஆதாரங்களில் ஒன்றாக அவ்வரசு காலத்தில் வெளியிடப்பட்ட சேது மொழி பொறித்த நாணயங்கள் காணப்படுகின்றன. இவ்வரசை முதலில் தோற்றுவித்த ஆரியச் சக்கரவர்த்திகள் தமிழ் நாடு சேது தலத்துடன் கொண்டிருந்த தொடர்பை நினைவுபடுத்தி தாம் வெளியிட்ட நாணயங்களில் சேது என்ற மங்கல மொழியைப் பொறித்தனர். இந்நாணயங்களை

வெளியிட்டனர் என்பதை முதலில் அடையாளப்படுத்திய பெருமை முதலியார் இராசநாயம் அவர்களுக்கு உரியதாகும். இந்நாணயங்களின் வடிவமைப்பு, அளவு, நிறை, அவற்றில் பொறிக்கப்பட்ட சின்னங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்த பேராசிரியர் பத்மநாதன் இந்நாணயங்களை ஆறு வகைப்பட்டதாக அடையாளப்படுத்தியுள்ளார். ஆனால் 1990 களின் பின்னர் சேது மொழி பொறித்த நாணயங்கள் அதிக எண்ணிக்கையில் கிடைத்திருப்பதை ஆதாரமாகக் கொண்டு இவற்றை பதினெட்டு வகையாகப் பார்க்க முடிகின்றது.

யாழ்ப்பாண இராசதானி கால நாணயங்கள் பற்றி ஆய்வு செய்த அறிஞர்கள் பலரும் இவ்வரசு காலத்தில் சேது மொழி பொறித்த செப்பு நாணயங்கள் மட்டுமே வெளியிடப்பட்டதெனக் கூறி வந்துள்ளனர். ஆனால் சேது மொழியோடு கந்தன், ஆறுமுகன் ஆகிய கடவுளர் பெயரிலும் நாணயங்கள் வெளியிடப்பட்டதற்கு தற்போது உறுதியான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இந்நிலையில் யாழ்ப்பாண இராசதானி கால நாணயங்கள் பற்றி விரிவாக ஆராய்ந்த பேராசிரியர் பத்மநாதன் இவ்வரசால் செப்பு நாணயங்களுடன் பொன் நாணயமும் வெளியிடப்பட்டது என்பதற்கு பிரித்தானிய அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பொன் நாணயத்தை ஆதாரமாகக் காட்டுகின்றார். இந்நிலையில், வடஇலங்கையில் பூநகரி வட்டாரத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது பொன்முலாம் பூசப்பட்ட இரண்டு சேது நாணயங்கள் (Gold Plate Coin) கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை வரலாற்றுப் பெறுமதியுடைய அரிய நாணயங்களாகக் காணப்பட்டதால் இவற்றின் உண்மைத் தன்மையை ஆய்வுகூடப் பரிசோதனையில் மேலும் உறுதிப்படுத்த கடந்த வாரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானப் பீடாதிபதி பேராசிரியர். ரவிராஜ் அவர்களின் உதவியை நாடிய போது அவர் உடனடியாகவே அவற்றை ஆய்வு செய்வதற்கு தனது பௌதிக துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி. சுதர்சினி, கலாநிதி. தணிகரூபன் ஆகியோரிடம் அப்பணியை ஒப்படைத்தார். அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் இரண்டு நாட்களாகத் தமது துறையின் ஆய்வுகூடத்தில் பரிசோதித்து இரண்டு சேது நாணயங்களிலும் பொன் கலக்கப்பட்டதை உறுதிப்படுத்தியிருந்தனர். இதன் மூலம் யாழ்ப்பாண இராசதானியில் பொன் நாணயங்களும் புழக்கத்தில் இருந்த உண்மை மேலும் தெரியவந்துள்ளது.



**முருகனைக் குறிக்கும் நாணயங்கள்**

யாழ்ப்பாண இராசதானி கால மன்னர்களில் சிலர் பொன் நாணயங்களுடன் வெள்ளி நாணயங்களையும் வெளியிட்டிருந்தனர் என்பதற்கு முதன் முறையாக ஆதாரம் கிடைத்துள்ளது. புத்தூர் விஸ்ணு வித்தியாலய அதிபராக இருந்த தி. சிவஞானம் அவர்கள் தமது மணல்திடல் கிராமத்தில் பண்டைய காலத் தொல்பொருள் சின்னங்கள் காணப்படுவதை பல தடைவைகள் என்னிடம் கூறியிருந்தார். அதன் அடிப்படையில் அங்கு களவாய்வில் ஈடுபட்டிருந்த போது அங்கிருக்கும் வைரவர் ஆலயப் பூசகர் ஒருவர் தமது ஆலய உண்டியலில் அங்கு வசிக்கும் மக்களால் போடப்பட்ட செல்லாக் காசுகள் இருப்பதாகக் கூறினார். அதன் பேரில் அவ்வாலய உண்டியலைப் பரிசோதித்த போது அதற்குள் ஒரு சில பண்டைய நாணயங்களுடன் சேது மொழி பொறித்த மிக அழகான வெள்ளி நாணயம் ஒன்றும் காணப்பட்டது. இது ஒன்றே யாழ்ப்பாண இராசதானி காலத்தில் வெள்ளி நாணயமும்

புழக்கத்தில் இருந்தமைக்கு கிடைத்துள்ள முதலாவது ஆதாரமாகும்.

தென்னாசியாவில் இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அரச இலட்சனைகளுடன் நாணயங்களை வெளியிடும் மரபு இருந்துள்ளது. இந்நாணயங்கள் பெருமளவுக்குச் செப்பு நாணயங்களாகவே காணப்பட்டன. ஆனால் அரசியல் பலம், பொருளாதார வளம் கொண்ட அரசுகள் செப்பு நாணயங்களுடன் வெள்ளி, பொன், பொன் முலாம் பூசப்பட்ட நாணயங்களையும் வெளியிட்டுள்ளன. இதற்கு இந்திய வரலாற்றில் பொற்காலம் என அழைக்கப்பட்ட குப்தர் காலத்திலும், தென்னாசியாவின் முதலாவது கடல்சார்ந்த பேரரசை உருவாக்கிய சோழர் காலத்திலும் வெளியிடப்பட்ட பொன், வெள்ளி, பொன் முலாம் பூசப்பட்ட நாணயங்களை உதாரணங்களாகக் குறிப்பிடலாம். இலங்கையிலும் கூட ஒன்றுபட்ட இலங்கையை உருவாக்கியவன் எனப் புகழப்படும் முதலாம் பராக்கிரமபாகு காலத்திலும் இவ்வகையான நாணயங்கள் வெளியிடப்பட்டதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. தற்போது யாழ்ப்பாண அரசு காலத்திலும் செப்பு நாணயங்களுடன் பொன், வெள்ளி நாணயங்களும் வெளியிடப்பட்டமைக்கான ஆதாரங்கள் கிடைத்திருப்பது யாழ்ப்பாண இராசதானியின் ஆதிக்க பலத்தையும், அதன் பொருளாதார வளத்தையும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது. இவ்விடத்தில் 15 ஆம் நூற்றாண்டு கால இலங்கை அரசியல் நிலை பற்றிக் கூறும் 'நிகாயசங்கிரய' என்ற சிங்கள நூல் இக்காலத்தில் ஆட்சியில் இருந்த கம்பளை, றைகம அரசுகளைக் காட்டிலும் யாழ்ப்பாண அரசு இராணுவ பலத்திலும், பொருளாதார வளத்திலும் மேலோங்கி இருந்ததாகவும், இதனால் யாழ்ப்பாண மன்னர்கள் மலைநாட்டிலுலிருந்தும், கீழ்நாட்டிலிருந்தும், ஒன்பது துறைமுகங்களில் இருந்து திறைபெற்றதாகவும் கூறுவதை மேற்கோள் காட்டலாம். இதை கோட்டகம என்ற இடத்தில் கிடைத்த யாழ்ப்பாண அரசு காலக் கல்வெட்டும், மடவல சிங்களச் சாசனமும் மறைமுகமாக உறுதிப்படுத்துகின்றன. இந்த வரலாற்று உண்மையை மேலும் உறுதிப்படுத்துவதாகவே யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட பொன், வெள்ளி நாணயங்களைப் பார்க்கலாம்.


**பொன், வெள்ளி, செப்பு நாணயங்கள்**

இலங்கைத் தமிழரின் பண்டைய நாணயங்கள் பற்றி முகநூல்களில் வந்த செய்திகளைப் பார்த்த வரலாற்று ஆர்வலர்கள் என்னிடம் தொடர்பு கொண்டு இதுபோன்ற நாணயங்களைத் தாம் வைத்திருந்ததாகவும் அவற்றைத் தொலைத்துவிட்டதாகவும், வேறு சிலர் தம்மிடம் இருந்ததை தமது வீடுகளில் தேடவேண்டும் எனவும், இன்னும் சிலர் பொது மக்களிடம் விலைக்கு வாங்கிய நாணயங்களின் வரலாற்றுப் பெறுமதியை அறியாது அவற்றை உருக்கி ஆபரணங்கள் செய்ததாகவும் கூறிவருகின்றனர். வடஇலங்கையின் சில ஊர்களில் வசிக்கும் ஒரு சில மக்கள் மழை காலங்களில் வெளியே தெரியவரும் வரலாற்றுச் சின்னங்களைச் சேகரித்து பிறருக்கு விற்பனை செய்வதைக் காணமுடிகின்றது. ஆனால் இவை எமது பிரதேசத்தினதும், எம்மக்களினதும் விலைமதிக்க முடியாத ஒரு சொத்து. இவற்றை அருங்காட்சியகங்களிற்கு கொடுப்பதன் மூலம் இலங்கைத் தமிழர் வரலாற்றை ஆவணப்படுத்தும் பெரும் பணியைச் செய்தவர்களாவீர்.

2009 இல், போரின் முடிவில், போர் தந்த சிதைவுளுக்கு நாம் முகம் கொடுத்தோம். இதில் மிக முக்கியமானது போர் சிதைத்த எமது நிறுவன நினைவு வளம் (Institutional Memory) ஆகும். மனித இழப்புகளுக்கு அடுத்ததாக, எம்மால் கட்டமைக்கப்பட்ட நிறுவனங்களின் பெயர்வும், சிதைவும் பிடுங்கி எறியப்பட்ட பூசணிக் கொடிகள் போல எங்கும் பரவிக் கிடக்கிறது. நிறுவனங்களின் சிதைவுகளில் மிக முக்கியமானதும், மிகவும் பாதிக்கப்பட்டதுமாக அமைவது கூட்டுறவு இயக்கமாகும்; கூட்டுறவுத் துறையின் வெற்றிக்கு அச்சாணியாக இருந்த கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்களும் அதனோடு இணைந்தே அழிவுக்குள்ளாகின. இச் சிதைவுகளைக் கண்டறிந்து மீள் உருவாக்கம் செய்ய வேண்டிய காலமிது. அதன் பொருட்டு, கூட்டுறவு இயக்கம் – கூட்டுறவின் கட்டமைப்புக்கள் மிக முக்கிய அசைவியக்கமாக மாற முடியுமா? போரின் பின்னரான மீள் கட்டுமானத் திட்டங்களுக்கும் நிலையான அபிவிருத்திக்கும் கூட்டுறவு இயக்கத்தின் வகிபாகம் யாது? எங்கிருந்து தொடங்குவது? போரின் பின்னரான சிதைவுகள், அதன் விளைவாக விளைந்த பொருளாதார நெருக்கடிகளுக்கு அதனால் உதவ முடியுமா? ஆகிய வினாக்களை இத் தொடர் முன்வைத்து ஆராய்கின்றது. போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளான வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மற்றும் மலையகம் உட்பட, இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள கூட்டுறவுத் துறையினால் ஒரு வலுவான மாற்றுப் பொருளாதாரக் கட்டமைப்புக்கு சிறப்பாக உதவ முடியும். கூட்டுறவுத் துறையின் வளர்ச்சி சார் விடயங்களை மையமிட்டு காத்திரமான விடயங்களை தர்க்கத்துடன் கலந்துரையாடி, சிந்தனைக்கான முன்மொழிவுகளை தரும் இத் தொடர் ‘கூட்டுறவு இயக்கத்தின் வகிபாகம் : போரின் பின்னரான மீள் கட்டுமானமும் அபிவிருத்தியும்’ எனும் பெயரில் அமைகிறது.




**வை. ஜெயமுருகன்**

சமூக அபிவிருத்தி ஆய்வாளரான இவரது எழுத்துக்கள் அபிவிருத்தி பிரச்சினைகள் தொடர்பாக கவனம் கொள்வதுடன் போரின் பின்னரான நினைவுகொள் காலத்தின் மீள் கட்டமைப்புக்கள் மீதும் அழுத்தம் கொடுக்கிறது. இவர், அபிவிருத்திக் கல்விக்கான கலாநிதிப் பட்ட ஆய்வுக்காக ‘இலங்கையின் போரின் பின்னரான அபிவிருத்தி முரண்நிலை’ என்னும் கருப்பொருள் மீதான ஆய்வை முன்னெடுத்தவர். இவ் ஆய்வு நூலாக வெளிவரவுள்ளது. சர்வதேச கிறிஸ்டின் பல்கலைக்கழகத்தில் ‘M.A in Peace Study’ ஆய்வுப் பட்டம் செய்ய ரோட்டரி (Rotary Peace Fellow) புலமைப்பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டவர்.


# போரின் பின்னரான மீள்கட்டுமானத் திட்டங்களுக்கும் நிலையான அபிவிருத்திக்குமான கூட்டுறவு இயக்கத்தின் வகிபாகம் : எங்கிருந்து தொடங்குவது?

*மே 2009 என்பது மிக முக்கியமான ஒரு காலப்புள்ளி; தமிழர்கள் எல்லோருக்கும். ஒரு யுத்த காலத்தின் முடிவையும், பல சகாப்தங்களாக யுத்தம் விதைத்த அளவிட முடியாத மொத்த அழிவுகளையும் கணக்கில் எடுக்கும் காலம்; பலருக்கு கனவுகளில் இருந்து விழித்தெழும் காலம். சிலருக்கு, எதிர்பார்க்காத ஒரு தோல்வியின் முழு வீச்சையும் ஆரத்தழுவி கால அசைவின் போக்கில் கரைந்து போகும் காலம்; அது முழு நம்பிக்கையும் புதைக்கப்பட்ட அசைவற்ற மனநிலை. ஆனால், கடந்த பதின்நான்கு ஆண்டுகால மொத்த சமூக அசைவியக்கத்தை எந்தவித உள்நோக்கம் இன்றி மிகக் கவனமாக நோக்கும் போது முக்கியமான ஒரு முடிவை நிதானமாக அடையக்கூடியதாக உள்ளது. அது யாதெனில், போரின் உச்சம் காரணமாக ‘பிடுங்கப்பட்ட பூசணிச் செடியாக’ இருந்த தேசம் நிதானமாக, உயிர் பெறும் ஒரு வனமாக மீள் உருவாக்கம் கொள்ளும் ஒரு நிலையே. இந் நிலையை மூன்றாக நோக்கலாம்.*

- *சளைக்காது : தனது அடையாளம், தமிழ் தேசம் மற்றும் தன் இருப்பு மீதான வலுவான பிரியம்.*
- *சிதைக்கப்பட்ட தேசத்தின் மீள்கட்டுமானம்.*
- *பல்பரிமான உணர்வு நிலை : எல்லோரும் இணைந்து தேர் இழுக்கும் பொது மனநிலை. களமும் புலமும்*

இணைந்து, கலந்து, சில வேளைகளில் முரண்பட்டாலும், தமிழர் தேசம் தொடர்பான கரிசனையை தொடர்ந்து பிணைத்து நிற்கும் செல்நெறி.

குறிப்பாக 2020 பின்பான காலத்தில், மிகவும் துல்லியமான கவனிப்பு யாதெனில்:

1. வடக்கு கிழக்கு மற்றும் மலையக மீள்கொள்களநிலை மற்றும் இணைகொள் மன நிலை. கடந்த காலத்தைவிட மிகவும் நெருங்கி இணையும் அசைவு நிலை. காலம் தந்த படிப்பினையாக இருந்தாலும், ஒரு அசைக்க முடியாத, பலமான சேதன உயிர்ப்பு. ஒரு வலுவாக வேர்கொள்ளும் தேசத்தின் அசைநிலை.
2. தனி நிலை, குடும்ப, ஊர் சிந்தனை நிலையில் இருந்து தேசமாகச் சிந்திக்கும் மனநிலை. வடக்கின் பால் நிலைகொண்ட புலம்பெயர் நிதிப் பெயர்ச்சி.
3. தமிழர் தேசத்தின் நிலையான, நீடிக்கக்கூடிய அபிவிருத்திக்கு சமூக நிறுவனங்களின் மீதான பற்றுதல். திடமான ஒரு பேண்தகு அபிவிருத்திக்கு, சமூக நிறுவனங்களின் பலமான ஈடுபாடு மிக அவசியம். சமூக நிறுவனங்களுக்கு இடையேயான பலமான கட்டமைப்பும், சிறந்த தலைமைத்துவமும் பிரிக்க முடியாத நாணயத்தின் இரு பக்கங்கள் போல கட்டமைக்கப்பட்ட ஒரு அபிவிருத்தி மையம் மீதான உச்சமட்ட கவனமும் அதற்கான மூலதன மற்றும் மனித வள அபிருத்திக்கான கரிசனையும்.

மேற்கூறிய அசைவு நிலையில், எம்மிடையே இணைந்த, ஆனால், கவனம் கொள்ளப்படாத ஒரு மிக முக்கியமான ஒரு சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பு, மக்கள் அமைப்பு கூட்டுறவு இயக்கம் ஆகும். கூட்டுறவு இயக்கத்தின் வகிபாகம் பற்றிய உணர்வு நிலை - பொதுப் புத்தி என்பது கிணற்றில் போட்ட கல்லாக, சேற்றில் மறைந்திருக்கும் வைரமாக உள்ளது மிகவும் யதார்த்தமாகும். எந் நிலையில், ஒரு ஆரோக்கியமான ஒரு கருத்துப் பகிர்வை செயற்படுத்தக் கூடிய ஒரு கள நிலையின் பால் அசைவைத் தூண்டும் முகமாக, 'போரின் பின்னரான மீள்கட்டுமானத் திட்டங்களுக்கும் நிலையான அபிவிருத்திக்குமான கூட்டுறவு இயக்கத்தின் வகிபாகம் : எங்கிருந்து தொடங்குவது?' என்னும் தலைப்பில் இக் கட்டுரை உங்கள் முன் வருகிறது? ஒரு வலுவான, நீடிக்கக்கூடிய சமூகப் பொருளாதார கலாசாரக் கட்டமைப்பு எம்மிடம் தவழும் பொழுது, அதன் மீதான இருப்பை இன்றைய நிலைகொள் காலக் கள நிலைக்கும் தற்போதைய தட்பவெப்ப நிலைக்கும் பொருந்துவது போல், கூட்டுறவின் வகிபாக மீட்பாகத்துக்குரிய கருத்துக்களோடு முன்வைத்து வலுவான கலந்துரையாடலை நோக்கிய பாதையைத் திறப்பதே இக் கட்டுரைத் தொடரின் மிக முக்கிய ஆவல் மற்றும் மிக்க ஆசையும் ஆகும்.

தமிழர் தேசம், தமிழ் தாயகம் என்பது ஒரு பரந்த, திரண்ட பூலோக ரீதியான சிந்திச் சிதறிய தமிழர்களின் சமரசம் செய்ய முடியாத தேச உணர்வு ஆகும். ஈழத்தில் அது புவிசார் மையம் கொண்டாலும் அது நீண்ட காலமாக அடைய முடியாத, ஆனால் அடைய வேண்டும் என்ற உளவியல் மனோநிலை, தாகம், கனவு மற்றும் மீள் திரும்ப முடியாத ஒரு ஒரு வழிப் பாதையாகவும் இருக்கிறது. காலனித்துவம் தமிழர் மீது வலுவாகச் செலுத்திய வலியும் அதற்கு மேலாக பௌத்த சிங்கள உயர் வர்க்கம் தந்த மிகக் கொடுமையான வதையும் தமிழரின் பாரம்பரிய தேசத்தின் திட்டமிட்ட, தொடர்ச்சியான சிதைவாகும். காலம் ஒரு அளவு மட்டும் அல்ல; அது ஒரு நினைவு; அழிக்க முடியாத,



Image Source - www.ndtv.com

காற்றில், வெளியில், ஆழமாக படிந்த வடு. எம் மீதானா ஒரு இன வதையின், இன அழிப்பின் படிமங்களை சதா நினைவூட்டும் ஒரு கண்ணாடி. சதா நினைவு கொள்ளும் ஒரு மனநிலை; துரத்த முடியாத, துறக்க முடியாத ஒரு வதை மற்றும் மனநிலைச் சிறை.

அனுபவித்த, நாளாந்தம் தலையில் தாங்கிய முள்கிரீடங்கள் தான், தேசம் மீதான அளவிட முடியாத அவாவையும் விடாப்பிடியையும் ஒவ்வொரு கணமும் அதிகரிக்கும். ஆனால், இந்த மனோவலிக்கு மருந்தாகும், மன நிம்மதி தரக்கூடிய தேச நிர்மாணம் என்பது இலகு அல்ல. அது ஒரு தவநிலை; எல்லோருக்குமான பொறுப்பு. சகலரும் ஒத்த மனநிலையில் இடையறாது தொடர்ந்து யாகம் செய்யும் ஒரு யாத்திரை; நீண்டகால வலியான பயணம். நினைவுகொள் காலம் தொடர்பாக மீள் சிந்தனையும் ஒரு அகண்ட விரிவான கண்ணோட்டமும் மிக அவசியமாகும். சிதைவுகளின் பல வடிவங்களைக் கண்டறிந்து மீள் உருவாக்கம் செய்ய வேண்டியுள்ளது. இதில் மிக முக்கியமாக வர வேண்டிய விடயம் போர் சிதைத்த எமது நிறுவன நினைவு வளம் (Institutional Memory) ஆகும். மனித இழப்புகளுக்குப் பிறகு, பின்தொடரும் எம்மால் முக்கியமாகப் பார்க்கப்படாத விடயம், நாம் கட்டமைத்த நிறுவனங்களின் பெயர்வும் சிதைவுமே. நிறுவனங்களின் சிதைவுகளில் மிக முக்கியமானதும் மிகவும் பாதிக்கப்பட்டது கூட்டுறவு இயக்கமும் அதன் கட்டமைப்புகளும் ஆகும். கூட்டுறவுத் துறையின் கணிசமான வெற்றிக்கு மிகவும் அச்சாணியாக விளங்கிய பொருளாதாரக் கட்டமைப்பு கூட்டுறவு மையங்கள் ஆகும். எல்லாம் சிதைந்து போயின. அத்துடன், மிகவும் சிறப்பாக இயங்கிய, மிகச் சிறப்பாக ஈடுபட்ட சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களும் அழிந்தன.


இசுரேலியர்களை விட, வலிகளையும் சிதைவுகளையும் தங்கள் பொருளாதாரக் கட்டமைப்புக்கு மிகக் கவனமாக, கள நிலையின் தரம் அறிந்து உரமாக இட்டவர்கள் பங்சமோரோ மக்கள்

**தமிழர் தேசம், தமிழ் தாயகம் என்பது ஒரு பரந்த, திரண்ட பூலோக ரீதியான சிந்திச் சிதறிய தமிழர்களின் சமரசம் செய்ய முடியாத தேச உணர்வு ஆகும். ஈழத்தில் அது புவிசார் மையம் கொண்டாலும் அது நீண்ட காலமாக அடைய முடியாத, ஆனால் அடைய வேண்டும் என்ற உளவியல் மனோநிலை, தாகம், கனவு மற்றும் மீள் திரும்ப முடியாத ஒரு ஒரு வழிப் பாதையாகவும் இருக்கிறது.**

(Bangsamoro). அவர்களுக்கு கை கொடுத்தது கூட்டுறவு இயக்கம். இரவில் போராடுவதும் பகலில் கூட்டுறவு மையங்கள் இயங்குவதும் நேரில் கண்ட அனுபவம். பெண்களின் வலுவான பங்களிப்பு, திட்டமிட்ட உள்ளூர் பொருளாதார மையங்களை சந்தையுடன் இணைத்து தங்களுக்குமான சந்தையாகவும், அதே பொழுது எல்லோருக்குமான, தவிர்க்க முடியாத விநியோக மையங்களாகவும் இயக்கியமை போராடும் வலுவுக்கு மேலும் சக்தியூட்டியது; பலமான பொருளாதார மையமாக வலுப் பெறுவதுக்கு அடித்தளம் இட்டது. போரின் பின், சமாதான காலப் பொருளாதார மீள் கட்டமைப்பில் மிகப் பெரிய கூட்டுறவுச் சம்மேளனங்கள் மலர்ந்தன. வேலை வாய்ப்புகள், புதிய சந்தைகள்



Image Source - www.nbcnews.com




**பிலிப்பைன்ஸின் மின்டனோ பிரதேசத்தில் பங்சமோரோ மக்கள் வாழும் இடங்கள்**

Image Source - www.researchgate.net

திறந்தன. போராடிய மக்கள் பொருளாதாரப் போராளிகளாக மாறினார்கள். சர்வதேசம் இறக்கப்பட்டது; எல்லாம் வலுவாக மாறின. கூட்டுறவு இயக்கங்கள் பெரும் காடாக மாறின. இதனால் பேரம் பேசும் சக்தி அதிகரித்தது. பங்சமோரோ தேசம் வேர்விட ஆரம்பித்தது.

கூட்டுறவு இயக்கம் அதன் கட்டமைப்புக்கள் ஆகியன 'எங்கள் அமைப்பு, எங்களுக்கானவை' என்பது கூட்டுறவு மையப்படுத்தும் பெரும் வாய்மொழி வாக்கியம் ஆகும். எங்கள் அமைப்பு, எங்களுக்கானவை என்பது உணர்த்தும் பொருள் என்ன? அது மக்கள் அமைப்புக்கள் என்பதே ஒரு பொதுவான விளக்கம். மிக முக்கியமான விடயம், கூட்டுறவு இயக்கத்தை புரிந்து கொள்வது; தரிசனம் செய்வது, கையாள்வது. எதையும் மிகக் கவனமாக விளங்காவிட்டால்; கையாளத் தெரியாவிட்டால் பெரும் சீரழிவே உண்டாகும்.

கூட்டுறவு இயக்கம் என்பது எமக்கு மிகவும் பழகிய கூட்டுறவுச் சங்கம் இல்லை. கூட்டுறவு ஒரு பெரிய வன இராச்சியம்; வலுவான சர்வதேசப் பரிமாணத்தை உள் வாங்கிய ஒரு பூதம்; ஒரு அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனம்; பல தளங்களில் பல நிலைகளில் வேர்விடும் ஒரு மக்கள் மையம். இலங்கையில், குறிப்பாக வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்தில் (கூட்டுறவு இயக்கம் பெரிதாக இல்லை) கூட்டுறவு இயக்கம் பற்றி பலர் அறிந்திருந்தும் அது மதிக்கப்படாமல் இயங்கும் கட்டமைப்பாகவே இருந்து வருகிறது. குறிப்பாக வடக்கில், சாதி உணர்வை தக்கவைப்பதற்கு, பொருளாதார விடயமாக கூட்டுறவு இயக்கத்தைக் காட்டி அதை மறைப்பது உண்மையான கூட்டுறவு இயக்கம் இல்லை; கூட்டுறவு இயக்கம் ஒரு சமூகப் பொருளாதார, கலாசார மற்றும் ஆத்மீக இயக்கம்.

கட்டுரை 2, கூட்டுறவின் அடையாளம், அதன் அரசியல் பற்றி விரிவாக ஆராயும். அத்துடன், ஏன் கூட்டுறவு அரசியல் கருவியாக திசை மாறி வலுவிழந்தது என்பது பற்றியும் விரிவாக ஆராயும்.


(தொடரும்)

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி என்பது அந்நாட்டின் நிலைபேறுகைக்கு ஸ்திரத்தினை வழங்குகின்றது. இலங்கையில் உள்ள வளசெழிப்பு நாட்டின் அபிவிருத்திக்கு பெரும்பங்காற்றக்கூடியது. இலங்கையின் கால்பங்குக்கும் அதிகமான நிலப்பரப்பைக் வடக்கு – கிழக்கு மாகாணங்கள் கொண்டுள்ளன. இந்தவகையில் இலங்கையில் வடக்கு – கிழக்கு மாகாணங்களின் நிலப்பரப்பு, அதில் அடையாளப்படுத்தக்கூடிய வளங்கள் அல்லது இதுவரை கண்டறியப்பட்ட வளங்கள் தொடர்பாக தெளிவுடுத்துவதாகவும், அந்த வளங்களின் இப்போதைய பயன்பாடற்ற முறைமையை மாற்றியமைத்து உச்சப்பயனைப் பெறுதல், அதனூடே வடக்கு – கிழக்கின் விவசாயத்துறை, உட்கட்டமைப்பு, கடல்சார் பொருளாதாரம் என்பவற்றை அபிவிருத்தி செய்வது பற்றியும் 'உள்ளூர் பொருளாதார அபிவிருத்தியும்' என்ற இந்த கட்டுரைத்தொடர் விளக்குகின்றது.




**அமரசிங்கம் கேதீஸ்வரன்**

பொருளியல் துறையில் சிரேஷ்ட வளவாளராகவும், பயிற்றுனராகவும் செயற்பட்டு வருகின்ற அமரசிங்கம் கேதீஸ்வரன் அவர்கள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் பிரதி திட்டமிடல் பணிப்பாளராவார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் இளமாணி மற்றும் முதுமாணிப்பட்டம் பெற்ற இவர் 2012ஆம் ஆண்டு 'திட்டமிடல் மூல தத்துவங்கள்' என்ற நூலினை வெளியிட்டுள்ளார்.

மட்டக்களப்பு வாவி

# வடக்கு கிழக்கு மாகாணத்தின் நன்னீர் மீன்பிடி அபிவிருத்தி : வளங்களும் வாய்ப்புகளும்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் வாழ்வாதாரத் தேவையின் ஒரு பகுதியை நிறைவு செய்துவரும் நன்னீர் மீன்பிடித் தொழில்துறையானது நன்னீர் மீன்பிடி நிலைகளை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தியடைந்து வருகிறது. வடக்கு மாகாணத்தில் காணப்படும் நன்னீர் மூலங்களாகவுள்ள பாரிய மற்றும் நடுத்தர குளங்களும் 1,740 சிறிய குளங்களும் 1,605 சிறு குட்டைகளும் 60 அணைக்கட்டுக்களும் நன்னீர் மீன்பிடியை பெரிய, சிறிய அளவுகளில் மேற்கொள்ளக் கூடியதாகக் காணப்படுகின்றன. குறிப்பாக வடமாகாணத்தில் 15,455 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டு காணப்படும் பாரிய மற்றும் நடுத்தர நீர்மூலங்களான குளங்கள் வருடம் முழுவதிலும் இந்த வாழ்வாதாரத்தில் தங்கியுள்ளோருக்கு துணை வளமாக அமைந்திருக்கிறது. குறிப்பாக

கிளிநொச்சியில் இரணைமடுக்குளம், கனகாம்பிகைக்குளம், கல்மடுக்குளம், பிரமந்தனாறுக்குளம், அக்கராயன்குளம், வன்னிக்குளம், கரியாலை நாகபடுவான் குளம், குளமுறுட்டிக்குளம், ஆகிய 9 குளங்களையும் அடிப்படையாகக் கொண்டு 173,812 ஏக்கரடி நீரை கொள்ளளவாக கொண்ட 4,957 சதுர கிலோமீற்றர் நீர்ப்பரப்பானது காணப்படுகின்றது. இதில் தொடர்ச்சியாக வருடம் முழுவதிலும் நீர் காணப்படும் வாய்ப்புக் காணப்படுவதால் இதனை நம்பி வருடம் முழுவதும் நன்னீர் மீன்பிடியாளர்கள் தம் வருமானத்தை ஈட்டி வருகின்றனர். அதே போல் மன்னார் மாவட்டத்தில் அடம்பன் குளம், சாராய்குளம், மருதமடுக்குளம், பெரிய மடுக்குளம், வெளிமுறித்த மடுக்குளம், பெரிய பண்டி விரிச்சான் குளம், தட்சணாமருதமடுக்குளம், முள்ளிக்குளம் ஆகிய குளங்களின் 17,055 ஏக்கரடி நீரைக் கொள்ளளவாகக் கொண்ட 2,946 சதுர கீலோமீற்றர் நீர்ப்பரப்பு நன்னீர் மீன்வளர்ப்பிற்கான நீர் நிலைகளாக காணப்படுகின்றன. இதே போல் முல்லைத்தீவு மாவட்டத்தில் அம்பலப்பெருமாள்குளம், ஐயன்குளம், கல்வியான்குளம், கோட்டைக்கட்டிய குளம், மல்லாவிக்குளம், மருதங்குளம், முறுகண்டிக்குளம், தென்னியங்குளம், தேராங்கண்டல்குளம், கொல்விளான் குளம், பனங்காமம் குளம், வவுனிக்குளம், கணுக்கேணிக்குளம், மதவளசிங்கம் குளம், நித்திகைக்குளம், தண்ணிமுறிப்புக்குளம், முத்தையன்கட்டுக்குளம், உடையார்கட்டுக்குளம், விஸ்வமடுக்குளம், மருதமடுக்குளம், ஆகிய 17 குளங்களின் 206,121 ஏக்கரடி நீரைக் கொள்ளளவாகக் கொண்ட 4,967 சதுர கிலோமீற்றர் நீர்ப்பரப்பானது நன்னீர் மீன்பிடிக்கான வளமாக காணப்படுகின்றது. இதே போல் வவுனியா மாவட்டத்தில் அவியா மருதமடுக்குளம், சேமமடுக்குளம், கல்மடுக்குளம், வேலண்குளம், கொம்பு



மட்டக்களப்பு வாவியில் பிடிக்கப்பட்ட மீன்கள்

Image Source - tamilwin.com

வைத்த குளம், மல்லிகைக்குளம், மகாறம்பைக்குளம், முனையா மடுக்குளம், நாம்பன் குளம், பம்மைப்குளம், வவுனியாக்குளம், கனகராயன் குளம், இறப்போதன்னக் குளம், மடுக்கந்தக்குளம், மகா கச்சக் கொடிக்குளம், மாமடுவக்குளம், பெரிய தம்பனைக்குளம் ஆகிய 17 குளங்களையுள்ளடக்கிய 2,585 சதுர கிலோமீற்றர் நீர்ப்பரப்பை கொண்ட 19,021 ஏக்கரடி நீர் காணப்படுகின்றது.

இதே போல கிழக்கு மாகாணத்தின் 22 சதவீதமான நீர்ப்பரப்பு நன்னீர் மீன்பிடிக்கு உகந்ததாக காணப்படுகின்றது. கிழக்கு மாகாணத்தில் 635 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட 63,500 ஏக்கரடி நீர் காணப்படுவதுடன் 20 பாரிய நீர்ப்பாசனக் குளங்களும் 45 நடுத்தரக்குளங்களும் 1,613 சிறிய நீர்ப்பாசனக்குளங்களும் கிழக்கில் காணப்படுகின்றன.

இந்த வகையில் நன்னீர் மீன்பிடித்தொழிலில் வருடம் முழுவதும் ஈடுபடக்கூடிய வாய்ப்பு உள்ளது. குறிப்பாக திருகோணமலையில் மகாதிவுல்வேவா, மொறவேவா, கந்தளாய், வெண்டரசன்குளம், அல்லைக்குளம், யான் ஓயா, வன்எல, ஜனறஞ்சன் வேவா, ஆகிய பாரிய குளங்களும் மட்டக்களப்பில் புலுகுனாவக்குளம், கடுகாமுனை குளம், மியாங்கல்குளம், உன்னிச்சை, நவக்கிரிவாகனேரி, றுகம் ஆகிய பாரிய குளங்களும் அம்பாறை மாவட்டத்தில் சங்கமாங்குளம், சடையான்தலங்குளம், தோனிக்கல் அணைக்கட்டு திட்டம், கஞ்சிக் குடிச்சாறுக்குளம், சேனனாயக்க சமுத்திரம், பல்லன் ஓயா, பன்னலகம குளம், அம்பலன்



இரணைமடுக் குளம்

Image Source - en.wikipedia.org

ஓயா, றம்புக்கன் ஓயா, ஏக்கல் ஓயா, நாமல் ஓயா, றொட்டைக்குளம் ஆகிய பாரிய குளங்களும் காணப்படுகிறது.

நடுத்தரக் குளங்களின் வகைப்பாட்டின் கீழ் திருகோணமலையில் ஆண்டான்குளம், கிலிமிட்டியாவகுளம், பரவிப்பாஞ்சான் குளம், குரங்குப்பாஞ்சான் குளம், உல்லைக்குளம், இலக்கந்தைக்குளம், பிற்றாவக்குளம், மதவாச்சியாக்குளம், புலிகண்டிக்குளம், கிவுலக்கடைக்குளம், பெரியகுளம், பெரிய எறும்புருக்கிக்குளம், மடவாக்குளம், ஏதண்டமுறிப்புக்குளம், நீலாப்பணிக்கன்குளம், அட்டச்சக்கல்குளம், மருதங்கேணிக்குளம், மகிழூர் பெரியகுளம், போறதீவு பெரிய குளம், ஆனைக்கட்டுக்குளம், சீவகப்பற்றுக்குளம், பளுகாமம் பெரியகுளம், கிறிமிச்சையோடைக்குளம், தரவைக்குளம், மகிழடித்தீவுக்குளம், தும்பங்கேணி, புனானை, வடமுனை, கித்துள், வெலிகக்கண்டிய ஆகிய குளங்களும், அம்பாறை மாவட்டத்தில் ரெம்பிற்றிய குளம், லகுகலகுளம், பாணமகுளம், ரடில்லா குளம், றூவுஸ்குளம், போனபொலகுளம், வம்மியடிகுளம், நாவலகுளம், செம்மணிக்குளம், தலப்பிட்டி ஓயா அணைக்கட்டு ஆகிய குளங்களும் காணப்படுகின்றன.

இந்த வகையில் கிழக்கு மாகாணத்தில் 28 பாரிய குளங்களின் கீழ் 1,367,514 ஏக்கரடி நீரும் ஆண்டு முழுவதும் நன்னீர் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தக்கூடியதாக காணப்படுவதுடன் 1,613 சிறிய நீர்ப்பாசன நீர் மூலங்களின் கீழ் பருவகாலமாகவும் நன்னீர் மீன்பிடி மேற்கொள்ளக்கூடியதாக உள்ளது. இவ் வளங்களை அடிப்படையாக கொண்டு 9,768 குடும்பங்களும் ஆறுகள், ஓடைகள் சார்ந்து 2,622 குடும்பங்களும் நேரடியாக நன்னீர் மீன்பிடித்துறையில் வாழ்வாதாரம் பெற்று வருகின்றன. இவர்களது மீன்பிடிக்கென 2,430 சிறிய வள்ளங்கள் இம்மாகாணத்தில் பயன்படுத்தப்படுகின்றன. 20,120 மெற்றிக் தொன் மீனை வருடாந்தம் மொத்தத் தேவைக்கு இம்மாகாணம் கொடுத்து வருகிறது. இது இலங்கையின் மொத்த நன்னீர் மீன் உற்பத்தியில் 22.2 சதவீதமாகும். ஆனாலும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இரண்டிலும் நன்னீர் மீன்பிடி துறைக்கு ஏதுவான வருடம் முழுவதும் நீரைப் பெறக்கூடிய பாரிய மற்றும் நடுத்தரக் குளங்கள் காணப்பட்ட போதும் இத்தொழில் துறையிலிருந்து உச்சப்பயன்

பெறப்படவில்லை என்ற குறைபாடும் காணப்பட்டு வருகிறது. குறிப்பாக நன்னீர் மீன்பிடி தொழில்துறை தொடர்பில் எதிர்கொள்ளப்படும் பிரதான பிரச்சினைகளை பகுத்தாய்வு செய்வது இத்தொழில் விருத்தி தொடர்பில் அவசியமானதாகும்.

### வடக்கு, கிழக்கு மாகாணத்தில் நன்னீர் மீன்பிடியிலுள்ள சவால்கள்

வடக்கிலும் கிழக்கிலும் நன்னீர் மீன்பிடித் தொழில்துறையில் ஈடுபடும் மீன்பிடியாளர்கள் மீன்பிடி தொடர்பில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்:

1. மீன்பிடிக் கலங்களை பெற்றுக்கொள்ள முடியாமை.
2. மீன்பிடி வலைகளை வருடாந்தம் புதிப்பித்துக் கொள்ள முடியாமை.
3. குளங்களில் அதிகரித்து வரும் முதலைகளால் ஏற்படும் தொழில் நட்டங்கள்.
4. மீன் குஞ்சுகளையும் இறால் குஞ்சுகளையும் சேமிப்பதிலுள்ள சவால்கள்
5. சட்ட ரீதியான மீன்பிடி முறைகளுக்கு அப்பால் செயற்படும் தொழிலாளர்கள்.
6. அமைப்பு ரீதியாக ஏற்படும் நிர்வாக முரண்பாடுகளும் அவற்றை வழிப்படுத்தலில் காணப்படும் இடைவெளிகளும்
7. நன்னீர் மீன்பிடிக் கலங்களும் நன்னீர் மீன்பிடியும்

சிறிய நீர்ப்பாசன குளங்களிலும் பாரிய நீர்ப்பாசன குளங்களிலும் மீன்பிடியில் ஈடுபடும் வறிய மீன்பிடியாளர்கள் தமது வாழ்வாதாரத்தை முன்கொண்டு செல்வதற்காக பாதுகாப்பற்ற தெப்பங்கள், மிதவைகள், ரயர்கள் போன்றவற்றை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடும் போது அதிகளவில் முதலைகளினால் ஆபத்துகள் உள்ளாவதுடன் மிகக் குறைந்த தூரத்தில் மட்டும் தொழில் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் காரணமாக மிகக் குறைந்த வருமானத்தையே பெற்றுக் கொள்கின்றனர். இந்த வகையில் சிறிய 'கனோய்' வகை படகுகளையாவது அவர்கள் பயன்படுத்த வேண்டிய அவசியம் காணப்படுகிறது. கிழக்கு மாகாணத்தில் 2,430 சிறிய படகுகளும் வடமாகாணத்தில் 2,420 சிறிய படகுகளும் பாவனையிலுள்ளன. கடல் தொழில்களுக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தின் அளவுக்கு நன்னீர் மீன்பிடிப் படகுகளை வழங்குவதில் நிறுவனங்களோ அரசோ அதீத அக்கறை காட்டுவதில்லை என்பதால் போதிய வளங்கள் உள்ள இவ்விரு மாகாணங்களிலும் எதிர்பார்க்கப்படும் விளைவைப் பெறுவதில் வறிய மீனவர்கள் நெருக்கடியை எதிர் கொள்கின்றனர். சிறிய படகுகளை பெற்றுக் கொண்ட மீனவர்களும் கூட படகுகள் காணாமல் போதல், பொருத்தமான இறங்குதுறை காணப்படாமை போன்ற காரணங்களால் அதனை பயன்படுத்தாது உள்ளனர். அதனைவிட நிதி வழங்கும் தொண்டு நிறுவனங்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்களை ஒன்றினைத்து படகுகளை வழங்குவதால் உடமை பாராட்டுதல், பாராமரிப்பு செய்தல் போன்றனவற்றில் உள்ள பிரச்சினைகளால் அவை கைவிடப்பட்டுகின்றன.

### மீன்பிடி வலைகளும் அவற்றை இற்றைப்படுத்துதலும்

நன்னீர் மீன்பிடிக்கென பாவிக்கப்படும் வலைகள் முதலைகளின் தாக்கம், காட்டுத் தடிகளில் சிக்குதல், தவறான வலையிடல் முறை போன்ற காரணங்களால் ஆறு மாத காலத்தினுள் அவற்றை பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுவதனால் வருடத்தில் இரு தடவை அவற்றை மாற்ற வேண்டிய நிலை ஏற்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் இந்த முதலீட்டை இடுவதற்கு சாதாரண மீனவர்களுக்கு, சேமிக்கப்பட்ட நிதி எதுவும் கையிருப்பில் இருப்பதில்லை என்பதனால் வலைகளை இற்றைப்படுத்தும் தேவையை அவர்கள் உரிய காலப்பகுதியில் நிறைவேற்றுவதில்லை. அத்துடன் ஒரு தடவை வலைகள் கிடைத்து அது பயன்படும் மட்டும் தொழிலில் ஈடுபட்டு பின்னர் ஒதுங்கிக் கொள்ளும் போக்கே அதிகளவில் மீனவர்களிடத்தில் காணப்படுவதால் தொடர்ச்சியான வருவாய் ஒன்றை உறுதி செய்வதற்கு முடியாதுள்ளது. மேலும், சேமிப்பு பழக்கமற்ற



வவுனியாக் குளத்தில் மீன் குஞ்சுகள் விடப்படுதல்

Image Source - www.vavuniyanet.com

மீனவர்கள் பெருந்தொகை முதலீடு ஒன்றை வலைகளுக்காகச் செய்ய முடியாதுமுள்ளனர். உண்மையில் மீன்பிடிக்கப்படும் காலத்திலேயே வருவாயில் ஒரு பகுதி வலைகளின் முதலீட்டுக்காக ஒதுக்கப்படவில்லையாயின் இந்த பிரச்சினைக்கு நடைமுறைக்கு சாத்தியமான தீர்வை எட்ட முடியாது என்பதால், விற்பனை வருமானத்தில் இந்த ஒதுக்கீட்டை பிடித்து வைக்கும் முறையினை நிறுவன அல்லது சங்க மட்டத்தில் மேற்கொள்ள வேண்டும்.

## அதிகரித்து வரும் முதலைகள்

குளங்களை மையப்படுத்தி ஆயிரக்கணக்கில் நிரம்பல் செய்யப்படும் மீன் குஞ்சுகளும் இறால் குஞ்சுகளும் வகை தொகையின்றி பெருகி வரும் முதலைகளினால் உரிய வளர்ச்சியை எட்ட முதலே இல்லாமல் ஆக்கப்படுவதுடன் வலைகளில் சிக்கியுள்ள சந்தர்ப்பத்திலும் முதலைகள் அவற்றை உண்பதனால் நன்னீர் மீன்பிடிக்கு முதலைகள் பாரிய சவாலாகவே காணப்படுகின்றன. விவசாயிகளின் பயிர்ச் செய்கையில் குரங்கு பெருக்கம் எவ்வாறு சேதங்களை விளைவிக்கிறதோ அதே அளவில் நன்னீர் மீன்பிடியில் முதலைகளின் தாக்கம் காணப்படுகிறது. மரங்களில் பெருவாரியாக தங்கியிருக்கும் குரங்குகள் மலைப்பாம்புகளால் உணவாக்கப்பட்டதால் அவற்றின் பெருக்கம் சமனிலை உடையதாகவே இருந்தது. நாம் மலைப்பாம்பு உட்பட அனைத்து வகைப் பாம்புகளையும் அழிப்பதில் காட்டிய தீவிரம் குரங்குப் பெருக்கத்துக்கு காரணமாகியுள்ளது. இதே போலவே முதலைகளும் வகை தொகையின்றி பெருகி வருகின்றன. குளங்களுக்குச் செல்லும் ஆடு, மாடுகள் அவற்றுக்கு இரையாவதும் சில சந்தர்ப்பங்களில் மீனவர்களும் கூட பாதிக்கப்படுவதையும் நாம் காணமுடிகிறது. அண்மைய நாட்களில் தென்னிலங்கைப் பகுதியிலிருந்து முதலைகள் பிடிக்கப்பட்டு, வடக்குகிழக்கு மாகாணக் குளங்களில் விடப்படுவதால் முதலைகளின் பெருக்கம் நியாயமற்றுப் பெருகுகிறது எனவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

## மீன் மற்றும் இறால் குஞ்சுகளின் சேமிப்பு

பருவகாலக் குளங்களில் கட்டாயமாகவும், பாரிய நடுத்தரத் குளங்களில் தேவை பொறுத்தும் மீன் குஞ்சுகளை இருப்புச் செய்து அவற்றை உரிய வளர்ச்சியின் பின் அறுவடை செய்வதன் மூலம் நன்னீர் மீன்பிடித் தொழில் விருத்தியடைந்து வருகிறது. மீன் குஞ்சுகளை இருப்புச் செய்வது இப்போது அரச மற்றும் அரச சாரா நிதியில் மட்டும் இடம் பெற்று வருகிறது. இந்த நிதி மூலங்கள் கிடைக்காத சந்தர்ப்பத்தில் பருவகாலக் குளங்கள் பயனற்றுப் போகின்றன. பாரிய நடுத்தரக் குளங்களும் நீர்ப்பாசனக் குளங்களாக காணப்படுவதால் நீர் வெளியேறும் போதும் பெருமளவு மீன்கள் வெளியேறிச் செல்வதனால் மீன் இழப்பு அதிகமாகிறது.

இலங்கையில், மீன் குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் 13 இடங்களில் செயற்பட்டு வருகின்றன. கலாவேவ, தம்புள்ள, செவனபிட்டிய, இரனைமடு ஆகிய நான்கு பகுதிகளிலேயே வடக்கு கிழக்கிற்கான மீன்குஞ்சுகள் பெறப்பட்டு வருகின்றன.

உள்ளூரில் தனியார் முதலீட்டில் கிளிநொச்சியில் ஒருவரும், முல்லைத்தீவில் 03 பேரும் சிறிய அளவில் இவ் உற்பத்தியில் ஈடுபட்டு வருவதுடன் முத்தையன்கட்டு, மற்றும் புது முறிப்பில் சிறிய அளவிலான குஞ்சு பொரிக்கும் நிலையங்களும் செயற்படத் தொடங்கியுள்ளன. கிராமிய மீன்பிடிச் சங்கங்கள் தமது சங்க நிதியில் இருப்பை மேற்கொள்ள, ஏலமிடுவதன் மூலம் வருமானத்தை திரட்டும் ஏற்பாடுகளைச் செய்திருந்த போதிலும், சங்கங்கள் செயற்படாமை - களவாக மீன்பிடித்தல் - பிரதேச ரீதியான வேறுபாடுகள் காரணமாக இது ஒழுங்காக செயற்படுத்தப்படுவதில்லை. இதனால் மீன் குஞ்சுகளை இருப்பிடுவதற்கான செயல்படு நிதி ஒன்றை குளங்களின் அடிப்படையில் உருவாக்கிக் கொள்ள முடியாதுள்ளது. மீன் மற்றும் இறால் உற்பத்தியில் இது பெரும் சவாலாகக் காணப்படுவதுடன், முறை சார்ந்த தொழில் துறையாக உருவாகுவதிலும் இது சிக்கலை ஏற்படுத்துகிறது. இதனைவிட மீன்களுக்கான உணவின் உள்ளீட்டு பொருட்களான சோயா, சோளம், என்பவற்றின் அதிகரிப்பு காரணமாக, அவற்றின் உணவு நுகர்வு (feed consumption) அதிக செலவுடையதாக மாறியுள்ளது. 1 கிலோ மீனை உற்பத்தி செய்ய 900 ரூபா தேவைப்படும் போது மீனின் விலை 500 ரூபாயாக காணப்படின் வளர்ப்புத் திட்டங்களை செயற்றிறன் உடையதாக கொண்டு செல்ல முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. அதனால் வளர்ப்பு திட்டங்களில் ஈடுபடும் நாட்டமும் குறைந்து வருகிறது.

### வளர்ப்பு திட்டங்களும் குடாக்கள் ஏரிகளின் பயன்பாடும்

மீனினங்களையும், அட்டை, கடல்பாசி போன்றவற்றையும் வளர்க்கும் பொறிமுறையின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் பல செயல் திறன் வாய்ந்த பகுதிகள் இயற்கையாக அமைந்துள்ளன. வட மாகாணத்தில் பூநகரி, இரனைதீவு பிரதேசம் ஆகியன அட்டை மற்றும் கடல்பாசி வளர்ப்புக்கேற்ற பொருத்தமான பிரதேசங்களாக காணப்படுகின்றன. பண்ணை அடிப்படையில் அட்டை வளர்ப்பு இப்போது இப்பிரதேசங்களில் அறிமகமாகி வருகிறது. இதேபோல மன்னார் பகுதியிலும் அட்டை வளர்ப்புக்கேற்ற பகுதிகள் பண்ணை முறையாக வளர்ச்சியடைந்து வருகிறது. பாலை மீன் வளர்ப்பிற்கான வாய்ப்புகள் குடமுறுட்டி மற்றும் மண்டல்கல் ஆறு பகுதிகளில் காணப்படினும், அது இன்னமும் முதலீட்டாளர்களின் கவனத்தை ஈர்க்கவில்லை.

**மீனினங்களையும், அட்டை, கடல்பாசி போன்றவற்றையும் வளர்க்கும் பொறிமுறையின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் பல செயல் திறன் வாய்ந்த பகுதிகள் இயற்கையாக அமைந்துள்ளன. வட மாகாணத்தில் பூநகரி, இரனைதீவு பிரதேசம் ஆகியன அட்டை மற்றும் கடல்பாசி வளர்ப்புக்கேற்ற பொருத்தமான பிரதேசங்களாக காணப்படுகின்றன. பண்ணை அடிப்படையில் அட்டை வளர்ப்பு இப்போது இப்பிரதேசங்களில் அறிமுகமாகி வருகிறது.**

இதே இயற்கை வளர்ப்புத்திட்டம் இடம்பெறும் சுண்டிக்குளம், ஆனையிறவு கடல் நீரேரிப் பகுதிகள் இயற்கையாக நன்னீரும் கடல்நீரும் கடலில் கலக்கும் பகுதிகளாகக் காணப்படுவதால் கால போகத்தில் கடலிலிருந்து இறால் இப்பகுதி நோக்கி வந்து பெருமளவு முட்டைகளை இடுகின்றன. பின்னர் அம் முட்டைகளை கடலுக்கு திரும்பி செல்லாது தடுப்பதன் மூலம் இப்பகுதி மீனவர்கள் நான்கு மாதங்களில் நிறைந்த

அறுவடையொன்றைப் பெற்றுக் கொள்கின்றனர். இதில் 2000 வரையான மீனவக் குடும்பங்கள் தொடர்ச்சியாக நன்மை பெற்று வருவகின்றன. ஆயினும் அதிகளவு இயற்கைச் செயற்பாட்டின் காரணமாக பெருமளவு பொரித்த இறால் குஞ்சுகள் கடலை நோக்கி மீளத் திரும்பிச் செல்வதால் இத் திட்டத்தில் சிறந்த அறுவடை கிடைப்பதில்லை. மேலும் இரணைமடுக் குளத்தின் நீர், பெரும் போகத்தில் கடலுக்குள் இப்பகுதியூடாகச் செல்வதை தடுக்கும் அல்லது சேமிக்கும் பொறிமுறை ஒன்றைச் செய்வதன் மூலம் இப்பிரதேசத்தில் ஆண்டு முழுவதும் இறால் வளர்ப்பை மேற்கொள்ளக் கூடிய சாத்தியங்களை உருவாக்கலாம். ஆறுமுகம் திட்டத்தின் கீழ் இதனை நன்னீராக்கி யாழ்ப்பாணத்துக்கான குடிநீர் வளமாக்குவதற்கான ஏற்பாடுகள் 1960 களில் முன்மொழியப்பட்டிருந்ததும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது. இதே போல கிழக்கு மாகாணத்திலும் 7790 ஹெக்டேயர் நிலப்பரப்பில் கடலும் நன்னீரும் கலந்த வளர்ப்புத் திட்டங்களுக்கு பொருத்தமான பிரதேசங்கள் காணப்படுகின்றன.

### சட்ட ரீதியற்ற தொழில் முறைகளும் நன்னீர் மீன்பிடியும்

நன்னீர் மின்பிடித் தொழில் துறையில் சட்ட ரீதியாக பாவிக்கக்கூடாத வலைகளையும் வெடிகளையும் பாவித்து மீன் பிடிக்கும் சில மீனவர்களால் மீன்பிடிச் சங்கங்கள் பாரிய சவால்களை எதிர் கொண்டுள்ளன. பிடிக்கும் மீன்கள் நன்கு வளர்ச்சியடைந்த நிலையில் இருந்தால் மீன்பிடி உற்பத்தி அதிகரிப்பதுடன் நுகர்வோருக்கு தரமான உணவும் கிடைக்கும். நன்னீர் மீன்களே வறிய மக்கள் இலகுவாக புரத நுகர்வை நிறைவு செய்யக்கூடிய மூலமாக அமைவதால் நன்கு வளர்ச்சியடைந்த மீன்களை அறுவடை செய்வது குறித்து கவனமெடுக்க வேண்டும். மாறாக தடை செய்யப்பட்ட வலைகளை பாவிக்கும் போது வளர்ச்சி குறைந்த மீனினங்கள் பெருமளவில் பிடிக்கப்படுவதுடன் சில சந்தர்ப்பங்களில், எவ்வித பாவனைக்கும் உட்படுத்த முடியாத மீன்களை நிலத்தில் கொட்டிவிடும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. தங்கூசி வலையென அழைக்கப்படும் இவ்வலைகள் நன்னீர் மீன்பிடியில் குறைந்த அளவில் பாவிக்கப்பட்டு வருவது நிம்மதி தரும் விடயம். நீர்வாழ் உயிரின வளர்ப்பு அதிகார சபை இதனைக் கட்டுப்படுத்தி வருகிறது. அதிகார சபை அலுவலர்கள் நன்னீர் மீன்பிடிக் குளங்கள் அனைத்திலும் தமது கண்காணிப்பைச் செய்வதுடன், நன்னீர் மீன்பிடிச் சங்கங்களை சட்டபூர்வமாக உருவாக்கி பதிவுகளை மேற்கொண்டு முகாமைத்துவம் செய்து வருவதால் கிராமிய மட்டத்தில் பல பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படுகின்றன. பாரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனக் குளங்கள் மத்திய மற்றும் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தால் முகாமை செய்யப்பட்டு வரும் அதேவேளை, சிறிய நீர்ப்பாசன நீர் மூலங்கள் அனைத்தும் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் செயல்படுகின்றன. இந்தத் திணைக்களம் தன்னிச்சையாக எடுக்கும் நீர் வழங்கல் சம்பந்தமான தீர்மானங்கள் சில முரண்பாடுகளை உண்டாக்கி வந்தாலும் ஆகக் குறைந்த மட்ட நீரினை குளங்களில் பேணுவதில் அவை ஒத்திசைவோடு தான் செயற்பட்டு வருகின்றன. குளங்களின் புனரமைப்புக்காக முழுமையாக நீரைத் திறந்து விடுதல், நீரைச் சேமிக்காது விடுதல் போன்ற சந்தர்ப்பங்களில் பருவகால தொழில் இழப்பும் நட்டமும் மீன்பிடியாளர்களுக்கு ஏற்படுகிறது. இக்காலப்பகுதியில் பாதிப்படையும் மீனவர்களுக்கு தொழில் இழப்பு நிவாரணங்கள் எதுவும் ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை.

### நன்னீர் மீன்பிடி உற்பத்தியின் பங்குபற்றல்

வடக்கு கிழக்கு மாகாணங்களின் நன்னீர் மீன்பிடி உற்பத்தி பற்றி ஆராயும் போது கிழக்கு மாகாணத்தில் 20,120 மெற்றிக்தொன் மீன்கள் வருடாந்தம் உற்பத்தி செய்யப்படுகிறது. இது நாட்டின் மொத்த நன்னீர் மீன் உற்பத்தியின் 22 சதவீதமாக அமைகிறது. வடக்கு மாகாணத்தில் 800 மெற்றிக்தொன் நன்னீர் மீன் உற்பத்தி வருடாந்தம் இடம்பெற்று வருகிறது. வடக்கு கிழக்கு மாகாணங்களின் உள்ளூர் நுகர்வாளர்களால் நுகரப்படும் நன்னீர் மீனின் அளவு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இதற்கான காரணம் இம் மாகாணங்களில்



**மட்டக்களப்பு வாவியில் பிடிக்கப்பட்ட மீன்களை வியாபாரிகள் விற்பனைக்கு கொண்டு செல்லுதல்**

Image Source - tamilwin.com

அதிகளவு கடல் மீன்கள் சந்தைக்கு வருவதும் கடல் சார்ந்த மீன்கள் விரைவாக நுகர்வாளருக்கு சென்று சேருவதுமாகும். இப்பகுதியில் வசிக்கும் பெருமளவான மக்களின் உணவுப்பழக்கமும் இதற்கு காரணமாகும். இதனால் வடக்கு மாகாணத்தில் பிடிக்கப்படும் அதிகளவான நன்னீர் மீன்கள் குளிரூட்டப்பட்ட வாகனங்களில் தென்னிலங்கைக்கு ஏற்றப்படுகின்றன. அங்கு ஏற்றப்படும் மீன்களுக்கான கொள்முதல் விலையும் குறைவாகவே காணப்படுகிறது. மீன்களைப் பாதுகாக்கும் குளிரூட்டிகள், ஐஸ் வசதிகள் வடக்கு, கிழக்கில் இல்லாமையினால் குளங்களிலிருந்து மீன்களை எடுத்துச் செல்வதும் சிரமமாகிறது.

உற்பத்திக்கு பங்களிப்புச் செய்யும் மாவட்டங்கள் எனப் பார்க்கும் போது வடமாகாணத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 536 மெற்றிக்தொன் நன்னீர் மீன்பிடி இடம் பெறுகிறது. அதனையடுத்து கிளிநொச்சி மாவட்டத்தில 179 மெற்றிக்தொன் மீன் வருடாந்தம் உற்பத்தி செய்யப்படுகின்றது. கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் 12,480 மெற்றிக்தொன்னும் திருகோணமலை மாவட்டத்தில் 4,850 மெற்றிக்தொன் உற்பத்தியும் கிடைத்து வருகிறது. இந்த நான்கு மாவட்டங்களுமே நன்னீர் மீன்பிடி தொடர்பில் அதிக வாய்ப்புள்ள மாவட்டங்களாக காணப்படுகின்றன.

இந்த வகையில் வடக்கு, கிழக்கு மாகாணத்தின் வாழ்வாதார வளங்களில் முக்கியமான துறையாக நன்னீர் மீன்பிடித்துறை செயற்பட்டு வருகின்றது. எனினும் இத் துறை சார்ந்து மெய்யான வளங்களின் உச்சப்பயன் அடையப்படவில்லை என்பதனால் புதிய முதலீட்டு வாய்ப்புகள் பற்றிக் கலந்துரையாடுபவர்கள் இத் துறை சார்ந்து பல முதலீடுகளை செய்யக்கூடிய வாய்ப்பையும் கவனத்திலெடுக்க வேண்டும். குறிப்பாக வளர்ப்புத் தொழில்நுட்பம் சார்ந்த மீன்பிடி முறைகளைக் கொண்டு அதிகளவிலான அந்நியச் செலாவணியை உழைக்கக் கூடிய அட்டை வளர்ப்பு, இறால் வளர்ப்பு, கடற்பாசி வளர்ப்பு போன்ற துறைகளை அபிவிருத்தி செய்து வளங்களை உச்ச பயன்பாட்டிற்கு கொண்டுவரலாம். அடையாளப்படுத்தப்பட்ட பிரதேச வளங்களைப் பயன்படுத்துவது உள்நாட்டு வருமானம், வேலைவாய்ப்பு ஆகியவற்றோடு நாட்டின் ஒட்டுமொத்த நலனிற்கும் உகந்ததாக அமையும் எனலாம்.

(தொடரும்)

கால்நடை வளர்ப்பு என்பது இலங்கையின் முக்கியமான ஒரு பொருளாதாரக் கூறு. மனிதனின் புராதன தொழில்களில் கால்நடை வளர்ப்பு மிகமுக்கியமானது. பால், முட்டை, இறைச்சி, எரு, வேலைவாய்ப்பு என பல வழிகளிலும் கால்நடை வளர்ப்பு மக்களுக்கு வருவாயை ஏற்படுத்தும் துறையாகும். அத்துடன் நுகர்வோரின் புரத மற்றும் முக்கியமான ஊட்டச் சத்துகளின் தேவையை பூர்த்தி செய்வதாகவும் கால்நடை வளர்ப்பு அமைகிறது. பொருளாதார நெருக்கடியால் இலங்கை தள்ளாடும் சூழ்நிலையில், கால்நடை வளர்ப்பினூடாக கிராமிய மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் போசணைமட்டத்தை உயர்த்துவதோடு, இதை மேம்படுத்துவதனூடாக இலங்கையின் பொருளாதாரத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது தொடர்பான வழிமுறைகளை அனுபவரீதியாகவும், ஆய்வியல் ரீதியாகவும் முன்வைப்பதாக 'இலங்கையின் கால்நடை வளர்ப்பு பொருளாதாரம்' என்ற இத்தொடர் அமைகிறது.




சிவபாத சுந்தரலிங்கம்
கிருபானந்தகுமரன்

கால்நடை மருத்துவரான சி. கிருபானந்தகுமரன் அவர்கள் பேராதனை பல்கலைக்கழகத்தில் தனது கால்நடை மருத்துவ பட்டப்படிப்பினை மேற்கொண்டார் (BVSc, MVS). தமிழக, இலங்கை ஊடகங்களில் கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கியல் நடத்தைகள் தொடர்பான தொடர்களை எழுதி வருகிறார்.


# கறவை மாடுகளின் இனப்பெருக்கச் சிக்கல்களும் பொருளாதாரத் தாக்கமும்



வகறவை மாடு வளர்ப்பில் இனப்பெருக்க முகாமைத்துவம் மிக முக்கியமானது. ஒரு மாடு சினைப்பட்டு கன்றை ஈனும் போதுதான் பால் கிடைக்கும். வளர்ப்பதற்கு கன்றுகள் கிடைக்கும். எனவே கறவை மாடு வளர்ப்பின் முக்கிய அடிப்படையே மாடுகள் சினைப்படுவது தான். இயற்கையில் மாடுகள் சினைப்படுதல் அவ்வளவு இலகுவானது கிடையாது. பல காரணிகளால் அச் செயற்பாடு தடைப்படுகின்றது; தாமதமடைகிறது.

முன்னைய காலத்தில் இயற்கையில் பசுமாடுகளும் காளைகளும் ஒருங்கே காணப்பட்டு ஒரு விகிதத்தில் கன்றுகள் பிறந்தன. அன்றைய மாடுகளில் அவ்வளவாக பாலுற்பத்தி கிடைத்திருக்கவில்லை. எம் சூழலில் வாழ்ந்த நாட்டு மாடுகள் பாலுற்பத்தி குறைந்தவை என்பதுடன் இரண்டு மூன்று வருடங்களுக்கு ஒருமுறைதான் கன்றையும் ஈன்றன. மனிதர்களுக்கு பால் தேவையும் அதிகமாக இருந்திராத அன்றைய சூழலில் மனித குடித்தொகையும் மிகக் குறைவாகவே இருந்தது. தற்போது அப்படியா? இன்றைய உலக மனித குடித்தொகை 8 பில்லியனையும் கடந்துள்ளது. மனித உணவுத் தேவையின் மிக முக்கிய பண்டமாகிய பாலின் தேவையும் அதிகரித்துள்ளது. சோயா, ஓட்ஸ் போன்ற மாற்றுப் பால் உற்பத்தி மூலங்களின் கண்டுபிடிப்பும் ஆடு, லாமா, ஒட்டகம் போன்ற ஏனைய விலங்குகளின் பாலுற்பத்தியும் சேர்ந்துள்ள நிலையில் இன்னும் கறவை மாடுகளின் பாலும் எருமைகளின் பாலுமே மனித பால் நுகர்வின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன.

அதிக பாலுற்பத்தி தரும் இயந்திரங்களாக நவீன பசுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மிகச்சிறந்த ஊட்டச்சத்து வழங்கலும் செயற்கைமுறைச் சினைப்படுத்தலுடன் கூடிய நவீன தேர்வு மூலமான கறவை மாட்டு இன உருவாக்கமும் இன்றைய பாலுற்பத்தியை அதிகரித்துள்ளன. எனினும் பாலுற்பத்தி அதிகரித்த அளவுக்கு ஏனைய காரணிகள் வளர்ச்சியடையவில்லை; குறிப்பாக இனப்பெருக்க ஆற்றல் வீழ்ச்சியடைந்துள்ளது. முன்னைய காலத்தில் தன் வாழ்நாளில் எட்டு, பத்து கன்றுகளை மாடுகள் ஈன்றிருந்தன. எனினும் பாலுற்பத்தி இயந்திரங்களான நவீன பசுக்கள் மூன்று, நான்கு கன்றுகளுக்கு மேல் ஈனவே முடியாத நிலை தோன்றியுள்ளது. அதன் பிறகு அவை சினைப்பட சிரமப்படுகின்றன. சினை அறிகுறிகளை காட்டாமல் இருக்கின்றன. ஆரம்பநிலை கருச்சிதைவு ஏற்படுகிறது. கன்றைத் தாங்க முடியாத பலவீனமான கருப்பை உருவாகிறது. பல உற்பத்தி நோய்கள் தோன்றுகின்றன.

நவீன கால்நடை வளர்ப்பில் கொடிகட்டிப் பறக்கும் பல மேலைநாடுகளில் மூன்று கன்று ஈன்ற மாடுகள் இறைச்சிக்கு வழங்கப்படுகின்றன (மூன்று கன்றுகளுக்கு மேல் மாடுகளில் இனப்பெருக்க ஆற்றல் குறைவதோடு பால் காய்ச்சல், கீட்டோசிஸ் போன்ற பல உற்பத்தி நோய்களும் தோன்றுவதாக பல ஆய்வுகள் கூறுகின்றன). மேலைநாட்டுப் பண்ணைகள் உற்பத்தி வருமானம் மற்றும் செலவு போன்றவற்றை மாத்திரமே கருத்திற் கொள்கின்றனர். அவர்களுக்கு மாடு வளர்ப்பு ஒரு வருமானம் தரும் தொழில். மாடு ஒரு இயந்திரம். பயன் குறையத் தொடங்கினால் தூக்கி எறிந்துவிட்டு அடுத்த வலுவுடைய இயந்திரத்தைத் தேடுகின்றனர். இலங்கை, இந்தியாவில் அப்படி இலகுவில் செய்துவிட முடியாது. சமயமும் கலாசாரமும் மாடுகளுடன் பின்னிப் பிணைந்தவை. மக்களும் அவற்றுக்கு பழக்கப்பட்டுள்ளனர். வளர்ப்பு பசுக்களை இலகுவில் கொல்ல முடியாது. விபத்தில் சிக்கி நடக்கவே சிரமப்படும் மாடுகளை கருணைக் கொலை செய்யவே மறுக்கும் நிலையை பல இடங்களில் சந்தித்திருக்கிறேன். இலங்கையின் **1958** ஆம் ஆண்டின் விலங்குச் சட்டத்தின் (*Animal act*) படி **12** வயதுக்கு உட்பட்ட பெண் விலங்கை கால்நடை வைத்தியரின் பொருத்தமான பரிந்துரை இல்லாமல் கொல்ல முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.



Image Source - www.avantmaritime.com

இந்த நிலையில் கறவை மாடுகளுக்கு ஏற்படும் சினைப்படுத்தலில் உள்ள சிக்கல்களை தீர்த்துக்கொண்டு அதனை பாலுற்பத்தியுடன் சமாந்தரமாக கொண்டு செல்லுதல் அவசியமாகிறது. இலங்கையின் கால்நடைகளுக்கு அவை வாழும் பகுதிகளின் அடிப்படையில் இனப்பெருக்க கொள்கை (*Breeding policy*) தயாரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு காலநிலை வலயத்துக்கும் (*Agro climatic zone*) பொருத்தமான கால்நடைகள் தொடர்பாக இதில் தெளிவாக விளக்கம் தரப்பட்டுள்ளது. இந்தக் கொள்கைக்கு பொருத்தமற்ற வகையில் கறவை மாடுகளை வளர்க்கும் போது



Image Source - iesc.org

அவை பல சிக்கல்களைச் சந்திக்கின்றன. அவற்றில் முக்கியமானவை இனப்பெருக்கம் சார்ந்தவை. உதாரணமாக உலர் வலயத்துக்கு பொருத்தமற்ற பிரீசியன் போன்ற தூய ஐரோப்பிய இனங்களை வளர்க்கத் தொடங்கும் போது அவை சினைப் பிடிப்பதில் சிரமங்களை எதிர்கொள்ளத் தொடங்கும். வெப்ப அயர்ச்சி காரணமாக கருத்தங்குவது சவாலுக்கு உட்படுகிறது. உலர் வலயத்தில் இந்த வகை அதியுற்பத்தியுடைய மாடுகளின் அடிப்படைச் சுகாதார மற்றும் இனப்பெருக்க விடயங்களை பேணுவது சிரமமாகும். மேலும் அண்மைக் காலத்தில் சராசரியாக குளிர் காலநிலைக்கு வகைப்படுத்தப்பட்ட இடங்களின் சராசரி வெப்பநிலை கூட கணிசமாக உயர்ந்துள்ளது. உலக வெப்பமயமாதல் இதற்கு காரணமாக அமைகிறது என்பது காலநிலையாளர்களின் கருத்தாகும். இங்கு வளர்க்கப்படும் ஐரோப்பிய வகை மாடுகளும் சினைப்படுதலுக்கு சிரமப்படுகின்றன.

பொதுவாக கறவை மாடுகளில் சிலவற்றுக்கு நோய்நிலைமைகள் ஏற்படும் போது கருப்பை பாதிக்கப்படுகிறது. சில நுண்ணுயிர்கள் கன்று ஈன்ற சில நாட்களில் கருப்பைக்குள் சென்று தொற்றை ஏற்படுத்துகின்றன. நஞ்சுக் கொடி விழாமை கருப்பைத் தொற்றை ஏற்படுத்தும் முக்கிய காரணியாகும். ஊட்டச் சத்துக் குறைவு, ஓமோன் பற்றாக்குறை, இரட்டைக் கன்று, கன்று ஈனச் சிரமப் படல், c - section சத்திரசிகிச்சை, கருச்சிதைவு போன்ற காரணிகளால் நஞ்சுக்கொடி விழாத நிலை தோன்றுகிறது. விழாமல் இருக்கும் நஞ்சுக்கொடி நுண்ணங்கித் தொற்றால் அழுகலடைந்து கருப்பையையும் பாதிக்கிறது. பல ஆய்வுக் கட்டுரைகளின் அடிப்படையில் நஞ்சுக்கொடி தங்கும் கால்நடைகளின் கருப்பை பாதிக்கப்பட்டு அடுத்தமுறை சினைப்படுதல் நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ பாதிக்கப்படுகிறது. ஆரம்பநிலையில் கருப்பைத் தொற்றைச் சரிப்படுத்தாவிட்டால் அது மாட்டை மலடாக்குவதோடு அதிக செலவையும் ஏற்படுத்துகிறது. இதற்கு நீண்ட கால மற்றும் கடுமையான சிகிச்சை தேவை.

மேலும், இலங்கையின் பல கால்நடைகள் சினைப்பருவ அறிகுறிகளை காட்டாத நிலையே காணப்படுகிறது. குறிப்பாக அவற்றின் சூலக சுழற்சி தடைப்படுகிறது. இதற்கு பல காரணங்கள் இருக்கின்றபோதும்

நுண் ஊட்டச்சத்துக் குறைவு மற்றும் வெப்ப அயர்ச்சியுமே பிரதான காரணிகளாகும். இலங்கையிலுள்ள பெரும்பாலான மாடுகளுக்கு பொருத்தமான உணவு கிடைப்பதில்லை. இதனை இன்னும் விரிவாக சொல்வதாயின் சரியான ஊட்டப் பெறுமானமுள்ள உணவு கிடைப்பதில்லை என்பதுடன் சரியான அளவிலும் கிடைப்பதில்லை. உலர் வலயத்தில் வாழும் மேய்ச்சலை நம்பிய மாடுகளுக்கு மேய்ச்சல் நிலம் வருடா வருடம் குறைவடைகிறது. திட்டமிடப்படாத விவசாய மற்றும் நீர்ப்பாசன கொள்கைகள் இதற்கு பிரதான காரணிகளாகும். நெல் உற்பத்தியை மாத்திரம் அடிப்படையாக கொண்டு பல நீர்ப்பாசன மற்றும் விவசாய வேலைத்திட்டங்கள் செய்யப்படும் போது அங்கு இயற்கையாக மேய்ந்த மாடுகளுக்கு மேய்ச்சல் தடைப்படுகிறது. தினமும் பல இடங்களில் மேய்ப்பதற்காக பல நூறு கிலோமீட்டர் பயணிக்க வேண்டியுள்ளது.

இதனால் மாடுகள் மெலிவதோடு மிகக் கடுமையான அழுத்தத்துக்கும் உள்ளாகின்றன. அத்துடன் வாழ்வதற்கான மிகக் குறைந்த ஊட்டமே கிடைக்கிறது. இனப்பெருக்கத்துக்கு தேவையான நுண் ஊட்டங்களை நினைத்தும் பார்க்க முடியாது. ஊட்டச்சத்துக் குறைவால் மிக முக்கியமான இனப்பெருக்கம் சார்ந்த உடற் திரவங்களின் சுரப்பு பாதிக்கப்படுகிறது. இதனால் இனப்பெருக்கம் சார்ந்த பல பிரச்சனைகள் தோன்றுகின்றன. இலங்கையில் உள்ள மாடுகளில் அதிகளவானவை இனப்பெருக்க ஆற்றல் தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ பாதிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளன. முறையான இனப்பெருக்க சுழற்சியில் உள்ளவை மிக மிகக் குறைவானவையே. இவற்றை உற்பத்தியற்ற விலங்குகளாகவே கருதமுடியும். இந்த வகை விலங்குகள் பாலையும் கன்றுகளையும் தராத அதேவேளை உணவுக்காக உற்பத்தி விலங்குகளுடன் போட்டி போடுகின்றன. அண்மைக் காலத்தில் மேய்ச்சல் தொடர்பான பிரச்சினைகளால் பல பண்ணையாளர்கள் தம் மாடுகளை இறைச்சிக்கு விற்கும் நிலை அதிகரித்துள்ளது.

இலங்கையில் வெப்ப அயர்ச்சி கால்நடைகளின் இனப்பெருக்க ஆற்றலை கடுமையாக பாதிக்கும் ஒரு காரணியாகும். வெப்ப அயர்ச்சிக்கு உட்படும் கால்நடைகளின் உடல் தொழிற்பாடுகள் கடுமையாக பாதிக்கப்படுகின்றன. குறிப்பாக இனப்பெருக்கத்துக்கு தேவையான ஓமோன்களின் செயற்பாடு பாதிக்கப்படுகின்றது. இதனால் சினை அறிகுறிகள் உருவாகாது; கருத்தங்க முடியாது; கருச்சிதைவு தோன்றுகிறது. (பல இடங்களில் ஆரம்ப நிலைக் கருச்சிதைவை பண்ணையாளர்கள் கண்டுபிடிக்காது விடுகின்றனர். கடைசிவரை மாடுகள் சினைப்பட்டதாகவே கருதி காத்திருப்பார்கள். சினைப்பட்ட மாடுகளும் சினைப்பருவ வேட்கை அறிகுறிகளை காட்டாது என்பதால் இந்தக் குழப்பநிலை உருவாகிறது. கால்நடை வைத்தியரால் சினைப் பரிசோதனை செய்யாத மாடுகள் கடைசிவரை இப்படியாக இருந்து கடும் பொருளாதார செலவைத் தருகின்றன. சினைப்படாத ஒவ்வொரு நாளும் பொருளாதார ரீதியான சுமையே.)

இதனைவிட அண்மைக் காலத்தில் அதிகளவில் குடற்புழுக்கள் மற்றும் ஏனைய ஒட்டுண்ணிகளின் தாக்கம் கால்நடைகளில் அவதானிக்கப்பட்டுள்ளது. இவை கால்நடைகளின் உணவு மாற்று திறன், வளர்ச்சி வீதம், ஏனைய நோய்களின் தொற்று ஆகியவற்றில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இந்த விடயங்கள் ஒன்றாகச் சேர்ந்து இனப்பெருக்க திறனை கடுமையாகப் பாதிக்கின்றன. மேலும் அதிகரித்த கால்வாய் நோய், புருசலோசிஸ் போன்ற நோய்களும் மாடுகளின் இனப்பெருக்க ஆற்றலை கடுமையாக பாதிக்கின்றன.

மேற்படி காரணங்களுக்கு மேலதிகமாக பல முகாமைத்துவ காரணிகளும் கறவை மாடுகளின் இனப்பெருக்க ஆற்றலைக் கடுமையாகப் பாதிக்கின்றன. இவற்றின் கூட்டு விளைவுகள் கறவை மாடுகள் சினைப்படுவதை பாதிக்கின்றன. அடுத்த கட்டுரைகளில் இந்த தலைப்பில் இன்னும் பல விடயங்களை ஆராயலாம்.

(தொடரும்)

திரை கடலோடி திரவியம் தேடியவர்கள் தமிழர்கள். உலக வணிகத்துறையில் மிகமுக்கியமான இடம் தமிழர்களுக்கு இருந்தது. ஆனால் அவையெல்லாம் இன்றோ பழங்கதைகளாகிவிட்டன. வணிகம் என்றாலே, தமக்கும் அதற்கும் சம்பந்தமில்லாதது போலவும், தம்மால் ஒருபோதும் வணிகத்துறையில் சாதிக்கவே முடியாதென்பது போலவும் நம்மவர்கள் ஒதுங்கி, ஒடுங்கிக் கொண்டுள்ளனர். உண்மையில் இத்தகைய முற்கற்பிதங்கள் தான் வணிகத்துறையில் அவர்கள் நுழைவதற்கும், சாதிப்பதற்கும் தடைக்கற்களாக இருக்கின்றன. அவற்றைக் களைந்து, சரியான படிமுறைகளுக்கூடாக, உலகின் எதிர்காலத்துக்குப் பொருத்தமான வணிகத்தில் காலடி எடுத்து வைத்தால், நம்மாலும் சாதிக்க முடியும். இவை வெறுமனே மேம்போக்கான வார்த்தைகள் அல்ல. ஈழத்தில், புலோலி என்ற கிராமத்தில் பிறந்து, அமெரிக்காவின் சிலிக்கன் பள்ளத்தாக்கில் வணிகத்துறையில் சாதித்த பின்னர் வெளிவருகின்ற கட்டுரையாளரது பட்டறிவின் மொழிதலே இது. 'ஈழத்திலிருந்து சிலிக்கன் வலி வரை' என்ற இக்கட்டுரைத்தொடர் உலகில் மிகப்பிரபலமான தொழில் நுட்பதாரிகளைப்பற்றியும் அவர்களது ஆரம்ப நிலை தொழில் நிறுவனங்களை (Startup Companies) அமைக்கும் போது எதிர் கொண்ட சில முக்கியமான நுணுக்கங்களை (Nuances) அடிப்படையாகக் கொண்டும், கட்டுரையாளரின் வணிகரீதியான சாதிப்பு அனுபவங்களைப் பகிர்வதாக அமைகிறது.




**கணபதிப்பிள்ளை ரூபன்**

கணபதிப்பிள்ளை கந்தரூபன் (ரூபன்) அவர்கள் யாழ் மாவட்டத்தின் புலோலியைச் சேர்ந்தவர். போர் காரணமாக ஆபிரிக்காவுக்கு இடம்பெயர்ந்து பின் அங்கிருந்து ஐக்கிய அமெரிக்காவிற்கு சென்று இளமாணி, முதுமாணிப் பட்டங்களை இயந்திரவியலில் பெற்றுள்ளார்.

கடந்த மூன்று தசாப்தங்களில் பல புதிய தொழில் நிறுவனங்களை உருவாக்கி பல கோடி டொலருக்கு விற்றுள்ளார். மேலும் இவர் "Accidental Entrepeneur by Ruban என்ற தலைப்பில் நூற்றிற்கு மேற்பட்ட கட்டுரைகளை தன்னுடைய அனுபவங்களை உள்ளடக்கி ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.

# தொடக்க நிறுவனங்களை உருவாக்குதல் :

# நிதி சேர்க்கும் உத்திகளும் அதன் இலக்குகளும்



**"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**
**பிறவும் தமபோல் செயின்"**

**திருக்குறள்**

***மு. வரதராசனார் விளக்கம் :***
*பிறர் பொருளையும் தம் பொருள் போல் போற்றிச் செய்தால், அதுவே வாணிகம் செய்வோர்க்கு உரிய நல்ல வணிக முறையாகும்.*

ஓர் ஆரம்ப நிறுவனத்தை அமைக்க முதலில் ஓர் சிந்தனை (Idea) தேவை. இண்டாவது அந்தச் சிந்தனையை உற்பத்தியாக உருவாக்கும் தகுதி கொண்ட குழுவினர் (People/Team) தேவை. பின்பு அந்த உற்பத்திக்கான சந்தை (Market) அவசியம். இவை மூன்றும் அடிப்படையானவை. இவற்றை ஆராய்ந்து அறிந்தபின் அவற்றை உருவாக்க பணம் வேண்டும். நான் ஈழத்தில் வாழ்ந்த காலத்தில், ஒரு தொழிலை ஆரம்பிக்கத் தேவையான பணத்தை, பணம் படைத்தவர்களிடம் அல்லது வங்கியில் கடனாகப் பெற வேண்டுமெனவே அறிந்திருந்தேன். அவ்வாறு கடன் எடுக்கும் போது, தங்களிடமிருக்கும் பொருட்கள், காணிகள், சொத்துக்களை அடகு வைத்து கடன் எடுப்பார்கள். அவர்கள் ஆரம்பிக்கும் தொழில் நட்டமானால் அவர்கள் தங்களது சொத்துக்களை இழக்க வேண்டியிருக்கும். இன்னொரு முறையும் இருந்தது; நிலக்காணி இருப்பவர்கள் தங்களது நிலத்தை விவசாயம் செய்பவர்களுக்கு குத்தகைக்கு

கொடுப்பார்கள். குத்தகைக்கு எடுப்பவர்கள், விவசாயம் அல்லது தொழிற்சாலை செய்து வரும் வருமானத்தில் ஒரு பகுதியை நில உரிமையாளருக்கு கொடுப்பார்கள். அதன் மூலம் இரு பகுதியினரும் தொழிலால் வரும் ஆபத்துகளை பகிர்ந்து கொள்வார்கள்.

ஓர் ஆரம்ப நிறுவனத்தை அமைக்க முதலில் ஓர் சிந்தனை (Idea) தேவை. இண்டாவது அந்தச் சிந்தனையை உற்பத்தியாக உருவாக்கும் தகுதி கொண்ட குழுவினர் (People/Team) தேவை. பின்பு அந்த உற்பத்திக்கான சந்தை (Market) அவசியம். இவை மூன்றும் அடிப்படையானவை.

நான் ஐக்கிய அமெரிக்காவில் படித்து முடித்த பின் ஓர் பெரிய நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தேன். அப்போது எனக்கு சொந்த நிறுவனம் அமைக்கும் யோசனை இருக்கவில்லை. ஈழத்திலிருந்து வந்ததால் என்னிடம் பணமும் இருக்கவில்லை; நிதியைத் திரட்டும் வழியும் தொடர்புகளும் இருக்கவில்லை. ஆனால் சிலிக்கன் பள்ளத்தாக்கிற்கு அருகில் இருந்ததால், அமெரிக்காவில் முதலாளித்துவத்தாலும் (*Capitalism*) கடின உழைப்பாலும் கோடீஸ்வரரானவர்களின் வரலாற்றை அறியக்கூடியதாக இருந்தது. அதில் பலர் முதல் தலைமுறை கோடீஸ்வரர்கள். கூகிள் தொடக்கம் ரெஸ்லா வரையும் இதே கதைதான். கூகிளின் தற்போதைய தலைவர் சுந்தர் பிச்சை (இந்தியத் தமிழர்) இதற்குச் சிறந்த உதாரணம்.



Image Source - www.linkedin.com

எனது முதலாவது நிறுவனத்தை தொடங்குவதற்கான சிந்தனை, அதற்கான சந்தை வாய்ப்புகள் பற்றிய அறிவு என்பன வேலை அனுபவங்கள் மூலம் எனக்கு கிடைத்திருந்தன. ஆனால் எனக்கு, சம்பளம் தரும் வேலையை விட்டுவிட்டு ஆரம்ப நிறுவனத்தைத் தொடங்குவது ஆபத்தாகத் தெரிந்தது. அதற்கு முதலிட எம்மிடம் பணமும் இருக்கவில்லை. அப்போது தான் '*Venture capitalists*' எனும் பணம் உள்ளவர்களிடம் நிதி திரட்ட முடியும் என்ற விபரம் எனக்குத் தெரியவந்தது. அது இப்போது பலருக்கும் விளக்கமாக தெரிந்திருந்தாலும் 1990 களில் எங்களுக்கு புதிய விடயமாக இருந்தது. இந்தக் கட்டுரை, ஓர் நிறுவனத்தின் ஆரம்பத்திலிருந்து, அது மக்களின் பொது நிறுவனமாகும் (*IPO – Initial Public Offering*) வரை, நிதி திரட்டும் நிலைகளைப் பற்றியும் அதற்கான உத்திகள் பற்றியும் சுருக்கமாக விளக்குகிறது.

நிதி திரட்டுவதைப் பற்றிக் கூற முன் அதற்கான சில தொழில்நுட்ப சொற்களுக்கு விளக்கம் கூறுவது அவசியம். ஓர் நிறுவனத்தை ஆரம்பிக்கும் போது நிறுவனத்தை தொடங்குபவர்கள் தமது படிப்பறிவையும், தொழில் அனுபவங்களையும் கொண்டு புதிய நிறுவனமொன்றை ஆக்க முன்வருவார்கள். அவையே நிறுவனம் ஆரம்பிப்பவர்களின் பங்களிப்பாக இருக்கும். நிதி முதலீடு

செய்பவர்கள், நிறுவனம் ஆரம்பிப்பவர்களை நம்பி முதலீடு செய்வார்கள். இப்படியாக, நிறுவனத்தின் மதிப்பு (*valuation*) மேற் கூறிய இரண்டையும் வைத்து நிர்மாணிக்கப்படும். அப்படி நிர்மாணிக்கப்பட்ட தொகையை வைத்து பங்குகள் (*Shares*) கொடுக்கப்படும். பங்குகளின் தொகையை ஓர் பங்குகளின் விலையால் பெருக்கினால் நிறுவனத்தின் மதிப்பு தெரியவரும். அந்தப் பங்குகளிலும் விருப்பம்கூடிய பங்குகள் (*Preferred shares*) மற்றும் சாதாரண பங்குகள் (*Common Shares*) என்று இரண்டு நிலைகள் இருக்கும். ஓர் நிறுவனத்திற்கு பண முதலீடு செய்பவர்களுக்கு விருப்பங்கூடிய பங்குகள் கொடுக்கப்படும். அதன் மூலம் அவர்களுக்கு முதல் உரிமை கொடுக்கப்படும்.

**குடும்பம் மற்றும் நண்பர்கள் சுற்று (Family and Friends Round) :** ர் நிறுவனத்தைத் தொடங்கும் ஒருவரைப் பற்றி நன்றாகத் தெரிந்தவர்கள, அவர்களது உறவினர்களும் நெருங்கிய நண்பர்களுமே. நெருக்கமானவர்களுக்கு, ஒருவரின் வேலைப் பழக்கம் மற்றும் அறிவு பற்றி நன்றாகத் தெரிந்திருக்கும். அவற்றைக் கொண்டு உறவினர்களும் நண்பர்களும் சிறிது பணத்தை முதலீடு செய்வார்கள். அந்தப் பணத்தை வைத்து சில முன்மாதிரி (*Prototype*) ஆக்கங்களைச் செய்யலாம். பின்பு, வாடிக்கையாளர்களிடம் சென்று அவர்களது யோசனைகளையும், அவர்கள் தீர்க்கும் பிரச்சினைகளுக்கான வாடிக்கையாளர்களின் கருத்துக்களையும் அறிவார்கள்.

இந்தச் சுற்றில் இருக்கும் போது பங்குகள் கிடைப்பது குறைவாகவே இருக்கும். ஆனால், அடுத்து வரும் சுற்றுக்களில் அதிகமான பங்குகளைப் பெறுவதற்கான வாக்குறுதி அட்டைகள் கிடைக்கும். இந்தச் சுற்றில் இருப்பவர்கள் அதிகமான சவால்களில் ஈடுபட்டு வெற்றி பெற்றிருந்தால் அவர்களுக்கு சில வீதம் தள்ளுபடியும் கிடைக்கும்.

**முன் விதை மற்றும் விதைச் சுற்று (Preseed and Seed Round) :** இந்தச் சுற்றில் திரளும் நிதி, குடும்ப வட்டத்தில் திரளும் நிதியை விட அதிகமாக இருக்கு. ஆனால் உற்பத்திகளைச் செய்வதற்கான முழுப் பணமும் கிடைக்காது. ஓர் பிரச்சினையை தீர்மானித்து அதை தீர்க்க ஓர் வழியையும் மனதில் கொண்டு அதற்கான முன்மாதிரி ஆக்கங்களை நன்றாக செய்து, அவ் ஆக்கங்களை ஆர்வமுடையோரிடம் கொண்டு செல்வதன் மூலம், இதில் நிதியைத் திரட்டலாம். இந்தக் கட்டத்தை அடைய அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும்.

எனது முதலாவது நிறுவனத்தில் நாங்கள் நான்கு பேர் மூன்று மாதங்களாக இரவும் பகலும் வேலை செய்து, ஓர் வேலை செய்யும் முன்மாதிரியை (*Working Prototype*) உருவாக்கி அதை எமது ஆரம்ப முதலீட்டாளர்களுக்குக் காட்டினோம். அதைப் பார்த்து அவர்கள் திருப்தி அடைந்து எமக்கு 'விதைப் பணம்' தர ஒப்புக்கொண்டார்கள். அமெரிக்காவில் இந்தச் சுற்றில் அரை மில்லியனிலிருந்து ஒன்றரை மில்லியன் டொலர் வரை திரட்டுவார்கள். சாதாரணமாக இந்தச் சுற்றிலும் வாக்குறுதி அட்டை (*Promise note*) ஓர் தள்ளுபடியோடு கிடைக்கும் என்பதுடன் நிறுவனத்தின் மதிப்பிற்கும் உயர் அளவு கிடைக்கும். பின்னர், இந்தப் பணத்தை வைத்து சில முக்கிய குழுவினரை வேலைக்கு சேர்க்கலாம்.



Image Source - stock.adobe.com

ஓர் நிறுவனத்தை ஆரம்பிக்கும் போது நிறுவனத்தை தொடங்குபவர்கள் தமது படிப்பறிவையும், தொழில் அனுபவங்களையும் கொண்டு புதிய நிறுவனமொன்றை ஆக்க முன்வருவார்கள். அவையே நிறுவனம் ஆரம்பிப்பவர்களின் பங்களிப்பாக இருக்கும்.




Image Source - www.linkedin.com

**தொடர் ஏ, பீ, சீ...(Series A, B, C...):** இந்தச் சுற்றில் தான் அதிகமான நிதியை நிறுவனங்கள் சேர்க்கும். முதல் இரண்டு சுற்றுக்களிலும் உற்பத்தி, சந்தைகள் தொடர்பான சவால்களைக் குறைப்பதன் மூலம் அதிக நிதியைத் திரட்டக் கூடியதாக இருக்கும். இதிலிருந்து சேர்க்கும் பணத்தை வைத்து உற்பத்தியைச் செய்வதற்கான முழு அணியையும் கட்டியெழுப்பி உற்பத்தியைச் செய்தால் அதைச் சந்தைக்கு கொண்டுவந்து வருமானம் எடுக்கக்கூடியதாக இருக்கும்.

இந்த சுற்றுக்களின் போது நிறுவனத்திற்கு ஓர் மதிப்பீடு (Valuation) அளிக்கப்படும். அந்த மதிப்பீடுகளை வைத்து நிறுவனங்களின் பங்குகளுக்கு விலை நிர்மாணிக்கப்படும். அந்தப் பங்கு விலைகளையும் முன்னைய சுற்றுக்களில் கொடுத்த தள்ளுபடிகளையும் அனுசரித்து, நிதி முதலிட்ட அனைவருக்கும் விருப்பங்கூடிய பங்குகள் வழங்கப்படும். அதோடு நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தவர்களுக்கு சாதாரண பங்குகள் பல மடங்குகள் (பத்து தொடக்கம் நூறு மடங்கு) விலைக் குறைவில் கொடுக்கப்படும். ஓர் நிறுவனத்தில் மூன்று குழுக்கள் இருக்கும். முதற் குழு, முதலீடு செய்பவர்கள். இரண்டாவது, தொழிலாளர்கள். மூன்றாவது, முக்கியமானவர்கள், நிறுவனத்தை ஆரம்பிப்பவர்கள் (Founders). ஓர் நிறுவனத்தின் கூடுதலான பங்குகள், நிதி முதலிட்டவர்களிற்கும் அந்த நிறுவனத்தை ஆரம்பித்தவர்களுக்கும் இடையில் தான் இருக்கும்.

**ஆரம்ப நிறுவனத்தை மக்களின் பொது நிறுவனமாக்கல் (IPO):** ஆரம்ப நிறுவனங்களைத் தொடங்கி அதை வளர்த்து ஓர் இலாபமான நிறுவனமாக மாற்றிய பின்னர் அதை இரண்டு விதமாக அடுத்த நிலைக்கு கொண்டு போகலாம். முதலாவது, இன்னொரு பெரிய நிறுவனத்துடன் ஒன்று சேர்ந்து அவர்களின் விற்பனையாளர்களை பயன்படுத்தி பொருட்களை விற்பது. இதனால், பெரிய நிறுவனம் அதிக பணம் கொடுத்து பங்குகளை வாங்கும். இதன் மூலம் நிறுவனத்தில் முதலிட்டவர்களுக்கும் வேலை பார்த்தவர்களுக்கும் அதிக பணம் கிடைக்கும். இரண்டாவது முறை, பங்குச் சந்தையில் பட்டியலிட்டு பொது மக்களுக்கு பங்குகளை விற்றுப் பணம் சேர்ப்பது. இதன்படி, பொது மக்களின் ஆர்வத்தையும் சந்தையின் தேவையையும் பொறுத்து பங்குகளின் விலை மேலேயோ கீழேயோ போகும்.

எனது இரண்டு ஆரம்ப நிறுவனங்களும் பெரிய பொது நிறுவனங்களால் வாங்கப்பட்டன. அதன் மூலம் சந்தையின் ஏற்ற இறக்கங்களை தவிர்க்க முடிந்தது. ஆனால் இப்படி ‘பொது நிறுவனமாதல் மூலம்’ கோடீஸ்வரர்களானவர்கள் பலர் இருக்கிறார்கள். இதற்கு மைக்கிறோசொவ்ற், அப்பிள் தொடக்கம் கூகிள், அமெசோன், முகநூலென்று பல உதாரணங்கள் உண்டு. இவற்றை மனதில் வைத்து உங்கள் வெற்றிப் பயணத்தை தொடங்கலாம்.

(தொடரும்)

ஒரு பிரதேசத்தின் பல்வேறு விடயங்களை கட்டமைப்பதில் அந்தப் பிரதேசத்தின் இயற்கை அம்சங்கள் மிகப்பெரிய பங்கினை வழங்குகின்றன. குறிப்பாக ஒரு பிரதேசத்தின் காலநிலை சார்ந்த அம்சங்கள் அந்தப் பிரதேசத்தினுடைய இயற்கையையும் அந்த பிரதேசத்திற்குரிய பொருளாதார, சமூக, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களையும் கட்டமைப்பதில் மிகப்பெரிய பங்கினை வழங்குகின்றது. அந்த அடிப்படையில் வடக்கு மாகாணத்தினுடைய பல்வேறு வகைப்பட்ட விடயங்களை தீர்மானித்ததில் வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை மிகப்பெரிய செல்வாக்கினை பெற்றிருக்கின்றது. வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை சார்ந்த பாரம்பரிய அறிவியல் விடயங்களையும் நவீன விஞ்ஞான ரீதியிலான ஆய்வு சார்ந்த விடயங்களையும் உள்ளடக்கியதாக வடக்கு மாகாணத்தினுடைய காலநிலைப் பண்புகளை முழுமைப்படுத்தி வெளியிடுவதாக 'பிராந்திய காலநிலையியல் : வடக்குப் பிராந்தியம், இலங்கை' எனும் தொடர் அமைகின்றது.




**நாகமுத்து பிரதீபராஜா**

கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறையில் முதுநிலை விரிவுரையாளராக கடமையாற்றி வருகின்றார். காலநிலையியலில் தனது கலாநிதி பட்டத்தினை பூர்த்தி செய்த பிரதீபராஜா காலநிலையியல் தொடர்பான பல்வேறுபட்ட ஆராய்ச்சிகளை வெளியிட்டுள்ளார். வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை பற்றியும் பொதுவான காலநிலை அம்சங்கள் தொடர்பாகவும் 07 இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். 40 இற்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை தேசிய மற்றும் சர்வதேச சஞ்சிகைகளில் பிரசுரித்துள்ளார். கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக, வடக்கு மாகாணத்தினுடைய வானிலை தொடர்பான இவரது எதிர்வு கூறல்களை பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களும் பின்பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# வடக்குப் பிராந்தியத்தின் மழை வீழ்ச்சி அளவீட்டு முறைகளும் வானிலை அவதான நிலையங்களும்

## வடக்கு மாகாணத்தின் பாரம்பரிய முறையிலான மழை வீழ்ச்சி அவதானிப்பு முறைகள்

வடக்கு மாகாண மக்கள் மிக நீண்ட காலமாக மழை வீழ்ச்சி அவதானிப்பிற்கு என்று பல்வேறு வகைப்பட்ட உத்திகளை பயன்படுத்தி வந்துள்ளார்கள். அந்த அடிப்படையில் வடக்கு மாகாண மக்கள் பல்வேறு வகையிலான கருவிகளைப் பயன்படுத்தி அவதானிப்புகளை மேற்கொண்டு இருப்பதை அறிய முடிகின்றது. அவர்கள் பின்வரும் கருவிகளைப் பயன்படுத்தி மழை வீழ்ச்சி அவதானிப்புகளை மேற்கொண்டு உள்ளார்கள்.

## மரக்கால்

மரக்கால் என்பது மிக நீண்ட காலமாக, அதாவது கிறிஸ்துவிற்குப் பின் 1500 ஆம் ஆண்டுகளில் இருந்து, வடக்கு மாகாணத்தின் மக்கள் மழை வீழ்ச்சி அளவை அறிந்து கொள்வதற்கு பயன்படுத்திய முறைகளில் ஒன்றாக காணப்படுகின்றது. மரக்கால் என்பது மரத்திலான ஒரு அளவைசார் பாத்திரமாகும். பொதுவாக வடக்கு மாகாண மக்கள் சர்வதேச முறைகளிலான அளவீட்டு முறைமைகள் பயன்படுத்துவதற்கு முன்பதாகவே தங்களுடைய நாளாந்த மற்றும் வியாபாரத் தேவைகளுக்காக பல்வேறு வகைப்பட்ட அளவீட்டுக் கருவிகளைப் பயன்படுத்தி வந்துள்ளார்கள்.





மரக்கால் பாத்திரம்
Image Source - commons.wikimedia.org

அந்த அடிப்படையில் மரக்கால் என்பதும் கொத்து என்பதும் புசல் என்பதும் பறை என்பதும் அவர்களுடைய அளவீட்டு முறைமைகளில் ஒன்றாக காணப்படுகின்றது. மரக்கால் என்பது மரத்தினாலான ஒரு குடுவை போன்ற பாத்திரமாகும். இந்தப் பாத்திரத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்கள் பெய்கின்ற மழையின் அளவை அவதானித்து வந்துள்ளார்கள். குறிப்பாக நல்லூர் இராசதானிக் காலத்திலே அறிவு மிகுந்த அரசகுமாரர்களில் ஒருவராக விளங்கிய பரராஜசிங்கன் எழுதிய தன்னுடைய நூலில் இந்த மரக்கால் பற்றிய விடயங்களை குறிப்பிட்டுள்ளார். ஆரம்ப காலத்தில் நெல் போன்ற தானியங்களை அளவிடவே இந்தப் பாத்திரம் பயன்படுத்தப்பட்டது. எனினும் அதனைப் பயன்படுத்தியே அவர்கள் மழை வீழ்ச்சியையும் அளந்து உள்ளார்கள். இந்த முறை இலங்கையில் வடக்கு மாகாண தமிழர்களிடம் மட்டுமின்றி இந்தியாவினுடைய தமிழ்நாட்டு தமிழர்கள் குறிப்பாக இந்துக்கள் இடையேயும் மிகவும் வினைத்திறனாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இந்த மரக்கால் முறையிலான மழை வீழ்ச்சியின் அவதானிப்பை வைத்துக்கொண்டு தங்களுடைய பிரதேசத்தின் மொத்த மழை வீழ்ச்சி அளவை அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இந்துக்களின் பஞ்சாங்கங்கள், குறிப்பாக திருக்கணித பஞ்சாங்கங்களும் வாக்கியப் பஞ்சாங்கங்களும் மரக்கால் முறையிலான மழை அளவையே குறிப்பிடுகின்றன. ஒரு மரக்கால் பாத்திரத்தில் முழுவதும் நிறைகின்ற அளவிற்கு மழைநீர் கிடைக்கும் பொழுது அதனை ஒரு மரக்கால் மழை என குறிப்பிடுகின்றார்கள். இந்த ஒரு மரக்கால் மழை என்பது கிட்டத்தட்ட சராசரியாக 300 மில்லி மீற்றர் மழைக்குச் சமமானதாகக் காணப்படுகின்றது. இதனால் தான் முன்னோர்கள் வடக்கு மாகாணத்தினுடைய மழையின் அளவை மரக்காலின் எண்ணிக்கையில் குறிப்பிட்டு இருக்கின்றார்கள். குறிப்பாக தமிழர்களுடைய நாளாந்த வாழ்விலும் இலக்கியங்களிலும் மூன்று மரக்கால் மற்றும் நான்கு மரக்கால் மழை என்ற சொற்பதம் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது.

இன்றும் கூட தமிழ் மக்களின் பயன்பாட்டில் காணப்படுகின்ற, குறிப்பாக இந்துக்களின் பயன்பாட்டில் காணப்படுகின்ற பஞ்சாங்கங்களில் மழையின் அளவு இரண்டு மரக்கால், மூன்று மரக்கால் அல்லது நான்கு மரக்கால் எனக் குறிப்பிடப்படுவதன் காரணம், அந்த மரக்கால் அளவிலேயே அவர்களின் பண்டைய மழை வீழ்ச்சி அளவு அமைவு பெற்றமையே ஆகும். மரக்கால் என்பது எல்லா பிரதேசங்களிலும் பயன்படுத்தப்பட்டாலும் கூட பிரதேசங்களுக்கு ஏற்ற வகையில் அவற்றின் அளவுகளில் சிறிய சிறிய வேறுபாடுகள் இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. மரக்கால் என்ற பாத்திரத்திலே உள்ள சிறிய சிறிய வேறுபாடுகளால் மரக்கால் முறையிலான அவர்களுடைய அளவீட்டு முறையிலும் பிரதேசத்துக்கு பிரதேசம் சிறிய சிறிய வேறுபாடுகள் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மரக்கால் என்பது, தற்பொழுது நற்காரியங்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற 'நிறைநாழி' என்னும் செயற்பாட்டிற்கான 'கொத்து' பாத்திரத்தைப் போன்று இரண்டு மடங்கு பெரியதாக உள்ள பாத்திரமாகும். சில பிரதேசங்களில் மரக்காலின் வெளிப்பக்கம் வேலைப்பாடுகளுடன் கூடிய சிறிய சிறிய உருவங்களைக் கொண்டிருப்பதையும் காணலாம்.



**ஆட்டுக்கல்**

Image Source - www.cinartamilan.com

## ஆட்டுக்கல்

ஆட்டுக்கல் என்பது கருங்கல்லினால் செய்யப்பட்ட தானியப்பொருள் அரைப்பதற்காக தமிழ் மக்களால் பயன்படுத்தப்பட்ட ஒரு அரைக்கும் முறையாகும். இந்த ஆட்டுக்கல் என்பது கருங்கல்லினால் செய்யப்பட்ட ஒரு குடுவை போன்ற அமைப்பையும் கையினால் பொருளை அரைப்பதற்கான ஒரு குழவி ஒன்றையும் கொண்டு அமைந்திருக்கும். பண்டைய காலங்களில் தமிழ் மக்களின் வீடுகளில் பிரதானமான சமையல் கருவியாக மூன்று பொருட்கள் இடம்பெற்றிருக்கும். அம்மி மற்றும் குழவி, உரல் மற்றும் உலக்கை, ஆட்டுக்கல்லும் அதனோடு இணைந்த குழவியும் என்பனவையே அவை. இந்த ஆட்டுக்கல் என்பது பண்டைய தமிழர்கள் வீட்டு முற்றத்தில் வைத்திருந்த ஒரு பொருளாகவே காணப்படுகின்றது. ஒரு வட்டமான கருங்கல்லுக்குள் மையப் பகுதியில் குழிபோன்ற ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கும். பண்டைய காலங்களில் இந்த ஆட்டுக்கல்லின் குழியையும் நமது முன்னோர்கள் மழைவீழ்ச்சியை அளவீடு செய்வதற்கான ஒரு அளவுகோலாக அல்லது கருவியாக பயன்படுத்தி இருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் முற்றத்தில் காணப்படுகின்ற ஆட்டுக்கல்லின் குழியை நிரப்புகின்ற அளவிற்கு மழை பொழிந்தால் அது ஒரு ஆட்டுக்கல் மழை எனக் குறிப்பிடுவார்கள். இது நவீன காலத்தில் 150 மில்லி மீற்றருக்குச் சமமான அளவிற்கு, சில சமயங்களில் ஆட்டுக்கல்லின் அளவைப் பொறுத்து, 125 மில்லி மீற்றருக்குச் சமமான அளவிலும் அமைந்திருப்பதைக் குறிப்பிடலாம். ஆட்டுக்கல்லின் குழிக்குள் விழுகின்ற மழையின் அளவை அவர்கள் ஆரம்பத்தில் கணிப்பீடு செய்து அந்த கணிப்பீட்டின் அடிப்படையில் மழையை அளவிட்டு அறிந்து உள்ளார்கள். பெரும்பாலான இடங்களில் முற்றத்தில் வைக்கப்பட்டிருக்கின்ற ஆட்டுக்கல்லில் பெய்திருக்கின்ற மழையை அடிப்படையாக வைத்துக் கொண்டே அவர்கள் மாரிகாலங்களில் குறிப்பாக இரண்டாவது இடைப்பருவ காலத்திலும், வடகீழ்ப் பருவக் காற்று காலத்திலும் தங்களுடைய விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு இருந்தார்கள். ஒரு ஆட்டுக்கல் மழையைப் பெற்றதன் பின்னர் தங்களுடைய நிலத்தைப் பண்படுத்துகின்ற அல்லது விதைப்புச் செயற்பாடுகளை ஆரம்பிக்கின்ற நடவடிக்கைகளை அவர்கள் செய்தார்கள்.


## வேறு முறைகள்

வடக்கு மாகாணத்தில் உள்ள மக்கள் மிக நீண்ட காலமாக மழையின் அளவை அளவீடு செய்வதற்கு, தங்களுடைய வீட்டின் திண்ணைச் சுவரையும் தாங்கள் பயன்படுத்திய பின் வெளியே வைக்கும் தேங்காய் சிரட்டையையும் தங்களுடைய வீட்டு சூழலில் காணப்படுகின்ற மரங்களின் உயரத்தில் உள்ள முக்கியமான அடையாளங்களையும் பயன்படுத்தியுள்ளார்கள். இதன் மூலம் அவர்கள் கிடைக்கின்ற மழையை அளவீடு செய்து தங்களுடைய திட்டமிடல்களுக்காகப் பயன்படுத்தி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வானிலை அவதான நிலையங்கள்

1990 இற்கு முன், வடக்குப் பிராந்தியத்தில் பல வானிலை ஆய்வு நிலையங்கள் செயற்பட்டன. பல வானிலைக் கூறுகள் அவதானிக்கப்பட்டு அளவிடப்பட்டன. முப்பது வருடகால உள்நாட்டுப் போர் காரணமாக உரிய திணைக்களங்களால் சிலவற்றைச் சரியாகச் செயற்படுத்த முடியவில்லை. அவற்றில் சில மூடப்பட்டன. மற்றவை வேறு பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டன. இந்தச்

சூழ்நிலையின் காரணமாக மழைவீழ்ச்சி, வெப்பநிலை, காற்று, ஈரப்பதம், வளிமண்டல அழுத்தம் மற்றும் ஆவியாதல் போன்ற பல வானிலை அளவுருக்கள் சில ஆண்டுகளாக இந்த நிலையங்களில் சிலவற்றில் அளவிடப்படவில்லை. 1990 இற்கு முன்னர் இலங்கையின் வடக்குப் பிராந்தியத்தில் பல வானிலை, மழைவீழ்ச்சி அவதானிப்பு நிலையங்கள் செயற்பட்டன. அக்கராயன்குளம், அகத்திமுறிப்பு, ஆண்டான்குளம், அம்பலப்பெருமாள்குளம், சாவகச்சேரி, செட்டிகுளம், நெடுந்தீவு, ஆனையிறவு, இரணைமடு, இயக்கச்சி, வட்டுக்கோட்டை, திருநெல்வேலி, காங்கேசன்துறை, கனகராயன்குளம், கணுக்கேணி, கிளிநொச்சி, நொச்சிக்குளம், கோண்டாவில், குடத்தனை, மடு, மாங்குளம், மன்னார், மறிச்சுக்கட்டி, மிருசுவில், முல்லைத்தீவு, மூளாய், முருங்கன், முத்தயன்கட்டு, நயினாதீவு, நெடுங்கேணி, ஓமந்தை, பளை, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை, பரந்தன், பல்லவராயன்கட்டு, புளியங்குளம்,




**வடக்கு மாகாணத்தின் மழைவீழ்ச்சி அளவீட்டு மற்றும் வானிலை அவதான நிலையங்களின் அமைவிடம்**

Image Source - www.researchgate.net

வடக்கு மாகணத்தின் மழைவீழ்ச்சி அளவீட்டு மற்று வானிலை அவதான நிலையங்களின் புவியியல் அமைவிட விபரமும் தொடங்கப்பட்ட ஆண்டுகளும்.

| நிலையம் | அகலக்கோடு(வ) | நெடுங்கோடு (கி) | தரையுயரம் (மீ) | தொடங்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|---|
| அக்கராயன் குளம் | 9°.30" | 80°.35" | 31.1 | 12.'.01.'.1961 |
| இரணைமடு | 9°.35.' | 80°.40." | 30.5 | 06.'.01.'.1910 |
| நாகபடுவான் | 9°.27 | 80°.17" | 6 | 03.'.01.'.1998 |
| பாவற்குளம் | 8°.68 | 80°.43" | 16 | 01.'.01.'.1955 |
| ஈரற்பெரியகுளம் | 8°.75" | 80°.50" | 97.5 | 01.'.09.'.1880 |
| வவுனியா | 8°.77." | 80°.48." | 16 | 04.'.01.'.1927 |
| வவுனியா (றுனு) | 8°.75." | 80°.50." | 16 | 01.'.01.'.1879 |
| சாவகச்சேரி | 9°.67" | 80°.17" | 16 | 11.'.01.'.1893 |
| யாழ்ப்பாணம் | 9°.68" | 80°.03" | 3.1 | 14.'.01.'.1871 |
| கோண்டாவில் | 9°.70." | 80°.03." | 16 | 01.'.01.'.1968 |
| குடத்தனை | 9°.73." | 80°.27." | 16 | 06.'.01.'.1967 |
| மிருசுவில் | 9°.67." | 80°.27." | 16 | 06.'.01.'.1951 |
| நயினாதீவு | 9°.60." | 79°.77." | 16 | 04.'.01.'.1956 |
| பருத்தித்துறை | 9°.83." | 80°.23." | 16 | 01.'.03.'.1891 |
| திருநெல்வேலி | 9°.68." | 80°.03." | 3 | 25.'.06.'.1975 |
| தொண்டைமானாறு | 9°.82." | 80°.13." | 16 | 01.'.07.'.1954 |
| கறுக்காய்க்குளம் | 8°.92." | 80°.02." | 16 | 01.'.01.'.1941 |
| மடு | 8°.83" | 80°.18" | 16 | 03.'.01.'.1967 |
| மன்னார் | 8°.98" | 79°.92" | 3.6 | 01.'.05.'.1870 |
| முருங்கன் | 8°.83" | 80°.05" | 16 | 01.'.01.'.1901 |
| கணுக்கேணி | 9°.12." | 80°.47." | 15 | 01.'.01.'.1967 |
| ஒட்டுசுட்டான் | 9°.15." | 80°.65." | 27 | 03.'.08.'.1980 |
| அம்பலப்பெருமாள் | 9°. 14" | 80°.17" | 31 | 01.'.01.'.1967 |
| மாங்குளம் | 9°.13" | 80°.44" | 87 | 03.'.08.'.1980 |
| வவுனிக்குளம் | 9°.13." | 80°.28." | 29 | 01.'.01.'.1967 |
| முத்தையன்கட்டு | 9°.12." | 80°.37." | 18 | 01.'.01.'.1967 |

*மூலம் : வளிமண்டலவியல் திணைக்களம் 2023*

**புலிகளின் காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கில் வானிலைக் கண்காணிப்பு**

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் உள்ள பல அரச வானிலை நிலையங்கள் 1990 களில் உள்நாட்டுப் போர் மற்றும் பொருளாதாரத் தடைகள் காரணமாக செயற்படவில்லை. இந்த நிலை இருந்தபோதிலும், 1990 களின் முற்பகுதியில் இருந்து வடக்கு மற்றும்

வடக்கு மாகாணத்தில் உள்ள மக்கள் மிக நீண்ட காலமாக மழையின் அளவை அளவீடு செய்வதற்கு, தங்களுடைய வீட்டின் திண்ணைச் சுவரையும் தாங்கள் பயன்படுத்திய பின் வெளியே வைக்கும் தேங்காய் சிரட்டையையும் தங்களுடைய வீட்டு சூழலில் காணப்படுகின்ற மரங்களின் உயரத்தில் உள்ள முக்கியமான அடையாளங்களையும் பயன்படுத்தியுள்ளார்கள். இதன் மூலம் அவர்கள் கிடைக்கின்ற மழையை அளவீடு செய்து தங்களுடைய திட்டமிடல்களுக்காகப் பயன்படுத்தி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாணங்களில் முறைசாரா முழு அளவிலான ஆட்சி முறையைக் கொண்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) அமைப்பினர் பல மழைவீழ்ச்சி நிலையங்களை உருவாக்கி அவற்றை திறம்பட இயக்கினர். விவசாய மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்காகவும் பொது முடிவுகளை எடுப்பதற்காகவும் புலிகளின் விமானப்படையாக இருந்த வான்புலிகளின் பாதுகாப்பு நோக்கத்திற்காகவும் இந்த வானிலை அவதானிப்பு நிலையங்களில் வானிலை அளவீடு மற்றும் கண்காணிப்பு என்பன செய்யப்பட்டன.

முன்னர் இயங்காத நிலையங்களுக்கு மேலதிகமாக, காலநிலை அவதானிப்புக்காக விடுதலைப் புலிகள் சில புதிய நிலையங்களை நிறுவினர். விடுதலைப் புலிகள் தமது பகுதியில் காலநிலை அவதானிப்புக்காக நவீன உபகரணங்களை அறிமுகப்படுத்தியிருந்தனர். புதிதாக நிறுவப்பட்ட மையங்களில் வானிலைக் கூறுகளை அளவிடுவதற்கான முழுத் தானியங்கிக் கருவிகள் இருந்தன. வானிலைக் கண்காணிப்பின் ஒரு பகுதியாக, வானிலைக் கண்காணிப்பு உபகரணங்கள் மூலம் தரவுகளைப் பெற்று வான்புலிகள் பாதுகாப்பு நடவடிக்கைகளும் செய்தனர். அந்த வகையில் முல்லைத்தீவு, மாங்குளம், துணுக்காய், செம்மலை, நட்டாங்கண்டல், நாச்சிக்குடா, இரணைமடு, பரந்தன், விசுவமடு, புதுக்குடியிருப்பு, கனகராயன்குளம், இலுப்பைக்கடவை போன்ற பல இடங்களில் அவர்கள் அதிகபட்ச குறைந்தபட்ச வெப்பமானி, ஈரமான மற்றும் உலர் வெப்பமானி, அகச்சிவப்பு வெப்பமானி, தானியங்கி மழைமானி, ஈரப்பதமானி, அமுக்கமானி, ரேடார் போன்ற கருவிகளைப் பயன்படுத்தி அவதானிப்புகளை மேற்கொண்டனர். மேலும், தமிழீழ நிர்வாக சேவையின் கீழ் வானிலைத் தரவுகளைச் செயலாக்குவதற்கும் சேமிப்பதற்கும் மத்திய ஒருங்கிணைப்பு மையத்தை கிளிநொச்சி பாரதிபுரத்தில் நிறுவியிருந்தனர். இந்த நிலையங்களுக்கு மேலதிகமாக புலிகளின் பொருளாதார அபிவிருத்தித் திணைக்களம் (தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்), பிராந்தியத்தில் உள்ள பல குளங்களை நிர்வகித்த இடங்களில் மழை மற்றும் பிற வானிலைக் கூறுகளை அளவிட்டது.

**புலிகளினால் நிர்வகிக்கப்பட்ட வானிலை அவதானிப்பு நிலையம்**

கிளிநொச்சியில் அமைந்த வானிலை அவதான நிலையத்தின் தலைமை அலுவலகத்தில் விடுதலைப் புலிகள் தரவு மையத்தை நிலைநிறுத்தி, பொதுவான நோக்கங்களுக்காக தரவுகளை வழங்கியிருந்தனர். எவரும் பொருத்தமான ஆவணத்துடன் தரவை இலவசமாகப் பெற முடிந்தது. நிலப்பரப்பு வானிலை நிலையங்களைத் தவிர மருதங்கேணி, சாளை, முல்லைத்தீவு மற்றும் நாச்சிக்குடா ஆகிய இடங்களில் கடல் வானிலை கண்காணிப்பு மையங்களையும் (OWOS) இயக்கியுள்ளனர். ஆனால் அந்த நிலையங்களில் அளவீடு செய்யப்பட்ட தரவுகளும் தகவல்களும் பொதுமக்களுக்கு வழங்கப்படவில்லை. மாறாக, கடல்சார் வானிலை கண்காணிப்பு நிலையங்கள் கடல் பாதுகாப்பு நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டன.

(தொடரும்.)

SpotOn Money



# SEND MONEY to SRI LANKA

**FIRST TRANSFER FEE FREE** *

Immediate Payment to Any Account

*Partnership with*

CargillsBank
BANKING ON THE HUMAN SPIRIT

Cash Pickup at any Cargills food city

get 5% Discount*
on Purchases

0207 341 7300
www.spoton.money

Authorised and regulated by the Financial Conduct Authority (FRN 510848)
SpotOn Money is a trading name of Monex International Limited, a company incorporated in England and Wales, and registered as a money service business with HMRC (12161278)

* T & C Apply



வணக்கம் London
www.vanakkamlondon.com
உலகம்
அரசியல்
தமிழ்நாடு
சினிமா
CINEMA
IN LOVE memory
விளையாட்டு
துயர் பகிர்வு
யாதும் ஊரே யாவரும் கேளிர்
தமிழால் இணையும்
தமிழ் செய்திச் சஞ்சிகைத் தளம்
vanakkamlondon.com
/vanakkam.london
/vanakkamlondon
/Vanakkam_London
/TheVanakkamLondon

# Protection For You & Your Family



## Our services

- Life Insurance «
- Critical Illness Protection «
- Mortgage Protection «
- Travel/Super Visa Insurance «
- Dental & Medical Benefits «
- Disability Benefits «
- Long Term Care «
- Employee Benefits «
- RESP, RRSP & TFSA «

## Are You Getting Million Dollar Advice?



Life100
INSURANCE & INVESTMENTS INC.

**416-918-9771 | 416-321-2500**
info@life100.ca www.life100.ca
10 Milner Business Court, Suite 208,
Scarborough, ON M1B 3C6

**Sritharan Thurairajah** CLU, CHS

*Simple Solution in a Critical Situation*

XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

**OUR GROUP OF COMPANIES**

**codelantic**
CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

**ExentAI**
ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

**itaffix**
ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

**ontomatrix**
OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

**EmbryoZ**
EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

**BurgeonFirst**
BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

**FINACCDIRECT**
FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

**LegalLiaise**
LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

**callOcare**
callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

**LeadHRM**
LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

**CSR INITIATIVE**

**NurtureLeap**
NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**
#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

**Colombo**
#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

**Jaffna**
#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com



WE PROVIDE
THE CHEAPEST MINIVAN AND
CAR SERVICES
ACROSS ALL OF THE GTA AND
ONTARIO
றொறொன்ரோ பெரும்பாகம் உட்பட
ஒன்ராறியோ மாகாணம் எங்கும்
மலிவான மினிவான் மற்றும் கார் சேவையை
நாங்கள் வழங்குகிறோம்
24/7
கிழமை ஏழு நாட்களும் 24 மணி
நேர சேவை வசதியுள்ளது
அழைக்க வேண்டிய
இலக்கம் 647-9723619

# யாழ் மண்ணில்




வீடு, காணி,
வியாபார ஸ்தாபனங்கள்
வாங்குவதற்கு,
விற்பதற்கு அல்லது
வாடகைக்கு
நம்பிக்கையுடன் நாடுங்கள்

**RE/MAX ELITE**

**021 224 2855 | 0777 44 1113**

**இடம்: இல. 115 கே.கே.எஸ் வீதி சுன்னாகம்**
(பீப்பிள்ஸ் லீசிங் கட்டிட தொகுதி, 1ம் மாடி)

**BUY-SELL-RENT HOME AND LANDS**

WWW.REMAXELITE.LK


abc DRIVING SCHOOL
We offer a variety of courses for new and experienced drivers. We offer our students quality driver education and training at affordable rates. Our extremely knowledgeable driving instructors fluent in 7 languages with their many years of professional experience make learning especially easy.
CAR DRIVING LESSONS
Class 5 Driving License
Refresher Lessons
Knowledge Test Preparation
ENROLL NOW!
ÉCOLE DE CONDUITE ABC DRIVING SCHOOL Ogilvy
528 avenue Ogilvy
Montréal QC
H3N 1M8
(514) 278-1824
abc.conduire@gmail.com
ÉCOLE DE CONDUITE ABC DRIVING SCHOOL Jean-Talon
4294 rue Jean-Talon O
Montréal, QC
H4P 2T6
(514) 866-4777
abc.driving4295@gmail.com


SS CAKES
Say "I Do"
to Sweet Perfection!
Planning your dream wedding? Look no further!
At SS Cakes, we specialize in crafting exquisite wedding cakes that are as stunning as they are delicious. From classic elegance to modern masterpieces, we'll design the perfect cake to sweeten your special day.
+94 76 347 0055
We do delivery around the world

# வீடு என்பது ஞாபகங்களின் கலவை

காதல், சில்மிஷங்கள், கனவுகள், சிரிப்புக்கள், நேசங்கள், அரவணைப்புக்கள், தவிப்புக்கள், அடையாளங்கள், கூடல்கள், குதூகலங்கள் என நீங்கள் உறைவிடமாகும் பொழுதுதான் வீடு விலாசம் கொள்கிறது.

தற்போதைய நிலையில் நீங்கள் வீடொன்றை விற்பது அல்லது வாங்குவது குறித்து உங்களிடம் இருக்கும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு என்னால் தெளிவாக விளக்கமளிக்க முடியும்.

நம்பிக்கையோடு என்னை அழையுங்கள் நல்லதோர் வீடு செய்வோம்.



XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

## OUR GROUP OF COMPANIES

codelantic

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

ontomatrix

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

ExentAI

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

EmbryoZ

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

itaffix

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

BurgeonFirst

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

## BUSINESS PROCESS OUTSOURCING

FINACCDIRECT

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

LegalLiaise

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

callOcare

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

LeadHRM

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

## CSR INITIATIVE

NurtureLeap

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**

**#32 Spring Street,**
**Paddington W21JA.**
**Phone : +44 203 5001380**
**Email : contact@xebiro.com**

**Colombo**

**#7 - 3/1, Galle Road,**
**Colombo 06.**
**Phone : +94 112 559854**
**Email : contact@xebiro.com**

**Jaffna**

**#63, Sir Pon Ramanathan Road,**
**Kallady, Thirunelvelly, Jaffna**
**Phone : +94 212 212797**
**Email : contact@xebiro.com**

மானுடம் நிறுவனம்
maanudam foundation

மானுடம் நிறுவனம் என்பது ஐக்கிய இராச்சியத்தில் சமீபத்தில் நிறுவப்பட்ட ஒரு தொண்டு நிறுவனம் ஆகும். எமது முயற்சிகள் இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பிரதேசங்களில் உள்ள தமிழ் பேசும் சமூகங்களை ஆதரிப்பதில் கவனம் செலுத்துகின்றன.

**எமது முக்கிய நடவடிக்கைகளில் பின்வருவனவை உள்ளடக்குகின்றன:**

- வறுமை ஒழிப்பு
- சுகாதாரம் மற்றும் கல்வியின் மேம்பாடு
- சமூக மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு
- கலை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை பாதுகாத்தல்

எமது சமீபத்திய திட்டங்களில் ஒன்று, எழுத்தாளர் மற்றும் வாசகர் ஆகிய இருவருக்கும் பயன்படும் வகையில், இலங்கைத் தமிழ் நூல்களை குறைந்த செலவில் வெளியிடுவதை ஆதரிப்பதாகும்.

**யுகமுடிவும் பின்னரும்**

**நிலாந்தன்**

**இறுதிக்கட்டப் போரின் பின்னரான எழுத்துக்களின் தொகுப்பு**

கவிதைகள், சமையல் குறிப்புகள், விலைப்பட்டியல்கள், பாடல்கள் போன்ற பரிசோதனை வடிவங்கள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன. இறுதிக்கட்டப் போரின் பின் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் எழுதப்பட்ட கவிதைகளும் இதிலுண்டு. 36 பக்கங்களில் 24 படைப்புக்கள் உண்டு.






Maanudam Foundation, 38 Lordsbury Field, Wallington, Survey, SM6 9PE, UK
Email: maanudamfoundation@gmail.com | Web site: www.maanudam.org
Registered as a Company limited by guarantee in England & Wales No. 14725487


SKYMAGIC
PICTURES
மே 10 முதல்
உலகமெங்கும்
ஊழி
எழுத்து & இயக்கம்
ரஞ்சித் ஜோசப்
eelamplay


Netwyn.Place
Unleash Your Potential
www.netwyn.place
10 Thornmount Drive, Scarborough, ON M1B 3J4
+1 416-906-1414
Coworking Space • Private Office
Event Space • Boardroom
BOOK YOUR TOUR TODAY